வெளியீடு—கஉரு.

# சீவகசிந்தாமணி - சுருக்கம்

## உரைக் குறிப்புக்களுடன்

❋

செங்கம் போர்டு உயர்நிலைப்பள்ளித்
தமிழாசிரியரும்,
ஐங்குறுநூறு உரையாசிரியரும்
ஆகிய வித்துவான்
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்
தொகுத்தெழுதியது.

❋

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: & சென்னை.
விசு—மார்கழி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

[*Copy-right*]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA ::
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TIRUNELVELI & MADRAS. ::
December, 1941.

The Jupiter Press, Madras. 820/12-41

# பதிப்புரை

செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்குகின்ற பழைய பெருங் காப்பியங்கள் ஐந்து. அவற்றுள் சீவக சிந்தாமணி ஒன்று.

சமண் சமயத்தவனான சீவகன் என்னும் அரசனது வரலாற்றை இது விளக்குகின்றது. சொற்சுவை பொருட்சுவை வாய்ந்து தனி சிறந்த இலக்கியமாகப் பண்டுதொட்டே அறிஞர்களாற் பாராட்டப்பட்டு வருகின்றது. பழைய உரையாசிரியர்களால் யாண்டும் மேற்கோளாக வழங்கப்படும் பெருமை கனிந்தது. இந்நூல் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்குமுன் இயற்றப்பட்டதாயினும், இது முன்னைச் சங்க நூல்களின் தமிழ் நலம் நன்கு வாய்ந்து திகழ்கின்றது. பின்னைக் காப்பிய நூல்கட்கும் பலவகைகளில் இது வழி திறந்து உதவி யிருக்கின்றது.

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய சிறந்த அறவுணர்வுகள் பலவும் இதன்கண் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. சமண் சமயக் கொள்கைகளை அறிந்துகொள்ளுதற்கும் இந்நூல் உதவும்.

இதனை இயற்றியருளிய ஆசிரியர், திருத்தக்கதேவர் என்னும் சமண் சமயப் பெரியார். உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இதற்கு அரியதோர் உரை எழுதியிருக்கின்றார்.

இனிக்கும் இங் காப்பியமான இத்தகைய அரியநூல் மூவாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களுடையதாயிருக்கின்றது. ஆதலால், நூல் முழுமையும் படித்து நலம்நுகர மல்வுறுவோர்க்கு அதன் கதைத் தொடர்பும் இனிமைகளுங்

குறையாத முறையில் ஒரு 'சுருக்கப் பதிப்பு' இருப்பின், எல்லாரும் எளிதில் படித்தறிந்துகொள்ள உதவியாயிருக்கும். ஆங்கிலம் முதலிய மொழிகளில் இத்தகைய சுருக்கப் பதிப்புக்கள் பல வெளிவந்திருக்கின்றன. தமிழ் மொழியிலும் அம் முறை பின்பற்றப்படுவதனால் தமிழ் மொழிக் கல்வி பெருகப் பரவுவதற்கும், முழுநூலைக் கற்க ஆர்வமெழுதற்கும் இடமுண்டாகும்.

இச் சுருக்கப் பதிப்பு, முழு நூலில் ஏறக்குறையக் காற்பங்களவாக வெளிவருகின்றது; இதனால், அம் முழுநூற் கருத்தை எல்லாரும் இதன்முகமாக எளிதிற் படித்தறிந்து கொள்ளலாம்.

கதைப் போக்குக் கெடாமல் இனிய செய்யுட்களைத் திரட்டிக் கோத்து, இடையிடையே விடுக்கப்பட்ட பாட்டுக்களின் தொடர்பைச் சுருக்கமாக அங்கங்கும் எளிய உரைநடையில் எழுதிச்சேர்த்து, ஒவ்வொரு பக்கத்திலும் அடியில் தெளிவான உரைக் குறிப்புக்களுங் கொடுத்து விளக்கமான ஓர் ஆராய்ச்சி முன்னுரையோடு இந்நூல் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. பாட்டுக்கள் சீர்பிரித்தும் சந்திபிரித்தும் உரிய தலைப்புக்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. நச்சினார்க்கினியர் உரையோடு வைத்துப் பயில்வதற்கும் இந்நூலும் உரையும் உதவும்.

இதனை இத்தனை நலம்பெறத் தொகுத்தியற்றியவர், செங்கம் போர்டு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரும் சங்கநூற் புலவருமான **வித்துவான் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்.** அவர்கட்குத் தமிழுலகம் பெரிதுங் கடமைப்பட்டிருக்கின்றது; அவர்கட்கு எங்கள் அகமார்ந்த நன்றியைப் புலப்படுத்திக்கொள்கின்றோம்.

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | ஆராய்ச்சி முன்னுரை ... ... | எ |
| | கடவுள் வாழ்த்து ... ... | க |
| க. | நாமகள் இலம்பகம் ... ... | ங |
| உ. | கோவிந்தையார் இலம்பகம் ... ... | சஅ |
| ங. | காந்தருவதத்தையார் இலம்பகம் ... | சுo |
| ச. | குணமாலையார் இலம்பகம் .... ... | அஅ |
| ரு. | பதுமையார் இலம்பகம் ... ... | கஉஎ |
| சு. | கேமசரியார் இலம்பகம் ... ... | கருரு |
| எ. | கனகமாலையார் இலம்பகம் ... ... | கஎச |
| அ. | விமலையார் இலம்பகம் ... ... | உகஉ |
| கூ. | சுரமஞ்சரியார் இலம்பகம் ... ... | உஉகூ |
| கo. | மண்மகள் இலம்பகம் ... ... | உசங |
| கக. | பூமகள் இலம்பகம் ... ... | உசுக |
| கஉ. | இலக்கணையார் இலம்பகம் ... ... | உசு[illegible] |
| கங. | முத்தி இலம்பகம் ... ... | உஅஎ |
| | பாட்டு முதற்குறிப் பகராதி ... ... | ஙஉஎ |

# சீவக சிந்தாமணி - சுருக்கம்

## முன்னுரை

### பொது

சீவக சிந்தாமணி யென்பது சமண முனிவர்கள் தமிழில் செய்துள்ள காவியங்களுள் தலையாயது. தமிழில் வழங்கும் காவியங்களுள் பெருங்காவியம், சிறுகாவியம் என இருவகை யுண்டு. இவை வகைக்கு ஐந்து காவியங்களாகக் கூறப்படும். பெருங்காவியம் ஐந்தனுள், வளையாபதி, குண்டலகேசி என்ற இரண்டொழிய, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை யென்ற மூன்றும் அச்சாகி வெளிவந்திருக்கின்றன. சிறு காவியம் ஐந்தனுள் நாககுமார காவியம், யசோதர காவியம் என்ற இரண்டுமொழிய, எலி, சூளாமணி, நீலகேசி, உதய ணன் பெருங்கதை என்ற மூன்றும் அச்சாகி வெளிவந் துள்ளன; யசோதர காவியம் நெடுநாட்களுக்கு முன்பு அச்சாகி வெளிவந்ததுண்டு; இப்போது கிடைப்பது அரிது; நாக குமார காவியம் கிடைக்கவேயில்லை.

தமிழ்மொழிப் பயிற்சிக்கண் இருந்த ஆர்வக்குறைவா லும் தமிழ் படிப்பவர் தொகை குன்றி யிருந்ததுடன் தமிழ் நூல் ஆராய்ச்சி மக்கள் மனக் கண்ணிற்கு உயர்வாகத் தோன்றாமையாலும் தமிழ் நூல்கள் பல வெளிவரத் தடை யுற்றன; வெளி வந்தவை மறுபதிப்பு எய்த மாட்டா மடியலாயின.

இக்காலத்தே தமிழ் நூலாராய்ச்சி சிறிது உயர்வு பெற்று வருகிறது; தமிழ் கற்போரும் பெருகுகின்றனர்; மக்கட்கும் தமிழிடத்தும் தமிழ் நூல்களிடத்தும் பற்று உண்டாகி வருகிறது. திங்கள் வெளியீடுகளும், கிழமை வெளியீடுகளும், நாள் வெளியீடுகளும் பல்கி யிருப்ப தொன்றே, யாம் கூறிய கருத்தை வலியுறுத்துவதாம்.

இப்போது, இனிய தமிழ் நூல்கள் பல எளிய விலையில் அழகுற அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. பதினைந் தாண்டுகட்கு முன் இருந்த தமிழ் நூல்களின் தொகையினும் இப்போது அத்தொகை பன்மடங்கு பெருகி இருக்கிறது; படிப்போர் திரளும் மிகுந்தே யிருக்கிறது. இந்நிலையில், உண்மையாகவே தமிழ்த்தொண்டு புரியும் நன்மக்களும், கழகங்களும் மேற்கொண்டு புரியத்தக்க பணியொன்றே உளது; அஃதாவது, உயரிய நூல்களை யாவரும் பெறத் தக்க முறையில் வெளியிடுவதும், அவற்றின் அரிய கருத் துக்களை எளிய வகையில் சுருக்கியும் வடித்தும் உரைப் படுத்தும் மொழி பெயர்த்தும் மக்கள் தமிழ்வேட்கை மிகக் கொள்ளுமாறு செய்வதுமாம். இத்துறையில் பல கழகங் கள் வேலை செய்கின்றன. அவற்றுள் இச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அவ்வெல்லாவற்றிற்கும் முற்பட்டிருக் கிறது என்பது ஒருதலை. இக் கழகம் இப்போது சீவக சிந்தாமணியைச் சுருங்கிய வடிவில் தமிழுலகிற்கு வழங்கு கிறது.

## நூலாசிரியர்

சீவகசிந்தாமணியை யியற்றிய ஆசிரியர், திருத்தக்க தேவர் என்னும் சமணமுனிவராவர். நரி விருத்தம் என நிலவும் சிறுநூலும் இவர் இயற்றியதே யென்பர். சீவக சிந்தாமணி பதின்மூன்று இலம்பகங்களாக வகுக்கப்பெற்று *மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து செய்யுட்களைக் கொண்டுள்ளது; சீவகன் என்னும் அரசகுமரன் வரலாறு கூறும் வாயிலாகச் சமண் சமயக் கருத்துக்களையும் உடன் உரைக்கும் திறம் உடையது.

இந்நூலாசிரியரான திருத்தக்க தேவர் பிறந்த ஊர், குலம், காலம் முதலியன வெளிப்படையாக ஒன்றும் தெரிய

---

* திருத்தக்கதேவர் செய்தவை இரண்டாயிரத்து எழுநூறு என்றே சிந்தாமணியின் ஓம்படைச் செய்யுள் உரை தெரிவிக் கின்றது; மிகுந்த நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்களும் கந்தி யாரால் செய்யப்பட்டவை யென்பர்.

வில்லை. சைனர் மட்டில் கேள்வி வழியாகப் பெற்ற ஒரு குறிப்பை யுரைக்கின்றனர்.

"திருத்தக்க தேவர் சோழர் குலத்திற் பிறந்தவர். இளமையிலேயே தென்மொழி, வடமொழியென்ற இரு மொழியிலும் நிரம்பிய புலமை பெற்றவர். அப்போதே, துறவு பூண்டு சமண்சமயத்துக்குரிய நூல் பலவும் கற்றுச் சீரிய சமண முனிவராய் விளங்கினவர், இவர் காலத்தே மதுரையிலிருந்த சங்கப் புலவருடன் இவர் நட்புற்றுப் பழைய தமிழ் நூல்களை இனிதாராய்ந்தனர். அச் சங்கப் புலவர், "சமண் சமயத்துப் புலவர் பலர்க்கும் துறவினை வியந்து பாடத் தெரியுமேயன்றி, இன்பச் சுவை கனியப் பாடல் இயலாதுபோலும்" என்றனர். அதுகேட்ட இவர் இச் சீவகசிந்தாமணியை யெழுதி அவர் கருத்து மாறச் செய்தனர்."

இக் கேள்வி வரலாற்றை நோக்கின் இவர் சோழநாட்டவர் என்றும், சோழர் குலத்தவர் என்றும், பாண்டிநாட்டில் தம் புலமை நிரம்பப்பெற்று, இவ்வினிய தமிழ்க் காவியத்தை யியற்றினர் என்றும் ஓராற்றால் உணரலாம். இவர் காலத்திருந்த மதுரைத் தமிழ்ச் சங்கம், சிலப்பதிகாரம் இறையனார் அகப்பொருள் என்ற இவற்றுட் கூறப்படும் கடைச்சங்கம் அன்று என்பது, இந்நூற்கு உரைகண்ட நச்சினார்க்கினியாரது உரைக் குறிப்பால் தெரிகின்றது. அவர் இந்நூலை, "பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலியன வாம்" என்று குறிக்கின்றார். இனி, இத் திருத்தக்க தேவரது காலத்தை ஆராய்ந்து காண முயன்ற ஆராய்ச்சியாளர்; "இவருடைய காலம் கி. பி. 900-அல்லது அதற்குப் பிந்திய தாக இருக்கலாம்" * என்று கூறுகின்றனர்.

## நூல் வரலாறு

தமிழ் நாட்டில் சமண் சமயத்தவருள், இச்சிந்தாமணியேயன்றிச் சத்திரசூடாமணி, கத்திய சிந்தாமணி, சீவந்தர நாடகம், சீவந்தர சம்பு என்பன வடமொழியிலும், மகாபுரா

* PP. 375 Ancient India By Dr. S. K. Iyengar.

ணம், ஸ்ரீபுராணம் என்பன மணிப்பிரவாள நடையிலும் உள்ளன என்பர். இவற்றுள் தேவரியற்றிய சிந்தாமணிக்குக் காலத்தால் முற்பட்டன இவை, பிற்பட்டன இவை என்பது நன்கு காணப்படவில்லை. சைனருட் சிலர் கத்திய சிந்தாமணி இதற்கு முதல் நூல் என்கின்றனர். மற்று, இதனைத் தேவரும் எடுத்தோதவேயில்லை. "சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்", இதனைத் "தெருண்டார்" ஏற்றுக் கொண்டனர் என்றே கூறுதலால், சீவகன் வரலாறு தேவர் காலத்தே சமணருலகத்தில் பயில வழங்கிய தென்பதுமட்டில் இனிது தெரிகின்றது.

## சீவகன் பிறப்பு

கோடாத செங்கோல் குளிர்வெண்குடைக்
கோதை வெள்வேல்
ஓடாத தானை உருமுக்குரல்
ஓடை யானை,
வாடாத வென்றிமிகு சச்சந்தன்
என்ப மன்னன்;
வீடாத கற்பின் அவன்தேவி
விசயை யென்பாள்.

இதன்கட் கூறிய சச்சந்தனுக்கும் விசயைக்கும் பிறந்த மகன் சீவகன். இவன் பிறந்த அன்றே சச்சந்தன் இறந்தான்; இவனும் தன்னைப் பெற்ற தாயை விட்டுப் பிரிந்து கந்துக்கடன் என்பவனால் வளர்க்கப்பட்டான். அச்சணந்தி என்ற பெரியோன்பால் எல்லாக் கலைகளும் கற்றான்; ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்தனித் தோன்றலாய்ச் சீவகன் விளக்கமுற்றான். விசயை தெய்வமொன்றின் துணையால் தண்டக வனத்துத் தவப்பள்ளியில் தன் மகன் வாழ்க என நோன்பு நோற்கலுற்றாள்.

## வளர்ப்பு

சீவகன் கலைபலவும் கற்றபின், ஆசிரியனால் தன் பிறப்பு வரலாறு உணர்ந்தான். ஆசிரியன் பணித்ததனால், ஏற்ற காலம் வருமளவும், தன் பிறப்பு உண்மையினை வெளிப்படாவாறு மறைத்துக்கொண்டான். தந்தையாய் வளர்த்த கந்

துக்கடன்பாலும், அவன் மனைவி சுநந்தைபாலும் மாறு அன்பு பூண்டொழுகினன். இவனுக்குரிய அரசுரிமையைத் தனக்கே யாக்கிக்கொண்ட கட்டியங்காரனே ஆட்சி செலுத்தி வந்தான். அந்த நகரின்கண்ணே சீவகனும் வளர்ந்து சிறப் புற்றான்.

## கோவிந்தை திருமணம்

சீவகன் சிறப்புற்று வரும் நாளில், இராசமாபுரத்து ஆயர் நிரைகளைக் கவர்ந்து சென்ற வேடர் கூட்டத்தை அரசன் தானை வீரர் வெல்லமாட்டாது முதுகிட்டோட, சீவகன் தன் தோழருடன் சென்று, "ஆளற்ற மின்றி" வேடருடன் பொருது துரத்திவிட்டு, ஆனிரையை மீட்டுத் தந்து, ஆயர் தலைவனான நந்தகோன் என்பவன் மகள் கோவிந்தை யென்பவளைத் தன் தோழருள் ஒருவனான பது முகனுக்குத் திருமணம் செய்வித்தான்.

## காந்தருவதத்தை திருமணம்

அவ்விராசமாபுரத்தே வாழ்ந்த சீதத்தன் என்னும் வணிகன், தன்பால் கலுழவேகன் என்னும் விஞ்சையர் வேந்தன் அடைக்கலப்படுத்திய அவன் மகள் காந்தருவ தத்தையை இசைப்போர் செய்து வெற்றி பெறுவோனுக்குத் திருமணம் செய்து தருவதாகத் தெரிவிப்ப, அப்போரில் அரசர் பலரும் தோற்றது கண்டு, சீவகன் சென்று அவளைத் தோல்வியுறுவித்து மணம் செய்து கொண்டான்.

## குணமாலை திருமணம்

அந் நகரமாந்தர் வேனிற்காலத் தொருநாள் பொழில் விளையாடிப் புனலாட்டயர ஒரு பூம்பொழிலுக்குச் சென் றிருந்த பொழுது, குணமாலை சுரமஞ்சரி என்ற இரண்டு செல்வ மங்கையர், சுண்ணப்பொடி காரணமாகத் தம்முள் நட்பு மாறுபட்டுப் பிரிந்தேகினர். அவருள் சுண்ணத்தால் மேம்பட்ட குணமாலை நீராடிவிட்டு வரும்போது, அசனி வேகம் என்னும் அரசு யானை, மதம் மிக்க அவளைக் கொல்ல ஓடிவரவே, அது கண்ட சீவகன், அவ் யானையை அடர்த்து,

அவளை உயிருய்வித்தான். பின்பு அவன் அவள் மீதும் அவள் அவன்மீதும் கருத்தைப் போக்கிக் காதல் மிகுந்து மணம் செய்துகொண்டனர். இதற்குள், அரசன் யானை அடக்கப்பட்டது தெரிந்து, சீவகனைப் பற்றிக் கொணருமாறு வீரரைப் பணிப்ப, அவர் போந்து, அவனைக் கொண்டேகுங்கால், பெரும்புயலும் மழையும் வந்து மோதிப் பேதுறுப்ப, அதனிடையே வந்த சுதஞ்சணன் என்னும் நன்றி மறவாத் தேவன், சீவகனைத், தான் வாழும் மலை முடிக்குக் கொண்டுபோயினன்.

## பதுமை திருமணம்

பின்னர், சீவகன், அத் தேவன்பால் சில நாள் தங்கிப், பின் வேறு நாடுகளைக் காண வேட்கைகொண்டு, விடைபெற்றுப் பல மலைகளையும், காடிடையிட்ட நாடுகளையும் கடந்து, பல்லவ தேயத்துச் சந்திராபமென்னும் தலை நகரையடைந்தான். அந் நகரவேந்தன் மகன் உலோகபாலன் என்பானுடன் நட்புற்றான்; அவன் தங்கை பதுமை என்பவளைப் பாம்பு தீண்ட, அவள் அறிவுசோர்ந்தாள். பலரும் பலவகையால் முயன்றும் ஒருபயனும் எய்தவில்லை. முடிவில் சீவகன் நஞ்சினைப் போக்கி அவட்கு நலம் செய்து, அவளை மணந்து கொண்டான். சின்னாள் கழிந்ததும், சீவகன் ஒருவருக்கும் சொல்லாமல், வேற்றுருக்கொண்டு, அந்நாட்டை விட்டுப் போய்விட்டான்.

## கேமசரி திருமணம்

போனவன், தக்க நாட்டையடைந்தான். அந்த நாட்டுக் கேமமாபுரத்தில் வாழ்ந்த சுபத்திரன் என்னும் வணிகன் நாடோறும் செய்துவந்த விருந்துக்குச் சென்றான். அவனுக்குக் கேமசரி என்று ஒரு மகளிருந்தாள். அவள் பிறந்த நாளைக் குறித்த காலக் கணக்கர், "இவட்குக் கணவனாவான் எவனோ அவனன்றிப் பிற ஆடவர் எவரும் இவள் கண்ணிற்கு ஆடவராகத் தோன்றமாட்டார்" என்று உரைத்திருந்தனர். சீவகனைக் கண்டதும் அவள் நாணித் தலை கவிழ்ந்து நிற்ப, இவனும் அவள்பால் வேட்கை கொண்

டான்; இருவர்க்கும் திருமணம் இனிது நடந்தது. அங்கே சிலநாளிருந்த சீவகன் அவளிடத்தும் பிறர் எவரிடத்தும் கூறாமல், பிரிந்தேகி, எதிர்ப்பட்ட ஒருவனுக்குத் தன் அணிகலனை ஈந்து அறம் சில பகர்ந்து ஏகினன்.

## கனகமாலை திருமணம்

பின்பு சீவகன் மத்திமதேயத்து ஏமமாபுரத்தையடைந்து அந் நகரத்து வேந்தன் மக்கட்குப் படைக்கலம் பயில்விக்கும் ஆசிரியனாய் அமர்ந்து, வில் வாள் முதலிய படைப் பயிற்சி நல்கிவந்ததோடு, அவ்வப்பொழுது அற நெறியும் அறிவுறுத்தி வந்தான். அவ்வரசன் மகள் கனகமாலை என்பாளுக்கும், சீவகனுக்கும், கருத்தொருமை எய்த, அரசன் தன் மக்கட்கு இவன் வழங்கியுள்ள பயிற்சிச் சிறப்புக்கண்டு வியந்து, தன் மகளை மணம் செய்துகொடுத்தான்; இங்கேயும் சீவகன் சின்னாளே தங்கினான். இதற்கிடையே இவன் உயிரோடிருப்பதை இராசமாபுரத்தேயிருந்த காந்தருவதத்தை தன் விஞ்சையாலுணர்ந்து, சீவகன் தம்பியான நந்தட்டன் என்பவனை விஞ்சையால் ஏமமாபுரத்தை அடையுமாறு செய்தனள். நந்தட்டன் சீவகனுடன் இருந்து வந்தான். பதுமுகன் முதலிய (சீவகன்) தோழர்கள் இவனைத் தேடிவருங்கால், தண்டக வனத்துத் தவப்பள்ளியில் விசயையைக் கண்டு அளவளாவிக்கொண்டு இவ் வேமமாபுரத்தை யடைந்து, நிரை கவர்வார்போல் போர் தொடங்கிச் சீவகனையுடைந்து தாம் விசயையைக் கண்ட செய்தியைக் கூறினர். சீவகன் அவர் அனைவரையும் அரசனுக்கும், அவன் மக்கட்கும், கனகமாலைக்கும் அறிவித்து அவர்பால் விடைபெற்றுவந்து விசயை யடி வீழ்ந்து வணங்கினன்.

## விமலை திருமணம்

மகனைக் கண்டு மனம் மிக மகிழ்ந்த விசயை, சீவகனை உடனே விரைந்து சென்று, மாமனான கோவிந்தராசனைக் கண்டு, அவன் துணைபெற்றுக், கட்டியங்காரனை வெல்ல வேண்டுமெனப் பணித்தனள். அப் பணியை மேற்கொண்ட

ணம், ஸ்ரீபுராணம் என்பன மணிப்பிரவாள நடையிலும் உள்ளன என்பர். இவற்றுள் தேவரியற்றிய சிந்தாமணிக்குக் காலத்தால் முற்பட்டன இவை, பிற்பட்டன இவை என்பது நன்கு காணப்படவில்லை. சைனருட் சிலர் கத்திய சிந்தாமணி இதற்கு முதல் நூல் என்கின்றனர். மற்று, இதனைத் தேவரும் எடுத்தோதவேயில்லை. "சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்", இதனைத் "தெருண்டார்" ஏற்றுக் கொண்டனர் என்றே கூறுதலால், சீவகன் வரலாறு தேவர் காலத்தே சமணருலகத்தில் பயில வழங்கிய தென்பதுமட்டில் இனிது தெரிகின்றது.

## சீவகன் பிறப்பு

கோடாத செங்கோல் குளிர்வெண்குடைக்
 கோதை வெள்வேல்
ஓடாத தானை உருமுக்குரல்
 ஓடை யானை,
வாடாத வென்றிமிகு சச்சந்தன்
 என்ப மன்னன்;
வீடாத கற்பின் அவன்தேவி
 விசயை யென்பாள்.

இதன்கட் கூறிய சச்சந்தனுக்கும் விசயைக்கும் பிறந்த மகன் சீவகன். இவன் பிறந்த அன்றே சச்சந்தன் இறந்தான்; இவனும் தன்னைப் பெற்ற தாயை விட்டுப் பிரிந்து கந்துக்கடன் என்பவனால் வளர்க்கப்பட்டான். அச்சணந்தி என்ற பெரியோன்பால் எல்லாக் கலைகளும் கற்றான்; ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்தனித் தோன்றலாய்ச் சீவகன் விளக்கமுற்றான். விசயை தெய்வமொன்றின் துணையால் தண்டக வனத்துத் தவப்பள்ளியில் தன் மகன் வாழ்க என நோன்பு நோற்கலுற்றாள்.

## வளர்ப்பு

சீவகன் கலைபலவும் கற்றபின், ஆசிரியனால் தன் பிறப்பு வரலாறு உணர்ந்தான். ஆசிரியன் பணித்ததனால், ஏற்ற காலம் வருமளவும், தன் பிறப்பு உண்மையினை வெளிப்படா வாறு மறைத்துக்கொண்டான். தந்தையாய் வளர்த்த கந்

துக்கடன்பாலும், அவன் மனைவி சுநந்தையாலும் மாறு அன்பு பூண்டொழுகினான். இவனுக்குரிய அரசுரிமையைத் தனக்கே யாக்கிக்கொண்ட கட்டியங்காரனே ஆட்சி செலுத்தி வந்தான். அந்த நகரின்கண்ணே சீவகனும் வளர்ந்து சிறப் புற்றான்.

## கோவிந்தை திருமணம்

சீவகன் சிறப்புற்று வரும் நாளில், இராசமாபுரத்து ஆயர் நிரைகளைக் கவர்ந்து சென்ற வேடர் கூட்டத்தை அரசன் தானை வீரர் வெல்லமாட்டாது முதுகிட்டோட, சீவகன் தன் தோழருடன் சென்று, "ஆளற்ற மின்றி" வேடருடன் பொருது துரத்திவிட்டு, ஆனிரையை மீட்டுத் தந்து, ஆயர் தலைவனான நந்தகோன் என்பவன் மகள் கோவிந்தை யென்பவளைத் தன் தோழருள் ஒருவனான பது முகனுக்குத் திருமணம் செய்வித்தான்.

## காந்தருவதத்தை திருமணம்

அவ்விராசமாபுரத்தே வாழ்ந்த சீதத்தன் என்னும் வணிகன், தன்பால் கலுழவேகன் என்னும் விஞ்சையர் வேந்தன் அடைக்கலப்படுத்திய அவன் மகள் காந்தருவ தத்தையை இசைப்போர் செய்து வெற்றி பெறுவோனுக்குத் திருமணம் செய்து தருவதாகத் தெரிவிப்ப, அப்போரில் அரசர் பலரும் தோற்றது கண்டு, சீவகன் சென்று அவளைத் தோல்வியுறுவித்து மணம் செய்து கொண்டான்.

## குணமாலை திருமணம்

அந் நகரமாந்தர் வேனிற்காலத் தொருநாள் பொழில் விளையாடிப் புனலாட்டயர ஒரு பூம்பொழிலுக்குச் சென் றிருந்த பொழுது, குணமாலை சுரமஞ்சரி என்ற இரண்டு செல்வ மங்கையர், சுண்ணப்பொடி காரணமாகத் தம்முள் நட்பு மாறுபட்டுப் பிரிந்தேகினர். அவருள் சுண்ணத்தால் மேம்பட்ட குணமாலை நீராடிவிட்டு வரும்போது, அசனி வேகம் என்னும் அரசயானை, மதம் மிக்க அவளைக் கொல்ல ஓடிவரவே, அது கண்ட சீவகன், அவ் யானையை அடர்த்து,

சீவகன், இராசமாபுரத்தை யடைந்து, தோழரை ஓரிடத்தே இருக்கவைத்துத் தான் வேற்றுருக்கொண்டு நகர்க்குள் நுழைந்தான். நுழைந்தவன், அந் நகரத்துச் சாகரதத்தன் என்னும் வணிகன் கடையை அண்மினன். அப்போது, அவ் வணிகன் மகள் விமலை யென்பவள், பந்தாடிக்கொண் டிருந்தவள், சீவகனைக் கண்டு வேட்கை கொண்டாள்; இவனும் அவள்பால் வேட்கை மிகுந்தான். இதற்குள் அவன் கடையில் விலையாகாமலிருந்த சரக்கு விலையாகிவிட்டது. "மகட்குக் கணவன் வருங்கால் விலையாகாப் பண்டம் விலையாகி விடும்" என்று சாகரதத்தன் மகளது குறிப்புக் குறித்தோர் கூறியிருந்தமையின், அவன் சீவகனுக்கு அவளை மணம் செய்துவைத்தான். சீவகன் அவளுடன் இரண்டு திங்கள் இருந்தான்.

## சுரமஞ்சரி திருமணம்

பின்பு அவன் தன் தோழரை யடைந்தான். அவர்கள், குணமாலையுடன் பிணங்கி நீங்கிய சுரமஞ்சரி, "ஆடவர் முகத்தையும் பாரேன், அவர் பெயரையும் செவிகொடுத்துக் கேளேன்" என்று நோன்பு பூண்டிருப்பதைத் தெரிவித்து, அவளை மணந்து வருமாறு தூண்டினர். சீவகன் முதிய வொரு வேதியன் வடிவுகொண்டு சுரமஞ்சரியின் கன்னிகாமாடம் அடைந்து, கவர் பொருள்பட இனிய சொல்லாடி, பாட்டிசைத்து, அவளைக் காமன் கோட்டத்துக்குச் செல்வித்துத் தானும் உடனே சென்று தோழர் சூழ்ச்சியால் மணந்து கொண்டான்.

## இலக்கணை திருமணம்

பின்பு, சீவகன் குதிரை வாணிகன் வடிவுபூண்டு, விதைய நாட்டினையடைந்து, தன் மாமன் கோவிந்தராசனைக் கண்டு கட்டியங்காரனை வெல்லற்கு வேண்டியதைச் சூழலுற்றான். கோவிந்தராசனும் கட்டியங்காரன் தனக்கு வஞ்சனையாக விடுத்திருந்த ஓலையைக் காட்டினன். பின்னர், திரிபன்றி யொன்றை நிறுவி, "இதனை அம்பெய்து வீழ்த்துப்வர்க்கு என் மகள் இலக்கணை உரியள்" என்று கோவிந்தராசன்

அரசர்கட்கும் கட்டியங்காரனுக்கும் ஓலை விடுத்தனன். அரசரும் கட்டியங்காரனும் அவன் மக்கள் நூற்றுவரும் வந்து கூடி அத் திரிபன்றியை வீழ்த்தமாட்டாராய் மெலிவுற்றனர்; சீவகன் அதனை வீழ்த்தி வென்றிகொண்டான். அவன் இன்னான் என்பதைக் கோவிந்தராசன் வேந்தர் பலருக்கும் அறிவித்தான். வானிடத்தே, ஓர் இயக்கன் தோன்றி, "சீவகன் என்னும் அரிமா கட்டியங்காரன் என்னும் யானையின் உயிரைச் செகுக்கும்" என்று கூறினான். கட்டியங்காரன் சினங்கொண்டு போருக்கு எழுந்தான். அவன் படையெழுந்தது; மக்கள் எழுந்தனர்; போர் மிகக் கடுமையாக நடந்தது; போரில் கட்டியங்காரன் பட்டழிந்தான்; அவன் தானை பட்டது, மக்களும் பட்டனர். விசயை கேட்டு மிக்க மகிழ்ச்சி எய்தினாள்.

பின்பு சீவகன் ஏமாங்கத நாட்டுக்கு அரசனாய் மணிமுடி புனைந்துகொண்டு, தம்பியர்க்கும் தோழர்க்கும் செய்தற்குரிய சிறப்புக்களைச் செய்தான். கோவிந்தராசன் மகள் இலக்கணையாரையும் அரசற்குரிய முறைப்படியே திருமணம் புரிந்தான்.

## சீவகன் துறவு

சீவகன் நாடாட்சி புரிந்து வருகையில் விசயமாதேவி துறவு பூண்டாள். சீவகன் மனைவியரான காந்தருவதத்தை முதல் இலக்கணை ஈறாக உள்ள மனைவியர் பலரும் முறையே நன்மக்களைப் பயந்தனர். அவர்களும் செவ்வியராக வளர்ந்து சிறப்பெய்தினர். சீவகனுக்கும் முதுமை யெய்தலுற்றது. ஒருநாள் சோலைபுக்கு இனிதிருந்த சீவகன் ஆங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்றைக் கண்டு, துறவு பூணத் தொடங்கினான். தன் மூத்தமகன் சச்சந்தனை அரசனாக்கி, ஏனைத் தம்பியரை அவனுக்கு உரியராக்கினன். பின்பு முனிவர்களைக் கண்டு நல்லறம் கேட்டு, நற்றுறவு மேற்கொண்டு, நோன்பு பல ஆற்றி, கடையிலா இன்ப நிலையாகிய சிவகதி பெற்றான். அவன் மனைவியரும் அவன் பிரிவு ஆற்றாது வருந்திப் பின்பு துறவு பூண்டனர்.

## நூலின் நோக்கம்

இனி, இந்நூலாசிரியர் இந்நூலைச் செய்தற்குக்கொண்ட நோக்கம் இஃது எனக் காண்டல் வேண்டும். திருத்தக்க தேவர் இந்நூலைத் தொடங்குங் காலத்தே, தம் ஆசிரியர் அருள் பெற்றுப் பாடி, முடிவில் அவர்கட்குக் காட்ட, அவர் இந்நூலின் சொற்பொருள் நலங் கண்டு வியந்து, "சிந்தாமணி யோதியுணர்ந்தார் கேட்டார் இந்நீரராய் உயர்வர்" "பூந்தாமரையாள் காப்பாளாம்" என்று பாராட்டினர். தேவரும், "ஐயனே, நின் பாதம் ஏத்தி, சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்; தெருண்டவர் நன்றென்று மேற்கொண்டனர்" என்று கூறினர். நூன்முடிவில் இவ்வாறு தேவருக்கும் அவர்தம் ஆசிரியருக்கும் இன்பவுரையாட்டு நிகழக் காண்கின்றோம்; நூலின் தொடக்கத்தும் நூல் செய்யும் தம் கருத்தையும் தேவர் இனிது விளங்கக் கூறுகின்றாரில்லை.

கேள்வி வழியாக வழங்கும் வரலாறு, "சமண முனிவர் காமச்சுவை முற்றும் கனியக் கவிபாடும் வன்மையுடையார்" என்பதனை நிலைநாட்டுவது கருத்தாகக் கொண்டு, தேவர் இந்நூலினை எழுதினார் என்று கூறுகின்றது. இதுவே தேவர்க்குக் கருத்தென்பதனை அவர் தாமே எவ்விடத்தும் இனிது விளங்கக் கூறினாரில்லை. நூற் புணர்ப்பும் அக் கருத்தை வற்புறுத்தவில்லை.

## நூற்புணர்ப்பு ஆராய்ச்சி

சச்சந்தன் விசயைபாலும், கட்டியங்காரன் அநங்கமாலை என்னும் பரத்தைபாலும், சீவகன் காந்தருவதத்தை முதலிய மகளிர்பாலும் தேசிகப் பாவை முதலிய பரத்தையர்பாலும் காமவின்பம் துய்த்த செய்தியே இச் சிந்தாமணிக்கண் காணப்படும் காமப் பகுதிகளாகும். காமக் காதலுற்ற இருவர், ஒருவரையொருவர் காண்டலும் காதல் கொளலும், இடையீடின்றிக் கூடலும் நிகழ்த்துவரேல், அவரது இன்பம் கேட்போருக்கும் கற்றறிவோருக்கும் சீரிய இன்பம் தருவதாகாது. காதலிருவர் தம்மிற்கூடி இன்பம் சிறத்தலும்,

இடையீடுபட்டுத் துயருறுதலும், பின்னர் அது நீங்கலும், இருவரும் கூடி இன்புறுதலும், காமச்சுவை கனிய யாக்கும் நூல் யாப்புக்குச் சிறந்தனவென்பது யாவரும் கண்ட நூற் புணர்ப்பாகும். இப்பெற்றித்தாய நூற்புணர்ப்பு இந் நூற்கண் யாண்டும் இல்லை. காம வயப்பட்ட காதலர் ஒருவரும் தம் காதலொழுக்கம் இடையீடுபட்டதாக இந் நூல் கூறுகின்றதில்லை. காதற்காம நெறியாகிய களவொழுக்கத்தே பல முட்டுப்பாடு நிகழாதவழி, இன்பம் சிறவாது என்ற மெய்ம்மை நெறியைத் தமிழ் இலக்கணம் இற்செறிப்பு, சேட்படை முதலியவற்றை இடையீடாகத் தொடுத்துக் கூறுகிறது. "பல்முட்டின்றால் தோழிக் களவே" எனப் பரணர் முதலாயினாரும் விளக்கியுள்ளனர். மேனாட்டு ஜான்ஸன் முதலிய பேராசிரியர்களும் இக் கருத்தே இன்பச் சுவை மிகவுரைக்கும் நூற் புணர்ப்புக்கு இன்றியமையாததெனை இயம்பியிருக்கின்றனர். * தமிழ் நூல் துறையும் பிற வடமொழித் துறையும் நன்கு உணர்ந்த தேவர்க்கு, இந்நெறி தெரியாததன்று. ஆகவே, திருத்தக்க தேவர், "சமணமுனிவர்க்குக் காமச்சுவை கனியப்பாடும் திற னுண்டு" என்பதை நிலைநாட்டப் பாடினார், என்னும் செய்தி சிறிதும் பொருந்துவதன்று. அஃது உண்மையாயின், திருத்தக்கதேவர் "காமச்சுவை கனியத் தொடர்நிலைச் செய்யுள் யாக்கும் துறையில் படுதோல்வி எய்தினார்" என்பதே துணிவாம். சீவகன், சச்சந்தன், பதுமுகன், கட்டியங்காரன் முதலாயினார் காமவின்பம் துய்த்தநெறி கூறுமிடத்துத் தேவாது புலமைத்திறம் கற்பார் அறிவிற்கு அறிவின்பம் தரும் நெறியில் அமையவில்லை. இதனாலும் தேவர் காமச் சுவை கனியப் பாடவேண்டுமென இந்நூலைப் பாடினார் என்பது பொருந்தாமை இனிது துணியப்படும். ஈண்டு அப் பொருந்தாமையினை எடுத்தோதின் பெருகும்.

## மணநூல் என்னும் கொள்கை

இனி, இந்நூலை, "மணநூல்" என்று அறிஞர் வழங்குவர். சீவகன் காந்தருவதத்தை முதலிய மகளிரைத் திரு

* Johnson's Preface to Shakespeare.

மணம் செய்து கொண்ட செய்தி பெரிதும் கூறப்படுவதே யன்றி, அவன் கல்வி பயின்று சிறந்த செய்தி கூறுமிடத்தும், சிவநெறி பெற்ற செய்தி கூறுமிடத்தும், அவற்றைத் திரு மணமாகவே கூறி யுள்ளனர். சீவகன் கல்வியறிவு பெற்ற செய்தியை, "குழைமுக ஞான மென்னும் குமரியைப் புணர்க்கலுற்றார்" என்றும், அவன் ஏமாங்கத நாட்டின் அரசேற்று முடிபுனைந்து கொண்ட செய்தியை, "பொருவில் பூமகட் புணர்ந்தனன்" என்றும் அவன் சிவநெறிக்குரிய பரி நிருவாண மெய்திய செய்தியை

"கேவல மடந்தை யென்னும்
 கேழ்கிளர் நெடிய வாட்கண்
பூவலர் முல்லைக் கண்ணிப்
 பொன்னொரு பாக மாகக்
காவலன் தானோர் கூருக்
 கண்ணிமை யாது புல்லி
மூவுல குச்சி யின்பக்
 கடலினுள் மூழ்கி னானே"

என்றும் கூறியிருத்தலால், இதனை "மணநூல்" என அறிஞர் வழங்கும் பெயர் மிகப் பொருத்தமாகவே யுளது.

இல்லிருந்து செய்தற்குரிய இல்லறத்தையும், அதனைத் துறந்து செய்தற்குரிய துறவறத்தையும் காமக்கூட்டமாக வைத்துப் புணர்த்த திறத்தால் காமச்சுவை கனியப் பாடினார் திருத்தக்க தேவர் என்பது கருத்தாயின், காமக் கூட்டத்தின் சிறப்பை அவர் நன்கறிந்து பாடினாரில்லை என்பதே துணிபாம். இடையீடில் வழிக் காமம் சிறவாதென்பது, "அலரிற் றோன் றும் காமத்திற் சிறப்பே" என்ற நூற்பாவினை நுணுகி நோக்கியவழிப் புலனாகும்.

## சமயநுண் பொருள் கூறல்

இனி, தேவரது கருத்துத்தான் யாதோ வெனின் கூறுதும்: தேவர் காலத்தே வேத வழக்கொடு பட்ட வைதிக சமயம் தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றி வேற்றுச் சமயங்கள் இடம் பெறாவகையில் தகைந்துகொண்டிருந்தது. மக்கள்

மனத்தே அவ் வைதிகநெறி பற்றிய வரலாறுகளும் கொள்கைகளுமே பதிந்திருந்தன. அகப்பாட்டாராய்ச்சியும், அதன் வழிப்பெறு மின்பமும் அறிஞர் அறிவைப் பணிகொண்டொழுகின. அவரைத் தம் வயமாக்கி அவருள்ளத்தே தாமுணர்த்தக் கருதிய சமண்சமயக் கருத்துக்களை யுணர்த்துதற்கு வேறு வாயில் காணுது, இந்நூற் புணர்ப்பினைத் தேவர் மேற்கொண்டனர் என்பது துணிபாம்.

இனி, தேவர், இத் தொடர்நிலைச்செய்யுள் யாப்பின்கண் இடையிடையே பல்வகை நிலையாமைகளையும் வினைத்தொடர்பின் வீறுபாட்டினையும் தெளித்துச்சென்று சீவகன் முத்திபெற்ற செய்தி கூறும் இலம்பகத்தே அவற்றை நன்கு வற்புறுத்திச் சமண் சமயக் கருத்துக்களை இனிய பாக்களால் அரிய சொற்பொழிவு செய்து முடிக்கின்றார்.

மணிமேகலையில் ஆதிரை என்பாளது கணவன் சாதுவன் என்போன் நாகர்வாழ் மலைப்பக்கம் சார்ந்து அவர் பான்மையனாகியபோது, நாகர் தலைவனுக்கும் சாதுவனுக்கும் கள்ளும் ஊனும் உண்டலைப் பற்றியதொரு சொல்லாட்டு நிகழ்கின்றது. அவ்வாறே சீவகன் சுதஞ்சணன்பால் விடைபெற்றுப் பல்லவ நாட்டை நோக்கி வருங்கால், காட்டிடையே வேட்டுவர் தலைவன் ஒருவனைக் கண்டு, அவனோடு கள்ளுண்டல், ஊனுண்டல் என்பவற்றைப் பேசி அவனைத் தெருட்டுகின்றான்.

## கிளைக் கதைத் தொடர்பு

இவ்வாறு, இந்நூற்கண் கிளைக் காதைகள் சில வருகின்றன. நாய் தேவனானது, வேட்டுவர் தலைவனைக் கண்டது, அரங்கமாவினை அலமந்து தெருண்டது, தேசிகப்பாவை அனங்கமாலைபால் தோழியாய் அமைவது முதலியனவாகும். இவற்றைச் சீவகன் வரலாற்றுடன் இணைக்கும் திறம் ஆசிரியரது புலமை நலத்தை மிகுவிக்கின்றது. நாய் தேவனான கதை சுதஞ்சணனால் சீவகன் கட்டியங்காரன் கையகப்படாது நீங்கி ஏனை மகளிரை மணத்தற்கு வாயிலமைக்கின்றது. அசனிவேகம் மதம்பட்டது, குணமாலைக்கும் சீவகற்கும்

காதலுண்டாக்கியதோடு, கட்டியங்காரற்குச் சீவகன்பால் செற்றம் நிகழ்விக்கிறது. வேட்டுவர் தலைவனைச் சீவகன் காண்பதும், அனங்கமாவீணை அலமந்து தெருள்வதும் சீவகன் வரலாற்றிற்கு நயம்பயக்கும் இயைபுடையவல்ல. சீவகன் பதுமையாரை மணந்த கதைக்கு, ஆசிரியர் சீவகனைக் கூத்தரங்கத்தே கொண்டு நிறுத்தி, தேசிகப்பாவையின் சிந்தையை நெகிழ்வித்து, அதுவாயிலாக, சீவகற்கும் உலோகபாலற்கும் தொடர்பு உண்டுபண்ணுகின்றார். இன்றேல், சீவகன் பதுமையை மணத்தற்கு ஏது அமையாது போலும்! அநங்கமாலை சீவகன்பால் காதலுற்றாளை வலிதிற் பற்றிக் கூடினன் கட்டியங்காரன் என்றவர், தேசிகப்பாவை சீவகன்பாற் கொண்ட காதற்பெருக்கை, பதுமையை மணந்திருந்த ஞான்று காவிற்கூடிக் கரைகண்டு, சீவகன் மணிமுடி சூடி அரசிருந்த நாளில் அநங்கமாலையின் தோழியாய்ப் போந்து அவனைக் கூடித் தணித்துக்கொள்ளச் செய்கின்றார். பல்வேறு கதை நிகழ்ச்சிகளால் எடுத்த வரலாற்றைச் சிக்குப் படுத்தி, படிப்படியாக அச் சிக்கலையறுத்து முடிவெய்துவிக்கும் நூற்புணர்ப்பு முறை இக் காவிய காலங்களிலாதல், பின் வந்த புராண காலங்களிலாதல் நம் நாட்டில் புலவர் மனத்தே இடம் பெறவில்லை. சங்க காலத்திருந்த இடையீட்டுச் சிக்கல் நெறி எதனால் இவற்றுள் இல்லாதாயிற்று என்பது விளங்கவில்லை. இடையூறு படுதலும் அது நீங்கித் தெளிவுறுதலும் அறிவுக்கு இன்பந்தருவன வென்பது காவிய ஆராய்ச்சியாளர் கருத்து.

## ஆடவர் பெண்டிர்களின் குணஞ்செயல் காண்டல்

இக் காவியத்தின்கண் வரும் சிறப்புடைய ஆடவர் பெண்டிர்களின் பண்பினைச் சிறிது காண்பாம்.

**சச்சந்தன் :**

சச்சந்தன் என்பான் சீவகனுக்குத் தந்தை. இவன்,

" தருமன் தண்ணளி யால் ; தனது ஈகையால்
வருணன் ; கூற்றுஉயிர் மாற்றலில் ; வாமனே

அருமை யால் ;அழ கில்கணை யைந்துடைத்
திருமகன் ;திரு மாநில மன்னனே''

அருமையால் இவன் வாமனேயாயினும், பெண்ணின்பத்துள் மூழ்கி, அரசியற்றும் தன் உறுதொழிலைத் தாங்கமாட்டாது, அமைச்சன்பால் வைத்து உயிர் துறக்கின்றான். அமைச்சனை கட்டியங்காரனை அரசனுக்குதற்கெண்ணி, அவன்பால் தன் கருத்தைச் சொல்லுங்காலும், பெண்ணின்பத்தையே பெரிதும் நினையும் நினைவால், தன் மனைவி விசயை,

"வசையிலாள் வரத்தின் வந்தாள் ;
வான்சுவை யமிர்தம் அன்னாள் ;
விசையையைப் பிரித லாற்றேன்''

என்றே விதந்தோதி, "நீ வேந்தனாகி வையம் காத்தல் வேண்டும்" என்கின்றான். இவனை ஏனை யமைச்சர் தெருட்டிய காலத்தில், காமச் செருக்கால் கருத்திழந்து,

"எனக்குயி ரென்னப் பட்டான்
என்னலால் பிறரை யில்லான்
முனைத்திறம் முருக்கி முன்னே
மொய்யமர் பலவும் வென்றான்
தனக்குயான் செய்வ செய்தேன்
தான்செய்வ செய்க ஒன்றும்
மனக்குஇன்னா மொழிய வேண்டா
வாழியர் ஒழிக''

என்று கூறுகின்றான். பின்பு விசயை கனவு கண்டு கூறியது கேட்டு, "எந்திர வூர்தி யியற்றுமின்" என ஏற்பாடு செய்த இவனது அறிவு, இப்போது மழுங்கியதற்கு, அவனது காமக் களிப்பே காரணமாகின்றது. "காதல் மிக்குழிக் கற்றவும் கைகொடா வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" (சீவக. 1632) எனப் பிறிதொரு காலத்தே சீவகன் தெளிந்து தனக்குள் உரைத்துக்கொள்ளும் இலக்கணத்துக்கு இவன் இலக்கியமாகின்றான். ஆயினும் இதற்கு ஏதுக் கூறப் போந்த திருத்தக்கதேவர்,

" இனமா மென்றுரைப் பினும்ஏ தமென்னன்,
முனமா கியபான் மைமுளைத் தெழலால்;
புனமா மலர்வேய் நறும்பூங் குழலாள்
மனமா நெறியோ டியகா வலனே "

என்கின்றார்.

இவ்வாறு முதற்கண் மழுங்கிய சச்சந்தன் அறிவு, விசயை கண்டு கூறிய கனவால் எந்திரவூர்தி இயற்றச் செய்ததோடு யன்றிக் கட்டியங்காரனை விலக்கி அரசுரிமை அடைவியா தொழிகின்றது. கட்டியங்காரன் விளைத்துக்கொண்ட போதுதான் சச்சந்தன் தெளிவடைகின்றான். செல்வம், யாக்கை இளமை முதலியவற்றின் நிலையாமை அவற்குப் புலனாகின்றது. " நங்கைநீ நடக்கல் வேண்டும்; நன்பொருட் கிரங்கல் வேண்டா " " உரிமைமுன் போக்கி யல்லால் ஒளியுடை மன்னர் போகார்; கருமம் ஈது " என்றெல்லாம் கழறிக் கூறுகின்றான்.

**சீவகன் :**

இனி, சச்சந்தனது காமக் கள்ளாட்டின் பயனாகத் தோன்றிய சீவகன் வரலாறு முழுதும் அக் காமக் கூத்தே பெரிதும் நடைபெறுகிறது. சீவகனை வளர்த்த கந்துக்கடன் தன் மனைவி சுநந்தையுடன் கூடிச் சீவகற்குக் கல்வி கற்பித்த செய்தியையும், காமக் குறிப்பே நிலவத் திருத்தக்கதேவர் " மழலையாழ் மருட்டுந் தீஞ்சொல் மதலையை, மயிலஞ் சாயல் குழைமுக ஞான மென்னும் குமரியைப் புணர்க்க லுற்றார் " என்றே கூறுகின்றார். இவ்வாறு கல்வி பெற்ற சீவகன் காந்தருவதத்தையை வென்று மணந்து, " அலமரல் இலாத இன்பக் கடலகத் தழுந்தி " னவன், குணமாலையை அசனிவேகத்தினின்றும் காத்து உயிர் வழங்கித் தன் மனையேகி அவளது உருவமெழுதிக் காமக் கனலால் வெதும்புகின்றான். ஆண்டுப் போதரும் தத்தை அவ் வுருவு கண்டு புலந்த போது,

" பாவைநீ புலவியில் நீடல் பாவியேற்கு
ஆவியொன்று இரண்டுடம் பல்லது "

எனப் பொய்யும் கவர் பொருளும் எய்தப் பேசுகின்றான். பின்பு, பதுமையை நோக்கி, அவளுற்ற விடநோய் நீக்கி நலஞ் செய்தவன், அவள் பார்வையால் காமக் கொதிப் பெய்தி,

போது லாஞ்சிலை யோபொரு வேற்கணோ
மாது லாமொழி யோமட நோக்கமோ
யாதும் நானறி யேன்அணங் கன்னவள்
காத லால்கடை கின்றது காமமே.

என்று தன்னுட் கதறுகின்றான். இவ்வண்ணமே சென்ற விடமெங்கும் பல மகளிரை மணந்து கூடியவன், சுரமஞ்சரி என்பவளையும் தன் தோழரால் "காம திலகன்" என்ற சிறப்புப்பெய ரெய்துவதற்காக, வேற்று வடிவம் கொண்டு சென்று காதற்காமம் சிறந்து கடிமணம் செய்துகொள்ளு கின்றான். முடிவில் சீவகன், பரி நிருவாணமென்னும் கேவல ஞானத்தை யெய்தியதையும் ஆசிரியர் கேவல மடந்தை யென்னும் மங்கையைக் "கண்ணிமை யாது புல்லி, மூவுல குச்சி யின்பக் கடலினுள் மூழ்கி னானே" என்கின்றார்.

இவ்வாறு காமமே கன்றிய உருவினனாக வரும் சீவகன் பால் அறம் திறம்பிய காமம் சிறிதும் இல்லை யென்பது அநங்கமா வீணையென்பாள் வரலாற்றாலும், கோவிந்தை யாரைப் பதுமுகனுக்கு மணம் செய்த வரலாற்றாலும் விளங்கு கின்றது. மேலும், அந்தணர்க்காக்கிய சோற்றை நாய் கதுவிற்றென அவர்கள் அதனைப் புடைத்துக் கொன்றதும்; அதற்குரிய களிமகன் அந்தணரை அலைத்ததும் சீவகன் கண்டு, அந்தணரைக் காத்தும், களிமகனை விலக்கி யும், நாய்க்கு அருமறை வழங்கியும் தன் உயர் குணத்தை வெளிப்படுக்கின்றான். கேமசரியை மணந்து அவளிடம் சொல்லாது பிரிந்து சென்ற சீவகன் வழிப்போக்கன் ஒருவற்கு அறம் கூறித், தன் ஆடையணிகலன்களைக் கொடுத்து நீங்கு கின்றான். இவற்றாலெல்லாம் இவனது அறவுணர்ச்சி விளங்கு மேலும், சித்திரகூடத்துத் தவப்பள்ளியில் மகளிரொடு வாழ்ந்த துறவிகட்கும், வழிப்போக்கனுக்கும், பவதத்தனுக் கும் மகளிரின் மனப்புன்மை கூறித் தெருட்டிய இச் சீவகன்,

தான் மட்டில் பலமகளிரைக் கண்டு காமத்தால் நயந்து மணந்து கூடிச் சிலர்பால் சொல்லியும், சிலர்பால் சொல்லாம லும் பிரிந்தேகுகின்றான். இவன் மனப் புன்மையை ஆசிரியர் எடுத்தோதாதொழிவது என்னோ? நூலுடைத் தலைமகன்பால் குற்றம் காண்டல் கூடாது என்பது பற்றிப் போலும்!

இனி, சீவகனது போர்வன்மை மிக இனிதாகக் கூறப்படுகிறது. குணமாலையை யழித்தற்குச் சென்ற அசனிவேகம் என்கிற யானையைச் சீவகன் அடர்த்த திறம்,

மல்லல் நீர்மணி வண்ணனைப் பண்டொர்நாள்
கொல்ல வோடிய குஞ்சரம் போன்றதுஅச் |
செல்வன் போன்றனன் சீவகன் தெய்வம்போல்
மல்கு மும்மத வேழம் பெயர்ந்ததே.

எனக் கண்ணன் மேல் வந்த குவலையாபீடமென்னும் களிற்றை அவன் வென்ற செய்தியால் உவமித்துக் காட்டப் படுகிறது. சீவகனது வில்வன்மையை வியந்த விசயன் என்பான், " மாமர மேழு மெய்த வாங்குவில் தடக்கை வல்வில், இராமனை வல்வனென்பது இசையலாற் கண்டதில்லை; உராமனாம் இவன்கண் இன்றி உவக்குமா செய்வல்" எனத் தனக்குள் கூறிக் கொள்வதனாலும், நிரை கவர்ந்த வேட்டுவரைச் சீவகன் " ஆளற்றமின்றிப் " புறங்காண்பதனாலும், கட்டியங்காரனை, "மையார் விசும்பின் மதி வீழ்வதுபோல" வீழ்த்தலாலும் அவனது வில்வன்மை விளக்கப்படுகிறது. இவை தவிர, ஒரு காவியத் தலைவற்குரிய தலைமைப் பண்புகள் பலவும் பல்லாற்றானும் உரைக்கப்படுகின்றன.

சீவகன் விசயமாதேவி துறவு பூண்டு தண்டாரணியத்துத் தவப்பள்ளியி லிருத்தலைத் தோழரா லுணர்ந்து, ஆங்குச் சென்று கண்டு வணங்கி நின்றபோது, விசயைக்குத் தேற்றரவு கூறுவான்;

" கெடலருங் குரைய கொற்றம்
கெடப்பிறந் ததுவு மன்றி
நடலையுள் அடிகள் வைக
நட்புடை யவர்கள் நைய

இடைமகன் கொன்ற இன்னா
மரத்தினேன் தந்த துன்பக்
கடலகத் தழுந்த வேண்டா
களைகஇக் கவலை யென்றான் ''

இதனைக் கேட்ட விசயை, ஒருவாறு தேறி,

'' யானலன் ஔவை யாவாள்
சுநந்தையே ஐயற் கென்றும்
கோனலன் தந்தை கந்துக்
கடன்எனக் குணத்தின் மிக்க
பானிலத் துறையுந் தீந்தேன்
அனையவாய் அமிர்த மூற
மானலங் கொண்ட நோக்கி
மகன்மனம் மகிழச் சொன்னாள் ''

என்று கூறியதைத் தெளிவுறக்கேட்டு உளம்கொண்ட சீவகன், பின்பு, விசயையுடன் சுநந்தையும் துறவு பூண்டு அவனை நீங்கியபோது, அவன் சுநந்தையை நோக்கி,

'' அடிகளோ துறக்க ஒன்றும்
உற்றவர் யாது மல்லர் ;
சுடுதுயர் என்கட் செய்தாய்,
சுநந்தைநீ ஔவை யல்லை
கொடியைநீ கொடிய செய்தாய்,
கொடியைஒ கொடியை என்ன
இடருற்றோர் சிங்கம் தாய்முன்
இருந்தழு கின்றது ''

போலக் கூறினான்.

சீவகன் தன் மனைவியர் ஊடல் தீர்த்தற்கும், பிறவற்றிற்குமாக நிகழ்த்தும் சொற்கள் மிக்க இன்பம் பயப்பனவாகும். அவற்றுள், சீவகன் கேமசரியைப் பிரியக்கருதிய அன்று, அவன் கூறும் சொற்களும், விமலையைக் கூடியிருந்த ஞான்று வேட்கை மேலிட்டுரைப்பதும், சுரமஞ்சரியுடன் சொல்லாட்டயர்தலும், பிறவும் படிக்குந்தோறும் மிக்க இன்பந் தருவன வாகும்.

இன்டத் துறையின்கண்ணே யன்றி, வேறு துறையின் கண்ணும், அஃதாவது அறவுரை வழங்கல், துயருற்றாரைத் தெளிவித்தல், உயர்ந்தோரை வழிபடல், தோழரை யளித்தல் முதலிய துறையின்கண்ணும் சீவகனது தெளிந்த அறிவு நலம் இன்பம் பயக்கின்றது.

## நந்தட்டன்:

சீவகனுடன் கந்துக்கடன் மனையில், அக் கந்துக்கடற்கு மகனாய்ச் சீவகன் வந்தடைந்த பின் பிறந்த நந்தட்டனென் பான் ஒள்ளிய தம்பியர்க்குரிய உயர்குணனும், கடமையுணர் வும் மிகக்கொண்டு விளங்குகின்றான்.

குணமாலையை மணந்த பின் சீவகன் காணமற்போனது கண்டு, அவன் தம்பியரும் தோழரும் கலக்கமுற் றிருக்கை யில், நந்தட்டன் காந்தருவதத்தை மனையை யடைந்து, சீவகனிருப்பை அறியக் கருதியபோது, அவள், கவலையின்றி யிருப்பது கண்டு வியப்பும் மருட்கையும் கொண்டு, மூன்று விற்கிடை நீளத்தே நின்று, உயரிய உணர்வும் ஒழுக்கமும் தோன்ற,

"பொறிகுலாய்க் கிடந்த மார்பின்
புண்ணியன் பொன்றி னானேல்
வெறிகுலாய்க் கிடந்த மாலை
வெள்வளை முத்தம் நீக்கி
நெறியினால் நோற்றல் ஒன்றோ
நீள்எரி புகுதல் ஒன்றோ
அறிவிலென் கொழுநன் மாய்ந்தால்
அணிசுமந் திருப்பது?"

என்று வினவுகின்றான். இவன் தம்பிமாரான நபுல விபுலர் களும் போரற நெறியினும் பிறவற்றினும் நிகரின்றி விளங்கு கின்றனர்.

## சீவகன் தோழர்:

சீவகன் தோழன்மாருள் பதுமுகன், புத்திசேனன் என்ற இருவரும் சீவகனைக் காண்டற்குச் செய்யும் சூழ்ச்சிக

ளும், போர் செய்யுந் திறங்களும் படிக்கின்றவர் உள்ளத்தே பெருமிதத்தைப் பயக்கின்றன.

## கட்டியங்காரன் :

இனி, கட்டியங்காரன் சச்சந்தனுக்கு உயிர்த்துணைவனாய் இருந்தவனென்பது "எனக்குயிர் என்னப்பட்டான் என்னலால் பிறரையில்லான்" என்று அவனால் போற்றப்படுதலால் தெரிகிறது. இவனது "வெளிறிலாக் கேள்வி" சச்சந்தனைக் கொல்லற்குச் செய்யும் சூழ்ச்சியில் அத்துணைச் சீரிதாகத் தோன்றவில்லை.

"மன்ன வன்பகை யாயதோர் மாதெய்வம்
என்னை வந்திடங் கொண்டுஅஃது இராப்பகல்
துன்னி நின்று செகுத்திடு நீயெனும்;
என்னை யான்செய்வ ? கூறுமின்"

என்று கட்டியங்காரன் சச்சந்தனைக் கோறற்கு ஏதுக் காட்டுகின்றான். இவ்வாறே, சீவகன் குணமாலையை மணந்திருக்குநான்று, அவனைப் பற்றிக் கொணருமாறு மதனனைப் பணித்த காலையில், யானைப்பாகன், அசனிவேகம் களித்து வருந்தி நிற்றற்கு ஏது, "இற்றென உரைத்தல் தேற்றேன், இறைவநின் அருளி னுங்கொல், செற்றமிக் குடைமை யால்கொல், சீவக னின்ன நாளால், மற்றிதற்கு உடற்சி செய்ய மதமிது செறித்தது" என்றதுவே கொண்டு,

"மாண்டதில் செய்கை சூழ்ந்த
வாணிகன் மகனை வல்லே
ஆண்திறங் களைவன் ஓடிப்
பற்றுபு தம்மின்"

என்று கூறுகின்றான். சீவகன் தத்தையை மணந்த காலத்தும், "வாளினான் மலைந்து கொள்ளின் வாழ்கநும் கலையுமாதோ" என்று ஏனை யரசரைக் கட்டியங்காரன் தூண்டிவிடுகின்றான். இவ்வண்ணம் சீவகன் பிறப்பு வரலாறு அறியா முன்பே இவன் சீவகன்பால் பகைமை கோடற்குக் காரணம் வேண்டுமன்றோ? அதற்கு நூலாசிரியர் அநங்கமாலையை அவன் வலிதிற் பற்றிக் கற்பழித்த காலத்தே, அவள் "சீவக

சாமியோ" என வாய்வெருவினுள்: அதுகொண்டே அவற்குச் சீவகன்பால் பகைமை பிறப்பதாயிற் றென்றும், சீவகன் வேடரைப் புறங்கண்டு அவர் கவர்ந்த ஆனிரையை மீட்டது கேட்டு அழுக்காறு மிக்கு, அரசினை "இழந்தனன்" போலக் கருதி "என்னை வௌவும் வாயில்தான் என்னும் சூழ்ச்சி"யே கொண்டிருந்தானென்றும் கூறுகின்றார்.

கட்டியங்காரன் சச்சந்தனைக் கொன்றபின் விசயை இருப்பை நாடா தொழிகின்றான்: அவளைப் பற்றி ஒரு சிறிதும் எண்ணுகின்றானில்லை. அவன் உடன்பிறந்தவனும் விதையநாட்டரசனுமான கோவிந்தராசனுக்கு ஒரு திருமுகம் விடுக்கின்றனன். அதன்கண், அசனிவேகம் மதம்பட்டுப் பாகர் தாற்றுவரைக் கொன்றோடிய காலை, சச்சந்தன் அதனை யடக்கிக் கந்திற் பிணிக்கும்போது அவ் யானையாற் குத்துண்டு இறந்தான் என்பவன், "இனி, நீயே இந்நாட்டிற்கு இறைவனாதல் வேண்டும்; யான் உயிரும் ஈவேன்; நீ வரின் பழியும் நீங்கும்; வருக" என்று எழுதுவதனால் இவனது மனப்புன்மையும் தெளிவின்மையும் இனிது விளங்கும்.

இவன் சீவகனோடு பொருகின்றபோது, அவனது சின மிகுதியும் தன் மக்கள் மாண்டதுங் கண்டு கட்டியங்காரன், அறிவு தெளிவுடையவன்போல்

"நல்வினை யுடைய நீரார் நஞ்சுணின் அமுத மாகும்
இல்லையேல் அமுதும் நஞ்சாம்; இன்னதால் வினையினாக்கம்"

என்றும், "அகப்படு பொறியினுளா ஆக்குவர் யாவர்?" "மிகப்படு பொறியினுரை வெறியராச் செய்யலாமோ?" என்றும், "இருவினை சென்று தேய்ந்தால் பரிவுற்றுக் கெடாமல் செல்வம் பற்றி யார் வைப்பார்?" என்றும் கூறுவது வியப்புத் தருகின்றது. இதனை நன்கறிந்த சீவகன், எயிறு தோன்ற எள்ளி நகைத்து, "நீ அஞ்சினாய்" என்கின்றான். இச்சொல்லாட்டால், கட்டியங்காரன், "மொய்யமர் பலவும் வென்றான்", எனச் சச்சந்தன் பாராட்டிய பாராட்டையும் பொய்ப்படுத்திவிடுகின்றான்.

**மதனன் :**

இனி, மதனன் என்னும் வீரன் கட்டியங்காரற்கு மைத்துனன். சச்சந்தனைக் கொல்லக் கருதுவது முறையன்றெனத் தருமதத்தன் கூறக்கேட்டதும், இவன் சினம் மிகுந்து, "தோளினால் வலியராகித் தொக்கவர் தலைகள் பாற, வாளினால் பேச லல்லால் வாயினால் பேசல் தேற்றேன்" என இடையின்றிப் பிதற்றுகின்றான். சீவகனைப் பற்றிக் கொணரப் போந்த மதனன், அவனைக் குணமாலை மனையிலிருந்து கொணர்கையில், தேவனால் காணாமற் போனதால் கலங்கி, வெறிது சொல்லின் அரசன் வெகுள்வன் என வேறொருவனைக் கொன்று பொய் சொல்வது அவனது வழுக்குடைய வீரத்திற்குச் சான்று பகருகின்றது.

**ஏனையோர் :**

இனி, சீவகனை வளர்த்த தந்தையான கந்துக்கடன், தாய் மாமனான கோவிந்தராசன், சீவகற்கு மகட்கொடை நேர்ந்தவர் முதலியோர் நலங்களும் இவ்வண்ணமே பலதிறத்து வாய்ப் பகுத்து நோக்குதற்கண் இன்பந்தருகின்றன.

**விசயை :**

இனி, பெண்மகளிருள் விசயை முதலாயினாருடைய குண நலங்களைச் சிறிதே காண்பாம். விசயை இளமையிலேயே நல்ல அறிவு நூல்களை ஆராய்ந்துள்ளாள். தான் கண்ட கனவைத் தன் கணவற்கு உரைக்கப் போங்கால், அவள் வாமனை வணங்கிச் செல்வது அவளது சமய வொழுக்கத்தைப் புலப்படுத்துகின்றது. கட்டியங்காரன் கொலை கருதி வந்தது கேட்டு, அவள் நடுங்கக் கண்ட சச்சந்தன், "வாமனால் வடித்த நுண்ணூல் உண்டு வைத்தனைய நீ" என்றும், "ஒண்டொடி நீ வருந்துவது தகுவதன்று" என்றும் கூறக்கேட்டுத் தெளிந்தமைகின்றாள்.

சீவகன் சுடுகாட்டில் பிறந்தபோது அவள் புலம்பும் புலம்பல் கல்லும் உருக்கும் கனிவுடையவை; அவள் தவப் பள்ளியில் இருந்தபோது சீவகன் மறைந்ததும், ஊர் தேடி

வந்ததும் கேட்டுப் புலம்பும் புலம்பலை ஒருங்கு வைத்து நோக்கின், ஆங்கே அவளது உள்ளம் இடச்சார்பால் துறவுப் பான்மை கதுவி நின்றமையின் அத்துணைக் கனிவு இல்லை. சீவகனைக் கண்டபோது, "நினக்குத் தாய் சுநந்தையே; தந்தை கந்துக்கடனே" என்பவை, இராமாயணத்தே, சுமித்திரை இலக்குவனை இராமனுடன் காட்டிற்கு விடுத்தபோது, "மாகாதல் இராகவன் அம்மன்னவன், போகா உயிர்த்தாயர் பூங்கழற் சீதை" என்ற சொற்களை நினைவுறுத்துகின்றன. பின்பு அவள் சீவகன் பிறந்த சுடுகாட்டை அறக்கோட்டமாக்கியதும், சீவகனுக்கும் அவன் மனைவியர்க்கும் கூறுவனவும் மிக்க உருக்கமுடையனவாகும். தத்தை முதலாயினரை நோக்கி, "சிறுவர்ப் பயந்து|இறைவற்றெளிவீர்" என்பதும், பிறவும் இறும்பூது பயக்கின்றன.

## சீவகன் மனைவியர் :

சீவகன் மனைவியருள் குணமாலையின் திறமே சிறிது விரியக் கூறப் பெறுகின்றது. முதல் மனைவியாகிய காந்தருவ தத்தை விஞ்சை வன்மையும், எதுவரினும் ஏற்றுத் தாங்கிச் செய்வன செய்தற்கண் ஊக்கம் குன்றாமையும் உருவாகக் கொண்டு விளங்குகின்றாள். கனகமாலைபால் மகிழ்ந்திருந்த சீவகற்கு அவள் விடுக்கும் திருமுகம் உண்மைக் காதன்மை ஒருபுறம் புலப்படுக்கினும், அவளது மான உணர்ச்சியை மறைத்திலது.

> "பட்டபழி வெள்ளிமலை மேல்பரந்த லஞ்சித்
> தொட்டுவிடுத் தேன்அவனைத் தூதுபிற சொல்லிப்
> பட்டபழி காத்துப்புக ழேபரப்பி னல்லால்
> விட்டலர்ந்த கோதைபவ ரால்விளைவ துண்டோ!"

என்ற இச் சொற்கள் அவளது உள்ளப்பான்மையை ஒளியாது தெரிவிக்கின்றன. குணமாலையின் பிரிவாற்றாமையை இத்தத்தையே எடுத்துரைப்பதை நோக்கின் குணமாலையின் குணச் சிறப்பும், தத்தை வனை மகளிர்பால் கொண்டிருந்த அன்பும் நாம் நன்குணர விளக்குகின்றன. இவர்கள் ஒவ்வொருவருடைய குணநலங்களைத் தனித்தனியே :எடுத்து

நோக்க விரும்பின், இந் நூற்கண் நுழைந்து கண்டு இன்புறுதல் தக்கதேயன்றி வேறில்லை.

இறுதியாக, இந்நூற்கண், திருத்தக்க தேவர், தம் சமய நூற் பொருளை வற்புறுத்துவதே பெரு நோக்கமாகக் கொண்டுளார் எனினும், பெண்கட்கு ஆடவர் ஏற்புழித் தக்க துணைபுரிய வேண்டுமென்பதைப் பலவிடங்களில் வற்புறுத்துகின்றார். சீவகன்பால் கட்டியங்காரன் செற்றங் கொண்டதை யறிந்து அவனுள்ளத்தை மாற்ற நினைந்த கந்துக்கடன், "நாணமைக்கொண் டீட்டப் பட்டார் நடுக்குறு நவையை நீக்கல், ஆண் மக்கள் கடன்" என்று கூறுகின்றான். குணமாலை அசனி வேகத்தின் முற்பட்டதைக் கண்ட சீவகன், "பெண்ணாயி ரவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்விற் சாதல்" என்று எண்ணுகின்றான்.

## தேவரும் பெண்மையும்:

இவ்வண்ணம் தேவர் கருதினாரெனினும், பெண் மனம் புன்மையுடையதென்றும், பெண்ணால் ஆண் மகன் காக்கப் படுதல் உயர்வன்றென்றும் குறிப்பிக்கின்றார். இவ்விரு கருத்தையும், பெண்ணின்பமே பெரிதும் விரும்பி நின்ற சீவகன் வாயிலே வைத்து வழங்குகின்றார். பவதத்தனைத் தெருட்டியபோது சீவகன், "பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா, உண்ணிறை வுடைய வல்ல ஓராயிரம் மனத்த வாகும்" என்றும், பிறிதோரிடத்தில், "பெண் இடர் விடுப்ப வாழ்விற் சாதலே பெரிது நன்று" என்றும் கூறுகின்றான்.

இவ்வண்ணமே ஏனையோர் குணஞ்செய்கைகளையும் எடுத்து வகுத்தோதின், இம் முன்னுரை மிக விரியும் என அஞ்சி அறிஞர் அவற்றை இந் நூற்கண் நுழைந்து கண்டின்புறுமாறு விடுத்து, இந் நூலை யாத்தற்குத் தேவர் துணைக்கொண்ட நூல்களுட் சிலவற்றைக் கூறி இரண்டோ ரெடுத்துக்காட்டுக்களை வழங்குவேன். திருக்குறளும், எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் இந்நூலின் ஆக்கத்திற்குச் சொல்லும் சொற்றொடரும் கருத்தும் உதவியிருக்

கின்றன; பல கருத்துக்களை விளக்குதற்குச் சங்க இலக்கியத்துக் கருத்துக்கள் சில உவமமாகவும் துணை செய்துள்ளன.

## நூலின் ஆக்கத்திற்குத் துணை செய்த தமிழ் நூல்கள் :

'பானை சோற்றுக்கு ஒரு சோறு' பதம் காண்பது போல் இனத்துக்கு ஒரொன்று காட்டுதும் :

'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகுஅதனில் கூரியது இல்'

என்பது திருக்குறள். இதனைத் தேவர் 'செய்க பொருள் யாரும் செறுவாரைச் செறுகிற்கும், எஃது பிறிதில்லை இருந்தே உயிரும் உண்ணும், ஐயமில்லை இன்பம் அறனோடு அவையும் ஆக்கும், பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே' என அமைத்துக் கொள்ளுகின்றார்.

'தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து'

என்ற திருக்குறள், 'தொழுததங் கையி னுள்ளுந் துறுமுடி யகத்துஞ் சோர, அழுதகண்ணீரி னுள்ளு மணிகல த்தகத்து மாய்ந்து, பழுதுகண்ணரிந்து கொல்லும் படையுட னொடுங் கும் பற்று, தொழிகயார் கண்ணுந் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற் றாரே' என இழைத்துக்கொள்ளப்படுகின்றது. இவ்வண்ணம் பல உள.

'காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்."

என வரும் புறப்பாட்டு, 'வாய்ப்படுங் கேடு மின்றாம் வரிசையி னரிந்து நாளுங், காய்த்தநெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனி மேயின், வாய்ப்பட லின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளி, வீத்தநீர் ஞால மெல்லா நிதிநின்று சுரக்கு மன்றே' என்றும்,

கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்,
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் ருகி யாறினிது படுமே,
உய்த்த றேற்ரு னுயின் வைகலும்,
பகைக்கூழ் அள்ளற் பட்டு
மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே'.

என்னும் புறப்பாட்டு 'ஆர்வலஞ் சூழ்ந்த வாழியலைமணித் தேறை வல்லா, னோர்நிலத் தூரு மாயி னீடுபல் காலஞ் செல்லு, மூர்நில மறிதல் தேர்ரு தூருமேன் முறிந்து வீழுந் தார்நில மார்ப வேந்தர் தன்மையு மன்ன தாமே' என்றும் உதவி யிருக்கின்றன.

## பழமொழிகள், வழக்காறுகள் :

இனி, 'பழம்பகை நட்பாதல் இல்லை' 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்பன முதலிய பழமொழிகள், 'பாட்டினைக் கேட்ட லோடும் பழம்பகை நட்பு மாமே' எனவும், 'தோன்றினன் குன்றத் துச்சிச் சுடர்ப்பழி விளக்கிட் டன்றே' எனவும் இந்நூலின்கண் கையாளப்படுகின்றன. கார்த்திகை விளக்கீடு. வேனில்விழா முதலிய வழக்காறுகள் பல ஆங்காங்கு விளக்கப்படுகின்றன. மகளிர் பந்தாடுதல், நீராடுதல், முல்லைக்கொடி முதலியன வைத்து வளர்த்து அவை தலைப்பூ மலர்ந்தவிடத்துச் சிறப்புச் செய்தல், சிறுவர்க்கு எழுத்தறிவித்தல் முதலிய செய்கைகள் அவ்வவ் விடங்களில் நன்கு சிறப்பிக்கப்பெறுகின்றன.

## கதைக்குரியோர் நிலைக்கேற்பச் சொல் வழக்கம் செய்தல் :

மக்களின் வாழ்க்கை நிலைக்கேற்ப அவர் வழங்கும் சொற்களும் அமைந்திருக்கும்; அவர் சொற்களில் வரும் உவமமும் அவர் பயிலும் பொருள்களே யாகும். இந்நெறி முற்றும் பாவலர் பாக்களில் சிறந்து நிற்கும். திருத்தக்க தேவர் நூலும் இவ் வுண்மைக்குச் சான்று காட்டுகின்றது. சீவகன் வேட்டுவர் தலைவனைக் கண்டு நீ வாழும் மலை யாது என்று வினவ, அவற்கு அத் தலைவன், "இதா தோன்று

கின்ற சோலை சூழ்மலை" என்கின்றான். நந்தகோன் தன் மகள் கோவிந்தையின் நலம் கூறலுற்று,

"வெண்ணெய்போன்று ஊறினியள், மேம்பால்போல்
தீஞ்சொல்லள்;
உண்ண உருக்கிய ஆன்நெய்போல் மேனியள்;
வண்ண வனமுலை மாதர் மடநோக்கி
கண்ணும் கருவிளம் போதிரண்டே கண்டாய்"

என்று சொல்கின்றான். இவன் சொல்லில், வெண்ணெயும் பாலும், நெய்யும், கருவிளம்பூவுமே உவமங்களாக வருதல் காண்க. இவன் சொல்லை ஏற்றுச் சீவகன் விடையிறுத்தற்குள்ளே விரைந்து இவனை,

"குலம் நினையல் நம்பி கொழுங்கயற்கண் வள்ளி
நலன்நுகர்ந்தா னன்றே நறுந்தார் முருகன்;
நிலமகட்குக் கேள்வனும் நீள்நிரைநப் பின்னை
இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினா னன்றே"

என்று பேசுகின்றான். இவ்வாறெல்லாம் பேசுவதும் பிறவும் அவர்தம் வாழ்க்கைப் பண்பெனக் காட்டும் புலமை நலத்துக்கு எடுத்துக் காட்டாம். இவ்வாறு வருவன பல இந்நூற்கண் மிளிர்கின்றன.

இன்னோரன்ன நலம்பலவும் விளக்கிக் கற்பார்க்குக் கழிபேரின்பம் நல்கும் செந்தமிழ் இன்பக் கருவூலமாக, இச் சிந்தாமணி நந்தா வனங்கொண்டு திகழ்கின்றது. சோழன் அநபாயன் என்பான் இந் நூலின் தமிழ் நலம் பெருக உண்ணும் விருப்பினால் அல்லும் பகலும் இதனையே படித்து வந்தான் என்றும் அவன் கருத்தை மாற்றவே சேக்கிழார் பெரிய புராணத்தைச் செந்தமிழ் நலம் சிறக்கச் செய்தனர் என்றும் நவலுங் கதை ஒன்று தமிழ் நாட்டில் வழங்குவதுண்டு. அஃது உண்மையாயின், இதன் பெருமை அளவிட்டுரைப்பதென்பது அரிதாம். கம்பனது இராமாயணமும் தணிகைப் புராணம் சேதுபுராணம் முதலிய தமிழ்நலங் கெழுமிய தல புராணங்களும் தோன்றி நம்மனோர்க்கு இன்பம் சார்ந்து வருதற்கு வழிகாட்டியாகிய ஏற்றம் இச்

சிந்தாமணிக்கு உண்டு என்பதை ஈண்டு நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

## முடிப்புரை:

இனி இச் சிந்தாமணிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் அழகியதொரு நல்லுரை எழுதியுள்ளார். அவ்வுரையை வியந்து மகிழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் "சிந்தாமணியும், திருக்கோவையும் எழுதிக்கொளினும் நந்தா உரையை எழுதல் எவ்வாறு நவின்றருளே" என்று பாராட்டியுள்ளார்.

இத்தகைய சிறப்புமிக்க பெருங்காவியமாகிய இச் சீவக சிந்தாமணியின் பெருநலனை மக்களனைவரும் அறிந்து துய்த்து இன்புறுதற்கு வாயிலாக வரும் இதனைத் தமிழுலகு மேற்றுப் பயன் கொள்ளுமாக!

"தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே."

கின்ற சோலை சூழ்மலை" என்கின்றான். நந்தகோன் தன் மகள் கோவிந்தையின் நலம் கூறலுற்று,

" வெண்ணெய்போன்று ஊறினியள், மேம்பால்போல்
தீஞ்சொல்லள்;
உண்ண உருக்கிய ஆன்நெய்போல் மேனியள்;
வண்ண வனமுலை மாதர் மடநோக்கி
கண்ணும் கருவிளம் போதிரண்டே கண்டாய் "

என்று சொல்கின்றான். இவன் சொல்லில், வெண்ணெயும் பாலும், நெய்யும், கருவிளம்பூவுமே உவமங்களாக வருதல் காண்க. இவன் சொல்லை ஏற்றுச் சீவகன் விடையிறுத்தற் குள்ளே விரைந்து இவனை,

" குலம் நினையல் நம்பி கொழுங்கயற்கண் வள்ளி
நலனுகர்ந்தா னன்றே நறுந்தார் முருகன் ;
நிலமகட்குக் கேள்வனும் நீள்நிரைநப் பின்னை
இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினா னன்றே "

என்று பேசுகின்றான். இவ்வாறெல்லாம் பேசுவதும் பிறவும் அவர்தம் வாழ்க்கைப் பண்பெனக் காட்டும் புலமை நலத் துக்கு எடுத்துக் காட்டாம். இவ்வாறு வருவன பல இந்நூற் கண் மிளிர்கின்றன.

இன்னோரன்ன நலம்பலவும் விளக்கிக் கற்பார்க்குக் கழிபேரின்பம் நல்கும் செந்தமிழ் இன்பக் கருவூலமாக, இச் சிந்தாமணி நந்தா வளங்கொண்டு திகழ்கின்றது. சோழன் அநபாயன் என்பான் இந் நூலின் தமிழ் நலம் பெருக உண் ணும் விருப்பினால் அல்லும் பகலும் இதனையே படித்து வந் தான் என்றும் அவன் கருத்தை மாற்றவே சேக்கிழார் பெரிய புராணத்தைச் செந்தமிழ் நலம் சிறக்கச் செய்தனர் என்றும் நவலுங் கதை ஒன்று தமிழ் நாட்டில் வழங்குவ துண்டு. அஃது உண்மையாயின், இதன் பெருமை அளவிட் டுரைப்பதென்பது அரிதாம். கம்பனது இராமாயணமும் தணிகைப் புராணம் சேதுபுராணம் முதலிய தமிழ்நலங் கெழுமிய தல புராணங்களும் தோன்றி நம்மனோர்க்கு இன்பம் சுரந்து வருதற்கு வழிகாட்டியாகிய ஏற்றம் இச்

சிந்தாமணிக்கு உண்டு என்பதை ஈண்டு நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

## முடிப்புரை:

இனி இச் சிந்தாமணிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் அழகியதொரு நல்லுரை எழுதியுள்ளார். அவ்வுரையை வியந்து மகிழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் "சிந்தாமணியும், திருக்கோவையும் எழுதிக்கொளினும் நந்தா உரையை எழுதல் எவ்வாறு நவின்றருளே" என்று பாராட்டியுள்ளார்.

இத்தகைய சிறப்புமிக்க பெருங்காவியமாகிய இச் சீவக சிந்தாமணியின் பெருநலனை மக்களனைவரும் அறிந்து துய்த்து இன்புறுதற்கு வாயிலாக வரும் இதனைத் தமிழுலக மேற்றுப் பயன் கொள்ளுமாக!

"தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே."

## தன்ம சரணம், சாது சரணம்

பன்மாண் குணங்கட்கு இடனாய்ப்
பகைநண்பொடு இல்லான்
தொல்மாண் பமைந்தபுணை நல்லறம்
துன்னி நின்ற
சொல்மாண் பமைந்த குழுவின்சரண்
சென்று தொக்க
நன்மாண்பு பெற்றேன், இது நாட்டுதல்
மாண்பு பெற்றேன். ௩

## அவையடக்கம்

கற்பால் உமிழ்ந்த மணியும் கழுவாது விட்டால்
நற்பால் அழியும்; நகைவெண் மதிபோல் நிறைந்த
சொற்பால் உமிழ்ந்த மறுவும் மதியாற் கழூஉவிப்
பொற்பா இழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார். ௪

---

புள்ளி. வெம்பும் சுடரின் சுடரும் - மேல் செல்லச் செல்ல வெதுப்பும் ஞாயிற்றினும் மிக விளங்கும். வெம்பும் சுடர் - இள ஞாயிறு.

செம்பொன்மலையில் பச்சை நிறப் பொன்னால் எழுத்திட்டதுபோல் வண்ண வேறுபாடு கொள்ளக் கூடாதென்பர் நச்சினார்க்கினியர்.

௩. துன்னி நின்ற - மேற்கொண்டிருந்த. சொல் - புகழ். குழு - ஆசிரிய உபாத்தியாய சாதுக்கள். தொக்க நன்மாண்பு - சேர்ந்ததனால் உளதாகும் நல்வினைப் பேறு. நாட்டுதல் - கூறுதல். நாட்டுதல் மாண்பு - நாட்டுதலாகிய நல்வினைப் பேறு.

இல்லாதான் கூறிய குணங்கட்கு இடனாய், அறம் துன்னி நின்ற, குழுவின் சரண் என்று இயையும், பன்மாண் குணமாவன, எண்பத்து நான்கு இலக்கம் குணவிரதம், நூறு கோடி மகா விரதம், ஆயிரத்தெண்ணூறு சீலாசாரம் என்பர்.

௪. கற்பால் - கல்லின் பகுதி. உமிழ்ந்த - தந்த. நற்பால் - அதன் நன்மைப் பகுதி ; என்றது ஒளி. அழியும் - கெடும். நிறைந்த - கலை நிறைந்த. பொற்பா - அழகாக. இழைத்துக் கொளற்பாலர் - அமைத்துக் கொள்ளுதற்குரியர்.

# க. நாமகள் இலம்பகம்

**நாமகள் இலம்பகம் :** நாமகள் - கலைமகள்; இலம்பகம் - நூலின் ஓர் உறுப்பு; சீவகன் நாமகளைக் கூடின இலம்பகம் என்பது பொருள்.

[இதன்கண், சீவகன் தந்தையான சச்சந்தன், விசயையை மணந்து இராசமாபுரத்தேயிருந்து ஏமாங்கத நாட்டை ஆண்டுவந்த தன் ஆட்சியைக் கட்டியங்காரன் என்னும் அமைச்சன்பால் வைத்துப் பின் அவன் சூழ்ச்சியால் இறந்துபட்டதும், அவனால் மயிற் பொறியில் ஏற்றிவிடுக்கப்பட்ட விசயை சுடுகாட்டில் நள்ளிரவில் சீவகனைப் பெற்று, தோழி வடிவிற் போந்த தெய்வம் துணையாகத் தண்டகாரணியத் தவப்பள்ளி யடைந்ததும், சீவகனை இராசமாபுரத்துக் கந்துக்கடன் என்பான் எடுத்துச் சென்று வளர்த்ததும், அச்சணந்தி யென்பவன்பால் சீவகன் கலைத்துறை பலவும் கற்றுத் தேர்ந்ததும் பிறவும் கூறப்படுகின்றன.]

## ஏமாங்கத நாட்டு வளம்

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி, வருக்கை போழ்ந்து,
தேமாங் கனிசிதறி, வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதம்என்று இசையால்திசை போய துண்டே. ௫

இந்த நாட்டில், வேண்டுங்காலத்துப் பொய்யாது வேண்டுமளவு தெரிந்து பொழியும் மழைக் கூட்டம், கடல் நீரை முகந்து சென்று மலை யுச்சியில் தங்கியது.

---

௫. தெங்கின்பழம் - தெங்கின் முற்றிய காய். வீழ - வீழ்ந்ததனால், கமுகு - பாக்கு மரம். பூமாண்ட தீந்தேன் தொடை - அழகிய மாட்சிமைப்பட்ட தேன்போல இனிய நீரையுடைய தாறு (குலை). கீறி - கிழித்து. வருக்கை - பலாவின் பழம். போழ்ந்து - பிளந்து. என்று - என்று பெயர் கூறப்பட்டு. இசையால் - புகழால். திசை போயது - எல்லாத் திசையிலும் பெயர் பரவியது.

### மழை பெய்தல்

தேன்நி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேல்நி ரைத்து விசும்புற வெள்ளிவெண்
கோல்நி ரைத்தன போல்கொழுந் தாரைகள்,
வான்நி ரைத்து மணந்து சொரிந்தவே. ௬

இவ்வாறு பெய்த மழையால், மலைகளில் அருவிகள் பெருகி இழிந்தோடின.

### அருவிகள் வீழ்தல்

குழவி வெண்மதிக் கோடுழக் கீண்டுதேன்
முழவின் நின்றதிர் மொய்வரைச் சென்னியின்
இழியும் வெள்ளரு வித்திரள் யாவையும்
குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே. ௭

மலையடியைச் சேர்ந்த அருவிநீர், பல கால்களாய்ச் சென்று கூடி, சிற்றாறுகளாயும் பேரியாறுகளாகியும் ஏமாங்கத நாட்டில் படர்ந்தது.

### யாறு நாட்டிற் பாய்தல்

வீழ்தல் பட்டினம் வெளவிய வேந்தெனக்
காடு கையரிக் கொண்டு கவர்ந்துபோய்.

---

௬. தேன் நிரைத்து - தேன் இறால் வரிசைப்படக் கிடந்து. வரைச் சென்னி - மலையுச்சி. வெள்ளி வெண்கோல் - வெள்ளியால் செய்த வெண்மையான கோல். நிரைத்தனபோல் - வரிசையாக நாட்டியது போல. தாரை - மழைத்தாரை, மணந்து - தம்மில் கூடி. வான் - மழை.

வெண்கோல்களை விசும்புற நிரைத்தனபோல், வான் தாரைகளை நிரைத்து மணந்து மொய்வரைச் சென்னியின்மேல் நிரைத்துச் சொரிந்தன என்க.

௭. குழவி வெண்மதிக் கோடு - பிறைத் திங்களின் கோடு. உழ - கிழிப்பதால். கீண்டு - கிழிப்புண்டு. முழவின் - முழவின் முழக்கம் போல. அதிர் - முழங்கும். மொய்வரை - அடுக்கடுக்காய் நிற்கும் மலைக்கூட்டம். குழுவின் மாடம் - கூட்டமாய் உள்ள மாட மாளிகைகள்.

மலையிலிருந்து இழியும் அருவிகள் யாவும், பிறைத் திங்களால் கிழிப்புண்டு இழியும் தேனருவியும், உயரிய மாடங்களில் தொங்கும் வெண் துகிற் கொடியும் செந்துகிற் கொடியும் போல இருந்தன.

மோடு கொள்புனல் மூரி நெடுங்கடல்
நாடு முற்றிய தோஎன நண்ணிற்றே. ௮

இவ்வண்ணம் நண்ணிய பெருநீர் ஏமாங்கத நாட்டிற் பாயும் சரயு நதியிற் கலந்தது.

### அந்த நீரைச் சரயு நதி கொண்டு செல்லுதல்

திரைபொரு கனைகடற் செல்வன் சென்னிமேல்
நுரையெனு மாலையை நுகரச் சூட்டுவான்,
சரையெனும் பெயருடைத் தடங்கொள் வெம்முலைக்
குரைபுனற் கன்னிகொண்டு இழிந்த தென்பவே. ௯

சரயு கொணர்ந்த வெள்ளம் நாட்டில் பாய்வதால், உழவர்கள், நெல்லும் கரும்பும் விளைவிக்கலாயினர்.

---

௮. வீடில் பட்டினம் - விடுதல் இல் பட்டினம்; குடிகள் விட்டு நீங்குவதில்லாத பட்டினம். வீடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர். வௌவிய - கொள்ளைகொண்ட. கையரிக்கொண்டு - கையால் அரித்துக் கொண்டு. மோடு கொள் புனல் - பெருமை (மிகுதி, பெருக்கு) கொண்ட அருவி நீர். மூரி - வலிய. முற்றியதோ என - வளைத்துக்கொண்டதோ என்று கண்டோர் சொல்லுமாறு.

பட்டினமொன்றைக் கொள்ளை கொண்ட வேந்தன் ஒருவனைப் போல, காட்டைக் கவர்ந்து, அதனுட் கிடந்த பொருள்களை வாரிக்கொண்டு சென்று, கடல் நாட்டை வளைத்துக்கொண்டதோ என்னுமாறு அருவி நீர் பெருகிச் சென்றது என்க.

௯. திரை - அலை. கனை கடல் - முழங்கும் கடல். செல்வன் - கணவன். சூட்டுவான் - வானீற்று வினையெச்சம். சரயு என்பது சரை என வந்தது. சரையெனும் பெயருடைத் தடங்கொள் வெம்முலைக் குரை புனற் கன்னி - சரை யென்னும் பெயரினையும், தடமாகிய விரும்பிய முலையினையுமுடைய ஒலிக்கின்ற புனலாகிய கன்னி. தடம் - மடு. தடம் முலைபோற் சுரத்தலின், முலையாயிற்று. கன்னி யென்னுஞ் சொல்லைப் புனல் என்பது இணைந்து அஃறிணையாக்குதலால், இழிந்தது என அஃறிணை வினை கொடுத்தார். என்ப - அசை.

சரயு என்னும் பெயருடைய புனற்கன்னி, கடற்செல்வனாகிய தன் கணவன் சென்னிமேல் நுரையென்னும் மாலையைச் சூட்டுவதற்காக, அருவிநீர் கொணர்ந்த பொருள்களையும் நுரையையும் சுமந்துகொண்டு சென்றது என்க.

### உழவர் உழவு செய்ய ஒருப்படுதல்

நெறிமருப் பெருமையின் ஒருத்தல் நீளினும்
செறிமருப் பேற்றினம் சிலம்பப் பண்ணுறீஇப்
பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே. ௰

### நாற்று விடுதல்

சேறமை செறுவினுள் செந்நெல் வான்முளை
வீறுடு விளைகனெத் தொழுது வித்துவார்
நாறிது பதமெனப் பறித்து நாட்செய்வார்;
கூறிய கடைசியர் குழாங்கொண் டேகுவார். ௧௧

### களை யெடுத்தல்

கண்ணெனக் குவளையும் கட்ட லோம்பினார்;
வண்ணவாள் முகமென மரையின் உள்புகார்;
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்;
தண்வயல் உழவர்தம் தன்மை யின்னதே. ௧௨

---

௰. நெறிமருப்பு - அறல்பட்ட கொம்பு. ஒருத்தல் - கடா. செறி மருப்பு - நெடிது செறிந்த கொம்பு. ஏற்றினம் - எருதுகளின் கூட்டம். சிலம்ப - முழங்க. பண்ணுறீஇ - ஏரில் பூட்டி. இரிய - நீங்க. வெறி - மணம்.

எருமை யினத்தையும் எருதினத்தையும் ஏரிற் பூட்டிக் கழனியிலே வரால் மீனினம் நீங்கியோட உழுவோர் தொகை வெள்ளமென்னும் எண்ணும் என்க.

௧௧. சேறமை செறு - சேறு பதம்பட்ட வயல். வீறுடு விளைக - சிறப்புற விளைக. தொழுது - நிலமகளைத் தொழுது. நாறு - நாற்று நடுதல். நாட் செய்வார் - நாள் பார்த்து நடுவார். கூறிய கடைசியர் - இத்துணை நிலத்திற்கு இத்துணைப் பேர் என்று கொண்டு, முன்னுளே சொல்லி வைத்த நடவுமகளிர்.

வயலில், 'நன்கு விளைக' என விதைப்பவர், நடுதற்குப் பதமிது எனத் தெரிந்து பறித்து, நடவுக்குரிய நாள் கருதி வைப்பர்; உழவர் மகளிர் கூட்டங் கொண்டு சென்று வயலில் நடுவார் என்க.

௧௨. ஓம்பினார் - நீக்கினார். உள்புகார் - அருகுஞ் செல்லார். வண்ணம் - அழகு. வாள் - ஒளி. பண் - இராகம்; இதனை வடநூலார் சம்பூரண ராகம் என்பர். எழுத்தியல் பட - எழுத்தின் வடிவு தோன்ற. கட்டல் - களை யெடுத்தல்.

### நெல் விளைதல்

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று, மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித், தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. ௧௩

காய்த்த நெல்லை உழவர்கள் அரிந்து மலைபோலப் போரிட்டனர்.

### நெற் பெருமை

ஈடுசால் போர்புஅழித்து எருமைப் போத்திறல்
மாடுறத் தெழித்து,வை களைந்து, காலுறீஇச்
சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும்பொனின் குன்றம் ஒத்தவே. ௧௪

விளைந்த நெல்லை இது செய்தாராக, விளைந்து முற்றிய கரும்பை ஆலையில் இட்டு ஆட்டிச் சாறு கொண்டனர்.

### கரும்படுதல்

கரும்புகண் உடைப்பவர் ஆலை தோறெலாம்
விரும்பிவந் தடைந்தவர் பருகி விஞ்சிய

---

களையெடுக்கச் சென்றவர், குவளை காதலியின் கண்போல் மலர்ந்தமையின் அதனையும், தாமரை அவர்தம் முகம்போல இருந்தமையின் அதனையும் களையாராய்ப், பண்ணை எழுத்தின் வடிவுதோன்ற இனிது பாடினர்; உழவர் செய்கை இது என்க.

௧௩. சொல் - நெல். சூல் - கரு. அருஞ் சூல் - சூலுண்டு என்று சொல்லுதற்கு அரிய. தேர்ந்த - மெய்ப்பொருளை யாராய்ந்த. காய்த்த - விளைந்தன.

நெல், சூற்பாம்புபோல் கருத் தாங்கி, செல்வம் பெற்ற கீழோர்போல் தலை நிமிர்ந்து நின்று, கற்ற நல்லோர்போல் விளைந்து வளைந்து கிடந்தன என்க.

௧௪. போர்பு - கட்டுப்போர். ஈடு - இடுதல். போத்து - கடா. மாடு - பக்கம். தெழித்து - உரப்பி. வை - வைக்கோல். கால் உறீஇ - காற்றில் தூற்றி. சேடு - பெருமை. கோடு - உச்சி. குப்பை - குவியல்கள்.

போரிட்ட நெற்சூட்டைத் தள்ளி, எருமையால் புணையடித்து, வைக்கோலைக் களைந்து, காற்றில் தூற்றிக் குவித்த நெற்குவியல் பொற்குன்றம் போன்று இருந்தன.

திருந்துசா றடுவுழிப் பிறந்த தீம்புகை
பரந்துவிண் புகுதலின் பருதி சேந்ததே. கரு

பண்படுத்திய செல்லையும், கரும்பட்ட கட்டியையும் பல்வேறு பண்டிகளில் ஏற்றி மிக்க ஆரவாரத்துடன் ஊர்களுக்குக் கொண்டு போயினர். பல்லாருகத் துய்த்தற்குரிய வளம் பலவும் மல்கியிருத்தலால், ஊர்கள் மிக்க சிறப்புற்றிருந்தன.

## ஊர்ச் சிறப்பு

விலக்கில் சாலை யாவர்க்கும் வெப்பின் முப்ப மூச்சுனைத்
தலைத்தணீர் மலரணிந்து சந்தனம்செய் பந்தரும்,
கொலைத்தலைய வேற்கணார் கூத்து மன்றி, ஐம்பொறி
நிலைத்தலைய துப்பெலாம் நிறைதுளும்பு மூர்களே. கசு

அடிசில் வைகல் ஆயிரம், அறப்புறமும் ஆயிரம்,
கொடிய ஞர்செய் கோலமும் வைகல் தோறும் ஆயிரம்,
மடிவில் கம்மி யர்களோடு மங்கலமும் ஆயிரம்,
ஒடிவி லவெ ருயிரம் ஓம்பு வாரின் ஓம்பவே. கஎ

---

கரு. கரும்பு கன் உடைப்பவர் - கரும்பைக் கணுவிலே வெட்டிவெட்டி ஆலையிலிட்டுச் சாறு காண்போர். விஞ்சிய - உண்டது போக மிக்கு நின்ற. அடுவுழி - காய்ச்சுமிடத்தில். தீம் புகை - இனிய புகை. பரந்து - விரிந்து, விண் புகுந்து பரத்தலின் என இயைக்க. சேந்தது - சிவந்தது,

கரும்பாலைதோறும் வந்தடைந்தவர் பருக, மிக்கு நின்ற சாற்றைப் பாகு செய்யுமிடத்தே எழும் புகை விண்ணிலே சென்று பரத்தலால், ஞாயிறு சிவந்தது என்க.

கசு. யாவர்க்கும் விலக்கு இல் சாலை - இன்ன சாதியார்க்கே உரியவை என வரையறுத்துப் பிறரை விலக்குவது இல்லாத உணவுச் சாலை. வெப்பு- வெப்பம். சுனைத்தலைத் தண்ணீர் - சுனையிற் கொணர்ந்த தண்ணீர். கொலைத்தலைய வேற்கண்ணார் - கொல்லும் வேல் போன்ற கண்களையுடைய நாடக மகளிர். கூத்து - கூத்தாடு மிடம். துப்பு - நுகர் பொருள். நிறைதுளும்பும் - நிறைந்து ததும்பும்.

யாவர்க்கும் விலக்குதல் இல்லாத அட்டிற் சாலை, தண்ணீர்ப் பந்தர், மகளிர் கூத்தாடு மிடம் என்ற இவை யொழிய, ஏனைய எவ்விடத்தும் ஐம் பொறிகளாலும் நுகரப்படும் பொருள் பலவும் ஊர்களிடத்தே நிரம்பி யிருந்தன என்க.

கஎ. வைகல் அடிசில் - எப்போதும் உணவுள்ள உணவுச்சாலை. அறப்புறம் - அறச்சாலைகளும், அறத்திற்கு விட்ட இறையிலி நிலங்களும்.

## இராசமாபுரத்தின் சிறப்பு

நற்ற வம்செய் வார்க்கிடம் தவம்செய் வார்க்கு மஃதிடம்;
நற்பொ ருள்செய் வார்க்கிடம், பொருள்செய் வார்க்கு மஃதிடம்;
வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்ட மாக வைகும் மற்ற நாடரோ. ௧௮

இவ்வினிய நாட்டின் தலைநகரான இராசமாபுரத்தின் சிறப்பு இனிக் கூறப்படுகிறது. இந்த நகரம் புறநகர், அகநகர் என இரு கூறாய் விளங்கும். புறநகர்க்கண் நால்வகைப் படை வீரரும், யானை, குதிரை முதலியனவும் உள்ளன. இது கடந்து செல்லின், அகழும் மதிலும் காணப்படுகின்றன. அகழின்கண் நீர் நிரம்பி முதலை முதலிய நீர் வாழ்வனவும் புள்ளினமும் செறிந்திருக்கும்.

## இராசமாபுரத்துக் கிடங்கின் சிறப்பு

கோட்சுறு இனத்தொடு முதலைக் குப்பைகள்
ஆட்பெறு திரிதர அஞ்சிப் பாய்வன,
மோட்டிருப் பனிக்கிடங்கு உழக்க மொய்த்தெழுந்து
ஈட்டருப் புள்ளினம் இரற்று மென்பவே. ௧௯

---

கொடியனார் - கொடிபோலும் மகளிர். கோலம் - கோலம் செய்துகொள்ளுமிடம். மடிவில் கம்மியர் - தொழிலில் மடிதல் இல்லாத கம்மியர். மங்கலம் - திருமணம். ஓம்புவாரின் ஓம்ப - பாதுகாப்பார் காத்தலைச் செய்ய. வேறு ஆயிரம், வெறுயிரம் என வந்தது. ஒடிவில்லை - தவிர்தல் இல்லை.

அடிசிற் சாலைகளும், அறச்சாலைகளும், மகளிர் கோலம் செய்துகொள்ளுமிடங்களும், கம்மியரும், திருமணமும், இவை போல்வன வேறும் ஆயிரமாயிரம் ஊர்க்கண் உண்டு என்க.

௧௮. நற்றவம் - வீடு பேறு குறித்த தவம். தவம் - மறுமை குறித்த இல்லறம். நற் பொருள் - நற்பொருளைப் பயக்கும் கல்வி. பொருள் - இம்மையில் பெரும்பயன் பயக்கும் செல்வம். வெற்ற இன்பம் - வெற்றியால் வரும் இன்பம். விண்ணு - விண்ணவருலகம். உவந்து வீழ்ந்தென - மகிழ்ந்து நிலவுலகின் மேலே வீழ்ந்து கிடந்த தென்னுமாறு. வட்டமாக - எல்லையாக. வைகும் - இருந்து விளங்கும். வீழ்ந்ததென - வீழ்ந்தென விகாரமாயிற்று.

விண் உவந்து வீழ்ந்ததென வைகும் நாடு, நற்றவம் முதலியவற்றைச் செய்வார்க்கு இடம் என்க.

௧௯. கோட் சுறு - கொல்லுதலையுடைய சுறுமீன். முதலைக் குப்பை - முதலைக் கூட்டம். ஆட்பெறு - ஆட்கள் எதிர்ப்படப் பெறுது. திரிதர -

நிரைகதிர் நித்திலம் கோத்து வைத்தபோல்
விரைகமழ் கமுகின்மேல் விரிந்த பாளையும்,
குரைமதுக் குவளைகள் கிடங்கிற் பூத்தவும்
உரையின்ஓர் ஓசனை உலாவி நாறுமே. உ0

இனி, அதன் அருகே நிற்கும் மதில் பலவகைப் பொறிகளைக் கொண்டு விண்தொட உயர்ந்துள்ளது. நூற்றுவரைக் கொல்லி, விற்பொறி, கற்பொறி, அரிநூல் முதலிய பல எந்திரங்கள் வைக்கப்பெற்றுள்ளன.

### மதிற் சிறப்பு

வயிரவரை கண்விழிப்ப போன்று மழையுகளும்,
வயிரமணித் தாழ்க்கதவு வாயில் முகமாக,
வயிரமணி ஞாயில்முலை, வான்பொற் கொடிக்கூந்தல்,
வயிரக் கிடங்காடை மதிற்கன்னி யதுகவினே. உக

### இவ் வகநகர்க்கண் மிகப் பலவாகிய செல்வ வீதிகளில் உள்ள செல்வர் மனைச் சிறப்பு

நறையும் நானமும் நாறும் நறும்புகை
விறகின் வெள்ளி யடுப்பின்அம் பொற்கலம்
நிறைய ஆக்கிய நெய்பயில் இன்னமுது
உறையு மாந்தர் விருந்தொடும் உண்பவே. உஉ

---

திரிவதால். மோட்டு இரு - பெரிய இருல்மீன். உழக்க - கலக்க. சட்டுரு - கூட்டம் குறையாத. இரற்றும் - ஒலிக்கும்.

உ0. நிரைகதிர் நித்திலம் - வரிசையுற ஒளிவிட்டு விளங்கும் முத்து. விரை - நறு மணம். விரை கமழ் பாளை என இயைக்க. குரை கிடங்கில் பூத்த மதுக்குவளை - ஒலிக்கின்ற அகழியில் பூத்த தேன் நிறைந்த குவளை. உரையின் - புகழுறல். நாறும் - மணம் கமழும்.

உக. வயிரவரை - வயிரம் பொருந்திய மலை. மழையுகளும் - மேகம் தவழும். வயிரமணித் தாழ் - வயிரமணியால் செய்த தாழ். வான் பொற்கொடி - வானளாவியசையும் அழகிய துகிற்கொடி. வயிரக் கிடங்கு - வன்மை பொருந்திய கிடங்கு. கவின் - அழகு.

மழையுகளும் வாயில் முகமாக, ஞாயில் முலையாக, பொற்கொடி கூந்தலாக, கிடங்கு ஆடையாக, மதிலாகிய கன்னியது கவின் இருந்தது என்க.

உஉ. நறை - நறைக்கொடி. நானம் - புழுகு. விறகின் - நறும் புகை கமழும் விறகுகளால். வெள்ளியடுப்பு - வெள்ளியாலான அடுப்பு.

## அருகன் கோயில் உண்மை

திங்கள் முக்குடை யான்திரு மாநகர்
எங்கும் இங்கும் இடந்தொறும் உண்மையால்,
அங்கண் மாநகர்க் காக்கம் அருதஹேர்
சங்க நீள்நிதி யால்தழைக் கின்றதே. உங

## இராசமாபுரத்தின் பொது வனப்பு

தேன்தலைத் துவலை மாலை, பைந்துகில், செம்பொன் பூத்து,
ஞான்றன வயிர மாலை, நகுகதிர் முத்த மாலை,
கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலை, யார்க்கும்
ஈன்றருள் சுரந்த செல்வத்து இராசமா புரம தாமே. உச

இந்நகரின் நடுவே அரசனது கோயிலுளது. அதனைச் சுற்றி அகழும் மதிலும் இருப்ப, மதிலிற் கட்டிய கொடிகள் வானத்தே விளங்குகின்றன.

## அரசன் கோயிலின் கொடி வனப்பு

இஞ்சி மாக நெஞ்சுபோழ்ந்து எல்லை காண ஏகலின்,
"மஞ்சு சூழ்ந்து கொண்டணிந்து மாக நீண்ட நாகமும்,

---

பொற்கலம் - பொன்னாற் செய்யப்பட்ட அட்டிற்கலம். நிறைய - மடைநூல் விதியிற் குறைபடாமல். விருந்தொடும் உண்ப - விருந்து பெறற்கு அருமை தோன்ற நிற்றலின், உம்மை, சிறப்பும்மை.

உங. திங்கள் முக்குடையான் - திங்களைப்போலும் குடை மூன்றுடைய அருகன். குடை மூன்றுமாவன, சந்திராதித்தம், நித்திய விநோதம், சகலபாசனம் என்பன. எங்கும் - தெருவெங்கும். இங்கும் - மனையிடத்தும். இடந்தொறும் - நகரின் தக்க இடந்தோறும். நிதியால் - நிதியோடு. நிதியோடு அருதஹேர் ஆக்கம் தழைக்கின்றது என்க. சங்கநிதி - சங்கம் என்னும் எண்ணளவான நிதி.

உச. தேன்தலைத் துவலைமாலை - தேனைத் தலையிலே துவலையாக வுடைய மாலை. ஞான்ற வயிரமாலை - தொங்குகின்ற வயிரமாலை. கான்று - தோற்றுவித்து. அமிர்து - போகம். அருள் - ஈன்று. செல்வம் சுரந்த இராசமாபுரம் என இயையும்.

இராசமாபுரம் என்னும் பெயரையுடைய இவ்வூர், மாலையும் துகிலும் பொன்னும் பூத்து, வயிரமாலையும் முத்த மாலையும் கான்று, அமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலையாகும் என்க.

அஞ்சும் நின்னை " என்றலின் ஆண்டு நின்று நீண்டதன்
குஞ்சி மாண்கொ டிக்கையால் கூவி விட்ட தொத்ததே. உரு

## அரசன் கோயில் இந்திரன் கோயில்போல் சிறத்தல்

கந்து மாம ணித்திரள் கடைந்து செம்பொன் நீள்சுவர்ச்
சந்து போழ்ந்தி யற்றிய தட்டு வேய்ந்து வெண்பொனால்,
இந்தி ரன்தி ருநகர் உரிமை யோடும் இவ்வழி
வந்தி ருந்த வண்ணமே அண்ணல் கோயில் வண்ணமே. உசு

## சச்சந்தன் என்ற அரசன் சிறப்பு

நச்சு நாகத்தின் ஆரழற் சீற்றத்தன்,
அச்ச முற்றடைந் தார்க்கமிர் தன்னவன் ;
கச்சு லாம்முலை யார்க்கணங் காகிய
சச்சந் தன்எனும் தாமரைச் செங்கணான். உஎ

தருமன் தண்ணளி யால்,தன திகையால்
வருணன், கூற்றுஉயிர் மாற்றலின், வாமனே
அருமை யால்,அழ கில்கணை ஐந்துடைத்
திருமக ன்,திரு மாநில மன்னனே. உஅ

---

உரு. இஞ்சி - மதில், மாகம் - விண், எல்லை - விண்ணுலகின் எல்லை. மஞ்சு - மேகம். மாகம் நீண்ட நாகம் - வானுலகத்தே உயர்ந்த நாகருலகம். ஆண்டு நின்று - மேக மண்டலத்திலிருந்தே. நீண்ட கொடிக் கையால் - நீண்ட கொடியாகிய கையால், குஞ்சி மாண் கொடிக் கை - குழியிடத்தே நின்று மாட்சிமைப் பட்ட கொடி. குஞ்சி - மதிலிடத்தே கொடிநாட்டும் குழி, கூவிவிட்டது ஒத்தது - கூவிவிட்ட தன்மையை யொத்தது.

உசு. கந்து - தூண், சந்து - சந்தனம். தட்டு - நெடுங்கை, தூண் மணித்திரளால் கடையப்படுதலாலும், சுவர் பொன்னாலாகி யிருத்தலாலும் சந்தனத்தைப் பிளந்து நெடுங்கை செய்து, பொன்வேய்ந் திருத்தலாலும், கோயில் வண்ணம், இந்திரன் திருநகர் வந்திருந்தவண்ணம் என்க. உரிமை - இந்திரனுடைய உரிமை மகளிர்,

உஎ. நச்சு நாகம்-நஞ்சையுடைய பாம்பு. ஆர் அழல்-மிக்க வெம்மை, அமிர்து அன்னவன் - அமிர்து போல நலம் செய்பவன், அணங்காகிய - காம வருத்தத்தைச் செய்யும். தாமரைச் செங்கணான் - தாமரைப் பூப் போல இயல்பாகவே சிவந்த கண்ணையுடையவன்,

உஅ, தருமன் - அறக்கடவுள், கூற்று - எமன், உயிர் மாற்றலின் - செற்றார் உயிரைத் தப்பாமல் கொல்லுதலால், வாமன் - அருகன், திரு

இவ்வாறு அரசன் வாழ்ந்து வருநாளில், விதைய நாட்டரசனுக்கு விசயை என்ற மகளொருத்தி உருவும் திருவும் பிற நலங்களும் மிகவுடையளாய் இருந்து வந்தாள். அவ்வரசன் சச்சந்தனுக்கு மாமன். விசயையின் அழகும் குணமும் பிறநலங்களும் கேள்வியுற்ற சச்சந்தன் அவள்மீது பெருங் காதல் கொண்டு திருமணம் செய்துகொள்ள நினைத்தான். சான்றோர் சிலரை அவன்பாற் செலுத்தி மணம் பேசுவித்தான்.

### சச்சந்தற்குத் திருமணம் செய்தல்

மருமகன் வலந்ததும், மங்கை யாக்கமும்,
அருமதிச் சூழ்ச்சியின் அமைச்சர் எண்ணிய
கருமமும் கண்டு,அவர் கலத்தற் பான்மையில்,
பெருமகற் சேர்த்தினர் பிணைய னாளையே. ௨௯

### சச்சந்தனும் விசயையும் இன்பவாழ்வு நடாத்துதல்

தன்னமர் காத லானும் தையலு மணந்த போழ்தில்,
பொன்னனாள் அமிர்த மாகப் புகழ்வெய்யோன் பருகி யிட்டான்;
மின்னவிர் பூணி னானை, வேற்கணார்க் கியற்றப் பட்ட
மன்னிய மதுவின் வாங்கி மாதரும் பருகி யிட்டாள். ௩0

துறுமலர்ப் பிணையலும், சூட்டும், சுண்ணமும்,
நறுமலர்க் கண்ணியும், நாறு சாந்தமும்,

---

மகன் - திருமகட்கு மகனாகிய காமன். உரை கூறுமிடத்துத் தருமனை யொப்பன்; வருணனை யொப்பன் என இவ்வாறு கூறுக.

௨௯. மருமகன் - சச்சந்தன். வலந்தது - கூறியது. ஆக்கம் - சச்சந்தன்பால் கொண்டுள்ள அன்பு. அருமதிச் சூழ்ச்சியின் - பிறரால் காணற்கரியவற்றை நுனித்தறியும் அறிவும் ஆராய்ச்சியுமுடைய. கருமம் - விசயையின் உடன் பிறந்தவனான கோவிந்தராசனுக்கு இச் சச்சந்தன் துணையாதல். கலத்தற் பான்மை - பெண் கொடுத்தற்குரிய முறை. பிணை - பெண்மான்.

௩0. அமர் - விரும்புகின்ற. பொன்னனாள் - திருவை யொக்கும் விசயை. பருகியிட்டான் - பருகினான். ஒரு சொல். மின்னவிர் - ஒளி விளங்கும். பூணினானை - பூண் அணிந்த சச்சந்தனை. மன்னிய மது - மிக்க மது. வாங்கி - அவன் காட்டக் கண்டு.

*அறுநிலத் தமிர்தமும், அகிலும், நாவியும்*
*பெறுநிலம் பிணித்திடப் பெரியர் வைகினார்.* ௩௧

இவ்வாறு வைகும் நாளில், விசயைபால் பிறந்த ஆராக் காதலால், சச்சந்தனுக்கு, அவள் இருக்கும் உவளகத்தை விட்டு, அரசிருக்கை மண்டபத்திற்குப் பிரிந்து போவதும் நெடும்பிரிவாய்த் தோன்றிற்று. அவளோடு இடையறவின்றிக் கூடியிருந்து நுகரும் இன்பமே சிறந்து தோன்ற, அவன், அரசாளுதலைக் கருத்திற் கொள்ளானாயினான்.

## சச்சந்தன் அரசாட்சியிற் கருத்தூன்றாமை

*மண்ணகம் காவலின் வழுக்கி, மன்னவன்,*
*பெண்ணருங் கலத்தொடு பிணைந்த பேரருள்,*
*விண்ணகம் இருள்கொள விளங்கு வெண்மதி*
*ஒண்ணிற வுரோணியோ டொளித்த தொத்ததே.* ௩௨

சச்சந்தன், விசயையின் காதலின்பத்தில் மூழ்கித் திளைத்தற்கு அரசு புரியும் தொழில் தடையாக இருக்கிறதென்று நினைந்து, அவ்வரசினைத் தன் அமைச்சருள் தலைவனான கட்டியங்காரன்மேல் வைத்து, தான் பெண்ணின்பத்தில் இடையீடின்றித் திளைத்திருக்கத் துணிந்தான்.

---

௩௧. துறுமலர்ப் பிணையல் - பூக்கள் நெருங்கத் தொடுத்த மாலை. சூட்டு - நெற்றிக்கட்டு; ஒருவகை யணி. கண்ணி - முடிமாலை. சாந்தம் - சந்தனம். அறுநிலத் தமிர்தம் - அறுசுவை யமுதம். நாவி - கத்தூரி. பெறுநிலம் - போகம் நுகரும் இடமாகிய ஐம்பொறிகளையும். மிக்க இன்பம் நுகர்தலின், "பெரியர்" என்றார். பெருமை, மிகுதி.

௩௨. காவலின் - காத்தலிலிருந்து; வழுக்கி - தவறி. நாடு காத்தலில் கருத்தைச் செலுத்தாது என்றவாறு. பெண்ணருங்கலம் - விசயை. பிணைந்த - கலந்து மயங்கிக்கிடந்த. பேரருள் - கழிகாமம். விண்ணகம் - வானம். ஒண்ணிற உரோணியோடு - ஒள்ளிய நிறம் படைத்த உரோகிணியோடே கூடி. திங்கள் உரோகிணியோடு கழி காமங் கொண்டொழுகிய காரணத்தால் தேய்வுற்றான் என்பது கதை. உரோகிணி - உரோணியென வந்தது விகாரம்.

### சச்சந்தன் கட்டியங்காரனைத் தனியாக அழைத்துத் தன் கருத்தை யுரைத்தல்

"அசைவிலாப் புரவி வெள்ளத்து
  அரிஞ்சயன் குலத்துள் தோன்றி,
வசையிலாள் வரத்தின் வந்தாள்
  வான்சுவை அமிர்த மன்னாள்
விசையையைப் பிரித லாற்றேன்,
  வேந்தன்நீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டும்
  இலங்குபூண் மார்ப!" என்றான். ௩௩

கேட்ட கட்டியங்காரன், முதற்கண் உடன்படான் போல் நடித்து, "யானையின் கழுத்தின்மேல் வைத்தற்குரிய தவிசினை நாயின்மேல் வைப்பது கிடையாது; அதுபோல வுளது அடியேன்மேல் தேவரீர் சுமந்து போந்த அரசினை வைப்பது" என்று கூற, அரசன், "நீ மறுத்து மொழி யற்க" என்றான்.

### கட்டியங்காரன் உடன்பட்டுரைத்தல்

எழுதரு பருதி மார்பன்
  இற்றென இசைத்த லோடும்
தொழுதடி பணிந்து சொல்லும்:
  "துன்னலர்த் தொலைத்த வேலோய்!
கழிபெருங் காத லாள்கண்
  கழிநலம் பெறுக; வையம்
பழிபடா வகையிற் காக்கும்
  படுநுகம் பூண்பல்" என்றான். ௩௪

---

௩௩. அரிஞ்சயன் அசைவிலாக் குலத்துள் - அரிஞ்சயன் என்பானது குற்ற மற்ற குலத்தில் பிறந்து. அரிஞ்சயன் - விசயையின் பாட்டன். புரவி வெள்ளம் - குதிரைகளை வெள்ளக் கணக்கில் உடைய. வசை - குற்றம். வரத்தின் வந்தாள் - முற் பிறப்பில் என் வேண்டுகோட்கு இரங்கி இப் பிறப்பில் எனக்கு மனைவியாக வந்தாள். இசைபட - புகழ் உண்டாக. இலங்கு பூண் - விளங்குகின்ற பூண்.

௩௪. எழுதரு பருதி மார்பன் - எழுகின்ற ஞாயிறு போன்ற விளக்க மமைந்த மார்பையுடைய சச்சந்தன். இற்று என - தன் கருத்து இன்னது என்று. துன்னலர் - பகைவர். தொலைத்த வேலோய்! என்றதனால், தன்பால் அரசு வைப்பின் தான் துன்னி நின்று நன்றி மறவாது ஒழுகுவதாகக்

### இதனையறிந்து நிமித்திகன் முதலிய அமைச்சர்கள் தடுத்துரைத்தல்

வலம்புரி பொறித்த வண்கை
மதவலி விடுப்ப ஏகிக்
கலந்தனன் சேனை காவல்
கட்டியங் காரன் என்ன,
" உலந்தரு தோளி னாய் ! நீ
ஒருவன்மேல் கொற்றம் வைப்பின்
நிலம்திரு நீங்கும் " என்றோர்
நிமித்திகன் நெறியிற் சொன்னான். ௧௫

### சச்சந்தன் கூறல்

" எனக்குயிர் என்னப் பட்டான் ;
என்னலால் பிறரை யில்லான் ;
முனைத்திறம் முருக்கி முன்னே
மொய்யமர் பலவும் வென்றான் ;
தனக்குயான் செய்வ செய்தேன் ;
தான்செய்வ செய்க ; ஒன்றும்
மனக்கினா மொழிய வேண்டா ;
வாழியர், ஒழிக " என்றான். ௧௬

---

கட்டியங்காரன் தன் உடன்பாட்டுக் குறிப்பு நன்கு எய்தக் கூறுதல் காண்க. கழிபெரு - ஒரு பொருட் பன்மொழி. இனி, துன்னலர்த் தொலைத்த வேலோய் என்றதற்கு, " பகை யென்று கூறப்படும் பகைவரை யெல்லாம் கொன்ற வேலோய் " என்று நச்சினார்க்கினியர் கூறினார்.

௧௫. வலம்புரி - சங்க ரேகை. பொறித்த - பிறவியிலே பொறிக்கப்பட்ட. மதவலி - மிக்க வலிமையுடைய சச்சந்தன். விடுப்ப - கையாலே காட்டி விடுப்ப. என்ன - என்று அனைவரும் சொல்ல. உலந்தரு தோளினாய் - தூண்போல் உயர்ந்த தோளையுடையாய். கொற்றம் - அரசியல். நிலந்திரு - நிலமும் திருவும். என்று ஓர் - என்று அறிவாயாக என. நெறியின் - நீதியால்.

௧௬. என் அலால் பிறரை இல்லான் - என்னை யொழியப் பிறரை உயிர்த்துணைவராக இல்லாதவன். முனைத் திறம் - பகைவர் போர் முனைக்கண் செய்யும் சூழ்ச்சி வகை. முருக்கி - கெடுத்து. முன்னே - யான் இச் சிறப்பைச் செய்வதற்கு முன்னே, மொய்யமர் - நெருங்கிய போர். தனக்கு - அவன் றனக்கு ; அவனுக்கு. செய்வ - செய்யக்கூடியவை. ஒன்றும் - சிறிதும். மனக்கு - மனத்திற்கு. இன்னா - பொறாமை. வாழியர் - நீயும் நின் நிலையில் வாழ்க. ஒழிக - இனி, இவ்வாறு கூறுவதைத் தவிர்க.

## நிமித்திகன் மேலும் கூறல்

"காவல ! குறிப்பன் றேனும்
கருமம் ஈது, அருளிக் கேண்மோ :
நாவலர் சொற்கொண் டார்க்கு
நன்கலால் தீங்கு வாரா ;
பூவலர் கொடிய னார்கண்
போகமே கழுமி, மேலும்
பாவமும் பழியு முற்றார்
பற்பலர் ; கேள்இது" என்றான். ௩௭

என்றவன், பிரமன் திலோத்தமை பொருட்டு நான் முகனாகியதும், அரன் மங்கை பங்கனாகியதும், மாயோன் கோவியர் துகில் கவர்ந்து குருந்தொசித்துச் சிறு சொல் பெற்றதும், புத்தன் பெண் கழுதையாகி இழிக்கப்பட்டதும் எடுத்துக் கூறினான்.

## பெண்ணின்பத்தால் அரசாட்சியை நெகிழ்த்தல் நன்றன்று என அவனே வற்புறுத்திக் கூறல்

"படுபழி மறைக்க லாமோ ?
பஞ்சவர் அன்று பெற்ற
வடுவுரை யாவர் பேர்ப்பார் ?
வாய்ப்பறை அறைந்து தூற்றி,
இடுவதே யன்றிப் பின்னும்
இழுக்குடைத் தம்ம ; காமம்
நடுவுநின் றுலக மோம்பல்
நல்லதே போலும்" என்றான். ௩௮

---

௩௭. குறிப்பன்றேனும் - திருவுள்ளமன்றாயினும். கருமம் ஈது - செய்யத்தக்க கருமம் இதுவே ; அஃதாவது ஒருவன்மேல் கொற்றம் வைத்தலாகாது. கேண்மோ - கேட்க. நாவலர் - அமைச்சர். நன்கு - நலம். பூவலர் கொடியனார் - பூக்கள் பூத்துள்ள கொடி போலும் மகளிர். போகமே கழுமி - போகத்திலே மூழ்கி மயங்கி. பாவமும் பழியும் உற்றார் - மறுமையில் பாவமும், இம்மையில் பழியும் கொண்டவர்.

௩௮. படுபழி - காமத்தால் பிறந்த பழி. பஞ்சவர் - பாண்டவர். வடுவுரை - பழிமொழி ; ஒருத்தியை ஐவர் மனைவியாக்கிக்கொண்டனர் என்பது. பேர்ப்பார் - நீக்குவார். வாய்ப்பறை யறைந்து - பலரும் நன்கு அறியும்படி வெளிப்படச் சொல்லி. தூற்றியிடுவதேயன்றி - தூற்

### உருத்திரதத்தன் கூறல்

ஆரறி விகழ்தல் செல்லா
 ஆயிரம் செங்க ணானும்,
கூரறி வுடைய நீரார்
 சொற்பொருள் கொண்டு செல்லும் ;
பேரறி வுடையை நீயும் ;
 பிணையனாட்கு அவலம் செய்யும்
ஓர்அறி வுடையை என்றான்
 உருத்திர தத்தன் என்பான். ௩௯

### சச்சந்தன் விடையிறுத்தல்

அளந்துதாம் கொண்டு காத்த அருந்தவ முடைய நீரார்க்கு
அளந்தன போக மெல்லாம் ; அவரவர்க்கு அற்றை நாளே
அளந்தன வாழும் நாளும் ; அதுஎனக் குரையல் என்றான்
விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுடர் இமைக்கும் பூணான்.

### நிமித்திகன் துறவு

"மூரித்தேந் தாரி னாய்!நீ, முனியினும், உறுதி நோக்கிப்
 பாரித்தேன் தரும நுண்ணூல் ; வழக்குஅது வாதல் கண்டே;

றுவதே யன்றி. பின்னும் - மறுமையிலும். இழுக்குடைத்து - நரகம் முதலியவற்றை எய்துவிக்கும் குற்றமுடைத்து. நடுவுநின்று - நடுநிலையில் நின்று. போலும் - ஒப்பில் போலி.

௩௯. ஆர் அறிவு இகழ்தல் செல்லா - பெரிய அறிவுடைமையால் பிறரால் இகழப்படாத. ஆயிரஞ் செங்கணான் - இந்திரன். கூர் அறிவுடைய நீரார் - கூர்த்த அறிவு படைத்த அமைச்சர். நீயும் - இந்திரனைப் போல நீயும். பிணையனாட்கு - விசயைக்கு. அவலம் - பின்னர் நிகழ்வதாகிய துன்பம். தன் கணவன் தன் பொருட்டால் அரசு காவலில் இழுக்கினான் என எழும் பழியால் உளதாகும் வருத்தமுமாம். ஓரறிவு - சிறு புல்லறிவு.

௪௦. தாம் அளந்துகொண்டு காத்த அருந் தவம் - தம்மால் இயல்வது என வரைந்துகொண்டு காத்த அரிய தவம். அற்றை நாளே - கருவில் பதிகின்ற பொழுதே. அளந்தன - அறுதியிடப்பட்டு உள்ளன. அது - அந்த நிலையாமை. "நிலந்திரு நீங்கும்" (34) என நிமித்திகன் கூறிய செல்வ நிலையாமையையும், உருத்திரதத்தன் கூறிய யாக்கை நிலையாமையையும் நிலையாமை யென ஒருமையாக்கி, "அது" என்று ஒருமையாற் கூறினான். உரையல் என்றான், நிமித்திகனை நோக்கி ; அவன் உரியனாதலின். உரையல் - சொல்லற்க.

வேரித்தேங் கோதை மாதர் விருந்துனக் காக இன்பம்
பூரித்தேந் திளைய கொங்கை புணர்க ; யான் போவல்'' என்றான்;

அமைச்சர்கள் நீங்கிச் செல்ல, கட்டியங்காரன் அரச பாரத்தைத் தான் சுமந்து ஆட்சி புரிந்து வருகின்றான். சச்சந்தன் தன் மனைவி விசயையின் காதலின்பத்தில் மூழ்கிக் களித்திருக்கின்றான். இவ்வாறு நாட்கள் செல்ல, *விசயை ஒருநா ளிரவு தீக்கனவு காண்கின்றாள்.

### விசயை தீக்கனாக் கண்டு சச்சந்தன்பால் உரைத்தற்கு எழுதல்

பஞ்சி யடிப்பவ ளத்துவர் வாயவள்,
துஞ்சு மிடைக்கன மூன்றவை தோன்றலின்,
அஞ்சி நடுங்கினள் ஆயிழை ; ஆயிடை
வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே. ௪௨

### அருகனைப் பரவுதல்

பண்கெழு மெல்விர லால்பணைத் தோளிதன்
கண்கழூஉச் செய்து கலைநல தாங்கி

---

௪௧. மூரித் தேந் தாரினாய் - மூரித் தாரினாய் என இயைத்து, வன்மையுடைய தாரினாய் என்று கொள்க. தேந் தார் - தேன் பொருந்திய மாலை. முனியினும் - வெகுளினும். பாரித்தேன் - விரித்துக் கூறினேன். தரும நுண்ணூல் - தருமத்தைச் சொல்லும் நுண்ணிய கருத்துக்களை யுடைய நூல். வழக்கு - அமைச்சர் இயல்பு. வேரி - மணம்.

மாதர் இன்பம் உனக்கு விருந்தாக, கொங்கை புணர்கஎன்று முடிக்க. இன்பம் கூடுந்தோறும் புதிது படுதலின், 'விருந்தாக' என்றான்; "புணர்ந்தால் புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரி குழலாள் அல்குல்போல வளர்கின்றதே" என்று திருக்கோவையார் கூறுதல் காண்க. பூரித்து - பருத்து. ஏந்து - உயர்ந்த. அரசன் போ என்னுமல், தானே போவே னென்றல் நீதியன்மையின், துறவு உட்கோளாயிற்று.

௪௨. பஞ்சியடி - பஞ்சிபோலும் மெல்லிய அடி. பவளத் துவர் வாய்- பவளம்போற் சிவந்த வாய். அடியையும் வாயையுமுடைய விசயை. கனா மூன்று - கண்ட கனாக்கள் மூன்று. அவை - அம் மூன்றும். தோன்றலின் - நெஞ்சில் நின்று நனவில் தோன்றுதலால். ஆயிடை - அக்காலத்தே. வெஞ்சுடர்- ஞாயிறு. விடிந்ததை - விடிந்தது; வினைத் திரிச்சொல். விடியலில் தோன்றுங் கனா பயன் செய்யும் என்ப. "இவை பிற்பயக்குங் கனாவாதலின், பின்னும் நெஞ்சில் தோன்றின."

விண்பொழி பூமழை வெல்கதிர் நேமிய
வண்புகழ் மாலடி வந்தனை செய்தாள். ௬௩

## சச்சந்தனை யடைந்து வழிபடுதல்

இம்பரி லாநறும் பூவொடு சாந்துகொண்டு
எம்பெரு மானடிக் கெய்துக என்றேத்தி
வெம்பரி மான்னெடுந் தேர்மிகு தானைஅத்
தம்பெரு மானடி சார்ந்தன வென்றே. ௬௪

தானமர் காதலி தன்னொடு, மாவலி
வானவர் போல்மகிழ் வுற்றபின், வார்நறும்
தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றெனக்,
கானமர் கோதை, கனவுமொழி கின்றாள். ௬௫

## கனவை யுரைத்தல்

தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்ததுஎண்
முத்தணி மாலை முடிக்கிட னாக,

---

௬௩. பண்கெழு மெல்விரல் - யாழ் பயிலும் மெல்விரல் ; பண், ஆகு பெயர். பணைத்தோளி - மூங்கில் போலும் தோளையுடைய விசயை. கண் கழூஉச்செய்து - கண்ணைக் கழுவி. கலை - உடை. நல தாங்கி - நல்லவை யுடுத்து. விண் - விண்ணோர்கள். வெல் கதிர் நேமி - தீவினையை வெல்லும் அறவாழி. நேமிய - குறிப்புப் பெயரெச்சம். வண்புகழ் மால் - வளவிய புகழையுடைய அருகன். குலமகளிர் தம் கணவனைத் தவிர வேறு தெய்வம் பரவாராயினும், " தெய்வ மஞ்சல் " என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரம், அதற்கும் ஓராற்றால் விதியாதலால் அமையும் என அறிக.

௬௪. இம்பர் இலா - இவ்வுலகில் நிகரில்லாத. நறும்பூ - மணமிக்க பூ. எம்பெருமான் - விளி. எய்துக - பொருந்துவனவாக. வெம் பரி மான் - கடிய செலவையுடைய குதிரை. அத் தம் பெருமான் - தம்முடைய அப் பெருமானாகிய அரசன். அ - உலகறிசுட்டு.

௬௫. தான் அமர் காதலி - தான் மேவுகின்ற காதலி. மாவலி - மிக்க வலி படைத்த சச்சந்தன் ; அன்மொழித் தொகை ; மதவலி என்றாற் போல. வானவர்போல் மகிழ்வுற்றபின் - தேவர் நோக்கத்தால் நுகர்ந் தாற்போல இவனும் கண்ணாலே பார்த்து மனமகிழ்ச்சியுற்ற பின்பு, வார் நறுந்தேன் ; ஒழுகுகின்ற நறிய தேன். கான் - மணம். கோதை - மாலை. ஈண்டு, அக் கோதை யணிந்த விசயை மேற்று. தேன் - முன்னே இனிமை விளைத்துப் பின் தீங்கு விளைவிப்பது ; பால் - தூய்மை காட்டுவது. அமிர்து - உயிர்காப்பது.

ஒத்ததன் தாள்வழி யேமுளை யோங்குபு,
வைத்தது போல வளர்ந்ததை யன்றே. சசு

## சச்சந்தன் கனவின் பயன் கூறல்

நன்முடி நின்மக னும்;நறு மாலைகள்
அன்னவ னல்அம ரப்படுந் தேவியர் ;
நன்முளை நின்மக னுக்கம தாம்,என்ப்
பின்னத னற்பயன் பேசலன் விட்டான். சஎ

" இற்றத னற்பயன் என் ?"என, " ஏந்திழை !
உற்றதுஇன் னேஇடை யூறுஎனக்கு" என்றலும்,
மற்றுரை யாடல ளாய்,மணி மாநிலத்து
அற்றதோர் கோதையின், பொற்றொடி சோர்ந்தாள். சஅ

இவ்வாறு சோர்ந்து வீழ்ந்த விசயையைச் சச்சந்தன் தகுவன கூறித் தேற்றினன். அவள் காதலன் அன்பால் தேறி இனிதிருக்கையில், கருக்கொண்டாள்.

---

சசு. தொத்து அணி பிண்டி - பூங்கொத்துக்களால் அழகு கொண்ட அசோகமரம். தொலைந்து - கெட்டு. அற வீழ்ந்தது - தானும் நேராக வீழ்ந்தது. எண் மாலை - எட்டு மாலை. முத்தணி மாலை - முத்துப்போன்ற வெள்ளிய மாலை. முடி இடனுக - முடிக்கு இருப்பிடமாக. ஓங்குபு - ஓங்கி. வைத்தது - நட்டு வைத்தது. "பிண்டி . . . வீழ்ந்தது"— இதைச் சொல்லுங்கால் அவள் சொல்லுக்குத் தேன் உவமையாயிற்று. "எண் . . . மாலை"—இதற்குப் பால் உவமம். சீவகனுக்குப் பின்னுண்டாகும் ஆக்கத்திற்கு அமிர்து உவமையாயிற்று. இதனுல், அரசற்கும் சுற்றத்திற்கும் கேடுண்டாதல் எய்திற்று.

பிண்டி தொலைந்து அற வீழ்ந்தது; அதன் தாள் வழியே, எண் மாலை முடிக்கிடனுக நட்டு வைத்தது போல ஒரு முளை ஓங்குபு வளர்ந்தது என்க.

சஎ. நின் மகனும் - நினக்குப் பிறக்கும் மகனும். அமரப்படும் - காதலிக்கப்படும். ஆக்கமதாம் - ஆக்கமாம்; அது, பகுதிப் பொருள் விகுதி. பின்னது - பிண்டி தொலைந்து அறவே வீழ்ந்த செய்தி. பேசலன் - பேசலனுய்.

சஅ. ஏந்திழை - விளி. எனக்கு இன்னே இடையூறு உற்றது - இதன்கண் "இன்னே யென்றது உதாசீனம்போல் நின்றது." உற்றது என இறந்த காலத்தாற் கூறினுன், தெளிவுபற்றி; "இல்லை, கனு முந்துறுத வினை" என்பது பழமொழி. உரையாடலளாய் - ஒன்றும் பேச மாட்டாது. கோதையின் - கோதை போல. மணி மா நிலத்து - மணி நிலத்தில். பொற்றொடி - தொடி, வளை ; தொடியையுடைய விசயை.

## விசயையின் கருப்பநிலை

கரும்பார் தோள்முத்தம் கழன்று, செவ்வாய்
விளர்த்துக், கண்பசலை பூத்த, காமம்
விரும்பார் முலைக்கண் கரிந்து, திங்கள்
வெண்கதிர்கள் பெய்திருந்த பொற்செப் பேபோல்
அரும்பால் பரந்து, நுசுப்பும் கண்ணின்
புலனாயிற்று ; ஆய்ந்த அனிச்ச மாலை
பெரும்பார மாய்ப்பெரிது நைந்து, நற்சூல்
சலஞ்சலம் போல், நங்கை நலம்தொலைந் ததே. ௪௯

விசயை கண்ட கனவின்படியே தனக்கு ஏதம் வரும் என்னும் எண்ணத்தனாய்ச் சச்சந்தன் இருந்து வருகையில், தான் அமைச்சர் காட்டிய நெறியை மேற்கொள்ளா தொழிந்த சிறுமை நினைந்து வருந்தும் அவனது அறிவில் ஒரு விரகு தோன்றிற்று. தீங்கு நேர்ந்தபோது தன் காதலி விசயையை அப்புறப்படுத்த எண்ணி, ஓர் எந்திரத்தைச் சமைக்கத் துணிந்தான்.

## மயிற்பொறி சமைத்தல்

அந்தரத் தார்மய னேஎன ஐயுறும்
தந்திரத் தால்தம நூல்கரை கண்டவன்,
வெந்திற லான்,பெருந் தச்சனைக் கூவி," ஓர்
எந்திர வூர்திஇ யற்றுமின்" என்றான். ருo

௪௯. கரும்பார் தோள் - கரும்பு போலும் தோள் ; கரும்பெழுதிய தோள் என்றுமாம். விளர்த்து - வெளுத்து. பூத்த, வினைமுற்று. விரும்பு ஆர் முலைக்கண் - விரும்புதற்குப் பொருந்திய காரணமான முலைக் கண். பெய்து இருந்த - பெய்து வைத்திருந்த. நுசுப்பு - இடை. கண்ணுக்குப் புலனாகாதிருந்த இடை, இதுபோது கண்ணின் புலனாயிற்று என்க. ஆய்ந்த - நுண்ணியதாய் ஆய்ந்து தொடுத்த. பாரமாய் - பாரமாக. பெரிதும் - மிகவும். சூற் சலஞ்சலம் - சூல் கொண்ட சலஞ்சலம் என்னும் சங்கு.

தோள் கழன்று, வாய் விளர்த்து, கண் பசலை பூத்தன ; முலைக்கண் கரிந்து, பால் பரந்து, நுசுப்பும் புலனாயிற்று ; நலம் நைந்து தொலைந்தது என முடிக்க.

ருo. அந்தரத்தார் மயனே என ஐயுறும் - தேவர்களும், தொழில் கண்டு தம்முலகத்துத் தச்சனாகிய மயனே எனத் துணிந்து, வடிவுகண்டு

பல்கிழி யும்,பயி னும்,துகில் நூலொடு
நல்லரக் கும்,மெழு கும்,நலம் சான்றன,
அல்லன வும்,அமைத்து ஆங்குஏழு நாளிடைச்,
செல்வதோர் மாமயில் செய்தனன் அன்றே. ருக

நன்னெறி நூல்நயந் தான்நன்று நன்றிது ;
கொன்னெறி யிற்பெரி யாய் !இது கொள்கென,
மின்எறி பல்கலம் மேதகப் பெய்ததோர்
பொன்னறை தான்கொடுத் தான்,புகழ் வெய்யோன்.

### சச்சந்தன் விசயைக்கு மயிற்பொறி ஊர்ந்து செல்லும் வகையைக் கற்பித்தல்

ஆடியல் மாமயி லூர்தியை, அவ்வழி
மாடமும் காவும் மடுத்தொர்சின் னுள்செலப்,
பாடலின் மேன்மேல் பயப்பயத், தான்துரந்து
ஓட முறுக்கி உணர்த்த வுணர்ந்தாள். ருஙு

இஃது இங்ஙனமிருக்க, அரசு மேற்கொண்டிருந்த கட்டியங்காரன் அவ்வரசுரிமை முற்றும் தானே கவர்ந்துகொள்

---

வேறே எவனோ என ஐயமுறும். தந்திரத்தால் - தொழிலோடு. தம நூல் - தம் தச்சு வேலைக்குரிய நூல். (நூல் - Theory ; தந்திரம் - Practice.) கரைகண்டவன் - முற்றக் கற்றவன். கூவி - அழைத்து. எந்திர வூர்தி - எந்திரத்தால் வானத்தே செல்லக்கூடிய ஓர் ஊர்தி. இயற்றுமின் - இயற்றுக. ஒருமை பன்மை மயக்கம்.

ருக. கிழி - சீலை. பயின் - பிசின் (ஒட்டுப்பொருள்). துகில் நூல் - வெள்ளிய நூல். நலஞ்சான்றன - நல்லன. அமைத்து - கூட்டி. எழுநாளிடைச் செய்தனன் - ஏழு நாட்களில் செய்து முடித்தான்.

செய்யப்படு மயில் தானே செல்லாதன்றே ; இது தானே செல்வது ஒன்றதற்குச் "செல்வதோர் மாமயில்" என்றார். ஒருத்தரை நன்கு சுமக்க வேண்டியதாகலின், "மாமயில்" எனப்பட்டது. மா, பெருமை.

ருஉ. நன்னெறி நூல் - தச்சுத் தொழிற்குரிய நற்பொருளை யுணர்த்தும் நூல். நயம் - நுட்பம். கொல் நெறியிற் பெரியோய் - கொற்றொழிலில் பெரியோனே. மின் எறி - மின்னொளியைக் கெடுக்கும். பொன்னறை - பொன் நிறைந்த அறையிற் கிடந்த பொன் முழுதும். புகழ் வெய்யோன் - புகழை விரும்பும் சச்சந்தன்.

ருஙு. ஆடு இயல் - பறந்து விளையாடுதற்கு இயன்ற. மாடமும் காவும் அடுத்து - மாடத்துக்கும் காவிற்கும் பறந்து சென்று பயின்று. பாடலின் - பாட்டு மேன்மேல் எழுதல் போல. துரந்து - செலுத்தி.

ளக் கருதி, அதற்குத் தடை சச்சந்தன் உயிரோடிருப்பதே என்றெண்ணி அவனைத் தொலைத்துவிட ஒரு சூழ்ச்சி செய்யலுற்றான்.

### கட்டியங்காரன் அமைச்சர்கட்குத் தன் சூழ்ச்சியை யுரைத்தல்

மன்ன வன்பகை யாயதொர் மாதெய்வம்
என்னை வந்திடங் கொண்டுஅஃது இராப்பகல்
துன்னி நின்று, செகுத்திடு நீஎனும்;
என்னை யான்செய்வ ? கூறுமின் என்னவே. ருச

### இச் சொற்களைக் கேட்டு உளம் நடுங்கிய அமைச்சர்களுள் தருமதத்தன் என்னும் அமைச்சன் கழறுதல்

"தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடிக்
குவளை யேயள வுள்ள கொழுங்கணாள்,
அவளை யே,அமிர் தாகஅவ் வண்ணலும்
உவள கம்தன தாக ஒடுங்கினான்; ருரு

"தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவின் பிறழ்ந்திடும் பூமகள்;
அன்ன வன்வழிச் செல்லின்இம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குநர் இல்லையே; ருசு

"திண்டி றார்தமைத் தீச்சுடும்; மன்னர்தீ
ஈண்டு நும்கிளை யோடும் எரித்திடும்;

---

ருச. மன்னவன் பகை - மன்னவனுக்குப் பகை. இடங்கொண்டு - இருப்பிடமாகக் கொண்டு. துன்னி - நெருங்கி. எனும் - என்று சொல்லுகின்றது. என்ன - என்று கட்டியங்காரன் அமைச்சரைக் கேட்க.

ருரு. அவ்வண்ணல் - சச்சந்தன். சீறடி - சிறிய அடி. கொழுங்கணாள் - கொழுவிய கண்ணையுடையளாகிய அவ் விசயை. அமிர்தாக - அமிர்தாகக் கொண்டு, உவளகம் - அந்தப்புரம். ஒடுங்கினான் - பிற நாடு காவல் முதலியவற்றில் வேட்கையின்றிச் சுருங்கினான்.

ருசு. தார்ப் பொலி வேந்தன் - தாரால் பொலிவுற்ற வேந்தன் அறிவினால் பொலிவுறுகின்றானல்லன் என்பது குறிப்பு. வெளவின் - உயிரைக் கவர்ந்தால். பூமகள் - தாமரைப் பூவில் இருக்கும் திருமகள். பிறழ்ந்திடும் - நீங்கிவிடுவாள். அவன் - தன்னை அரசு காவற்குரியனாக்கிய அவ்வேந்தன். பேர்க்குநர் - பெயர்ப்பவர்.

வேண்டில் இன்னயிர் தும்நஞ்சு மாதலால்,
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே ; ௫௭

"வேலின் மன்னனை விண்ணகம் காட்டி,இஞ்
ஞால மாள்வது நன்றெனக் கென்றியேல்,
வாலி தன்று ''எனக் கூறினன், வாள்நமற்கு
ஓலை வைத்தன்ன ஒண்டிற லாற்றலான். ௫௮

"பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னாள்
குறைபடு மதியம் தேயக் குறுமுயல் தேய்வ தேபோல்,
இறைவனைத் தன்னை ஆக்கி யவன்வழி யொழுகின் என்றும்
நிறைமதி இருளைப் போழும் நெடும்புகழ் விளக்கும்'' என்றான், ௫௯

## மதனன் கூறல்

தார்ப்பொலி தரும தத்தன் தக்கவா றுரைப்பக் குன்றில்
கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் அகல மெல்லாம் பொள்ளென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடல் மகரப் பேழ்வாய் மதனன்மற் றிதனைச் சொன்னான். ௬௦

---

௫௭. ஈண்டும் - திரண்ட. கிளை - சுற்றத்தார். வேண்டில் - அரசன் விரும்புவானாயின். நஞ்சுமாதலால் - விரும்பானாயின், தன் பகைமையாகிய நஞ்சினால் தன்னால் விரும்பப்படாதவரை யழிப்பனாதலால். மாண்டது - மாட்சிமைப்பட்டது. வாய்மொழி தெய்வம் - உறுதி கூறுதலையுடைய தெய்வம்.

௫௮. விண்ணகம் காட்டி - கொன்றுவிட்டு. என்றியேல் - என்று சொல்வாயாயின். வாலிது அன்று - நன்றன்று. வாள் நமற்கு ஓலை வைத்தன்ன ஒண்திறலாற்றலான் - வாள் வன்மையால், "வல்லவனாயினும் வந்து ஒரு கை பார்க்கட்டும்" என்று எமனுக்கும் ஓலை விடுக்கும் ஒள்ளிய திறல் படைத்தவனான தருமதத்தன்.

௫௯. பிறையது வளரத் தானும் வளர்ந்து — பிறைவளர, அது தானும் வளர்ந்து. அது - முயலாகிய களங்கம். குறைபடு மதியம் - தேய்தற்குக் காலமுண்டான முழுத் திங்கள். குறுமுயல் - சிறிய முயலாகிய களங்கம். ஆக்கியவன் - சச்சந்தன். இருளைப் போழும் நிறைமதி என மாற்றி, இருளைப் போக்கும் முழு மதி போல என முடிக்க. அவ்வொழுக்கம் புகழ் விளக்கும் என்று உரைக்க.

௬௦. தார்ப் பொலி தருமதத்தன் - வாகை மாலையால் பொலியும் தருமதத்தன். தக்கவாறு - அமைச்சர்க்கும் அரசர்க்கும் தக்க முறைப்படி. குன்றில் கார்த்திகை விளக்கிட்டாற்போல என்றது, மதனன் அணிந்திருந்த குவளைப் பைந்தாருக்கு உவமை. குவளைப் பைந்தார் - குவளைப் பூவால் தொடுக்கப்பட்ட பசிய மாலை. போர்த்த-குடிய. அகலம் - மார்பு. பொள்

"தோளினுல் வலிய ராகித் தொக்கவர் தலைகள் பாற
வாளினுல் பேச லல்லால், வாயினுல் பேசல் தேற்றேன் ;
காளமே கங்கள் சொல்லிக் கருனையாற் குழைக்குங் கைகள்
வாளமர் நீந்தும் போழ்தில் வழுவழுத் தொழியு மென்முன்."

**இவற்றைக் கேட்டுக் கட்டியங்காரன் வெகுண்டு கூறுதல்**

"என்னலால் பிறர்கள் யாரே
இன்னவை பொறுக்கும் நீரார் ?
உன்னலால் பிறர்கள் யாரே
உற்றவற்கு உறுத சூழ்வார் ?
மன்னன்போய்த் துறக்கம் ஆண்டு
வானவர்க் கிறைவ ஞக,
பொன்னெலாம் விளைந்து பூமி
பொலிய யான் காப்பல்" என்முன். சுஉ

**மதனன் முதலியோர் அஞ்சி அமைந்து மொழிதல்**

விளைக; பொலிக; அஃதே;
உரைத்திலம்; வெகுளல் வேண்டா ;
களைகம், எழுகம் இன்னே ;
காவலற் கூற்றம் கொல்லும் ;

---

ளென வியர்த்து - கடுக வியர்த்து. பொள்ளென - குறிப்பு மொழி. (குறள் : 487) நீர்க்கடல் மகரப் பேழ்வாய் மதனன் - நீர் நிரம்பிய கடலில் உள்ள மகர மீனின் பிளந்த வாயிடத்தெழும் முழக்கம் போலும் சொல்லையுடைய மதனன். மகரவாய் போலும் பெரிய வாயை யுடைய மதனன் என்றுமாம்.

சுக. தொக்கவர் - பலராய்ச் சேர்ந்து வரும் பகைவர். பாற - சிதற. வாளினுல் பேசல் - வாளினுல் வெட்டி வீழ்த்திச் செய்கையில் காட்டுவதன்றி. தேற்றேன் - அறியேன் ; இது தன்வினை ; "தேற்றுய் பெரும பொய்யே" (புறம். 19) என்முற் போல. காளமேகங்கள் சொல்லி - இருண்ட மேகம் போல முழக்கமிட்டுச் சொல்லி. கருனையால் - பொரிக் கறிகளோடு. குழைக்கும் - சோற்றைப் பிசையும். அமர் நீந்தும் போழ்து - போராகிய கடலைக் கடக்கும் காலத்தில். வாள் வழு வழுத் தொழியும் - வாள் வழுக்கி வீழும். இக் கவி முன்னிலைப் புறமொழி ; முன்னிற்பாரைப் படர்க்கையில் வைத்துப் பேசுதல்.

சுஉ. இன்னவை - கடிய சொற்கள். உற்றவற்கு - சச்சந்தனுக்கு. உறுத - போக நுகர்ச்சிக்குரிய பொன்னுலகைத் தாராது, துன்பத்துக்குரிய மண்ணுலக நுகர்ச்சிகள். ஆக - ஆகுக. பூமியெல்லாம் பொன் விளைந்து பொலிய யான் காப்பல் என இயைக்க.

வளைகய மடந்தை கொல்லும் ;
தான்செய்த பிழைப்புக் கொல்லும் ;
அளவறு நிதியம் கொல்லும் ;
அருள்கொல்லும் ; அமைக, என்றான். ௩௩

அமைச்சர் பலரும் தன் கருத்துக்கு இசைந்தது கண்டு கட்டியங்காரன் பல்வகைப் படையேந்திய நால்வகைத் தானை சூழச் சச்சந்த னிருந்த திருநகரை வளைந்துகொண்டான்.

### கட்டியங்காரன் போர்க்கெழுந்ததை வாயிலோன் சச்சந்தனுக்குக் கூறல்

“ நீணில மன்ன, போற்றி ;
நெடுமுடிக் குருசில், போற்றி ;
பூணணி மார்ப, போற்றி ;
புண்ணிய வேந்தே, போற்றி ;
கோள்நினைக் குறித்து வந்தான்,
கட்டியங் காரன்,” என்று
சேண்நிலத் திறைஞ்சிச் சொன்னான்
செய்யகோல் வெய்ய சொல்லான். ௩௪

### சச்சந்தன் கோயில் வீரர்க்கு உரைத்தல்

“ திண்ணிலைக் கதவ மெல்லாம்
திருந்துதாழ் உறுக்க; வல்லே
பண்ணுக பசும்பொன் தேரும்,
படுமதக் களிறும், மாவும் ;

---

௩௩. விளைக, பொலிக - நீ கூறியவாறே பொன்னே விளைக, பொலிக. அஃதே - எமக்கு நினைவும் அதுவே. களைகம் எழுகம் - அரசனைக் கொன்று களைதற்கு எழுவேம். அரசன் செய்யும் கொலை, “ களைகட்டதனொடு நேர் ” ஆதலின், “ களைகம் ” என்றான். வளை கய மடந்தை - சங்கு வாழும் குளத்தில் பூக்கும் தாமரையில் இருக்கும் திருமகள். காவலனைக் கொல்லும் கூற்றம் என மாற்றி, மடந்தையாய், பிழைப்பாய், நிதியமாய், அருளாய்க் கொல்லும் என முடிக்க. மடந்தை - விசயை; பிழைப்பு - அரசு காவல் வழுக்கியது; நிதியம் - அரச போகம். அருள் - கட்டியங்காரன்பாற் காட்டிய பேரருள்.

௩௪. கோள் - கொலை. சேண் நிலத்து - சேய்மையான இடத்தே நின்று. செய்ய கோல் - நேரிய கோல். வெய்ய சொல்லான் - வெய்ய சொல்லைக் கூறுதலை யுடைய வாயிலோன்.

கண்ணகன் புரிசை காக்கும்
 காவலர் அடைக" என்றான்;
விண்ணுரும் ஏறு போன்று
 வெடிபட முழங்கும் சொல்லான். ௬௫

## அவன் விசயைக்கு வேண்டுவ கூறி வெளியேற்றல்

"நங்கைநீ நடக்கல் வேண்டும்:
 நன்பொருட் கிரங்கல் வேண்டா;
கங்குல்நீ அன்று கண்ட
 கனவெலாம் விளைந்த" என்னக்
கொங்கலர் கோதை மாழ்கிக்
 குழைமுகம் புடைத்து வீழ்ந்து
செங்கயற் கண்ணி வெய்ய
 திருமகற்கு அவலம் செய்தாள். ௬௬

சாதலும் பிறத்தல் தானும்
 தம்வினைப் பயத்தி னாகும்;
ஆதலும் அழிவு மெல்லாம்
 அவைபொருட் கியல்பு கண்டாய்

---

போகத்திலே மூழ்கிக் கிடக்கின்றமை "பூணணி மார்பம்" கூறப்பட்டது. இனி, பகைவர் தம் மார்பிற் கவசமணிதற்குக் காரணமான மார்ப என்றுமாம். இப் போகம் முற் பிறப்பிற் செய்த புண்ணியத்தின் பயனாதலின் "புண்ணிய வேந்தன்" எனப்படுகின்றான். நீணில முதலாக நான்கு கூறியது, நிலத்திற்கும், குலத்திற்கும், வீரத்திற்கும், அறத்திற்கும் நின்னையொழிய இல்லை யென்று இரங்கியது என்பர்.

௬௫. திண்ணிலைக் கதவம் - திண்மையான நிலையினையுடைய கதவுகள். தாழ் உறுக்க - தாழிடுக. வல்லே - விரைந்து. கண் அகல் புரிசை - இடமகன்ற தலை யகலமுடைய மதில். உரும் ஏறு - இடி. வெடிபட - வெடித்தலுண்டாக.

௬௬. கனவெலாம் - கனவு முற்றும். விளைந்த - பலிக்கலுற்றன. நன் பொருள் - தனக்குளதாகிய கேடு; மங்கல மொழியாற் கூறினான் விசயை சோர்வு எய்தாமைக்கு. இனி, வயிற்றிலிருக்கும் பிள்ளை என்றுமாம். கொங்கு - தேன். மாழ்கி - மயங்கி. முகம் குழையப் புடைத்து. கோதை - கோதை போல. வெய்ய - விரும்பிய. திருமகற்கு - அரசனுக்கு; இனி, வயிற்றிலிருக்கும் பிள்ளைக்கு என்றுங் கூறுப. அவலம் - வருத்தம்.

நோதலும் பரிவு மெல்லாம்
    நுண்ணுணர் வின்மை யன்றே!
பேதைநீ; பெரிதும் பொல்லாய்;
    பெய்வளைத் தோளி! என்றான். ௬௭

தொல்லைநம் பிறவி யெண்ணில்
    தொடுகடல் மணலும் ஆற்றா
எல்லைய; அவற்று ளெல்லாம்,
    ஏதிலம் பிறந்து; நீங்கிச்
செல்லுமக் கதிகள் தம்முள்
    சேரலம்; சேர்ந்து நின்ற
இல்லினுள் இரண்டு நாளைச்
    சுற்றமே; இரங்கல் வேண்டா; ௬௮

வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனால் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயும் உணர்விலா நீரை யாகி,
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்றால்; ஒழிகநின் கவலை யென்றான். ௬௯

உரிமைமுன் போக்கி யல்லால் ஒளியுடை மன்னர் போகார்;
கருமமீது எனக்கும்; ஊர்தி சமைந்தது; கவல வேண்டா;
புரிநரம் பிரங்கும் சொல்லாய்! போவதே பொருள்மற்று என்றான்,
எரிமுயங் கிலங்கு வாட்கை யேற்றிளஞ் சிங்க மன்னன். ௭௰

---

௬௭. வினைப்பயத்தினாகும் - வினைப் பயனால் உண்டாம். நோதலும் - அழிவுக்கும் சாதற்கும் வருந்துதலும். பரிதல் - மகிழ்தல். பேதை - அறிந்திலை. பொல்லாய் - அவலம் செய்கின்றாய். பேதை, தோளி இரண்டையும் விளியாக்கலும் உண்டு; அப்போது பொல்லாய் என்றதற்கு அறிவிலியாய் இருந்தாய் என்று பொருள் கூறுக.

௬௮. தொல்லை - பழைய. பிறவி - மக்கட் பிறப்பு. ஆற்றா - எண்ணிடப்பட்டுச் சிறு தொகையாகும். எல்லைய - அளவினவாம். பிறந்தும் ஏதிலம் - பிறந்தும் வேறுபட் டிருந்தேம். நீங்கி - இவ்வுடம்பை நீங்கி. சேரலம் - சேரமாட்டேம். இரண்டு நாள் - சிறிது நாளென்னும் பொருட்டு. சுற்றம் - உறவு.

௬௯. வடித்த - தெளிவுரைக்கப்பட்ட. நுண்ணூல் - நூலின் நுண்பொருள். உண்டுவைத்த அனைய - முற்றவும் உணர்ந்துள்ள. நீரையாகி - தன்மையை யுடையளாய். விண்டு - என்னின் வேறுபட்டு. இனையை யாதல் - இவ்வாறு அறிவிலார் போல அழும் தன்மை யுடையளாதல்.

௭௰. உரிமை - உரிமைமகளிர். ஒளி - விளக்கம். இது - இப்போது நின்னைப் போக்குதல். எனக்கும் என்ற உம்மையால் விசயைக்கும் போதல்

### விசயை வெளியேறல்

என்புநெக் குருகி உள்ளம் ஒழுகு சோர, யாத்த
அன்புமிக் கவலித் தாற்ரு ஆருயிர்க் கிழத்தி தன்னை,
இன்பமிக் குடைய சீர்த்தி இறைவன தாணை கூறித்
துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன், துணைவி சேர்ந்தாள். ௭௧

### சச்சந்தன் வீழ்ச்சி

விசயை சென்ற பிரிவுத் துயரை ஒருவாறு ஆற்றிக் கொண்ட வேந்தன் போர்க்கோலம் பூண்டு, படை வீரர் சூழ்ந்துவரப் போர்க் களம் புகுந்து பெரும் போர் உடற்று கின்ருன். இருதிறத்தும் பலர் மாண்டு வீழ்கின்றனர்; குருதி வெள்ளம் பெருக்கெட் டோடுகிறது. முடிவில் கட்டி யங்காரனும் சச்சந்தனும் நேர் நின்று பொருகின்றனர். இறு தியாக, கட்டியங்காரன் எறிந்த நெடுவேல் மார்பிற் பட்டுருவ, வேந்தன் வீழ்கின்ருன்.

தோய்ந்த விசும்பென் னும் தொன்ஞட் டகம்தொழுது
புலம்பெய்தி மைந்தர் மாழ்க,
ஏந்து முலையார் இனைந்திரங் கக்கொடுங்கோல்
இருள்பரம்ப, ஏஎ, பாவம் !

---

கருமம் என்ருனையிற்று. சமைந்தது - உளது. மற்று - தாழ்ப்பது தீது என்று உணர்த்தி நின்றது. எரி முயங்கு இலங்கு வாள் - நெருப்புக் கலந்து விளங்கும் வாள். ஏற்றிளஞ் சிங்கம் - இளஞ் சிங்க வேறு; இளைய ஆண் சிங்கம். பிள்ளையால் கதிபெறுதலும், பகை வேறலும் கருதி இருவர்க்கும் கருமமென்ருன். கவலை - இருதலைக் கொள்ளியிடத்து எறும்புபோல் கணவனையும் மகனையும் நோக்கிக் கவலுதல்.''

௭௧. என்புநெக்குருகி - எலும்பு குழைந்து உருகும்படி. யாத்த - பிணித்த. ஆற்ருத - பிரிவாற்ருத. கிழத்தி - மனைவியாகிய விசயை. இன்பம் மிக்குடைய சீர்த்தி இறைவன் - அனந்த சுகம் மிகுதலாலே சீர்த்தியையுடைய அருகன். சீர்த்தி - மிகு புகழ். ஆணை - ஓம் நமோ அரஹந்தாணம் என்னும் மறை மொழி. துன்பமில் - துன்பம் பயத்தல் இல்லாத. திடீரென இறங்கினும், ''தோகை கண்டவர் மருள வீழ்ந்து கால் குவித் திருக்கும்'' (சிந்தா. 239) ஆதலின், '' துன்பமில் பறவை'' யென்ருர். இனி, தீதற்ற பறவை என்றுமாம். கூறி - கூற. ஆணை கூறச் சேர்ந்தாள் என்க. சேர்ந்த விரைவு தோன்ற, சேர்ந்த திறம் கூறிற்றிலர்.

ஆய்ந்த குருகுலமாம் ஆழ்கடலி னுள்முளைத்த
அறச்செங்கோல் ஆய்கதிரினை,
வேந்தர் பெருமானைச் சச்சந்தனை மந்திரி
மாநாகம் உடன்விழுங்கிற் றன்றே. எஉ

## கட்டியங்காரன் அரசுரிமை எய்துதல்

செங்கண் குறுநரி ஓர்சிங்க வேற்றைச்
செகுத்தாங்கு அதனிடத்தைச் சேர்ந்தா லொப்ப,
வெங்கண் களியானை வேல்வேந்தனை
விறலெரியின் வாய்ப்பெய் தவன்பெயர்ந் துபோய்,
பைங்கண் களிற்றின்மேல் தன்பெயரினால்
பறையறைந்தான் வேல்மாரி பெய்தா லொப்ப,
எங்க ணவரும் இனைந்திரங்கினார்
இருள்மனத்தான் பூமகளை எய்தி னானே. எங

## சீவகன் பிறப்பு

இனி, மயிலூர்தி இவர்ந்து சென்ற விசயை கட்டியங்காரனது பறையோசை கேட்டதும் திடுக்கிட்டு மனம் கலங்கி, அறிவு சோர்ந்து அப் பொறிமீதே சாய்ந்தனள்; அப் பொறியும் மேலே பறத்தலை விட்டு மெல்ல இறங்கி நிலத்தை யடைந்தது; அவ்விடம், அந் நகர்ப் புறத்துச் சுடுகாடாகும்.

---

எஉ. தோய்ந்த - மக்கள் செறிந்த. விசும்பென்னும் தொன்னாட்டகம் - விண்ணுலகேயெனச் சிறப்பித் துரைக்கப்படும் ஏமாங்கத மென்னும் பழைய நாட்டகத்துச் சான்றோர். ஏந்து முலையார் - கற்புடைய மகளிர். கொடுங்கோல் இருள் - கொடுங்கோலாகிய இருள். பரம்ப - பரவ. அறச் செங்கோல்-அறத்தைச் செய்யும் செங்கோன்மை. ஆய்கதிர் - இள ஞாயிறு. ஆய்கதிர் - இருளை யாய்ந்து கெடுக்கும் ஞாயிறு. ஆய்தல் - சுருங்குதலு மாதலின், இருள் குன்றச் செய்யும் கதிருமாம். மந்திரி மா நாகம் - மந்திரியாகிய கரு நாகம். மா - கருமை. உடன் விழுங்கிற்று - அரச வுரிமையெல்லாம் கொண்டான்; நாகத்திற்கேற்ப "விழுங்கிற்று" என்றார். ஏஎ - குறிப்புமொழி. இதனால் அவன் ஆண்டகைமை குறைந்ததற்கு இரங்கினார்.

எங. ஓர் - நிகரில்லாத. செகுத்து - கொன்று. ஆங்கு - அப்பொழுதே. சேர்ந்தால் ஒப்ப - சேர்ந்தால், அச் சிங்கத்தின் தொழிலைச் செய்யாது தன் தொழிலையே செய்வது போல, வெங்கண் களியானை வேல் வேந்தனை - வெவ்விய கண்களையும் மதக் களிப்பினையுமுடைய யானைப் படையும் வேற்படையுமுடைய வேந்தனை சச்சந்தனை. பெயர்ந்து போய் - சுடுகாட்டினின்றும் போய். வேல்மாரி - வேலாகிய மழை.

ஆயினும், அவ்விடத்தை யடைந்த விசயைக்கு மகப்பெறு வேதனை யுண்டாயிற்று; சிறிது போழ்தில் ஓர் ஆண் மகவு பிறந்தது. வருத்தம் சிறிது நீங்கியதும், விசயை அக் குழந்தையைக் காண்கின்றாள்.

பூங்கழல் குருசில் தந்த
புதல்வனைப் புகன்று நோக்கித்
தேங்கம ழோதி திங்கள்
வெண்கதிர் பொழிவ தேபோல்
வீங்கிள முலைகள் விம்மித்
திறந்துபால் பிலிற்ற ஆற்றாள்,
வாங்குபு திலகம் சேர்த்தித்
திலகனைத் திருந்த வைத்தாள். ௭௪

## கிடத்திய மகனது நிலை நினைந்து விசயை புலம்புதல்

அரும்பொற் பூணும் ஆரமும் இமைப்பக் கணிகள் அகன்கோயில்
ஒருங்கு கூடிச் சாதகம்செய் தோகை யரசர்க் குடன்போக்கி
கருங்கைக் களிறும் கம்பலமும் காசும் கவிகள் கொளவீசி
விரும்பப் பிறப்பாய்; வினைசெய்தேன் கான இஃதோஓ பிறக்குமா. ௭௫

---

எங்கணவரும் - எவ்விடத்து மக்களும். இனைந்து - அழுது. இருள் மனத்தான் - கட்டியங்காரன். பூமகள் - நாட்டரசு.

நரி சிங்கவேற்றைச் செகுத்து, அதனிடத்தைச் சேர்ந்தா லொப்ப, வேந்தனை எரியின்வாய்ப் பெய்து, பெயர்ந்து போய், பூமகளை யெய்தினன்; தன் பெயரினால் பறை சாற்றினன்; எங்கணவரும் வேல் மழைக்கு இரங்கினாற் போல இனைந்து இரங்கினர் என முடிக்க.

௭௪. பூங்கழல் - பூத் தொழில் அமைந்த கழல். குருசில் - சச்சந்தன். புதல்வனை - மகனை. புகன்று - விரும்பி. "புதல்வன் பொருட்டு இவளைப் போக்குதலின், குருசில் தந்த புதல்வனை யென்றார்; ஓதி - கூந்தல்; ஈண்டு, ஓதியையுடைய விசயைமேற்று. திங்கள் . . . . ஆற்றாள் - முலைகள் திங்களின் கதிரைத் தாம் பொழிவதுபோலப் பால் சொரியும் பருவத்தளவும் பொறுளாய்ப் பாலை வாங்கி யென்க;" என்றது, மகப் பெறுவார்க்குப் பெறும்பொழுது பால் சுரவாதாதலால். வாங்குபு-வாங்கி. திலகம் சேர்த்தி - திலகமிட்டு. திலகனை - சிறந்தவனான சீவகக் குழவியை. திருந்த - சீர் செய்து.

௭௫. அரும் பொற்பூண் - பெறற்கரிய பொன்னாலாகிய அணிகள். இமைப்ப - ஒளி செய்ய. கணிகள் - சோதிடர்கள். ஒருங்கு - சேர. சாதகம் செய்து - சாதகம் குறித்தலைச் செய்ய. ஓகை - உவகை. போக்கி -

வெவ்வாய் ஓரி முழவாக, விளிந்தார் ஈமம் விளக்காக,
ஒவ்வாச் சுடுகாட் டுயர்அரங்கில் நிழல்போல் நுடங்கிப் பேயாட,
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ? இதுவோ! மன்னர்க் கியல்,வேந்தே! ௭௬

பற்றா மன்னர் நகர்ப்புறமால்; பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்;
உற்றார் இல்லாத் தமியேனால்; ஒதுங்க லாகாத் தூங்கிருளால்;
மற்று இஞ் ஞால முடையாய்! நீ, வளரு மாறும் அறியேனால்;
எற்றே இதுகண் டேகாதே, இருத்தி யால்,என் இன்னுயிரே. ௭௭

பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமா னடிகள் பேரறமும்
புறந்தந் தென்பால் துயர்க்கடலை நீந்தும் புணைமற் றாகாக்கால்,
சிறந்தா ருளரேல் உரையாயால்; சிந்தா மணியே கிடத்தியால்;
மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன் மம்மர் நோயின் வருந்துகோ. ௭௮

---

ஓலை போக்கி. கருங்கைக் களிறு - பெரிய கையினையுடைய யானை. காசு - பொற்காசு. கவிகள் - மங்கலம் பாடும் கவிஞர்கள். வீசி - கொடுத்து. விரும்ப - அரசன் மகிழ்ச்சி மிகுந்து இவற்றை விரும்பிச் செய்ய. பிறப்பாய் - பிறக்கும் நீ. வினை செய்தேன் - தீவினை செய்த யான். இஃதோ பிறக்குமா - இதுவோ பிறக்குமாறு; விகாரம். ஓஓ, இரக்கக் குறிப்பு.

௭௬. வெவ்வாய் ஓரி - கொடிய வாயையுடைய நரியின் கூப்பீடு. விளிந்தார் - இறந்தவர். ஈமம் - சுடுகாட்டு எரி. ஒவ்வா - பிறப்பார்க்கு ஒவ்வாத. உயர் அரங்கில் - உயர்ந்த மேட்டிடத்தே. நுடங்கி -அசைந்து. எவ்வாய் மருங்கும் - எவ்விடத்தும். கூகை - பேராந்தை. "இவ்வாறு என்றது தந்தை விரும்புமாறு நல்வினையுடைய தன்மையை; இது என்றது செயலின்றித் தாய் வருந்தும்படி தீவினையுடைய தன்மையை.

௭௭. பற்றா மன்னர் - பகை வேந்தர். பாயல் - படுத்துக் கிடக்குமிடம். உற்றார் - உசாவுதற்குத் துணையாவார். இல்லா - இல்லாமல். ஒதுங்கலாகா - நின்னைக் கொண்டுபோகக் கருதின் போகவொண்ணாத. தூங்கிருள் - மிக்க இருள். இஞ்ஞாலம் - இந்த ஏமாங்கத நாடு. இது கண்டு - இச் செய்தி கண்டும். ஏகாது - நீங்காமல். என் - இதற்குக் காரணம் என்னோ. மற்று - வினை மாற்று. எற்றே - இதுவும் அறிந்தே. உயிரொன்று தவிரத் துணை பிறிதின்மையின், அதனை, இன்னுயிரே யென்றாள்.

௭௮. பிறந்த நீயும் - என் வருத்தம் நீக்கப் பிறந்த நீயும். பெருமானடிகள் - அருகன். புறந்தந்து - பாதுகாத்து. நீந்தும் புணை - நீந்துதற்குரிய புணை (தெப்பம்). ஆகாக்கால் - ஆகாதபோது. சிறந்தார் - துணையாவதற்குச் சிறந்தவர். சிந்தாமணியே, விளி. கிடத்தி - உரையாடாது கிடக்கின்றாய். மறம் - வீரம். சொல் - சொல்லிய கருமம். மம்மர் மயக்கம். வருந்துகோ - வருந்துவேன்.

## ஒரு தெய்வம் சண்பகமாலை யென்னும் கூனியது வடிவில் வந்து துணை செய்தல்

விம்முறு விழுமம் வெந்நோய் அவணுறை தெய்வம் சேரக்
கொம்மென உயிர்த்து நெஞ்சில் கொட்புறு கவலை நீங்க;
எம்மனை! தமியை யாகி இவ்விடர் உற்ற தெல்லாம்
"செம்மலர்த் திருவின் பாவாய்! யான்செய்த பாவம்" என்றாள். ௭௯

பூவினுள் பிறந்த தோன்றற்
புண்ணியன் அனைய நம்பி
நாவினுள் உலக மெல்லாம்
நடக்கும்; ஒன் றாது நின்ற
கோவினை அடர்க்க வந்து
கொண்டுபோம் ஒருவன்; இன்னே
காவியங் கண்ணி னாய்! யாம்
மறைவது கருமம் என்றாள். ௮௦

கேட்ட பின்பு, விசயை அக் குழந்தையை ஓரிடத்தே செவ்விதாக வைத்து, அரசன் பெயர் பொறித்த மணி யாழியை அதனோடு சேர்த்து, கண் கலுழ, உள்ளம் துடிக்க உடல் பனிப்ப, கூனி வடிவில் நின்ற தெய்வத்தோடு ஒரு பக்கத்தே மறைந்து நிற்கலானாள்.

## கந்துக்கடன் வரவு

இவன் இராசமாபுரத்தே அரசரால் சிறப்புற மதிக்கப் பெற்ற பெருவணிகன். அன்று பிறந்து இறந்த தன் மகனை வைத்தற்குச் சுடுகாட்டிற்கு வருகின்றான்.

நாளொடு நடப்பது வழுக்கி மின்னொடூர்
கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தெனக்

---

௭௯. விம்முறு - மிகும். விழும வெந்நோய் - தேவியது விழுமத்தாலே நோயை யுடையதாகிய தெய்வம். கொம்மென - பொருக்கென. கொட்புறு கவலை - கலக்கத்தைச் செய்யும் கவலை. எம் அனை - எம் அன்னாய். தமியையாகி - தனிமைப்பட்டு. செம்மலர் - செந்தாமரை. நீங்க - வியங்கோள் வினைமுற்று. திருவின் - இன், அசை. தெய்வம் கூனியாய் நிற்றலின் உயர்திணையாற் கூறினர்.

௮௦. பூவினுள் - தாமரைப் பூவில். தோன்றல் - தலைமை. புண்ணியன் - முருகன். நாவினுள் - சொல்லும் சொல்லிலே. ஒன்றாது நின்ற கோவினை - அவ்வாறு நடத்தற்குப் பொருந்தாது நின்ற கட்டியங்காரனை. அடர்க்க - பின்னே கொல்லும்படியாக. காவி - நீலமலர்.

காளக வுடையினன் கந்து நாமனும்
வாளொடு கனையிருள் வந்து தோன்றினன். ௮௧

வந்தவன் தன் மகளைப் புதைத்துவிட்டு நீங்குங்கால், அச் செறி யிருளில் கிடந்த அரசக் குழவியைக் கண்ணுற்றான்.

### கந்துக்கடன் சீவகக் குழவியைக் காண்டல்

அருப்பிள முலையவர்க் கனங்க னாகிய
மருப்பிளம் பிறைநுதல் மதர்வை வெங்கதிர்
பரப்புபு கிடந்தெனக் கிடந்த நம்பியை
விருப்புள மிகுதியின் விரைவின் எய்தினன். ௮௨

### சீவகனது அடையாள மோதிரத்தை மறைத்துக்கொண்டு குழவியை எடுத்தல்

புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனைமலர்த் தாரினான் மறைத்து வண்கையால்
துனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினான் ;
சினைமறைந் தொருகுரல் சீவ என்றதே. ௮௩

---

௮௧. நாள் - நாண்மீன். ஊர்கோள் - ஊர்கின்ற (செல்கின்ற) மேகம். கந்து நாமன் - கந்துக்கடன். உம்மை, சிறப்பு. காளக வுடை - கருமையை இடத்தேயுடைய உடை. கனையிருள் - மிக்க இருள்.

திங்கள் நாண்மீன்களோடு நடப்பது விடுத்து, கோளொடு வந்து வீழ்ந்தது போலக் கந்துக்கடன் தோன்றினன் என்க.

௮௨. அருப்பு - அரும்பு. அனங்கன் - மன்மதன். மருப்பு - கோடு. மதர்வை - மயக்கம். வெங்கதிர் - இளஞாயிறு. பரப்புபு - கதிர் தன் கிரணங்களைப் பரப்பாநின்று. கிடந்ததெனை என்பது கிடந்தென என விகாரமாயிற்று. விருப்பு உளம் மிகுதியின் - விருப்பத்தோடு கூடிய உள்ளத்தின் மிகுதியினால். கண்ட மாத்திரத்தே விருப்பு உள்ளத்தே மிகுந்ததென்க.

௮௩. புனை கதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம் - அழகிய கதிர்களையுடைய உயர்ந்த மணி யிழைத்த பொன்னாற் செய்யப்பட்ட மோதிரம். வனை மலர் - கையால் ஒப்பனை செய்த மலர். தாரினான் - கந்துக்கடன். துனை கதிர் - இருளை நீக்குதற்கு விரைகின்ற கதிர். முகப்ப - எடுப்ப. "எல்லாப் புலன்களுக்கும் விருப்பம் சேறலின் முகப்ப என்றார்." தும்மினான் - "தும்முதல் நன்னிமித்தம்." சினை - ஒரு மரத்தின் கிளையிலே. சீவ - சீவிப்பாயாக. "தேவி அச்சத்தால் தன்னுள்ளே வாழ்த்துதலின் "ஒரு குரல்" என்றார்."

## விசயை மகனை வாழ்த்தல்

என்பெழுந் துருகுபு சோர ஈண்டிய
அன்பெழுந் தரசனுக் கவலித் தையனை
நுன்பழம் பகைதவ நூறு வாயென
இன்பழக் கிளவியின் இறைஞ்சி யேத்தினாள். ௮௪

## கந்துக்கடன் குழவியைத் தான் கொண்டேகுதல்

ஒழுக்கிய லருந்தவத் துடம்பு நீங்கினார்
அழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே
வழுக்கிய புதல்வனங் கொழிய மாமணி
விழுத்தகு மகனொடும் விரைவின் ஏகினான். ௮௫

## கந்துக்கடன் மகவிழந்து வருந்தும் தன் மனைவி சுநந்தைக்குக் குழந்தையைத் தந்து அவள் உளம் களிப்பித்தல்

பொருந்திய உலகினுள் புகழ்கள் கூடிய
அருந்ததி அகற்றிய ஆசில் கற்பினாய்!
திருந்திய நின்மகன் தீதின் நீங்கினான்;
வருந்தல்நீ, எம்மனை! வருக என்னவே. ௮௬

---

௮௪. என்பெழுந் துருகுபு சோர ஈண்டிய அன்பு - "எலும்புக் குள்ளே யெழுந்து உடலுருகி அவசமாக வளர்ந்த அன்பு." அரசனுக்கு அவலித்து - அரசனுக்கு மகன் முகங்காணும் நல்வினை யின்மை கண்டு வருந்தி. நுன் - திசைச்சொல். தவ - கெட; மிக என்றுமாம். நூறு வாய் - அழிப்பாய். இன் பழக் கிளவியின் - இனிய பழம் போலும் இனிய சொல்லால். அன்பு எழுந்ததனால், அவலித்து, நூறுவாயென ஏத்தினாள் என்க.

௮௫. ஒழுக்கியல் அருந்தவம் - ஒழுக்கத்தால் இயன்ற அழிக்க முடியாத தவம். அழிப்பரும் - அழியாத. பொன்னுடம்பு - நல்வினையாற் பெற்ற உடம்பு. வழுக்கிய புதல்வன் - இறந்த மகன். மாமணி விழுத்தகு மகன் - மாமணிபோல விழுத்தக்க (மேம்பட்ட) சீவகனாகிய மகன். தவ வுடம்பைக் கந்துக்கடன் மகனுக் குவமை கூறினார். அவனாலே சீவகனைப் பெறுதலின்.

௮௬. பொருந்திய - உலகினுள் பொருந்திய. புகழ்கள் கூடிய - புகழெல்லாம் கூடிய. அகற்றிய - கற்பால் நிகரில்லை யென விலக்கிய. ஆசில் - குற்றமில்லாத. திருந்திய - நல்வினை திருந்திய. தீதின் - சாக் காட்டினின்று. வருந்தல் - வருந்தற்க. எம்மனை - எம்மில்லாளே.

கள்ளலைத் திழிதரும் களிகொள் கோதைதன்
உள்ளலைத் தெழுதரும் உவகை யூர்தர
வள்ளலை வல்விரைந் தெய்த நம்பியை
வெள்ளிலை வேலினான் விரகின் நீட்டினான். ௮௭

கந்துக்கடன் தனக்குப் புதல்வன் பிறந்தனனென மங்கலம் முழங்க, பெருஞ் சிறப்புச் செய்ய, அரசனாகிய கட்டியங்காரன் கேட்டுத் தானும் அக் கந்துக்கடனுக்குப் பெரு நிதி நல்கிச் சிறப்பித்தான். கந்துக்கடன் மனையில் அக் குழந்தை வளர்ந்து வரலானான்.

## தெய்வம் தண்டாரணியத்துக்கு விசயையைக் கொண்டேகக் கருதி யுரைத்தல்

மகப் பிரிவாற்றாது தளரும் விசயைக்குத் தெய்வம் அக் குழந்தைக்கு எதிர்வில் நிகழவிருக்கும் சிறப்புக்களைக் கூறித் தேற்றித் தாம் செல்லவிருக்கும் நெறியின் இயல்பு கூறலுற்றது.

மணியறைந் தன்ன வரியறல் ஐம்பால்
பணிவரும் கற்பின் படைமலர்க் கண்ணாய்!
துணியிருட் போர்வையில் துன்னுபு போகி,
அணிமணற் பேர்யாற் றமரிகை சார்வாம்; ௮௮

௮௭. கள் அலைத்து இழிதரும் களிகொள் கோதை - தேன் இதழை யலைத்து இழிதற்குக் காரணமான களிப்பினைக் கொண்ட மாலையையுடைய சுநந்தை. உள் அலைத்து - உள்ளத்தே நிறைந்து அலைகொண்டு. ஊர்தர - மிக்கு வழிய. வள்ளலை - சீவகனாகிய குழவியை. வல் விரைந்து எய்த - சுநந்தை மிக விரைந்து வாங்கச் செல்ல. நம்பியை - சீவகனை. வெள்ளிலை வேல் - வெள்ளிய இலை வடிவிற்றான வேல். விரகு - தேவியிட்ட திலகத்தை மாற்றினது.

௮௮. மணிவரி அறல் அறைந்தன்ன ஐம்பால் - நீலமணியிலே வரி பொருந்திய கருமணலை அழுத்தினா லொத்த கூந்தல். பணிவரும் கற்பு - உலகெலாம் தனது ஏவலில் வருதற்குக் காரணமான கற்பு. படை மலர்க் கண் - வேற்படை போலும் மலரொத்த கண். துணியிருள் போர்வை - திரண்ட இருளாகிய போர்வைக்குள் மறைந்து. துன்னுபு - நெருங்கி. பகை நிலமாதலின் இருட் போர்வையில் மறைந்து செல்வாம் என்கின்றாள். அணிமணல் - அழகிய மணல். சார்வாம் - சார்ந்து அயர்ச்சி* தீரலாம்.

அமரிகைக் கோசனை ஐம்பது சென்றால்,
குமரிக் கொடிமதில் கோபுர மூதூர்
தமரிய லோம்பும் தரணி திலகம்
நமரது மற்றது நண்ணல மாகி. ௮௯

வண்டார் குவளைய வாவியும் பொய்கையும்
கண்டார் மனம்கவர் காவும் கஞலிய
தண்டா ரணியத்துத் தாபதப் பள்ளியொன்று
உண்டு ; ஆங் கதனுள் உறைகுவம் என்றாள். ௯௦

அவட்கு விசயை உடன்படவே, இருவரும் அமரிகை யாற்றில் தங்கி மறுநாள் புறப்பட்டுத் தண்டாரணியஞ் சென்று ஆங்கே இருந்த தவமகளிர் பள்ளியை எய்தினர்.

## தவமகளிர் விசயையைத் தவத்திற் படுத்தல்

வாளுறை நெடுங்க ணாளை மாதவ மகளி ரெல்லாம்
தோளுறப் புல்லு வார்போல் தொக்கெதிர் கொண்டு புக்குத்
தாளுறு வருத்த மோம்பித் தவநெறிப் படுக்க லுற்று
நாளுறத் திங்க ளூர நல்லணி நீக்கு கின்றார். ௯௧

---

௮௯. ஓசனை - யோசனை. வடசொற் சிதைவு. குமரிமதில் - பிறரால் பற்றப்படாத மதில். தமர் இயல் ஓம்பும் - உலகிற் கெல்லாம் தமராகும் இயல்பைக் கொண்டிருக்கும். நமரது - நம் தமர்க்கு உரியது. "தேவி நோற்றற்குத் தாபதப்பள்ளி வேண்டுதலாலும், அரசனை அமரில் நீத்து, புதல்வனைப் புறங்காட்டில் நீத்து, தமரிடத்துச் சேறல் ஆகாமையானும் 'நண்ணலமாகி' என்றாள்".

௯௦. குவளைய - குவளைகளையுடைய. வாவி - ஆற்றில் இருக்கும் ஓடை. பொய்கை - மக்களால் செய்யப்படாத இயற்கை நீர்நிலை. கா - சோலை. கஞலிய - நெருங்கிய. தண்டாரணியம் - தண்டகாரணியம். ஆங்கு - அதனுள் தாபதர் உறைகுவது போல.

௯௧. வாள் உறை நெடுங்கணாள் - வாளின் தன்மை முன்னே தங்கின நீண்ட கண்ணை யுடையளான விசயை; முன்னே தங்கின எனவே, இப்போது இல்லை யென்க; வினைத்தொகை இறந்த காலத்தில் வந்தது. உற - பொருந்த. புல்லுவார் போல் - தழுவுவார் போல. மாதவம் செய்வார்க்குப் புல்லுதல் ஆகாமையின் "புல்லுவார் போல்" என்றார். தாள் உறு வருத்தம் - நடந்து சென்ற அடிகளுக்கு உண்டான வருத்தம். தவ நெறிப் படுக்கலுற்று - மேல் தவத்தில் சேறற்குரிய நெறியாகிய நோன்பை உண்டாக்கி. தவம் ; கணவனை இழந்ததற்கும், புதல்வன் வாழ்தற்கும் பொருந்

## பூணொழித்துத் தவநெறி பூண்ட விசயையின் நிலை

பாலுடை யமிர்தம் பைம்பொன் கலத்திடைப் பாவை யன்ன
நூலடு நுசுப்பின் நல்லார் ஏந்தவும் நேர்ந்து நோக்காச்
சேலடு கண்ணி காந்தள் திருமணித் துடுப்பு முன்கை
வாலட கருளிச் செய்ய வனத்துறை தெய்வ மானாள். ௩௨

## தவநெறி நிற்புழியும், விசயை தன் மகன் நினைவு அறுநிருத்தல்

மெல்விரல் மெலியக் கொய்த குளநெல்லும் விளைந்த ஆம்பல்
அல்லியும் உணங்கும் முன்றில் அணில்விளித் திரிய ஆமான்
புல்லிய குழவித் திங்கள் பொழிகதிர்க் குப்பை போலும்
நல்லெழிற் கவரி ஊட்ட நம்பியை நினைக்கு மன்றே. ௩௩

கூனி வடிவில் நின்றொழுகிய தெய்வம் விசயையைத் தவமகளிர்பால் அடைக்கலமாக வைத்துத் தான் நீங்கிப் போகலுற்றது.

---

திய நோன்பு. நாள் உற - நல்ல நாள் வந்து பொருந்த. திங்கள் ஊர - நாடோறும் திங்கள் ஒரு கலை ஏறிவர. நீக்குகின்றார் - "தேவி நீக்குகின்ற வற்றை அவர் மேலேற்றினார், ஏவினரைக் கருத்தாவாக; 'அரசரெடுத்த தேவ குலம்' போல".

௩௨. பாலுடையமர்தம் - பால் கறந்த அடிசில். நூலடு நுசுப்பு - நூலை வென்ற நுண்ணிய இடை. நேர்ந்து ஏந்தவும் - உணவு மறுத்தா ளென வலிய எடுத்தேந்தவும். நோக்காத - ஏறிட்டுப் பார்க்காத. சேலடு கண்ணி - சேல் மீனை வென்ற கண்ணையுடையளா யிருந்த விசயை: காந்தள் துடுப்பு கை - காந்தட் பூப்போன்ற கை. காந்தள் மலர் துடுப் புப் போறலின், 'துடுப்பு' என்றார். முன் திருமணி கை - முன்பெல் லாம் திருமணி பூண்டிருந்த கை. வால் அடகு - தூய இலைக்கறி. அருளி - அருள. செய்ய - சிவந்த.

௩௩. ஆம்பல் அல்லி - ஆம்பலரிசி. உணங்கும் - உலரும். விளித் திரிய - கத்திக்கொண்டு நீங்கியோட. குழவி - கன்று. கதிர்க் குப்பை போலும் நல்லெழில் கவரி - கதிர்களின் திரட்சி போலும் நல்ல மயிரால் அழகுபெற்ற கவரிமான்.

கவரிமான் தன்னைப் புல்லிய (சேர்ந்த) ஆமான் கன்றுக்கு முலையூட் டும் என்க. அதுகண்டு விசயையும் சீவகன் பிறர் முலையுண்டு வளர்தலை நினைக்கின்றாள் என்பது. " 'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை (தொல். மரபு. சூ. 19) என்றதனுள் 'கொடை' யென்றதனால், ஆமான் குழ வியும் கொண்டவாறுணர்க" என்பர் நச்சினார்க்கினியர்.

## தெய்வம் விடை பெறுதல்

பெண்மைநாண் வனப்புச் சாயல் பெருமட மாது பேசின்
ஒண்மையின் ஒருங்கு கூடி உருவுகொண் டனைய நங்கை
நண்ணிய நுங்கட் கெல்லாம் அடைக்கலம் என்று நாடும்
கண்ணிய குலனும் தெய்வம் கரந்துரைத் தெழுந்த தன்றே.

## கூனிக்கு விசயை விடை யீதல்

உறுதி சூழ்ந்தவண் ஒடலின் ஆயிடை
மறுவில் வெண்குடை மன்னவன் காதலஞ்
சிறுவன் தன்மையைச் சேர்ந்தறிந் திவ்வழிக்
குறுக வம்மெனக் கூனியைப் போக்கினாள். ௬௫

கூனிவடிவிற் போந்த தெய்வம் இராசமாபுரத்தே வந்து அடைந்தது. அதன் வரவை நினைந்து விசயையும் தவப்பள்ளியில் இருந்து வருவாளாயினள்.

## கந்துக்கடன் குழந்தைக்குச் சீவகன் எனப் பெயரிடல்

கூற்றம் அஞ்சும் கொன்நுனை யெஃகின் இளையானும்
மாற்றம் அஞ்சும் மன்னிய கற்பின் மடவாளும்

---

௬௪. பெண்மை - அமைதித்தன்மை. நாணம் - இயல்புக்கும் தகுதிக்கும் ஒவ்வாத சொல்லும் செயலும் காணுமிடத்து உள்ளம் சுருங்குதல். வனப்பு - அழகு. சாயல் - மென்மை. மடம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. பேசின் - கூற நினைந்தோமாயின். ஒண்மையின் ஒருங்குகூடி உருவுகொண்டனைய நங்கை - விளக்கம் காரணமாகச் சேரக் கூடி ஒரு வடிவு கொண்டதுபோலும் நங்கை, எல்லாம் நண்ணிய நுங்கட்கு-நற்குணமெல்லாம் பொருந்திய நுங்கட்கு. கண்ணிய - கருதிய. கரந்து உரைத்து - மறைத்து வேறு பெயர் படக் கூறிவிட்டு,

௬௫. உறுதி சூழ்ந்து - விசயைக்கு உறுதியானவற்றை அத்தெய்வத்தின் உள்ளம் ஆராய்ந்து செய்து, அவண் ஒடலின் - இவ்விடத்தை விட்டுத் தான் உறையுமிடத்துக்குச் செல்லுதலால். ஆயிடை - இராசமாபுரத்தில். மறு - குற்றம். மன்னவன் - சச்சந்தன். தன்மையை - செய்தியை, குறுகவம்மென - சுருக்காக வருக என்று. சேடியை வம்மென்று உயர்த்துக் கூறினாள், தான் நிற்கின்ற தவநிலைக்கு அது தகுதியாகலின்,

௬௬. கொல் நுனை எஃகின் - எதிர்த்தாரைக் கொல்லுகின்ற நுனையையுடைய வேல்; வாளுமாம். இளையான் - கந்துக்கடன், மாற்றம் அஞ்சும் மன்னிய கற்பு - சொல்லப்புகின் சொல்லும் ஒன்று சொல்லற்கு

போற்றித் தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
சீற்றத் துப்பின் சீவகன் என்றே பெயரிட்டார். ௧௬

## சீவகன் வளர்ந்து வருதல்

மேகம் ஈன்ற மின்னனை யாள்தன் மிளிர்பைம்பூண்
ஆகம் ஈன்ற அம்முலை யின்பால் அமிர்தேந்தப்
போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல்
மாகம் ஈன்ற மாமதி யன்னான் வளர்கின்றான். ௧௭

## சீவகனுக்குக் கல்வி கற்பித்தல்

முழவெனத் திரண்ட திண்டோள் மூரிவெஞ் சிலையி னானும்
அழலெனக் கனலும் வாட்கண் அவ்வளைத் தோளி னாளும்
மழலையாழ் மருட்டுந் தீஞ்சொல் மதலையை மயிலஞ் சாயல்
குழைமுக ஞான மென்னும் குமரியைப் புணர்க்க லுற்றார். ௧௮

---

அஞ்சக்கூடிய நிலைபெற்ற கற்பு. மடவாள் - இளையாளாகிய சுநந்தை. போற்றித் தந்த - விரும்பி யழைத்துப் போந்த. புகழோன் - புகழை யுடையவன். சீற்றத் துப்பு-சீற்றமும் வலியும். சீவகன், சீவித்தலையுடையவன் என்று தெய்வம் வாழ்த்தினமையின், அதுவே பெயராயிற்று.

௧௭. மேகம் ஈன்ற மின் - மேகம் தான் பயந்த மின்னற்கொடி. ஆகம் - மார்பு. இன் பால் - இனிய பாலாகிய. போகம் ஈன்ற புண்ணியன் - தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் போகத்தை யுண்டாக்கின சிவபெருமான். "புண்ணியன் என்றார், திரிபுரத்தை யழித்தும் அலைகடல் நஞ்சுண்டும் பல்லுயிர்களையும் காத்தலின். எய்த கணை - எய்த அம்பாகிய திருமால்." கணை வளருமாறு வளர்கின்றானெனவே, அவன் ஆய்ப்பாடியிலே நந்தகோன் மனையிலே மறைய வளர்ந்தது உவமையாம். மாகம் - விசும்பு. மா மதி - அழகிய பிறைத்திங்கள்.

௧௮. முழவென - முழவுபோல. சிலை - வில். சிலையினான் - கந்துக்கடன். அழல் எனக் கனலும் வாட்கண் - அழல்போல நெருப்புக் கக்கும் வாளைப் போன்ற கண். அழலெனக் கனலும் - வாளுக்கு அடை. யாழ் மருட்டும் மழலைத் தீஞ்சொல்: மருட்டும் - ஒக்கும். மழலை - நிரம்பா மொழி. மதலை - சீவகன். மதலைபோல் குடியைத் தாங்குதலின் மகனை "மதலை" யென்றார். குழைமுக ஞானமென்னும் குமரி - "குழையப் பண்ணுகின்ற முகமுடைய ஞானமென்னும் குமரி, வேறு தன் கருத்தை யறிவாரின்றி இவனே தன் கருத்தறியத் தான் அழியாதிருத்தலின் குமரி யென்றார்."

அரும்பொனும் மணியும் முத்துங் காணமுங் குறுணி யாகப்
பரந்தெலாப் பிரப்பும் வைத்துப் பைம்பொன்செய் தவிசி னுச்சி
இருந்துபொன் ஓலை செம்பொன் ஊசியா லெழுதி யேற்பத்
திருந்துபொற் கண்ணி யாற்குச் செல்வியைச் செலுத்தி னாரே. ௯௯

## ஆசிரியனாகிய அச்சணந்தியென்பவன் சீவகற்கு அறமும் பிறப்பு வரலாறும் கூறல்

நூனெறி வகையி னோக்கி நுண்ணிதி னுழைந்து தீமைப்
பானெறி பலவும் நீக்கிப் பரிதியங் கடவு ளன்ன
கோனெறி தழுவி நின்ற குணத்தொடு புணரின் மாதோ
நானெறி வகையில் நின்ற நல்லுயிர்க் கமிர்தம் என்றான். ௧௦௦

அறிவினாற் பெரிய நீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி இன்ப நிறைகட லகத்து நின்றார்;
பொறியெனும் பெயர ஐவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலுள் நின்றார். ௧௦௧

இவ்வகையால் அறம்பலவும் பொதுவாய்க்கூறி, வீடு பேற்றுக்கு உரிய அறமும் இல்வாழ்வுக்குரிய அறமும் சிறப்புறச் சொல்லி, சீவகனைத் தனியிடத்தே கொண்டுசென்று,

---

௯௯. காணம் - பொற்காசு. குறுணியாக - குறுணியளவாக. பிரப்பு - பிரப்பரிசி. வைத்து - வைக்க. பரந்து - பரந்த; விகாரம். தவிசின் உச்சியிலிருந்து - ஆசிரியன் தவிசின்மேல் இருந்து. ஓலை - ஓலையிலே. பொன்னூசி - எழுத்தாணி. ஏற்ப - பொருந்தும்படி. செல்வியை - கல்வியாகிய நாமகளை.

௧௦௦. நூல்நெறி - ஆகமம் கூறிய வழி. வகை - நன்மை திமை. நுண்ணிதின் நுழைந்து - கூரிய பொருளிடத்தே நெஞ்சு சென்று. தீமைப் பால் நெறி - தீய வழி. பருதியங் கடவுள் - ஞாயிறு; நிறத்தாலும் இருள் நீக்கத்தாலும் உவமை. கோன் - அருகன். குணம் - நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம். நால்நெறி - நால்வகைக் கதி. நரகர், விலங்கு, மக்கள், தேவர்.

௧௦௧. நீரார் - தன்மையுடையவர். அருவினை கழிய நின்ற நெறி - தீவினை கழிய நின்ற நெறி; சன்மார்க்கம். இன்ப நிறைகடல் - அனந்த சுகம். பொறி...கன்றி நின்றார் - வேட்கையாகிய நஞ்சையுடைய உடம்பென்னும் பாம்பிடத்தில் பொறி யென்னும் பெயரையுடையவாகிய ஐந்து வாயிடத்தே களிப்பைச் செய்கின்ற விடயங்களிலே அடிப்பட்டு நின்றார். நின்றார் எனவே, அவர் துன்பத்திலிருந்து நீங்குதலின்மை பெற்றாம்,

ஆசிரியன் அவன் பிறப்பு வரலாறு கூறுகின்றான். நாட்டரசனாகிய சச்சந்தன் விசயைபால் ஆராக்காதலில் அழுந்தியதும், கட்டியங்காரன் எழுச்சியும், அரசன் வீழ்ச்சியும், விசயை சீவகனை ஈன்றதும், வணிகன் அச்சிறுவனைக் கொண்டு சென்று வளர்த்ததும் பிறவும் கூறப்பட்டன.

## சீவகன் அச் சிறுவன் யாவன் என் அறிய விழைதல்

கரியவன் கன்னற் கன்று
 பிறப்பினைத் தேற்றி யாங்கப்
பெரியவன் யாவன் ? என்ன
 நீஎனப் பேச லோடும்
சொரிமலர்த் தாரும் பூணும்
 ஆரமும் குழையும் சோரத்
திருமலர்க் கண்ணி சிந்தத்
 தெருமந்து மயங்கி வீழ்ந்தான். கொஉ

## மயங்கி வீழ்ந்த சீவகன், ஆசிரியன் தேற்றத் தேறல்

இனையைநீ யாய தெல்லாம் எம்மனோர் செய்த பாவம்;
நினையல்நீ ; நம்பி ! என்று நெடுங்கண்நீர் துடைத்து நீவிப்
புனையிழை மகளிர் போலப் புலம்பல்;நின் பகைவன் நின்றான்;
நினைவெலாம் நீங்கு கென்ன நெடுந்தகை தேறி னானே. கொ௩

தேறிய சீவகன் சினம் மிகுந்து கட்டியங்காரனை இன்னே சென்று பொருது அழிப்பேன் எனக் கிளர்ந்து நிற்க, அச்சணந்தி யாசிரியன் அவனை மெல்லத் தடுத்துவிட்டான்.

---

கொஉ. கரியவன் - கண்ணன். தேற்றியாங்கு - உணர்த்தியது போல. அப் பெரியவன் - அறிவாற் பெரிய அச் சிறுவன். என்ன - என்று சீவகன் வினவ. எனப் பேசலோடும் - என்று ஆசிரியன் கூறியவுடன் - இது உடனிகழ்ச்சி. சொரிமலர் - தேனைச் சொரியும் மலர். குழை - காதணி. சோர - வீழ. திரு - அழகு. கண்ணி - தலைமாலை. தெருமந்து - கலங்கி.

கொ௩. நீ இனையையாயது - நீ இத் தன்மையனாயது. எம்மனோர் - எம்போல்வார். செய்த பாவம் நீங்குவது காரணமாக ஆகும். நம்பி - விளி. இழைபுனை மகளிர்போல - இழையால் தம்மைப் புனைந்து கொள்ளும் மகளிரைப் போல. புலம்பல் நினையல் - புலம்புவதை இனி நினையாதே. நின் பகைவன் நின்றான் - நின் பகைவனான கட்டியங்காரன் கெடாது இன்னமும் உள்ளான். நீவி - உடம்பைத் தடவி. நெடுந்தகை -

### சீவகன் ஆசிரியன் ஆணை மேற்கொள்ளல்

“ வேண்டுவன், நம்பி, யானோர்
விழுப்பொருள் ” என்று சொல்ல,
“ ஆண்டகைக் குரவிர் ! கொண்மின்:
யாதுநீர் கருதிற் ” றென்ன,
“ யாண்டுநேர் எல்லை யாக
அவன்திறத் தழற்சி யின்மை
வேண்டுவல்” என்று சொன்னான் ;
வில்வலான் அதனை நேர்ந்தான். கoச

### அச்சணந்தி தன் பிறப்பு வரலாறு கூறல்

வெள்ளிவெற்பைச் சார்ந்த வாரணவாசி என்னும் பேரூரிலிருந்து அரசுபுரிந்த உலோகபாலன் என்னும் வேந்தன், தன் மகனுக்கு அரசு தந்து தான் தவவேடம் பூண்டு துறவறம் செய்யத் தலைப்பட்டான். சின்னாளில் அவனுக்குப் பாவம் வந்து சேர, அதன் பயனாக அவன் யானைத் தீ என்னும் நோய்வாய்ப் பட்டுச் சோறு வேண்டி நாடெங்கும் திரிந்து இவ்வூரை யடைந்தான்; (உடனே சீவகன், அப்பெரியவன் யாவன் ? என்று வினவ, ஆசிரியன், “ யானே ” என்றான். என்றலும் மகிழ்ச்சி மிக்க சீவகன், “ மேலே சொல்லுக” என்றான். அச்சணந்தி நகை மகிழ்ச்சி முகத்திற் கொண்டு சொல்லலுற்றான்.) அவ்வாறு போந்த யான் இக் கந்துக்கடன் பெருமனையை அடைகின்ற போது, அவன் உண்டற்கிருந்தான். என்னைக் கண்டதும், அவன் எனக்கும் பெருஞ்சோறு படைக்குமாறு பணித்தான். எனக்கும் இட்டனர்.

---

சீவகன், “ நீர் துடைத்து ” என்றது அரற்று என்னும் மெய்ப்பாடு. நினை வெலாம் என்றது அவலம்.

கoச. விழுப்பொருள் - இடும்பையைத் தருவதொரு காரியம். வேண்டுவல் - அல்லீற்றுத் தன்மைச் சொல் ; சந்தியால் னகரம் வந்தது. குரவீர் என வரற்குரியது. “ குரவிர் ” என இர் ஈறு கொண்டது ; “கேளிர் வாழியோ,” (குறுந். 280) என்றாற்போல. “ ஆண்டகைமை கூறிற்று, கொலையை விலக்குவரோ என்று கற்பித்த முகத்தான் ; அரசன் என்று உணர்ந்தான்.” அவன் திறத்து - கட்டியங்காரனது குலத்தின்பால். அழற்சி - வெளிப்படத் தோன்ற நிற்கும் வெகுளி. இன்மை - இல்லா.

### அச்சணந்தி கந்துக்கடன் மனையில் தான் அமுதுண்டது கூறல்

கைகவி நறுநெய் பெய்து
 கன்னலங் குடங்கள் கூட்டிப்
பெய்பெய்என் றுரைப்ப யானும்
 பெருங்கடல் வெள்ளிக் குன்றம்
பெய்துதூர்க் கின்ற வண்ணம்
 விலாப்புடைப் பெரிதும் வீங்க
ஐயன தருளி னால்யான்
 அந்தணர் தொழிலே னானேன். ௧௦௫

### தான் சீவகனைக் கண்டது கூறல்

நிலம்பொறுக் கலாத செம்பொன் நீள்நிதி நுந்தை யில்லம்
நலம்பொறுக் கலாத பிண்டி நான்முகன் தமர்கட் கெல்லாம்
உலம்பொறுக் கலாத தோளாய்! ஆதலா லூடு புக்கேன்,
கலம்பொறுக் கலாத சாய லவருழை நின்னைக் கண்டேன். ௧௦௬

### தான் யானைத் தீ நீங்கப்பெற்றது கூறல்

ஐயனைக் கண்ணிற் காண யானைத்தீ அதகம் கண்ட
பையணல் நாகம் போல வட்கயான் பெரிதும் உட்கித்

---

தான் போல ஒழுகுந் தன்மை. வில்வல்லான் - விற் போரில் வல்லுநனாகிய சீவகன். நேர்ந்தான் - நேர்தற்கரிய அதனை நேர்ந்து உடன்பட்டான்.

௧௦௫. கைகவி நெய்பெய்து - அமையும், இனியும் வேண்டா எனக் கையை விரித்துக் கவிக்கு மளவு நெய்யைச் சொரிந்து. கன்னல் - சருக்கரை ; கண்ட சர்க்கரை. தேவர் காலத்தே, பாகுபோல் இளகி மணல் போல் இருக்கும் குழைபாகு குடங்களில் வைத்திருக்கும் வழக்கு உண்டு என்க. என்று உரைப்ப - என்று கந்துக்கடன் கூற. வெள்ளி . . . வண்ணம் - வெள்ளிமலையை அள்ளி யெறிந்து கடலைத் தூர்க்கின்றது போல. விலாப்புடை - விலாப்பக்கம். வீங்க - பெருக்க. ஐயனது அருளினால் - ஐயனாகிய நின்னருளாலே. அந்தணர் - அறவோர். தொழிலேனானேன் - தொழிலையுடையவனாயினேன்,

௧௦௬. பொறுக்கலாத - சுமக்கமாட்டாத. நீள்நிதி - நீண்டதிரள். இல்லம் - பெரிய மனை. நலம் பொறுக்கலாத - தன் நலத்தையே தானே பொறுக்கமாட்டாத. "எல்லா மூர்த்தமும் இவனாதலின், 'நான்முகன்' என்றார் ; 'ஆதி வேதம் பயந்தோய் நீ' (சீவக. 1242) 'மலரேந்து சேவடிய மாலென்ப' (1610) என்ப மேலும்." தமர் - துறந்தவர். உலம் - தூண். ஊடு - உள்ளே. கலம் - அணிகலம். சாயலவர் - சாயலையுடைய

தெய்வம்கொல் என்று தேர்வேற் கமிர்துலாய் நிமிர்ந்த தேபோல்
மொய்குரல் முரசம் நாளும் தழுங்குரல் முழங்கக் கேட்டேன். ௧௦௭

கோளியங் குழுவை யன்ன கொடுஞ்சிலை யுழவன் கேட்டே,
"தாளியல் தவங்கள் தாயாத் தந்தைநீ யாகி என்னை
வாளியங் குருவப் பூணோய்! படைத்தனை, வாழி" என்ன,
"மீளியங் களிற னாய்! யான் மெய்ந்நெறி நிற்பல்" என்றான்.

## சீவகன் விடையளித்தல்

மறுவற மனையின் நீங்கி மாதவம் செய்வல் என்றால்
பிறவறம் அல்ல பேசார் பேர்றி வுடைய நீரார்;
துறவறம் புணர்க என்றே தோன்றல்தாள் தொழுது நின்றான்;
நறவற மலர்ந்த கண்ணி நன்மணி வண்ணன் அன்னான். ௧௦௯

அச்சணந்தி பின் கந்துக்கடனுக்கும் அவன் மனைவி சுநந்தைக்கும் சீவகனது கல்வியும் தீக்கையும் சொல்லித், தான் துறவு மேற்கொண்டதையும் உரைத்து விடை வேண்டினன்.

---

மகளிர். உழை - ஏழாம் வேற்றுமைப் பொருள்பட வந்த இடைச்சொல்.

௧௦௭. ஐயனை - ஐயனாகிய நின்னை. காண - கண்டேனாக. அதகம் - மருந்து. பையணல் நாகம் - படத்தை யுயர்த்தும் பாம்பினது நஞ்சு. நாகம், ஆகுபெயர். வட்க - முற்றவும் கெடுதலால். உட்கி - அஞ்சி. தேர்வேற்கு - மனத்தின்கண்ணே ஆராயும் எனக்கு, அமிர்து நிமிர்ந்த போல் உலாய் என இயையும். உலாய் - உலாவப்பட்டு. மொய் குரல் முரசம் — நெருங்கிய குரலையுடைய முரசு. தழங்கு குரல் - ஒலிக்கின்ற குரலோசை. தழங்கு குரல், தழங் குரல என விகாரம்.

௧௦௮. கோள் இயங்கு உழுவை - கொலைத் தொழிலிலே நடக்கின்ற புலி. சிலை யுழவன் - வில்வல்லுநனாகிய சீவகன், தாள் இயல் தவங்கள் - முயற்சியால் பிறந்த தவங்கள். நீ தந்தையாகி என மாறுக. வாள் - ஒளி. படைத்தனை - "நல்வினையால் இக் கலைகளைக் கற்றுத் தான் வேறொரு பிறப்பானமை கூறினான்," என்ன - என்று சீவகன் கூற. மீளி - வலிமை. மெய்ந்நெறி - தவநெறி.

௧௦௯. மறு - குற்றம். நீங்கி - நீங்கிச் சென்று. அறமல்ல பிற - அறமல்லனவாகிய பிறவற்றை; செலவு விலக்கும் சொற்களை. துறவறம் புணர்க - துறவறத்தைக் கூடுக. தோன்றல் - சீவகன், நறவு அற மலர்ந்த கண்ணி - நறுமணம் அறவே தன்னிடத்துக் கொண்ட கண்ணி.

## சுநந்தை விடையளித்தல்

அழலுறு வெண்ணெய் போல
அகம்குழைந்து உருகி யாற்றாள்
குழலுறு கிளவி சோர்ந்து,
"குமரனைத் தமிய னாக
நிழலுறு மதியம் அன்னாய்!
நீத்தியோ?" எனவும் நில்லான்,
பழவினை பரிய நோற்பான்
விஞ்சையர் வேந்தன் சென்றான். ககo

ககo. குழலுறு கிளவி - குழல் போலும் இனிய சொற்களைப் பேசும் சுநந்தை. தமியனாக - தனிமைப்படும்படி. நிழலுறு மதியம் - குளிர்ந்த ஒளி முழுதுமுடைய திங்கள்; கலை முழுதும் நிரம்பிய முழுத் திங்கள். தன் மகனுக்குக் கற்பித்த கலைத்தொகை கண்டும் கேட்டுமுள்ளாளாதலின், ஆசிரியனை இவ்வாறு கூறினாள். நீத்தியோ - நீங்கிச் செல்கின்றாய் போலும். நில்லான் - அச்சணந்தி யாசிரியன் நில்லானாகி. பரிய - கெடும்படி. நோற்பான் - தவம் செய்ய வேண்டி. விஞ்சையர் வேந்தன் - அச்சணந்தி யாசிரியன்.

# உ. கோவிந்தையா ரிலம்பகம்

[கோவிந்தையார் இலம்பகம்: இது சீவகன் தோழர்களில் ஒருவனுன பதுமுகன் என்பான் கோவிந்தை என்னும் ஆயர் மகளை மணந்துகொண்டதைக் கூறும் இலம்பகம்.]

இதன்கண்; இராசமாபுரத்துக்கு அருகிருந்த குன்று களில் வாழ்ந்த வேட்டுவர், நகரத்து ஆயருடைய ஆனிரை களைக் கவர்ந்தேகியதும், ஆயர் முறையீடு கேட்டுக் கட்டியங் காரன் தன் வீரரை விடுப்ப அவர் நிரைமீட்க ஆற்ருது புறமிட்டோடியதும், பின்பு நிரைமீட்டானுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுப்பதாக நந்தகோன் வெளி யிடுவதும், சீவகனும் தோழரும் சென்று வேடர்க்குச் சிறிதும் தீங்கு நிகழாத வகையில் வென்று நிரை மீட்டதும், பதுமுகனுக்கு அந்த நந்தகோன் தன் மகள் கோவிந்தையைத் திருமணம் செய்விப்பதும், பிறவும் உரைக்கப்படுகின்றன.

### அச்சணந்தி யாசிரியன் தேவனுதல்

ஆர்வ வேர்அரிந் தச்ச ணந்திபோய்
வீரன் தாள்நிழல் விளங்க நோற்றபின்
மாரி மொக்குளின் மாய்ந்து விண்தொழச்
சோர்வில் கொள்கையான் தோற்றம் நீங்கினன். கககக

### இப்பால் சீவகன் கலைநலம் பலவும் கொண்டு விளங்குதல்

கலையின தகலமும் காட்சிக் கின்பமும்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்

---

கககக. ஆர்வவேர் - ஆசை யென்கிற பிறவி வேர். அரிந்து - நீக்கி. வீரன் - ஸ்ரீவர்த்தமான சுவாமிகள். தாள் நிழல் - சமவசரவணம். மாரி மொக்குளின் - மாரிக் காலத்தே மழை பெய்யுங்கால் நீரில் உண்டாகும் குமிழிபோல; வீடு பெறுங்கால் திருமேனியுடனே மறைவதற்கு மொக் குள் மறைதல். மாய்ந்து - மறைந்து. சோர்வில் கொள்கையான் - வழு வுதல் இல்லாத நோன்புடையவன். தோற்றம் - பிறவி.

மலையினின் அகலிய மார்ப னல்லதுஇவ்
வுலகினில் இலையென ஒருவ னுயினுன். கக௨

இராசமாபுரத்துக்குப் புறம்பே யிருந்த குன்றுகளில் உறையும் வேடர், இந்நகர்த்து ஆயர்களின் ஆனிரைகளைக் கவர்வது குறித்து ஒருங்குகூடிச் சூழ்வாராயினர்.

## ஒருவன் புள் நிமித்தம் கண்டு கூறல்

"அடைதும் நாம்நிரை ; அடைந்த காலையே
குடையும் பிச்சமும் ஒழியக் கோன்படை
உடையும் ; பின்னரே ஒருவன் தேரினுல்
உடைதும், சுடுவில்தேன் உடைந்த வண்ணமே." ககங

## வேடர் கூறல்

என்று கூறலும், "ஏழை வேட்டுவீர் !
ஒன்று தேரினுல் ஒருவன் கூற்றமே
என்று கூறினும், ஒருவன் என்செய்யும் ?
இன்று கோடும்நாம்? எழுக "என் றேகினுர். ககச

---

கக௨. கலையினது அகலம் - கல்வி காரணமாகப் பிறக்கும் ஞானம், காட்சிக்கு இன்பம் - அப்பருவத்தில் பிறக்கும் அழகு. சிலையினது அகலம் - படைக்கலம் பயின்றதனுல் அப்போது பிறக்கும் வீரம். வீணை - தாளத்தோடு கண்டத்திலும் கருவியிலும் பிறக்கும் பாட்டு. இசை நாடகம் காமத்தை விளைத்தலின், அவற்ருல் பிறக்கும் காமத்தை "வீணைச் செல்வம்" என்ருர். மலையினின் - மலைபோல. அகலிய - விரிந்த. இலை - இந்நான்கிற்கும் உறைவிடம் வேறே இல்லை. என - என்னும்படி.

இதனுல் சீவகனுக்குப் பதினைந்தாண்டு சென்றபின் நல்வினையால் பிறக்கின்ற குணங்களைக் கூறுகின்ருர்.

ககங. நாம் நிரை அடைதும் - நாம் ஆனிரையை அடித்துக் கவர்ந்துகொள்வோம். அடைந்த காலை, கோன் படை வந்து பொருது, குடையும் பிச்சமும் ஒழிய உடையும் என இயைக்க. கோன் - அரசன். குடை - கொற்றக்குடை. பிச்சம் - பீலியால் கட்டுவது. உடையும் - தோற்ருேடும். உடைதும் - தோல்வியடைவோம். சுடுவில் - சுடுதலால் ; நெருப்பு மூட்டிப் புகையெழுப்புதலால். தேன் உடைதல் - தேனையீட்டியிருந்த ஈக்கள் தேனடையை விட்டு நீங்குவது. வண்ணம் - போல. சுடு - முதனிலைத் தொழிற்பெயர். தேனினம்போலக் கெடுவோம் எனவே வேடுவராகிய தமக்குப் பாடின்மை கூறினுன்.

ககச. ஏழை வேட்டுவீர் - இகழ்ச்சிக் குறிப்பு. ஒன்று தேர் - ஒற்றைத் தேர். ஒருவன் கூற்றமே என்று கூறினும் - ஒருவனை எமன்

## இராசமாபுரத்து ஆயர் கூட்டத்து, நிமித்தம் நிகழ்தல்

பூத்த கோங்குபோல் பொன்சு மந்துளார்
ஆய்த்தி யர்நலக்கு ஆசெல் தூணனான் ;
கோத்த நித்திலக் கோதை மார்பினான்,
வாய்த்த அந்நிரை வள்ளு வன்சொனான் ; ககரு

## நிமித்தம் கூறல்

" பிள்ளை யுள்புகுந் தழித்த தாதலால்
எள்ளன் மின்நிரை இன்று நீர் " என,
வெள்ளி வள்ளியின் விளங்கு தோள்நலார்
முள்கும் ஆயரும் மொய்ம்பொடு ஏகினார். ககசு

## நிரையொடு சென்ற ஆயர் வேடர்க்கு ஆற்றாது நிரையிழந்து பின்னிடல்

காய மீன்எனக் கலந்து கான்நிரை
மேய வெந்தொழில் வேடர் ஆர்த்துடன்
பாய மாரிபோல் பகழி சிந்தினார்,
ஆயர் மத்தெறி தயிரி னாயினார். ககஎ

---

என்றே உலகத்தார் கூறுவதாயிருப்பினும், கோடும் - ஆனிரையைக் கொள்வோம்.

ககரு. பூத்தகோங்கு - பூக்களை நிரம்பப் பூத்திருக்கும் கோங்குமரம். பொன் - பொன்னாலாகிய பணிகள். நலக்கு - நலம் நுகர்தற்கு. ஆ செல் தூண் - ஆ தீண்டு குற்றி ; ஆனினம் தினவு தேய்த்துக் கோடற்காக நாட்டப்படும் தூண். நித்திலம் - முத்து. கோதை - பூமாலை. நித்திலமார்பன், கோதைமார்பன் என இயையும். இவன் - நந்தகோன். வாய்த்த - தப்பாத.

ககசு. பிள்ளை - காரியென்னும் பறவை. அழித்தது - தீங்குண்டெனத் தெரிவித்து மனவமைதியைக் கெடுத்தது. எள்ளன்மின் - மிக்க விழிப்புடனேயிருந்து காப்பீராக. வெள்ளி வள்ளி - வெள்ளியாற் செய்த வளைகள். நல்லார் - மகளிர். முள்கும் ஆயர் - கூடும் புதுமணவாளப் பிள்ளைகள்.

ககஎ. காயமீன் - ஆகாயத்திலுள்ள மீன்கள். கான் - காட்டில். இரைமேய - இரையை ஆனிரைகள் மேய்ந்துகொண்டிருக்கவே. வெந்தொழில் வேடர் - வெவ்விய கொலைத் தொழிலையுடைய வேடர். பாய மாரி - பரந்த மழைத்தாரை. பகழி - அம்பு. மத்து எறி தயிரின் - மத்தாற் கடையப்பட்ட தயிர்போல. ஆயினார் - சிதறியோடினர்.

### தாயிழந்தலறும் கன்றினங்களைக் கண்டு ஆயர் மகளிர் அழுது அரற்றுதல்

எம்மனை மார்! இனி எங்ஙனம் வாழ்குவிர்?
நும்மனை மார்களை நோவவ துக்கி,
வெம்முனை வேட்டுவர் உய்த்தனர் எனத்
தம்மனைக் கன்றொடு தாம்புலம் புற்றார். ககஅ

### அரசனுக்கு நிரையிழந்தமை தெரிவித்துவரும் ஆயர் நகரவர்க்கும் தெரிவித்தல்

கொடுமர எயினர் ஈண்டிக் கோட்டிமில் ஏறு சூழ்ந்த
படுமணி நிரையை வாரிப் பைந்துகில் அருவி நெற்றி
நெடுமலை அத்தஞ் சென்றார் என்றுநெய் பொதிந்த பித்தை
வடிமலர் ஆயர் பூசல் வளநகர் பரப்பி னாரே. கககூ

### ஆயர் முறையிடு கேட்ட கட்டியங்காரன் நிரைமீட்க எனத் தன் வீரர்களை ஏவுதல்

கூற்றின் இடிக்கும் கொலைவேலவன், கோவலர்வாய்
மாற்றம் உணர்ந்து, மறங்கூர்கடல் தானைநோக்கி
காற்றின் விரைந்து தொறுமீட்கெனக் காவல்மன்னன்
ஏற்றை யரிமான் இடிபோல இயம்பினானே. கஉ0

---

ககஅ. எம் அனைமார் - எம் அன்னைமாரே. (கன்றுகளை விளித்துக் கூறுதல்.) நும் அனைமார் - நும்முடைய தாய்மாரை. நோவ அதுக்கி - நோவும்படி அடித்துக்கொண்டு. வெம்முனை வேட்டுவர் - வெவ்விய போரைச் செய்யும் வேடர். உய்த்தனர் - கொண்டுய்த்துச் சென்றனர். மனைக்கன்று - மனையிடத்தேயுள்ள ஆன்கன்று. உவப்பின்கண் அஃறிணையை உயர்திணையாற் கூறினார்.

கககூ. கொடுமரம் - வில். எயினர் - வேடர். கோட்டு இமில் ஏறு - கொம்பும் கொண்டையுமுடைய ஆனேறு. படுமணி நிரை - ஒலிக்கின்ற மணிகட்டிய ஆனிரையை. வாரி - சேரக் கொண்டு. பைந்துகில் அருவி நெற்றி - பசிய துகில் போன்ற அருவி யிழியும் உச்சியையுடைய. அத்தம் - சுரத்துவழி. பித்தை - தலைமயிர். வடிமலர் - அழகிய பூ. பூசல் - ஆனிரை யிழந்த பூசல்.

கஉ0. இடிக்கும் - வெருளும், மாற்றம் - நிரையிழந்த செய்தி. மறம்கூர் கடல் தானை - வீரம் மிகுந்த கடல் போன்ற தானை. காற்றின் - காற்றினும் கடுக. தொறு - ஆனிரை. காவல் மன்னன் - கட்டியங்காரன். ஏற்றையரிமான் - சிங்கவேறு. இடி - முழக்கம்.

## இராசமாபுரத்து ஆயர் கூட்டத்து, நிமித்தம் நிகழ்தல்

பூத்த கோங்குபோல் பொன்சு மந்துளார்
ஆய்த்தி யர்நலக்கு ஆசெல் தூணனான் ;
கோத்த நித்திலக் கோதை மார்பினான்,
வாய்த்த அந்நிரை வள்ளு வன்சொனான் ; ௧௧௫

## நிமித்தம் கூறல்

"பிள்ளை யுள்புகுந் தழித்த தாதலால்
எள்ளன் மின்நிரை இன்று நீர்"என,
வெள்ளி வள்ளியின் விளங்கு தோள்நலார்
முள்கும் ஆயரும் மொய்ம்பொடு ஏகினார். ௧௧௬

## நிரையொடு சென்ற ஆயர் வேடர்க்கு ஆற்றாது நிரையிழந்து பின்னிடல்

காய மீன்எனக் கலந்து கான்நிரை
மேய வெந்தொழில் வேடர் ஆர்த்துடன்
பாய மாரிபோல் பகழி சிந்தினார்,
ஆயர் மத்தெறி தயிரி னாயினார். ௧௧௭

---

என்றே உலகத்தார் கூறுவதாயிருப்பினும், கோடும் - ஆனிரையைக் கொள்வோம்.

௧௧௫. பூத்தகோங்கு - பூக்களை நிரம்பப் பூத்திருக்கும் கோங்குமரம். பொன் - பொன்னாலாகிய பணிகள். நலக்கு - நலம் நுகர்தற்கு. ஆசெல் தூண் - ஆ தீண்டு குற்றி ; ஆனினம் தினவு தேய்த்துக் கோடற்காக நாட்டப்படும் தூண். நித்திலம் - முத்து. கோதை - பூமாலை. நித்திலமார்பன், கோதைமார்பன் என இயையும். இவன் - நந்தகோன். வாய்த்த - தப்பாத.

௧௧௬. பிள்ளை - காரியென்னும் பறவை. அழித்தது - தீங்குண்டெனத் தெரிவித்து மனவமைதியைக் கெடுத்தது. எள்ளன்மின் - மிக்க விழிப்புடனேயிருந்து காப்பீராக. வெள்ளி வள்ளி - வெள்ளியாற் செய்த வளைகள். நல்லார் - மகளிர். முள்கும் ஆயர் - கூடும் புதுமணவாளப் பிள்ளைகள்.

௧௧௭. காயமீன் - ஆகாயத்திலுள்ள மீன்கள். கான் - காட்டில். இரைமேய - இரையை ஆனிரைகள் மேய்ந்துகொண்டிருக்கவே. வெந்தொழில் வேடர் - வெவ்விய கொலைத் தொழிலையுடைய வேடர். பாய மாரி - பரந்த மழைத்தாரை. பகழி - அம்பு. மத்து எறி தயிரின் - மத்தால் கடையப்பட்ட தயிர்போல. ஆயினார் - சிதறியோடினர்.

சீவகன் சென்ற தேர் முழக்கமும், துகட்படலமும் மிகுந்து வேடர் கூட்டத்தைத் திகைப்பிக்கவே, அவர்கள் வேறொரு புறத்தே கூடி அம்புகளை மழைபோல எய்தனர்; அவற்றையெல்லாம் விலக்கி, அவர்களுள் ஒருவர்க்கும் உயிரிறுதி எய்தாவகையில் சமர் செய்து சீவகன் வெருட்டவே, அவர்கள் ஆனிரைகளைக் கைவிட்டு நீங்கினர்.

### வேடர் சிதறி யோடுதல்

ஐந்நூறு நூறு தலையிட்ட ஆறு யிரவர்
மெய்ந்நூறு நூறு நுதிவெங்கணை தூவி வேடர்
கைந்நூறு வில்லும் கணையும் மறுத்தான்; கணத்தின்
மைந்நூறு வேற்கண் மடவார்மனம் போல மாய்ந்தார். கஉசு

### சீவகனது வெற்றி கேட்ட கட்டியங்காரன் உள்ளத்தே பகைமை கொள்ளுதல்

ஆளற்ற மின்றி யலர்தாரவன் தோமரோடும்
கோளுற்ற கோவன் நிரைமீட்டனன் என்று கூற,
வாளுற்ற புண்ணுள் வடிவேலெறிந் திட்ட தேபோல்
நாளுற் றுலந்தான் வெகுண்டான்; நகர் ஆர்த்த தன்றே. கஉஎ

---

கஉசு. ஐந்நூறு நூறு தலையிட்ட ஆறுயிரவர் - ஐம்பத்தாறுயிரம் பேர். மெய் நூறு நூறும் - நூறு பேர் மெய்யை ஒரு தொடுப்பில் அழிக்கும். நுதி - கூர்மை. கணை - அம்பு. தூவி - அவ்வாறு நூறுதபடி எய்து; மிகச் சொரிந்து. கை நூறு வில்லும் - கையிடத்தே யிருந்து பிறரை யழிக்கும் வில்லும். அறுத்தான் - அற்றுவிழச் செய்தான். மைந் நூறு வேற்கண் - மை திட்டிய வேல் போன்ற கண்; மையாகிய நூறு. (நூறு - பொடி.) "மனம்போல" என்றார், நிலை நில்லாது கெடுதலின். மாய்ந்தார் - ஓடி. யொளித்தனர்.

"தம் உயிர்க்கு ஊறு செய்யாது, அம்பு எய்தமை கண்டு கீழே போட்டுவிடுதலின், தூவுதலால் அறுத்தான்" என்றார்.

கஉஎ. அற்றமின்றி - உயிரிழத்தலின்றி. தோமர்க்குப் போர் இல்லையாயினும் கூட நின்றதனால் "தோமரோடும்" என்றார். கோள் உற்ற - வேடரால் கொள்ளப்பட்ட. கோவன் - ஆயனாகிய நந்தகோன். வாளுற்ற புண் - வாளால் உண்டான புண். வடிவேல் - வடித்த வேல்; வடிவேல் கூறியது ஆழமாகப் பாயும் என்றற்கு. தான் தோற்றதன்மேல் சீவகன் வெற்றி நிலைநின்றது, கட்டியங்காரனுக்குப் புண்ணுள் வடிவே லெறிந்திட்டதுபோல் ஆயிற்று. நாளுற்றுலந்தான் - கட்டியங்காரன். சீவகன் அரசவுரிமை எய்தும் நாள்வந்துறுதலால், அவனை அவ்வாறு கூறினார். வெகுண்டது - கேட்டிற்கு அறிகுறி.

### வெற்றித் திருவுடன் மீளும் சீவகனைக் கண்ட நகரமகளிர் பேசிக்கொள்ளுதல்

கொடையுளும் ஒருவன் ; கொல்லும் கூற்றினும்
கொடிய வாட்போர்ப்
படையுளும் ஒருவன் என்று பயங்கெழு
பனுவல் நுண்ணூல்
நடையுளார் சொல்லிற் றெல்லாம் நம்பிசீ
வகன்கட் கண்டாம் ;
தொடையலங் கோதை யென்று சொல்லுபு
தொழுது நிற்பார். ௧௨௮

விண்ணகத் துளர்கொல் மற்றிவ் வென்றிவேற் குருசில் ஒப்பார்;
மண்ணகத் திவர்கள் ஒவ்வார்; மழகளி றனைய தோன்றல்,
பண்ணகத் துறையும் சொல்லார் நன்னலம் பருக வேண்டி
அண்ணலைத் தவத்தின் தந்தார் யார்கொலோ அளியர் என்பார்.

### சீவகனைக் கந்துக்கடனும் சுநந்தையும் வரவேற்றல்

தாயுயர் மிக்க தந்தை வந்தெதிர் கொண்டு புக்குக்
காய்கதிர் மணிசெய் வெள்வேல் காளையைக் காவ லோம்பி

---

௧௨௮. கூற்றினும் - கூறுபாட்டினும் ; எமனிலும் என்றுமாம். படையுள் - படுக்கும் வீரருள். பயம்கெழு - பயன் பொருந்திய. பனுவல் - ஆராய்ச்சி. நடை - ஒழுக்கம். ஒன்றல்லனவெல்லாம் பலவாதல்பற்றி "எல்லாம்" என்றார். தொடையலங்கோதை - கட்டுதலையுடைய அழகிய மாலையுடையாய் ; மகடூஉ முன்னிலை : நூலார் கூற்று.

கொடையிலும் ஒருவனே கொடுப்பன் ; படையிலும் ஒருவனே கெடுப்பன் ; இவ்விரண்டும் ஒருவனிடத்தே நில்லா ; ஆயினும் இவையிரண்டும் சீவகனிடத்தே கண்டேம் என்று சொல்லித் தொழுது நிற்பாராயினர். உம்மை, சிறப்பு.

௧௨௯. குருசில் - தோன்றலாகிய சீவகன். விண்ணகம் - தேவருலகம். மற்று, வினைமாற்று. இவர்கள் - மக்களாய்ப் பிறந்தார். மழகளிறு - இளைய களிறு. பண்ணகத் துறையும் சொல்லார் - பண்போல இனிய சொற்களைச் சொல்லும் மகளிர். நன்னலம் - இவனது பெறுதற்கரிய நலம். தவத்தின் - தவத்தால். யார் கொலோ அளியர் - அவர் யாவராயினும் அளிக்கத் தக்காராவர்.

ஆய்கதிர் உமிழும் பைம்பூண் ஆயிரச் செங்க ணான்தன்
சேயுயர் உலக மெய்தி யன்னதோர் செல்வ முற்றார். ௧௩௦

**நந்தகோன் போந்து சீவகற்குச் சச்சந்தன் வரலாறு கூறித் தன் வரலாறு கூறுதல்**

கோலிழுக் குற்ற ஞான்றே
கொடுமுடி வரையொன் றேறிக்
காலிழுக் குற்று வீழ்ந்தே
கருந்தலை களைய லுற்றேன் ;
மால்வழி யுளதன் றாயின்
வாழ்வினை முடிப்பல் என்றே
ஆலம்வித் தனைய தெண்ணி
அழிவினுள் அகன்று நின்றேன். ௧௩௧

குலத்தொடு முடிந்த கோன்தன் குடிவழி வாரா நின்றேன்
நலத்தகு தொறுவி னுள்ளேன் ; நாமம்கோ விந்த னென்பேன் ;
இலக்கண மமைந்த கோதா வரியென இசையிற் போந்த
நலத்தகு மனைவி பெற்ற நங்கைகோ விந்தை யென்பாள். ௧௩௨

---

௧௩௦. உயர் மிக்க தந்தை - பிள்ளையுயர்ச்சி மிகுதற்குக் காரணமான தந்தை ; - கந்துக்கடன். காய் - விளங்குகின்ற. காவல் ஓம்பி - ஆலத்தி முதலியவற்றால் கண்ணேறு கழித்து. ஆய்கதிர் - இனிய ஒளி. ஆயிரச் செங்கணான் - இந்திரன். சேய் உயர் உலகம் - மிக்க சேய்மையிலுள்ள துறக்கம். எய்தியன்னது - அடைந்தாற் போல்வது. ஓர் - சிறந்த.

௧௩௧. கோல் இழுக்குற்ற ஞான்றே - செங்கோல் வேந்தனை சச்சந்தன் இறந்த அன்றே. கொடுமுடி - நெடிய உச்சி. கால் இழுக்குற்று வீழ்ந்து - கால் சரிந்து வீழ்ந்தேனென்று பிறர் கூறுமாறு தலைகீழாக வீழ்ந்து. கருந்தலை - பெரியதலை ; அரசனோடு இறவாமையால் பயனில்லாத என் தலையை. களையலுற்றேன் - போக்கிக் கொள்ளலுற்ற யான். மால்வழி - அரசற்கு வழித் தோன்றல். உளதன்றாயின் - இருப்பது இன்றாகுமாயின் ; "தேவிக்குப் பிள்ளையுண்மை யறிவானாகலின் இது கூறினான்." முடிப்பல் - அழிப்பேன். ஆலம் வித்தனையது - ஆலம் விதை போல்வதொரு சிறு நினைவு. அழிவினுள் அகன்று - உயிர் விடுதலிலிருந்து விலகி.

௧௩௨. நலத்தகு தொறுவின் - நலம்பொருந்திய இடையரிடையே. இலக்கணம் - பெண்மைக்குரிய இலக்கணங்கள். இசையிற் போந்த - கற்பால் எய்தும் புகழ் பரவிய. நலத்தகு நங்கை - நலத்துக்குத் தக்க நங்கை.

குலம் தோன்றுத லருமை பற்றிப் பின்னும் "முடிந்த" என்றான். தன் குலமெல்லாம் தானாய் நிற்றலின், வாராநின்றேன் என்றான்.

### நந்தகோன் தன் மகள் நலம்கூறிச் சீவகனை மணம் செய்துகொள்ளுமாறு வேண்டல்

வெண்ணெய்போன் றூறினியள், மேம்பால்போல் தீஞ்சொல்லள் ;
உண்ண உருக்கிய ஆனெய்போல் மேனியள் ;
வண்ண வனமுலை மாதர் மடநோக்கி ;
கண்ணும் கருவிளம்போ திரண்டே கண்டாய். ௧௩௩

சேதா நறுநெய்யும் தீம்பால் சுமைத்தயிரும்
பாதால மெல்லாம் நிறைத்திடுவல், பைந்தாரோய் !
போதார் புனைகோதை சூட்டுஉன் அடித்தியை ;
யாதாவ தெல்லாம் அறிந்தருளி என்றான். ௧௩௪

குலம்நினையல் நம்பி, கொழுங்கயற்கண் வள்ளி
நலன்நுகர்ந்தா னன்றே நறுந்தார் முருகன் ;
நிலமகட்குக் கேள்வனும் நீள்நிரை நப்பின்னை
இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினா னன்றே. ௧௩௫

### கோவிந்தை பதுமுகனுக்குத் தக்கவள் எனத் தன் மனத்தில் எண்ணிய சீவகன் நந்தகோனிடம் இரட்டுறமொழிந்து மணவினைக்கு இசைவு கூறிவிடல்

கோட்டிளங் களிறு போல்வான்
நந்தகோன் முகத்தை நோக்கி,
மோட்டிள முலையி னாள்நின்
மடமகள் எனக்கு, மாமான் !

---

௧௩௩. ஊறு இனியள் - பரிசத்தால் இனியவள். மேம் பால் - உண்டற்கு மேவும் இனிய பால். உண்ண - சிவக்கக் காய்ச்சிய. வண்ணம் - அழகு. கருவிளம் போது - கருவிளம் பூக்களை நிகர்க்கும்.

௧௩௪. சேதா - செம்மையான ஆ. சுமைத் தயிர் - ஆடைத் தயிர். பாதாலமெல்லாம் - பாதாளமட்டும். போது - பூ. கோதை சூட்டு - மண மாலையைச் சூட்டுக. அடித்தி - அடியாள். யாது ஆவது - இதனால் வரும் குறை என்னை ?

௧௩௫. நிலமகட்குக் கேள்வன் - கண்ணன். கேள்வன் - கணவன். நீள்நிரை நப்பின்னை - மிக்க ஆனிரைகளையுடைய நப்பின்னை என்பவள், "பின்னை, அவள் பெயர் ; ந, சிறப்புப் பொருளுணர்த்துவதோர் இடைச் சொல் ; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல." இலவு அலர் - இலவம் பூ.

சூட்டொடு கண்ணி யன்றே !
என்செய்வான் இவைகள் சொல்லி
நீட்டித்தல் குணமோ ? என்று
நெஞ்சகம் குளிர்ப்பச் சொன்னான். ௧௩௬

நந்தகோன் கோவிந்தையை மங்கல நீராட்டி மணவணி புனைந்து கொணர்ந்து, ஆயரும் பிறரும் சூழநின்று சீவகன் கையில் பதுமுகனுக்காக நீர் பெய்து கொடுத்தல்.

## கோவிந்தையைப் பதுமுகனுக்குத் திருமணம் செய்வித்தல்

ஏறங்கோள் முழங்க ஆயர்
எடுத்துக்கொண் டேகி மூதூர்ச்
சாறெங்கு மயரப் புக்கு
நந்தகோன் தன்கை யேந்தி
வீறுயர் கலச நன்னீர்
சொரிந்தனன் ; வீரன் ஏற்றான்,
பாறுகொள் பருதி வைவேல்
பதுமுக குமரற்கு என்றே. ௧௩௭

---

௧௩௬. கோட்டிளங்களிறு - கொம்புகளையுடைய இளைய யானை. மோடு - பெருமை. மடமகள் - இளையவள். மாமான் - விளி. மாமன் - பெயர். "சூட்டொடு கண்ணியன்றே என்பது. இடுந்தன்மையன்றிச் சூட்டுந்தன்மையோடு கூடிய கண்ணியல்லவோ என்றும், நெற்றிச் சூட்டும் கண்ணியுமல்லவோ என்றும் இரண்டு பொருளுணர்த்தும் ; உணர்த்தவே, மார்பிற்கு மாலையிடுக என்றும், தலைக்கு மாலை சூட்டுக என்றும் பெரும்பான்மையும் வழக்கு நடத்தலின், தலைமேல் வைக்கப்படும் கண்ணியென்றாக நந்தகோன் கருதினான். நெற்றிச் சூட்டு ஆடவர்க்காகாத தன்மையும், கண்ணி ஆடவர்க்கு ஆம் தன்மையும் போல, தன்குலத்திற்கு ஆகாமையின் சூட்டின் தன்மையும், பதுமுகன் குலத்திற்குச் சிறிது பொருந்துதலின் கண்ணியின் தன்மையும் உடையளென்று சீவகன் கூறினான்." இடையரினும் வாணிகம் செய்பவர் உண்டு. செய்வான் என் என்று மாறுக. நீட்டித்தல் - காலம் கடத்தல். விரையப் பதுமுகனுக்கு மணம் செய்வாம் என்றானாயிற்று.

இனி, "மாமான் எனக்குச் சூட்டொடு கண்ணியன்றே என்றது, தனக்கு ஆகாமையின் புலாலும், பதுமுகற்கு ஆதலின் பூவுமாகக் கருதினானென்றுமாம். இனி, ஆமான் சூட்டுமாம் ; இனி, மா, வட சொல்லாக்கி ஆகாதென்றும் உரைப்பர்."

௧௩௭. ஏறங்கோள் - ஏறுகோட் பறை. எடுத்துக்கொண்டு - கோவிந்தையை எடுத்துக்கொண்டு. சாறு - உலா. புக்கு - கந்துக்கடன்

### பதுமுகன் மகிழ்தல்

கள்வாய் விரிந்த கழுநீர்பிணைந் தன்ன வாகி
வெள்வேல் மிளிர்ந்த நெடுங்கண்விரை நாறு கோதை
முள்வாய் எயிறா றமிர்தம்முனி யாது மாந்திக்
கொள்ளாத இன்பக் கடற்பட்டனன், கோதை வேலான். கங-அ

## கோவிந்தையார் இலம்பகம்

முற்றும்.

---

மனையிற் புகுதலால். வீரன் ஏற்ருன் - வீரனுகிய சீவகனும் பதுமுகனுக்கு என்று ஏற்ருன். '' வீறு - வேறொன்றற்கில்லா அழகு.''

கங-அ. கள்வாய் விரிந்த - தேன் வாயிலே பரந்த. பிணைந் தன்னவாகி - சேர்ந்தாற் போன்ற தன்மையுடையவாய், வேல் மிளிர்ந்த- வேல்போல் பிறழ்ந்த. விரை - மணம். முள்வாய் எயிறு - முள்ளைப்போல் கூரிய பற்கள். முனியாது - வெறுப்பின்றி. மாந்தி-உண்டு. கொள்ளாத இன் பக்கடல் - உள்ளிடம் கொள்ளாது கரை புரண்டோடுகின்ற இன்பக்கடல்.

# ௩. காந்தருவதத்தையார் இலம்பகம்

[காந்தருவதத்தையார் இலம்பகம்: சீவகன் காந்தருவ தத்தை யென்பாளைக் கூடின இலம்பகம் என விரியும்.]

[இதன்கண், இராசமாபுரத்து வணிகருள் ஒருவனனை சீதத்தன் என்பான், கெட்ட தன் பொருளை ஈட்டுதற் பொருட்டு, மரக்கல மமைத்துத் திரைகடலிற் சென்றதும், தரன் என்னும் விஞ்சையன் சூழ்ச்சியால் மயங்கிக் கலுழ வேகன் என்னும் விஞ்சை வேந்தன்பால் அவன் செல்லு தலும், கலுழவேகன் மகள் காந்தருவதத்தைக்கு இராசமா புரத்தே திருமணம் நடக்குமெனச் சோதிடர் கூறக் கேட் டிருந்தமையின், சீதத்தன்பால் அவளை யொப்புவித்து அவளை வீணையில் வெல்வானுக்கு மணம் செய்து தருமாறு பணித்து மணியும் பொன்னும் மிதப்ப நல்கி விடுத்ததும், தானல் அச் சீதத்தன் தன் கலத்தையும் தோழரையும் கண்டு அவ ருடன் திரும்பப் போந்து அரசன் உடன்பாடு பெற்று வீணைப்போர் வெளியிடலும், மன்னர் பலர் அப் போரில் வென்றி யெய்தமாட்டா தொழியச் சீவகன் வெல்லுதலும், கட்டியங்காரன் பொறாமைகொண்டு சீவகனை அடர்க்குமாறு மன்னர்க்குப் பணிப்ப அவரும் பொருது தோற்றோடியதும், சீவகன் தத்தையைத் திருமணம் செய்துகோடலும், பிறவும் விரித்துக் கூறப்படுகின்றன.]

இராசமாபுரத்து வணிகருள் யவதத்தன் என்பானது வழியின் சீதத்தன் என்றொரு வணிகன் பதுமை யென்பாளை மணந்து இல்லிருந்து அறம் செய்துவரும் நாளில், தன்பால் பொருள் கெட்டதாக, தன் குடி கெட்டதென்னும் சொல் நிகழாமைப்பொருட்டுத் திரைகடலோடிச் செல்வம் ஈட்டி வரக் கருதினான்.

## சீதத்தன் போதல்

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுலம் நைய,அத னுட்பிறந்த வீரர்,
தாங்கல்கட னாகும்; தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கல்மட வார்கள்கடன் என்றெழுந்து போந்தான். ௧௩௯

## சீதத்தனது மரக்கலம் கடலிற் செல்லுதல்

திரைகள்தரும் சங்குகலம் தாக்கித்திரள் முத்தம்
கரைகடலுட் காலக்கணை பின்னொழுக முந்நீர்
வரைகிடந்து நீண்டதெனக் கீறிவளர் தீவின்
நிரையிடறிப் பாய்ந்திரிய ஏகியது மாதோ. ௧௪௦

## அவனது கலம் பொன்விளைதீப மடைதல்

மின்னுமிளிர் பூங்கொடியு மென்மலரு மொப்பார்,
அன்னமொடு தோகைநடை சாயலமிர் தன்னார்

---

௧௩௯. தூங்கு வாவல் - தலை கீழாகத் தொங்கும் வௌவால். தொன்மரம் - பழைமையுடைய ஆலமரம். ஓங்கு குலம் - உயர் குலம். நைய - தளர. அதனுள் - அக் குடியில். தாங்கல் கடனாகும் - ஆல் தான் தளர, அதன் விழுது தாங்குவதுபோலக் குடியைத் தாங்குவது கடனாகும். தலை சாய்க்க - நாணத்தால் தலை கவிழ. தீச்சொல் - இவன் பிறந்து இக் குடி கெட்டது என்னும் பழிமொழி. நீங்கல் - நைந்த குடியைத் தாங்காது போய்விடுதல். மடவார்கள் - பேதைகள். கடன் - செயல். என்று - பொருள் வயிற் செல்வதே கடன் என்று நினைந்து.

௧௪௦. திரைகள் தரும் சங்கு - அலையிடத்தே மிதக்கும் சங்குகள். கலம் தாக்கி - மரக்கலம் தாக்குவதால். கரை கடலுள் திரள் முத்தம் கால - ஒலிக்கின்ற கடலில் அச் சங்குகள் தம்மிடத்தே திரண்ட முத்துக் களைச் சொரிய. கணை - கலத்தின் பின்னே கதவுபோல் நின்று நெறிப்படுத்தும் கணையம் (Rudder). கடற்கரையில் வாழ்நர் இன்னும் இதனைக் கணையம் என்றே வழங்குகின்றனர். கணையொழிய என்று கொண்டு, மேலிருந்து எய்த அம்பு பின்னே கழியக் கலம் முன்னே சென்றது; இதனால் கடுகின விசை கூறினார் என்பர் நச்சினார்க்கினியர். வரை முந்நீர் கிடந்து நீண்டது என - மலையானது கடலிடத்தே நில்லாதே கிடந்து கிழித்த தென்னும்படி. தீவின் நிரை இடறிப் பாய்ந்து - சிதறிக் கிடக்கும் தீவுகளின் ஒழுங்கை இடறிக் குதித்து. இரிய - பிற்பட்டு நீங்க. மாது, ஓ அசை.

துன்னியினி தாகவுறை துப்புரவின் மிக்க
நன்மையுடை நன்பொன்விளை தீபமடைந் தஃதே. கசக

இத் தீபத்தின்கண் ஆறு திங்கள் இருந்து தான் கொண்டு போந்த பண்டங்களை மிக்க பொன்னுக்கும் மணிக்குமாக மாறி, பின்பு அத் தீபத்து அரசன்பால் விடைபெற்றுத் தன்னூர்க்கு வரவேண்டித் தன் வங்கத்தைச் செலுத்திக் கொண்டு வருவானாயினன். அத் தீபத்தை நீங்கி ஐஞ்ஞூறு யோசனை கடந்ததும், பெருமழையும் இடியும் விரவிப் பெரும் புயல் வந்து மோதுவதாயிற்று; கலமும் நிலைகலங்க, கலத்தவர் உளம் கலங்கலாயினர். சீதத்தன் அவர்கட்குத் தேறுதல் கூறலுற்றான்.

## சீதத்தன் தெளியத்தகுவன கூறல்

இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானு மின்றி நடுகதாம்; நக்க போழ்துஅவ்
விடுக்கணை அரியும் எஃகாம்; இருந்தழுது யாவர் உய்ந்தார்;
வடுப்படுத் தென்னை யாண்மை? வருபவந் துறுங்கள் அன்றே. கசஉ

## சீதத்தன் அருகனை நினைந்து அஞ்சாமை மேற்கொண்மின் என்றல்

வினையது விளைவின் வந்த
வீவருந் துன்ப முன்னீர்க்
கனைகட லழுவம் நீந்திக்
கண்கனிந் திரங்கல் வேண்டா;

---

கசக. மின்னும் மிளிர்பூங் கொடியும் மென் மலரும் ஒப்பார் - மின்னல் விளக்கத்துக்கும், கொடி அசைதற்கும், மலர் மென்மைக்கும் உவமை. தோகை - மயில். அன்ன நடை; மயில் போன்ற சாயல். துன்னி - நெருங்கி. துப்புரவு - நுகர்தற்குரிய பொருள்கள். அடைந் தஃது - அடைந்தது; "செய்வஃதே முறை" (குறள்) என்றாற் போல.

கசஉ. விளக்குப்போல - விளக்கு அசைவதுபோல. ஒன்றானும் - சிறிதும். தாம் - அசை. இடுக்கணை அரியும் எஃகு ஆம் - துன்பமாகிய வலையை அரிந்து தள்ளும் வாளாகும். இருந்து - நகாமல் இருந்து. உய்ந்தார் - இடுக்கண் நீங்கினவர். ஆண்மை வடுப்படுத்து என்னை - இருந்தழுது ஆண்மைக்கு மாசு தேடிக் கொள்வதால் உண்டாகும் பயன் யாது? வருப - வருபவை. வந்துறுங்கள் - வந்தே தீரும். கள், விகுதிமேல் விகுதி; அசை யென்றும் கூறுப.

நனைமலர்ப் பிண்டி நாதன்
நலங்கிளர் பாத மூலம்
நினையுமின் நீவி ரெல்லாம்;
நீங்குமின் அச்சம் என்றான். ௧௪௩

## கலம் சிதைந்து கடலுள் மறைதல்

பருமித்த களிற னானும் பையெனக் கவிழ்ந்து நிற்ப,
குருமித்து மதலை பொங்கிக் கூம்பிறப் பாய்ந்து வல்லே
நிருமித்த வகையி னோடி நீர்நிறைந் தாழ்ந்த போதில்
உருமிடித் திட்ட தொப்ப உள்ளவர் ஒருங்கு மாய்ந்தார். ௧௪௪

## சீதத்தன் கூம்பின் துண்டத்தைப்பற்றி மிதந்து சென்று மணல்திட்டு ஒன்றைச் சேர்தல்

நாவாய் இழந்து நடுவாருமில் யாமம் நீந்திப்
போவாய், தமியே, பொருளைப்பொரு ளென்று கொண்டாய்;
வீவாய் என்முன் படையாய் படைத்தாய் வினையென்
பாவாய்! எனப்போய்ப் படுவெண்மணல் திட்டை சேர்ந்தான். ௧௪௫

---

௧௪௩. விளைவின் - பயனாகி. வீவரும் துன்பம் - நீக்குதற்கரிய துன்பம். முன் நீர்க் கனை கடல் அழுவம் - பழைய நீரையுடைய ஒலிக்கின்ற கடற் பரப்பு. கண் கனிந்து - கண் குழைந்து. நனை - தேன்; அரும்புமாம். நலம் கிளர் பாத மூலம் - நலம் பயக்கும் பாதமாகிய மூலப்பொருளை. துன்பம் நீங்குதற்குக் காரணமாதலின், மூலம் என்றார்.

குறிப்பு:—கலம் படுவதாகவும், அவர் வருந்துவதாகவும் சீதத்தனுக்குத் தோன்றியதன்றி, உண்மையன்று. "அச்சமே கீழ்களது ஆசாரம்" (குறள்) என்பவாகலின், "அச்சம் நீங்குமின்" என்றான்.

௧௪௪. பருமித்த - ஆயத்தம் செய்யப்பட்ட. பையென - மெல்லென. குருமித்து - முழங்கி. ஒடிந்துவிழும் ஓசை குருமித்தல் எனப்படும். கூம்பு - பாய்மரம். இற - முறிய. நிருமித்த - ஏற்படுத்தின. மாய்ந்தார் - மறைந்தனர். உரும் - இடி.

௧௪௫. நாவாய் - மரக்கலம். ஆரும் இல் நடுயாமம் - துணையாரும் இல்லாத நள்ளிரவில். பொருளைப் பொருள் - பொருளை உறுதிப்பொருள். கொண்டாய் வீவாய் என முன் படையாய் படைத்தாய் - கொண்ட நீ இறப்பாயாக என முன்னே படைக்காமல் இப்போது படைத்தாய். வினையென் பாவாய் - வினையென்று சொல்லப்படும் பாவையே. படு மணல் திட்டை - கொழிக்கின்ற மணல் மேடு; இது கடலலையால் ஒதுக்கப்பட்டுக் கிடந்த கரையின் மேடு.

### சீதத்தன் மணல் திட்டையின் நன்னிமித்தம் கண்டு உள்ளம் தெளிதல்

ஓடுந் திரைகள் உதைப்ப உருண்டுருண்டு
ஆடும் அலவனை அன்னம் அருள்செய,
நீடிய நெய்தலங் கானல் நெடுந்தகை
வாடி யிருந்தான் வருங்கலம் நோக்கா. ௧௪௬

இவ்வாறிருக்கையில், தோள்வலி படைத்த காளை யொருவன் அங்கே தோன்றச் சீதத்தன் அவனைக் கண்டு, அவன்பால் தனக்கு உற்ற தீங்குகளை யுரைத்தான். அது கேட்ட தரன் என்னும் பெயரையுடைய அவ்வீரன் உரைக்கலுற்றான்.

### தரன் உரைத்தல்

விஞ்சைகள் வல்லேன் ; விளிந்தநின் தோழரோடு
எஞ்சிய வான்பொருள் எல்லாம் இமைப்பினுள்
வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவன்,
நெஞ்சிற் குழைந்து நினையன்மின் என்றான். ௧௪௭

என்றவன், மேலும் தகுவன சில கூறிச் சீதத்தனைத் தெளிவித்துத் தன்னோடு வருமாறு கூட்டிக்கொண்டு சேணில் தோன்றிய மலைச்சாரலுக்குக் கொண்டேகினான்.

---

௧௪௬. ஓடும் திரைகள் - கரையை மோதிவிட்டு நீங்கும் அலைகள் ; ஒன்றன்பின் ஒன்றாய்ச் சுருண்டோடும் அலையுமாம். உதைப்ப - தள்ள. ஆடும் - அலைக்கப்படும். அலவன் - நண்டு. நீடிய - நெடிதாய்க் கிடந்த. நெய்தல் அம் கானல் - நெய்தல் நிலத்துக் கானற் சோலை. வாடி - வருந்தி. வருங்கலம் - அவ்வழியே கலமேதேனும் வரும் என, நோக்கா - நோக்கி. காணாமையால் வாடியிருந்தான் என்க. "அன்னம் கொல்லா திருந்தமை, தான் பற்றுக்கோடாக வாழ்வாரைக் காலால் உதைத்துக் கடல் நம் முன்னே தள்ளவும், போக்கற்றுப் பின்னும் அதனிடத்தே செல்லா நின்றதென்று நோக்கி அதற்கு அருளினாற்போலே யிருந்ததென்க." அன்னத்தின் செயல் நன்னிமித்தமாகக் கருதிச் சீதத்தன், வரும் கலம் நோக்கி யிருந்தான்.

௧௪௭. விஞ்சை - வித்தை. விளிந்த - மாய்ந்த. எஞ்சிய - ஒழிந்த. வான்பொருள் - மிக்க பொருள். மறித்து - உண்டான கெடுதியை நீக்கி. குழைந்து - பலகாலும் நினைந்து கலங்கி. "நினையன்மின் - ஒருவரைக் கூறும் பன்மை."

### சீதத்தன் பசிநீங்கிக் குளிர்தல்

கண்டால் இனியன, காண்டற் கரியன,
தண்டா மரையவள் தாழும் தகையன ;
கொண்டான் கொழுங்கனி, கோட்டிடைத் தூங்குவ ;
உண்டான் அமிழ்தொத்து உடம்பு குளிர்ந்தான். கசஅ

அவ்விடத்திற்கு ஒரு காதத்தில் தோன்றிய அழகிய நகரத்தே அத் தரனுடைய பெருமனையிருந்தமையின், அதனை இருவரும் சென்றடைகின்றனர்.

### தரன் விருந்து செய்தல்

நன்னகர் நோக்கி நாய்கன் நாகம்கொல் புகுந்த தென்னப்
பொன்னகர் பொலியப் புக்குப் பொங்குமா மழைகள் தங்கும்
மின்னவிர் செம்பொன் மாடத் திருவரும் இழிந்து புக்குப்
பின்னவன் விருந்து பேணிப் பேசினன் பிறங்கு தாரான். கசகூ

விருந்துண்டு இனிதிருந்த சீதத்தனுக்குத் தரன், " இந் நகரத்தரசனான கலுழவேகனுக்குக் காந்தருவதத்தை யென்றொரு மகள் உளள்; அவள் பிறந்த நாளில், சாதகம் கணித்த கணிகள், அவட்கு எய்தக் கடவ நல்வினைப் பயன்களெல்லாம் இராசமாபுரத்தேயாம் என்று கூறியுள்ளர்; அதனால், அரசனையடைந்து அவன் திறம் அறியலாம்; வருக" என, அவனைக் கலுழவேகன் கோயிலுக்கு அழைத்தேகினன். அரசன் சீதத்தனை வரவேற்று, அவனது தந்தை, தாய், மனைவி, மக்கள் முதலியோர் நலம் வினவி மகிழ்வித்தான்.

---

கசஅ. தாழும் தகையன - விரும்பும் தன்மையுடையன. கோட்டிடை அமிழ்து ஒத்துத் தூங்குவ - கொம்பிலே அமிழ்தின் திரள்போல் தொங்குகின்ற கனிகள். பசியாலும் வருத்தத்தாலும் உடம்பு வெதும்பியிருந்தமையின், " உண்டான் உடம்பு குளிர்ந்தான் " என்றார்.

கசகூ. நாய்கன் - மரக்கல வணிகனான சீதத்தன். நாகம் கொல் - தேவருலகத்து அமராவதியோ. என்ன - என்று தரனைக் கேட்க. பொன்னகரோ என ஐயுற்றவன், இது பொன்னகர் போல்வதன்று. பொன்னகரே எனக் கருதினமை தோன்ற, நன்னகரென்றவர். " பொன்னகர் " என்றார். இனி, வாளா சுட்டாக்கினுமாம். மழைகள் தங்கும் மாடம் - மேகம் தங்

## கலுழவேகன் மேலும் கூறல்

இன்றைய தன்று கேண்மை
  எமர்நுமர் எழுவர் காறும்
நின்றது கிழமை, நீங்கா
  வச்சிர யாப்பி னூழால் ;
அன்றியும் அறனும் ஒன்றே
  அரசன்யான் ; வணிகன் நீயே
என்றிரண் டில்லை ; கண்டாய் ;
  இதுநின தில்லம் என்றான். ௧௫௦

## சீதத்தன் இதுவே என் தந்தைக்குத் தந்தை கூறினன் என்று அவன் கூறிய துரைத்தல்

வெள்ளிவே தண்டத் தங்கண்
  வீவில்தென் சேடிப் பாலில்,
கள்ளவிழ் கைதை வேலிக்
  காசில்காந் தார நாட்டுப்
புள்ளணி கிடங்கின் விச்சா
  லோகமா நகரிற் போகா
வெள்ளிவேற் கலுழ வேகன்
  வேதண்ட வேந்தர் வேந்தன். ௧௫௧

---

கும் உயரிய மாடம், "வெள்ளி மலை மேகபதத்துக்குமேல் என்றாரேனும், மேகம் எங்கும் உளது." மழைகள் தங்கும் இருவர் என இயைத்து, "தரன் கதியால் தங்குதலும், சீதத்தன் கொடையால் தங்குதலும்" எனக் கொள்ளலும் ஒன்று. பின் - பின்பு. அவன் - தரன். பேணி - செய்து, பிறங்கு தார் - உயர்ந்த மாலையணிந்த தரன். பேசினன் - ஒரு மொழி உரைத்தான்.

௧௫௦. இன்றையது - இன்று உண்டானது. கேண்மை - நட்பு. எழுவர் - ஏழு தலைமுறையினர். கிழமை - நட்புரிமை. வச்சிரயாப்பின் நீங்கா ஊழால் - என இயைக்க. வச்சிரயாப்பு - வச்சிரத்தால் தலையில் இட்ட எழுத்து. அறன் - சமயம் (Religion): என்று இரண்டு இல்லை - என்று உயர்வு தாழ்வு இல்லை.

௧௫௧. வெள்ளி வேதண்டம் - வெள்ளி மலை. வீவில் - கெடுதல் இல்லாத. தென்சேடி - தென்பகுதியிலுள்ள சேடிக்கூற்று. இக்கூற்றில் உள்ளது காந்தார நாடு. புள்ளணி கிடங்கு - புள்ளினம் நீங்காமையால் அழகு பொருந்திய அகழி. போகா - நகரினின்று நீங்காது நிலைபெற்றுள்ள.

சங்குடைந் தனைய வெண்டா
மரைமலர்த் தடங்கள் போலும்
நங்குடித் தெய்வம், கண்டீர்,
நமரங்காள் ! அறிமின் என்னக்
கொங்குடை முல்லைப் பைம்போ
திருவடம் கிடந்த மார்ப
இங்கடி பிழைப்ப தன்றால்
எங்குலம் என்று சொன்னான். கருஉ

இது கேட்டு உவகை மிக்க கலுழவேகன் சீதத்தனுக்குத் தன் மனைவி தாரணியையும், மகள் காந்தருவதத்தையையும் காட்டிச் சிறப்பித்துப் பின்பு, தன் மகள் பிறப்பு வரலாற்றைக் கூறினன்.

## கலுழவேகன் சீதத்தன்பால் காந்தருவதத்தையின் பொருட்டுச் செய்யவேண்டுவன கூறல்

நின்மகள் இவளை நீயே
நின்பதி கொண்டு போகி,
இன்னிசை பொருது வெல்வான்
யாவனே யானு மாக
அன்னவற் குரிய ளென்ன
அடிப்பணி செய்வல் என்றான்,
தன்னமர் தேவி கேட்டுத்
தத்தைக்கே தக்க தென்றாள். கருக

---

கருஉ. சங்கு உடைந்தனைய வெண்டாமரை - சங்கு பாதியாக உடைந்தாற்போல மலரும் வெண்டாமரை. சங்கு தாமரைக்கும், தாமரையோடு கூடிய தடம் குடிக்கும் உவமை. அடுத்துவரலுவமையன்று. இனி, உரைகாரர் "தடங்களிலே உடைந்த தன்மையவாகிய மலரும் சங்கும் போலும் நம் குடி : இது தூய்மைக்கு உவமை ; இனி, சங்கு சுட்டாலும் நிறம் கெடாததுபோலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியுமாம்; நத்தம்போற் கேடும் (குறள், 235) என்ப" என்பர். நமரங்காள் - நம்மவர்களே.—இது சீதத்தன் பாட்டன் கூற்று. கொங்கு - தேன். இருவடம் - அரசமுல்லையும் காவல்முல்லையுமாகிய இரு மாலை. அடி - நின் திருவடி. சொன்னான் சீதத்தன் என்க.

கருக. யாவனேயானுமாக - யாவனாயினுமாக. உரியள் என்ன - உரியவளாவள் என்று கலுழவேகன் சொல்ல. அடிப்பணி - அடிமைப் பணி. என்றான் - என்று சீதத்தன் சொன்னான். தன்னமர் தேவி - கலுழ

தாரணி இவ்வாறு செய்வதே தக்கது என்றது கேட்ட கலுழவேகன் மீட்டும் சில கூறுகின்றான்.

### கலுழவேகன் தத்தை திருமணம் குறித்துச் சொல்லுதல்

முனிவரும் போக பூமிப் போகமுட் டாது பெற்றும்
தனியவ ராகிவாழ்தல் சாதுய ரதனி னில்லை;
கனிபடு கிளவி யார்தம் காதலர் கவானில் துஞ்சின்,
பனியிரு விசும்பிற் றேவர் பான்மையிற் றென்று சொன்னான். ௧௫௪

### கலுழவேகன் தன் உட்கோள் கூறுதல்

நூற்படு புலவன் சொன்ன நுண்பொருள் நுழைந்தி யானும்
வேற்கடல் தானை வேந்தர் வீழ்ந்திரந் தாலும் நேரேன்;
சேற்கடை மதர்வை நோக்கின் சில்லரித் தடங்கண் நங்கை
பாற்படு காலம் வந்தால் பான்மையார் விலக்கு கிற்பார். ௧௫௫

---

வேகனால் காதலிக்கப்பட்ட தாரணி யென்னும் மனையாட்டி. தத்தைக்கே தக்கது - தத்தைக்குத் தக்கதே என ஏகாரம் பிரித்துக் கூட்டுக.

௧௫௪. முனிவு அரும் - யாவரும் வெறுத்தற்கரிய. போக பூமிப் போகம் - போக பூமியில் பெறுகின்ற பெரும் போகம். முட்டாது - குறையாது. பெற்றும் - பெற்ற வழியும். தனியவராகி - மணமின்றித் தனித்து. சா துயர் - (மகளிர்க்கு) இறக்கும்போதுண்டாகும் நோய். "சாதலின் இன்னாததில்லை" என்பர் திருவள்ளுவர். அதனின் இல்லை - அச் சா துயரும் மகளிர் தனித்து வாழ்தல்போலத் துயர் தருவதில்லையாம். கனிபடுகிளவியார் - இனிமை நிறைந்த சொற்களைப் பேசும் மகளிர். கவான் - துடை. துஞ்சின் - துஞ்சுதலைப் பெறுவாராயின். பனி - குளிர்ச்சி. இருவிசும்பு - பெரிய வானம். வானத்தில் உயரச் செல்லச் செல்லக் குளிர்ச்சி மிகுதலின், "பனியிரு விசும்பு" என்றார். தேவர் பான்மையிற்று - மகளிர்க்கு அவ்வாறு துஞ்சுதலால் பிறக்கும் இன்பம் தேவரின்பத்தின் பகுதியையுடைத்து.

௧௫௫. நூற்படுபுலவன் - சோதிட நூலிலே கண்ணும் கருத்தும் உள்ளவனாகிய புலவன். நுழைந்து - கருத்தைச் செலுத்தித் துணிந்தமையின். வேற்கடல் தானை - கடல்போல வேலேந்திய தானை. வீழ்ந்து - அடியில் வணங்கி. நேரேன் - மகள் கொடுத்தற்கு உடன்படேனாயினேன். சேற்கடை மதர்வை நோக்கின் சில்லரித் தடங்கண் - சேலின் கடைபோன்ற கடையினையும், மதர்த்த நோக்கினையும், சிலவாகிய அரிகளையுமுடைய கண். நங்கை - நான்தருவதத்தை. பாற்படுகாலம் - ஒருவன் பகுதியிலே படும் காலம். பான்மை - விதி.

பின்பு தத்தையைச் சீதத்தனுடன் இராசமாபுரத்துக்குச் செலுத்தக்கருதிய கலுழவேகன், தத்தைக்குத் தோழியாகிய வீணாபதி யென்பாளையும் உடன்செல்ல விடுக்கின்றான்.

### விடுப்பவன் வீணாபதிக்குக் கூறல்

உடம்பினோ டுயிரிற் பின்னி யொருவயின் நீங்கல் செல்லா
நெடுங்கணும் தோளும் போலும் நேரிழை யரிவை! நீநின்
தடங்கணி தனிமை நீங்கத் தந்தையும் தாயு மாகி;
அடங்கல ரட்ட வேலான் ஆணையி ராமின் என்றான். ௧௫௬

சீதத்தனுக்கு அளவிறந்த பொன்னும் மணியும் தந்து, தத்தைக்கு வேண்டும் வீணைகள் பலவும் பிறவும் கொடுத்து மிக்க சிறப்புடன் விடுப்ப, விடைபெற வணங்கிய தத்தையின் பிரிவாற்றாத தாரணிக்குக் கலுழவேகன் தேற்றரவு கூறுகின்றான்.

### கலுழவேகன் தன் மனைவிக்குக் கூறுதல்

வலம்புரி யீன்ற முத்தம் மண்மிசை யவர்கட் கல்லால்
வலம்புரி பயத்தை யெய்தாது; அனையரே மகளிர் என்ன
நலம்புரிந் தனைய காதல் தேவிதன் நவையை நீங்கக்
குலம்புரிந் தனைய குன்றிற் கதிபதி கூறி னானே. ௧௫௭

---

௧௫௬. உடம்பினோடு உயிரின் பின்னி - உடம்போடு உயிர் பின்னுமாறு பின்னி. ஒருவயின் - ஓரிடத்தும். நீங்கல் செல்லா அரிவை - நீங்காத அரிவையே, அரிவையே - விளி, கண்ணும் தோளும் போலும் அரிவை. அறிவால் கண்ணும், உதவியால் தோளும் போலும் அரிவை. தடங்கணி - பெரிய கண்ணையுடைய தத்தை. ஆதி - ஆகுக. அடங்கலர் - பகைவர். ஆணைக்கு அடங்காமையின், பகைவர் அடங்கலர் எனப்பட்டனர். அட்ட வேலான் - அழித்த வேலையுடையனான சீதத்தன். ஆணையி ராமின் - ஆணை வழி நிற்பீராக.

௧௫௭. வலம்புரி - வலம்புரி யென்னும் ஒருவகைச் சங்கு. மண்மிசையவர் - மண்ணில் வாழும் மக்கள். வலம்புரிச் சங்கு கடலில் வாழ்வது. வலம்புரி - அந்த வலம்புரிச் சங்கு. பயத்தை - சங்கினாலாகும் பயனை. மகளிர் அனையர் - பெண்களும் தம்மைப் பெற்ற தாயருக்கு அம் முத்துப் போல்வர். நலம் புரிந்தனைய தேவி - நலமெல்லாம் திரண்டு வடிவு கொண்டாற் போன்ற தேவி. குலம் புரிந்தனைய அதிபதி - குலம் வடிவு கொண்டாற் போன்ற அதிபதி (கலுழவேகன்).

தத்தையுடன் பெருஞ் செல்வமும் பெற்றுவரும் சீதத்தனோடு தரன் என்பான் வந்தான். கடற்கரையை நெருங்கியபோது அவன் சீதத்தனுக்கு முன்பு அவன் கலம் கவிழ்ந்து துன்புற்றது தன் வஞ்சமென்று கூறி நிகழ்ந்தது சொல்லலுற்றான் : "காந்தருவதத்தையின் பொருட்டு நாளும் பல மன்னர் வந்து இரத்தலால் கலுழவேகன் மனம் அலைப்புண்டு, கணி சொன்ன வண்ணமே இராசமாபுரத்திற்கே அவளை அனுப்பிவிடத் துணிந்திருக்கையில் நீ கடலின்கண் வந்துகொண்டிருப்பதை யுணர்ந்து நின்னைக் கொணர்க என என்னைப் பணித்தான் ; யான் என் விஞ்சையால் நின் தோழர்களை இன்புறுத்தி நின்னைத் துன்புறுத்திப் பற்றினேன்" என்றான்.

### தரன் கூறுதல்

துன்ப முற்ற வர்க்கலால்
இன்ப மில்லை யாதலின்,
அன்ப! மற்று யான்நினைத்
துன்பத் தால்தொ டக்கினேன். கரு௮

### ஆழ்ந்த மரக்கலத்தைச் சீதத்தனுக்குக் காட்டுதல்

பீழை செய்து பெற்றனன்
வாழி யென்று மாக்கடல்
ஆழ்வித் திட்ட அம்பியைத்
தோழர்ச் சுட்டிக் காட்டினான். கரு௯

பின்பு சீதத்தன் தன் துணைவரைக் கலத்தோடு கண்டு மிக்க மகிழ்ச்சிகொண்டு அவர்களிடம் நிகழ்ந்தது கூறி

---

கரு௮. துன்ப முற்றார்க்கு அலால் இன்பமில்லை - தொடக்கத்தில் துன்பம் அடைபவர்க்குப் பின்பு இன்பமுண்டாகும். ஆதலால் - இந்த உலகுரைப்படியே, நினைத் துன்பத்தால் தொடக்கினேன் - உனக்குத் துன்பம் செய்து பிணித்தேன். உன்னையொழிந்தவர்க்கு இன்பமே செய்துள்ளேன் என்க.

கரு௯. பீழை - துன்பம். பெற்றனன் - நின் நட்பைப் பெற்றேன். அம்பியை - மரக்கலத்தை. தோழர் - தோழர்களையும். உம்மை தொக்கது. ஆழ்வித்திட்ட - சீதத்தனுடைய கண்ணிற்கு ஆழ்ந்துவிட்டது போலத் தோன்றுமாறு மறைத்திருந்த. சுட்டி - இதோ மரக்கலம் ; இவர்கள் நின் தோழர்கள் என்று.

ஞன்; அவர்கள் அறிவு மயங்கியிருந்தமையால் நிகழ்ந்தது உணராராய், "நாங்கள் கண்டது நாடகம்" எனக் கைகொட்டி மகிழ்ந்தனர். விரைவில் அவர் சென்ற வங்கமும் இராசமாபுரத்தை யடைந்தது. சீதத்தன் தத்தையுடன் தன் பெருமனை யடைந்து நிகரற்ற செல்வமுடையவனாய்த் திகழலுற்றான். சீதத்தன் மனைவியும் தத்தையைத் தன் மகளைப்போல் காதலித்து ஓம்பினள். மறுநாளே சீதத்தன் கட்டியங்காரனைச் சிறப்புடன் கண்டு, காந்தருவதத்தையின் மணம் குறித்துக் கன்னிமாடம் சமைத்துக்கொள்ளக் காப்பு விடை பெற்றுப் போந்து, நன்னாளில் மாடம் புனைவித்து, அரிய காவலும் ஏற்படுத்தி அதன்கண் தத்தையை இனிதிருக்கச் செய்து நகரமாந்தர் அறிய முரசறைவித்தான்.

### வள்ளுவன் முரசறைதல்—வாழ்த்து

வான்தரு வளத்த தாகி வையகம் பிணியில் தீர்க;
தேன்தரு கிளவி யாரும் கற்பினில் திரித லின்றி,
ஊன்றுக; ஊழி தோறும் உலகினுள் மாந்த ரெல்லாம்
ஈன்றவர் வயத்த ராகி இல்லறம் புணர்க நாளும். ௧௬௦

### அறவுரை

தவம்புரிந் தடக்கி நோற்கும் தத்துவர்த் தலைப்பட் டோம்பிப்
பவம்பரி கெமக்கு மென்று பணிந்தவ ருவப்ப வீமின்;
அவம்புரிந் துடம்பு நீங்கா தருந்தவம் முயல்மின் யாரும்
சிவம்புரி நெறியைச் சேரச் செப்புமிப் பொருளும் கேண்மின்: ௧௬௧

---

௧௬௦. வான்தரு வளத்ததாகி - மழைதரும் எல்லா வளங்களையும் உடையதாகி. பிணியில் தீர்க - பிணி முதலியவற்றினின்று நீங்குக. தேன்தரு கிளவியார் - தேன்போல் இனிய சொற்களையுடைய மகளிர். ஊன்றுக - நிலைபெறுக. ஈன்றவர் வயத்தராகி - பெற்றோர் சொல்வழி நின்று.

௧௬௧. அடக்கி - புலன்களை யடக்கி. தத்துவர் தலைப்பட்டு - தத்துவ வுணர்வுடைய பெரியோர்களை யடுத்து. எமக்குப் பவம் பரிக - எங்கட்கும் பிறப்பு அறுதல் வேண்டும். உவப்ப ஈமின் - அவர் விரும்புவனவற்றை நல்குக. அவம் புரிந்து - பிறப்பு அறுமைக்குரிய வீண் செயல்களைச் செய்து. நீங்காது - கெடாது. உடம்பு அருந்தவம் முயல்மின் - உடம்பைக்கொண்டு அரிய தவத்தைச் செய்க. சிவம்புரி நெறி - வீடுபேற்றைத் தரும் நன்னெறி.

## மூலமும் பொருளும்

அம்மல ரணிச்சத் தம்போ தல்லியோ டணியின் றொந்து
விம்முறு நுசுப்பு நைய வீற்றிருந் தணங்கு சேர்ந்த
வெம்முலைப் பரவை யல்குல் மிடைமணிக் கலாபம் வேய்த்தோள்
செம்மலர்த் திருவின் சாயல் தேமொழி தத்தை யென்பாள் ; ௧௯௨

மற்றவள் தந்தை நாய்கன், வண்கைச்சீ தத்தன் என்பான்,
கொற்றவன் குலத்தின் வந்தான் ; கூறிய பொருள்இ தாகும் ;
முற்றவ முடைய ளாகி மூரிநூற் கலைக ளெல்லாம்
கற்றவள் கணங்கொள் நல்யாழ் அனங்கனைக் கனிக்கும் நீராள் ; ௧௯௩

தீந்தொடை மகர வீணைத் தெள்விளி எடுப்பித் தேற்றிப்
பூந்தொடி யரிவை தன்னிற் புலமிகுத் துடைய நம்பிக்கு
ஈந்திடும் ; இறைவ ராதி மூவகைக் குலத்து ளார்க்கும்,
வேந்தடு குருதி வேற்கண் விளங்கிழை தாதை என்றான். ௧௯௪

இச்செய்தி நாடெங்கும் பரவவே, அத்தினபுரத்து அரசகுமாரன், காம்பீலி நாட்டுப் பாலகுமாரன், வாரணவாசி மன்னன் முதலாக அயோத்தி யரசன் ஈறாகப் பல அரச

---

௧௯௨. அம் மலர் - அழகிய மலர்களையுடைய. அல்லியோடு அணிந்து - உள்ளிதழ் உதிரா வண்ணம் அணிந்து. விம்முறு நுசுப்பு - மிக வருந்தும் இடை. அணங்கு வீற்றிருந்து சேர்ந்த வெம்முலை - அழகுத் தெய்வம் சிறப்பாக வீற்றிருந்தருளும் விருப்பத்தைச் செய்யும் முலை. பரவை - பரந்த. கலாபம் - மேகலை. செம்மலர் - செந்தாமரை. தத்தை - காந்தருவதத்தை.

௧௯௩. கொற்றவன் - கலுழவேகனுடைய. முற்றவம் - முற்பிறப்பில் செய்த தவம். மூரி நூல் கலைகள் - பெரிய இசைநூலில் கூறப்பட்ட கலைகள். கணங்கொள் நல்யாழ் - நரம்புகளின் கூட்டம் கொண்ட நல்ல யாழ். யாழ் - யாழால். அனங்கனையும் - உம்மை வருவிக்க.

௧௯௪. தீந்தொடை - இனிய இசையைச் செய்யும் நரம்பு. மகர வீணை - பத்தொன்பது நரம்பு கட்டின மகர யாழ். தெள் விளி - தெளிந்த இசை. எடுப்பி - எழுப்பி. பூந்தொடி யரிவை - பூத்தொழில் சிறந்த வளையை அணிந்த தத்தை. புலம் மிகுத்துடைய நம்பி - அறிவு மிகவுடைய ஆடவனுக்கு. இறைவராதி மூவகைக் குலத்துள்ளார் - அரசர், அந்தணர், வணிகர் என்ற மூவகைக் குலத்துட் பிறந்தவர். வேந்தடு குருதி வேல் - பகை வேந்தரைக் கொல்லும் குருதிபடிந்த வேலைப் போன்ற, விளங்கு இழை - விளங்குகின்ற இழையணிந்த தத்தை.

குமரர் இராசமாபுரத்தே வந்து நிரம்பினர். ஏனைச் செல்வ மக்கள் எண்ணிறந்தோரும் ஈண்டினர்.

### காந்தருவதத்தை இசையரங்குக்கு வருதல்

பைம்பொன் இமிர்கொடி பாவை வனப்பென்னும்
தளிரை ஈன்று,
செம்பொன் மலர்ந்து இளையார் கண்ணென்னும்
சீர்மணி வண்டுழலச் சில்லென்று
அம்பொன் சிலம்பரற்ற அன்னம்போல் மெல்லவே
ஒதுங்கி யம்பூஞ்
செம்பொற் புரிசை யடைந்தாள்செந் தாமரைமேல்
திருவொ டொப்பாள். கசரு

### அவைப் பரிசாரம் பாடுதல்

பட்டியன்ற கண்டத் திரைவளைத்துப்
பன்மலர்நன் மாலை நாற்றி
விட்டகலாச் சாந்தின் நிலமெழுகி
மென்மலர்கள் சிதறித் தூமம்
இட்டுஇளைய ரேத்த இமையார்
மடமகள்போல் இருந்து நல்யாழ்
தொட்டெழீஇப் பண்ணெறிந்தாள் கின்னரரும்
மெய்ம்மறந்து சோர்ந்தா ரன்றே. கசசா

### பாட்டு

புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியெனக்கண்டு
அன்புகொள் மடப்பெடை அலமந்துஆங் ககல்வதனை

---

கசரு. பொன் இமிர் கொடி - பொன்னுய் வளர்ந்த ஒரு பூங்கொடி. உழல - உலவ. அரற்ற - ஒலிக்க. ஒதுங்கி - நடந்து. புரிசை — மதிற் புறம். கொடி, தளிரை யீன்று, பொன்மலர்ந்து, வண்டு உழல, சிலம்பு அரற்ற ஒதுங்கி, புரிசையடைந்தாள். திருவொடு - ஒடு எண்ணொடு. கொடி யொடும், பாவையொடும், திருவொடும் ஒப்பாள் என இயையும்.

கசசா. பட்டு இயன்ற - பட்டாலாகிய. கண்டத்திரை - பல்வகை வண்ணமுடைய திரை. விட்டகலா சாந்து - மணம் விட்டு நீங்குதல் இல்லாத சந்தனம். தூமம் - அகிற்புகை. தொட்டு எழீஇ - எடுத்துப் பண்ணை யெழுப்பி. அவைப் பரிசாரம் - கூடியிருக்கும் அவைக்கு முகமனாகப் பாடும் பாட்டு.

என்புருகு குரலழைஇ இருஞ்சிறகர் குலைத்துகுத்துத்
தன்பெடையைக் குயில்தழுவத் தலைவந்த திளவேனில்; ௧௬௭

தண்காஞ்சித் தாதாடித் தன்னிறம் கரந்ததனைக்
கண்டானா மடப்பெடை கிளியெனப்போய்க் கையகல,
நுண்தூவி யிளஞ்சேவல் நோக்கோடு விளிபயிற்றித்
தண்சிறகால் பெடைதழுவத் தலைவந்த திளவேனில் ; ௧௬௮

குறுத்தாட் குயிற்சேவல் கொழுங்காஞ்சித் தாதாடி
வெறுத்தாங்கே மடப்பெடை விழைவகன்று நடப்பதனை
மறுத்தாங்கே சிறகுளர்ந்து மகிழ்வானாக் கொளத்தேற்றி
உறுப்பினா லடிபணியத் தலைவந்த திளவேனில். ௧௬௯

திரைக்குள்ளே யிருந்து, தத்தை இப் பாட்டைப் பாடி முடித்ததும், வீணாபதி யென்னும் பேடி அரங்கில் நின்று, "இங்கே வீற்றிருக்கும் வீரர் இனி யாழ்வகையைப் பாடுவார்களாக; அதற்கு இயையாராயின், இக் காந்தருவதத்தை யாழ் இசைப்ப, அதற்கேற்பப் பாடுவார்களாக" என்று முன்மொழிந்து திரைக்குட் சென்றாள். சிறிது போதில், தத்தை திரையை நீக்கி, வெளியே அரங்கிற் போந்து, ஓரிடத்தே யமர்ந்து பாடத் தொடங்கினாள்.

---

௧௬௭. புறம் - முதுகு. புதைய - மறைதலால். காஞ்சியின் பச்சைத் தாது படிதலால். குயில் கருமை மறைந்து பச்சை நிறத்தால் கிளி யெனத் தோன்றிற்று. அலமந்து - அறிவு மருண்டு. என்புருகு குரல் - என்புருக எழுந்த அன்பு கனிந்த குரலால். அழைஇ - அழைத்து. சிறகர் குலைத்து - சிறகை யசைத்து. உகுத்து - காஞ்சித் தாதுகளை யுதிர்த்து.

௧௬௮. கரந்ததனை - மறைந்த குயிற் சேவலை. ஆனா - பொருத. கையகல - கைவிட்டு நீங்கவே, நோக்கோடு - இனிய பார்வையுடன், விளி பயிற்றி - அன்பு குழைய அழைத்து.

௧௬௯. குறுத் தாள் - குறுகிய கால். விழைவு - கூடற்கினிய அன்பு. மறுத்து - தடுத்து. உளர்ந்து - உதறி. மகிழ்வு ஆனா கொள - மகிழ்ச்சி குன்றாமல் கொள்ளுமாறு. உறுப்பினால் - தலையால்.

இம் மூன்றும் நிலை யென்னும் இசை வகையைச் சேர்ந்தவை. மணத்துக்குரிய காலவரவும், தலைவியது வேறுபாடும் சுட்டித் தோழி தலைவனை வரைவு கடாவுதற் பொருளில் வந்த கொச்சக வொருபோகு.

### பாட்டின் பயன்

சிலைத்தொழில் சிறுநுதல் தெய்வப் பாவைபோல்
கலைத்தொழில் படஎழீஇப் பாடி னுள்; கனிந்து
இலைப்பொழில் குரங்கின; ஈன்ற தூண்தளிர்;
நிலத்திடைப் பறவைமெய்ம் மறந்து வீழ்ந்தவே. கள0

கருங்கொடிப் புருவ மேரு; கயல்நெடுங் கண்ணு மாடா;
அருங்கடி மிடறும் விம்மாது; அணிமணி எயிறும் தோன்ரு;
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னுளோ!
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ! என்று நைந்தார். களக

### இசைப் போர்

இசைதிறத் தனங்கனே யனைய நீரினுர்
வசைத்திற மிலாதவர் வான்பொன் யாழ்எழீஇ
இசைத்தவர் பாடலின் வெருவிப் புள்ளெலாம்
அசிப்பபோன் றிருவிசும் படைந்த என்பவே. களஉ

மாதர்யாழ் தடவர வந்த; மைந்தர்கைக்
கீதத்தால் மீண்டன கேள்விக் கின்னரம்;

---

கள0. சிலைத்தொழில் சிறுநுதல் - அம்பு ஏற்றிவிட்ட வில்லைப் போன்ற சிறு நெற்றி. தெய்வப்பாவை - தெய்வத்தால் செய்யப்பட்ட கொல்லிப்பாவை. கலைத்தொழில் - பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு. கையூழ், குறும்போக்கு என்ற எட்டு. இலைப்பொழில் - இலைகள் செறிந்த சோலை. குரங்கின - வளைந்தன. தூண் தளிர் ஈன்றன - தூண்களும் துளிர்த்தன. பறவை - கின்னர மிதுனங்கள்.

களக. கொடிப் புருவம் - ஒழுங்குடைய புருவம். ஏரு - நெறியா. அருங்கடி மிடறு - அரிய விளக்கம் அமைந்த கழுத்து. விம்மா - பெருக்காது. வீணை நரம்பொடு நாவின் நவின்றதோ - யாழே தனக்குரிய நரம்போடே சாரீர வீணைக்குரிய நாவாலும் பாடிற்றே. நைந்தார் - வருந்தினுர்.

களஉ. இசைத்திறத்து - இசைபாடும் துறையில். நீரினுர் - தன்மையுடைவர், வசைத்திறம் இலாதவர் - குற்றமில்லாதவர், நீரினுராகிய வசையில்லாதார், வான் - பெருமை. இசைத்து அவர் பாடவே, அப் பாட்டிசையால். புள் - கின்னர மிதுனம். வெருவி - அஞ்சி. அசிப்ப போன்று - சிரிப்பதுபோல. பரிகசிப்பதுபோல என்றுமாம். அசித்தல் - வடசொற் சிதைவு.

போதரப் பாடினாள்; புகுந்த போயின,
தாதலர் தாரினார் தாங்கள் பாடவே. ௧௭௩

இவ்வகையால் முதற்கண் அரசரும், பின்பு மறைய வரும், முடிவில் வணிகரும் பாடித் தோல்வி எய்தினர்.

## கட்டியங்காரன் கூறல்

"தேனுயர் மகர வீணைத் தீஞ்சுவை யிவளை வெல்வான்,
வானுயர் மதுகை வாட்டும் வார்சிலைக் காம னாரும்;
ஊனுயர் நுதிகொள் வேலீர்! ஒழிக; ஈங் கில்லை" என்றான்;
கானுயர் அலங்கல் மாலைக் கட்டியங் காரன் என்பான். ௧௭௪

இவ்வாறு, இவ் விசைப்போர் ஆறுநாள்காறும் நடந்தது. இச்செய்தி சீவகனுக்கு எட்டவே அவன் தன் தோழருள் ஒருவனை புத்திசேனன் என்பானைக் கந்துக்கடன்பால் செலுத்தித் தன் கருத்தைத் தெரிவித்துவரச் சொன்னான். புத்திசேனன் அவ்வாறே கந்துக்கடன்பால் தெரிவிப்ப, அப்போழ்தில் அவன் மனம் இசையானாக, நாகமாலை யென்பாள் ஒருத்தி ஓலை கொணர்ந்தாள். அதன்கண், "சீவகன்பால் கட்டியங்காரன் பெருஞ் சினங்கொண்டு அவனைக் கொல்லுதற்குக் கருதி யிருக்கின்றான்; ஆதலால் அவனைக் காத்துக்கோடல்வேண்டும்" என்றொரு குறிப் பிருந்தது. நாகமாலை முகத்திலும் ஏதோ உரைக்கலுறும் குறிப்பும் இருந்தது. அதனை யுணர்ந்த கந்துகன் புத்தி சேனனுக்கு அதனைச் சொல்லெனப் பணிக்க, அவள் உரைக்கத் தொடங்கி,—"முன்பொருநாள் அனங்கமாலை என்னும் நாடகமகள் அரங்கேறியபோது, அவ்வரங்கிற்கு, அரசர்

---

௧௭௩. மாதர் - காந்தருவதத்தை. தடவர - இசைக்க. வந்த - வந்தன. மீண்டன - திரும்பப் போய்விட்டன. போதரு - திரும்ப வருமாறு. புகுந்த - அவள் பாடலால் உள்ளே புகுந்த அப் பறவைகள். தாதலர் தார் - தேனுடைய பூவால் தொடுத்த மாலை.

௧௭௪. தேன் உயர் மகரவீணைத் தீஞ்சுவை யிவளை - தேனினும் மிக்க இன்பம் தரும் மகர வீணையால் திவ்விய இசையமுது வழங்கும் இத் தத்தை யென்பவளை. வான் உயர் மதுகை - வானோரது உயர்ந்த அறிவு வன்மை. வாட்டும் - கெடுக்கும். வார் சிலை - நீண்ட வில். ஊன் உயர் நுதி கொள் வேலீர் - பகைவர் தசை மிக்க நுனியைக்கொண்ட வேல் ஏந்தும் வீரர்காள். கான் - மணம். அலங்கல் மாலை - அலங்கலாகிய மாலை.

குலத்தவனாதலின் சீவகனும் வந்திருந்தான். அனங்கமாலைக்குச் சீவகன்பால் காதல் பிறந்தது ; அதனைச் சீவகன் அறிந்திலன். கட்டியங்காரன் அவள்பால் வேட்கை மிகக்கொண்டு, அவட்குத் தன்பால் காதலின்மை யுணர்ந்தும் வலிதிற் கொண்டுசென்று கன்னியழித்தான். அக்காலத்தே அவள் 'சீவக சாமியோ' என்று வாய்வெருவினாள் ; அருகிருந்தவர் அவனது அருளும், வலியும், அழகும் எடுத்தோதிப் பாராட்டினர் ; அதுமுதல் அவன் சீவகன்பால் கறுவு கொண்டுள்ளான்" என்று சொல்லி முடித்தாள். கந்துக்கடன் அவட்கு வேண்டும் பொன்னும் மணியும் பெருகத் தந்து, பின்பு நிகழ்வதையும் ஒற்றிருந்து அறிந்துவருமாறு விடுத்தான்.

## கந்துக்கடன் புத்திசேனற் குரைத்தல்

இன்னன் என்ன இன்புறான் ; இழந்த னன்அ ரசுஎன
என்னை வெளவும் வாயில்தான் என்னும் சூழ்ச்சி தன்னுளான் ;
அன்ன தாதல் அரில்தப அறிந்து கூத்தி கூறினாள்,
இன்ன தால்ப டையமைத்து எழுமின் என்றி யம்பினான். ௭௫

இது கேட்டுச் சீவகன் முதற்கண் நகைத்துப் பின்பு தந்தை சொற்படி, புலிக்குழாம்போலத் தோழரும் வீரரும் சூழ்வர அழகிய யானை மீதேறி இசையரங்கிற்குச் சென்றான்.

## சீவகனைக் கண்ட மகளிர் தம்முட் பேசிக்கொள்ளுதல்

தோற்றனள் மடந்தை நல்யாழ் தோன்றலுக் கென்று நிற்பார் ;
நோற்றனள் நங்கை மைந்தன் இளநலன் நுகர்தற் கென்பார் ;

---

௭௫. இன்னன் என்ன - சீவகன் மிக்க வலியன் ; உதவியும் செய்தான் என்று பலரும் கட்டியங்காரனுக்குச் சொல்ல. அவன் இன்புறான் - அவன் அதனால் இன்புறானாய். என - என்று நினைத்துக்கொண்டு. வெளவும் வாயில்தான் என்னை - சீவகன் உயிரைக் கவரும் வழிதான் யாது. சூழ்ச்சிதன் னுளான் - ஆராய்ச்சிக்கண்ணே யாழ்ந்திருக்கின்றான். அன்னது ஆதல் - அவன் கருத்து அதுவாதலை. அரில் தப - குற்றமற. இன்னதால் - இக்காரியம் இத்தன்மையாக இருக்கின்றது. எனவே, இசைப் போரில் தோற்றோரும் கட்டியங்காரனும் பகைப்பார்போலவே இருந்தது என்றாம். படையமைத்து - போர்க்குரிய படையமைத்துக்கொண்டு. எழுமின் - செல்க.

கோற்றொடி மகளிர் செம்பொன் கோதையுங் குழையு மின்ன
ஏற்றன சொல்லி நிற்பார் எங்கணு மாயி னாரே. கஎசு

## இசையரங்கில் சீவகன் வந்திருந்ததைக் கண்ட காந்தருவதத்தை காதல் மிகல்

கண்ணெனும் வலையி னுள்ளான் கையகப் பட்டி ருந்தான்;
பெண்ணெனும் உழலை பாயும் பெருவனப் புடைய நம்பி,
எண்ணின்மற்று யரவ னுங்கொல்? என்னிதிற் படுத்த ஏந்தல்
ஒண்ணிற உருவச் செந்தீ யுருவுகொண் டனைய வேலான்; கஎஎ

யாவனே யானு மாக அருநிறைக் கதவம் நீக்கிக்
காவல்என் னெஞ்ச மென்னும் கன்னிமா டம்பு குந்து
நோவஎன் உள்ளம் யாத்தாய்; நின்னையும் மாலை யாலே
தேவரிற் செறிய யாப்பன் சிறிதிடைப் படுக என்றாள். கஎஅ

---

கஎசு. மடந்தை - காந்தருவதத்தை. சீவகனது கல்வி யுணர்வு மிகுதி யாவரும் அறிந்ததாதலால், "தேற்றனள்" எனத் தெளிவுபற்றி இறந்த காலத்தாற் கூறினர். தோன்றல் - சீவகன். நோற்றனள் - முற்பிறப்பில் தவம் செய்துள்ளாள். கோல் தொடி - திரண்ட வளை யணிந்த. செம்பொன் குழையும் கோதையும் மின்ன என இயையும். ஏற்றன - தங்கள் தங்கள் மனதுக்கு ஒத்தவற்றை.

கஎஎ. கண்ணெனும் வலையினுள்ளான் - ஞானக்கண் என்கின்ற வலையை வீசிக் குல முதலியவெல்லாம் நோக்கும்படி அவ் வலைக்குள்ளே யிருந்தான். அந்த ஞானத்தால் எல்லாம் உணர்தலின், "கையகப்பட்டிருந்தான்" என்றாள். பெண்ணெனும் உழலை பாயும் - பெண்மை யென்னும் உழலை மரத்தைக் கடந்து உள்ளே பாயும். உழலை - கிட்டி. வழிகளில் குறுக்கே இடப்பெறும் மரம். எண்ணின் - ஆராயின். என் இதிற்படுத்த ஏந்தல் - என்னை இவ் வருத்தத்திலே அகப்படுத்தின உயர்ந்தோனாகிய இவன். ஒள் நிற உருவச் செந்தீ - ஒள்ளிய நிறத்தையுடைய சிவந்த நெருப்பு. தீ உருவு கொண்டனைய வேலான் - நெருப்பு வேலின் வடிவு கொண்டாற்போன்ற வேலையுடையவன்.

கஎஅ. யாவனேயானும் - யாவனாயினும்; தேவனாயினும் மகனாயினுமாக. அருநிறைக் கதவம் - திறப்பதற்கு அரிய நிறை யென்னும் கதவு. காவல் நெஞ்சம் - காக்கப்படும் நெஞ்சம். யாத்தாய் - பிணித்து விட்டாய். தேவரிற் செறிய யாப்பன் - தேவரைப்போல இமையாது நோக்கும்படி செறியப் பிணிப்பேன். சிறிது இடைப்படுக - சிறிது பொழுது கழிக.

பின்பு, தத்தை தோழிவாயிலாக யாழொன்றைச் சீவகனிடம் கொடுத்தாள். அவன் அதன்கண் குற்றம் காட்டினன்; இவ்வாறே பல யாழ்கள் தரப்பட்டன; அவனால் அவை குற்றமுடையவை என நாட்டப்பட்டன. முடிவில் நல்ல யாழொன்றை நல்கினள் தத்தை; அதனிடையும் குற்றமுண்டெனக் காட்டுவான், சீவகன் அதனையுடைத்து, அதனுள் மயிர் இருத்தலைக் காட்டினன். இறுதியாக அவன் தன் தம்பி நவுலன் வைத்திருந்த நரம்பு கொண்டு யாழைத் திருத்தி இசைக்கலுற்றான்.

## சீவகன் பாட்டு

கன்னி நாகம் கலங்க மலங்கி
மின்னும் இரங்கு மழையென் கோயான்;
மின்னு மழையின் மெலியும் அரிவை
பொன்னாண் பொருத முலையென் கோயான்: ௧௭௯

கருவி வானம் கான்ற புயலின்
அருவி யரற்று மலையென் கோயான்;
அருவி யரற்று மலைகண் டழுங்கும்
மருவார் சாயல் மனமென் கோயான். ௧௮௦

வான மீனின் அரும்பி மலர்ந்து
கானம் பூத்த காரென் கோயான்;
கானம் பூத்த கார்கண் டழுங்கும்
தேனார் கோதை பரிந்தென் கோயான். ௧௮௧

---

௧௭௯. கன்னி நாகம் - கன்னியாகிய நாகம். மலங்கி - மயங்கி. மழை மின்னும் - மழை மேகம் மின்னாநிற்கும்; இரங்கும் - முழங்கும். பொன்நாண் - பொற்கச்சு. மின்னு மழையின் - மின்னலோடு கூடிய மழையால். மெலியும் - மெலிவாள்.

இதுமுதல் மூன்றும், கூதிர்ப்பருவங் குறித்துப் பிரியக்கருதிய தலைவனைத் தோழி செலவழுங்குவித்தல்.

௧௮௦. கருவி வானம் - ஒருங்கு தொக்க மேகங்கள். கான்ற புயல் - பெய்த மழை. அருவியரற்றும் - அருவிகள் முழங்கும். மருவார் சாயல் மனம் அழுங்கும் - மருவுதல் நிறைந்த சாயலையுடைய தலைவி மனமழுங்குவாள்.

௧௮௧. வான மீனின் - வானத்து மீன்களைப்போல. கார் - கார்வரவால். கானம் - காட்டிடத்தே பூக்கள். பூத்த - பூத்துள்ளன. தேனார் கோதை - தேன் சொரியும் பூவாலாகிய மாலைபோல்வாள், பரிந்து - வருந்தி. அழுங்கும் - வருந்துவள்.

## பாட்டின் பயன்

விண்ணவர் வியப்ப விஞ்சை வீரர்கள் விரும்பி யேத்த,
மண்ணவர் மகிழ வான்கண் பறவைமெய்ம் மறந்து சோர,
அண்ணல்தான் அனங்கன் நாணப் பாடினன் ; அரச ரெல்லாம்
பண்ணமைத் தெழுதப் பட்ட பாவைபோ லாயினரே. கஅஉ

## காந்தருவதத்தை பாடத் தொடங்குதல்

கோதை புறந்தாழக் குண்டலமும் பொற்றோடும்
காதி னொளிர்ந்திலங்கக் காமர் நுதல்வியர்ப்ப
மாதர் எருத்தம் இடம்கோட்டி மாமதுர
கீதம் இடையிலாள் பாடத் தொடங்கினள். கஅ௩

## பாட்டு

இலையார் எரிமணிப்பூண் ஏந்து முலையும்
சிலையார் திருநுதலும் செம்பசலை மூழ்க,
மலையார் இலங்கருவி வாள்போல மின்னும் ;
கலையார்தீஞ் சொல்லினய் ! காணர்கொல் கேள்வர். கஅச

---

கஅஉ. விஞ்சை வீரர் - வித்தியாதரர். வான்கண் பறவை - வானத்திற் படிந்துகொண்டிருந்த கின்னர மிதுனங்கள். பண்ணமைத் தெழுதப் பட்ட பாவை - எழுதும்படி அமர்வித்து எழுதப்பட்ட பாவைபோல.

கஅ௩. புறந் தாழ - முதுகிடத்தே கிடந்தசைய. ஒளிர்ந்திலங்க - மிக விளங்க. காமர் - அழகிய. வியர்ப்ப - வேர்வையரும்ப. மாதர் - தத்தை. எருத்தம் இடம் கோட்டி - கழுத்தை இடப்பக்கத்தே வளைத்து. இடையிலாள் - ஒப்பில்லாத அவள்.

கஅச. இலையார் பூண், எரிமணிப் பூண். இலையார் பூண் - இலைத் தொழில் செய்யப்பட்ட பூண். எரிமணிப் பூண் - விளங்குகின்ற ஒளியினையுடைய மணிகள் வைத்து இழைக்கப்பெற்ற பூண். செம்பசலை - செவ்விய பசலை, மலையார் இலங்கு அருவி - மலையிடத்தே விளங்கும் அருவிகள். மின்னும் - ஒளிவிடும். கலையார் தீஞ்சொல் - இசைக்கலை நிறைந்த சொல்.

தலைமகன் குறித்த இளவேனில் வரவு கண்டு ஆற்றுளாய தலைவி தோழிக்குக் கூறியது பொருளாக இதுமுதல் மூன்று பாட்டுக்களும் வருகின்றன.

பிறையார் திருநுதலும் பேரம ருண்கண்ணும்
பொறையார் வனமுலையும் பூம்பசலை மூழ்க,
நிறைவாள் இலங்கருவி நீள்வரைமேல் மின்னும்;
கறைவேலுண் கண்ணிணாய்! காணார்கொல் கேள்வர். கஅரு

அரும்பேர் வனமுலையும் ஆடமைமென் றோளும்
திருந்தேர் பிறைநுதலும் செம்பசலை மூழ்க
நெருங்கார் மணியருவி நீள்வரைமேல் மின்னும்;
கரும்பார் தீஞ் சொல்லினாய்! காணார்கொல் கேள்வர். கஅசு

## காந்தருவதத்தை இசையில் தோல்வியுறல்

பண்ணொன்று, பாட லதுவொன்று; பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும் வாணரம்பின் மேல்நடவா;
விண்ணின் றியங்கி மிடறு நடுநடுங்கி
எண்ணின்றி மாதர் இசைதோற் றிருந்தனளே. கஅஎ

இச் செய்தி கண்டு யாவரும் வியப்புற்றிருக்க, தத்தை பொன்மாலை யொன்றை யெடுத்துச் சீவகற்குச் சூட்டி அவன் அடியில் வீழ்ந்து இறைஞ்சினாள். சீவகன் அவளது வடிவழகு முற்றும் பருகுவான்போல நோக்கிப் பெருவேட்கை யெய்தினான்.

---

கஅரு. பிறையார் - பிறைபோல். உண்கண் - மைதீட்டிய கண். பொறையார் - கனம் பொருந்திய. வாள் நிறை இலங்கருவி - ஒளி நிறைந்த விளங்குகின்ற அருவி. கறைவேல் - குருதிக்கறை படிந்தவேல்.

கஅசு. அரும்பேர் - அரும்பு போன்ற. ஆடமை மென்றோள் - அசைகின்ற மூங்கில் போன்ற மெல்லிய தோள். திருந்து ஏர் பிறை நுதல்- திருந்திய அழகிய பிறைபோன்ற நுதல், நெருங்கு ஆர்மணி அருவி - நெருங்கக் கோத்த முத்துமாலை போலும் அருவி. கரும்பார் தீஞ்சொல் - கரும்பு போல் தீவிய சொல்.

கஅஎ. பண்ணொன்று பாடல் ஒன்று - அவள் பாடின பாட்டும் அதற்கேற்ற யாழும் ஒரு திறம், அதுவொன்று - அவன் பாடின பாட்டும் யாழும் வேறொன்று, மண்ணொன்று மெல்விரல் - யாழ் இசைத்தற்குப் பொருந்தப் பண்ணிய மெல்விரல். வாள் நரம்பு - ஒளியுடைய நரம்பு. நடவா - யாழும் பாட்டும் இசைய நடந்தில. விண்ணின்று-விண்ணிலே நின்று. மிடறு நடுநடுங்கி - கழுத்திலே கம்பித்தலால், எண் இன்றி - கருத்தை யிழந்து, இசைதோற்று - இசையிலே சிறிது குறைந்து தோற்று.

### தோழியர் திரை வீழ்த்தல்

கோதையும் தோடு மின்னக்
குண்டலம் திருவில் வீச
மாதரம் பாவை நாணி
மழைமினின் ஒசிந்து நிற்பக்
காதலந் தோழி மார்கள்
கருங்கயற் கண்ணி னாளை
ஏதமொன் றின்றிப் பூம்பட்டு
எந்திர வெழினி வீழ்த்தார். கஅஅ

### கட்டியங்காரன் பொருமையுற்று அரசகுமரர்க்கு உரைத்தல்

வடதிசைக் குன்ற மன்ன வான்குலம் மாசு செய்தீர்
விடுகதிர்ப் பருதி முன்னர் மின்மினி விளக்க மொத்தீர்;
வடுவுரை யென்று மாயும் வாளமர் அஞ்சி னீரேல்
முடிதுறந் தளியிர் போகி முனிவனம் புகுமின்என்றான். கஅகூ

திருமக ளிவளைச் சேர்ந்தான் தெண்டிரை யாடை வேலி
இருநில மகட்கும் செம்பொன் நேமிக்கும் இறைவ னாகும்;
செருநிலத் திவனை வென்றீர் ! திருவினுக் குரியீர் என்றான்:
கருமன நச்சு வெஞ்சொற் கட்டியங் காரன் அன்றே. ககூ0

---

கஅஅ. தோட்டின் ஒளி கோதையிலே விளங்குதலால், "கோதையும் தோடும் மின்ன" என்றார். திரு வில் - அழகிய ஒளி. மாதரம்பாவை- மாதராகிய பாவைபோலும் காந்தருவதத்தை. மழை மின்னின் - முகிலிடத்தே தோன்றும் மின்னலைப்போல, ஒசிந்துநிற்ப - நுடங்கி நிற்க. ஏதம் ஒன்று இன்றி - இறந்துபடுவது இன்றி. எந்திர எழினி - எந்திரத்தால் வீழும் திரை.

கஅகூ. வடதிசைக் குன்றமன்ன வான் குலம் - வடதிசைக் கண்ணதாகிய மேருமலைபோல் நிலைகுலையாத பெரிய அரசகுலம். அரசன் மகளை வணிகன் கொண்டான் என்ற குற்றம். விடுகதிர்ப் பருதி - மிக்க ஒளிவிடும் கதிர்களையுடைய ஞாயிறு. வடுவுரை - இகழ்ச்சி பயந்த சொல். அளியீர்- அளிக்கத் தக்கீர்; விளி. முனி வனம் புகுமின் - முனிகளாய்க் காட்டிலே சென்று வாழ்மின்.

ககூ0. திரு - கண்டார் விரும்பும் அழகு. தெண்டிரை ஆடை வேலி- தெளிந்த அலைகளையுடைய கடலைச் சூழவுடைய. நேமி - நேமிமால்வரை. (சக்கரவாள மலை). செரு நிலத்து - போர்க்களத்தில். திருவினுக்கு - திருமகளாகிய இக் காந்தருவதத்தைக்கு. கருமனம் - கொடிய மனம். நச்சு வெஞ்சொல் - நஞ்சாகிய கொடுஞ்சொல்.

அதுகேட்டுச் சினம் மூண்ட அரசர்கள் தத்தம் பெருஞ் சேனையுடன் சீவகனோடு பொருதற் கெழுந்தனர். இதனை முன்னரே எண்ணிச் சீவகன் தோழர் பலரும் வந்திருந்தனர். அவருள் பதுமுகன் என்பான் அரசர்கட்குச் சில சொல்லலுற்றான்.

## பதுமுகன் நெடுமொழி

இசையினில் இவட்குத் தோற்றும் யானையால் வேறும் என்னின்
இசைவதொன் றன்று; கண்டீர்; இதனையான் இரந்து சொன்னேன்;
வசையுடைத் தரசர்க் கெல்லாம்; வழிமுறை வந்த வாறே
திசைமுகம் படர்க வல்லே; தீத்தொட்டால் சுடுவ தன்றே. ககூக

மத்திரிப் புடைய நாகம் வாய்வழி கடாத்த தாகி
உத்தமப் பிடிக்கண் நின்றால் உடற்றுதல் களபக் காமோ?
பத்தினிப் பாவை நம்பி சீவகன் பால ளானால்,
அத்திறம் கருதியூக்கல் அரசிர்காள்! நுங்கட் காமோ? ககூஉ

இச் சொற்களைக் கேட்டும் அடங்காத அரசர் தானை நன்கு சூழ்ந்துகொண்டது; அதுகண்ட சீவகன் காந்தருவ தத்தையைத் தேற்றி அவள் தோழியுடன் இருத்திவிட்டு அவளுக்குக் காவலாகப் பதுமுகனை நிறுத்தினான். ஏனைப் புத்திசேனன் முதலிய தோழரும், நபுல விபுலர் என்ற தம்பிமாரும் தன்னோடு வரச் சீவகன் போர்க்களம் புகுந்தான்.

## அரசர்கள் சீவகனை எள்ளுதல்

வாணிக மொன்றும் தேற்றாய்; முதலொடும் கேடு வந்தால்,
ஊணிகந் தீட்டப் பட்ட வூதிய வொழுக்கின் நெஞ்சத்து

---

ககூக. தோற்றும் - தோற்ற நாம். யானையால் வேறும் - இசைக்குத் தோற்கும் யானையால் வெல்லுவோம். என்னின் - என்று கருதின். வசை - பிறர்க்கு உரியவளாகிய இவளை இனி நீவிர் விரும்புவதாகிய குற்றம். வழிமுறை - அடைவே. வல்லே படர்க - விரையச் சென்று சேர்க.

ககூஉ. மத்திரிப்பு - செற்றம். நாகம் - யானை. உத்தமப் பிடிக்கண் - உயர்ந்த பிடியானைகட்கு இடையே. உடற்றுதல் - அதனைக் கெடுப்பது. களபக்கு - யானைக் கன்றிற்கு. அத் திறம் - அவளைப் பெறுமாறு. கருதியூக்கல் - கருதிப் போர் முயலுதல். ஆமோ - தகுமோ. "அரசராதலின் இவளைப் பெறுதற்குரியீ ராயினும் கலைகளானும் ஆண்மை முதலியவற்றானும் குறைபாடுடைமையின் பெறலரிது என்றான்."

ஏணிகந் திலேசு நோக்கி இருமுதல் கெடாமை கொள்வார் ;
சேணிகந் துய்யப் போகின் செறிதொடி யொழிய வென்றூர். ௧௯௩

### சீவகன் மாற்றம் கூறல்

தம்முடைப் பண்டந் தன்னைக் கொடுத்துஅவ ருடைமை கோடல்
எம்முடை யவர்கள் வாழ்க்கை ; எமக்குமஃ தொக்கு மன்றே ;
அம்முடி யரசிர்க் கெல்லாம் என்கையில் அம்பு தந்து
நும்முடைத் திருவும் தேசும் நோக்குமின் கொள்வல் என்றான். ௧௯௪

### போர்த் திறம்

கலந்தது பெரும்படை கணைபெய்ம் மாரிதூய் ;
இலங்கின வாட்குழாம் ; இவுளி ஏற்றன ;
விலங்கின தேர்த்தொகை ; வேழம் காய்ந்தன ;
சிலம்பிய இயமரம் ; தெழித்த சங்கமே. ௧௯௫

தேவதத்தன், நபுல விபுலர், சீதத்தன் முதலியோர் ஒருபுடை நின்று போர் செய்யப் புத்திசேனனும் அவருடன் கலந்து பெரும்போ ருடற்றினன். மற்றொரு பக்கத்தே சீவகன் நந்தட்டனுடன் கூடிப் போர் செய்யுங்கால், அவ

---

௧௯௩. வாணிகம் - வணிகன் சிறுவனாகிய நினக்குரிய வாணிக முறை. ஊன் இகந்து ஈட்டப்பட்ட ஊதிய ஒழுக்கின் - நல்ல உணவும் கொள்ளாது ஈட்டப்படும் ஊதியத்தையே கருதிய ஒழுக்கமுடைய. நெஞ்சத்து என் இகந்து - நெஞ்சின் திண்மையைக் கைவிட்டு. இலேசு - சிறு ஊதியம். இரு முதல் - பெரிய முதல். ஊதியத்துக்கேயன்றி முதலுக்கும் கேடு வந்தால், ஊதியத்தைக் கருதும் கருத்தை முதல்மேல் ஊன்றி அது கெடாதவாறு பாதுகாப்பது வணிக முறை. "ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை, ஊக்கார் அறிவுடையார்" (குறள் ; 463.) உடம்பு, முதல் ; ஊதியம், தத்தை. ஊதியமாகிய தத்தையைக் கைவிட்டு, முதலாகிய உடம்பைக்கொண்டு உய்ந்து போ என்றூர் என்பது.

௧௯௪. எம்முடை யவர்கள் - எம் குலத்தோர். வாழ்க்கை-வாழ்க்கை முறை. அம் முடி யரசிர்க்கு எல்லாம் - அழகிய முடி சூடிய அரசராகிய நுங்கட்கெல்லாம். திரு - வீரத்திரு. தேசு - புகழ். நோக்குமின் - வன்மையிருப்பின் உங்களைக் காத்துக்கொண்மின்.

௧௯௫. கணை தூய் - அம்புகளைச் சொரிந்து. வாட் குழாம் - வாளினது கூட்டம். இவுளி ஏற்றன - குதிரைகள் ஒன்றையொன்று போரேற்றன. விலங்கின - குறுக்கிட்டுத் தடுத்தன. இயமரம் - ஒருவகை இசைக் கருவி. தெழித்த - ஒலித்தன.

னுக்கு வீரமந்திரம் இரண்டு கற்பித்துப் போர்க்குச் செலுத்தினான். அவன் தேர் ஒருபுறம் செல்ல, சீவகன் தேரும் கறங்கெனத் திரிந்து அம்புகளைச் சொரியலுற்றது.

## சீவகன் போர்

நுங்களை வீணை வென்ற நூபுர வடியி னாள்தன்
வெங்களித் தடங்கண் கண்டீர் விருந்தெதிர் கொண்மின் என்னா,
அங்களி யரசர்க் கெல்லாம் ஓரொன்றும் இரண்டு மாகச்
செங்களிப் பகழி யொப்பித் துள்ளவா றூட்டி னானே. ௧௬௬

நன்மன வேந்தர் தங்கள் நகைமணி மார்பம் நக்கிப்
புன்மன வேந்தர் தங்கள் பொன்னணி கவசம் கீறி
இன்னுயிர் கவர்ந்து தீமை யினிக்கொள்ளு முடம்பி னானும்
துன்னன்மின் என்ப வேபோல் சுடுசரம் பரந்த வன்றே. ௧௬௭

இவ்வாறு நிகழ்ந்த இப் போரின்கண் அனைவரும் தத்தமக்கு இயன்ற திறமெல்லாம் இடையீடின்றிப் போர் செய்து, எதிர்த்த அரசர் தானையைக் கொன்று அவ்வரசர்களையும் பிறக்கிட்டோடச் செய்தனர்.

---

௧௬௬. வீணை - வீணையால். நூபுரம் - சிலம்பு. வெங்களித் தடங்கண் - யான் விடும் இவ்வம்புகள் அம்பல்ல ; வெவ்விய களிப்புமிக்க பெரிய கண்களாம். விருந்து எதிர் கொண்மின் - இவற்றை விருந்தாக வந்து ஏற்றுக் கொண்மின். என்னா - என்று சொல்லி. செங்களிப் பகழி - சிவந்த செருக்கிவரும் அம்புகளை. ஒப்பித்து - விழுக்காடிட்டு. ஊட்டினான் - உடலில் பட்டு ஊடுருவச் செலுத்தினான்.

"விருந்து" என்றதற் கேற்ப "ஊட்டினான்" என்றார்.

௧௬௭. பிறர்மனை நயத்தல் நன்மனவேந்தர் தங்கட்கு நகையாம் ; இவர் பிறர்மனை நயக்கும் புன்மன வேந்தரைக் கண்டு எள்ளி நகையாடுவர் என்பதாம், நல்வேந்தர்க்கு நகையாய்த் தோன்றலின், இனிக்கொள்ளும் உடம்பினும் இத் தீமை துன்னன்மின் என்பது போல், சீவகன் விட்ட சுடுசரம், புன்மன வேந்தரது மணிமார்பம் நக்கி, கவசம் கீறி, உயிர் கவர்ந்து பரந்தோடின. நக்கி - தீண்டி. துன்னன்மின் - பொருந்தாதீர்கள். சுடுசரம் - சுடுகின்ற தீயைக் கக்கிவரும் அம்புகள். புன்மனம் - பிறர்மனையை நயக்கும் இழிநினைவு கொண்ட மனம் ; நன் மனம் அஃதில்லாத நல்ல மனம்.

## போர் முடிவு

குழையுடை முகத்தி னுள்கண் கோணைப்போர் செய்த மன்னர்
மழையிடை மின்னின் நொய்தா மறைந்தனர் ; விஞ்சை வேந்தர்
முழையிடைச் சிங்க மன்னுன் மொய்யம ரேத்தி யார்த்தார் :
விழவுடை வீதி மூதூர் விருப்பொடு மலிந்த தன்றே. ௧௧அ

பின்பு சீவகன் காந்தருவதத்தையை யழைத்துச் சென்று மனையகம்புக்கான்; தோழரும் தம்பியரும் உடன் போந்தனர்; பதுமுகன் புண்ணுற்ற தன் மார்பில் சீலையிட்டு எலி மயிர்ச் சட்டை யணிந்துகொண்டான். மனைக்கட் புகுந்த சீவகன், போர்ச் செயலால் பிறந்த பாவம் போக, பொன்னுல் உருவம் செய்து தானம் செய்தான். பின்பு கோயிற்குச் சென்று வழிபட்டு மனையடைந்தான்.

## சீவகன் தத்தையை மணத்தல்

இன்னிய முழங்கி யார்ப்ப ஈண்டெரி திகழ வேதம்
துன்னினர் பலாசிற் செய்த துடுப்பின்நெய் சொரிந்து வேட்ப.
மின்னியல் கலச நன்னீர் சொரிந்தனன் ; வீர னேற்ருன் ;
முன்னுபு விளங்கு வெள்ளி மூளைத்தெழ முருக னன்னுன். ௧௧௧

## கலுழவேகன் ஓலை விடுத்தல்

சீவகன் தத்தையுடன் கூடி இனிதிருக்கும் நாளில் ஒரு நாள் அவளுடன் அவன் இளமரக்கா ஒன்றிற்குச் செல்ல, அங்கே ஒருவன் தோன்றி, சீவகன்பால் ஓலையொன்றை

---

௧௧அ. முகத்தினுள் கண் - முகத்தினையுடைய காந்தருவதத்தை பொருட்டாக. கோணைப் போர் - மாறுபாட்டையுடைய போர். மழை - முகில். நொய்தா மறைந்தனர் - புகுந்தவிடந் தெரியாதவாறு மறைந்தனர். முழையிடைச் சிங்கம் - முழைஞ்சில் வாழும் அரிமா. மொய்யமர் - நெருங்கிச் செய்யும் போர்த்திறம். மூதூர் - மூதூரிலுள்ளவர். விருப்பொடு - சீவகனைக் காணும் விருப்பத்துடன்.

௧௧௧. இன் இயம் - இனிய மண இயங்கள். எரி திகழ - வேள்வித் தீ எரிய. வேதம் துன்னினர் - வேத முணர்ந்த பார்ப்பனர். பலாசிற் செய்த துடுப்பு - பலாசக் கொம்பினுல் செய்த வேள்வித் துடுப்பு. மின்னியல் கலசம் - மின் போல் ஒளிவிடும் கலம். சொரிந்தனன் - சீதத்தன் நீர் வார்த்தான். வீரன் - சீவகன். முன்னுபு - கருதி. வெள்ளி - வெள்ளியாகிய கோள்.

நீட்டினன். அதன்கண் சீவகன் தத்தையை வீணையால் வென்றதும், கட்டியங்காரனால் போர்நிகழ்ந்ததும், பின்பு மணம் நடந்ததும் தரன் என்பானால் தனக்குச் சொல்லப் பட்டன எனக் கலுழவேகன் பாராட்டி எழுதியிருந்தான். மேலும்,

எள்ளுநர்கள் சாயஎன தோளிரண்டும் நோக்கி
வெள்ளிமுழு துங்கொடி எடுத்ததுஇக லேத்தி
கள்செய்மலர் மார்பன்உறு காப்பிகழ்த லின்றி
உள்ளுபொருள் எம்முணர்த்தி யன்றியுள வேண்டா; உ00

ஆம்பொருள்க ளாகும்அது யார்க்குமொழிக் கொண்ணா;
போம்பொருள்கள் போகுமவை பொறியின்வகை வண்ணம்;
தேம்புனலை நீர்க்கடலும் சென்றுதர லின்றே;
வீங்குபுனல் யாறுமழை வேண்டியறி யாதே. உ0க

என்று இவ்வாறு எழுதியிருந்த ஓலையைப் படித்த சீவகன் மிக மகிழ்ந்து அக் கலுழவேகனை மாமன் அடியைத் திசை நோக்கி வணங்கி, அன்பு மிகவுடையனாய் நின்ற தரனுக்கு விடை கொடுத்தான். பின்பு கலுழவேகன் விடுத்த இனிய பொருள் பலவற்றையும் சீவகன் காந்தருவதத்தைக் குத் தந்து களிப்பித்தான்.

---

உ00. எள்ளுநர்கள் - இகழ்ந்திருக்கும் பகைவர். சாய - கெடும்படி. இகல் ஏத்தி - போரைப் பாராட்டி. கொடி எடுத்தது - விழா எடுத்தது. கள்செய் மலர்மார்பன் - சீவகனுக்கு விளி. உறுகாப்பு - மிக்க காவல். இகழ்தல் இன்றி - சோர்ந்திருப்பதின்றி. உள்ளு பொருள் - கருதும் பொருள். எம் உணர்த்தியன்றி உளவேண்டா - எமக்கு முன்னர் உணர்த்தி யன்றிச் செய்யக் கருத வேண்டா.

உ0க. அது - அறிக்க வொண்ணாது ஆகும் தன்மை. அவை - ஆவனவும் போவனவுமாகிய அவை. பொறியின்வகை வண்ணம் - இருவினையின் கூறுகிய இயல்பு. தேம்புனலை...இன்றே - உப்பு நீரையுடைய கடல் இனிய நீரைத் தானே உலகிற்குப் போந்து கொடுப்பதில்லை; என்றது தீயோர் பிறர்க்கு இனிமை செய்யார் என்பது. வீங்குபுனல் யாறு...... அறியாதே - மேகம் யாற்றுக்கு மிக்க நீரைக்கொடுக்க விரும்பி யறியாது; என்றது, " உவர்த்த நீரை நன்னீராக்கி யாற்றுக்குக் கொடுப்பேனென்னும் கருத்து " முகிலுக்கு இல்லாமை அதற்கு இயல்பு.

# ௪. குணமாலையார் இலம்பகம்

[**குணமாலையார் இலம்பகம்:** இது குணமாலையைச் சீவகன் மணந்துகொண்ட செய்தியைக் கூறும் இலம்பகம். குணமாலையும் சுரமஞ்சரியும் நீர்விளையாடச் சென்றதும், அவர்கள் இருவரும் சுண்ணம் காரணமாகப் பிரிந்து நீங்கியதும், குணமாலை நீராடி வருங்கால் அசனிவேகம் என்னும் அரசுவா மதம் கொண்டு அவளைக் கொல்லச் சென்றதும், சீவகன் அதனையடர்த்து அவளைக் காத்ததும், அதுவே வாயிலாக அவள் சீவகன்பால் கருத்தைப் போக்கியதும், கிள்ளையைத் தூதுவிட, சீவகன் மணத்துக்கு இசைந்ததும், குணமாலை மணமும், கட்டியங்காரன் சினம் கொண்டு சீவகனைப் பற்றி வருமாறு மதனனை ஏவியதும், மதனன் முதலாயினார் அவனைக் கொண்டேகுங்கால் தேவன் இடியும் மழையும் காற்றும் வருவித்து மயக்கி, சீவகனைக் கொண்டேகியதும், பிறவும் இதன்கண் கூறப்படுகின்றன.]

இராசமாபுரத்தே சீவகன் காந்தருவதத்தையுடன் இனிது இருந்து வருநாளில் வேனிற்காலம் வந்தது.

காசறு துறவின் மிக்க கடவுளர் சிந்தை போல
மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை யயண முன்னி
ஆசற நடக்கும் நாளுள் ஐங்கணைக் கிழவன் வைகிப்
பாசறைப் பரிவுதீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான். ௨0௨

பொழில்களில் மரமும் செடியும் கொடியும் இனிய பூக்களைப் பூத்து நறுமணம் கமழ்ந்தன; புதுத் தளிரும் இலையும் தழைத்து இனிய நீழல் செய்தன; தென்றல் பொழில்களில் நுழைந்து போந்து வேனில் வெப்பத்தை

---

௨0௨. காசறு துறவு - குற்றமற்ற துறவறத்தில் சிறந்த முனிவரர். மாசறு விசும்பின் - மாசற்ற வானத்தில். வெய்யோன் - ஞாயிறு. வடதிசை அயணம் - வடதிசைச் செலவு (உத்தராயணம்). முன்னி - கருதி. ஆசற - குற்றமற. ஐங்கணைக் கிழவன் - காமன், வைகி - வைக; தங்கும்படி. பாசறைப் பரிவு - பாசறைக்கண் தங்கும் வருத்தம். கூதிர் தொடங்கிப் பாடி வீட்டிலிருந்து இளவேனிற்கண் இன்ப நுகர்தற்கு மீள் வராதலின் "பாசறைப் பரிவு தீர்க்கும்" என்றார். பங்குனிப் பருவம் - இளவேனில்.

மாற்றித் தண்மை பயந்து மெல்லெலன வீசலுற்றது. குயி லோசையும்; வண்டிசையும் மாலைப் போதில் மக்கட்குப் பேரின்பம் தந்தன.

## நகர மக்கள் பொழிற் கேகுதல்

நாக நாண்மலர் நாறு கடிநகர்
ஏக வின்பத் திராச புரத்தவர்,
மாக நந்து மணங்கமழ் யாற்றயல்
போக மேவினர் பூமரக் காவினே. உ0௩

வாச வெண்ணெயும் வண்டிமிர் சாந்தமும்
பூசு சுண்ணமும் உண்ணும் அடிசிலும்
காசில் போகக் கலப்பையும் கொண்டவண்
மாசில் மாசனம் வாயில் மடுத்தவே. உ0௪

பாட லோசையும் பண்ணொலி யோசையும்
ஆட லோசையும் ஆர்ப்பொலி யோசையும்
ஓடை யானை யுரற்றொலி யோசையும்
ஊடு போய்உயர் வானுல குற்றவே. உ0௫

## மகளிர் இருந்த பொழிற் சிறப்பு

குவளையும் தாமரையும் நிரம்பித் தெளிந்த நீர் பொருந்திய குளம் ஒரு புறம் விளங்க, பூவும் தளிரும் சுமந்து புதர்கள் அழகு செய்ய, வாழையும் பலாவும் மாவும் பிறவும் இனிய கனிகளைச் சுமந்து இன்பம் செய்ய, நகர மகளிர் பொழில் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர்.

---

உ0௩. நாகம் - புன்னை. நாறும் - மணம் கமழும். ஏக இன்பத்து இராசமாபுரத்தவர் - இணையிலா வின்பத்தையுடைய இராசமாபுரத்து மக்கள். மாகம் நந்தும் - வானளாவும். மாகநந்து பூமரக்கா என இயையும். போகம் மேவினர் - போக நுகர்ச்சியை மனத்தால் பொருந்தினர்.

உ0௪. வாச வெண்ணெயும் - நறுமணம் ஊட்டிய எண்ணெயும். இமிர் - ஒலிக்கும். சாந்தம் - சந்தனம். அடிசில் - சோறு. போகக் கலப்பை - போகத்திற்குரிய யாழ் முதலியவற்றைப் பெய்த பெட்டி. மாசனம் - மிக்க மக்கள். காசு, மாசு - குற்றம்.

உ0௫. பாடலோசை - பாடுதலால் பிறந்த ஓசை. பண்ணொலி - யாழ்ஓசை. ஆர்ப்பொலி - ஆரவாரம். ஓடையானை - முகபட்டம் அணிந்த யானை. உரற்றொலி - பிளிறும் ஓசை. ஊடுபோய் - தம்மிற் கலந்து போய்.

கூறப் பட்டவக் கொய்ம்மலர்க் காவகம்
ஊறித் தேன்துளித் தொண்மது வார்மணம்
நாறி நாண்மலர் வெண்மணல் தாய்நிழல்
தேறித் தெண்கயம் புக்கது போன்றதே. ௨௦௬

## குணமாலையும் சுரமஞ்சரியும் மேவியிருத்தல்

காவிற் கண்டத் திரைவளைத் தாயிடை
மேவி விண்ணவர் மங்கையர் போன்றுதம்
பூவை யும்கிளி யும்மிழற் றப்புகுந்து
ஆவி யந்துகி லாரமர்ந் தார்களே. ௨௦௭

பௌவ நீர்ப்பவ ளக்கொடி போல்பவள்
மௌவ லங்குழ லாள்சுர மஞ்சரி
கொவ்வை யங்கனி வாய்க்குண மாலையோடு
எவ்வந் தீர்ந்திருந் தாள்இது கூறுவாள். ௨௦௮

குணமாலை, குபேரமித்திரன் என்னும் நாய்கனுக்கு அவன் மனைவி விநயமாலை என்பாட்குப் பிறந்த மகள்; சுரமஞ்சரி என்பவள் குபேரதத்தன், சுமதி என்ற இருவர்க்கும் பிறந்த மகள்; இவளும் குணமாலை மரபைச் சேர்ந்தவள்; குணமாலையும் சுரமஞ்சரியும் இளமை தொட்டே பிரியா நண்பர்கள். வேனில் விளையாட்டுக்குறித்து, இருவரும் சுண்ணம் செய்து கொணர்ந்துள்ளனர்.

---

௨௦௬. கூறப்பட்ட - முன்னே கூறிய, கொய்ம்மலர் - கொய்யப்படும் மலர். காவகம் - காவின் உள்ளாகிய இடம். தேன் ஊறித் துளித்து - தேன் சுரந்து துளியாகச் சொரிந்து. வார் ஒண் மது - ஒழுகுகின்ற ஒள்ளிய தேன்- மணல் தாய் - மணல் பரவி, காவகம், கயம்புக்கது போன்றது என்க.

௨௦௭. காவில் - அக் காவகத்தில். கண்டத் திரை - பல்வண்ணத் திரை. ஆயிடை - அந்த உள்ளாகிய காவிலே, மிழற்ற - பேச. ஆவியந் துகிலார் - பாலாவி போலும் துகிலையுடைய மகளிர், இவர்கள் சுரமஞ்சரியும் குணமாலையுமாவர். துகிலார், காவில், திரைவளைத்து ஆயிடை மேவி, மிழற்ற, புகுந்து, மங்கையர் போன்று அமர்ந்தார்கள் என்க.

௨௦௮, பவளக்கொடி போல்பவளும், மல்லிகை மலர் சூடிய குழலாளுமான சுரமஞ்சரி என்க. எவ்வம் தீர்ந்திருந்தாள் - முன்பு ஒரு வெறுப்பும் இன்றியிருந்தவள். இது - இதனை மேற் கூறுகின்றார்.

### சுரமஞ்சரி குணமாலை சுண்ணத்தை இகழ்தல்

சுண்ண மென்பதோர் பேர்கொடு சோர்குழல்
வண்ண மாலை நுசுப்பு வருத்துவான்
எண்ணி வந்தன கூறிவை யோவென
நண்ணி மாலையை நக்கன ளென்பவே. உ0சு

### குணமாலை உளம் கொதித்துக் கூறல்

பைம்பொன் னீளுல கன்றியிப் பார்மிசை
இம்ப ரென்சுண்ணம் ஏய்ப்ப உளவெனில்
செம்பொற் பாவையன் னாய்!செப்பு நீஎனக்
கொம்ப னாளும் கொதித்திது கூறினள். உகூ0

### சுரமஞ்சரி சினந்து கூறல்

சுண்ணம் தோற்றனம் தீம்புன லாடலம்
எண்ணில் கோடிபொன் ஈதும்வென் றூற்கென
வண்ண வார்குழ லேழையர் தம்முளே
கண்ணற் றார்கமழ் சுண்ணத்தின் என்பவே. உகூக

---

உ0சு. பேர் கொடு - பெயரை ஏறட்டுக்கொண்டு, நக்கனள் - இகழ்ந்தாள். சோர் குழல் வண்ண நுசுப்பு மாலை, விளி, சோர் குழல் - தாழ்ந்த கூந்தலும். வண்ண நுசுப்பு மாலை - அழகிய இடையுமுடைய மாலையே, என்ப - அசை. நக்கனள் சுரமஞ்சரி.

இவை சுண்ணம் என்பதோர் பேர்கொடு வருத்துவான் எண்ணி வந்தனவோ கூறு என நண்ணி நக்கனள் என்க.

உகூ0. பைம்பொன் நீளுலகு - தேவருலகு. பொன் என்றதற் கேற்பப் "பைம்பொன்" என விசேடிக்கப்பட்டது. இம்பர் - இவ்விடத்தே. ஏய்ப்ப - ஒப்பன. உள - வேறு சில உண்டு. எனில் - அறிவுடையோர் கூறுவாராயின். என - என்று குணமாலை சொல்ல. கொம்பனாள் - பூங்கொம்பு போன்றவளாகிய சுரமஞ்சரி. பொற்பாவை - பொன்னாற் செய்த கொல்லிப்பாவை.

உகூக. தோற்றனம் - தோற்போமாயின். புனல் ஆடலம் - நீரில் விளையாடக் கடவேமல்லேம், வென்றூற்கு - புலன்களை வென்றோனாகிய அருகன் கோயிலுக்கு. கோடி பொன் - கோடி யென்னும் எண்ணளவாகிய பொன். எண்ணில் - மாற்றில்லாத. என - என்று சுரமஞ்சரி கூறியமைந்தாளாக. வார்குழல் - நீண்ட கூந்தல். ஏழையர் - மகளிர். சுண்ணத்தின் - சுண்ணம் காரணமாக. கண்ணற்றார் - நட்புக் குலைந்தனர். தோற்றனம் - முற்றெச்சம்.

இருவர் தோழியரும் தனித்தனியே இருவர் சுண்ணத்தையும் எடுத்துக்கொண்டு, இவற்றுள் நல்லது தெரிதல் வேண்டி ஆடவர் இருக்கும் சூழலுக்குச் சென்று காட்டுகின்றனர். அவர்கள் அத்துறையில் புலமை மிக்கவன் சீவகனே; அவன்பாற் காட்டுமின் என விடுக்க, அவனைச் சென்றடைகின்றனர்.

### சீவகன் தேர்ந்து குணமாலை சுண்ணம் நன்றெனை உரைத்தல்

"சுண்ணம் நல்லன சூழ்ந்தறிந் தெங்களுக்கு
அண்ணல்! கூறடி யேம்குறை" என்றலும்,
கண்ணிற் கண்டு, "இவை நல்ல; கருங்குழல்
வண்ண மாலையி னீர்!" எனக் கூறினான். உகஉ

### சுரமஞ்சரியின் தோழி கூறல்

"மற்றிம் மாநகர் மைந்தர்கள் யாவரும்
உற்றும் நாறியும் கண்டும் உணர்ந்திவை
பொற்ற சுண்ணம் எனப்புகழ்ந் தார்; நம்பி
கற்ற தும்அவர் தங்களொ டேகொலோ. உகந

ஐய னேஅறி யும்என வந்தனம்
பொய்ய தன்றிப் புலமை நுணுக்கிநீ
நொய்தின் தேர்ந்துரை, நூற்கடல்" என்றுதம்
கையி னல்தொழு தார்கமழ் கோதையார். உகச

---

உகஉ. சூழ்ந்து - ஆராய்ந்து. கூறு - கூறுக. அடியேம் குறை - இதுவே அடிச்சிமார்களாகிய எமது வேண்டுகோள். கண்டு - கூர்ந்து நோக்கி. இவை நல்ல - (குணமாலையினுடைய) இச் சுண்ணம் நல்லனவாம். மாலையினீர் - மாலையினை யுடையீர்.

உகந. உற்றும் - மெய்யால் தொட்டும். நாறியும் - மணம் பார்த்தும், இவை - (சுரமஞ்சரியினுடைய) இச் சுண்ணத்தையே. பொற்ற சுண்ணம் - சிறந்த சுண்ணம். நம்பி - நம்பியாகிய நீ. அவர்தங்களொடே கொலோ - அவர்களோடேயன்றோ, அவரின் வேறுபடுவ தென்னை என்பதாம்,

உகச. அறியும் - வேறுபாட்டை யறிகுவன். ஐயன் - ஐயனாகிய சீவகன். என - என்று பிறர் சொல்லக் கேட்டு. பொய்யதன்றி - பொய்யாகாமல் மெய்யாமாறு. புலமை நுணுக்கி - அறிவைக் கூரிதாக்கி, நொய்தின் - விரைவாக. நூற்கடல் - விளி. நூற் பொருள் பலவும் நிரம்பிய கடல் போன்றவனே. கோதையார் - கோதையணிந்த தோழியர்.

## சீவகன் அவர்களைத் தெளிவித்தல்

நல்ல சுண்ணம் இவை ;இவற் றிற்சிறிது
அல்ல சுண்ணம் ; அதற்கென்னை யென்றிரேல்,
புல்லு கோடைய, பொற்புடைப் பூஞ்சுண்ணம் ;
அல்ல சீதம்செய் காலத்தி னுயவே. உகரு

## சுரமஞ்சரி தோழி மீட்டும் கூறல்

"வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம் ;
தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம் ;
ஓரும் வையத் தியற்கையன் றோ ?" என
வீர வேல்நெடுங் கண்ணி விளம்பினாள். உகசா

## சீவகன் மறுபடியும் வண்டுண்ணக் காட்டிச் சுண்ணம் தெரிவித்தல்

மங்கை நல்லவர் கண்ணும் மனமும்போன்று
எங்கும் ஓடி இடறும் சுரும்புகாள் !
வண்டு காள் !மகிழ் தேனினங் காள் !மது
உண்டு தேக்கிடும் ஒண்ஞிமி றீட்டங்காள் உகஎ

சோலை மஞ்ஞை சுரமைதன் சுண்ணமும்
மாலை யென்னும் மடமயில் சுண்ணமும்

---

உகரு. என்னை யென்றிரேல் - காரணம் என்னை என்று கேட்பீரா யின். புல்லு கோடைய - சுண்ணமிடித்தற்குப் பொருந்திய கோடைக் காலத்தில் இடித்தவை யாகும். அல்ல - நல்லவல்லாத இச் சுண்ணம், சீதம் செய் காலம் - மாரிக்காலம். சீதம் - குளிர்.

உகசா. வாரம் பட்டுழி - ஒருவர்மேல் அன்புற்ற காலத்தே. தீரக் காய்ந்துழி - அன்பு இலதாகிய வழி. ஓரும் - நீரே நினைந்து பாரும். ஓரும் என்னும் முற்றுச்சொல் நிகழ்கால உம்மீறன்றி எதிர்காலமுணர்த்தும் முன் னிலைப் பன்மை ; இஃது ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி. வீரவேல் - வீரம் பொருந்திய வேல் போன்ற.

உகஎ. மங்கை நல்லவர்...சுரும்புகாள்—கண்ணும் மனமும்போன்று சேர்ந்து எங்கும் கடிதாக ஓடித் தட்டித் திரியும் சுரும்புகளே. சுரும்பு - வண்டு, தேன், ஞிமிறு—வண்டின்வகை. மகிழ்தேன் - கள்ளால் மயங்கிய தேன் வண்டு. மது உண்டு தேக்கிடும் ஒள்ஞிமிறு - மதுவை நிரம்பவுண்டு தேக்கெறியும் ஒள்ளிய ஞிமிறுகளே. ஈட்டம் - கூட்டம்.

சால நல்லன தம்முளும் மிக்கன
கோல மாகக்கொண் டுண்மின் எனச்சொன்னான். உகஅ

இவ்வாறு சொல்லிச் சீவகன் இருவர் சுண்ணத்தையும் அள்ளி விண்ணிலே தூவினான்; சுரமஞ்சரி சுண்ணம் கீழே வீழ்ந்தொழிய, குணமாலை சுண்ணத்தை வண்டினம் உண்டொழிந்தன. அதைக் கண்டதும் சீவகன் சுரமஞ்சரியின் தோழியை நோக்கி, "இதனைச் சென்று நும் தலைவியர்க்கு உரைமின்" என்றான். இச்செய்தி கேட்ட சுரமஞ்சரி பெரிதும் அவலமுற்று வேறு உரையொன்றும் ஆடாது வாளா இருந்தொழிந்தாள். அவள் துயரங்கண்ட குணமாலை மனம் பொறாது, அச் சுரமஞ்சரியைத் தேற்ற நினைந்து தகுவது செய்யலுற்றாள்.

### குணமாலை இரத்தல்

திங்க ளங்கதிர் செற்றுழக் கப்பட்ட
பங்க யப்படு வொத்துனை, பாவாய்!
நங்கை யென்னொ டுரையாய்; நனியொல்லே
இங்கண் என்றடி வீழ்ந்திரந் திட்டாள். உகக

### சுரமஞ்சரி கூறல்

மாற்ற மொன்றுரை யாள், "மழை வள்ளல்என்
ஏற்ற சுண்ணத்தை ஏற்பில என்றசொல்
தோற்று வந்தென் சிலம்படி கைதொழ
நோற்பன்; நோற்றனை நீ" என ஏகினாள். உஉ0

---

உகஅ. மஞ்ஞை - மயில். சுரமை - சுரமஞ்சரி. மஞ்ஞைபோன்ற சுரமஞ்சரி என்க. மாலை - குணமாலை. சால நல்லன - மிகவும் நல்லவேயாயினும். தம்முளும் - இவற்றிலும். கோலமாக - நன்றாக. "வெறு திருத்தற்கு இருவரையும் மயில்" என்றான்.

உகக. செற்றுழக்கப்பட்ட - பகைத்துக் கலக்கப்பட்ட. பங்கயப் படு - தாமரைமடு. ஒத்துனை - போல உள்ளாய். ஒல்லே - கடுக. இங்கண் - இவ்விடத்து. இனி, ஒத்துனை பாவாய் - போல வருந்துகின்ற பாவையே என்றுமாம்.

உஉ0. மாற்றம் - மறுமாற்றம். மழை வள்ளல் - மழை போல வண்மையினைச் செய்யும் சீவகன். ஏற்ற சுண்ணம் - நல்ல சுண்ணம். ஏற்பில - நல்லவையல்ல. கைதொழ - கைதொழுது ஏத்தும்படியாக. நோற்றனை - முன்னே நோற்றிருக்கின்றாய்.

இவ்வாறு சென்ற சுரமஞ்சரி தன் மனையகத்தே வாடியிருந்தனள்; அவள் வாட்டத்துக்குக் காரணமாராய்ந்த பெற்றோர் செய்வது யாதெனை ஆராயுமளவில், சுரமஞ்சரி தனக்கோர் கன்னிமாடமமைத்து அதனருகே ஆடவர் எவரும் குறுகாதவாறு காவலமைத்தல் வேண்டும் என வேண்டினள். இதைக் கேட்ட குபேரதத்தனும், கட்டியங்காரனது ஆணைபெற்று, அவள் விரும்பியவண்ணமே ஆடவர் குறுகா அருங்கடியமைந்த கன்னிமாடம் கடிதிற் சமைத்துத் தந்தான்.

## சுரமஞ்சரி நோன்பு

சென்று காலம் குறுகினும் சீவகன்
பொன்துஞ் சாகம் பொருந்தில் பொருந்துக;
அன்றி என்னிறை யார்அழிப் பாரெனு
ஒன்று சிந்தைய ளாகி யொடுங்கினள். உஉக

## குணமாலை சுரமஞ்சரி பிரிவாற்றது வருந்துதல்

இன்பக் காரண மாம்விளை யாட்டினுள்
துன்பக் காரண மாய்த்துறப் பித்திடும்
என்ப தேவினைந் தீர்மலர் மாலைதன்
அன்பி னுல்அவ வித்தழு திட்டாள். உஉஉ

## குணமாலை, பிரிவாற்றமையால் தன் தீவினைக்குக் கழுவாய் செய்தல்

தண்ணம் திம்புன லாடிய தண்மலர்
வண்ண வார்தளிர்ப் பிண்டியி னடிக்கு

---

உஉக. காலம் சென்று குறுகினும் - வாழ்நாள் எல்லை முற்றிக் குறைந்த போழ்தும். பொன் துஞ்சு ஆகம் - திருமகள் தங்குகின்ற மார்பு. அன்றி - அவனையன்றி. ஒன்று சிந்தையளாகி - ஒரு மனத்தையுடையளாய். ஒடுங்கினள் - அமைந்தொழிந்தாள்.

உஉஉ. துறப்பித்திடும் - கெடுத்தொழித்துவிடும். இன்பக் காரணம் - இன்பத்துக்கு முதலாகிய கடுநட்பு. விளையாட்டினுள் - சிறு விளையாட்டு வாயிலாக. துன்பக்காரணம் - பகை. ஆய் - தோன்றி. என்பதே - கடுநட்புப் பகையாக்கும் என்ற பழமொழியையே. விளையாட்டே வினையாம் என்ற பழமொழி கொண்டு அமைக்கினுமாம். ஈர் மலர் - குளிர்ந்த மலர். அவவித்து - வருந்தி.

எண்ணி யாயிர மேந்துபொற் றாமரை
வண்ண மாமலர் ஏற்றி வணங்கினாள். ௨௨௩

இஃதிங்ஙனமிருக்க, வேனில் விருப்பால் பொழில் விளையாடப் புகுந்த நகரமக்கள், பொழில் விளையாட்டிற் பொழுது போக்கி, நீர் விளையாடலைக் கருதினர். பலர் பல வகைத் தானங்களைச் செய்தனர். நந்தட்டன், புத்திசேனன் முதலியோர், தம்மிடையேஇருந்த சீவகனைத் தனிப்படவிட்டு, விளையாட்டுக் காண விரும்பி வேறிடங்கட்குச் சென்றனர். ஒரு பக்கத்தே மைந்தரும் மகளிரும் பொழிலினும் நீரினும் விளையாட் டயர்கையில், ஒரு பக்கத்தே அந்தணர்பொருட்டு வேதியர் சிலர் சோறு சமைத்து வைத்திருந்தனர். அதனை ஒரு நாய் வந்து தொட்டதாக, அவர்கள் அதனைத் துரத்தி யடித்துக்கொண்டோடினர். அஃது அவர்களால் தாள் முறிந்து கயத்துநீரில் விழுந்தது; அம் மூர்க்கர் அதனை வளைத்துக்கொண்டனர்.

## களிமகன் வரவு

மட்குடம் அல்லன மதியின் வெள்ளிய
கட்குடக் கன்னியர் இருவ ரோடுடன்
துட்கென யாவரும் நடுங்கத் தூய்மையில்
உட்குடைக் களிமகன் ஒருவன் தோன்றினான். ௨௨௪

---

௨௨௩. தண்ணம் தீம்புனல் - குளிர்ந்த இனிய நீர். ஆடிய - ஆட வேண்டி. வார் தளிர் - ஒழுகிய தளிர். எண்ணி - சுரமஞ்சரியுடன் தன்பால் இருந்த நட்பினைப் பிரித்த தீவினை நீங்கும் வழி இது என்று எண்ணி. ஆயிரம் தாமரை. ஏந்து பொற்றாமரை - உயர்ந்த பொற்றாமரைப்பூ. வண்ண மாமலர் - அழகிய பூ. இவை, ஆயிரத்தின் ஒழிந்த பூக்கள். ஏற்றி - தூவி.

௨௨௪. மதியின் வெள்ளிய குடம் - திங்கள்போல் வெண்ணிறத்தனவாகிய வெள்ளியாற் செய்த குடம். இக் குடம் கட்குடம். இவை மட்குடமல்ல, கள்ளின் கடுமை பொறுத்தற்கு வெள்ளியாற் சமைத்த குடம். குடக்கன்னியர் - குடம் தாங்கிய மனைவியர். யாவரும் துட்கென நடுங்க - காண்போர் அனைவரும் துண்ணென அஞ்சி நடுங்க. தூய்மையில் உட்குடை - தூய்மையில் உள்வாங்கிய; தூய்மையில்லாத. தூய்மையில்லாத உருவினையுடைய என்றுமாம்.

### கனிமகன் கூறல்

புடைத்தென் நாயினைப் பொன்றுவித் தீர் ; உயிர்
கடுக்கப் பேர்த்தனிர் ; தம்மின் ; கலாய்க்குறின்
தடக்கை மீளிமை தாங்குமின் ; அன்றெனின்
உடைப்பென் கட்குடம் என்றுரை யாடினன். உஉரு

இவ்வாறு இவன் வருந்தக் கண்டதும், சீவகன் விரைந்து அவனிடம் போந்து நாயிழந்து நிற்கும் அவனது துயரைத் தேற்றி, அந்தணர்க்குத் துணைசெய்து அகற்றினான். பின்பு அச் சீவகன் தன் தோழருடன் நாய் கிடந்தவிடம் அணுகி, அதன் மனத்தே மறம் இல்லாமை யுணர்ந்து, அதன் செவியில் மந்திரமோதலுற்றான்.

### நாய் தேவனாதல்

" நாயுடம் பிட்டிவண் நந்திய பேரொளிக்
காய்கதிர் மண்டலம் போன்றொளி கால்வதோர்
சேயுடம் பெய்துவை ; செல்கதி மந்திரம்
நீயுடம் பட்டுநி னைமதி " என்றான். உஉசு

இது கூறக்கேட்ட அந்த நாய் வால்குழைத்துத் தன் உள்ளத்து உவகையைப் புலப்படுத்திற்று. அதன் செவியில் ஐந்துமொழிகளாலாகிய மந்திரத்தை ஓதிப் பின் வருமாறு கூறினான்.

உறுதிமுன் செய்த தின்றி
யொழுகினேன் என்று நெஞ்சின்
மறுகல்நீ ; பற்றொடு ஆர்வம்
விட்டிடு ; மரண அச்சத்து

---

உஉரு. புடைத்து - அடித்து. பொன்றுவித்தீர் - உயிர்போக்கினீர். பேர்த்தனிர் தம்மின் - மீட்டுத் தருவீராக. கலாய்க்க உறின் - கலாம் செய்ய நினைக்கின். தடக்கை மீளிமை - பெரிய கையினது வலி. கட்குடம் உடைப்பென் - கட்குடத்தைப் போட்டு உடைப்பேன்.

உஉசு. இட்டு - நீங்கி. நந்திய - வளர்ந்த. காய்கதிர் மண்டலம் - நிலவு காயும் கதிர்களையுடைய திங்கள். கால்வது ஓர் - விளங்குவதாகிய ஒரு. சேயுடம்பு - பெரியவுடம்பு. செல்கதி மந்திரம் - உயர்கதிக்கு உய்ப்பதொரு மந்திரம். உடம்பட்டு - ஒருப்பட்டு.

இறுகல்நீ ; இறைவன் சொன்ன
ஐம்பத அமுத முண்டால்
பெறுதிநற் கதியை என்று
பெருநவை அகற்றி ஞனே. உஉஎ

மனத்திடைச் செறும்பு நீங்கி மறவலை யாகி ஐந்தும்
நினைத்திடு ; நின்கண் நின்ற நீனிற வினையின் நீங்கி,
எனைப்பகல் தோறும் விள்ளா இன்பமே பயக்கும் என்ருற்கு
அனைப்பத வமிர்தம் நெஞ்சின் அயின்றுவிட் டகன்ற தன்றே.

நாயுடம்புவிட்டு நீங்கித் தேவவடிவு பெற்றதும், அத் தேவன் சீவகன் முன்னே தோன்றித் தன் நன்றி கூறுமுகத் தால் தான் சுதஞ்சணன் என்னும் தேவன் என்றும், தன் னுலகும் உலகிற் போகமும் சீவகன் அடியில் வைப்பதாகவும் சொன்ஞன். அவனைக் கண்டும் உரையைக் கேட்டும் வியப் பும் நன்மதிப்பும் கொண்டு சீவகன், தனக்குப் பிறவாற்ருல் ஒரு குறையும் இல்லையென்றும், ஒருகால் தன்னைப் பகைவர் வளைத்துக்கொள்ளுமிடத்துத் தனக்குத் துணை செய்வது அமையும் என்றும் விடையிறுத்தான்.

## தேவன் விடைபெற்றேகல்

இன்னிழல் இவரும் பூணுன் இருவிசும் பிவர்த லுற்றுப்
பொன்னெழு வனைய தோளாற் புல்லிக்கொண் டினிய கூறி

உஉஎ. முன் உறுதி செய்ததின்றி - முன்பு உயிர்க்கு உறுதி தரும் வினைசெய்யாதே. மறுகல் - மனத்தே கலக்கம்கொள்ள வேண்டா. பற்று - உள்ள பொருள்மேற் செல்லும் ஆசை. ஆர்வம் - பெறக்கடவ பொருள்மேற் செல்லும் ஆசை. விட்டிடு - விட்டொழிக. மரணவச்சத்து இறுகல் - இறத்தற்கண் உள்ள நோய்வாய் வீழ்ந்து நிலைபெருதே. இறைவன் - அருகன். ஐம் பத வமிர்தம் - ஐந்து பதமாகிய அமிர்தம் ; பஞ்சாஸ்தி காயம் என்னும் மந்திரம். பெறுதி - பெறுக. நவை - துன்பம்.

உஉஅ. செறும்பு - செற்றம். நீங்கி - நீக்கி. மறவலையாகி - மற வாமல். நீனிற வினை - கரிய தீவினை. எனைப் பகல்தோறும் - உள்ளநாள் எத்துணை அத்துணை நாளெல்லாம். விள்ளா - நீங்காத. அனைப் பத வமிர் தம் - அந்த ஐந்து பதமாகிய மந்திரம். அயின்று - நினைத்து. விட்டு - நாயுடம்பை விட்டு.

"நின்னிழல் போல நீங்கேன் ; இடர்வரின் நினைக்க" என்று
மின்னெழூஉப் பறப்ப தொத்து விசும்பிவர்ந் தமரன் சென்றான்.

தேவன் சென்றதும் சீவகனும் அவனுடைய தோழரும் அவ்விடத்து நின்றும் போய்விட்டனர். நகரமக்கள் நீர் விளையாட்டு முடிந்ததும் நகரத்திற்குச் செல்லலுற்றனர். சிவிகையூர்ந்து செல்வார் பலர்; தேர்மீது செல்வார் பலர்; வேறு பலர் ஏனை ஊர்தி இவர்ந்தும் ஏகலுற்றனர். செல்லும் பொழுது அரசனது பட்டத்து யானையாகிய அசனிவேகம் என்பது மதம்பட்டுப் பாகர் அடக்க அடங்காது பிளிறிக் கொண்டு ஓடலுற்றது. கூடியிருந்த ஆடவரும் மகளிரும் நாற்றிசையும் வீற்று வீற்றாக ஓடி உயிர் தப்புவாராயினர். அவ் யானை குணமாலையும் அவளது தோழியும் இருந்த பக்கத்தை நோக்கி வரத்தொடங்கி விரைந்து நெருங்குவதாயிற்று. இந் நெருக்கடியில் விரைந்தோட மாட்டாது குணமாலை நெஞ்சு கலங்கினாள்.

## குணமாலையின் தோழி யானைமுன் நிற்றல்

கருந்தடங் கண்ணி தன்மேல் காமுகர் உள்ளம் போல
இருங்களி றெய்த வோடச் சிவிகைவிட் டிளைய ரேக
அரும்பெற லவட்குத் தோழி, "ஆடவர் இல்லை யோ?" என்று
ஒருங்கைகை யுச்சிக் கூப்பிக் களிற்றெதிர் இறைஞ்சி நின்றாள்.

## நின்றவளது கருத்து இதுவென்றல்

"என்னைக்கொன் றிவள்க ணேடும்
எல்லையில், ஒருவன் தோன்றி

௨௨௯. இன்னிழல் இவரும் பூணான் - இனிய ஒளி திகழும் பூண்களை யணிந்து தோன்றும் சுதஞ்சணன். இது தேவ வுடம்பின் பொலிவு. இவர்தலுற்று - போகக் கருதி. பொன் எழு அனைய தோளான் - பொற்றூண் போலும் தோளையுடைய சீவகன். நினைக்க - என்னை நினைக்க. எழூஉப் பறப்பது - மறையாமல் எழுந்து பறப்பது. இவர்ந்து - உயர்ந்து.

௨௩௦. கருந்தடங் கண்ணி - கரிய பெரிய கண்களையுடைய குணமாலை. எய்த ஓட - அணுகச் சென்றதாக. இளையர் - சிவிகை சுமந்து வந்த ஆட்கள். விட்டு - கீழே வைத்துவிட்டு. அரும்பெறல் அவட்கு - சீவகனையன்றிப் பிறர்க்குப் பெறுதற்கரியவளாகிய அக் குணமாலைக்கு. என்று - என்று கூப்பாடு இட்டு. இறைஞ்சி - தலை கவிழ்ந்து.

இன்னுயிர் இவனைக் காக்கும் ;
அன்றெனில் என்கண் மாய்ந்தால்
பின்னைத்தான் ஆவ தாக"
என்றெண்ணிப் பிணைகொள் நோக்கி,
மின்னுப்போல் நுடங்கி நின்றாள்,
வீததை கொம்பொ டொப்பாள். ௨௬௧

### குணமாலை நிலையைச் சீவகன் காண்டல்

மணியிரு தலையும் சேர்த்தி வான்பொனின் இயன்ற நாணால்
அணியிருங் குஞ்சி யேறக் கட்டியிட் டலங்கல் சூழ்ந்து
தணிவரும் தோழர் சூழத் தாழ்குழை திருவில் வீசப்
பணிவரும் குரிசில் செல்வான் பாவையது இடரைக் கண்டான். ௨௬௨

### சீவகனது உட்கோள்

பெண்ணுயிர் அவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்விற் சாதல்
எண்ணினன் எண்ணி நொய்தா இனமலர் மாலை சுற்றா,
வண்ணப்பொற் கடகம் ஏற்றா, வார்கச்சில் தானை வீக்கா,
அண்ணலங் களிற்றை வையா ஆர்த்துமேல் ஓடினானே. ௨௬௩

---

௨௬௧. இவள்கண் ஓடும் - இவளிடத்தே யோடும், எல்லையில் - அமயத்தில். இன் உயிர் இவனைக் காக்கும் - இனிய உயிர்போலும் இக் குணமாலையைக் காப்பான். என் கண் மாய்ந்தால் - என் உயிர் மாயுமாயின். ஆவதாக - ஆவது ஆகுக ; அதுபற்றிக் கவலையில்லை. பிணை கொள் நோக்கி - மான்பிணைபோலும் பார்வையையுடைய தோழி. நுடங்கி - நடுங்கிக்கொண்டு. வீ ததை கொம்பு - பூக்கள் நிறைந்த கொம்பு.

௨௬௨. இருதலையும் மணிசேர்த்தி - இருபக்கத்திலும் மணியழுத்தி. வான்பொனின் இயன்ற நாண் - உயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட கயிறு. குஞ்சி - தலைமயிர். ஏறக் கட்டி - தூக்கிக் கட்டி. தணிவரும் தோழர் - அன்பு குறையாத தோழர். வில் - ஒளி. பணிவரும் குரிசில் - பிறரால் வணக்கலாகாத சீவகன்.

௨௬௩. பெண் உயிர் அவலம் - பெண்ணொருத்தி உயிர் இழப்பது நோக்கி, வாழ்வின் சாதல் எண்ணினன் - பார்த்துப்பின் இருந்து வாழ்தலினும் தான் சாவதே பெருந்தகைமை என எண்ணினான் ; அவன் பெருந்தகையாதலின். நொய்தா - உடனே (விரைவாக). பொற்கடகம் - ஆடவரணியும், பொன்னால் செய்த ஒருவகைத் தொடி. வார் கச்சின் - நீண்ட கச்சினால். தானை - உடை. வீக்கா - இறுகக் கட்டிக்கொண்டு. வையா - வைதுகொண்டு. ஆர்த்து - ஆர்ப்பரித்து. மேல் - களிற்றின்மேல்.

## குணமாலைமேலும் அவள் தோழிமேலும் பார்வைவைத்துச் செல்லும் யானை வேறுபக்கம் திரும்புமாறு அதன் மத்தகத்திற் பாய்ந்து அவர்களைச் சீவகன் உய்வித்தல்

படம்விரி நாகம் செற்றுப் பாய்தரு கலுழன் போல
மடவர லவளைச் செற்று மதக்களிறு இறைஞ்சும் போழ்தில்,
குடவரை நெற்றி பாய்ந்த கோளரி போன்று வேழத்து
உடல்சினம் கடவக் குப்புற்று உருமென உரறி யார்த்தான். ௨௩௪

கூற்றென முழங்கிக் கையால்
கோட்டிடைப் புடைப்பக் காய்ந்து
காற்றென வுரறி நாகம்
கடாம்பெய்து கனலின் சீறி
ஆற்றலங் குமரன் தன்மேல்
அடுகளி றோட, அஞ்சான்,
கோற்றொடிப் பாவை தன்னைக்
கொண்டுய்யப் போமின் என்றான். ௨௩௫

## சீவகன் யானையொடு பொருது அதனைக் கொல்லாது நெடுந்தொலைவு செல்லவிடுத்தல்

மதியினுக் கிவர்ந்த வேக மாமணி நாகம் வல்லே
பதியமை பருதி தன்மேல் படம்விரித் தோடி யாங்குப்

௨௩௪. நாகம் - நாகப்பாம்பு. செற்று - சிதைத்து. கலுழன் - கருடன். மடவரலவளை - இளையளாகிய தோழியை. செற்று - செறுத்து. இறைஞ்சும் போழ்தில் - சிறிது தலை குனியும்பொழுது. குடவரை - ஞாயிறு மேற்றிசையில் மறையும் மலை. நெற்றி - உச்சி. கோளரி - சிங்கம். உடல் சினம், வினைத்தொகை. குப்புற்று - குதித்து. உரும் - இடி. உரறி - முழங்கி.

௨௩௫. கோட்டிடைப் புடைப்ப - இரு கொம்புகட்கும் இடையே கையால் புடைக்க. காய்ந்து - (களிறு) சினந்து. காற்றென - சூறைக் காற்றுப்போல. நாகம் - யானை. கடாம் - மதநீர். கனலின் - நெருப்புப் போல. ஆற்றல் அம் குமரன் - வலிமிக்க இளையனை சீவகன். அஞ்சான் - அஞ்சானாய்; முற்றெச்சம். கோற்றொடிப் பாவை - குணமாலை.

தோழிமேலும் குணமாலைமேலும் செல்கின்றதென்று அஞ்சினவன், அக் களிறு தன்னை நோக்கித் திரும்பிவிட்டமையின், அஞ்சானாயினன். குணமாலையைக் கொண்டு செல்வார் அவள் தோழியையும் உடன்கொண்டு போவாராதலின், கோற்றொடிப் பாவையைக் கூறினான்.

பொதியவிழ் கோதை தன்மேல் பொருகளி றகன்று பொற்றார்க்
கதியமை தோளி னானைக் கையகப் படுத்த தன்றே. ௨௩௬

கையகப் படுத்த லோடும்
    கார்மழை மின்னி னொய்தா
மொய்கொளப் பிறழ்ந்து முத்தார்
    மருப்பிடைக் குளித்துக் காற்கீ
ழையென அடங்கி வல்லான்
    ஆடிய மணிவட் டேய்ப்பச்
செய்கழற் குரிசி லாங்கே
    கரந்துசேண் அகற்றி னானே. ௨௩௭

இங்ஙனம் யானை சேணிற் சென்றதும், சீவகன் குணமாலையை நேரிற் கண்டு அவளது அழகில் தன் கருத்தையிழந்து தனியே உய்யானத்தை யடைந்தான்; இப்பால் குணமாலையையும் அவள் தோழியர் தம் கடி மனைக்குக் கொண்டேகினர். அவள் மனத்தும் சீவகன்மேல் பெருங் காதல் எழுந்து வாட்டலுற்றது. இதன் உண்மையறியாத அவள் தாய் விநயமாலை, “நெடிது விளையாடியதனால் இவட்கு இம் மெலிவு உளதாயிற்றுப்போலும்” என்று நினைந்து தகுவன பல கூறி, குணமாலை வளர்த்த கிளியை அவட்குக் காட்டி, “நின்னை நின் கிளி அழையாநின்றது; சென்று பாலூட்

---

௨௩௬. மதியினுக்கு - திங்களைக் கையகப்படுத்தற்கு. இவர்ந்த - விரும்பிய. மாமணி நாகம் - கரும்பாம்பு. வல்லே - சட்டென. பதியமை பருதி - போகின்ற ஞாயிறு; இருத்தல் தவிர்ந்த பருதி. பொதியவிழ் கோதை - அரும்பவிழ்ந்த பூவால் தொடுத்த மாலையணிந்த குணமாலை. அகன்று - போவது நீங்கி. கதி அமை தோளினான் - வன்மைக்கு இடமாய் அமைந்த தோளினையுடைய சீவகன். கையகப்படுத்தது - கைக்குள்ளே அகப்படுத்திற்று.

௨௩௭. கார்மழை மின்னின் நொய்தா - கார் முகிலில் மறையும் மின்னலைப்போல விரைவாக. மெய்கொளப் பிறழ்ந்து - உடம்பு மென்மைகொண்டு வளைந்து புரிந்து. மருப்பிடைக் குளித்து - கொம்புகளின் இடையே நுழைந்து. ஐயென அடங்கி - கண்டோர் வியப்பெய்துமாறு ஒடுங்கி. வல்லான் - வட்டாடுவதில் வல்லவன். ஏய்ப்ப - ஒப்ப. செய்கழல் குரிசில் - செவ்விய கழலணிந்த குரிசிலாகிய சீவகன். ஆங்கே - அப்பொழுதே. சேண் - தொலைவிலே. வட்டேய்ப்பக் கரந்து போய்ச் சேணகற்றினான்' என்க.

டுக"- என்று சொல்லிவிட்டுச் சென்றாள். தனித்திருந்த குணமாலை யுள்ளத்தே சீவகன் பொருட்டு எழுந்த வேட்கைத் தீ அவளது உள்ளத்தையும் உயிரையும் உடலையும் வெதுப்ப, அவள் பெரிதும் ஆற்றாளாயினள். பின்பு அவள் தனக்குள்ளே பலவாறு நினைக்கலுற்றாள்.

## குணமாலை பெண் பிறப்பைப் பழித்தல்

கையி னால்சொலக் கண்களிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேன்;
செய்த வம்புரி யாச்சிறி யார்கள்போல்
உய்ய லாவதோர் வாயிலுண் டாங்கொலோ. உருஅ

கண்ணும் வாள்அற்ற; கைவளை சோருமால்;
புண்ணும் போன்று புலம்புமென் நெஞ்சரோ;
எண்ணில் காமம் எரிப்பினும் மேற்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணலது இல்லையே. உருகூ

இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்த இக்குணமாலைக்கு ஒரு நினைவு தோன்றிற்று: தன் கிளியைச் சீவகன் பால் தூதுவிட நினைத்தாள். அதனை அக் கிளியிடம் உரைப்ப, அதுவும் அதற்குடன்பட்டு அவன் இருக்குமிடம் சென்றது. ஆங்கே, சீவகன் அரசுவாமுன் அஞ்சி நடுங்கித் துவண்ட குணமாலை வடிவே அவன் முதன்முதலாகப் பெற்ற காட்சியாதலால், அதனையே மனக்கண்ணிற் கண்டு பெருவேட்கை

உருஅ. கையினால் சொல்ல - கையாற் காட்டும் சைகையால் மனக் குறிப்பை வெளிப்படுத்த. அவற்றைக் கண்ணாற் கண்டே அறிய வேண்டுதலால், "கண்களில் கேட்டிடும்" என்றார். மொய் கொள் சிந்தை - குறையெல்லாம் செறிவு கொண்ட மனம். மூங்கை - ஊமை. செய்தவம் புரியா - செய்தற்குரிய தவத்தைச் செய்யாத. சிறியார் - சிறுமையுடையவர். சிறியார்கள்போல் மூங்கையுமாயினேன் என முடிக்க. வாயில் - நெறியுணர்த்தித் துணை செய்பவர்.

உருகூ. வாள் அற்ற - ஒளியிழந்தன. புண்ணும் போன்று புலம்பும் - நெஞ்சம் புண்ணுற்றது போல வருந்தும். எண்ணில் - ஆராய்ந்து பார்க்குமிடத்து. எரிப்பினும் - முழுக்க நின்று சுட்டுக் கொளுத்தினும். மேற் செலாத - மேலொன்றும் செய்தற்கில்லாத. பெண்ணின் மிக்கது - பெண் பிறப்பினும் கொடியது. பெண் பிறப்பின் கொடுமைக்கு ஒப்பதும் மிக்கதும் வேறொன்றும் இல்லை என்பதாம்.

யுற்று, மேனி மெலிந்து, அவ்வுருவினைத் தானே ஒரு கிழி யில் எழுதி அதன் அழகிடை யீடுபட்டிருந்தான். அது போது அவன்பால் அழகொழுகும் வடிவினளாய காந்தருவ தத்தை வந்தாள். அவளைக் கிளி கண்டது.

### கிளி தனக்குள் என்னுதல்

"சிலம்பொடு மேகலை மிழற்றத் தேனினம்
அலங்கலுண்டு யாழ்செயும் அம்பொற் பூங்கொடி
நலம்பட நன்னடை கற்ற தொக்குமிவ்
விலங்கரித் தடங்கணாள் யாவ ளாங்கொலோ. உ௪௦

யாவளே யாயினு மாக ; மற்றிவள்
மேவிய பொருளொடு மீண்ட பின்னலால்
ஏவலாற் சேர்கலேன்" என்று பைங்கிளி
பூவலர் சண்பகம் பொருந்திற் றென்பவே. உ௪க

### காந்தருவதத்தை சீவகன் எழுதி மகிழும் ஓவியத்தைக் கண்டு புலந்து அவனோடு உரையாடுதல்

"இதுஎன உரு ?" என, "இயக்கி" என்றலும்,
"புதிதுஇது, பூந்துகில் குழல்கள் சோர்தலால் ;
மதுவிரி கோதையம் மாலை நின்மனம்
அதுமுறை இயக்கலின் இயக்கி யாகுமே." உ௪உ

---

உ௪௦. மிழற்ற - ஒலிக்க. தேன் இனம் - வண்டினம். அலங்கல் உண்டு - மாலையிலுள்ள தேனைக் குடித்து. யாழ் செயும் - யாழ்போல் முரலும். பூங்கொடி நடை கற்றது போல நடந்தேகும் இத் தடங்கணாள் யாவளோ என்பது. விலங்கு அரித் தடங்கணாள் - குறுக்கிட்டுப் பரந்த செவ்வரிகளையுடைய பெரிய கண்ணினையுடையாள்.

உ௪க. மேவிய பொருளொடு - வந்த செய்தியை முடித்துக்கொண்டு. பின்னலால் - பின்னே யன்றி. ஏவலால் - குணமாலை ஏவியவாறே உடனே. பூவலர் சண்பகம் - பூமலர்ந்துள்ள சண்பக மரம்.

உ௪உ. என உரு என - என்ன உருவம் என்று காந்தருவதத்தை கேட்க. என்றலும் - இயக்கியின் உருவம் என்று சீவகன் சொன்னவுடன். புதிது - புதுமையுடையதாக வுளது. இயக்கிக்குத் துகிலும் குழலும் சோர்வது கிடையாது. மது - தேன். அம் மாலை - அக் குணமாலை. மனம் முறை இயக்கலின் . மனத்தை முறையே ஆற்றுமை மிகும்படி இயக்குத லால். இயக்கியாகுமே - இயக்கியே யாகும் ; ஆகும் - ஆவாள். சீவகன் கூறிய இயக்கி என்னும் சொல் வடசொற் சிதைவு. யக்ஷி தேவதை. தத்தை கூறியது தமிழ்ச்சொல்.

### சீவகன் அவள் சினம் தணிவிப்பான் கூறுதல்

பாவைநீ புலவியில் நீடல்; பாவியேற்கு
ஆவியொன்று இரண்டுடம் பல்லது; ஊற்றுநீர்க்
கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விழைந்த அன்னமே? ௨௪௩

### அக் கூற்றால் அவள் புலவி மிகுதல்

பேரினும் பெண்டிரைப் பொறாது சீறுவாள்,
நேர்மலர்ப் பாவையை நோக்கி, நெய்சொரி
கூரழல் போல்வதோர் புலவி கூர்ந்ததே,
ஆர்வுறு கணவன்மாட் டமிர்தின் சாயற்கே. ௨௪௪

இது கண்டு சீவகன் ஆற்றாது பல பணிமொழிகள் இரந்து கூறினன்; அவள் சினம் தணியாது அவனைத் தனிப்பவிட்டுத் தன் உறையுளை யடைந்தாள். "இதுவே தக்க காலம்" என வுணர்ந்த அக் கிளி அவனை யடைந்தது. அவனும் அதனை அன்போடு வரவேற்று, வரவின் காரணம் வினவினன்.

### கிள்ளை விடையிறுத்தல்

மையலங் களிற்றொடு பொருத வண்புகழ்
ஐயனைச் செவ்விகண் டறிந்து வம்மெனப்

---

௨௪௩. புலவியில் நீடல்-புலத்தலை நீட்டியாதே. பாவியேற்கு-பாவி யாகிய எனக்கு. ஆவியொன்று - நின் உயிரே எனக்கும் உயிராவது. நம்மிருவர்க்கும் உயிரொன்று; உடம்பு இரண்டு. கங்கையுள் மேவி விழைந்த அன்னம் - கங்கை யாற்றை மேவி அதனை விரும்பி யுறையும் அன்னம். கூவல்வாய் வெண்மணல் ஊற்று நீர் - குளத்திடத்து வெண் மணலில் சுரந்து நிற்கும் ஊற்று நீர். செல்லுமே - ஏகாரம் வினா.

௨௪௪. பெண்டிரைப் பேரினும் - வேறு பெண்டிரின் பெயர் சொன்னாலும். சீறுவாள் - சீறுகின்றவளாகிய தத்தை. நேர் மலர்ப் பாவையை - ஒத்த மலர் சூடிய பாவை போன்ற குணமாலை வடிவத்தை. நோக்கி - பார்த்ததனால். நெய் சொரி கூரழல் - நெய் சொரிவதால் மிக்கு எழும் நெருப்பு. ஆர்வுறு கணவன் - மிக்க காதலுடைய கணவனாகிய சீவ கன். அமிர்தின் சாயல் - அமிழ்தம் போலும் மென்மையினையுடைய காந் தருவதத்தை.

பையர வல்குலெம் பாவை தூதொடு
கையிலங் கெஃகிஞய் ! காண வந்ததே. உசரு

### சீவகன் வினவுதல்

வெஞ்சின வேழ முண்ட வெள்ளிலின் வெறிய மாக
நெஞ்சமும் நிறையும் நீல நெடுங்கணுற் கவர்ந்த கள்வி
அஞ்சனத் துவலை யாடி நடுங்கிஞள் நிலைமை யென்னை ?
பைஞ்சிறைத் தத்தை ! என்னப் பசுங்கிளி மொழியு மன்றே.

### குணமாலையின் வேட்கைமிகுதியும் ஆற்ருமையும் சொல்லி, மேலும் அக் கிளி கூறல்

"கன்னிய ருற்றநோய் கண்ண ஞர்க்கும்அஃது
இன்னதென் றுரையலர், நாணி ஞதலான் ;
மன்னும்யான் உணரலேன் ; மாதர் உற்றநோய்
துன்னிநீ அறிதியோ தோன்றல் !" என்றதே. உசஎ

### சீவகன் கூறுவது கேட்டுக் கிளி கூறல்

"சொல்ம ருந்துதந் தாய்!சொல்லும் நின்மனத்து
என்அ மர்ந்தது உரைத்துக்கொள் நீ"என,

---

உசரு. மையலங்களிறு - மதம்பட்டு மயங்கிப் போந்த யானை. வண்புகழ் ஐயன் - வளவிய புகழ் படைத்த சீவகன். செவ்வி - காலம். வம் என - வருக என்று. பை அரவு அல்குல் - படத்தையுடைய பாம்பின் படம் போன்ற அல்குல். இலங்கு எஃகிஞய் - விளங்குகின்ற வேலையுடையாய்.

உசசு. வேழமுண்ட . . . . வெறியமாக - யானைத்தீ யென்னும் நோயுற்ற விளாம்பழம் உள்ளகம் வெறுவிதாவதுபோல நெஞ்சம் நிறை முதலியன இன்றி வெறுவிதாமாறு. நீலம் - கருமை. பிறர் அறியாமல் கண்ணிஞல் கவர்ந்துகொண்டாளாதலின் "கள்வி" யென்ருன். யானை முன் குணமாலை நடுங்கி நின்ற காலத்தில், அவள் கண் கலுழ்ந்து நீர் அரும்ப மெய் வியர்வை பொடிப்பக் கண்டது நினைவில் இருப்பதால், "அஞ்சனத் துவலையாடி நடுங்கிஞள்" என்ருன். பைஞ்சிறைத் தத்தை - பசிய சிறகுகளையுடைய கிளியே.

உசஎ. உற்ற நோய் - தாம் உற்ற காம நோயை. கண்ணஞர்க்கும் - கண்போன்ற தோழியர்க்கும். இன்னது - இத்தன்மைத்து. நாணின் ஆதலால் - உயிரினும் சிறந்த நாணம் தோன்றித் தடுப்பதஞல். மன்னும் - மிகவும். துன்னி - நெருங்கிச் சென்று. அறிதியோ - அறிவாயோ.

"வில்நி மிர்ந்தநின் வீங்கெழில் தோள்,அவட்கு
இன்ம ருந்து ; இவை வேண்டுவல்" என்றதே. உசஅ

### சீவகன் தன் உடன்பாடு உரைத்தல்

"பொற்குன் றுயினும், பூம்பழ னங்கள்சூழ்
நெற்குன் றும்பதி நேரினும் தன்னையான்
கற்குன் றேந்திய தோளிணை கண்ணுறீஇச்
சொற்குன் று ;புணர் கேன் ;சொல்லு போ" என்றான்.

### கிளி ஓலை பெற்றுப் போதல்

"சேலை வென்றகண் ணாட்குஇவை செப்பரிது ;
ஓலை யொன்றுஎழு திப்பணி நீ" என,
மாலை மார்பன் கொடுப்பத் திணைக்குரல்
ஓலை யோடுகொண் டோங்கிப் பறந்ததே. உ௫0

கிளி நீங்கிய பின் சீவகன் தத்தையிருந்த பெருமனைக்குச் சென்று காண, அவள் பூம்புட்டைவை யொன்றால் தன்

---

உசஅ. சொல் மருந்து - சொல்லாகிய மருந்து. குணமாலை சொல்லும் சொல்லை மருந்தென்றான். சீவகனும் வேட்கையுற்று மெலிந்திருக்கின்றானாதலின். அமர்ந்தது என் உரைத்துக்கொள் - பொருந்தியது எதுவோ அதனை உரைத்துக்கொள். என - என்று சீவகன் மொழியவே. வில் நிமிர்ந்த நின் வீங்கு எழில் தோள் - வில் சுமந்துயர்ந்த நின்னுடைய பெரிய அழகிய தோளே. இவை வேண்டுவல் - சொல் வேண்டா ; இத்தோள்களையே அவட்கு வேண்டுமென வேண்டுவேன்.

உசக. பொற்குன்று - குன்றளவாகிய பொன். பூம் பழனங்கள் - பூக்கள் நிரம்பிய நீர் நிலைகள், நெல் குன்றும் பதி - நெல் குன்றளவாகக் குவியுமாறு விளையும் ஊர். நேரினும் - தரவேண்டுமெனினும். கற்குன்று ஏந்திய தோள் இணை - மலைபோல் உயர்ந்த இரு தோள்கள். கண்ணுறீஇ - சேர்த்தி. புணர்கேன் - புணருவேன். சொல்குன்று - இச் சொற்கள் தவறமாட்டா.

"கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி, கிழவோன் வினைவயின் உரிய வென்ப" (தொல். கற்பு, 40) என்பதன் கருத்தால், சீவகன் தன் தோளைக் "கற்குன்றேந்திய தோள்" என்றது அமையும்.

உ௫0. சேலை வென்ற - சேல் மீனை ஒத்த. செப்பு அரிது - கூறுதல் முடியாது. எழுதிப் பணி - எழுதித் தந்தருள்க. என - என்று கிளி கேட்கவே. திணைக்குரல் ஓலையோடு - திணைக்கதிரில் வைத்துச் சுருட்டித் தந்த ஓலையுடன், ஓங்கி - உயர்ந்து.

மேனி முழுதும் போர்த்துக்கொண்டு புலவியால் கண்மூடாது விழித்துக் கிடந்தாள். அவன் அவளது புலவி தீர்த்து மகிழ்வித்தான். இப்பால்,

### கிளியைத் தூதுவிடுத்துக் குணமாலை வருந்தி நிற்றல்

தன்துணைவி கோட்டியினில் நீங்கித் தனியிடம்பார்த்து
இன்துணைவற் சேர்வான் இருந்ததுகொல்! போந்ததுகொல்!
சென்றதுகொல்! சேர்ந்ததுகொல்! செவ்வி யறிந்துஉருகும்
என்துணைவி மாற்றம்இஃது என்றதுகொல்! பாவம்!! உ௫௧

செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோர் இன்னுரைதான்
தந்தாரேல் தந்தார்என் இன்னுயிர்;தாம் தாராரேல்
அந்தோ குணமாலைக்கு ஆ! தகாது என்றுஉலகம்
நொந்துஆங்கு அழமுயன்று நோற்றாலும் எய்துவனே. உ௫உ

### கூடலிழைத்தல்

சென்றார் வரைய கருமம் செருவேலான்
பொன்தாங் கணியகலம் புல்லப் பொருந்துமேல்,
குன்றாது கூடுகஎனக் கூறிமுத்த வார்மணல்மேல்
அன்றுஆங்கு அணியிழையாள் ஆழியிழைத் தாளே. உ௫௩

---

உ௫௧. கோட்டியினில் - கூடியிருக்கும் இருப்பிலிருந்து. சேர்வான், இடம் பார்த்து இருந்ததுகொல் என இயையும். துணைவி - காந்தருவதத்தை. போந்தது கொல் - செவ்வி பெருமையால் அறிதே வந்து விட்டதோ. சென்றது கொல் - காலம் பார்த்துப் பொறுத்துச் சென்றதோ. உருகும் - காமத்தீயால் உருகும். துணைவி - ஈண்டுக் குணமாலை மேற்று. பாவம் - என் கிளிப்பிள்ளையும் யானும் பட்டது என் என்றும் குறிப்பு.

உ௫உ. செந் தார் - கிளியின் கழுத்தில் தோன்றும் வரைகள். கிளியார், உயர்த்தற்கண் வந்தது. என் இன் உயிர் தந்தார் - நீங்கும் நிலையிலுள்ள என் இனிய உயிர் நீங்கா வகையைத் தந்தாராம். தகாது - குணமாலைக்கு இவ் விறந்துபாடு தகாதே என்று. நொந்து அழ - உளம் வருந்தி அழ இறப்பேன். ஆங்கு முயன்று நோற்றாலும் எய்துவன் - சுரமஞ்சரிபோல முயன்று தவஞ்செய்தாயினும் அவரை எய்துவேன்.

உ௫௩. சென்றார் வரைய கருமம் - ஒரு வினையின் விளைவு அதனை முடிக்கப் போனருடைய அறிவின் அளவாயிருக்கும். செருவேலான் - சீவகன். பொன் தாங்கு அணி - பொன்னாற் செய்த பூண். அகலம் - மார்பு. புல்லப் பொருந்துமேல் - தழுவுதல் கூடுமாயின். முத்த வார் மணல் - முத்துக்களாகிய ஒழுகிய மணல்மேல். அன்று ஆங்கு - அன்றே அப்பொழுதே. ஆழி - வட்டம் (கூடல் வட்டம்).

## கிளி வருதல்

பாகவரை வாங்கிப் பழுதாகில் பாவியேற்கு
ஏகுமால் ஆவி ; எனநினைப்பப் பைங்கிளியார்
மாகமே நோக்கி மடவாளே அவ்விருந்தா
ளாகும்யான் சேர்வல் எனச்சென் றடைந்ததே. உ௫௪

## கிளியை இனிது வரவேற்றவள் அது கொணர்ந்த ஓலையைக் காண்டல்

தீம்பா லமிர்தூட்டிச் செம்பொன் மணிக்கூட்டில்
காம்பேர் பணைத்தோளி மென்பறவை கண்படுப்பித்து
ஆம்பால் மணிநாம மோதிரங்கொட் டையென்னத்
தேம்பா எழுத்தோலை செவ்வனே நோக்கினாள். உ௫௫

## சீவகன் விடுத்த ஓலை

கொடுஞ்சிலையான் ஓலை : குணமாலை காண்க !
அடுந்துயரம் உள்சுடவெந்து ஆற்றுதேன் ஆற்ற
விடுந்த சிறுகிளியால் விம்மல்நோய் தீர்ந்தேன் ;
நெடுங்கணாள் தானும் நினைவகல்வா ளாக. உ௫௬

---

உ௫௪. பாகவரை வாங்கி - வட்டத்தில் பாதியளவில் கீறி. பழுதாகில் - இக் கூடல் கூடாதாயின். நினைப்ப - குணமாலை நினைக்கையில். மாகம் - வானம். நோக்கி அவ்விருந்தாள் - பார்த்துக்கொண்டிருந்த அவள். மடவாளே - மடப்பம் பொருந்திய குணமாலையே. தான் நீங்கிய காலத்தினும் திரும்ப வருங்காலத்தில் அவள் மேனி மிக வேறுபட்டிருந்தமையின், கிளி இவ்வாறு ஐயுற்றடைவதாயிற்று.

உ௫௫. தீம்பால் - இனிய பால். காம்பு ஏர் பணைத்தோளி - மூங்கில் போலும் பருத்த தோளையுடைய குணமாலை. ஆம் பால் - ஆகும் பகுதியினையுடைய. நாம மோதிரம் - சீவகன் பெயர் பொறித்த கணையாழி. ஐயென்ன - விரைவாக. தேம்பா எழுத்து ஓலை - தேம்பாமைக் (வருந்தாமைக்) கேதுவாகிய எழுத்துக்களையுடைய ஓலை.

உ௫௬. கொடுஞ்சிலையான் - இவ்வாறு சீவகன் தன்னைக் கூறுதற்கு அமைதி "பொற்குன்றாயினும்" (செய். 249) என்புழிக் கூறினாம். இன்னார் ஓலை இன்னார் காண்க என்றல் முறை. அடுந்துயரம் - வருத்தும் காம நோய். ஆற்றுதேன் - ஆற்றேனாகிய யான். விடுந்த - விடுத்த ; விகாரம். விம்மல் மிக்க நினைவு - மிக்க வருத்தம்.

ஈட்டஞ்சால் நீள்நிதியும் ஈர்ங்குவளைப் பைந்தடஞ்சூழ்
மோட்டு வளம்சுரக்கும் ஊரும் முழுதீந்து
வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோள்
பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழியேனே. உருஎ

## குணமாலை மனந்தேறித் தெய்வம் பரவுதல்

"பாலவியும் பூவும் புகையும் படுசாந்தும்
காலவியாப் பொன்விளக்கும் தந்தும்மைக் கைதொழுவேன்;
கோலவியா வெஞ்சிலையான் சொற்குன்றா ளாகனவே
நூலவையார் போல்நீங்கள் நோக்குமினே" என்றாள். உருஅ

இஃது இவ்வாறாக, குணமாலையின் பெற்றோர், அவளது தாய்க்கு மூத்த தமையன் மகனுக்கு அவளை மணம் புணர்க்கக் கருதினர்; இச் செய்தியை யறிந்த செவிலித்தாய் குணமாலைக்குக் கூறினள். இதனைக் கேட்கப்பொறாத குணமாலை தன் இருகையாலும் இருகாதுகளையும் பொத்திக்கொண்டு வருந்தினாள்.

---

உருஎ. ஈட்டம் சால் - அறநெறியே ஈட்டுதற்கமைந்த. நீள்நிதி - மிக்க செல்வம். ஈர்ங் குவளை - குளிர்ந்த குவளைகள். பைந்தடம் - பசிய நீர்நிலை. [illegible] வளம் - பெரிய வளம். முழுது ஈந்து - விரும்புமாறே குறைவ[illegible]த்து. வேட்டார்க்கு......மென்றோள் - அரிய பொருள் களை விரும்பினார்க்கு விரும்பியவாறே அவற்றைப் பெற்றாற்போல இனிய வாகிய மெல்லிய தோள். பூட்டார் சிலைநுதல் - நாணால் பூட்டப்பட்ட வில்போலும் நுதல்.

உருஅ. பாலவி - பாற் பொங்கல். சாந்து - சந்தனக் கலவை. கால் அவியா விளக்கு - காற்றால் அவியாத விளக்கு; மணி விளக்கு. உம்மை - எழுத்துக்களாகிய தெய்வங்களை. கோல் அவியா வெஞ்சிலை - அம்பு இடைவிடாமல் எய்கின்ற கொடிய வில். சொற் குன்றாளாக - எழுத்துக்களாகிய தஞ்சொல் தவறாளாயினும். நூலவையார்போல் - அற நூல்களை யோதிய பெரியோர்போல. நோக்குமின் - இடையூறின்றிச் சொல்லிய வாறே செய்வாளாக வென்று கருதி நோக்குமின். "நீங்கள் என்றது எழுத்துக்களை; அவற்றின் தன்மையும் வடிவும் ஆசிரியர்க்கல்லது உணரலாகாமையின், நூலில் (இலக்கண நூலில்) விளங்கக் கூறிற்றிலரேனும், சமய நூல்களிற் கூறுதலின், அவ்வெழுத்துக்களைத் தெய்வமென்றே கொள்க." இவ்வெழுத்துக்கள் சீவகன் ஓலையில் எழுதிய எழுத்துக்கள், அவற்றைப் பார்த்தே இது கூறுகின்றாள்.

## குணமாலை மறுத்துரைத்தல்

"மணிமதக் களிறு வென்றான் வருத்தச்சொற் கூலி யாக
அணிமதக் களிற னானுக்கு அடிப்பணி செய்வ தல்லால்,
துணிவதென்? சுடுசொல் வாளால் செவிமுதல் ஈரல்' என்றாள்.
பணிவரும் பவளப் பாவை பரிவுகொண் டனைய தொப்பாள்.

"கந்துகப் புடையிற் பொங்கும் கலினமா வல்லன் காளைக்கு
எந்தையும் யாயும் நேரா ராய்விடின் இறத்தல் ஒன்றோ,
சிந்தனை பிறிதொன் றாகிச் செய்தவம் முயறல் ஒன்றோ,
வந்ததால் நாளை" என்றாள் வடுவெனக் கிடந்த கண்ணாள்.

குணமாலையின் முதுக்குறைவு கேட்ட செவிலி, மகளின் கற்பு நலத்தை வியந்து மகிழ்ந்து அவளது பெற்றோர்க்குச் சொல்ல, அவர்களும் அவள் விரும்பியவாறே சீவகனுக்குக் குணமாலையை மணம்புரிவிக்கத் தொடங்கிச் சான்றோர் நால்வரை மகட்கோள் உரைத்தற்குக் கந்துக்கடன்பால் விடுத்தனர். கந்துக்கடன் முதற்கண் அவர்களை இனிது வரவேற்று மிக்க சிறப்புச் செய்தான்.

## சான்றோர் மகட்கொடை நேர்ந்து உரைத்தல்

"யாம்மகள் ஈதும்; நீர்மகட் கொண்மின் எனயாரும்
தாம்மகள் நேரார்; ஆயினும் தண்ணென் வரைமார்பில்

உ௧௯. மணி மதக் களிறு - பக்கத்தே மணி கட்டிய மத யானை, வென்றவன் - வென்ற சீவகன், வருத்தச் சொல் கூலியாக - யானையை அடர்த்த காலத்தில் இவளைக் "கொண்டுய்யப் போமின்" (செய், 235) என்ற சொல்லிற்குக் கூலியாக. அடிப்பணி - தாழ்ந்து ஏவல் செய்வது. சுடு சொல் வாள் - சுடு சொல்லாகிய வாளால். செவி முதல் ஈரல் - செவியிடத்தே அறுக்க வேண்டா. பணி . . . . ஒப்பாள் - சீவகனைத் தவிரப் பிறர் எவரையும் பணிதல் இல்லாத, பவளத்தாற் செய்த பாவை வருத்தம் கொண்ட தன்மையை யொத்தவளான குணமாலை,

உ௨0. கந்துகப் புடையில் - பந்தினது புடைத்தல் போன்று. கலின மா - வார் கட்டிய குதிரை. வல்லன் - வல்லுநனை, நேரார்ராய் விடின் - மணம் செய்து தாராராயின். பிறிதொன்று - வேறொன்று. ஆகி - ஆக. வந்ததால் - இரண்டில் ஒன்று எய்திவிட்டது. வடு - மாவடு. பிறிது ஒன்றுதலாவது பெற்றோர் நினைவு கைகூடாது வேறுய்ப் போவது. தவம் முயறல், தான் சீவகனைப் பெறுதற்கு.

பூமகள் வைகும் புண்ணியப் பொற்குன் றனையானுக்கு
யாம்மகள் நேர்ந்தோம் இன்று ''என நாய்கற் கவர்சொன்னார்.

## கந்துக்கடன் மகிழ்ந்துரைத்தல்

"சுற்றார் வல்வில் சூடுறு செம்பொன் கழலாற்குக்
குற்றேவல் செய்தும் காளையும் யானும் ; கொடியாளை
மற்சேர் தோளான் தன்மரு மானுக் கருள்செய்யப்
பெற்றேன் '' என்னப் பேசினன் வாசம் கமழ்தாரான்.

பின்பு அச் சான்றோர் கந்துகனுக்குச் சீவகன் யானையை அடர்த்துக் குணமாலையைக் காத்ததும், அவள் அவன்பால் கருத்துற்றதையும் விளங்கக் கூறி விடைபெற்றுக் குபேரமித்திரனையடைந்து நிகழ்ந்தவனைத்தும் மொழிந்தனர். பின்பு மணம் நேர்ந்த செய்தி சீவகற்கும் குணமாலைக்கும் தெரியவரவே, இருவரும் பெரு மகிழ்வெய்தினர். மண நாள் குறிக்கப்பெற்றது.

## திருமணம்

கரைகொன் றிரங்கும் கடலின்கலி கொண்டுகல்லென்
முரசம் கறங்க முழவிம்மவெண் சங்கமார்ப்பப்

---

உசுக. மகட்கொண்மின் - எம் மகளை மணம் செய்து கொண்மின். நேரார் - வலியக் கொடுப்பது இல்லை. தாம் மகள் - தம் மகள் ; விகாரம். வரைமார்பு - மலைபோல் உயர்ந்த மார்பு. பூமகள் - திருமகள். புண்ணியக் குன்று - புண்ணியமாகிய மலை. இன்று நேர்ந்தேம் - இன்று புது முறையாகத் தந்தேம். நாய்கன் - கந்துக்கடன். அவர் - சென்ற சான்றோர். அவர்கூறியவாறே இச் செய்யுள் கூறுகின்றது.

உசுஉ. சுற்றார் வல் வில்-வரிந்து கட்டப்பெற்ற வலிய வில். சூடுறு-நன்கு காய்ச்சப்பட்ட. குற்றேல் - குற்றேவல். செய்தும் - செய்யக் கடவேம். கொடியாளை - கொடிபோன்ற குணமாலையை. மல் சேர் தோளான் - மற்போர் பயின்ற தோளையுடைய குபேரமித்திரன். அருள் செய்யப் பெற்றேன் - கொடுக்கப் பெற்றேன். வாசம் - நறுமணம். தாரான் - தாரையுடைய கந்துக்கடன்.

குபேரமித்திரன் தானே மகட்கொடை நேர்தலாலும், கொள்வார் தாழவே வேண்டுதலாலும் இங்ஙனம் கூறினர்.

பிரசம் கலங்கிற் றெனமாந்தர் பிணங்கவேட்டான்
விரைசென் றடைந்த குழலாளைஅவ் வேனிலானே. உசங

## புலவி நுணுக்கம் சீவகன் மகிழ்ந்துரைத்தல்

பூவார் புனலாட்டினுள் பூநறுஞ் சுண்ணம்
பாவாய் பணைத்தோள் சுரமஞ்சரி தோற்றாள் ;
காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவோ அமிர்தோ எனக்குஇன்று ? இது சொல்லாய். உசச

## குணமாலை புலத்தல்

நற்றோ ளவள்சுண் ணநலம் சொலுவான்
உற்றீர், மறந்தீர் ; மனத்துள்உறை கின்றாள் ;
செற்றால்அரி தால் ;சென்மின் ; போமின் தீண்டாது ;
எற்றேஅறி யாதஓர் ஏழையெ னேயான் ? உசரு

தாமம்கமழ் பூந்துகில் சோர அசையாத்
தாமம்பரிந் தாடுதண் சாந்தம் திமிர்ந்திட்டு

---

உசங. கரைகொன்று இரங்கும் - கரையை யலைத்து முழங்கும். கலிகொண்டு - ஆரவாரம் கொண்டு. கறங்க - முழங்க. முழவிம்ம - முழவோசை மிக. வெண் சங்கம் - தவளச் சங்கு ; இது மங்கல முழக்கம். பிரசம் கலங்கிற்றென - வண்டின் கூட்டம் கலங்கியது போல. பிணங்க - நெருங்க. விரை - மணம். அவ் வேனிலான் - நுதல் விழிக்கு அழியாத காமன் போன்ற சீவகன் ;அழிந்த காமனுக்கு உருவில்லையாதலின் இங்ஙனம் கூறினர்.

உசச. பூவார் புனல் - பூக்கள் மிதக்கும் தண்ணீர். பூ - அழகிய. பணை - மூங்கில். காவாது - சொற்பயன் நோக்காது. கண் அற - இரக்க மின்றி. வெஞ்சொல் - வெவ்விய சொல். ஏவோ - துன்பம் தருவதோ, அமிர்தோ - இன்பம் தருவதோ.

வென்றவரே புனலாடுக என்றதனால், குணமாலை புனலாடியதும், யானையெதிர்ப்பட்டதும், சீவகனைக் காண்பதும், பின்பு கூட்டமும் பெறுதலின், " காவாது அவள் சொல்லிய " என்றான்.

உசரு. நற்றோளவள் - நல்ல தோளையுடைய சுரமஞ்சரி. சொலுவான் உற்றீர் - சொல்லுதற்கே முதற்கண் கருதினீர். உறைகின்றாள் - இருக்கின்றாள். செற்றால் அரிது - அவள் சினங்கொண்டால் அதனைத் தீர்ப்பது அரிது. சென்மின் - இவ்விடத்தைவிட்டுச் செல்லுமின். இவ்வாறு சொன்னதும் சீவகன் அவளைத் தீண்டலுற்றமையின், " தீண்டாது போமின் " என்றாள். எற்றே - என்னே. அறியாத - நமக்கு வரும் வருத்தம் நினைந்து வருந்தாத. ஏழை - அறிவிலி.

ஏமன்சிலை வாணுதல் ஏற நெருக்காக்
காமன்கணை யேர்கண் சிவந்து புலந்தாள். உ௬௬

## சீவகன் புலவி தீர்த்தல்

மின்னேர் இடையாள்அடி வீழ்ந்தும் இரந்தும்
சொல்நீர்அவள் அற்பழ லுட்சொரிந் தாற்ற,
இந்நீரன கண்புடை விட்டகன்று இன்பம்
மன்னூர்ந்து மதர்ப்பொடு நோக்கினள் மாதோ. உ௬௭

அன்று நீர்விளையாட்டுக்காலத்தே மதம் மிக்குக் குண மாலையைக் கொல்லப்போந்த அசனிவேகம் என்னும் அரசுவா, தான் சீவகனுக்குத் தோற்றோடி வந்த மானத்தால், மதம் தணிந்து, உணவு கொள்ளாது நாளும் மெலிவ தாயிற்று. அதனை யறிந்த வேந்தனாகிய கட்டியங்காரன், "உற்றது என்?" என்று பாகரை வினவ, அவன் குறிப் பறிந்து அப் பாகர், "நீர் விளையாடிய நாளில் சீவகன் இதற் குச் சினமுண்டாக்கி யடர்த்தான்; அன்றுமுதல் இஃது இவ்வாறு மெலிவதாயிற்று" என்றனர். வேடுவரை வெருட்டி அவர் கவர்ந்து சென்ற ஆனிரையைச் சீவகன் மீட்டதுமுதல் கட்டியங்காரனுக்குச் சீவகன்பால் பகைமையுண்டா யிருந் தமையின், தன் வீரரை விளித்துச் "சீவகனை இன்னே பிணித்துக் கொணர்மின்" என்று பணித்தான். வீரர் பலர் சீவகன் இருந்த மனையை நோக்கி வந்தனர்.

## வீரர் வரவைச் சீவகன் அறிதல்

திங்கள்சேர் முடியி னானும்
செல்வியும் போன்று செம்பொன்

---

உ௬௬. தூமம் - அகிற்புகை. சோர - சிறிது நெகிழ. அசையா - இறுகவுடுத்து. தாமம் - மாலை. பரிந்து - அறுத்து. ஆடு சாந்தம் - பூசிய சாந்தம். ஏமன் சிலை - அம்பு தொடுக்கப்படும் வில். நுதல் - ஈண்டுப் புருவத்தின் மேற்று. காமன் கணையேர் - மலர் அம்பு போலும்.

உ௬௭. இரந்தும் - வேண்டியும். சொல்நீர் - சொல்லாகிய தண்ணீர். அன்பு அழலுள் - அன்பாகிய நெருப்பிடத்தே. ஆற்ற - ஆறும்படி செய்ய. இந் நீரன - இத்தன்மையான புலவிகளை. கண்புடை விட்டகன்று - கண் களின் மதர்ப்போடு பக்கத்தே நோக்கிக் கைவிட்டு. கண் மதர்ப்போடு கைவிட்டு என இயைக்க. மன் ஆர்ந்து - மிக நிறைதலால்.

இங்குவார் கழலி ஞனும்
   கோதையும் இருந்த போழ்தில்,
சிங்கவே றெள்ளிச் சூழ்ந்த
   சிறுநரிக் குழாத்திற் சூழ்ந்தார் ;
அங்கது கண்ட தாதி
   ஐயனுக் கின்ன தென்றாள். உசஅ

## சீவகன் வீரரை வினவுதல்

கடுகிய இளையர் நோக்கும் கண்ணிய பொருளும் எண்ணி
அடுசிலை யழல வேந்தி ஆருயிர் பருகற் கொத்த
விடுகணை தெரிந்து தானை வீக்கற விசித்து வெய்தாத்
தொடுகழல் நரல வீக்கிச் "சொல்லுமின் வந்தது" என்றான்.

## வீரர் தலைவனான மதனன் தான் வந்து சொல்லுதலும் அது கேட்டுச் சீவகன் சினந்துரைத்தலும்

"அடிநிழல் தருக என்றெம் ஆணைவேந் தருளிச் செய்தான் ;
வடிமலர்த் தாரி னுய்நீ வரு"கென, வானின் உச்சி
இடியுரு மேற்றின் சீறி யிருநிலம் சுடுதற் கொத்த
கடிமதில் மூன்று மெய்த கடவுளின் கனன்று சொன்னான்:

---

உசஅ. திங்கள் சேர் முடியினான் - பிறைத் திங்களைச் சூடிய முடியுடைய சிவன். செல்வி - பார்வதி. பொன் இங்கு கழல் - பொன்னாலாகிய கழல். எள்ளி - மதியாது இகழ்ந்து. குழாத்தின் - கூட்டம்போல. இன்னது - இவ்வாறு சூழ்ந்து கொண்டனர்.

உசகூ. கடுகிய இளையர் - அரசனேவலால் கடுகி வந்த வீரர். கண்ணிய பொருளும் - அரசன் எண்ணிவிடுத்த செய்கையும். எண்ணி - சீவகன் தான் எண்ணி. அடு சிலை - பகைவரைத் தப்பாது கொல்லும் வில். அழல - சினந்து. தானை வீக்கற விசித்து - இறுகாதென்னும் உடையைக் கட்டி. வெய்தா - வெய்தாக. நரல - ஒலிக்க. வீக்கி - கட்டி.

உரு௦. அடிநிழல் தருக - வீரர் தம் அரசன் கொணர்க என்றானென் கின்றமையின் "அடி நிழல்" என்றனர். ஆணையருளிச் செய்தான் - ஆணையிட்டுள்ளான். வடிமலர் - தேன் சொரியும் மலர், இடியுருமேறு - இடியேறு. சுடுதற் கொத்த - வானத்தே பறந்து திரிந்து சூடுவதற்குப் பொருந்தின. கடவுளின் - சிவனைப்போல. கனன்று - வெகுண்டு.

"வாளிழுக் குற்ற கண்ணாள்
வருமுலை நயந்து வேந்தன்
கோளிழுக் குற்ற பின்றைக்
கோத்தொழில் நடாத்து கின்றான்;
நாள்இழுக் குற்று வீழ்வ
தின்றுகொல்? நந்த! திண்தேர்
தோள்இழுக் குற்ற; மொய்ம்ப!
பண்ணெனச் சொல்லி னானே." உஎக

இவ்வாறு சொல்லக் கேட்ட நந்தட்டன் முதலிய தோழர்கள் சீவகனைக் காத்தற்குச் சிங்கவேறு போலப் படை பண்ணலுற்றனர். இதனைப் பார்த்திருந்த கந்துக்கடன் தன் மனத்தே வேறு நினைக்கலானான்.

## கந்துக்கடன் உட்கோள்

"வேந்தொடு மாறு கோடல் விளிகுற்றார் செயல தாகும்;
காய்ந்திடு வெகுளி நீக்கிக் கைகட்டி இவனை யுய்த்தால்,
ஆய்ந்தடும் அழற்சி நீங்கும்; அதுபொருள்" என்று நல்ல
சாந்துடை மார்பன் தாதை தன்மனத் திழைக்கின் றானே.

இக் கருத்தைச் சீவகற்குரைப்ப, அவன் உட்கொண்ட போது, அச்சணந்தி யாசிரியன் உரைத்ததும் நினைவிற்கு வந்தது. பின்பு சீவகன் வீரர்கைப் படுவதே தக்கதென வுணர்ந்து அடங்கி நின்றான்.

---

உஎக. வாள் இழுக்குற்ற கண்ணாள் - தன் ஒளி மிகுதியால் வாள் ஒளியின்றி இழுக்குறுமாறு அமைந்த கண்ணையுடைய விசயை. நயந்து - விரும்பி. கோள் இழுக்குற்ற பின்றை - சூழ்ந்து கொள்ளப்பட்டு உயிரிழந்த பின்பு. கோத் தொழில் - அரசாட்சி. நடாத்துகின்றான் - நடத்தும் கட்டியங்காரன். நாள் இழுக்குற்று - வாழ்நாள் முடிந்து. நந்த - விளி. நந்தட்டன் சீவகன் தம்பி; சுநந்தைக்கு மகன். தோள் இழுக்குற்ற - இனிக் கட்டியங்காரன் தோள்கள் கெட்டன. பண் - தேர் பண்ணமைப்பாயாக.

உஎஉ. மாறுகோடல் - பகைத்துக்கொண்டு மாறுபடுதல். விளிகுற்றார் - கெடுதலுற்றோர். கைகட்டி யுய்த்தால் - கையைப் போர்த் தொழில் செய்யாதபடி விலக்கிப் போகவிட்டால். ஆய்ந்து அடும் அழற்சி - வேந்தன் ஆராய்ந்து வருத்துதற்குரிய வெகுளி. பொருள் - செய்யத் தக்கது. மார்பன் - சீவகன். இழைக்கின்றான் - நுணுகி யெண்ணினான்.

### சீவகன் வீரர்கை யகப்படல்

ஈன்றதாய் தந்தை வேண்ட இவ்விட ருற்ற தென்றால்
தோன்றலுக்கு ஆண்மை குன்றாது என்றசொல் இமிழிற் பூட்டி
மூன்றனைத் துலக மெல்லாம் முட்டினு முருக்கு மாற்றல்
வான்தரு மாரி வண்கை மதவலி பிணிக்கப் பட்டான். ௨௭௩

### கண்டிருந்த மக்கள் புலம்புவதொருபுறமாக, சுநந்தை வருந்துதல்

தோளார் முத்தும் தொன்முலைக் கோட்டுத் துயல்முத்தும்
வாளார் உண்கண் வந்திழி முத்தும் இவைசிந்தக்
காளாய் ! நம்பி ! சீவக சாமி !! எனநற்றாய்,
மீளாத் துன்ப நீள்கடல் மின்னின் மிசைவீழ்ந்தாள். ௨௭௪

### குணமாலை துயருறுதல்

பாலா ராவிப் பைந்துகி லேந்திப் படநாகம்
போலா மல்குற் பொற்றொடி பூங்கண் குணமாலை
"ஏலாது ஏலாது எம்பெரு மானுக்கு இஃது" என்னா
நூலார் கோதை நுங்கெரி வாய்ப்பட் டதுஒத்தாள். ௨௭௫

### கந்துக்கடன் மகளிரைத் தெளிவித்தல்

கண்துயி லனந்தர் போலக் கதிகளுள் தோன்று மாறும் ;
விட்டுயிர் போகு மாறும் வீடுபெற் றுயரு மாறும்

---

௨௭௩. வேண்ட - கேட்டுக்கொள்ள. இடர் - வீரர் கையகப்படுதல். தோன்றலுக்கு - சீவகனுக்கு. சொல்லிமிழிற் பூட்டி - சொல்லாலே கயிறுபோலப் பிணிக்கப்பட்டு. மூன்றனைத்துலகம் - மூன்றாகிய உலகமனைத்தும். முட்டினும் - எதிர்த்தாலும். எல்லாம் முருக்கும் - அவற்றையெல்லாம் கெடுக்கும். வான் தரும் மாரி - மழையைப் பொழியும் முகில். மதவலி - சீவகன்.

௨௭௪. தோளார் தொன்முத்து - தோளிடத்தே எய்தும் முத்து. மகளிர் கழுத்திடத்தும் முத்துப் பிறக்கும் என்ப. கோடு - முனை. துயல் - அசையும். இழிமுத்து - இழிகின்ற கண்ணீர்த் துளியாகிய முத்து. காளாய் - காளையே, நற்றாய் - நல்ல தாயாகிய சுநந்தை, மின்னின் - மின்னற்கொடி போல,

௨௭௫. பாலாராவிப் பைந்துகில்-பாலாவி போன்ற பசிய துகில். நாகபடம் போலாம் - நாகத்தின் படம்போல வுள்ள. என்னா - என்று கூறி. நூல் ஆர் கோதை - நூலால் கோக்கப்பட்ட மாலை. நுங்கு எரி - விழுங்குகின்ற நெருப்பு. குணமாலை, கோதை, எரிவாய்ப்பட்டது ஒத்தாள் என்க.

உட்பட வுணர்ந்த யானே யுள்குழைந் துருகல் செல்லேன் ;
எட்பக வனைத்தும்ஆர்வம் ஏதமே; இரங்கல் வேண்டா.௨௭௬

## சீவகன் செல்வதனைக் கண்டோர் கூறிக்கொள்ளுதல்

வினையது விளைவு காண்மின் என்றுகை விதிர்த்து நிற்பார் ;
இனையனாய்த் தெளியச் சென்றால் இடிக்குங்கொல் இவனை யென்பார் ;
புனைநலம் அழகு கல்வி பொன்றுமால் இன்றொ டென்பார் ;
வனைகலத் திகிரிபோல மறுகும்எம் மனங்கள் என்பார்.௨௭௭

நோற்றிலர் மகளிர் என்பார் ;
நோம்கண்டீர் தோள்கள் என்பார் ;
கூற்றத்தைக் கொம்மை கொட்டிக்
குலத்தொடு முடியும் என்பார் ;
ஏற்றதொன் றன்று தந்தை
செய்தஇக் கொடுமை என்பார் ;
ஆற்றலள் சுநந்தை என்பார் ;
ஆ,தகாது அறனே என்பார். ௨௭௮

## சீவகன் வீரரிடையே அவருடன் போதல்

நீரகம் பொதிந்த மேக
நீனிற நெடுநல் யானைப்
போர்முகத் தழலும் வாட்கைப்
பொன்னெடுங் குன்ற மன்னன்,

---

௨௭௬. கண்துயில் அனந்தர்போல - கண்ணுறக்கமும் உணர்வும் போல. கதி - பிறப்பு. உள் குழைந்து - மனம் கசிந்து. உருகல் செல்லேன் - உருகுதலில் செல்லேன். எட்பக வனைத்தும் - எள்ளின் ஒருபாதி யள வும். ஆர்வம் - பற்றுவைத்தல். ஏதம் - குற்றம்.

௨௭௭. வினை - தீவினை. கைவிதிர்த்து - கைம்முறித்து. இனையனாய்- கையகப்பட்டுச் சென்றான்போலப் போகுந்தன்மையனாய். தெளிய - அரசன் தெளியுமாறு. இடிக்கும் கொல் - கொல்லுவானோ. புனைநலம் - செயற்கையழகு. பொன்றும் - கெடும். வனைகலத் திகிரி - மட்கலம் செய்யும் சக்கரம். மறுகும் - மயங்குகின்றது.

௨௭௮. கொம்மைகொட்டி - தட்டியழைத்து. ஏற்றது - தக்கது. தந்தை - கந்துக்கடன். ஆற்றலள் - பொறுக்கமாட்டாள். ஆ. அறனே தகாது - ஆ, அறமே! இது நினக்குத் தக்கதன்று.

ஆர்கலி யாணர் மூதூர்
அழுதுபின் செல்லச் செல்வான்,
சீருறு சிலம்பி நூலால்
சிமிழ்ப்புண்ட சிங்க மொத்தான். உஎகூ

கந்துக்கடன் விரைந்து அரசனை யடைந்து பன்னிரு கோடிப் பசும் பொன்னைத் தந்து அவனது சீற்றத்தைத் தணிக்க முயல்வானானான்.

## கந்துக்கடன் அரசற்குக் கூறல்

மன்னவ, அருளிக் கேண்மோ
மடந்தையோர் கொடியை மூதூர்
நின்மதக் களிறு கொல்ல
நினக்கது வடுவென் றெண்ணி,
என்மகன் அதனை நீக்கி
இன்னுயி ரவளைக் காத்தான்;
இன்னதே குற்ற மாயின்,
குணமினி யாது? வேந்தே! உஅ௦

நாண்மெய்க்கொண் டெட்டப் பட்டார்
நடுக்குறு நவையை நீக்கல்
ஆண்மக்கள் கடனென் றெண்ணி
யறிவின்மை துணிந்த குற்றம்
பூண்மெய்க்கொண் டகன்ற மார்ப
பொறுமதி என்று பின்னும்

---

உஎகூ. நீர் அகம் பொதிந்த மேகம் - நீரை முகந்துகொண்டுள்ள கருமுகில். நீல் நிற யானை - கரிய நிறத்தையுடைய யானை. யானையும் வாட்கையுமுடைய குன்றம் போல்வானாகிய சீவகன். போர் முகத்து அழலும் வாட்கை - போர்க்களத்தே நெருப்பென விளங்கும் வாளேந்திய கை. ஆர்கலி - மிக்க ஆரவாரம். யாணர் - புதுவருவாய். சிலம்பி - சிலந்தி. சிமிழ்ப்புண்டது - கட்டுண்டது.

உஅ௦. மடந்தை ஓர் கொடியை - மடந்தையாகிய ஒரு கொடி போன்ற குணமாலை யென்பவளை. கொல்ல - கொல்வதற்குச் செல்ல. வடு - பழியாம். அவளை இன்னுயிர் காத்தான் - அவளை உயிர் தப்புவித்தான். இன்னது - இது.

நீண்மைக்கண் நின்று வந்த
நிதியெலாம் தருவல் என்ருன். உஅக

இதனுடைமையாது, வேட்டுவரை வெந்நிட்டோடச் செய்து அவர் கவர்ந்து சென்ற ஆனிரைகளை மீட்டு அரசற்கு நிகழவிருந்த வடுவைச் சீவகன் மாற்றியதையும் கந்துகன் விதந்தோதினன்.

### கட்டியங்காரன் சினம் தணியாது செய்வது கூறல்

ஆய்களிற் றசனி வேகம் அதன்மருப் பூசி யாகச்
சீவகன் அகன்ற மார்பம் ஓலையாத் திசைகள் கேட்பக்
காய்பவன் கள்வ ரென்ன எழுதுவித் திடுவல்; இன்னே
நீபரி வொழிந்து போய்நின் அகம்புகு; நினையல்; என்ருன்.

இச்சொற்களால் மனம் புண்பட்டு ஆற்ருனாய்க் கந்துகன் தன் மனைக்கு மீண்டான். அவன் முயற்சி பயன் தாராமை கண்டு சுநந்தையும் ஆருத் துயருறுவாளாயினள். அப்போழ்தில், கந்துகன் பண்டு நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியைக் கூறலுற்று, "சுநந்தாய், பண்டு உனக்குப் பல குழந்தைகள் பிறந்து பிறந்து இறந்தன; ஒருகால், யான் கருக்கொண்டிருக்கும் இம் மகவு இறப்பின் யான் உயிர்தரியேன் என்று உட்கொண்டனை; அப்போது ஒரு முனிவன் வந்தான்; அவற்குப் பசி தீர உணவளித்து உற்ற குறையைத் தெரிவிக்க அவன், 'நீவிர் கவலல் வேண்டா; நீவிர் ஒரு மகனைப் பெறுவீர். அவனை ஒரு காலத்தே அருளிலான்

உஅக. நாண்மெய்க் கொண்டு ஈட்டப்பட்டார் - நாணம் முதலாகிய வற்ருல் மெய்யும் உருவுமாகச் சமைக்கப்பட்ட மகளிர், நவை - துன்பம். எண்ணி - களிற்றினைத் தான் பெயர்த்த ஆனிரைபோலக் கருதி. அறிவின்மை - அறியாமையால், மெய்க்கொண்டு - மெய்யிலே யணிந்து. நீண்மைக்கண் நின்று வந்த நிதி - தொன்றுதொட்டு வந்த நிதியனைத்தும்.

உஅஉ. ஆய் களிறு - வருந்திய யானை. ஊசி - எழுத்தாணி. திசைகள் கேட்ப - எல்லாத்திசையினு முள்ள அரசரும் வெள்ளிமலையி லுள்ளாரும் கேட்குமாறு. கள்ளரென்னக் காய்பவன் - கள்வர் கொல்லப்படுமாறுபோல என்னுல் கொல்லப்படுவோனுவன். பரிவு - வருத்தம். நினையல் - இதனை நினையாதே. "கொல்லுதலை எழுதுவிப்பேன் என்ருன், இதனுல் தனக்குப் புகழ் நெடுங்காலம் நிற்குமென்று கருதி."

ஒருவன் கைக்கொண்டு செல்வன்; அதுகண்டு ஊரவர் அஞ்சுவர்; நீவிரும் வருந்துவிர்; ஆனால், அவனை ஓர் இயக்கன் கொண்டு சென்று காப்பான்; சில பகல் கழிந்தபின் அவனைக் காண்பீர் என்று கூறினன். ஆதலால், நின் மனக்கவலை நீங்குவாயாக" என்று சொன்னான்.

## பதுமுகன் முதலிய தோழர் செய்தியறிந்து செய்வது சூழ்தல்

நட்டவற் குற்ற கேட்டே பதுமுகன் நக்கு மற்றோர்
குட்டியைத் தின்ன லாமே கோட்புலி புறத்த தாக,
கட்டியங் கார னென்னும் கழுதைநம் புலியைப் பாய
ஒட்டியிஃ துணர லாமே யுரைவல்லை அறிக என்றான். உஅ௩

சென்ற ஒற்றன் முன்பு சீவகற்கு நிகழ்ந்த வனைத்தும் ஒன்றுவிடாது அறிந்துவந் துரைத்தான். சீவகன் வீரர் கைப்படுதற்குக் கந்துக்கடனும் ஓராற்றால் துணையானான் என்றறிந்து மதிமயங்குகையில், புத்திசேனன் என்பான் ஒரு சூழ்ச்சி சொல்லலுற்றான்.

## புத்திசேனன் கூறல்

நிறைத்திங்கள் ஒளியொ டொப்பான்
புத்திசேன் நினைந்து சொல்லும்;
மறைத்திங்கண் நகரை வல்லே
சுடுதும்நாம்; சுடுத லோடும்,
இறைக்குற்றேல் செய்த லின்றி
எரியின்வாய்ச் சனங்கள் நீங்கச்

---

உஅ௩. நட்டவற்கு உற்ற-நட்புச் செய்தவனாகிய சீவகனுக்கு நேர்ந்தவற்றை. நக்கு - சிரித்து. புலி புறத்ததாக, கழுதை, புலிக்குட்டியைத் தின்னல் ஆமே என்க. புறத்ததாக - புறத்தேயிருக்க. ஆமே-ஆகாது என்க. மற்று, வினைமாற்று. தான் பாதுகாக்கும் தொழிலுடைமையின் சீவகனைக் குட்டி யென்றான், நம் புலியைப் பாய - நம் புலியைப் பாய்தற்கு. இஃது ஒட்டியுணரலாமே - சீவகன் வீரர்கைப்பட்டான் என்னும் இச்சொல் உண்மையாகாது. இதனை ஒற்றினால் ஒற்றியறியலாம். வல்லையறிக - இது ஒற்றற்குக் கூறுவது. விரைவில் இவ்வுரையின் உண்மையை யறிந்து வருக.

சிறைக்குற்றம் நீக்கிச் செற்றாற்
செகுத்துக்கொண் டெழுதும் என்றான். உஅச

இவன் இவ்வாறு கூற, இதனைத் தக்கதெனத் துணிந்து ஏனையோரும் மேலே செய்யக் கடவவற்றைப் பேசிக்கொண் டிருக்குமளவையில், நந்தட்டனும் நபுல விபுலர்களும், குபேர மித்திரனும், அவன் பகுதியினரும் பிறரும் வந்து ஈண்டினர். பதுமுகன் அவரவர் இருக்கவேண்டும் இருப்பும் வகுப்பும் காட்ட, எல்லோரும் அவ்வாறே இருந்தனர். இச் செய்தி காந்தருவதத்தைக்குத் தெரிந்தது.

## தத்தை தனக்குப் பாதுகாவலராகத் தெய்வங்களை வருவித்தல்

பொன்னணி மணிசெ யோடை நீரின்வெண் சாந்து பூசித்
தன்னுடை விஞ்சை யெல்லாம் தளிரியல் ஓத லோடும்,
மின்னுடை வாளும் வேலும் கல்லொடு தீயும் காற்றும்
மன்னுட னேந்தித் தெய்வம் மாதரைச் சூழ்ந்த வன்றே.

## தத்தை தன் விஞ்சையால் சீவகனைச் சிறைமீட்பின் வரும் பழி நினைந்து இரங்குதல்

மன்னன் செய்த சிறைமா கடலுட் குளித்தாழ்வுழித்
தன்னை யெய்திச் சிறைமீட்டனள் தன்மனை யாள்எனின்,

---

உஅச. நிறைத் திங்கள் - கலைநிரம்பிய திங்கள். ஒப்பான் புத்தி சேனன் - ஒப்பவனாகிய புத்திசேனன். இங்கண் மறைத்து - இங்கே மறைந்திருந்து. சுடுதும் - சுடுவேம். இறைக்குற்றேவல் செய்தலின்றி - இறைவனுக்குக் குற்றேவல் செய்வதை விடுத்து. எரியின்வாய் - எரியி னிடம் அதனை அவித்தற்கு. செற்றான் - சிறையாகப்பற்றிய மதனன். செகுத்து - கொன்று. சிறைக்குற்றம் நீக்கிக் கொண்டெழுதும் என முடிக்க. மறைந்து, மறைத்தென விகாரம்.

உஅடு. பொன் அணிமணி செய் ஓடை-பொன்னாலும் அழகிய மணியா லும் செய்த சாந்து மடல். நீரின் - நீருடன். தளிரியல் - தளிரினது இயலை (அழகை) யுடைய காந்தருவதத்தை. மின் அடு வாள் - மின்னலை யும் தகர்க்கும் வாள். கல் - ஆலங்கட்டி. மன் - மிகுதி. தெய்வம் - தெய்வங்கள்.

என்னை யாவது இவன்ஆற்றலும் கல்வியு மென்றுடன்
கொன்னும் வையம் கொழிக்கும் பழிக்குளன்செய்கோ, தெய்வமே.

ஆவ் தாக ; புகழும் பழியும் எழுநாள்அவை
தேவர்மாட் டும்உள ; மக்களுள் இல்வழித் தேர்கலேன் ;
நோம்என் நெஞ்சம் எனநோக்கி நின்றாள் சிறைப்பட்டதன்
காவற் கன்றின் புனிற்றாவன கார்மயிற் சாயலே. ௨௮௭

## சீவகன் நினைவு

இனி, வீரர் குழாத்திடையே மதனனுடன் செல்லும் சீவகன் தன் உள்ளத்தே வெகுளித் தீப் பொங்கப் பல பொருள்களை நினைக்கலுற்றான்.

மாநகர் சுடுத லொன்றோ, மதனனை யழித்த லொன்றோ,
வானிக ரில்லா மைந்தர் கருதியது; அதுவும் நிற்க
வேய்நிக ரில்ல தோளி விஞ்சையால் விடுத்துக் கொள்ளப்
போயுயிர் வாழ்தல் வேண்டேன் எனப்பொருள் சிந்திக் கின்றான்.

## கட்டியங்காரனைக் கோறற்கு இது காலமன்றெனத் தெளிந்து சுதஞ்சணனை நினைத்தல்

மின்னிலங் கெயிற்று வேழம்
வேழத்தாற் புடைத்துத் திண்தேர்
பொன்னிலங் கிவுளித் தேரால்
புடைத்துவெங் குருதி பொங்க

௨௮௬. சிறைமாகடல் - கைப்படுதலாகிய பெரிய கடல். முற்றவும் பற்றப்படுதலின், "குளித்தாழ்வுழி" யென்றார். எய்தி - சேர்ந்து. தன் மனையாள் - ஈண்டுக் காந்தருவதத்தை. என்னையாவது என்பதனைத் தனித்தனியே கூட்டி ஆற்றல் என்னையாவது, கல்வி யென்னையாவது என முடிக்க. என்னை, ஐ அசை. என்று வையம் கொன்னும் கொழிக்கும் - என்று உலகத்தார் பெரிதும் தூற்றும். செய்கோ - செய்வேன்.

௨௮௭. இல்வழித் தேர்கலேன் - இல்லாதாரைக் காண்கிலேன். சிறைப்பட்ட காவற்கன்றின் புனிற்றா - ஒரு சிறையிலேயுள்ள தன் காவலையுடைய கன்றை ஈன்றிளமை தீராத ஆ. அனகார் மயிற்சாயல் - அந்த ஆவின் நோக்கினைப் போன்ற நோக்கினையுடைய, சாயலால் மயிலொத்த காந்தருவதத்தை. ஆ விடுவிக்க நோக்கிநின்றாற் போல நின்றாள். இது பயவுவமம்.

௨௮௮. வான் நிகர் இல்லா மைந்தர் - வானமும் நிகர்க்கமாட்டாத வீரரான தோழன்மார். நிற்க - தாழ்வில்லை. வேய் - மூங்கில். இல்ல - இல்லாத. போய் - பிழைத்துப் போய். பொருள் - வேறே செய்யத் தக்கது.

இன்னுயி ரவனை யுண்ணும்
எல்லைநாள் வந்த தில்லை ;
" என்னை இக் கிருமி கொன்று ? " என்
தோழனை நினைப்ப லென்றான். உஅகூ

## இடியும் மின்னும் முழக்கமும் கலந்த பெரு மழையுடன் சுதஞ்சணன் வந்து சீவகனைக் கொண்டேகல்

விண்ணும் மண்ணும் அறியாது விலங்கொடு மாந்தர்தம்
கண்ணும் வாயும் இழந்தாம் கடல்கொண்டது காண்கெனப்
பெண்ணும் ஆணும் இரங்கப் பெருமான்மகன் சாமியை
அண்ண லேந்தி யகலம் புலிக்கொண்டெழுந் தேகினான்.

அதனைத் தன் விஞ்சையால் காந்தருவதத்தை யுணர்ந்து அவற்கு "நன்றுண்டாக" என வாழ்த்தினளாயினும், அவனை மறுவலும் காணும் நாள் என்றோ எனக் கலக்கமுற்றாள். பின்பு ஒருவாறு தேறி, தனக்குத் துணைசெய்த தெய்வங் கட்கு அவள் விடை கொடுத்தனுப்பினள்.

## சீவகன் மறைந்தது கண்ட மதனன் முதலாயினார் செய்வது சூழ்தல்

மலைத்தொகை யானை மன்னன்
மைத்துனன் மதனன் என்பான்
கொலைத்தொகை வேலி னானைக்
கொல்லிய கொண்டு போந்தான்

---

உஅகூ. மின் இலங்கு எயிறு - ஒளிதிகழும் கொம்பு. வேழம் வேழத்தால் புடைத்து - யானையை யானையால் மோதித் தாக்கி. பொன் னிலங்கு இவுளித் தேர் - பொன்னணி யணிந்த குதிரை பூட்டிய தேர். எல்லைநாள் - கட்டியங்காரனுக்கு இறுதிக் காலமாகிய நாள். இக் கிருமி - சிறு பூச்சிகளையொத்த இப் படைவீரர்களை. கொன்று பெறுவது என்னை என முடிக்க. மக்கள் என்கிற கருத்தின்மையின் " கிருமி " என்றான். தோழன் - சுதஞ்சணன்.

உகூ0. அறியாது - அறியாதவாறு. இழந்து - இழப்ப, ஆம் கடல் - மேல் ஊழிக்காலத்தே வரும் கடல். விலங்குகள் மேயாமையின், " வாயிழந்தன." காண்க என - காண்கென. பெருமான் - சச்சந்தன். சாமி - சீவகன், சீவகனைச் சீவகசாமியென்றும் வழங்குப. அண்ணல் - பெருமையையுடைய சுதஞ்சணன். அகலம் புலிக்கொண்டு - மார்பில் தழுவிக்கொண்டு, எழுந்து - மேனோக்கி யெழுந்து.

நலத்தகை யவனைக் காணான்
    நஞ்சுயிர்த் தஞ்சி நோக்கி
சிலைத்தொழில் தடக்கை யன்னற்கு
    இற்றெனச் செப்பு கின்றான். உகக

மன்னனாற் சிறப் பட்ட
    மைந்தனைக் கொல்லப் போந்தாம் ;
என்னினிச் சொல்லிச் சேறும்,
    என்செய்தும் யாங்க ளெல்லாம் ;
இன்னது பட்ட தென்றால்
    எரிவிளக் குறுக்கும் நம்மைத்
துன்னுபு சூழ்ந்து தோன்றச்
    சொல்லுமின் செய்வ தென்றான். உகஉ

அவர்கள் தங்களுள் ஒருவனைக் கொன்று, கட்டியங் காரனிடம் சீவகனைக் கொன்றதாகப் பொய்யே சொல்லி விடத் துணிந்து சென்றனர்.

### மதனன் அரசற்குக் கூறல்

காய்சின வெகுளி வேந்தே
    களிற்றொடும் பொருத காலை,
மாசனம் பெரிது மொய்த்து
    மழையினோ டிருளும் காற்றும்
பேசிற்றான் பெரிதும் தோன்றப்
    பிழைத்துய்யப் போத லஞ்சி

---

உகக. கொலைத் தொகை வேலினான் - பல கொலைகளைச் செய்து சிறந்த வேலையுடைய சீவகன். கொல்லிய - கொல்லுதற்கு. நலத்தகையவன் - நல்ல அழகையுடைய சீவகன். நஞ்சுயிர்த்து - வெய்துயிர்த்து. சிலைத்தொழில் தடக்கை - விற்றொழிலில் வல்ல பெரிய கை. இற்று - இத்தன்மைத்து.

உகஉ. மைந்தனை - சீவகனை. போந்தாம் - கைக்கொண்டு போந்தநாம். சொல்லிச் சேறும் - சொல்லிச் செல்வேம். பட்டது இன்னது - நேர்ந்தது இது ; பட்டதுன்பம் இது என்றுமாம். எரி விளக்கு உறுக்கும் - நடைவிளக்கு நம்மை எரிக்கும். நடைவிளக்கு - தலையிலும் தோளிலும் விளக்கேற்றிவைத்து, கைகளிலே துகிலைச் சுற்றி நெய்யில் தோய்த்து எரித்தல். இது கல்வெட்டுக்களில் காணப்படுவது. துன்னுபு - நெருங்கி. சூழ்ந்து - ஆராய்ந்து. தோன்ற - சூழ்ச்சி விளங்க.

வாசங்கொள் தாரி னானை
    மார்புபோழ்ந் துருட்டி யிட்டேம். உகூரு

## அரசன் அதுகேட்டு மகிழ்ந்து சிறப்புச் செய்தல்

அருள்வலி யாண்மை கல்வி
    அழகறி விளமை யூக்கம்
திருமலி ஈகை போகம்
    திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவர்இவ் வுலகில் யாரே
    சீவகன் ஒக்கும் நீரார்;
பெரிதரிது இவனைக் கொன்றாய்
    பெறுகஎனச் சிறப்புச் செய்தான். உகூச

## குணமாலையார் இலம்பகம்

முற்றும்.

---

உகூரு. மாசனம் - மிக்க மக்கள் கூட்டம். மொய்த்து - மொய்த்த அளவிலே. பெரிதும் தோன்ற - மிகத் தோன்றுதலாலே, பிழைத்து உய்யப்போதல் அஞ்சி - எங்களைத் தப்பி அவன் உய்யப்போய் விடுவனென்று அஞ்சி. போழ்ந்து - பிளந்து. உருட்டியிட்டோம் - தள்ளி விட்டோம்.

உகூச. வலி - மெய்வலி. ஆண்மை-ஆளுந்தன்மை. அறிவு-இயற்கையறிவு. திருமலி யீகை - செல்வம் மிகுகின்ற கொடை. போகம் - எல்லாவற்றையும் நுகரவல்லனாதல். ஒக்கும் நீரார் ஒருவர் யாரே என்க. ஏகாரம் எதிர்மறை. பெரிது அரிது - சீவகனைக் கொல்வது மிகவும் அரிது. பெறுக - யான் தரும் இவற்றைப் பெறுக.

# ரு. பதுமையார் இலம்பகம்

[பதுமையார் இலம்பகம்: சீவகன் பதுமையை மணந்து கொண்ட செய்தியைக் கூறும் இலம்பகம். இதன்கண், சீவகன் தேவனுடன் சில நாளிருந்து பின் பல நாடுகளையும் காண்டற்கு விரும்பி, அவன் காட்டிய நெறியைக் கடைப்பிடித்துப் பல்லவ தேயத்தையடைந்து அரச குமரனை உலோகபாலனைக் கண்டதும், அவன் தங்கை பதுமையென்பாள் பூக்கொய்யுமிடத்து அரவு தீண்டப்பெற்று உயிர் சோர்ந்ததும், அரசன் மகள் விடந் தீர்த்தார்க்கு அவளை மணம் செய்து கொடுப்பேனெனத் தெரிவித்ததும், சீவகன் விடந் தீர்த்ததும், அவளை மணந்து சின்னாள் தங்கியிருந்து, அவட்கு அறிவியாமலே நீங்கிச் சென்றதும், பதுமை தோழியொருத்தி தேற்றத் தேறியிருந்ததும், பிறவும் உரைக்கப்படுகின்றன.]

### சுதஞ்சணனால் சிறை வீடு பெற்ற சீவகனது மன நிலை

விலங்கிவில் லுமிழும் பூணான்
விழுச்சிறைப் பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி னான்வந்
தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலும் மகிழ்வு நெஞ்சில்
பொலிதலும் இன்றிப் பொன்னார்ந்து
உலம்கலந் துயர்ந்த தோளான்
ஊழ்வினை யென்று விட்டான். உகரு

சுதஞ்சணன் சீவகனைச் சுமந்துகொண்டு தன் மலைக்குக் கொண்டு சென்று, தூய நீராட்டி, மங்கலவணியணிந்து தன்

---

உகரு. விலங்கி வில் உமிழும் பூண் - ஒளி குறுக்கிட்டு ஒளிரும் அணி. விழுச்சிறை - நீக்குதற்கரிய சிறை. சீவகன் முற்பிறவியில் அன்னத்தைச் சிறைசெய்த நிகழ்ச்சியை யுட்கொண்டு, இது "விழுச்சிறை" எனப்பட்டது என்பர். அலங்கலாகிய தாரினான். அம், அல்வழிக்கண் வந்தது. தாரினான் - சுதஞ்சணன். பொலிதலும் இன்றி - தோன்றுதல் இன்றி. உலம் கலந்து - தூண் போன்று. என்று விட்டான் - என்றே கருதி மனத்தில் கொள்ளானாயினான்.

னுரிமை மகளிர் முன் நிறுத்தி, "இவன் ஒரு பவித்திர குமரன்" என்று கூறிப் பாராட்டினான். அவர்களும் சீவகன் பால் பேரன்பு காட்டி அவனை மகிழ்வித்தனர். இந் நிலையில், அவர்கள் சுதஞ்சணனை நோக்கி, "நினக்கும் இவற்கும் எவ்வாறு தொடர்புண்டாயிற்று?" என்று வினவ, அவன் தான் கொண்டிருந்த நாயுடம்பு நீங்குதற்குச் சீவகன் செய்த மந்திரவுதவியைச் சொல்லிப் பாராட்டினான்.

### தெய்வ மகளிர் கூறல்

கடற்சுற வுயரிய காளை யன்னவன்
அடற்கரும் பகைகெடுத் தகன்ற நீணில
மடத்தகை யவளொடும் வதுவை நாட்டிநாம்
கொடுக்குவம் எனத்தெய்வ மகளிர் கூறினர். உகசு

### சீவகன் அம் மகளிர்க்குக் கூறல்

செருநிலத் தவனுயிர் செகுத்து மற்றெனக்கு
இருநிலம் இயைவதற் கென்னல் வேண்டுமோ?
திருநிலக் கிழமையும் தேவர் தேயமும்
தரும்நிலத் தெமக்கெனில் தருகும் தன்மையீர். உகஎ

### அவன் சுதஞ்சணற்குத் தன் கருத்தையுரைத்தல்

மண்மிசைக் கிடந்தன மலையும் கானமும்,
நண்ணுதற் கரியன நாடும் பொய்கையும்,

---

உகசு. கடற்சுறவு உயரிய காளை - கடலிடத்தே வாழும் சுறுமீனின் கொடியையுடைய காமன். அடற்கு அரும்பகை - வெல்லுதற்கு அரிய பகைவனான கட்டியங்காரனை. நீள் நில மடத் தகையவள் - நிலமாகிய பெண்ணை. நிலத்தை மகளாக உருவகம் செய்யலின், மடத்தகையவள் என்றார். மடம், இளமை ; தகை - அழகு. வதுவை நாட்டி - திருமணம் செய்து. இனி, நிலத்தோடும், திருமகளாகிய மடத்தகையளொடும் என்றும் கூறலாம்.

உகஎ. நிலக்கிழமையும், தேயமும் நிலத்தே தாரும் என்னில் தரத் தக்கதன்மை யுடையீர், விளி. செருநிலம் - போர்க்களம். அவன் கட்டியங்காரன். இருநிலம் - ஏமாங்கதநாட்டு அரசியல். அரிதாயினன்றோ என்னல் வேண்டும் ; அரிதன்று என்பான், "என்னல் வேண்டுமோ" என்றான். தாரும் என்பது தரும் என்றும், தரும் என்றது தருகும் என்றும் வந்தது விகாரம்.

கண்மனம் குளிர்ப்பன ஆறும் காண்பதற்கு
எண்ணமொன் றுளதெனக்கு, இலங்கு பூணினாய்! உகூஅ

"ஊற்றுநீர்க் கூவலுள் உறையும் மீனனூர்
வேற்றுநா டதன்சுவை விடுத்தல் மேயினர் :
போற்றுநீ ; போவல்யான்" என்று கூறினாற்கு
ஆற்றின தமைதியங் கறியக் கூறினான். உகூகூ

சீவகன் செல்லுதற்கு நெறி கூறலுற்ற சுதஞ்சணன், "இம்மலைக்கு இரண்டு காதம் செல்லின் அரணபாதமென் றொரு மலை தோன்றும் ; அதனடிவாரத்தில் சாரணர் பலர் உளர் ; அவரை வழிபடின், இயக்கி யொருத்தி தோன்றி இனிய விருந்தூட்டுவள், உண்டபின், அச் சாரலிலே செல்க; இருபத்தைங் காதம் மிக்க யானை செறிந்த காடொன்று கங் கைக் கரையில் உண்டு. அதன்கண் இரண்டு காதம் சென்றால் பேய்வனம் ஒன்று காணப்படும். அங்கே பேய்கள் அழகிய மகளிர் உருக்கொண்டு போந்து வஞ்சம் செய்யும் ; அவ் வஞ் சனைக்கு இடந்தராது மேலே ஒரு காதம் செல்லின், பல்லவ தேயம் காணப்படும். அந்நாட்டில் வழி வருத்தம் தீர இரு திங்கள் இருந்து பின், போகலுறின் நெடுஞ்சுரம் கடத்தல் வேண்டும். அதன் கொடுமை பெரிது ; அங்கே நெறியின் நீங்கிய தாபதரும் இருப்பர். அதனைக் கடந்து செல்லின், சித்திரகூட மலையைக் காணலாம். அதனருகே அஞ்சனமா நதி யோடுகின்றது. அது மிக இனிய இடமாகும். அங்கே,

இதுபள் ளி;இடம் பனிமால் வரைதான் ;
அதுதெள் ளறல்யாறு ; உவைதே மரமாக் ;

---

உகூஅ. கிடந்தன-உள்ளனவாகிய, கண் மனம் குளிர்ப்பன ஆறும் - காண்பார் கண்ணும் மனமும் குளிரச் செய்யும் யாறுகளும். எண்ணம் - விருப்பம்.

உகூகூ. ஊற்று நீர்க் கூவல் - பிறிதோரிடத்தே ஊறி வருதலால் நிரம்புதலின்றி நிலையூற்றால் நிரம்பிய நீரையுடைய குளம். நாடது - 'அது' பகுதிப்பொருள் விகுதி. விடுத்தல் மேயினர் - விரும்புவதிலர். போற்று - இவ்விடத்தே காத்துக்கொண்டிரு. ஆறு - வழி. அமைதி - இயல்பு. அறிய - விளங்க.

கதிதள் ளியிரா துகடைப் பிடிநீ;
மதிதள் ளியிடும் வழைசூழ் பொழிலே. ௩௦௦

இவ்விடத்தின் நீங்கிச் சென்றால் பன்னிரு காதப் பரப்பும் விளைநிலமேயாம். அந்த நாடு தக்க நாடு எனப்படும். அதற்குப் பின் பேர் யாறு ஒன்று காண்பாய். அதனை நீங்கிச் செல்லின் கானவர் வாழும் பெருங் காடு ஒன்று தோன்றும்; அதனுள்ளே நான்கு வாவிகள் உள்ளன. அவற்றைப் பொருள் செய்து நோக்காது, மேலும் ஓர் ஐங்காதம் மிக்க மலர் செறிந்த இனிய காடொன்றைக் காணலாம். அதனைக் கண்டு செல்லின் எதிரே வனகிரி என்னும் மலை தோன்றும்; அதனைக் கடத்தற்கு வேண்டிய வழிகள் மிக அரியனவாகும்; ஆயினும் கடந்தேகின், கவர்த்த வழிகள் பல காணப்படும். அங்கே, ஒரு சுனை தோன்றும்; அதனருகே ஒரு சிலாவட்டம் உண்டு; அதன் மருங்கே வேங்கை மரம் நிற்கும்; அதன் பக்கத்தே ஒரு செவ்விய நெறி செல்கின்றது. அதனைத் தொடர்ந்து சென்றால் மத்திம தேயத்தையடைவாய். அவ்வரசன் நினக்குத் தன் மகளைத் தந்து "இங்கே உறைக" என விழைவன்; நின் தோழர்களும் அங்கே வந்து சேர்வர். இவ்வாறு நெறியும், நெறிக்கண் நிகழ்வனவும் கூறிய அத் தேவன், இனிய இசைக்குரிய குரல் தருவதும், பாம்பு முதலியவற்றின் விட மொழிப்பதும, வேற்றுடம்பு தருவதுமாகிய மூன்று மறைமொழிகளை யோதிக் கொடுத்தான். அவன்பால் விடைபெற்றுக்கொண்டு சீவகனும் புறப்பட்டான். புறப்படும்போது அவன் மனத்தே தன் மனைவியரைக் கூடுங் காலம் என்றோ என ஓர் எண்ணந் தோன்ற, அத் தேவன் அதனையுணர்ந்து "பன்னிரண்டு திங்களுள் அவர்களை நீ சேர்வை; பகைவனை வென்று அரசுரிமையும் எய்துவை" என்றான்.

---

௩௦௦. பள்ளி - தவப்பள்ளி. இடம் - இடப்பக்கம். மால்வரை - பெரிய மலை. தெள் அறல் - தெளிந்த நீர். உவை - முன்னும் பின்னும். கதி - செல்கை. தள்ளியிராது - தாமதிக்காது. மதி தள்ளியிடும் - அறிவைக் கெடுத்துவிடும். வழை - சுரபுன்னை மரம்.

### தேவன் சீவகனை மலையடிக்குக் கொணர்தல்

அழல்பொதிந்த நீளெஃகின்
அலர்தார் மார்பற் கிம்மலைமேல்
கழல்பொதிந்த சேவடியால்
கடக்க லாகா தெனவெண்ணிக்
குழல்பொதிந்த தீஞ்சொல்லார்
குழாத்தின் நீங்கிக் கொண்டேந்தி
நிழல்பொதிந்த நீண்முடியான்
நினைப்பிற் போகி நிலத்திழிந்தான். ௩௦௧

### அவன்பால் சீவகன் விடைகொண்டேகுதல்

வண்தளிர்ச் சந்தனமும்
வாழையு மாவும் வான்திண்டி
விண்டொழுகு தீங்கனிகள்
பலவு மார்ந்த வியன்சோலை
மண்கருதும் வேலானை
"மறித்தும் காண்க" எனப்புல்லிக்
கொண்டெழுந்தான் வானவனும்
குரிசில் தானே செலவயர்ந்தான். ௩௦௨

### சீவகன் மலைச்சாரலில் செல்லுதல்

தோடேந்து பூங்கோதை வேண்டேம்;
கூந்தல், தொடேல்; எம்மில்
பீடேந் தரிவையர்இல் பெயர்கென்
றூடு மடவார்போல்

---

௩௦௧. அழல் பொதிந்த நீள் எஃகின் - நெருப்பின் வெம்மை நிரம்பப் பொதிந்த நீண்ட வாளையுடைய. கழல்பொதிந்த சேவடி - வீர கண்டை யணிந்த சேவடி. குழல் பொதிந்த தீஞ்சொல்லார் - குழல்போலும் இனிமை பொருந்திய மகளிர். நிழல் - ஒளி. நினைப்பின் போகி - நினைவு போல விரைந்து சென்று.

௩௦௨. வண்தளிர்ச் சந்தனம் - வளவிய தளிர்களையுடைய சந்தனம். வான்திண்டி - வானளாவ. விண்டு - விரிந்து. ஒழுகு தீங்கனி - தேனொழுகும் கனிகள். ஆர்ந்த - நிறைந்த. மண்கருதும் வேலானை - ஏமாங்கத நாட்டை யெய்துதற்குரிய வேற்படையுடைய சீவகனை. மறித்தும் - மீட்டும். சீவகன் வீடுபெற்ற காலத்தே சுதஞ்சணனைக் காண்பது முத்தி யிலம்பகத்தே காண்க. கொண்டு - விடைகொண்டு. எழுந்தான் - வானத்தே சென்றான். இதற்குமுன் சீவகன் தனியே போனது இன்மையின், "தானே செலவயர்ந்தான்" எனத் தேவர் இரங்கிக் கூறுகின்றார்.

கோடேந்து குஞ்சரங்கள் தெருட்டக்
 கூடா பிடிநிற்கும்
காடேந்து பூஞ்சாரல் கடந்தான்
 காலில் கழலானே. ௩௦௩

## சீவகன் வேட்டுவர் தலைவனைக் காண்டல்

காழக மூட்டப் பட்ட
 காரிருள் துணியு மொப்பான்
ஆழளை யுடும்பு பற்றிப்
 பறித்துமார் பொடுங்கி யுள்ளான்
வாழ்மயிர்க் கரடி யொப்பான்
 வாய்க்கிலை யறிதல் இல்லான்
மேழகக் குரலி னானோர்
 வேட்டுவன் தலைப்பட் டானே. ௩௦௪

அவன், தழையுடுத்த பெண்களோடு மரவுரியாடை யுடுத்து, காலிற் செருப்பும் தோளில் வில்லும் அம்புக் கூடும் சுமந்துவரக் கண்டு அவனை “நீ எம் மலையில் உறைகின் றாய்?” என வினவினன்.

## வேடன் விடை

மாலைவெள் ளருவி சூடி மற்றிதா தோன்று கின்ற
சோலைசூழ் வரையின் நெற்றிச் சூழ்கிளி சுமக்க லாற்று

௩௦௩. தோடு - பூவிதழ். தொடேல் - தீண்டாதே. பீடு - பெருமை. அரிவையர் இல் பெயர்க - மகளிர் வீட்டிற்குச் செல்க. கோடு - கொம்பு. குஞ்சரம் - களிறு. தெருட்ட - ஊடல் தணிவிக்க. கூடா - கூடாவாய். பிடி - பெண் யானைகள். நிற்கும் - ஊடிநிற்கும். காடேந்து பூஞ்சாரல் - காடு செறிந்த அழகிய மலைச்சாரல். காலில் - கால்களால் நடந்து.

௩௦௪. காழகம் - கருமை. காரிருள் துணி - கரிய இருள்துண்டம். ஆழ் அளை - ஆழ்ந்த வளையிலே வாழும். பறித்து - பறித்தலால். ஒடுங்கி - உட்குழிந்து. இலையறிதல் இல்லான் - வெற்றிலை மென்றறியாதான். மேழகக் குரலினன் - ஆட்டின் குரல் போலும் குரல் உடையவன். தலைப்பட்டான் - எதிர்ப்பட்டான்.

மாலையந் தினைகள் காய்க்கும் வண்புன மதற்குத் தென்மேன்
மூலையங் குவட்டுள் வாழும் குறவருள் தலைவன் என்றான்.

வேடன் ஊனும் கள்ளுமே தனக்கும் இனத்தவர்க்கும் உணவென்றும், அவை யில்வழித் தாம் வாழ்தல் அரிதென்றும் கூறக் கேட்டுச் சீவகன், ஊனுணவை விலக்குமாறு கூற லுற்றான்.

ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தில் உறைதல் நன்றோ?
ஊன்றின துடம்பு வாட்டித் தேவராய் உறைதல் நன்றோ?
ஊன்றிஇவ் விரண்டி னுள்ளும் உறுதிநீ யுரைத்தி டென்ன,
ஊன்றின தொழிந்து புத்தே ளாவதே உறுதி யென்றான்.

## சீவகன் வேடற்கு உறுதி கூறல்

உறுதிநீ யுணர்ந்து சொன்னாய்
உயர்கதிச் சேறி; ஏடா!
குறுகினாய் இன்ப வெள்ளம்
கிழங்குணக் காட்டுள் இன்றே;
இறைவனூற் காட்சி கொல்லா
ஒழுக்கொடேன் துறத்தல் கண்டாய்;
இறுதிக்கண் இன்பந் தூங்கும்
இருங்கனி இவைகொள் என்றான். ௩௦௭

வேடன் விடைபெற்று நீங்கியபின், சீவகன் அரணபாதம் என்ற மலையையடைந்து, அதன் அடிக்கண் உறைந்த

---

௩௦௫. வெள்ளருவி மாலை சூடி - தெளிந்த நீர் சொரியும் அருவியை மாலைபோலக் கொண்டு. இதா - எதிரிலே. நெற்றி - உச்சி. சுமக்கலாற்றா - சுமக்கமாட்டாதவாறு கனக்கக் காய்த்த. வண்புனம் - வளவிய தினைப் புனம். மூலையங் குவடு - மூலையிலுள்ள உச்சியில்.

௩௦௬. சுவைத்து - உண்டு. வீக்கி - பெருக்கவைத்து. வாட்டி - மெலிவித்து. ஊன்றி - நன்கு ஆராய்ந்து. உறுதி - தக்கது. புத்தேள் - தேவர்.

௩௦௭. சொன்னாய் - சொன்னாயாதலால். சேறி - செல்வாய். காட்டுள் கிழங்கு உண, இன்றே இன்ப வெள்ளம் குறுகினாய் - காட்டிலுள்ளகிழங்கு முதலியவற்றை உண்ணத் தலைப்படவே, இன்றே இன்பவெள்ளத்தைச் சேர்ந்தாயாம். இறைவன் நூல் காட்சி - இறைவனாகிய அருகன் கூறிய நூல் முடிவு. ஒழுக்கு - ஒழுக்கம். இவை இன்பம் தூங்கும் இருங்கனி - இவ்வொழுக்கங்களே பேரின்பம் செறியும் பெரிய கனிகளாகும்.

மாதவர் அடியில் வீழ்ந்து வணங்கினான். பின்பு அங்குள்ள கோயிலுக்குட் சென்று வலம் வந்து கடவுளைப் பாவிப் பாட லுற்றான்.

## சீவகன் பாட்டு, இறைவனைப் பாடியது.

தேவபாணிக் கொச்சக ஒருபோகு

ஆதி வேதம் பயந்தோய்நீ
அலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ
நிகரில் காட்சிக் கிறையோய்நீ
நாத னென்னப் படுவோய்நீ
நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாத கமலம் தொழுவேங்கள்
பசையாப் பவிழப் பணியாயே. ௩௦அ

இன்னாப் பிறவி யிகந்தோய்நீ
இணையி லின்ப முடையோய்நீ
மன்னு வுலக மறுத்தோய்நீ
வரம்பில் காட்சிக் கிறையோய்நீ
பொன்னார் இஞ்சிப் புகழ்வேந்தே
பொறியின் வேட்கைக் கடலழுந்தி
ஒன்னா வினையி னுழல்வேங்கள்
உயப்போம் வண்ண முரையாயே. ௩௦௯

உலக மூன்று முடையோய்நீ
ஒண்பொ னிஞ்சி யெயிலோய்நீ
திலக மாய திறலோய்நீ
தேவ ரேத்தப் படுவோய்நீ

---

௩௦அ. ஆதிவேதம் - கொலை முதலியன இல்லாத வேதம். அலர்மாரி - பூமழை. நீதிநெறி - சன்மார்க்கம். காட்சி - ஞானம். பசையாப்பு அவிழ - பற்றாகிய கட்டு நீங்க. பணியாய் - அருள்வாய்.

௩௦௯. இகந்தோய் - கடந்தோய். இணையில் இன்பம் - கடையிலாவின்பம். மறுத்தல் - அதில் பெறும் இன்ப நுகர்ச்சியைத் தவிர்த்தல். பொன்னார் இஞ்சி - பொன்னெயில் வட்டம். பொறியின் - ஐம்பொறிகளால். ஒன்னாவினை - பொருந்தாத தீவினை. உய - உய்ய. மன்னு - நிலைபெற்ற.

அலகை யில்லாக் குணக்கடலே
யாரு மறியப் படாயாதி;
கொலையி லாழி வலனுயர்த்த
குளிர்முக் குடையி னிழலோய்நீ. ௩௧௦

## சாரணரைப் பாடியது

அடியுலக மேத்தி யலர்மாரி தூவ
முடியுலக மூர்த்தி யுறநிமிர்ந்தோன் யாரே;
முடியுலக மூர்த்தி யுறநிமிர்ந்தோன் மூன்று
கடிமதிலும் கட்டழித்த காவலன்நீ யன்றே. ௩௧௧

முரணவிய வென்றுலக மூன்றினையு மூன்றில்
தரணிமேல் தந்தளித்த தத்துவந்தான் யாரே?
தரணிமேல் தந்தளித்தான் தண்மதிபோல் நேமி
அரணுலகிற் காய அறிவரனீ யன்றே. ௩௧௨

தீரா வினைதீர்த்துத் தீர்த்தம் தெரிந்துய்த்து
வாராக் கதியுரைத்த வாமன்தான் யாரே?
வாராக் கதியுரைத்த வாமன் மலர்ததைந்த
காரார்பூம் பிண்டிக் கடவுள்நீ யன்றே. ௩௧௩

பின்பு, அங்கே இருந்த இயக்கி அவனுக்கு விருந்து செய்ய, அதனையேற்றுண்டு விடைபெற் றெழுந்த சீவகன் விரையச்சென்று பல்லவதேயத்தை யடைந்தான். அதன் தலைநகரம் சந்திராபம் என்பது. வழியில் வயலில் களை

௩௧௦. திலகமாய திறல் - கடையிலா வீரம். அலகை - அளவு. அறியப்படா யாதி - அறியப்படுவாயாக. "செய்யா வென்னும் சொல் செய்யென் கிளவியாய் நின்றது." கொலையில் ஆழி - அறவாழி. வலனுயர்த்த - கொடியாக உயர்த்திய;

௩௧௧. முடியுலகமூர்த்தி - முடிந்த உலகத்தின் மூர்த்தி. உற - உறும்படி. நிமிர்ந்தோன் - முத்தியடைந்தவன். மூன்று கடிமதில் - காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று மதில். கட்டு - காவல்.

௩௧௨. முரண் - காமம் முதலியவற்றின் மாறுபாடு. மூன்றில் - அங்கம், பூர்வம், ஆதியென்ற மூன்று ஆகமத்தாலும். தரணி - நிலவுலகம். நேமி - அறவாழி, உலகிற்கு அரணாய அறிவரன் என்க. அறிவரன் அறிவுக்கு வரனாயுள்ளவன்.

௩௧௩. தீராவினை - நீங்காத தீவினை. தீர்த்தம் - ஆகமம். வாராக் கதி - மேல் வருதல் இல்லாத வீடு. காரார் பிண்டி - கார்காலத்தே மலரும் அசோக மரம்.

பறித்துக்கொண் டிருந்த கடைசியர் இருவரை நெறிவினவிச் சீவகன் அந் நகர்க்கண் நுழைந்தான். அங்கே, அழகிய தொரு சோலையிலே அமைந்திருந்த நாடகவரங்கில் ஆடவரும் மகளிரும் குழுமியிருந்தனர். உலோகபாலன் என்னும் அரசகுமரன் அவ்வரங்கில் வீற்றிருந்தான். தேசிகப்பாவை யென்னும் நாடக மகள் ஆடலுற்றாள்.

### தேசிகப்பாவை கூத்தாடல்

பாடலொ டியைந்த வாடல் பண்ணமை கருவி மூன்றும்
கூடுபு சிவணி நின்று குழைந்திழைந் தமிர்த மூற
ஓடரி நெடுங்க ணம்பால் உளங்கிழிந் துருவ வெய்யா
ஈடமை பசும்பொற் சாந்தம் இலயமா ஆடு கின்றாள். ௩௧௪

### அப் பாவை சீவகனைக் கண்டு மனம் திரிதல்

கருஞ்சிறைப் பறவை யூர்திக்
  காமரு காளை தான்கொல் ;
இருஞ்சுற வுயர்த்த தோன்றல்
  ஏத்தருங் குரிசில் தான்கொல் ;
அரும்பெறற் குமரன் என்றாங்
  கறிவயர் வுற்று நின்றாள்,
திருந்திழை யணங்கு மென்றோள்
  தேசிகப் பாவை யன்னாள். ௩௧௫

### உலோகபாலன் சீவகனைக் காண்டல்

போதெனக் கிடந்த வாட்கண்
  புடைபெயர்ந் திமைத்தல் செல்லாது
யாதிவள் கண்ட தென்றாங்
  கரசனும் அமர்ந்து நோக்கி

---

௩௧௪. பண்ணமை கருவி - பாடலாடல்கட்கு அமைந்த இசைக்கருவி. கூடுபு சிவணி - கூடிப் பொருந்தி. குழைந்து இசைந்து அமிர்தம் ஊற - மெல்கிக் கலங்கி இனிமை மிக. ஓடரி நெடுங்கண் - அரிபரந்த நெடியகண். உருவ எய்யா - ஊடுருவிச் செல்லுமாறு எய்து. ஈடு அமை - இடுதல் அமைந்த. இலயமா - அழிய.

௩௧௫. கருஞ்சிறைப் பறவை - கரிய சிறகுகளையுடைய மயில். சுற வுயிர்த்த தோன்றல் - சுறாமீன் கொடியையுடைய காமன் தோன்றலாகிய குரிசில். குமரன் - இளையனாகிய சீவகன். அயர்வுற்று - சோர்ந்து. அன்னாள் - அத்தன்மையையுடையவள். தேசிகப் பாவை - பெயர்.

மீதுவண் டரற்றும் கண்ணி
விடலையைத் தானும் கண்டான்
காதலில் களித்த துள்ளம்;
காளையைக் கொணர்மின் என்றான். ௩௧௬

## இருவரும் தோழராதல்

மந்திரம் மறந்து வீழ்ந்து மாநிலத் தியங்கு கின்ற
அந்தர குமர னென்றாங்கு யாவரு மமர்ந்து நோக்கி,
இந்திர திருவற் குய்த்தார்க் கிறைவனு மெதிர்கொண் டோம்பி
மைந்தனை மகிழ்வ கூறி மைத்துனத் தோழ னென்றான். ௩௧௭

## தவறிய இலயம் மீட்டும் பொருந்தத் தேசிகப்பாவை யாடல்

போதவிழ் தெரிய லானும்
பூங்கழற் காலி னானும்
காதலி னொருவ ராகிக்
கலந்துட னிருந்த போழ்தில்
ஊதுவண் டுடுத்த மாலை
யுணர்வுபெற் றிலயம் தாங்கிப்
போதுகண் டனைய வாட்கண்
புருவத்தால் கலக்கு கின்றாள். ௩௧௮

அப்போது, காவலன் ஒருவன் போந்து, அரசன் மகள் பதுமை யென்பாள் தான் பேணி வளர்த்த முல்லைக்கொடி அரும்பினைக் கண்டு, அதற்குச் சிறப்புச் செய்யச் சென்று,

---

௩௧௬. போது எனக் கிடந்த வாட்கண் - பூப்போல் உள்ள பொருந்திய கண். இமைத்தல் செல்லா-இமைப்பதில்லை. கண்ணிவிடலை-கண்ணியணிந்த விடலையாகிய சீவகன். காதலில் - அன்பினால். உள்ளம் - அரசன் உள்ளம்.

௩௧௭. மந்திரம் - வானத்திலே இயங்கும் மந்திரம். அந்தர குமரன் விஞ்சையன். அமர்ந்து நோக்கி - பொருந்திப் பார்த்து. இந்திர திருவற்கு இந்திரன் திருவைப்போன்ற திருவையுடைய உலோகபாலனுக்கு. உய்த்தார்க்கு - தெரிவிப்ப என்றற்கு. இறைவன் - அவ் வுலோகபாலன். மைந்தனை - சீவகனுக்கு. மைத்துனத் தோழன் - விளையாடும் முறைமையை யுடைய தோழன்.

௩௧௮. போதவிழ் தெரியல் - அலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை. ஊது வண்டு உடுத்த மாலை - ஒலிக்கின்ற வண்டு சூழ்ந்த தேசிகப் பாவை. மாலை - பெண். இலயம் தாங்கி - நீங்கின இலயத்தைத் தப்பாமல் தாங்கி. வாட்கண் புருவத்தால் - வாட்கண்ணாலும் புருவத்தாலும்.

சோலையில் விளையாட்டயரும் காலத்தில், புதரொன்றில் பூத்திருந்த பூவைப் பறிக்கக் கையை நீட்ட, ஆங்கிருந்த விடநாகமொன்று அவளைத் தீண்டியதனால், அறிவு மயங்கி வீழ்ந்தாள் என்று சொன்னான். அதுகேட்ட அரசகுமாரன் திடுக்கிட்டுச் சீவகனை இருக்கப் பணித்துவிட்டுத் தான் தனியே சென்று விடம் தீருதற்குரிய மந்திரம் பலவும் செய்தான்.

## விடம் மிகுதல்.

வள்ளல்தான் வல்ல வெல்லாம்
மாட்டினன் ; மற்று மாங்கண்
உள்ளவ ரொன்ற லாத
செயச்செய ஊறு கேளாது
அள்ளிலைப் பூணி னாளுக்கு
ஆவிஉண் டில்லை யென்ன
வெள்ளெயிற் றரவு கான்ற
வேகம்மிக் கிட்ட தன்றே. ௧௧௯

## விடம் தீர்த்தாற்கு மகள் தருவேன் என வேந்தன் முரசறைவிக்க வள்ளுவன் முரசறைதல்

பைங்கதிர் மதிய மென்று
பகையடு வெகுளி நாகம்
நங்கையைச் செற்றது ; ஈங்குத்
தீர்த்துநீர் கொண்மின் : நாடும்
வங்கமா நிதியும் நல்கி
மகள்தரும் ; மணிசெய் மான்தேர்
எங்களுக் கிறைவன் என்றுங்
கிடிமுர செருக்கி னானே. ௧௨௦

---

௧௧௯. வள்ளல் - உலோக பாலன். மாட்டினன் - செலுத்தினன். ஒன்றலாத செயச் செய - பொருந்தாதவற்றைச் செய்யச்செய்ய. ஊறு - விட நோய்க்கு இடையூறாகிய மந்திரமும் மருந்தும், அள்ளிலைப் பூணினாள் - கூரிய இலைத்தொழிலமைந்த பூண்களையணிந்த பதுமை. வெள்ளெயிற்றரவு - வெள்ளிய பற்களையுடைய பாம்பு. வேகம் - நஞ்சு.

௧௨௦. பைங்கதிர்...சென்றது : நங்கையின் முகத்தை மதியமென்று கருதி, அம் மதி தனக்குப் பகையாதலின், அதனைத் தாக்கற்குக் கொண்ட வெகுளியால் நாகம் இவளைத் தீண்டிற்று. வங்கமாநிதி - மரக்கலங்களில் வந்த பெருநிதி, மான் தேர் - குதிரை பூட்டிய தேர். செருக்கினன் - முழக்கினன்.

### விடந்தீர்ப்பான் வந்தோர் தம் முயற்சி பயன் படாமை கண்டு கூறுதல்

மண்டலி மற்றி தென்பார்,
இராசமா நாக மென்பார்;
கொண்டது நாக மென்பார்
குறைவளி பித்தொடு ஐயின்
பிண்டித்துப் பெருகிற் றென்பார்,
பெருநவை யறுக்கும் விஞ்சை
எண்தவப் பலவும் செய்தாம்
ஏன்றுகே ளாதி தென்பார். ௯௨௧

### உறவினர் கையற்றுப் புலம்பல்

கையொடு கண்டம் கோப்பார்,
கனைசுடர் உறுப்பின் வைப்பார்,
தெய்வதம் பரவி யெல்லாத்
திசைதொறும் தொழுது நிற்பார்,
உய்வகை யின்றி யின்னே
யுலகுடன் கவிழும் என்பார்,
மையலங் கோயில் மாக்கள்
மடைதிறந் திட்ட தொத்தார். ௯௨௨

### ஒருவன் கணி கூறியது

நங்கைக்கின் றிறத்தல் இல்லை
நரபதி நீயும் கேண்மோ:
கொங்கலர் கோங்கின் நெற்றிக்
குவிமுகிழ் முகட்டி னங்கண்

---

௯௨௧. மண்டலி - சிதமண்டலி. இராசமாநாகம் - கருவழலை யென்னும் பாம்பு. வளிபித்தொடு ஐயில் பிண்டித்துப் பெருகிற்று - வாதமும் பித்தமும் சிலேத்துமத்தினும் திரண்டு பெருகின. பெருநவை - பெருந்துன்பம். அறுக்கும் என்று - நீக்குமென்று கருதி, எண் தவ-எண் இறக்க. இது கேளாது - இது நீங்காது.

௯௨௨. இதன் பொருள்: கையையும் கண்டத்தையும் உழலை கோப்பார்; மருமங்களிலே விளக்கையெரிப்பார்; தொழுது நிற்பார்; இது காரணத்தான் அரசன் இறந்துபடின் உலகு இன்னே கவிழுமென் பாராய், மாக்கள் ஆரவாரத்தாலே மடைதிறந்த தன்மையை யொத்தாரென்க. மக்கட்கு உரிய மனனின்றி அறிவுகெட்டமையின். ஐயறிவுடையாரென்று மாக்கள் என்றார்.

தங்குதேன் அரவ யாழின்
　　தான்இருந் தாந்தை பாடும்,
இங்குநம் இடரைத் தீர்ப்பான்
　　இளையவன் உளன்மற் றென்றான். ௩௨௩

இதுகேட்டதும், தனபதியின் மகனாகிய உலோகபாலன் சீவகன் வந்திருத்தலை நினைவுகூர்ந்து, ஏவலரை விடுத்துக் கடுக வருவித்தான்; அவனும் அவ்விடம் வந்து பதுமைபுணர்வின்றிக் கிடப்பது கண்டான். கண்டவன் சித்தராரூடம் என்னும் நூலிற் கண்டவண்ணம் பாம்பின் சாதி, கடிக்கும் திறம், எயிறுகளின் வகை முதலிய பலவும் கூறி, பதுமையைக் கடித்த நாகம் கன்னி யென்றும், அஃது அரசர் மரபிற் றென்றும், தைத்தழுந்திய பல் யமதூதி யொழிந்த காளி, காளத்திரி, யமன் என்ற மூன்றுமே யென்றும் பிறவும் கூறினன்.

## சீவகன் மந்திரம் செய்தல்

குன்றிரண் டனைய தோளான்
　　கொழுமலர்க் குவளைப் போதங்கு
ஒன்றிரண் டுருவ மோதி
　　யுறக்கிடை மயிலன் னாள்தன்
சென்றிருண் டமைந்த கோலச்
　　சிகழிகை யழுத்திச் செல்வன்
நின்றிரண் டுருவ மோதி
　　நேர்முகம் நோக்கி னானே. ௩௨௪

---

௩௨௩. நங்கைக்கு - பதுமைக்கு. நரபதி - அரசே; விளி. கொங்கலர் கோங்கு - தேன் சொரிகின்ற மலரையுடைய கோங்கமரம். நெற்றி- உச்சி. முகிழ்கட்டில்-அரும்பின் தலையில். அரவயாழ்-இசையினைச் செய்யும் யாழ். ஈண்டு மிதுனராசிமேற்று. ஆந்தையாடும் - ஆந்தை யலறுகிறது. மிதுனராசி யுச்சமுற்றிருக்கும் இந்நேரத்தே ஆந்தை அலறுகிறது என்பது. இளையவன் உளன் - இளையவன் ஒருவன் இங்கு உளன்.

௩௨௪. குவளைப்போது - குவளைப்பூ. ஒன்றிரண்டு உருவமோதி - ஒன்றும் இரண்டுமாகிய உருவோதி. உறக்கு இடை - உறக்கத்திடத்தே. இருண்டு அமைந்த கோலச் சிகழிகை - கரிதாய் அமைந்த அழகிய முடி. அழுத்தி - வைத்து. நின்று - சிறிது நீங்கிநின்று. முகம் நேர் நோக்கினான் என்க.

## பதுமை விடம் நீங்கத் தெளிந்து சீவகனைக் கண்ணுறுதல்

நெடுந்தகை நின்று நோக்க
நீள்கடல் பிறந்த கோலக்
கடுங்கதிர்க் கனலி கோப்பக்
காரிருள் உடைந்த தேபோல்
உடம்பிடை நஞ்சு நீங்கிற்று ;
ஒண்டொடி யுருவ மார்ந்து
குடங்கையின் நெடிய கண்ணாள்
குமரன்மேல் நோக்கி னாளே. ௩௨௫

இவ்வாறு நோக்கிய பதுமைக்கு விட நோய் நீங்கலும் சீவகன் பொருட்டு வேட்கை நோய் எழுந்து வருத்துவதா யிற்று. அதனால் அவள் உள்ளம்நைந்து மறுபடியும் மெலி வுற்றாள். தோழியர் அவனை நோக்கி, "ஐயனே, நீ நின் கை யால் இவள் மேனியைத் தீண்டித் தைவருவையேல், இவ் விட மயக்கம் இனிது தெளியும்" என்ன, அவன் அவ்வாறே செய்தல்.

கண்ணிற் காணினும் கட்டுரை கேட்பினும்
நண்ணித் தீண்டினும் நல்லுயிர் நிற்கும்என்று
எண்ணி யேந்திழை தன்னை யுடம்பெலாம்
தண்ணென் சாந்தம்வைத் தாலொப்பத் தைவந்தான். ௩௨௬

இச் செய்கையால் சீவகனுக்கும் பதுமைபால் காதல் பிறந்தது. இருவரும் தம் காதற் குறிப்பைத் தெரிவித்துக் கொள்வார்போல, ஒருவரையொருவர் சிறப்புற நோக்கி வேட்கையால் வெய்துறலாயினர். சீவகன் விட நோய் நீக்கிய சிறப்புக் கண்டு தனபதி அவனைத் தன் மனைக்கண்ணே கொண்டு சென்று அங்கே இருக்கச் செய்து, உண்டி

---

௩௨௫. நெடுந்தகை - சீவகன். கோலக் கடுங்கதிர்க் கனலி - அழ கிய மிக்க கதிர்களையுடைய ஞாயிறு. கோப்ப - கதிர்களைச் செலுத்தி யெதிர்க்க. உருவம் ஆர்ந்து - அழகைக் கண்ணாரக் கண்டு மகிழ. குடங்கை யின் - உள்ளங்கை போல. குமரன் - சீவகன்.

௩௨௬. கண்ணில் காணினும் - காதலித்தோரைக் கண்ணில் காணி னும். ஏந்திழை தன்னை - பதுமையை. தைவந்தான் - தடவிக் கொடுத் தான்.

முதலிய தந்து ஓம்பிவந்தான். சீவகனது சொல்லும் செயலும் கண்ட தனபதி, "இச் சீவகன் கலை பலவும் கற்றுத் துறைபோகியவன்; இவனுக்கு நிகராவார் இந் நிலவுலகில் எவரும் இல்லை" என்று தேர்ந்து அவன்பால் பேரன்பு காட்டினன். இது நிற்க, சீவகனுக்குப் பதுமை பொருட்டுப் பிறந்த காதல் சிறந்து மிகுவதாயிற்று. இரவுப்போது வந்தது; இருவர்க்கும் வேட்கை நோய் எல்லையின்றிப் பெருகிற்று.

## சீவகன் வேட்கை நிலை

போது லாம்சிலை யோபொரு வேற்கணோ
மாது லாமொழி யோமட நோக்கமோ
யாதும் நான்அறி யேன்:அணங் கன்னவள்
காத லால்கடை கின்றது காமமே. ௩௨௭

அண்ணல் அவ்வழி ஆழ்துயர் நோயுற
வண்ண மாமலர்க் கோதையும் அவ்வழி,
வெண்ணெய் வெங்கனல் மீமிசை வைத்ததுஒத்து
உன்னை யாஉரு காஉள ளாயினள். ௩௨அ

## பதுமை வாய் வெருவுதல்

வணங்கு நோன்சிலை வார்கணைக் காமனோ
மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனோ
பிணங்தென் நெஞ்சம் நிறைகொண்ட கள்வனை
அணங்கு காள் !அறி யேன்உரை யீர்களே. ௩௨௯

---

௩௨௭. சிலை - காமன் வில்போலும் நுதல். வேற்கண் - வேல் போன்ற கண். மாது உலாம் மொழி - பதுமை சொல்லும் சொல். மட நோக்கம் - மடப்பம் பொருந்திய பார்வை. அணங்கன்னவள் - கண்டார்க்கு வருத்தம் செய்யும் அணங்கு போல்பவள். கடைகின்றது - மிகுகின்றது.

௩௨அ. அண்ணல் - சீவகன். ஆழ் துயர் நோய் உற - அழுந்துதல் உறுகின்ற வருத்த நோய் மிகுதிப்பட. கோதை - பதுமை. மீமிசை - மேலே. உள் நையா - உள்ளம் வருந்தி, உருகா - உருகி.

௩௨௯. வணங்கு நோன் சிலை - எல்லாரும் மனம் குழைதற்குக் காரணமான வலிய சிலை. மைவரை மைந்தன் - முருகன். பிணந்து - பிணித்து. அணங்குகாள் - தெய்வங்களே. ஏகாரம், வினா.

சீவகன், தான் முதலில் பதுமையை விடம் தீர்த்த போது கண்ட பூங்காவிற்குச் சென்று, அஃது அவள் பயின்றவிடமாதலின், அதனைக் காணின், அவளைக் கண்டாற் போல்வதோர் இன்பம் செய்யும் என்று கருதினான்; அவ்வாறே எழுந்து, ஒரு நாள் மாலைப்போதில் அக் காவிற்குட் சென்று உலவலானான்.

## சோலைக் காட்சி

மயிலி னாடலும் மந்தியின் ஊடலும்
குயிலின் பாடலும் கூடி மலிந்துஅவண்
வெயிலின் நீங்கிய வெண்மணல் தண்நிழல்
பயிலும் மாதவிப் பந்தரொன் றெய்தினான். ருரு0

சீவகனைப்போலவே பதுமையும் வேட்கைத் தீயால் வெந்து ஆற்றாளாய் அச் சோலையில் அவ்விடத்தே வந்திருந்தாள். இருவர் வரவும் ஒருவரொருவர்க்குத் தெரியாமே நிகழ்ந்தது. வந்தவள், தோழியர் விளையாட்டுக் குறித்து வேறு வேறிடம் செல்ல, மாதவிப் பந்தர் அருகே தனியே நின்றுகொண்டிருந்தாள். சீவகன் அவளைக் காண்கின்றான்.

## காட்சி

கறந்த பாலினுட் காசில் திருமணி
நிறம்கி ளர்ந்துதன் நீர்மைகெட் டாங்கவண்
மறைந்த மாதவி மாமை நிழற்றலின்,
சிறந்த செல்வனும் சிந்தையின் நோக்கினான். ருருக

ருரு0. கூடி மலிந்து - கூடிமிகுந்து. வெயிலின் - வெயிலினின்று. நிழல் பயிலும் மாதவிப் பந்தர் - நிழல் பரந்த குருக்கத்திக் கொடி படர்ந்த பந்தர்.

ருருக. கறந்த பால் - ஆனிடத்தே கறந்து கொண்ட ஆன்பால். காசு - குற்றம். திருமணி - அழகிய நீலமணி. கிளர்ந்து - கிளர. கெட்டாங்கு - கெட்டாற்போல. மாமை நிழற்றலின் - மாமை நிறம் ஒளிவிடுதலால். மாதவி - மாதவிப் பூ. சிந்தையின் நோக்கினான் - மனத்தால் ஆராய்ச்சியோடே பார்த்தான்.

### முன்பே அவளைக் கண்டுளனாயினும், வேட்கை மிகுதியால், சீவகன் அவளைக் கண்டு ஐயுறுதல்

வரையின் மங்கைகொல், வாங்கிருந் தூங்குநீர்த்
திரையின் செல்விகொல், தேமலர்ப் பாவைகொல்,
உரையின் சாயல் இயக்கிகொல், யார்கொல்இவ்
விரைசெய் கோலத்து வெள்வளைத் தோளியே. ௩௩௨

### பதுமையே எனத் தெளிதல்

மாலை வாடின ; வாட்கண் இமைத்தன ;
காலும் பூமியைத் தோய்ந்தன ; காரிகை,
பாலின் தீஞ்சொல் பதுமைஇந் நின்றவள்
சோலை வேய்மருள் சூழ்வளைத் தோளியே. ௩௩௩

இவ்வாறு தெளிந்தவன், அவளையடைந்து கந்தருவ மணம் செய்துகொள்ளக் கருதி, அவளருகே சென்று, குறிப் பறிந்து, வண்டோச்சுவான்போல மருங்கணைந்து, தன் பெருமையப்புரைத்துக் கூடினன்.

### சீவகன் அவளது கோலம் திருத்தித் தன் அன்பை வற்புறுத்துதல்

கண்ணி வேய்ந்து கருங்குழல் கைசெய்து,
வண்ண மாலை நடுச்சிகை யுள்வளை இச்
சென்ண வஞ்சிலம் பேறு துகளவித்து
அண்ணல் இன்புறுத் தாற்றலின் ஆற்றினுள். ௩௩௪

---

௩௩௨. வரையின் மங்கை - வரையரமகள். வாங்கு இரும் தூங்கு நீர்த் திரையின் செல்வி - வளைந்த பெரிய அசைகின்ற நீர் பொருந்திய கடலில் வாழும் நீரரமகள். மலர்ப்பாவை - திருமகள். உரையின் சாயல்- உரைத்தற்கினிய சாயலையுடைய. விரை செய் கோலம் - மணம் கமழும் கோலம்.

௩௩௩. காரிகை - அழகு. பாலின் தீஞ்சொல் பதுமை - பால் போல் இனிய தீவிய சொற்களையுடைய பதுமை. மருள் - உவமவுருபு. வேய், தோளிற்கு உவமம்.

௩௩௪. கைசெய்து - ஒப்பனை செய்து. மாலை - பூமாலை. நடுச் சிகையுள் - பின்னிய கொண்டை நடுவே. வளை இ - வளையமாகவைத்து. சென்ண அஞ்சிலம்பு - நுண்ணிய வேலைப்பாடமைந்த சிலம்பு. ஏறு துகள் அவித்து - படிந்த பூந்தாதுகளாகிய துகளைத் துடைத்து.

திங்க ளும்மறு வும்மெனச் சேர்ந்தது
நங்கள் அன்புஎன நாட்டி வலிப்புறீஇ
இங்கொ ளித்திடு வேன், நுமர் எய்தினர்,
கொங்கொ ளிக்குழ லாய்! எனக் கூறினன். ௩௩௫

சீவகன் அவளைச் செல்லவிடுத்துத் தான் ஒருபுறத்தே மறைந்தான். பதுமையும், தன்னைத் தனிப்பவிட்டுச் சென்ற ஆயத்தோர் வந்து சேர அவருடன் கூடிச் சிறிது போது விளையாட்டயர்ந்தபின் தத்தம் இருக்கையடைந்தனர். சீவகன் சென்று தன் தோழனான உலோகபாலனையடைந்தான்.

### இஃது இங்ஙனமாக, பதுமையின் தந்தையான தனபதி, மதிதரன் என்னும் தன் அமைச்சனை நோக்கித் தன் கருத்தைத் தெரிவித்தல்

பூமியை யாடற் கொத்த பொறியின னாத லானும்
மாமக ளுயிரை மீட்ட வலத்தின னாத லானும்
நேமியான் சிறுவ னன்ன நெடுந்தகை நேரு மாயின்,
நாம்அவற்கு அழகி தாக நங்கையைக் கொடுத்தும் என்றான். ௩௩௬

### மந்திரி உடன்பட்டுரைத்தல்

மதிதரன் என்னும் மாசில் மந்திரி சொல்லக் கேட்டே
உதிதர வுணர்வல் யானும் ஒப்பினும் உருவி னானும்
விதிதர வந்த தொன்றே விளங்குபூண் முலையி னாளைக்
கொதிதரு வேலி னாற்கே கொடுப்பது கருமம் என்றான். ௩௩௭

௩௩௫. திங்களும் அதன்பாலுள்ள மறுவும்போல அன்பு சேர்ந்தது; எனவே, வாழ வாழ்தலும், சாவச் சாதலும் செய்யும் உழுவலன்பு கூறி வற்புறுத்தியவாறு. எய்தினராகலின் ஒளித்திடுவேன்; நீ செல்க என்றானும். ஒளிக்குழல் - ஒளியையுடைய கூந்தல்.

௩௩௬. ஆடற்கொத்த-ஆளுதற்குரிய. பொறி - உயரிய இலக்கணம். வலத்தினன் - வெற்றியுடையான். நேமியான் - திருமால். சிறுவன் - காமன். நேருமாயின் - உடன்படுவானாயின். அழகிது - நன்று.

௩௩௭. மாசில் மந்திரி - குற்றமில்லாத மந்திரி. குற்றம் - அமைச்சர்க்கு ஆகாவென விலக்கிய குற்றங்கள். உதிதர வுணர்வல் - விளங்க வுணர்வேன். உதிதரல் - அறிவில் தோன்றல். ஒப்பு - பிறப்பு, குடிமை, ஆண்மை, யாண்டு, உரு முதலியன. '' உரு - உட்கு; அது விடந்தீர்த்தார்க்குக் கொடுப்பேம் என்ற மொழி பிறழாமல் காக்க வேண்டுமென்னும் அச்சம், . கொதிதருவேல் - வெம்மையால் பகைவரை வெதுப்பும் வேல்.

பின்பு, மந்திரி சீவகனைக் கண்டு அவன் கருத்தறிந்து போந்து, தனபதிக்குக் கூற அவன் மனைவி திலோத்தமையின் இசைவு கண்டு மகிழ்ந்து திருமணத்துக்குரிய நாள் குறிக்குமாறு ஏற்பாடு செய்தான்.

## திருமணம்

கணிபுனைந் துரைத்த நாளால்
 கண்ணிய கோயில் தன்னுள்
மணிபுனை மகளிர் நல்லார்
 மங்கல மரபு கூறி
அணியுடைக் கமல மன்ன
 அங்கைசேர் முன்கை தன்மேல்
துணிவுடைக் காப்புக் கட்டிச்
 சுற்றுபு தொழுது காத்தார். ௩௩௮

மழகளிற் றெருத்திற் றந்த
 மணிக்குட மண்ணு நீரால்
அழகனை மண்ணுப் பெய்தாங்
 கருங்கடிக் கொத்த கோலம்
தொழுதகத் தோன்றச் செய்தார்
 தூமணிப் பாவை யன்னார்
விழுமணிக் கொடிய னாளும்
 விண்ணவர் மடந்தை யொத்தாள். ௩௩௯

கயற்க ணாளையும் காமனன் னானையும்
இயற்றி னார்மண மேத்தரும் தன்மையார்

---

௩௩௮. கணி - சோதிடன். கண்ணிய கோயில் - நன்றென்று கருதிய கோயில். மங்கல மரபு - மங்கலவாழ்த்து முறை. அணியுடைக் கமலம் - வளை முதலிய அணிபுனைந்த தாமரை. துணிவுடைக் காப்பு - மண நூலுள் துணிபாகக் கூறப்படுதலையுடைய காப்புநாண். கட்டி - கட்ட.

௩௩௯. மழகளிற்றெருத்தின் - இளங்களிற்றின் கழுத்தின்மேல் ஏற்ற. மண்ணுநீர் - மங்கலநீர். நீராட்டற்கு வேண்டியது. மண்ணுப் பெய்து - நீரால் குளிப்பாட்டி. கடி - திருமணம். தொழுதக - கண்டோர் நன்கு மதிக்குமாறு. தூமணிப் பாவையன்னார் - தூயமணியாற் செய்த பாவை யொத்த மகளிர். விழுமணி - உயரிய மணி. விண்ணவர் மடந்தை - தேவர் மகள்.

மயற்கை யில்லவர் மன்றலில் மன்னிய
இயற்கை யன்புடை யார்இயைந் தார்களே. ௫௬0

மணம் முடிந்தபின், சீவகன் பதுமையுடன் இனி துறைந்து வருகையில், அவன்பால் தன் கருத்தையிழந்து வேட்கை நோய் மிகுந்து மெலிந்துவந்த தேசிகப் பாவை யென்னும் பாத்தை ஒருநாள் பூங்காவையடைந்து தன் தனிமை தீர்வது குறித்து இன்பமுறப் பாடிக்கொண்டிருந் தாள்.

### சீவகன் அவளைத் தலைப்படல்

வார்தளிர் ததைந்து போது
மல்கிவண் டுறங்குங் காவில்
சீர்கெழு குரிசில் புக்கான்,
தேசிகப் பாவை யென்னும்
கார்கெழு மின்னு வென்ற
நுடங்கிடைக் கமழ்தண் கோதை
ஏர்கெழு மயில னாளை
இடைவயின் எதிர்ப்பட் டானே. ௫௬௧

தீரா வேட்கையால் மெலிந்து வருந்திய தேசிகப் பாவைக்கும் இன்பம் தந்து மகிழ்வித்து ஒழுகிய சீவகன், பதுமையுடன் இரண்டு திங்கள் கழித்தான்.

### சீவகன் பிரிந்து போதல்

தயங்கிணர்க் கோதை தன்மேல் தண்ணென வைத்த மென்றோள்
வயங்கிணர் மலிந்த தாரான் வருத்துறு வகையின் நீக்கி

---

௫௬0. கயற்கண் - கயல்மீன் போலும் கண். மணம் இயற்றினர்- திருமணம் செய்தனர். ஏத்தரும் தன்மை - யாவரும் பாராட்டும் தன்மை; இவர், பெற்றோர் முதலாயினர். மயற்கையில்லவர் - மயக்கமில்லாத இருவரும். மன்னிய - முன்பே நிலைபேறு கொண்ட. இயற்கை யன்பு - இயற்கைப் புணர்ச்சியால் கொண்ட அன்பு.

௫௬௧. ததைந்து - நிறைந்து. போது - பூக்கள். கா - சோலை. சீர்கெழு குரிசில் - சீவகன். நுடங்கு இடை - நுண்ணியதாய் அசையும் இடை. ஏர்கெழு - அழகு திகழும். இடைவயின் - சோலையிடத்தே. பாவை யென்னும் இடையும் கோதையுமுடைய மயிலன்னாள் என்க.

நயங்கிளர் உடம்பு நீங்கி நல்லுயிர் போவ தேபோல்
இயங்கிடை யறுத்த கங்குல் இருளிடை யேகி னானே. ௩௪௨

கண் விழித்த பதுமை சீவகனைக் காணாது, தான் வளர்த்த கிளி, பூவை, அன்னம், மயில் முதலியவற்றை வினவி விடையொன்றும் பெறாது மிகு துயர் உற்றனள். பிறகு, பள்ளியறையில் எரிந்த விளக்கை வினவினாள்.

## விளக்கை வினவி நொந்துரைத்தல்

வளர்த்த செம்மையை ; வாலியை ; வான்பொருள்
விளக்கு வாய்விளக் கே !விளக் காய்;இவண்
அளித்த காதலொ டாடும்என் ஆருயிர்
ஒளித்தது எங்கு ?என ஒண்சுடர் நண்ணினாள். ௩௪௩

பருகிப் பாயிருள் நிற்பின் அறாதெனக்
கருகி யவ்விருள் கான்றுநின் மெய்யெலாம்
எரிய நின்று நடுங்குகின் றாய்எனக்கு
உரிய தொன்றுரைக் கிற்றியென் றாடினாள். ௩௪௪

---

௩௪௨. தயங்கிணர்க்கோதை - விளங்குகின்ற பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த பதுமை. தன்மேல் - சீவகன் தோள் மேல். மென்றோள் - மெல்லிய கை ; ஆகுபெயர். கோதையென்றதற்கேற்பத் தாரான் என்றார். வருத்துறா வகை - பிணங்கி வருந்தா வண்ணம். நயங்கிளர் உடம்பு - விருப்பம் செய்யும் உடம்பு. "துன்பம் உழத்தொறும் காதற்றுயிர்" (குறள்.) நல்லுயிர் - ஆன்மா. "அது கனவிடைப்போய் நுகர்ந்து மீண்டும் அவ்வுடம்பின்கண் வருமாறுபோல, இவனும் பலரையும் நுகர்ந்து பின்பு கூடுவன் என்று உணர்க." இயங்கு இடையறுத்த - இயங்குதலைச் செய்யாதபடி கெடுத்த.

௩௪௩. பிள்ளைகளுக்கு விளக்கைக் காவலாக இடுபவாதலின், 'எங்களை வளர்த்த மனக்கோட்டம் இன்மையுடைய' என்பாள், வளர்த்த செம்மையை என்றாள். செம்மை - செப்பம். வாலியை - தூய்மையுடையை. வான்பொருள் - நல்லபொருள். விளக்காய் - கண்ணிற் காணக் காட்டுவாய். ஆடும் - நடந்து திரியும். ஆருயிர் - பெறற்கரிய உயிராகிய சீவகன். நண்ணினாள் - நெருங்கி வினவினாள்.

௩௪௪. பாயிருள் பருகி - பரந்த இருளைப் பருகி. நிற்பின் - வயிற்றிலே நிற்பின். அறாது என - அறாது என்று கருதி. கருகி - முகம் கருகி. நடுங்குகின்றாய் - அசைகின்றாய். உரைக்கிற்றி - உரைக்க மாட்டுவை. ஊடினாள் - சினந்தாள்.

விளக்காமையின் அதனை இழித்துக் கூறுகின்றாள் ; உரைக்கிற்றி, இகழ்ச்சி.

### பிரிவாற்ருத பதுமை மேலும் வாய்விட்டுப் புலம்புதல்

நிரைவீ ழருவிந் நிமிர்பொன் சொரியும்
வரையே! புனலே! வழையே! தழையே!
விரையார் பொழிலே! விரிவெண் ணிலவே!
உரையீர் உயிர்கா வலன்உள் வழியே. ௩௪௫

### அமரரை நோக்கிப் புலம்புதல்

எரிபொன் னுலகின் உறைவீர்! இதனைத்
தெரிவீர், தெரிவில் சிறுமா னிடரின்
பரிவொன் றிலிரால்; படர்நோய் மிகுமால்,
அரிதால் உயிர்காப் பமரீர்! அருளீர். ௩௪௬

### அமரர் மகளிர்க்குச் சொல்லி யரற்றுதல்

புணர்வின் இனிய புலவிப் பொழுதும்
கணவன் அகலின் உயிர்கை யகறல்
உணர்வீர், அமரர் மகளீர்! அருளிக்
கொணர்வீர், கொடியேன் உயிரைக் கொணர்வீர். ௩௪௭

### சீவகனையே நினைந்து அரற்றுதல்

அருள்தேர் வழிநின் றறனே மொழிவாய்;
பொருள்தேர் புலன்எய் தியபூங் கழலாய்!
இருள்தேர் வழிநின் றினைவேற் கருளாய்;
உருள்தேர் உயர்கொற் றவன்மைத் துனனே. ௩௪௮

---

௩௪௫. நிரை - வரிசை. உயிர் காவலன் - உயிரை நீங்காமற் காக்கும் சீவகன். அவன் உயிர்நீங்கின் இவள் உயிர் நீங்குமாதலின், "உயிர் காவல" னென்.

௩௪௬. எரி - விளங்குகின்ற. உறைவீர் - உறையும் தேவர்களே. தெரிவீர் - தெரிந்திருப்பீர். பரிவொன் றிலிரால் - அருளின்றியுள்ளீர். உயிர்காப்பு - உயிரைக் காத்துக்கொள்வது. அமரீர் - காவாத் தன்மையுடைய தேவர்களே.

௩௪௭. புணர்வின் இனிய - புணர்தலினும் இனிய. உயிர் கையகறல் உணர்வீர் - உயிர் கைவிட்டு நீங்குவதை யறிவீர். புலவியால் கணவன் சிறிது நீங்கினும், உயிர் நீங்குவதுபோலக் கொள்வர் நன்மகளிர் என்பது.

௩௪௮. பொருள் தேர் புலன் எய்திய நின்று - தத்துவத்தை யாராயு மறிவைப் பெறவேண்டி நின்று. அறனே மொழிவாய் - வேண்டி நின்ற அவர்கட்கு அறத்தையுரைப்பாய். எய்திய - செய்தியவென்னும் வினையெச்சம். அருள்தேர் வழி - தனபதி, உலகபாலன் என்பாரிடத்து நின் அருள் இருக்கும் திறத்தை ஆராயுமிடத்து. இருள் தேர் வழி - இருள் செறிந்தவிடத்தே, கொற்றவன் - தனபதி; உலோகபாலனுமாம்.

மிகவா யதொர்மீ ளிமைசெய் தனளோ ?
உகவா வுனதுள் ளமுவர்த் ததுவோ ?
இகவா விடர்என் வயின்நீத் திடநீ
தகவா ; தகவல் லதுசெய் தனையே. நடசகூ

இவ்வாறு மிக அரற்றிச் சோர்ந்த பதுமையின் நிலையினைத் தோழியறிந்து போந்து, நிகழ்ந்தது உணர்ந்து அவளைத் தெளிவித்தற் பொருட்டுச் சில கூறலானாள்.

## மக்கட் பிறப்பின் சிறுமை கூறித் தேற்றல்

பேதைமை யென்னும் வித்திற் பிறந்துபின் வினைகளென்னும்
வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலும் களிப்பு மென்னும் கவடுவிட் டவலம் பூத்து
மாதுயர் இடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும். நடருo

## காதலன் பொருட்டுக் கவல்லாகாமை கூறித் தேற்றல்

பிரிந்தவற் கிரங்கிப் பேதுற்
றழுதநம் கண்ணின் நீர்கள்
சொரிந்தவை தொகுத்து நோக்கின்
தொடுகடல் வெள்ள மாற்றா ;
முரிந்தநம் பிறவி மேனாள் ;
முற்றிழை இன்னும் நோக்காய் :
பரிந்தழு வதற்குப் பாவாய் !
அடியிட்ட வாறு கண்டாய். நடருக

---

நடசகூ. மிகவாயதோர் மீளிமை - பிறரிடத்துச் செல்லாதே என்னிடத்தே மிகச் செய்ய வேண்டி மிக்கதொரு வன்மை. உகவா - அன்பு மிகுந்து. உவர்த்தது - வெறுத்தது. இகவா இடர் - பொறுக்கலாகாத இடர். நீத்திட - பெருகிட. தக - தகும்படி. வா - வந்து முயங்குக.

நடருo. வேதனை மரங்கள் - துன்பமாகிய மரங்கள். நாறி - தோன்றி. மாதுயர் இடும்பை - மிக்க வருத்தத்தைச் செய்யும் துன்பம்.

நடருக. நீர்கள் - கள், அசை. மாற்றா - உறையிடவும் ஆற்றாது. முரிந்த - கெட்ட. முற்று இழை - தொழிற்பாடு முற்றவுமுடைய இழையுடையாய். பரிந்து - வருந்தி. அடியிட்டவாறு - தொடங்கினவாறு.

அன்பினின் அவலித் தாற்று
தழுவதும் எளிது ; நங்கள்
என்பினின் ஆவி நீங்க
இறுவதும் எளிது ; சேர்ந்த
துன்பத்தால் துகைக்கப் பட்டார்
துகைத்தவத் துன்பம் தாங்கி
இன்பமென் றிருத்தல் போலும்
அரியதிவ் வுலகில் என்றாள். ௩௫௨

### மேலும் தோழி நிமித்தம் கண்டு தெளிவித்தல்

முத்திலங் காகம் தோய்ந்த
மொய்ம்மலர்த் தாரி னான்நம்
கைத்தலத் தகன்ற பந்தின்
கைப்படும் ; கவல வேண்டா ;
பொத்திலத் துறையு மாந்தை
புணர்ந்திருந் துரைக்கும் பொன்னே
நித்தில முறுவ லுண்டான்
நீங்கினான் அல்லன் கண்டாய். ௩௫௩

வடிமலர்க் காவின் அன்று
வண்தளிர்ப் பிண்டி நீழல்
முடிபொருள் பறவை கூற
முற்றிழை நின்னை நோக்கிக்
கடியதோர் கௌவை செய்யும்
கட்டெயிற் றரவி னென்றேன்,
கொடியனாய் ! பிழைப்புக் கூறேன் ;
குழையலென் றெடுத்துக் கொண்டாள். ௩௫௪

---

௩௫௨. என்பினின் - உடம்பிலிருந்து. இறுவதும் - இறப்பதும். துகைக்கப்பட்டார் - வருத்தப்பட்டவர், இன்பம் என்று - இவ்வருத்தம் நமக்கு இன்பமாம் என்று கருதி.

௩௫௩. பந்தின் - பந்துபோல. பொத்து இலம் - பொந்தாகிய இல்லம். ஆந்தை புணர்ந்து இருந்து - ஆந்தை பெடையொடு கூடியிருந்து. உரைக்கும் - அவன் வரவைக் கூறும்.

௩௫௪. முடிபொருள் - முடியும் செய்கை. முற்றிழை - விளி. கடியதோர் கௌவை செய்யும் - அச்சந்தரும் ஒரு கௌவையைச் செய்யும், கட்டெயிறு - வலிய பற்கள். பிழைப்பு - பொய். குழையல் - வருந்தாதே.

பதுமை ஒருவாறு தேறியிருந்தாளாக, பொழுது விடிந்தது. அவள் தாயாகிய திலோத்தமையும் பிறரும் வந்து சூழ்ந்துகொண்டு உற்றது கேட்டு வருந்தினர். திலோத்தமை, "நெருநல் இரவில் சீவகன் கூறியது என்னை?" என்று வினவப், பதுமை நிகழ்ந்தது கூறல்.

வினைக்கும் செய்பொருட் கும்வெயில் வெஞ்சுரம்
நினைத்து நீங்குதல் ஆண்கடன்; நீங்கினால்,
கனைத்து வண்டுணும் கோதையர் தம்கடன்
மனைக்கண் வைகுதல் மாண்பொடு எனச்சொனான். ௩௫௫

விரைசெய் தாமரை மேல்விளை யாடிய
அரைச வன்னம் அமர்ந்துள வாயினும்
நிரைசெய் நீலம் நினைப்பில என்றனன்
வரைசெய் கோல மணங்கமழ் மார்பினன். ௩௫௬

## இவ்வாறு பதுமை கூறக் கேட்டுத் திலோத்தமை மகிழ்ந்து தேற்றுதல்

அன்னம் தான்அவன்; தாமரைப் போதுநீ;
நின்னை நீங்கினன், நீங்கலன் காதலான்;
இன்ன தாலவன் கூறிற்று எனச்சொனாள்,
மன்ன னுருயிர் மாபெருந் தேவியே. ௩௫௭

---

௩௫௫. வெயில் வெஞ்சுரம் நீங்குதல் - வெயில் மிக்கு வருத்தும் கொடிய சுரத்தைக் கடந்து போகுதல். நினைத்து - பிரிவருமை நினைத்து வருந்திப் பின் வினை மாண்பும், செய்பொருட் சிறப்பும் நினைத்து. கனைத்து - ஒலித்து. வைகுதல் - இறந்துபடாது இருத்தல்.

௩௫௬. அரைசவன்னம் - அரச அன்னம். அமர்ந்து உளவாயினும் - நீல மலர்கள் பயின்று உளவாயினும். நினைப்பில - நினையா. வரை மார்பினன் - மலைபோன்ற மார்பன். செய்கோலம் - செயற்கையழகு. தாமரை குலமகளிரையும், நீலம் பரத்தையரையும் உள்ளுறுத்து நின்றன. எனவே, குலமகளிரையே நுகர்வேன் எனச் சீவகன் கூறினான் என்றுளாயிற்று.

௩௫௭. நீங்கினன் - செய்வினையுண்மையால் இப்போது நீங்கினன் நீங்கலான் - நின்பால் குன்றாக் காதல் உண்மையான் அற நீங்குவானல்லன். மாபெருந் தேவி - பதுமையின் நற்றாயாகிய திலோத்தமை. "இவள் இறந்துபடுவள் என்று திலோத்தமை நீலத்தின் கருத்தைக் கூறவில்லை."

இது சொல்லித் தேற்றிய திலோத்தமை சொல்லால், "சீவகன் வருவன்" என்று உட்கொண்ட பதுமை உள்ளத்தே உவகை மிகுந்து தனக்குள்ளே கூறிக்கொள்ளுகிருள்.

### பதுமையின் உட்கோள்

நஞ்சினை யமுத மென்று
நக்கினும் அமுத மாகாது,
அஞ்சிறைக் கலாப மஞ்ஞை
யணங்கர வட்ட தேனும்
அஞ்சிறைக் கலுழ னாகும்
ஆட்சியொன் றுனு மின்றே;
மஞ்சனுக் கினைய நீரேன்
வாடுவ தென்னை யென்ருள். கடுஅ

### ஞாயிறு தோன்றுதல்

பொய்கையுள் கமலத் தங்கண்
புள்ளெனும் முரச மார்ப்ப
வெய்யவன் கதிர்க ளென்னும்
விளங்கொளித் தடக்கை நீட்டி
மையிருட் போர்வை நீக்கி
மண்ணாக மடந்தை கோலம்
பையவே பரந்து நோக்கிப்
பணிவரை நெற்றி சேர்ந்தான். கடுக

இரவு நிகழ்ந்த நிகழ்ச்சி முற்றும் அரசன் அறிந்து மிக்க வருத்தமுற்று ஏவலர் பலரை விடுத்துச் சீவகனைத் தேடியறிந்து வருமாறு விடுத்தான்.

---

கடுஅ. நக்கினும் - உண்டாலும். அணங்கு அரவு - வருத்தும் பாம்பு. கலுழனாகும் மாட்சி - கருடனாகும் தன்மை. ஒன்றுனும் - சிறிதும்; மஞ்சன் - மைந்தன்; சீவகன். மைந்து - வலிமை. இனைய நீரேன் - நஞ்சும் மயிலும்போலும் நீர்மையை யுடைய யான்.

கடுக. கமலத் தங்கன் - தாமரைப்பூவிடத்தே. புள் - வண்டு. தடக் கை - பெரிய கை. மையிருட் போர்வை - மிகக் கரிய இருளாகிய போர்வை. பணிவரை நெற்றி - ஞாயிறெழும் கிழக்கு மலையுச்சி. சேர்ந்தான் - தோன்றினான்.

### சீவகன் புதுவடிவு கொண்டு வடதிசை நோக்கிச் செல்வானை, அரசன் ஏவலர் கண்டு வினவல்

வேந்தனால் விடுக்கப் பட்டார்
விடலையைக் கண்டு சொன்னார்
ஏந்தலே பெரிதும் ஒக்கும்
இளமையும் வடிவும் இஃதே,
போந்ததும் போய கங்குல்
போம்வழிக் கண்டீ துண்டேல்
யாம்தலைப் படுதும் ஐய,
அறியின்ஈங் குரைக்க என்றார். ௩௬௦

### சீவகன் விடை யிறுத்தல்

நெய்கனிந் திருண்ட வைம்பால்
நெடுங்கணாள் காத லானை
ஐயிரு திங்க ளெல்லை
யகப்படக் காண்பிர் ; இப்பால்,
பொய்யுரை யன்று, காணீர் ;
போமினம், போகி நுங்கள்
மையலங் களிற்று வேந்தன்
மைந்தனுக் குரைமின் என்றான். ௩௬௧

## பதுமையார் இலம்பகம்

முற்றும்

---

௩௬௦. விடுக்கப்பட்டார் - தேடுமாறு விட்ட ஏவலர். விடலை - காளையாகிய சீவகன். ஏந்தலே - ஏந்தலாகிய நின்னையே. இஃதேயென்பதை இளமைக்கும் கூட்டுக. போய கங்குல் - போன இரவே. ஈங்கு - இவ்விடத்தே எமக்கு.

௩௬௧. நெடுங்கணாள் - பதுமை. ஐயிரு திங்கள் எல்லை யகப்பட - பத்துத் திங்களுள் ஒன்று குறைய ஒன்பதாந் திங்களிலே. இன்பால் காணீர் ; இது பொய்யுரையன்று என்க. போமின் - அம் சாரியை. மையல் அங் களிறு - மதம்பட்ட யானை. வேந்தன் மைந்தனுக்கு - வேந்தனுக்கும் மைந்தனுக்கும்.

# ௬. கேமசரியார் இலம்பகம்

**6. கேமசரியாரிலம்பகம்**—கேமசரியென்பவளைச் சீவகன் மணந்துகொண்ட செய்தியைக் கூறும் இலம்பகம்.

[சீவகன் பலவிடங்கட்கும் சென்று சித்திரகூடம் அணைந்து தாபதர் சிலரைக் கண்டு அவர்கட்கு நன்னெறி காட்டித் திருத்திய தும், தக்கநாடு சென்றதும் கேமமாபுரத்துச் சுபத்திரனென்னும் வணிகன் மகள் கேமசரியென்பவள் நலம் கனிந்திருந்ததும், அவ் வணிகன் தன் மகட்குரிய கணவனைப் பெறும்பொருட்டு நாளும் விருந்தாற்றிவந்ததும், சீவகன் அவளைக் கண்டு வேட்கைகொண் டதும், அவளை மணந்து இரு திங்கள் தங்கியிருந்து வேறிடம் செல்லக் கருதி அவள்பால் சொல்லாது பிரிந்ததும், எதிரே போந்த ஒருவனுக்குச் சீவகன் அறவுரை கூறித் தான் அணிந்திருந்த கலன்களை ஈந்து அப்பாற் சென்றதும், பிறவும் கூறப்படுகின்றன.]

வடக்கு நோக்கித் தனியே காலால் நடந்தேகும் சீவ கன் சுதஞ்சணன் முன்பு கூறிய சித்திரகூடத்தைக் குறித் துச் சென்றுகொண்டிருந்தான். வழியில், காடுகளும் குன்று களும் அவனுக்கு இனிய காட்சி வழங்கின. அவற்றைக் கண்டு செல்பவன், எதிரில் நின்ற குன்றில், சுனை நீராடி, இனிய பூக்களைக் கொண்டு, அங்கேயிருந்த அருகன் கோயிலை யடைந்து வழிபட்டு, அதற்கு முன்னே இருந்த சித்திர கூடத்தையடைந்தான். அங்கே வாழ்ந்த தாபதர் அவனை வரவேற்றனர்.

### சித்திரகூடத் தாபதர் இயல்பு

அரிய கொள்கையர் ஆரழ லந்தினுள்
மருவி வீடு வளைக்குறு மாட்சியர் ;
விரிய வேதம் விளம்பிய நாவினர் ;
தெரிவில் தீத்தொழில் சிந்தையில் மேயினர். ௩௬௨

௩௬௨. அரிய கொள்கையர் - பிறரால் கொள்ளற்கரிய எண் வகைத் தாபத ஒழுக்கம், அவை நீர் பலகால் மூழ்கல், நிலத்திருத்தல், தோலு டுத்தல் முதலாக வரும் எட்டு. அழல் ஐந்து - ஐவகை வேள்வி ; அவை, தென்புலத்தார் முதலாகவுள்ள ஐவரையும் ஓம்புதல். மருவி - பொருந்தி. வீடு வளைக்குறு மாட்சியர் - வீடுபெறுதற்கு முயலும் முயற்சியினர். தீத் தொழில் - காமவேட்கை.

### விருந்தோம்பல்

வள்ளி யின்னமு தும்வரை வாழையின்
தெள்ளு தீங்கனி யும்சில தந்தபின்
வெள்ள மாரிய னைவிருந் தார்கென
உள்ள மாட்சியி னுருவந் தோம்பினர். ௩௬௩

### தாபதர் சீவகனை அளக்கக் கருதுதல்

பாங்கின் மாதவர், "பான்மதி போன்றிவன்
வீங்கு கல்வியன்; மெய்ப்பொருட் கேள்வியின்
ஆங்கு நாமும் அளக்குவம்" என்றுதம்
ஓங்கு கட்டுரை ஒன்றிரண் டோதினர். ௩௬௪

### சீவகன் கூறுதல்

ஐயர் கூறலும் அண்ணலும் கூறுவான்:
சையம் பூண்டு சமுத்திரம் நீந்துவான்
உய்யு மேல்தொடர்ப் பாட்டின்இங்கு யாவையும்
எய்தி னார்களும் உய்ப்பஎன் றோதினன். ௩௬௫

### தாபதர் வினவல்

ஏம நன்னெறி எம்நெறி; அல்நெறி
தூய்மை யில்நெறி; யாமும் துணிகுவம்;
காமன் தாதை நெறியின்கட் காளை நீ
தீமை யுண்டெனில் செப்பெனச் செப்பினன். ௩௬௬

---

௩௬௩. வள்ளி இன்னமுது - வள்ளிக் கிழங்கு. தெள்ளிய - முதிரக் கனிந்த. வெள்ள மாரியனை - பெருநீர் பொழியும் மழைபோலப் பலர்க்கும் பயன்படுகின்றவனை. ஆர்க - உண்க.

௩௬௪. பாங்கு - நல்லிடம். பால்மதி - முழுமதி. வீங்கு - விரிந்த. மெய்ப்பொருள் - தத்துவம். அளக்குவம் - அறிவின் திட்பத்தைக் காண்பேம்.

௩௬௫. சையம் பூண்டு - கல்லைக் கட்டிக்கொண்டு. தொடர்ப்பாட்டின் - காம நுகர்ச்சியாகிய கட்டுடன். யாவையும் - எல்லா நுகர்ச்சிகளையும்.

௩௬௬. ஏம நன்னெறி - அழிவில் இன்பந்தரும் நல்வழி. அல் நெறி - யாம் கொண்டுள்ளதல்லாத நீ கூறிய நெறி. துணிகுவர் - தெளிந்துள்ளோம். காமன் தாதை நெறியின்கண் - காமனுக்குத் தந்தையாகிய திருமால் கூறிய இந்நெறியின்கண். செப்பு என - கூறுக என்று கேட்க.

## சீவகன் அவர்களைத் தெருட்டுதல்

*நீட்டிய சடைய மாகி*
*நீர்மூழ்கி நிலத்திற் சேர்ந்து*
*வாட்டிய வுடம்பின் யாங்கள்*
*வரகதி விளைத்து மென்னிற்*
*காட்டிடைக் கரடி போகிக்*
*கயமூழ்கிக் காட்டி னின்று*
*வீட்டினை விளைக்க வேண்டும்;*
*வெளிற்றுரை விடுமின் என்றான்.* ந-சுஎ

*நோய்முதிர் குரங்கு போல*
*நுகர்ச்சிநீர் நோக்கல் வேண்டா*
*காய்முதிர் கனியி னாழ்ந்து*
*வீழுமிவ் யாக்கை யின்னே*
*வேய்முதிர் வனத்தின் வென்றான்*
*உருவொடு விளங்க நோற்றுப்*
*போய்முதிர் துறக்கத் தின்பம்*
*பருகுவ புரிமின் என்றான்.* ந-சுஅ

*மெய்வகை தெரிதல் ஞானம்*
*விளங்கிய பொருள்கள் தம்மைப்*
*பொய்வகை யின்றித் தேறல்*
*காட்சியைம் பொறியும் வாட்டி*
*உய்வகை யுயிரைத் தேயா*
*தொழுகுதல் ஒழுக்க மூன்றும்*
*இவ்வகை நிறைந்த போழ்தே*
*யிருவினை கழியு மென்றான்.* ந-சுகூ

---

ந-சுஎ. வாட்டிய உடம்பின் - வருத்திய உடம்பினாலே. வர கதி - மேலான கதி. விளைத்தும் - பெறமுயல்கின்றோம். வீட்டினை விளைக்க - வீடுபேறு எய்த. வெளிற்றுரை - பயனில்லாத சொல்.

ந-சுஅ. நுகர்ச்சி - காம நுகர்ச்சி. காய் முதிர் கனியின் - காய் முற்றிப் பழுத்து விழும் பழம்போல. வேய் முதிர் வனம் - மூங்கிற்காடு. வென்றான் - அருகன். உருவொடு - வேடத்தை மேற்கொண்டு. பருகுவ - நுகர்தற்குரிய தவங்களை.

ந-சுகூ. ஞானம் - உண்மையறிதல்; காட்சி - பொய்யின்றாகத் தெளிதல். ஒழுக்கம் - உயிர் உய்யும்வகையொழுகுதல். தேயா - கெடாமலே.

இது கேட்டுத் தெளிவுகொண்ட அத் தாபதர் மகிழ்ந்து அவ்வாறே யொழுகி மேம்படலாயினர். சீவகனும் அன்றிரவு அவர் பள்ளியிடத்தே தங்கி மறுநாட்காலேயே புறப்பட்டுச் சென்று தக்க நாட்டை யடைந்தான். அந்நாட்டின் தலைநகரமான கேமமாபுரத்தைச் சீவகன் சென்று சேர்ந்தான். அந்த நாட்டை நரபதி தேவன் என்பவன் ஆட்சி புரிந்து வந்தான்.

## கேமசரி வரலாறு

அங்கநாட் கரசனே யனைய ஆண்டகை
மெய்ந்நிக ரிலாதவன் ; வேத வாணிகன் ;
கைந்நிக ரமைந்தவேல் கமழுந் தாரினான் ;
மைந்நிகர் மழைக்கணார் மருட்ட வைகுவான். ௩௪0

வார்சிலை வடிப்ப வீங்கி
வரையெனத் திரண்ட தோளான்
சோர்புயல் தொலைத்த வண்கைச்
சுபத்திரன் மனைவி பெற்ற
சீர்நலங் கடந்த கேம
சரியெனத் திசைக ளெல்லாம்
பேர்நலம் பொறித்த பெண்மைப்
பெருவிளக் காகி நின்றாள். ௩௪௧

## கேமசரியின் தந்தையான சுபத்திரன் விருந்தோம்பும் கடமை மேற்கொள்ளுதல்

மாசிலாள் பிறந்த ஞான்றே
மதிவலான் விதியின் எண்ணிக்
காசிலாள் கண்ட போழ்தே
கதுமென நாணப் பட்டான்

---

௩௪0. மெய் நிகர் இல்லாதவன் - வடிவால் ஒப்பில்லாதவன். வேத வாணிகன் - வேதத்தையுடைய வாணிகன். கைந்நிகர் அமைந்த வேல் - கைக்கு ஒப்பு அமைந்த வேல்.

௩௪௧. வடிப்ப - பயிலுவதால், வரையென - மலைபோல. சோர் புயல் தொலைத்த - பெய்யும் முகிலை யொத்த. தோளான் - சுபத்திரன். மனைவி - நிப்புதி. நலம் கடந்த - நலம் மிகுந்த. பேர்...நின்றாள் - பெயரையும் அழகையும் எழுதினதொரு பெண்மையையுடைய விளக்கெனவாகி நின்றாள்.

தூசுலாம் அல்கு லாட்குத்
துணைவனும் ; புணர்மின் என்று
பேசினான் ; அன்று கொண்டு
பெருவிருந் தோம்பு கின்றான். ௩௭௨

### கேமசரி தன்னை மணத்தற்குரிய காதலனை நோக்கி நிற்றல்

தாழ்தரு பைம்பொன் மாலைத்
தடமலர்த் தாம மாலை
வீழ்தரு மணிசெய் மாலை
இவற்றிடை மின்னின் நின்று
சூழ்வளைத் தோளி செம்பொன்
தூணையே சார்ந்து நோக்கும்
ஊழ்படு காத லானை
யொருபிடி நுசுப்பி னாளே. ௩௭௩

இவ்வாறு பன்னிரண்டு யாண்டுகள் கழிந்தன. கேமசரியும் மணத்துக்குரிய செவ்வி யெய்தி நலம் கனிந்து விளங்குவாளாயினள். அவளைப் பெற்ற தாயாகிய நிப்புதி யென்பாள், தன் மகட்குரிய கணவன் வந்திலனே எனக் கவன்றாளாக, அவளைச் சுபத்திரன் தேற்றி வந்தான். கேமசரியின் கண்ணெதிரே விருந்துண்ணப் போந்த ஆடவரனைவரும் பேடிகளாகவே தோன்றி நின்றனர்.

---

௩௭௨. மதிவலான் - சோதிடன். விதியின் - நூல்களைக்கொண்டு. காசு - குற்றம். கதுமென நாணப்பட்டான் - சட்டென இவள் நாண மெய்தப் பண்ணுவோன். நாணப்பட்டவன் எவன் அவன் துணைவனும் என்க. துணைவன் - கணவன். புணர்மின் - அவனுக்கு மணம்செய்ம்மின்.

தனக்குக் கணவராகும் பான்மையில்லாதார் அவளுக்கு ஆடவராய்த் தோன்றார் ; அதனால் அவள் பலரையும் காண்பள் ; அக் காட்சியால் குற்றமிலள் என்றற்கு, "மாசிலாள்" "காசிலாள்" என்று கூறினர்.

௩௭௩. தாமம் - மாலை. பொன்மாலை, பூமாலை, மணிமாலை என்ற இவற்றிடை என இயையும். ஊழ்படு காதலானை - தனக்குத் தொன்று பட்டு வருகின்ற காதலானை. பிடி நுசுப்பு - பிடியளவிற்றாகிய இடை.

## சீவகன் இக் கேமமாபுரத்தைச் சேரவந்து ஓர் ஆலமரத்தின் நிழலில் இருத்தல்

பொன்னிலத் தெழுந்ததோர் பொருவில் பூங்கொடி
மின்னுவிட் டெரிவதோர் நலத்தள் வீங்கிருள்
பின்னிவிட் டனகுழல் பெருங்கண் பேதையூர்
துன்னினன் தொடுகழல் குரிசில் என்பவே. ௩௭௪

தென்றிசை முளைத்ததோர் கோலச் செஞ்சுடர்
ஒன்றிமற் றுத்தரம் வருவ தொத்தவண்
மன்றல்கொள் மார்பினன் வந்துஓர் ஆல்நிழல்
நன்றுவந் திருந்தனன் நாதற் சிந்தியா. ௩௭௫

சீவகனை நெடுந் தொலைவிலே கண்டான் சுபத்திரன். அவனது வடிவழகு கண்டு முதற்கண் திருமாலோ என ஐயுற்று, அருகே சென்று, மகனெனத் தெளிந்து இன் சொற்கள் பல சொல்லி, அவனைத் தன் தேர்மீதுகொண்டு தன் பெருமனை நோக்கி வரலானன். அதுபொழ்து, கேமசரி வீணையை யிசைத்துக் கடவுளைப் பரவத் தொடங்கினள்.

### கேமசரி பாட்டு

வீங்கோத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டித்
தேங்கோத முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானைத்
தேவர் பெருமானைத் தேனர் மலர்சிதறி
நாவின் நவிற்றுதார் வீட்டுலகம் நண்ணுரே. ௩௭௬

---

௩௭௪. பொன்நிலம் - பொன்னுலகம். பொருவில் பூங்கொடி - ஒப்பில்லாத காமவல்லிக் கொடி. மின்னுவிட்டு - ஒளிவிட்டு. வீங்கிருள் பின்னு விட்டு அனகுழல் - மிக்க இருளைப் பின்னிவிட்டது போலும் குழல். பேதையூர் - பேதையாகிய இக் கேமசரி வாழும் ஊர். என்ப - அசை.

௩௭௫. கோலச் செஞ்சுடர் - அழகிய ஞாயிறு. உத்தரம் - வடதிசை. மன்றல் - நறுமணம். ஆல் நிழல் - ஆலமரத்தின் நிழலில். நன்று உவந்து - மிக மகிழ்ந்து. நாதன் - அருகன். சிந்தியா - நமோ அரஹந்தாணம் என்று கூறி மந்திரத்தைச் சிந்தித்து.

௩௭௬. ஓதவண்ணன் - கடல் நிறம் கொண்ட நேமிநாதசாமி. விரை - நறுமணம். தேங்கு ஓதம் - தேங்கிநிற்கும் கடல்போல.

அடல்வண்ண வைம்பொறியும் அட்டுயர்ந்தோர் கோமான்
கடல்வண்ணன் முக்குடைக்கீழ்க் காசின் றுணர்ந்தான் ;
காசின் றுணர்ந்தான் கமல மலரடியை
மாசின்றிப் பாடாதார் வானுலகம் நண்ணுரே. ௩௭௭

பூத்தொழியாப் பிண்டிப் பொங்கோத வண்ணனை
நாத்தழும்ப வேத்தாதார் வீட்டுலகம் நண்ணுரே ;
வீட்டுலகம் நண்ணுர் வினைக்கள்வர் ஆறலைப்ப
ஓட்டிடுப எண்குணனும் கோட்பட் டுயிராவே. ௩௭௮

இப்பாட்டிசை கேட்டுப் பரிவுமிக்க நிப்புதி, “இத் துணைக் கடவுட்பற்றும் இயல்நலமும் உடைய இவட்கு ஏற்ற கணவன் வந்திலனே” என ஏங்கி, அத்தகையோன் ஒருவன் விரைய வருதல் வேண்டுமெனத் தானும் கடவுளைப் பரவி ஞள். அக்காலையில் சுபத்திரன் சீவகனுடன் தன் மனைக் கண் வந்தடைந்தான்.

## கேமசரியும் சீவகனும் ஒருவரை யொருவர் நோக்குதல்

நிலந்தினக் கிடந்தன நிதிய நீள்நகர்ப்
புலம்பறப் பொலிவொடு புக்க காலையே,
இலங்குபூங் கொடியன ஏழை நோக்கமும்
உலங்கொள்தோ ளுறுவலி நோக்கும் ஒத்தவே. ௩௭௯

---

௩௭௭. அடல்வண்ண ஐம்பொறி - உயிரை வருத்துவதே இயல்பாக வுடைய பொறிகள் ஐந்து. அட்டு - வென்று. காசின்று - குற்றமின்றி. மாசு - நெஞ்சில் அழுக்கு.

௩௭௮. பூத்து ஒழியா - பூத்து மாருத. தழும்ப - தழும்பேறும்படி. ஆறலைப்ப - வழிபறித்தலாலே. எண்குணம் - கடையிலா அறிவு முதலிய எண்குணம்.

“ இவனை வணங்காதார்க்கு நுகரப் பெருமையால் உளதாம் பற்று ஒழிவின்ருய் வருவதன்றி நுகர்ச்சி யெய்திப் பற்றற்று வீடுபெறுதல் கூடா தாயிருந்தது என்பது கருத்து.”

௩௭௯. நிலம் தினக்கிடந்த நிதி - மண் தினக்கிடந்தனவாகிய நிதி. புலம்பு அற - தனிமை வருத்தம் நீங்கும்படி. ஏழை - கேமசரி. உறுவலி - மிக்க வலியுடையனுன சீவகன்.

### கேமசரியின் காதல் நிகழ்ச்சி

கண்ணுறக் காளையைக் காண்டலும் கைவளை
மண்ணுறத் தோய்ந்தடி வீழ்ந்தன மாமையும்
உண்ணிறை நாணும் உடைந்தன வேட்கையும்
ஒண்ணிறத் தீவிளைத் தாள்,உருக் குற்றாள். ௩௮௦

### சீவகன் ம[illegible] நிகழ்ச்சி

வாக்கணங் கார்மணி வீணைவல் லாற்கவள்
நோக்கணங் காய்மனம் நோய்செய நொந்தவன்
வீக்கணங் கார்முலை வெய்நெடுந் தோளியோர்
தாக்கணங் கோ?மக ளோ?எனத் தாழ்ந்தான். ௩௮௧

கேமசரியின் காதற் குறிப்பறிந்த தோழியர் சீவகனது மெய் வனப்பு நோக்கி அவனைச் சூழ்ந்துகொண்டனர். இது தெரிந்து நிப்புதி ஆங்கே போந்து அவனது அழகு கண்டு மனமகிழ்ந்தாள்.

### நிப்புதி சீவகனைக் காண்டல்

நினைப்பரு நீணிறை நிப்புதி சேர்ந்தாங்கு
இனத்திடை யேறனை யான்எழில் நோக்கிப்
புனக்கொடி பொற்பொடு புண்ணிய நம்பி
வனப்பிடை யேகண்டு வாட்கண் அகன்றாள். ௩௮௨

---

௩௮௦. கண்ணுறக் காண்டலும் - கண் நோக்கம் பொருந்தப் பார்த்தலும். தோய்ந்து - செறிந்து. ஒண்ணிறத் தீ விளைத்தாள் - ஒள்ளிய நிறம் கொண்ட வேட்கைத் தீயும் வளர்த்துக்கொண்டாள். உருக்குற்றாள்- அத் தீயினால் உருகலானாள்.

௩௮௧. வாக்கு அணங்கார் மணி வீணை வல்லான் - திருத்தத்தை யுடைய தெய்வத் தன்மை நிறைந்த அழகிய யாழ் வல்லுநனான சீவகன். நோக்கு அணங்காய் - நோக்கம் வருத்தம் செய்வதாய். நொந்து - நோய் செய்வதால். வீக்கு - கச்சணிந்த. தாக்கணங்கோ - தன்னாற் காணப்பட்டாரைத் தீண்டி வருத்தும் தெய்வமகளோ. மகளோ-மன்னவர் மகளோ.

௩௮௨. நினைப்பரும் நீள்நிறை . நினைத்தற்கரிய மிக்க நிறையை யுடைய. நிப்புதி - நிஸ்ப்ருதி என்னும் வடசொற் சிதைவு. இனத்திடை ஏறு - சிங்கக்கூட்டத்தின் இடையே நின்ற ஆண் சிங்கம். புனக்கொடி- முல்லைக்கொடிபோலும் கேமசரி. பொற்பொடு ஏறனையான் எழில் நோக்கி என்று இயைக்க. வனப்பு - அழகு மிகுதி. கண் அகன்றாள் - உடம்பெல்லாம் கண்ணாயினாள்.

## கேமசரி இறந்து பாடுதவிர்தல்

முயங்கினான் சொன்ன வண்டாய்
முகிழ்முலைத் தெய்வம் சேர
உயங்குவாள் உணர்ந்து கேள்வற்
கூனமும் பிரிவு மஞ்சி
இயங்குவான் நின்று ஆவி
தாங்கினள் என்ப போலும்
வயங்குபொன் ஈன்ற நீல
மாமணி முலையி னாளே. ௩௯௪

## கேமசரி வண்டுகட் குரைத்தல்

"வஞ்சவாய்க் காமன் சொன்ன
மணிநிற வண்டு காள்! நீர்
துஞ்சுவேன் துயரம் தீரத்
தொழுதகு தெய்வ மாவீர்;
மஞ்சுதோய் செம்பொன் மாடத்
தென்மனை தன்னுள்" என்றாள்

---

௩௯௩. திருந்து - அழகிய. யான்புரிந்து சூடினும் - யான் விரும்பி யணிந்து கொள்ளினும். நுண்ணிடைவருந்துமால் - நுண்ணிய இடையானது முரிந்துவிடும். எனும் வஞ்சம் - என்று பொய்யாகப் பாராட்டும் வஞ்சனை. கரிந்து நைய - கருகிவருந்த.

௩௯௪. முயங்கினான் - முயங்கியவனான சீவகன். முகிழ் - கோங்கரும்பு. உயங்குவாள் - வருந்துபவள். உணர்ந்து - 'துணை வண்டு துஞ்சின் நீயும் துஞ்சுவை' என்று முன் கூறியதை நினைத்து. ஊனம் - பழி. பிரிவு - இறந்துபாடு. இயங்குவான் நின்ற - போவதற்கு ஒருப்பட்டு நின்ற. தாங்கினள் - போகாதே தடுத்துக் கொண்டாள். பொன் - பசலை.

சாந்து
... மகவருந்தி, ஒருவாறு தெளிந்து தக்க ஆறுதல் கூறலுற்றாள்.

## நிப்புதி தேற்றுதல்

விழுத்திணைப் பிறந்து வெய்ய வேட்கைவே ரரிந்து மெய்ந்நின்று
இழுக்கமொன் றானு மின்றி யெய்திய தவத்தின் வந்து
வழுக்குத லின்றி விண்ணோன் வச்சிர நுதியின் இட்ட
எழுத்தனான் தந்த இன்பம் இன்னும்நீ பெறுதி யென்றாள்.

எரிதலைக் கொண்ட காமத் தின்பநீர்ப் புள்ளி யற்றால்;
பிரிவின்கண் பிறந்த துன்பம் பெருங்கட லனைய தொன்றால்;
உருகினைந் துடம்பு நீங்கின் இம்மையோ டும்மையின்றி
இருதலைப் பயனும் எய்தார் என்றுயாம் கேட்டு மன்றே.

---

௧௬௫. வஞ்சவாய்க் காமன்-வஞ்சம் கலந்த சொல்லையுடைய காமன். மணிநிறம் - நீல மணியின் நிறம். ஆவிர் - ஆவிர்களாக. மஞ்சு - மேகம். பனிக்கும் - வருந்தும். சீறடி - சிறிய அடி.

௧௬௬. விழுத்திணை - உயர்ந்த குடி. வேட்கைவேர் - ஆசையாகிய பிறவியின் வேரை. மெய் - சன்மார்க்க நெறி. இழுக்கம் - தப்பு. எய்திய தவம் - முற்பிறவியில் செய்த தவம். விண்ணோன் - அயன். வச்சிர நுதி - வச்சிர ஊசி. எழுத்தனான் - எழுத்துப்போலத் தவறாதவன்.

௧௬௭. எரிதலைக் கொண்ட - வெதுப்புதலையுடைய. நீர்ப்புள்ளி - நீர்த்துளி. அற்று - போல்வதாம். காமத்தின்பம் - கூட்டத்தால் பிறக்கும் இன்பம். உருகினைந்து - பிரிவாற்றாது நெஞ்சுருகி வருந்தி. இம்மையோடு உம்மையின்றி - இம்மை மறுமை யின்பம் இன்றி. இருதலைப்பயனும் - இரண்டன் உறுதிப் பயனும்.

பா...
பேசின்ஓ பிணையல் மாலை ப...
தூசுலாம் பரவை யல்குல் தூமணிப் பாவை யன்னாள். ௧௯௯

## சீவகனைத் தேடிக் காணுமையால் ஒருவாறு தெளிந்திருத்தல்

பையர விழுங்கப் பட்ட பசுங்கதிர் மதிய மொத்து
மெய்யெரி துயரின் மூழ்க விதிர்விதிர்த் துருகி நையும்
மையிருங் குழலி னாள்தன் மைந்தனை வலையிற் சூழ்ந்து
கையரிக் கொண்டுங் காணாள்; காளையுங் காவிற் சென்றான்.

நள்ளிருளில் சீவகன் சென்றுகொண்டிருக்கையில், அவ்விருள் புலந்து கெடுமாறு திங்கள் வானத்தில் தோன்றிற்று. அதன் ஒளியால் இனிதே அவன் நெறியறிந்து சென்றான். பின்பு சில நாழிகை கழிந்ததும் பொழுது விடிந்தது; ஞாயிறு எழுந்து தன் ஒள்ளொளியைப் பரப்பிற்று.

---

௧௯௮. மன்னும் - மிகவும். இறக்கும் - கெடும். வெயில் உறு பனியின் - வெயிலைக் கண்ட பனி போல. இசைகறங்கும் நல்யாழ் இளியினும் - இசையைச் செய்யும் நல்லயாழின் இளியென்னும் நரம்பினும். வினையின் ஆக்கம் - தீவினையின் செயல்வன்மை. அழுங்குவது - வருந்துவது.

௧௯௯. வாசம் - நறுமணம். மாற்றப் பாசத்தால் - சொல்லாகிய பிணிப்பாலே அன்பு மிகுதலால். ஆக்கப்பட்ட - உண்டாக்கப்பட்ட. அல்லதெல்லாம் பேசின் - உயிரொழிந்த உடம்பின் தன்மை யெல்லாம் சொல்லின். பிணையல் மாலை - பிணையலாகிய மாலை, பூமாலை. பரவை - பரந்த.

௨00. பையரா - படத்தையுடைய பாம்பு; அரா என்பதன் விகாரம். எரி துயரின் மூழ்க - எரியுந் துயரத்திலே மூழ்கி. வலையிற் சூழ்ந்து - வலையால் வளைத்துக்கொண்டு. கையரிக் கொண்டும் - கையால் அலைத்து அரித்துத் தேடியும்.

அது கேட்ட அவன் மனைவியர் நால்வர் வயிற்றில் ஒரு மகன் பிறந்துளான் என்ற சொல்லால் வியப்புக்கொண்டு, அஃது எங்ஙனம் கூடுமென்று கேட்டான்.

## சீவகன் தனக்கு மனைவியர் முதலாயினர் இவர் என வுரைத்தல்

நல்தானம் சீலம் நடுங்காத்
தவம்அறிவர் சிறப்பு இந்நான்கும்
மற்றுங்குச் சொன்ன மனைவியர் ; இந்
நால்வர்அவர் வயிற்றுள் தோன்றி
உற்றான் ஒருமகனே ; மேற்கதிக்குக்
கொண்டுபோம் உரவோன் தன்னைப்
பெற்றார் மகப்பெற்றார் ; அல்லாதார்
பிறர்;மக்கள் பிறரே கண்டீர். ௪௦௨

தானம், சீலம், தவம், இறைவர் வழிபாடு என்ற நான்குமே மனைவியர் என்றும், நல்வினையே மகன் என்றும்

௪௦௧. போந்திர் - வந்திர். எனைவர் - எத்துணைபேர். ஒவ்வாதார் - ஒழுக்கமில்லாதவர். ஒப்பர் - ஒழுக்கமுடையவர். சீவகன் தன் உடம்பை ஊர் என்றும் பதியென்றும் குறித்து, இவ்வுடம்பிடத்தேன் - இவ்வுடம் பெடுத்தற்குப் போந்தேன் என்றும் கூறினான். சான்றோன் - உணர்வுடைய சீவகன்.

௪௦௨. அறிவர் சிறப்பு - இறைவர் பூசனை. நடுங்காத் தவம் - அசை வில்லாத் தவம், தானம் முதலிய நான்கும் மனைவியர். உற்றான் - உற்ற வனாகிய நல்வினை. ஒருமகன் - ஒப்பற்ற மகன். உரவோன் - திண்ணி யோன். அல்லாதார் பிறர் - நல்வினையாகிய மகனைப் பெறாதார் மகப் பெறாதவர். மக்கள் பிறரே - நல்வினையில்லாதார் பெற்ற மக்களும் மக்களாகார்.

அ'றிந்து பாவையைக் கொடுப்பத்
தோன்றி யஞ்சுட ரேந்த
நிறைந்த பூங்குருந் துகுதேன்
நீர்பெய் தார்த்தன சுரும்பே. ௪௧௦

சீவகன் இக்காட்சியைக் கண்டு மகிழ்ச்சி மிகுந்து செல்ல, அவனெதிரே, வானு[illegible]ற்குச் செல்லும் வழி காட்டுவதுபோல, வனகிரி யென்னுமொரு மலை தோன்றிற்று. அதனடியில், தாமரையும், கழுநீரும், நீலமும், ஆம்பலும் நிறைந்த நீர்நிலையொன்றை அகத்தேயுடைய பொழிலொன்றிருந்தது. சீவகன் அதன்கட் சென்று தங்கினான்.

### அநங்கமாவீணை அவ்விடத்திற்கு வருதல்

கானத்தி னேகு கின்றான்
கடிபொழில் கவின்கண் டெய்தித்
தானத்தி விருந்த லோடும்
தையலாள் ஒருத்தி தானே
வானத்தின் இழிந்து வந்த
வானவர் மகளு மொப்பாள்
நானமும் பூவும் சாந்தும்
நாறவந் தருகுநின்றாள். ௪௧௧

### சீவகன் அவளைக் காண்டல்

அணிகல வரவத் தாலும்
அமிழ்துறழ் நாற்றத் தாலும்
பணிவரும் சிங்க நோக்கின்
பணையெருத் துறழ நோக்கி,

---

௪௧௦. மகள் மொழிந்தாட - மகட்பேசிச் செல்லுதலால். பைந்தார்க்கொன்றை - கொன்றை மாலைபோல மலர்வதால், பைந்தார்க் கொன்றையென்றார். குராமரத்தின் பூந்துணர் பாவையெனப்படுதலின், "பாவை கொடுப்ப" என்றார். தோன்றி - தோன்றிமரத்தின் ஒளிதிகழும் வெண்பூ. குருந்து - குருந்தமரம். தேன்நீர் - தேனாகிய நீர். சுரும்பு தேனீர்பெய்து ஆர்த்தன என்க.

௪௧௧. கானத்தி னேகுகின்றான்-சீவகன். தானத்தில் - ஓரிடத்தே. மகளும் - உம்மை, இசைநிறை. நானம் - புழுகு. நாற - மணம் கமழ.

மணிமலர் நாகம் சாந்து
  வழையொடு மரவ நீழல்
துணிவருஞ் சாயல் நின்றாள்
  தோன்றல்தன் கண்ணிற் கண்டான். சகஉ

### அநங்கமாவீணை அவன்மேல் வேட்கை கோளல்.

முறுவல்முன் சிறிய தோற்று
  முகைநெறித் தனைய வுண்கண்
குறுநெறி பயின்ற கூந்தல்
  குறும்பல்கா லாவிக் கொள்ளாச்
சிறுநுதற் புருவ மேற்றாச்
  சேர்துகில் தானை சோர
அறியுநர் ஆவி போழும்
  அனங்கன்ஐங் கணையு மெய்தாள். சகங

சீவகன் அவள் செயலைக் கண்டு மனத்தே அருவருப்புற்றுப் பெண்பிறப்பின் இயல்பையே வெறுத்தவனாய், மகளிர் மனம் வேறுபடுந் திறத்தைத் தனக்குள்ளே எண்ணியிருந்தான். அவன் கருத்தை யுணரமாட்டாத அவள், அவன் தன் வரலாற்றை யறியும் கருத்தால் வெளிப்பட வினவமாட்டாது தடுமாறுகின்றான் எனப் பிறழ நினைந்து அதனைக் கூறலுற்றாள்.

### அநங்கமாவீணை தன் வரலாறு கூறல்

தோன்றலே, யான் என் தோழியருடன் வனத்திலே விளையாடுகையில், விஞ்சைய னொருவன் போந்து என்னைத்

சகஉ. அரவம் - ஓசை. பணிவரும் - பிறரால் வணங்குதற்கரிய. நோக்கின் - நோக்குவதைப்போல. பனையெருத்து உறழ - பருத்த கழுத்து மாறுபட. மணிமலர் - மணிபோலும் பூ. வழை - சுரபுன்னை, மரவம் - கடம்புமரம். துணிவரும் சாயல் - வானவர் மகளோ மன்னவர் மகளோ எனத் தெளிதற்கரிய சாயல். உறழநோக்கி, மரவநீழலில் நாகத்தைச் சார்ந்து நின்ற அநங்கவீணையைக் கண்டான் என்க.

சகங. தோற்று - தோற்றி. முகை நெறித்தனைய உண்கண் - அரும்பை அலர்த்தினாலொத்த மையிட்டிய கண். குறும்பல்கால் ஆவிக் கொள்ளா-அணுகிப் பல்கால் ஆவிக்கொண்டு. சேர்துகில் தானைசோர-மேற் போர்த்த துகிலோடு உடுத்த தானை (முந்தானை) நெகிழ. அனங்கன் ... எய்தாள் - வேட்கை விளரச் செய்தாள்.

தன்பாற் படுத்திக்கொண்டு சென்றான். ஆங்கே, அவன் மனைவி என்னைப் போகவிட, யான் இங்கே வந்தடைந்தேன் என் பெயர் அநங்கமாவீணை யென்பது.

தாயிலாக் குழவி போலச்
சாதுய ரெய்து கின்றேன்
வேயுலாம் தோளி னார்தம்
விழுத்துணைக் கேள்வ ! நிற்கண்டு
ஆயினேன் துறக்கம் பெற்றேன் ;
அளித்தரு ளாது விட்டால்
தீயினுள் அமிர்தம் பெய்தாங்
கென்னுயிர் செகுப்ப லென்றாள். சுகசு

அது கேட்ட சீவகன் அவள் கருத்தை மாற்றக் கருதி, மக்களுடம்பின் புன்மையைப் பலவகையால் விளக்கிக் கூறி, அவள் செயலில் அவட்கே அருவருப்புப் பிறக்குமாறு பேசினான்.

## அந்நிலையில் அவள் கணவனான பவதத்தன் அவளைத் தேடிக்கொண்டு வருதல்

காதல் மாமன் மடமகளே
கருங்குழல்மேல் வண்டிருப்பினும்
ஏத முற்று முரியும்நுசுப்
பென்றுன்னியல் பேத்துவேன் ;
ஓதம் போல உடன்றுடன்று
நைய நீ,ஒண் தாமரைக்
கோதை போல்வாய், ஒளித்தொழிதல்,
கொம்பே !குண னாகுமே? சுகரு

---

சுகசு. சாதுயர் - சாதற்குரிய வருத்தம். விழுத்துணைக் கேள்வ - சீரிய துணைவனாகிய கேள்வனே. பெய்தாங்கு - சொரிந்து கெடுப்பது போல. செகுப்பல் - கெடுப்பேன். வேயுலாம் - உலாம்; உவமவுருபு.

சுகரு. குழல்மேல் வண்டு இருப்பினும் நுசுப்பு முரியும் என்று இயல்பு ஏத்துவேன் என இயைக்க. ஏதம் - துன்பம். ஓதம் - கடல். உடன்று உடன்று நைய - மறுகி நையும்படி. நீ ஒளித்தொழிதல் குண னாகுமே என்க. ஏகாரம், வினா. தாமரைக்கோதை - திருமகள்.

இவ்வாறு அழுதுகொண்டு போந்த பவதத்தனை எதிர் சென்று கண்ட சீவகன், "நீ யார்? நினக்கு உற்றது என்னை?" என்று வினவ, அவன் நிகழ்ந்தது கூறலுற்றான்.

## பவதத்தன் கூறல்

"என்னை கேளீர்? என்னுற்றீர்?
    என்ன பெயரீர்?" என்றாற்குப்
"பொன்னங் குன்றிற் பொலிந்ததோள்
    நம்பி! ஒருபொற் பூங்கொடி
யென்னும் நீரா ளீஙங்கே
    கெடுத்தேன்என் பாவத்தால்,
பன்னூற் கேள்வி யுடையேன்,யான்
    பவதத் தன்என் பேன்"என்றான். ௬௯௬

இப் பவதத்தன், "யான் மத்திமதேயத்துப் பதுமபுரத்தில் கீர்த்திதத்தன் என்பானுக்கும் சினதத்தையென்பாளுக்கும் மகனுவேன்; என் மாமன் சீமானுக்கும் மாமி சித்திரைமாலைக்கும் பிறந்த மகள் என் மனைவி. அவள் தன் ஆயத்தோடு பந்தாடக் கண்டு அவள் அழகில் ஈடுபட்ட யான் அயர்ந்தேன். என் அயர்ச்சி யறிந்த அவளும் உடன்வர இருவேமும் இங்கே வந்தேம். அவள் உண்ணுநீர் வேட்டாள்; கொண்டுவருதற்கு யான் சென்றேன். சென்ற யான் தாமரையிலையை வளைத்து நீர் கொணர்ந்தேன்; அவளைக் காணேன்; என் செய்வேன்" என்று மேலும் கூறினான்.

## பன்னூற் கேள்வியுடையேன் யான் என்றதுகொண்டு பவதத்தற்குச் சீவகன் கூறல்

கைப்பொருள் கொடுத்தும் கற்றல்
    கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின்
    மெலிவிற்கோர் துணையு மாகும்;

---

௬௯௬. என்றாற்கு - என்று வினவிய சீவகனுக்கு. பொன்னங் குன்றின் - பொற்குன்றுபோல. கொடி யென்னும் நீராளை - கொடிபோலும் தன்மை யுடையவளை. பாவத்தால் கெடுத்தேன் என்க.

பொய்ப்பொருள் பிறகள் ; பொன்னும்,
புகழுமாம், துணைவி யாக்கும் ;
இப்பொருள் எய்தி நின்றீர் !
இரங்குவ தென்னை ? என்றான். சுகஎ

இவ்வாறு கூறிய சீவகன் தீயமகளிர், நன்மகளிர் என்ற இரு திறத்தாரது இயல்பு கூறி அவரைத் தெருட்ட நினைந்தான். ௯ண

## தீப்பெண்டிர் இயல்புகூறல்

அன்புநூ லாக இன்சொல்
அலர்தொடுத் தமைந்த காதல்
இன்பம்செய் காமச் சாந்தின்
கைபுனைந் தேற்ற மாலை
நன்பகற் சூட்டி விள்ளா
தொழுகினும், நங்கை மார்க்குப்
பின்செலும் பிறர்கண் உள்ளம்
பிணையனார்க் கடிய தன்றே. சுகஅ

## நற்பெண்டிர் இயல்பு கூறல்

சாமெனில் சாதல் ; நோதல் ;
தன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப்
பொற்புடன் புலம்ப வைகிக்

---

சுகஎ. கைப்பொருள் - தனக்கு இடுக்கண் நேர்ந்தால் உதவும் பொருள். கண்ணும் ஆகும் - கல்வியறிவால் ஞானக்கண்ணும் உண்டாகும். மெய்ப்பொருள் - தத்துவவறிவு. பிறகள் - கல்வியல்லாத பிறபொருள்கள். பொன்னும் - பொருளை எய்துவிக்கும். புகழுமாம் துணைவி - புகழாகிய திருமகள். எய்தி - பெற்று. இரங்குவது - அறியாதாரைப்போல வருந்துவது.

சுகஅ. இன்சொல் அலர் - இனிய சொற்களாகிய பூ. காமச் சாந்தின் - காதலாகிய சாந்தாலே. ஏற்ற இன்பம் செய் மாலை - ஏற்ற இன்பத்தைச் செய்கின்ற காமமாகிய மாலை. பகல் சூட்டி - பகற் காலத்திலும் அணிந்து. விள்ளாது - நீங்காது. கண் உள்ளம் பிறர் பின் செல்லும் - கண்ணும் மனமும் பிறர்பால் செல்லும். பிணை - பெண்மான், அடிய தன்றே - மனத்தின் அடியிலே யுள்ளதன்றோ.

காமனை யென்றும் சொல்லார்
கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார்
சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார். சசகூ

"இக்கூறிய நற்பெண்டிர் இயல்பே என் மனையாளும் உடையள்; அவளை இழந்து யான் எவ்வாறு வாழ்வேன்?" என்று பவதத்தன் சொல்லிப் புலம்பினான்.

## சீவகன் அநங்கமாவீணையைக் காணும் திறம் கூறக்கேட்டு, அவன் அவளைச் சென்று காண்டல்

"இனையல் வேண்டா; இம்மந்
திரத்தை யொருவில் லேவளவு
அனைய எல்லை சென்றால்
இயக்கி கொணர்ந்த ருளும்; நீ
புனைசெய் கோல்வளை யைக்கைப்
படுதி" என்றுஆங் கவன்போதலும்
அனைய மாதரைக் கண்டாங்கு
அடிபுல்லி வீழ்ந்த ரற்றினான். ச௨௦

## சீவகன் கற்பித்த மந்திரத்தை யோதியவதனால் பவதத்தன்பால் அநங்கமாவீணை நீங்காக் காதலுடையளாதல்

பட்ட வெல்லாம் பரியா
துரைத்தான் அவளும் கேட்டாள்
விட்டா ளார்வம் அவன்கண்;
இவன்மேல் மைந்து றவினால்

சகசூ. தன்னவன் - தன் கணவன். தனைந்த காலை - நீங்கினால், பூமனும் - மிகவும் பூவும். புலம்ப வைகி - தனிப்ப இருந்து. காமனை யென்னும் சொல்லார் - காமன் என்று பெயரும் கூறாராய். செல்லல் - துன்பம். காமனை - ஐ, அசை.

ச௨௦. இனையல் - வருந்துதல். ஒரு வில் ஏ அளவு அனைய எல்லை - ஒரு வில்லினது அம்பு சென்ற அளவை யொத்த எல்லை. கொணர்ந்தருளும் - கொண்டு வந்து தரும். கைப் படுதி - காண்பாய். அனைய மாதரை - சீவகனைக் கண்டு வேட்கை மிக்கு வருந்தி நின்ற அவளை. கண்டாங்கு - ஆங்குக் கண்டு. மந்திரம் - மகளிர் மனத்தைக் கவர்வதொரு மந்திரம்.

மட்டார் கோதை மனைது
　　றந்தாள் மைந்தனும் மங்கைமேலே
ஒட்டி விள்ளா ஆர்வத்த
　　னுகி யுருவம் ஓதினன். சஉக

## பின்பு, சீவகன் வனகிரியை யடைந்து ஆங்குள்ள அருகக் கடவுளின் திருவடியை வணங்கிப் பாடுதல்

முனிமை முகடாய மூவா முதல்வன்
தனிமைத் தலைமை தனதுதான் என்ப ;
தனிமைத் தலைமை தனதுதான் என்றால்
பனிமலர் தூய்நின்று பழிச்சாவா றென்னே. சஉஉ

இவ்வாறு பாடிப் பரவிய சீவகன் மேலும் செல்லத் தொடங்கி, எதிரே தோன்றிய நெடுஞ்சுரமொன்றைக்கண்டு, அதனையும் விரைவில் கடந்து, மருதவளம் நிறைந்த மத்திம நாட்டு ஏமமாபுரம் என்னும் நகரத்தை முரசறையும் நல்லோசையில் சென்று சேர்ந்து ஒரு பொழிலகத்தைபடைந்தான். அங்கே அவன் மணமகன் ஒருவனைக் கண்டு, அந்த நாட்டின் பெயரும் நகரத்தின் பெயரும் அறிந்துகொண்டான். அம் மகன் சீவகனை உண்டற்கழைப்ப, சீவகன் பின்னர்க் காண்ப தாகச்சொல்லி ஆங்கிருந்த பொய்கைக் கரையை யடைந்தான்.

## சீவகன் பொய்கையிற் கண்டகாட்சி
## பெடையன்னம் ஊடுதல்

வண்சிறைப் பவளச் செவ்வாய்ப்
　　பெடையன்னம் மடமை கூரத்

---

சஉக. பட்டவெல்லாம் - பட்ட வருத்தமெல்லாம், பரியாது - வருந் தாமல். அவன்கண் ஆர்வம் விட்டாள் - சீவகனுகிய வழிப்போக்கன்மேல் செலுத்திய வேட்கையை விடுத்தாள், இவன் - பவதத்தன், மைந்துற வினல் - வலியுற்றபடியினல், மனை துறந்தாள் - மனைக்குரிய அறத்தைக் கெடுத்துக்கொண்டவள், ஒட்டி - ஒன்றி. விள்ளா - நீங்காத.

மனைதுறந்தாள், ஆர்வம் விட்டாள் ; உருவமோதினன் உரைத்தான் கேட்டார் ;

சஉஉ. முனிமை - முனிவனும் தன்மை, முகடாய - மேலாகிய, தனிமைத் தலைமை - ஒப்பில்லாத தலைமை. பழிச்சாவாறு - துதிக்காத வாறு.

தண்கய நீருட் கண்ட
தன்னிழல் பிறிதென் றெண்ணிக்
" கண்டனம் கள்வ ! மற்றுன்
காதலி தன்னை நீர்க்கீழ்ப்
பண்டைய மல்லம் ; வேண்டா
படுக்க" என்று ஊடிற் றன்றே. ௪௨௩

## சேவலன்னம் ஊடல் தீர்த்தல்

செயிர்ப்பொடு சிவந்து நோக்கிச்
சேவலின் அகலச் சேவல்
" அயிர்ப்பதென் ? நின்னை யல்லால்
அறியலேன் ; அன்றி மூக்கின்
உயிர்ப்பதுன் பணியி னாலே ;
ஊடல்நீ" என்று பல்கால்
பயிர்ப்பறச் சிறகாற் புல்லிப்
பணிந்துபாண் செய்த தன்றே. ௪௨௪

இவ்வன்னங்களைக் கண்ணுற்ற சீவகனுக்கு அவற்றின் செய்கை, அவன் தத்தையை நினைப்பித்தது. அவன் அவளை நினைத்து வேட்கையால் உள்ளம் மெலிந்து பலபட வருந்தலுற்றான்.

வண்டு வாழ்பயில் கோதை மணமுதல்
கண்ட ஞான்றுதன் கண்ணெனும் கைகளால்
கொண்டு கொண்டு பருகிய நோக்கமொன்று
உண்டெ னாவி யுருக்கி யிடுவதே. ௪௨௫

---

௪௨௩. மடமை கூர - அறியாமை மிகுதலால். பிறிது - வேறொரு பெடையன்னம். கள்வ - (சேவலன்னத்தை நோக்கிக்) கள்வனே நீர்க் கீழ் கண்டனம் என்க. பண்டையயல்லம் - யாம் முன்புபோல் தேற்றினும் தேறேம். படுக்க வேண்டா - அகப்படுக்க வேண்டா.

௪௨௪. செயிர்ப்பொடு - குற்றத்தோடு. சேவலின் - சேவலன்னத்தின் நீங்கி. அயிர்ப்பது - ஐயுறுவது. அறியலேன் - வேறொன்றையறியேன். மூக்கின் உயிர்ப்பது - மூக்கினால் உயிர்த்து உயிர்தாங்கி யிருப்பது. ஊடல் - ஊடுதலைச் செய்யாதே. பயிர்ப்பு - அருவருப்பு. அற - நீங்க. பாண் செய்தது - தாழ்ந்து நின்றது.

௪௨௫. வண்டுவாழ் பயில்கோதை - வண்டு வாழ்க்கை பயின்ற கோதையையுடைய காந்தருவதத்தை. மணமுதல் - கூடுதற்கு முன்னே. கொண்டுகொண்டு - முகந்துகொண்டு. பருகிய நோக்கம், ஆவியுருக்குவதாகிய நோக்கம் என்க. அந்த நோக்கம் இப்பொழுதும் உண்டு.

## தத்தை தன் பிரிவாற்றியிருப்பள் எனச் சீவகன் தெளிதல்

காத லாளுடல் உள்ளுயிர் கைவிடின்
ஏத மென்றுயிர் எய்தி யிறக்கும் ;மற்று
ஆத லால்,அழி வொன்றிலள் ; அல்லதூஉம்
மாதர் விஞ்சையும் வல்லளு மல்லளோ ? ௪௨௬

## தான் வேட்கை நினைந்து மெலிதல் தகாது என்று தெளிந்து சீவகன் தன் கல்வியறிவை நேர்தல்

காதல் மிக்குழிக் கற்றவும் கைகொடா
ஆதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால் ;
தாது துற்றுபு தங்கிய வண்டனார்க்கு
ஏதம் இற்றென என்னுமென் நெஞ்சரோ. ௪௨௭

## மெலிந்த தன் நெஞ்சினைச் சீவகன் தன் வயமாக்கிக் கொளல்

வேட்கை யூர்தர விம்முற வெய்திய
மாட்சி யுள்ளத்தை மாற்றி மலர்மிடை
காட்சிக் கின்பொய்கைக் காமர் நலனுண்டு
மீட்டும் அங்கிருந் தான்விடை யேறனான். ௪௨௮

அப்பொழுது அந்நாட்டரசனான தடமித்தனுக்கும் அவன் மனையாட்டி நளினைக்கும் தலைமை நலம் கனியப்

---

௪௨௬. உடல் உள் உயிர் - உடலிடத்தே யிருக்கும் உயிர். காத லான் உயிர் கைவிடின் என் உயிர் ஏதம் எய்தி இறக்கும் என்க. விஞ்சை - வித்தை. அல்லதூஉம் - அன்றியும்.

௪௨௭. மிக்குழி - மிக்கவிடத்து, கைகொடாவாதல் - கைகொடுத்து உதவாதொழிதல். கண்ணகத்து அஞ்சனம் போலும் - கண்ணிடத்தே கிடந்த அஞ்சனம் அதற்குப் பயன்கொடாதது போல ; (கல்வி நெஞ்சிற் கிடந்தும் பயன் தந்ததில்லை.) தாது துற்றுபு - தாது உண்டு. ஏதம் இற்று - காதலால் வரும் ஏதம். இன்று, இற்றென விகாரம்.

௪௨௮. ஊர்தர - மேலிடுதலால். மாட்சியுள்ளம் - மாய்தலையுடைய உள்ளம். மாற்றி - கெடுத்து. பொய்கைக் காமர் நலம் - பொய்கையின் அழகிய நலம்.

'' வருத்தத்திற்குக் காரணமாகின்றவிடத்து இருத்தலருமை தோன்ற 'மீட்டும்' என்றார்.''

பிறந்த விசயனென்பான், அரண்மனைச் சோலைக்குச் சென்ருன். வழியில் பொய்கைக்கரையில் சீவகன் இருக்கக் கண்டு அவன்பால் வந்து நின்ருன்.

### விசயன் சீவகனை வரலாறு வினவி யறிதல்

"இந்நாட் டிவ்வூர் இவ்விட
மெய்தார் இவண்வாழ்வார் ;
எந்நாட் டெவ்வூர் ? எப்பெய
ராய்நீ ; உரை "என்ருற்கு
அந்நாட் டவ்வூர் அப்பெய
ரல்லாப் பெயர்சொன்ஞன்,
பொய்ந்நாட் டேனும் பொய்யல
வாற்ருல் புகழ்வெய்யோன். சஉக

சீவகனது உரையாலும் உடல் வனப்பாலும் விசயன் உள்ளம் கவரப்பட்டான். சீவகனது தோழமையைப் பெறுதற்கு அவனுக்கு விருப்பமுண்டாயிற்று.

### விசயன் சீவகனைத் தோழமை கொள்ளல்

பூங்கழ லானைப் புண்ணிய
நம்பி முகம்நோக்கி
ஈங்கிது நின்ஞடு ; இப்பதி
நின்னூர் ; இதுநின் இல் ;
வீங்கிய திண்டோள் வெல்புக
ழாய் !நின் கிளை என்ருற்கு
ஆங்கது எல்லாம் அண்ணலும்
நேர்ந்துஆங்கு அமைக என்ருன். சஙூ0

---

சஉக. வாழ்வார் - வாழ்பவர். என்ருற்கு - என்று கேட்ட விசயனுக்கு. பொய்ந் நாட்டேனும் - சொல்லால் பொய்யாக நாட்டிக்கொள்ளப்பட்டதாயினும். பொய்யலவாற்ருல் பெயரல்லாப் பெயர் சொன்ஞன் - பொருளால் பொய்யல்லாததொரு வழியாலே ஏமாங்கத மென்னும் நாட்டில் இராசமாபுரத்தில் சீவகனென்னும் பெயரையன்றிப் பொருளால் அப்பெயரேயாகக் கூறினன்.

சஙூ0. வீங்கிய திண்தோள் - உயர்ந்த திண்ணிய தோள். அது எல்லாம்-உபசாரம் பலவும். அண்ணல் - சீவகன். " இவனை யெதிர்ப்படுதலின், விசயனைப், புண்ணிய நம்பி என்ருர்,"

பின்பு, விசயன் அருகிலிருந்த மாமரத்தில் பழுத்திருந்த கனியொன்றை வீழ்த்த எண்ணி, அம்பு எய்தானாக, அது தவறிவிட்டது; சீவகன் அதனை வாங்கி, தான் இருந்த விடம் பெயராதே எய்தான். அக் கனியும் தவறின்றி, காம்பு அறுப்புண்டு அவன் கையேட்டும் எல்லைக்கண் வர, சீவகன் அதனைக் கையில் ஏந்தி விசயன்பால் தந்தான். அவனது விற்றிறத்தைக் கண்ட விசயன் மிக்க வியப்புற்றான்.

### விசயன் வியந்து சீவகனைத் தன் அரண்மனைக்குக் கொண்டேகுதல்

" மராமரம் ஏழும் எய்த
வாங்குவில் தடக்கை வல்வில்
இராமனை வல்லன் என்பது
இசையலால் கண்ட தில்லை
உராமனம் இவன்க ணின்றி
யுவக்குமா செய்வல்" என்று
குராமலர்க் காவின் நீங்கிக்
கோயிலே கொண்டு புக்கான். சஙக

அங்கே, விசயன் தன் தந்தைபால் சீவகன் திறத்தை இனிதெடுத்துக் கூறினன். அரசனும் சீவகனது உருவவிலக்கணங்களை உற்று ஆராய்ந்து இவன், " ஏவினுக்கு அரசன்; வில்வன்மையில் துரோணனுக்கு நிகராவார் விஞ்சையருலகத்தும் மண்ணுலகத்தும் ஒருவரும் இலர் என்பார் வாய்மடங்க இவன் வந்துளான்" என்று துணிந்து பெரு மகிழ்வு கொண்டான்.

### தடமித்தன் தன் மக்கட்கு விற்பயிற்சி நல்குமாறு சீவகனை வேண்டுதல்

விற்றிறல் நம்பி தேற்றான்
விருந்தினன் இவனும் அன்றி
மற்றுமோர் நால்வ ருள்ளார்
மாண்பினால் வளர்ந்த தில்லை

---

சஙக. வாங்கு - தேவி பொருட்டு வளைத்த, இசையலால் - சொல்லாலன்றி, உராமனம் - நீங்கிப் போகும் உள்ளம். இன்றி - இல்லையாக. குராமலர்க் காவின் நீங்கி - குரவம் பூ நிறைந்த சோலையிலிருந்து நீங்கி.

கொற்றம்நீ கொடுக்கல் வேண்டும்
குறைஎனக் குரிசில் நேர்ந்தான்
அற்றைநா ளாதி யாக
அவர்களும் பயிற்று கின்றார். ௪௩௨

சீவகன் அரச குமரர்க்கு வில்லாசிரியனாக இருந்து விற்பயிற்சியும், யானை, குதிரை, தேர் முதலிய ஏறும் பயிற்சியும், பிற படைக்கலப் பயிற்சியும் நல்கிவந்தான். வருங்கால், ஒரு நாள், கோயிற் சோலைக்குச் சென்றான். அங்கே, வேங்கை, அழிஞ்சில், புன்கு, மகிழ், சண்பகம், பாதிரி, முல்லை, காந்தள், குரவம், தளவம், பிறவும் இனிது மணங்கமழ மலர்ந்திருந்தன. அவற்றைக் கண்ட சீவகன் அழகியதொரு மாலை தொடுத்தான். அத் தொடுப்பு ஓர் ஓலைப் பாசுர மாலையாக அமைந்தது. அப்போது அங்கே போந்த கூனியொருத்தி அவனை வணங்கினாள். அவனும் அதனை அவட்கு ஈந்தான். அதனைப் பெற்றுச் சென்று, அவள் அரசன் மகளான கனக மாலையிடம் அதனைத் தந்தாள். அவள் அத் தொழிலில் வல்லுநளாதலின், அதனை நோக்கினாள். அதன்கண், "மனக்கினிய மகளிரொடு கூடி இன்புற்று வாழாத வாழ்வு ஆடவர்க்கு வேடர் வாழ்வுபோல்வதாகும்; இவ்வாழ்வைப் பெறுதார், அது பெறுவது குறித்துத் தவம் செய்வதே அவரது ஆண்மைக்கு அழகாம்" என்ற கருத்தமைந்த பாசுரம் அமைந்திருந்தது. அதனைப் படித்தறிந்த அக் கனகமாலையின் உள்ளம் அவன்பாற் படுவதாயிற்று.

## கனகமாலை வேட்கைமிக் கிருத்தல்

பின்னி விட்ட பிடித்தடக்கை
யிரண்டு போன்று திரண்டழகார்
கன்னிக் கலிங்க மகிலார்ந்து
கவவிக் கிடந்த குறங்கினாள்

---

௪௩௨. விற்றிறல் - வில்லின் வன்மை. தேற்றான் - அறியான். நம்பி - விசயன். மற்றும் - வேறும். மாண்பினால் - மாட்சியோடு. கொற்றம் - கல்வி. குறை - பொருள். பயிற்றுகின்றார் - பயிலுகின்றார்.

மின்னுக் குழையும் பொற்றோடும்
　　மிளிர எருத்தம் இடம்கோட்டி
என்னும் இமையாள் நினைத்திருந்தாள்
　　இயக்கி யிருந்த எழில்ஒத்தாள். ௪௩௩

இந் நிலையில் பொழுது மறைவதாயிற்று. வேனிற்காலமாதலின், தீவிய மணம் விரவித் தென்றல் வந்துலவும் மாலைப் போது வந்தது. வேட்கை நோயுற்றார்க்கு மிக்க துயர் செய்யும் காலம் அதுவாதலால், கனகமாலைக்கு வேட்கை மிகுவதாயிற்று.

### கனகமாலை நெஞ்சுகலுழ்ந்து வருந்துதல்

ஒன்றே யெயிற்ற தொருபெரும்பேய்
　　உலகம் விழுங்க அங்காந்து
நின்றாற் போல, நிலவுமிழ்ந்து
　　நெடுவெண் திங்கள் எயிறிலங்க
இன்றே குருதி வானவாய்
　　அங்காந் தென்னை விழுங்குவான்
அன்றே வந்தது இம்மாலை!
　　அளியேன் ஆவி யாதாங்கொல்? ௪௩௪

### குயிலொடு நொந்து கூறல்

வருந்தி யீன்றாள் மறந்தொழிந்தாள்
　　வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள்
முருந்தின் காறும் கூழையை
　　முனிவார் நின்னை யென்முனிவார்

---

௪௩௩. பின்னிவிட்ட - சேர்த்துவிட்ட. பிடித்தடக்கை - பெண் யானையினுடைய பெரிய கை. போன்று - ஒத்து. கன்னிக் கலிங்கம் - கணவன் தீண்டாத உடை. கவவி - விரும்பி. இடங்கோட்டி - இடப் பக்கம் சாய்த்து. "இயக்கியும் தனக்கு மேலாய இறைவனைத் தியானித்து இமையா திருப்பாளென் றுணர்க."

௪௩௪. ஒன்றே எயிற்றது ஒரு பெரும் பேய் - ஒரே பல்லையுடைய தொரு பெரிய பேய். அங்காந்து - வாயைத் திறந்துகொண்டு. திங்கள் எயிறு - திங்களாகிய பல். குருதி வான வாய் - செவ்வானமாகிய வாய். இம்மாலை, எயிறிலங்க, அங்காந்து, விழுங்குவான் வந்தது அன்றே. அளியேன் - அளிக்கத்தக்க என்.

பொருந்திற் றன்றால் இதுஎன்னாய்
பொன்றும், அளித்து,இவ் வுயிர்என்னாய்
திருந்து சோலைக் கருங்குயிலே !
சிலம்ப விருந்து கூவுதியால். ௬௩௫

## தனக்கு உற்றன கண்டு தானே புலம்புதல்

வேம்என் நெஞ்சம் மெய்வெதும்பும்
விடுக்கும் ஆவி வெய்துயிர்க்கும்
பூமென் குழலார் புறநோக்கி
நகுவார் நகுவ தாயினேன்
தாம மார்பன் தான்புனைந்த
தண்ணென் மாலை புணையாக
யாமக் கடலை நீந்துவேன்
யாரு மில்லாத் தமியேனே. ௬௩௬

இவ்வாறு வருந்தியவள் தன் கிளி தேற்றத் தேறித் தானும் ஒரு மாலை தொடுத்து மறுநாளே தன் தோழியாகிய அனங்கவிலாசினி யென்பாளிடம் கொடுத்தனுப்பினாள். அவள் சென்று அதனைச் சீவகற்கு நீட்டினாள். அவன் அதனை முதற்கண் ஏற்க மறுத்தான். உடனே, "என் தலைவிக்கு மாலை தொடுப்பவனும் நீயே; அவள் தோள் மெலிவிற்கு மருந்தும் நீயே; உயிரும் நீயே; ஏல்" என்று சொன்னாள்.

---

௬௩௫. ஈன்றாள் - ஈன்றெடுத்த தாய்க்குயில். மறந்து - உறவைக் கைவிட்டு. வளர்த்தாள் - வளர்த்த காக்கை. சொல் - குயிலின் ஓசை. முருந்து - எலும்பு. கூழையை - மயிர் நிரம்பியுள்ளாய். முனிவார் - வெறுப்பவர். என் - பிறப்பு, வளர்ப்பு. வடிவு - இவற்றுள் எதனை? பொன்றும் - சாகும். திருந்து - அழகிய. சிலம்ப - முழங்க.

"கருங்குயிலே யென்றது சோலைக்கு மறுவே என்ற தன்மைத்து; இது செறலின்கண் திணைமயக்கம்."

௬௩௬. வேம் - வேகும். விடுக்கும் ஆவி - உடம்பைக் கைவிட்டுப் போகும். புறம்நோக்கி - பொல்லாங்கைப் பார்த்து. நகுவதாயினேன் - நகப்படும் பொல்லாங்கின் வடிவேயாயினேன். "அவன் கையால் புனைதலின், அது கொண்டு நீந்தலாமோ என நினைத்து அதனை மறுத்தான்."

## சீவகன் மாலையை ஏற்றல்

"மன்னர் கோயில் உறைவார்
பொறிசெறித்த மாண்பினரே"
என்ன, "அஞ்சினாய்" என்று அவனை
நக்காட்கு "அஃதன்று, கோதாய்!
இன்ன கொள்கையேற்கு ஏலாது"
என்ன இலங் கெயிற்றினாள்,
"அன்னம் அன்ன நடையினாள்
தான்வருந்தும்" எனநேர்ந்தான். ௪௩௭

பின்பு அநங்கவிலாசினி கனகமாலைபாற் சென்று நிகழ்ந்தது கூறி மகிழ்வித்தாள். கனகமாலைக்கு வேட்கை பெருகி அவளை வருத்தத் தொடங்கிற்று. தோழியர் தேற்றத் தேறி, அவள் ஒருவாறு ஆற்றியிருப்பாளாயினள்.

இது நிற்க, அரசனாகிய தடமித்தன் தன் மக்கட்குப் படைக்கலப் பயிற்சி நிரம்பிவிட்டதெனச் சீவகனால் தெரிந்தான். ஒருநாள் அவரது பயிற்சிச் சிறப்பை அறிய விரும்ப, அவ்வண்ணமே அவர்களும் தங்கள் விற்றிற முதலாய படைப்பயிற்சித் திறத்தை யாவரும் வியப்பக் காட்டினர். அது கண்டோர் அவர்களைப் புகழ்ந்து பாராட்டினர்.

### பாராட்டுரை

"விசயனே விசயன் விற்போர்க்
கதம்பனே முருகன் வேற்போர்த்
திசையெலாம் வணக்கும் வாட்போர்க்
கந்தனான் செம்பொனாமன்
அசைவிலான் யானைத் தேர்ப்போர்க்
கசலனே அசல கீர்த்தி

௪௩௭. பொறி செறித்த மாண்பினர் - ஐம்பொறியையும் அடக்கியாளவேண்டும். என்ன - என்று சீவகன் சொல்ல. நக்காட்கு - இகழ்ந்து நகைத்த தோழிக்கு. இன்ன கொள்கையாற்கு - இவ்வாறு ஆசிரியனும் தம்மையில் நின்ற எனக்கு. எயிற்றினாள் - தோழி. நடையினாள் - கனகமாலை. என - என்று சொல்லவே, நேர்ந்தான் - மாலையை ஏற்றான். வருந்தும் (இறந்துபடும்) எனவே, அதற்கஞ்சி ஏற்றானாயிற்று.

வசையிலான் புரவிச் சேனென்
றியாவரும் புகழப் பட்டார். ௪௫௮

இது கண்டு பெருமகிழ்வு கொண்ட வேந்தன், "இவ் வாசிரியன் ஒன்று அரசனாதல் வேண்டும்; இன்றேல் அந் தணனாதல் வேண்டும்; ஏனையோர்க்கு இவ்வுண்மை யுண்டா காது; ஆதலால் இவனை நீங்காச் சிறையிடல் வேண்டும்; இவனைக் கொணர்மின்" என ஏவினான். அவன் கருத்தறி யாத அவன் பரிசனத்தாரும் பிறரும் அவன் கூறியது கேட்டு மிகவும் வருத்தமுற்றனர். ஏவலர் சென்று சீவகனை அரசன்பால் கொண்டுவந்தனர். சீவகன் வந்ததும் அவனை அரசன் வரவேற்றுத் தனியே ஓரிடத்திற்குக் கொண்டு சென்றான்.

## நடமித்தன் சீவகற்குக் கூறல்

புள்முழு திறைஞ்சுங் கோட்டுப்
பொருகளி றனைய தோன்றல்
மண்முழு தன்றி வானும்
வந்துகை கூடத் தந்தாய்
கண்முழு துடம்பிற் பெற்றேன்
காளை! கைம் மாறு காணேன்
பண்முழு துடற்றும் தீஞ்சொல்
பாவைநின் பால னென்றான். ௪௫௯

---

௪௫௮. விற்போர்க்கு விசயன் விசயனே - விற்போரில் இவ்விசய னென்பான் அருச்சுனனை நிகர்ப்பன். கதம்பன் முருகனை யொப்பன்; அசல கீர்த்தி யென்பான் அசலனை நிகர்ப்பன்; புரவிசேனன், வசையிலா னாகிய நகுலனை நிகர்ப்பன். யாவரும் - யாவராலும்.

௪௫௯. புள்முழுது இறைஞ்சும் கோட்டுப் பொருகளிறு - பறவைக ளெல்லாம் வந்து படியும் கோட்டையுடைய யானை. மண் . . . தந்தாய்: மண் முழுதும் வந்து கைகூடுதலேயன்றி மறுமையில் வானும் வந்து கை கூடும்படி ஞான நெறியையும் தந்தாய். கண் பெற்றேன் - நல்வினை செய்தவருடைய உடம்பிலுள்ள கண்போலக் கண் முழுதும் பெற்றேன்; அஃதாவது, இவர் போர்த் தொழில் காண்பதால் ஊனக்கண்ணும், இவரை நன்னெறியில் சேர்வித்தலின் ஞானக்கண்ணும் பெற்றேன் என்பது. பண்முழுது உடற்றும் - பண்ணெல்லாம் முழுதும் ஒக்கும்.

### சீவகன் மறுப்ப அவன் மேலும் கூறல்

முடிகெழு மன்னன் சொல்ல
மொய்கொள்வேற் குரிசில் தேற்றான்
வடிவமை மனனொன் றாக
வாக்கொன்று, மறுத்த லோடும்
தடிசுவைத் தொளிறும் வேலான்
தன்கையால் முன்கை பற்றி
இடிமுர சனைய சொல்லால்
இற்றென விளம்பு கின்றான். ௪௪௦

### கணிகள் கூறியது கூறிச் சீவகனை மணம் நேர்வித்தல்

பூவியல் கோயில் கொண்ட
பொன்னனாள் அனைய நங்கை
காவியங் கண்ணி வந்து
பிறத்தலும் கணிகள் ஈண்டி
மூவியல் திரித லின்றிச்
சாதக முறையிற் செய்தார்
ஏவியல் சிலையி னாய்க்கே
உரியள்என் றுரைப்ப நேர்ந்தான். ௪௪௧

பின்பு சான்றோர் குறித்த நாளில், மண்ணவர் அறிய விண்ணவர் காப்ப, சீவகன் கனகமாலைக்கு மாலை சூட்டி மணம் புரிந்துகொண்டான்.

---

௪௪௦. மொய் கொள் வேல் குரிசில் தேற்றான் - வலிமை பொருந்திய வேலையுடைய குரிசிலாகிய சீவகன் தெளிவிக்காதவனாய். வடிவமை மனன் - கனகமாலையின் வடிவுபொருந்திய மனம். ஒன்றாக - வேட்கை வயத்ததாக. வாக்கு ஒன்று - வாய்ச்சொல் வேட்கை யில்லாதான் போலாக. தடிசுவைத்து ஒளிறும் வேல் - ஊன் படிந்து விளங்கும் வேல். இடி முரசு - இடி முழக்கத்தையுடைய முரசு.

௪௪௧. பூவியல் கோயில் கொண்ட பொன்னனாள் - தாமரைப் பூவைக் கோயிலாகக் கொண்ட திருமகள். நங்கையாகிய கண்ணி என்க. காவி - நீலமலர். மூவியல் - சிரோதயம், பூபதனம், தெரியுங்காலம். திரிதல் இன்றி - தப்பில்லாதபடி. முறையில் - நினக்கேயுரிய முறைமையால். சாதகம் செய்தார் என்க. ஏவியல் சிலை - அம்பு தொடுக்கும் வில்.

## மணமக்களின் இன்ப நிலை

திரையிடைக் கொண்ட இன்னீ
    ரமுதுயிர் பெற்ற தென்னும்
உரையுடைக் கோதை மாதர்
    ஒளிநல நுகர்ந்து நாளும்
வரையுடை மார்பன் அங்கண்
    வைகின னென்ப மாதோ
கரைகட லனைய தானைக்
    காவலன் காத லானே. சசஉ

இஃது இவ்வாறாக, இராசமாபுரத்தே சீவகனைப் பிரிந்த நந்தட்டன் முதலிய தம்பிமார்கள் அவனைக் காணாமையால் மிகவும் வருந்திக் குணமாலையின் மனைவியை யடைந்து அவளை வினவினர்; அவளால் ஒன்றும் உணர முடியாது போகவே, அவர்கள் காந்தருவதத்தையின் மனையையடைந்து சீவகனைப் பற்றிய குறிப்புக்களை யறிதற்குச் சென்றனர். அப்போது காந்தருவதத்தை தன் வீணையைப் பண்ணிச் சீவகனை நினைந்து பாடிக்கொண்டிருந்தாள்.

## காந்தருவதத்தையின் பாட்டு

இறுமருங்குல் போதணியின் என்றினைந்து கையில்
நறுமலர்கள் சிந்துவார் நண்ணார் துறந்தார்;
நண்ணார் துறப்ப நளிவளையும் தோள்துறப்பக்
கண்ணோவா முத்துறைப்பத் தோழி! கழிவேனோ. சசங

இவ்வாறு பாடியிருந்தவள் சீவகன் பிரிவு நோய் தன்னை மிக வருத்த ஆற்றாளாய், இனித் தான் அவனைக் கூடும் நாள் என்றோ என ஏங்கி வாடியிருந்தாள். அவள் மனைக்குப்

---

சசஉ. திரை - கடல். இன்னீர் அமுது - இனிய தன்மையுடைய அமிர்தம். உயிர் பெற்றது என்னும் உரை - தனக்கு ஓர் உயிரைப் பெற்றது என்று உலகம் கூறும் உரை. வரையுடை மார்பன் - மலை தோற்கின்ற மார்பனான சீவகன். அங்கண் - அவ்விடத்தே. காதலான் - காதலால். காதலால் வைகினன் என்க.

சசங. மருங்குல் இறும் - இடை முரியும். இனைந்து - வருந்தி. வளைதோள் துறப்ப - வளைகள் கையினின்றும் கழன்று நீங்க. கண் ஓவா முத்து உறைப்ப - கண்கள் நீங்காது நீர்த்துளியைச் சொரிய.

போந்த நந்தட்டன் மிக்க அன்பும் நன்மதிப்பும் உடையனாய் மூன்றுவில் தொலைவில் நின்று, வாய்புதைத்துக் கைகட்டிப் பணிவாய், "நம் அடிகளாகிய சீவகனார் எங்குள்ளார்?" என்று வினவி மேலும் சில மொழிகளை விளம்பலுற்றான்.

## நந்தட்டன் விளம்புதல்

"பொறிகுலாய்க் கிடந்த மார்பின்
 புண்ணியன் பொன்றி னானேல்
வெறிகுலாய்க் கிடந்த மாலை
 வெள்வளை முத்தம் நீக்கி
நெறியினால் நோற்ற லொன்றோ,
 நீளெரி புகுத லொன்றோ;
அறியலென்; கொழுநன் மாய்ந்தால்
 அணிசுமந் திருப்ப" தென்றான். சசச

## அவன் கருத்தை யுய்த்துணர்ந்த காந்தருவதத்தை கூறல்

மதுமுகத் தலர்ந்த கோதை மாற்றம்மைந் தற்கு ரைப்பாள்:
கொதிமுகக் குருதி வைவேல் குரிசிலோ நம்மை யுள்ளான்;
விதிமுக மணங்கள் எய்தி வீற்றிருந் தின்பம் உய்ப்ப
மதிமுக மறியும் நாமே வாடுவ தென்னை யென்றாள். சசரு

தத்தை ஒரு விஞ்சையை யோதித் தன் முகத்தைத் தன் கையால் தடவிக்கொண்டு, நந்தட்டன் சீவகனைக் காணுமாறு செய்தாள்:

---

சசச. பொறிகுலாய்க் கிடந்த மார்பின் புண்ணியன் - ஆணிலக்கணமான மூன்று வரிகள் பொருந்திய மார்பினையுடைய சீவகன், பொன்றினானேல் - இறந்துவிட்டானாயின். வெறி - மணம். மாலையும் வளையும் முத்தமும் நீக்கி நோற்றலோ, எரி புகுதலோ இரண்டிலொன்று செய்யத் தக்கதாம். அறியலென் — (மகளிர் அணிசுமந்திருப்பது உண்டு என) யான் கேட்டறியேன்.

சசரு. மது...கோதை - தேன் வழிய மலர்ந்த பூவால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த காந்தருவதத்தை, மாற்றம் - மறுமொழி. கொதிமுகக் குருதி வைவேல் குரிசில் - கொதிக்கின்ற குருதி படிந்த கூரிய வேலையுடைய சீவகன். உள்ளான் - நினையான். விதிமுக மணம் - விதிப்படி செய்யும் திருமணம். மதிமுகம் அறியும் நாமே - மதிமுகம் என்னும் மந்திரத்தை யறிந்திருக்கின்ற நாமே. வாடுவது - அவனுக்குத் தீங்குண்டாமென்று வருந்துவது.

## நந்தட்டன், விஞ்சையால் சீவகனைக் காண்டல்

பொற்புடை யமளி அங்கண் பூவணைப் பள்ளி மேலால்
கற்பக மாலை வேய்ந்து கருங்குழற் கைசெய் வானை,
முற்படக் கண்டு நோக்கி முறுவல்கொள் முகத்த னாகி
விற்படை நிமிர்ந்த தோளான் தொழுதுமெய் குளிர்ந்து நின்றான்.

பின்பு காந்தருவதத்தை தன் விஞ்சையை மாற்றினாள். நந்தட்டன் தெளிந்து "அன்னாய், யான் சீவகன் திருவடியைச் சென்று கூடக் கருதுகின்றேன்; விடைகொள்வேன்" என வேண்டி நின்றான். அதற்கு உடன்பட்ட தத்தை நந்தட்டன் கிடந்த பள்ளியை மெழுகி மாலைநாற்றிப் புகையிட்டு விஞ்சையொன்றை யோதினாள். உடனே ஒரு தெய்வம் போந்து நந்தட்டனை அவன் கிடந்த அப் பள்ளியுடன் கொண்டுசென்று ஏமமாபுரத்து அரசன் கோயிலுக்குள் வைத்தகன்றது. பொழுதுவிடிந்தது; ஞாயிறு வானத்தே கீழ்க்கடலிலே எழுந்தது; இதற்குள் நந்தட்டன் துயிலுணர்ந்தெழுந்தான். அவன் வடிவும் சீவகன் வடிவுபோல் தோன்றக் கண்ட வசுந்தரியென்னும் தோழி, விசயற்குத் தெரிவிப்ப, அவன் போந்து, நந்தட்டனை நோக்கி, "நீ யார்" என்று வினவ, அவன் ஒரு விடையும் கூறானாயினன். இச் செய்தியை விசயன் சென்று சீவகற்குத் தெரிவித்தான். அவன், "வந்தவன் நந்தட்டனே யாகும்" என்று கருதி, நந்தட்டன்பால் வந்தான். நந்தட்டன் சட்டென எழுந்து சீவகன் திருவடியில் வீழ்ந்து வணங்கினன்.

## சீவகன் நந்தட்டனை ஏற்றுக்கோடல்

தாமரைத் தடக்கை கூப்பித்
தாள்முதற் கிடந்த தம்பி

௪௪௬. பொற்பு - அழகு. பள்ளியாகிய அமளி யென்க. அழகிய கள்ளையுடைய பூவணைப் பள்ளியாகிய பொற்புடையமளியென விசேடித்து நின்ற இருபெயரொட்டு. கற்பகம் - தேவர்நாட்டுக் கற்பகம். மண்ணுலகத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது, தேவர் சாபத்தால் பூமலர்வதன்றிப் பிற தன்மைகளை யிழந்தது. இப் பூமாலை, கற்பகமாலை எனப்பட்டது. கைசெய்வான் - ஒப்பனை செய்யும் சீவகனை. விற்படை - வில்லாகிய படை. தோளான் - நந்தட்டன்.

தாமரைத் தடத்தை யொத்தான் ;
    தமையனும் பருதி யொத்தான் ;
தாமரைக் குணத்தி னாளை
    முன்முறை தழுவிக் கொண்டு
தாமரைச் செங்க ணானும்
    தன்னுறு பரிவு தீர்ந்தான். ௪௪௭

**சீவகன் சொல்லுதல்**

என்னுறு நிலைமை யோராது
    எரியுறு தளிரின் வாடிப்
பொன்னுறு மேனி கன்றிப்
    போயினீர் ; பொறியி லாதேன்,
முன்னுற இதனை யோரேன் ;
    மூரிப்பே ரொக்க லெல்லாம்
பின்னுறு பரிவு செய்தேன்,
    பேதையேன், கவலல் என்றான். ௪௪௮

இவ்வாறு சீவகன் வருந்திக் கூறக்கேட்டதும் நந்தட்டன் ஆற்றாது புலம்ப, அவனைத் தேற்றிக் கனகமாலையிடம் கொண்டு சென்று அவனை அவற்குச் சீவகன் காட்டினன். நந்தட்டன் அவள் தாளில் வீழ்ந்து வணங்க, அவள் சீவகனை "இவன் யார்?" என்று வினவ, சீவகன் "இவன் நினக்கு மைத்துனன் அனையன்" என்னலும், அவள் இருவர்க்கும்

௪௪௭. தாமரைத் தடக்கை - தாமரைப் பூப்போலும் பெரிய கை. தாள்முதல் - காலடியில். கண்ணும் வாயும், முகமும் கையும் தாமரை யொத்தலின், "தாமரைத்தடம்" என்றார். தாமரைக் குணத்தினாள் - தாமரை யென்னும் எண்ணாகிய குணம் உடையவள். தாமரைச் செங்கணான் - சீவகன். பரிவு - வருத்தம் ; "யான் போந்த பின்பு இருமுது குரவர் உற்றது என்னென்று தனக்கு உற்றுக் கிடந்த வருத்தத்தை இவன் வாய்க் கேட்டுத் தீர்ந்தான் என்க."

௪௪௮. என்னுறு . . . ஓராது; யான் தேவனால் கொண்டுபோகப்பட்ட நிலைமையை யறிந்தும் உண்மையென்று உணராமல். எரியுறு - நெருப்பில் இட்ட. கன்றிப் போயினீர் - வாடினீர். பொறியிலாதேன் - பிரியாதேயிருந்து இருமுது குரவர் முதலாயினார்க்குத் தொண்டு செய்யும் நல்வினையில்லாத யான். முன்னுற - தீவினை வந்து முன் நிற்றலால். இதனை - குணமாலையின் ஒருயிர்க்காகப் பல உயிருக்கும் தீங்கு வருகின்ற இதனை. ஒக்கல் - உறவினர். பின்னுறு பரிவு - பின்பு முடிய நுகரும் துன்பம். கவலல் - வருந்தாதே.

விருந்து செய்தாள். விருந்துண்டபின் இருவரும் தனித்த தோர் இடத்திலிருந்து, சீவகன் சுதஞ்சணனால் கொண்டு போகப்பட்டபின் இராசமாபுரத்து நிகழ்ந்தவற்றைப்பற்றிப் பேசலாயினர்.

"அண்ணலே, மதனன் வீரர் நின்னைச் சூழ்ந்து கொண்ட அளவில் வந்த பெருங் காற்று மழை யடங்க, பொழுதும் மறைந்தது. பதுமுகன், புத்திசேனன் முத லானோருடன் யாங்கள் அனைவரும் நகர்ப்புறத்தே கூடி னோம்; அக்காலை, பதுமுகன் உளங்கொதித்து 'இனிச் செய் வது கூறுமின்' என்னப் புத்திசேனன், 'யாம் சீவகனைக் காணோமாயின், கட்டியங்காரனைக் கொன்று, நகரத்தையும் அழித்துவிட்டுச் சீவகனையடைதல்வேண்டும்' என்றான். தேவதத்தன் எழுந்து, 'இக் கூறியது செய்தல் எளிது; சீவகன் உயிரோடிருப்பதும் இல்லாமையும் முதற்கண் அறி தல்வேண்டும்' என்றானாக, சீதத்தன் 'புத்திசேனன் சொல் லியவாறே செய்க' என்றான். பதுமுகன் என்னை நோக்கி, 'நீ இங்கேயிருந்து நம் குரவர்க்குக் கடன் செய்க; யாங்கள் இம் முயற்சிக்கண் செல்கின்றோம்' என்றான். யான் அதற் குடன்படேனாயினேன். அக்காலை, பருவமன்றென்று தலை வியை யாற்றுவித்துத் தூது செல்கின்ற பாணன் கூற்றாக அமைந்த பாட்டொன்றையொருவன் பாடயாங்கள் அனைவரும் நன்னிமித்தமாகக் கேட்டோம். அதன்பின் தேவதத்தன் கூறியவண்ணமே செய்யக் கருதி நாடெங்கும் தனித்தும் தொக்கும் நின்னைத் தேடிக் காணாது அலமந்தேம். யான் குண மாலை மனைக்குச் சென்றேன். அவள் எனக்கு விருந்து நல் கினபின், 'அடிகளை இன்றி நீரே உண்ணவும் வல்லீரானீர்; கடியிர் நீர்' என்று சொல்லிப் புலம்பினள். பின்பு தத்தை மனைக்குச் சென்றேன். அவள் பிரிவாற்றாமல் வருந்திப் பாடி யிருந்ததைப் பிறழக்கொண்டு கடிந்து கூறினேன். அற் றைப்போது மறையவே, அன்றிரவு தன் விஞ்சையால் என்னை இங்கே எய்துவித்தாள்" என்று கூறி முடித்தான். பின்பு சீவகன் தான் சுதஞ்சணனை நினைத்ததும், அவனோடு சென்றதும் முதலாகக் கனகமாலையை மணந்திருப்பதுவரை

நிகழ்ந்தவையனைத்தையும் ஒன்றுவிடாது நிரல்பட உரைத்தான். மேலும், சீவகன் "நாம் நம் குரவரை நெடுநாளாய்க் கண்டிலமே" எனக் கதறி வருந்த, நந்தட்டனும் சீவகன் பொருட்டு அழத் தொடங்கினான்.

### சீவகன் நந்தட்டனைத் தேற்றல்

"திண்பொருள் எய்த லாகும்
தெவ்வரைச் செகுக்க லாகும்,
நண்பொடு பெண்டிர் மக்கள்
யாவையும் நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா
உடன்பிறப்பு ஆக்க லாகா
எம்பியை ஈங்குப் பெற்றேன்
என்னெனக் கரியது?" என்றான். சசசு

இருவர்க்கும் இங்கே நாட்கள் பல கழிந்தன. இராசமாபுரத்தே சீவகனது தோழர் பெரிதும் உளம் வருந்தி, காந்தருவதத்தை வருத்தமுறாது இருத்தலையறிந்து அவள்பாலடைந்து, சீவகன் வேற்றுருக்கொண்டு கனகமாலையுடன் இருத்தலை அறிந்துகொண்டனர்.

### அவர்கள், அது கேட்டுச் சீவகனைத் தாம் காண்டல் கூடும் என்ற உவகையால், தத்தையை வணங்கிக் கூறல்

"ஐயனை யாமவண் எய்துவம்; ஆயிழை,
நொய்தின் உரைபொருள் உண்டெனின் நொய்து" என,
மையெழுத் தூசியின் மாண்டதோர் தோட்டிடைக்
கைவளர் கோதை கரந்தெழுத் திட்டாள். சருO

---

சசசு. திண் பொருள் - அழியாச்செல்வம். தெவ்வர் - பகைவர். ஒண் பொருளாவது உடன்பிறப்பு - ஒள்ளிய பொருளாவது உடன்பிறப்பு. ஆக்கலாகா - வேறே எவ்வாற்றானும் செய்து கொள்ளலாகாத அவ்வொண் பிறப்பாகிய.

சருO. நொய்தின் - கடிது சென்று கண்டவிடத்து. பொருள் உண்டெனின் நொய்து உரை - யாம் கூறத்தக்க பொருள் உண்டாயின் விரைவிற் கூறுக. என - என்று வேண்ட, மாண்டதோர் தோட்டிடை - அழகியதோர் ஓலையில். கைவளர் கோதை - கையால் புனைந்த மாலையையுடைய தத்தை. கரந்து - எழுத்துத் தெரிந்தாலும் பிறர் படித்தறியலாகாவண்ணம்.

### அதன்மேல் அவன் தன் பொறி யொற்றித் தர, அவர்கள் பெற்று ஏகுதல்

ஆங்குருக் காரரக் கிட்டுஅதன் மீமிசைப்
பூங்குழை யாற்பொறி யொற்றுபு நீட்டத்
தேங்குழ லாள்தொழு தாள்திசை ; செல்கெனப்
பாங்கர்அங் குப்படர் குற்றன ரன்றே. சருக

### சீவகன் தாய் விசயமாதேவி தவம் பூண்டிருந்த பொழிலின் சிறப்பு

வண்டுதுயில் கொண்டுகுயி லாலிமயி லகவி
விண்டுமது விட்டுவிரி போதுபல பொதுளிக்
கொண்டுதளிர் வேய்ந்துசினை தாழ்ந்துநனை யார்ந்தொன்று
உண்டுபொழில் இமையவர்க ளுலகமுறு வதுவே. சருஉ

### அப்பொழிலிடத்தே தங்கிய (சீவகன்) தோழர்கள் விசயையைக் காண்டல்

ஐயருறை பள்ளியிடம் ஆண்டுஅழகர் காணச்
செய்கழலர் தாரரவர் எங்கும்திரி கின்றார் ;
கொய்தகைய பூம்பொதும்பர்க் குளிருமரப் பலகைச்
செய்யவளிற் சிறிதுமிகை சேயவளைக் கண்டார். சருங

---

சருக. ஆங்கு - அவ்வோலையில். உருக்கு ஆர் அரக்கு - உருக்கிய அரக்கு. பொறி ஒற்றுபு நீட்ட - குறி (முத்திரை) யிட்டுக் கொடுக்க. திசை தொழுதாள் - அவன் இருக்கும் திசை நோக்கித் தொழுது. செல்க என - இத்திசையே நோக்கிச் செல்க என்று ஏவ. பாங்கர் - தோழன்மார். படர்குற்றனர் - செல்லலுற்றனர்.

சருஉ. துயில்கொண்டு - உறங்க. ஆலி - கூவ. அகவி - அகவ. விண்டு - சொரிய. விட்டு விரிபோது - முறுக்குவிட்டு மலர்ந்த பூக்கள். பொதுளி - செறிந்து. தளிர்வேய்ந்து - தளிர்களைப் பரப்பி. நனை - அரும்பு. உலகம் உறுவது - உலகத்தை யொப்பது. இடத்து நிகழ்பொருளின்வினை இடத்தின் மேலும், சினைவினை முதன்மேலும் நின்றன.

சருங. ஐயர் - தாபதர் ; இருடிகள். இடம் காண. அழகராகிய சீவகன் தோழன்மார் கழலும் தாரும் உடையராய் எங்கும் திரிகின்றனர் என்க. கொய்தகை - கொய்யப்படும் அழகு. பொதும்பர் - சோலை. குளிரும் - இருக்கும் ; திசைச்சொல். செய்யவளின் சிறிது மிகை - திருமகளினும் சிறிது மேம்பட்டவளான. சேயவள் - விசயை.

### விசயையின் நோன்புச் சிறப்பு

மாசொடு மிடைந்துமணி நூற்றனைய வைம்பால்
பூசுதலு மின்றிப்பிணி கொண்டுபுறந் தாழ
வாசமலர் மறைந்தவழி வாமனடிக் கேற்றித்
தோசமறத் துதிகள்மனத் தோதித்தொழு திருந்தாள். ௬௫௪

### அவளைக் கண்ட தோழர்கள், இன்னாரென அறியாது திகைத்தல்

வரையுடுத்த பள்ளியிட மாகஅதில் மேயோள்
விரையுடுத்த போதுறையும் வேல்நெடுங்க ணாள்கொல்?
உரையுடுத்த நாவுரையும் ஒண்ணுதல்கொல்? அன்றித்
திரையுடுத்த தேமொழிகொல்? என்றுதெரி கல்லார்.

### விசயையை அன்னாரி வினவுதல்

"மங்கல மடிந்ததிரு மாமகளை யொப்பீர்!
இங்குவர வென்னை? குலம் யாது? அடிகட்கு?" என்ன
"எங்குலமும் எவ்வரவும் வேண்டில்எளி தன்றே;
நுங்குலமும் நும்வரவும் நீர்உரைமின்" என்றாள். ௬௫௬

அவளுக்குத் தேவதத்தன், தம் வரலாறு கூறத் தொடங்கித் தாம் ஏமாங்கத நாட்டு இராசமாபுரத்தவர் என்று மொழிந்து பின்பு, "இவன் சீதத்தன், சாகரன் என்னும் அமைச்சன் மகன்; சச்சந்த வேந்தனது அந்தணனாகிய அசலன் மகன் இப் புத்திசேனன்; இவன், அரசனுக்குரிய

௬௫௪. மாசு - புழுதி. மணி நூற்றனைய ஐம்பால் - நீலமணியைக் கம்பியாக்கினாற்போன்ற தலைமயிர். பூசுதல் - கழுவுதல். பிணி கொண்டு - சிக்குற்றுச் சடையாகி வாசமலர் அடிக்கேற்றி, தோசமற, மறைந்த துதிகள் மனத்தே ஓதித் தொழுது இருந்தாள் என்க. வாமன் - அருகன். வழி - நன்னெறி. தோசம் - குற்றம்; சிதைவு. அவள் கருத்து சீவகன் வாழ்வே கருதலின் "மறைந்த" என்றார்.

௬௫௫. உடுத்த - அருகேயுள்ள. மேயோள் - இருந்தவள். விரை - மணம். போது - தாமரைப் பூ. உரை - உரைத்தல். ஒண்ணுதல் - கலைமகள். திரை - கடல். தேமொழி - மண்மகள்.

௬௫௬. மடிந்த - கெட்ட. என்ன - என்று தோழன்மார் வினவ. எளிதன்றே - கூறல் எளிதாயினும் இவ்வேடத்தோடு கூறல் ஆகாது. என்றாள் - என்று விசயை கேட்டாள்.

செட்டியாகிய தனபாலன் மகனான பதுமுகன்; சச்சந்தனால் சிறப்புப் பட்டம் பெற்று அவற்கு ஒரு கவசமாக இருந்த விசயதத்தன் மகனான தேவதத்தன் யான்" என்று சொல்லி முடித்தான்.

## இவர்கள் சீவகற்குத் தோழரானமை கூறல்

எங்கள்வினை யால்இறைவன் வீடியவஞ் ஞான்றே
எங்களுயிர் நம்பியொடு யாங்கள்பிறந் தேமா
எங்கள்தமர், "நம்பிக்கிவர் தோழர்" என ஈந்தார்;
எங்கெழில்என் ஞாயிறென இன்னணம் வளர்ந்தேம். சஞஎ

இவ்வாறு கூறியவர், கந்துக்கடன் மக்களான நந்தட்டன், நபுலவிபுலர்களையும் கூறி உடன்வந்து, கல்வியும் படைக்கலமும் பயின்று தேர்ந்தமை தெரியச் சொல்லி முடிவில் சீவகற்கு நேர்ந்ததும், தாங்கள் வந்த வரலாறும் சொல்லத் தொடங்கினர். சொல்லுகையில், "சீவகனை ஒரு நாள் கட்டியங்காரன் கொல்லற்கெனத் தன் வீரரை யேவி அவனைப் பற்றிக் கொண்டு செல்ல" என்று கூறி முடிப்பதற்குள் விசயை "ஆ" எனக் கதறி வீழ்ந்து அறிவு சோர்ந்தாள். சீதத்தன் முதலியோர் திகைத்து ஒன்றும் அறியாராய் அவளை ஒருவாறு தேற்றினர். ஆனால், அவர் மனத்தே அவளொரு அருள் மிக்கவள் என்றே கொண்டனர்.

## விசயை புலம்புதல்

"கைம்மான் கடற்படையுள் காவலனை யாண்டொழியப்
பொய்ம்மா மயிலூர்ந்து போகிப் புறங்காட்டுள்
விம்மாந்தி யான்வீழ வீழ்ந்தேன் துணையாகி
எம்மானே தோன்றினாய், என்னை யொளித்தியோ! சஞஅ

---

சஞஎ. இறைவன் - சச்சந்தன். வீடிய - இறந்த. உயிர் நம்பி - உயிர்போன்ற நம்பியாகிய சீவகன். பிறந்தேமா - பிறந்தேமாக. எங்கு எழில் என் ஞாயிறு என - ஒரு குறையும் கவலையுமின்றி.

சஞஅ. கைம்மான் கடற்படை-அணிவகுப்பால் மாட்சிமைப்பட்ட கடல்போலும் படை. காவலனை - ஐ, அசை. ஒழிய - இறந்து படவே. பொய்ம்மயில் - மயிலாகிய எந்திரம். விம்மாந்து - பொருமி. துணையாகித் தோன்றினாய் என்க. என்னை - யான் காணுதவாறு.

"முன்னொருகால் என்மகனைக்
கண்டேன்என் கண்குளிரப்
பின்னொருகால் காணப்
பிழைத்ததென்? தேவிர்காள்!
என்னெப்பார் பெண்மகளிர்
இவ்வுலகில் தோன்றற்க என்று
அன்னப் பெடைநடையாள்
ஆய்மயில்போல் வீழ்ந்தனளே. ௬௫௯

இவள் அழுகையால், தாம் சீவகன் வரலாறு அறிந்து கொண்டதேயன்றி அவனது தாயையும் காணப்பெற்ற பேறு குறித்து, அவர்கள் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொண்டு, அவளையும் இனிது தேற்றி, சீவகன் தேவனால் காக்கப்பட்டதை விளங்கக் கூறி மகிழ்வித்தனர்.

## அவர்கள் மேலும் கூறுதல்

"பூவுடைத் தெரியலான் போர்வை நீத்துஇனிக்
கோவுடைப் பெருமக னுதல் கொண்டனம்;
சேவடி சேர்ந்தனம் தொழுது சென்றுஎன
மாவடு நோக்கியுள் மகிழ்ந்திது சொல்லுவாள். ௬௬0

## விசயை சொல்லுதல்

தரணி காவலன் சச்சந்த னென்பவன்
பரணி நாட்பிறந் தான்;பகை யாவையும்
அரணி லான்,என்கண் தங்கிய அன்பினால்;
இரணி யன்பட்ட தெம்மிறை யெய்தினன். ௬௬௧

---

௬௫௯. கண்குளிரக் கண்டேன் - கண்குளிர்ப்பெய்தக் கண்ட யான். காணப்பிழைத்ததென் - காணுதபடி செய்த தீவினை யாது? நடையால் அன்னப்பெடை யொப்பவள் வருந்தின மயில்போல வீழ்ந்தாள் என்க. ஆய் - வருந்தின.

௬௬0. தெரியலான் - மாலையையுடைய சீவகன். போர்வை - வணிகனென்று தன்னை மறைத்த போர்வை. கோவுடைப் பெருமகன் - அரசுரிமையுடைய சச்சந்தன் மகன். தொழுது சென்று - தொழுது செல்வதற்கு. நோக்கி - கண்களையுடைய விசயை.

௬௬௧. சச்சந்தனென்பவன் பரணி நாளிலே பிறந்தவன். அன்பினால் அரணிலான் - அன்பினால் தன்னைக் காவானாய். இரணியன் பட்டது- இரணியன், இடிக்கும் துணையாராகிய சான்றோர் அமைச்சர் முதலாயினோர் கூறிய அறிவுரைகளை ஏலாது கெட்டது.

விசயை யென்றுல கோடிய வீறிலேன் ;
பசையி னுல்துஞ்சி யான்பட்ட தீதெலாம் ;
இசைய நம்பிக் கெடுத்துரைத் தென்னுழை
அசைவின் றையனைத் தம்மின் எனச்சொனாள். சசஉ

## இச் செய்தியைச் சீவகற் கன்றிப் பிறர் எவர்க்கும் உரையன்மின் என அவள் விளம்புதல்

கோதை வேல்நம்பிக் கல்லதை யிப்பொருள்
யாதும் கூறன்மின் ; யாரையும் தேறன்மின் ;
ஏதம் இன்னன இன்னனம் எய்தலால்
பேதை யாரொடும் பெண்ணொடும் பேசன்மின். சசங

## அவர்கள் விசயைபால் விடைபெற்றுப் போதல்

"வணக்கருஞ் சிலையி னானை
யொருமதி யெல்லை நாளுள்
குணத்தொடு மலிந்த பாதம்
குறுகயாம் கொணர்ந்த பின்றைப்
பணித்ததே செய்து பற்றார்
பகைமுதல் அடர்த்தும் என்றார் ;
மணிக்கொடி மாசுண் டன்னாள்
"மற்றதே துணிமின்" என்றாள். சசச

பின்பு, அவர்கள் விசயை இட்ட விருந்துண்டு, குன்றும் காடும் மிடைந்த நாடுகளைக் கடந்து சீவகன் இருந்த மத்திம தேசத்துக் கேமமாபுரத்துப் புறத்தேயிருந்த இனியதொரு பொழிலில் தங்கிச் சீவகன் உண்மையை அறிதற்குரிய நெறியை நாடலாயினர். மூன்று ஒற்றர்களை நகர்க்குள்

---

சசஉ. வீறு - நல்வினை, ஓடிய - பரந்த, பசையினுல் - பற்றினுல். யான் பட்டது ஈதெலாம் - யான் உற்ற தீங்கெல்லாம். அசைவின்று - வருந்தாதபடி. தம்மின் - அழைத்து வருக.

சசங. தேறன்மின் - தெளியாதீர். இன்னன - யான் பிறப்புணர்த்திய இதனை. இன்னனம் - தன் வினைவின்றி அரற்றியபோது கூறிய அதனை. பேதையார் - அறிவிலாதார்.

சசச. குணத்தொடு மலிந்த பாதம் - குணம் பலவும் நிறைந்த திருவடி. பணித்தது - தாங்கள் அருளிச்செய்யும் செய்கை, முதல் அடர்த்தும் - முற்பட அழிப்பேம். மாசுண் டன்னாள் - மாசு படிந்தாற்போன்ற விசயை. பற்றார் பகை - அடிப்பட்ட பகை, கட்டியங்காரன்.

விடுத்துச் செய்தியறிந்துவர விட்டனர். ஒற்றர் சென்றபின் பதுமுகன் எழுந்து, "முதற்கண் இந் நகரத்துக் கோவலருடைய ஆனிரையை நாம் கவர்வோம்; போர் தொடரும்; அதன்கண் சீவகனைக் காண்டல் கூடும்" என்றான். அது கேட்ட புத்திசேனன், "சீவகன் இல்லையேல், இச் செயல் குற்றமில்லாத பலர் உயிர்க்குக் கேடாய் முடியும்; இதனை ஆராய்ந்து செய்ம்மின்" என்று உரைத்தான். அப்போழ்து ஒற்றர் போந்து, சீவகன் அந் நகரிடத்தே வளையசுந்தரம் என்னும் யானையொன்றை அடக்கிய செய்தியைக் கூறலுற்றனர்.

## வளையசுந்தரம் என்னும் யானை மதம் படுதல்

வளையசுந் தரமெனும் வாரணம், மால்வரை
முளையிளந் திங்கள்போல் முத்துடைக் கோட்டது;
கிளையிளம் பிடிகள்ஐந் நூற்றிடை கேழரக்கு
அளையவஞ் சனவரை யனையதுஅக் களிற்றரோ. ௪௬௫

கடுமதக் களிப்பினால் காரென முழங்கலின்
விடுகலார் பாகரும், வெருவரக் கொன்றிடப்
பிடியொடுங் கந்தணை யின்றிநீர் உருள்பிளந்து
அடுகளி றந்தப்போ திகைபரிந் தழன்றதே. ௪௬௬

## யானையைச் சீவகன் அடக்குதல்

கண்ணுமிழ் தீயினால் சுடநிறங் கரிந்தபோல்
பண்ணுமிழ் வண்டுலாய்ப் பரத்தரா நின்றசீர்
அண்ணலங் களிற்றினை யடக்கினான் சீவகன்
வண்ணமே கலையினார் மனமெனப் படிந்ததே. ௪௬௭

---

௪௬௫. வாரணம் - யானை. முளையிளந் திங்கள் - பிறைத் திங்கள். கேழ் அரக்கு அளைய - செவ்வரக்குப் பூசிய. அஞ்சனவரையனையது - அஞ்சனமலை போன்றது.

௪௬௬. கடுமதக் களிப்பினால் - மதம் மிகுந்தெழுந்த மயக்கத்தால். விடுகலார் - விடாராய். பிடியொடும் கந்து அணைவின்றி - பிடியும் தூணும் நெருங்காது. நீருருள் - வட்டமாகப் பண்ணித் தண்ணீர் ஏற்றி யுருட்டுவதொன்று. அந்தப் போதிகை - பின்னங்கால் சங்கிலி. பரிந்து - அறுத்து.

௪௬௭. கரிந்த போல் - நிறம் கரிதாயது போல். பண்ணுமிழ்வண்டு - பண்பாடும் வண்டு. உலாய் - உலாவ. பரத்தராநின்ற சீர் - பரந்த சிறையுடைய. மனமென - மனம் தாழ்ந்து படிவது போல.

அது கண்ட அரசன் பெரு மகிழ்ச்சியுடன் சீவகனை வரவேற்க, சீவகன் தன் தம்பியான நந்தட்டனுடன் அரசன் கோயிலையடைந்தான். பின்பு அரசன் மொழிந்த அன்பு மொழிகளை ஏற்றுத் தங்கட்கென வகுக்கப்பெற்றிருந்த மனையை இருவரும் அடைந்தனர்.

### சீவகன் மனையடைந்ததை ஒற்றர் கூறல்

பிண்டமுண் ணும்பெருங் களிறுபூட் டிய்யவண்
வண்டரும் மோவரும் பாடமா நகர்தொழக்
கொண்டதன் தம்பியும் தானும்கோ யில்புகக்
கண்டனம் கண்ணினே யென்றுகண் டவர்சொனர். ௪௯௮

சீவகன் இருப்பதையுணர்ந்த அவன் தோழர் நிரைகோடல் குறித்து எழுந்தனர். கோவலரும் தம் ஆனிரைகளைக் காத்தற்கு வேண்டுவனவற்றைச் செய்யலுற்றனர். ஒரு பூசல் நிகழ்ந்தது. கோவலர் தம் ஆனிரையைக் காக்க மாட்டாராய் அரசற்குத் தெரிவிக்க ஓடினர். அப்போழ்து, அரசனாகிய நரபதி, நந்தட்டனை யழைத்து, அவனுடைய நாடு முதலியவற்றைக் கேட்டிருந்தான்.

### நரபதி நந்தட்டனை வினாதல்

தேர்த்தொகைத் தானை மன்னன்
சீவகற் கிளைய நம்பி
வார்த்தொகை முழவம் விம்ம
மல்லுறழ் தோளி னானை,
நீர்த்தொகைக் கழனி நாடு
நெடுநகர்ப் பெயரும் நுங்கள்
சீர்த்தொகைக் குலனு மெல்லாம்
தெரிந்தெமக் குரைமோ என்றான். ௪௯௯

௪௯௮. பிண்டம் - கவளம். பெருங்களிறு எனவே, பட்டத்துயானையென்பது பெற்றும். பூட்டி - கம்பத்தில் சேர்த்துக் கட்டி. வண்டர் - கடிகையார். ஓவர் - ஏத்தாளிகள். கொண்ட - தனக்கென வகுக்கப்பட்ட, கொண்ட கோயில் என்க. கண்டவர் - ஒற்றுக் கண்டவர், கண்ணினே - கண்ணாலே.

௪௯௯. தேர்த்தொகைத் தானை - எண்ணிறந்த தேர்முதல் படைபலவும் தொக்க தானை. வார்த்தொகை முழவம் - வார்க்கட்டமைந்த முழவு. மல் உறழ் தோள் - மற்போரில் மேம்படும் தோள். தெரிந்து - தெரிய.

அவன் நரபதிக்குத் தன் ஏமாங்கத நாட்டையும், இராசமாபுரத்தையும் கூறித் தன் குல முறை கூறத் தொடங்குகையில், ஆனிரையிழந்த கோவலர், நிகழ்ந்தது முற்றும் அரசற்கு உரைத்தனர்.

## நரபதி நிரை மீட்கவென ஆணையிடல்

நாற்கடல் பரப்பும் வந்து
நன்னகர்க் கண்ணுற் றென்ன
வேற்கடல் தானை பாய்மா
விளங்கொளி யிவுளித் திண்டேர்
கூற்றென முழங்கு மோடைக்
குஞ்சரக் குழாத்தோ டேகிப்
பாற்கடல் பரப்பின் வல்லே
படுநிரை பெயர்க்க வென்றான். ௪௭0

## நந்தட்டனுடன் தேரேறிய சீவகன் வஞ்சினம் கூறல்

மன்னவன் நிரைகொண் டாரை
வளநகர்த் தந்து மன்னன்
பொன்னவிர் கழலில் தங்கள்
புனைமுடி யிடுவி யேனேல்
இன்னிசை யுலகந் தன்னுள்
என்பெயர் சேற லின்றாய்க்
கன்னிய மகளிர் நெஞ்சிற்
காமம்போல் கரக்க என்றான். ௪௭௧

---

௪௭0. கண்ணுற்றென்ன - கூடின என்னும்படி. பாய்மா - குதிரை. இவுளித் திண்டேர் - குதிரை பூட்டிய வலிய தேர். ஓடைக் குஞ்சரம் - பட்டம் அணிந்த யானை. பாற்கடல்......படுநிரை - பாற்கடல் பரப்புப் போலப் பாலுண்டான மிக்க ஆனிரை.

௪௭௧. நிரைகொண்டாரை - நிரைகவர்ந்த பகைவரை. தந்து - கொண்டு வந்து. இன்னிசை யுலகம் - இனிய புகழ் நிலைபெறுதற்கு இடமாகிய. சேறலின்றாய் - நிலைபெறாமல். கன்னிய மகளிர் - கன்னியராகிய மகளிர். கரக்க - மறைக.

## இப்பால், நிரை கவர்ந்து கொண்டாருள் பதுமுகன் சிலை யெடுத்தல்

பார்மலி பரவைத் தானைப்
  பரப்பிடைப் பறப்ப தேபோல்
நீர்மலி கடாத்த கொண்மூ
  நெற்றிமேல் மின்னின் நொய்தாத்
தார்மலி மார்பன் திண்டேர்
  தோன்றலும் தறுகண் மைந்தன்
சீர்மலி பகழி யேந்திப்
  பதுமுகன் சிலைதொட் டானே. ௭உ

## பதுமுகன் தங்கள் வரவு குறிக்கும் குறிப்பெழுதிய ஓலை விடுத்தல்

"குடைநிழற் கொற்ற வேந்தன்
  ஒருமகற் காணக் குன்று
அடிநிழ லுறைய வந்தேம்;
  அடியம்யாம்" என்ன எய்த
விடுகணை சென்று தேர்மேல்
  பின்முறு வீழ்த லோடும்
தொடுகழல் குரிசில் நோக்கித்
  தூத்துகில் வீசி னானே. ௭௩

போர் நின்றது. சீவகன் பதுமுகன் முதலிய தன் தோழர் பலரையும் கண்டு பெருமகிழ்வு கொண்டு அவரவர் தகுதிக்கேற்பச் சிறப்புச் செய்தான். தோழரும் சீவகனைக் காணாமையால் கொண்டிருந்த அவல நோய் தீர்ந்தனர்.

---

௭உ. பார்மலி பரவைத் தானை-நிலத்திலே நிறைந்து பரந்த தானை. நீர்மலி...தோன்றலும் - கடல்போல் நிறைந்த மதத்தையுடைய மேகத்தின் தலையில் தோன்றுவதொரு மின்னினும் கடிதாகத் தேர் தோன்றிற்று. மேகம் - யானை. பகழி - அம்பு. தொட்டான் - எடுத்தான்.

௭௩. கொற்ற வேந்தன் - சச்சந்தன். ஒருமகற் காண - ஒப்பற்ற மகனாகிய நின்னைக் காணவே. எய்த விடுகணை - எழுதி விடுத்த ஓலை சென்று சீவகனை எய்துமாறு விட்ட அம்பு. பின்முறு - மாறுக. தூத்துகில் வீசினான் - போரை நிறுத்தவேண்டி வெள்ளிய துகிற்கொடியை வீசிப் படையைப் போர் செய்யாதவாறு விலக்கினான்.

### சீவகன் தன் தோழருடன் நரபதியூர்க்குச் செல்லுதல்

கழலவாய்க் கிடந்த நோன்றாட்
காளைதன் காத லாரை
நிழலவா யிறைஞ்சி நீங்கா
நெடுங்களிற் றெருத்த மேற்றி
அழலவாய்க் கிடந்த வைவேல்
அரசிளங் குமரர் சூழக்
குழலவாய்க் கிடந்த கோதை
தாதையூர் கொண்டு புக்கான். ௪௭௪

### சீவகனுடன் அரசன் கோயிலை யடைந்த அவன் தோழர் அரசன் முன் சென்று பணிதல்

வல்லான் புனைந்த வயிரக்குழை
வார்ந்து வான்பொன்
பல்லூ ணெருத்தின் பரந்தஞ்சுடர்
கால மன்னன்
மல்லார் திரடோள் மருமான்முக
நோக்க, "மைந்தர்
எல்லாம் அடிகள்! எனக்கின்னுயிர்த்
தோழ" ரென்றான். ௪௭௫

### பின்பு, அரசன் பணித்தவாறு தோழர்கள் கனகமாலையை வணங்குதல்

தழுமுற்றும் வாராத் திரள்தாமங்கள்
தாழ்ந்த கோயில்
முழுமுற்றும் தானே விளக்காய் மணிக்
கொம்பின் நின்றாள்

---

௪௭௪. கழல் அவாய்க் கிடந்த நோன்றாள் காளை - கழல் பொருந்திக் கிடந்த வலிய தாளையுடைய சீவகன். நிழல் அவாய் இறைஞ்சி - தன் நிழலைப் பகையென்று அவாவித் தாழ்ந்து. அழல் அவாய்க் கிடந்த வைவேல் - கொல்லன் உலையை விரும்பின வேல். குழலவாய்க் கிடந்த கோதை - மொழியை வங்கியமென்னும் இசைக்கருவி விரும்பிக் கிடத்தற்குக் காரணமான கனகமாலை. தாதை - நரபதி.

௪௭௫. வார்ந்து - விளங்க. வான் பொன் பூண் பரந்து சுடர்கால என்க. சுடர்கால - ஒளி திகழ. முகம் நோக்க - இவர் யார் என்னும் குறிப்புப்படப் பார்க்க. மைந்தர் எல்லாம் - இவ் வீரர் எல்லாரும்,

எழுமுற்றும் தோளார் தொழுதார்;
இன்ன ரென்று நோக்கக்
கழுமிற்றுக் காதல் கதிர்வெள்வளைத்
தோளி னுட்கே. ௪௭௬

### கனகமாலை அவர்கட்கு விருந்து செய்தல்

துறக்கம் இதுவே யெனும்தொன்னகர்
மன்னன் மங்கை
"தொறுக் கொண்ட கள்வர்
இவரோ?"எனச் சொல்விநக்காங்கு
"ஒறுக்கப் படுவார் இவர்"என்று
அசதி யாடி
வெறுக்கைக் கிழவன் மகளென்ன
விருந்து செய்தாள். ௪௭௭

பின்பு, சீவகன் தனித்திருப்பது கண்டு புத்திசேனன் தான் காந்தருவதத்தை கொடுப்பக் கொணர்ந்த ஓலையைத் தந்தான். அதனைச் சீவகன் வாங்கிப் படித்தான்.

### காந்தருவதத்தையின் ஓலை

மற்றடிகள் கண்டருளிச் செய்க,மல ரடிக்கீழ்ச்
சிற்றடிச்சி, தத்தை,யடி வீழ்ச்சி,திரு வடிகட்கு
உற்றடிசில் மஞ்சனத்தை யுள்ளுறுத்த காப்பும்
பொற்புடைய வாகவெனப் போற்றியடி வீழ்ந்தேன். ௪௭௮

---

௪௭௬. முற்றும் தழுவாரா - முற்றவும் தழுவவொண்ணாத. தாமம் - மாலை. தாழ்ந்த - தொங்கவிடப்பட்ட. முழு முற்றும் - முழுதும் முற்றும்; ஒருபொருட் பன்மொழி. இனி, முழுதும் தானே விளக்காய், முற்று மணிக் கொம்புபோல என இயைப்பினுமாம். எழுமுற்றும் - தூண்போலும். கனகமாலை நோக்க, இன்னரென்று சீவகன் குறிக்க, காதல் கழுமிற்று என்க. கழுமிற்று - நிறைந்தது.

௪௭௭. மங்கை - மகளாகிய கனகமாலை. தொறு - ஆனிரை. ஆங்கு - அப்பொழுது. அசதியாடி - நகையாடி. வெறுக்கைக் கிழவன் - அளகைக்கோன் (குபேரன்). என்ன - போல.

௪௭௮. சிற்றடிச்சி - சிறியளாகிய அடியேன். அடிவீழ்ச்சி - அடியிலே வீழ்பவள். உள்ளுறுத்த காப்பு - உள்ளிட்ட ஏனைக் காப்புக்களும். நுகருவனவற்றைக் காப்பு என்றல் மரபு. கண்டருளிச் செய்க - நெஞ்சாலே கண்டருளுக.

வெள்ளி மலையிலிருந்து கலுழவேகன் மணிக்கலன், கற்பக மாலை, எலிமயிர்ப் போர்வை முதலியவற்றைத் தான்பால் வரவிட்டான். அவனுக்கு, "ஏழு திங்கட்குமுன் அடிகள், ஏமமாபுரத்தே அகன்றாய்" என்று கூறினேன். மேலும்,—

பட்டபழி வெள்ளிமலை மேற்பரத்த லஞ்சித்
தொட்டுவிடுத் தேனவனைத் தூதுபிற சொல்லிப்
பட்டபழி காத்துப்புக ழேபரப்பி னல்லால்
விட்டலர்ந்த கோதையவ ரால்விளைவ துண்டோ. ௪எ௯

## குணமாலை திறம் கூறல்

அல்லதுவும் எங்கைகுண மாலையவ ளாற்றாள்
செல்லுமதி நோக்கிப்பக லேசிறியை யென்னும்
பல்கதிரை நோக்கிமதி யேபெரியை யென்னும்
எல்லியிது காலையிது என்பதறி கல்லாள். ௪அ0

நாளைவரு நையலென நன்றெனவி ரும்பி
நாளையெனு நாளணிமைத் தோபெரிதும் செய்த்தோ
நாளையுரை யென்றுகிளி யோடுநகச் சொல்லும்
நாளினும்இந் நங்கைதுயர் நாளினுமற் றிதுவே. ௪அ௧

## காந்தருவதத்தை தன் திறம் கூறல்

நோக்கவே தளிர்த்து நோக்கா
திமைப்பினும் நுணுகு நல்லார்

௪எ௯. பட்ட பழி - கட்டியங்காரன் சிறை செய்தான் என்று பிறந்த பழி. பரத்தல் - வெள்ளிமலையில் பரவுவதற்கு. தொட்டுவிடுத்தேன் - எவர் பாலும் சொல்லாதபடி சூளுறவு பெற்றுக்கொண்டு விட்டேன். அவன் - தான். பழிகாத்து - பழியை மறைத்து. விட்டலர்ந்த - முறுக்கவிழ்ந்து மலர்ந்த. கோதையவரால் - மகளிரை மணந்துகொண்டு போதலால். விளைவது - விளையக்கூடியதொரு புகழ்.

௪அ0. அல்லதுவும் - அன்றியும். ஆற்றாள் - பின்னும் ஒரு பழி விளைப்பாள் போல ஆற்றாளாயினள், திங்களை ஞாயிறென்றும், ஞாயிற்றைத் திங்களென்றும், பகலிது இரவிது என்றறியாமலும் திகைக்கின்றாள் என்பது.

௪அ௧. வரும் - சீவகன் வருவன். என - என்று கிளி சொல்ல. கிளியோடு நகச் சொல்லும் - கிளிகேட்டு நகுமாறு வினவுகின்றாள். நாளினும் - நாடோறும்.

பூக்கம ழுமனிச் சேக்கும்
புதுமண வாள ஞர்தாம்
நீப்பிலார் நெஞ்சி னுள்ளார் ;
ஆதலால் நினைத்தல் செய்யேன் ;
போக்குவல் பொழுதும் தாம்தம்
பொன்னடி போற்றி யென்ருள். ௪௮௨

இவ் வோலையைப் படித்து மகிழ்ச்சி மிக்கவனுய்ச் சீவகன் போந்து தோழரொடு கூடினவளவில், அவன் தோழர்களை நோக்கி, "என் திறத்தை எங்கே கேள்வியுற்றீர்?" என்று கேட்டான்.

### தோழர்கள் தாம் விசயையைக் கண்ட செய்தி கூறல்

எங்கோமற் றென்திறம்நீர் கேட்ட
தென்ருற் கெரிமணிப்பூட்
செங்கோன் மணிநெடுந்தேர்ச் செல்வன்
காதற் பெருந்தேவி
தங்காத் தவவுருவம் தாங்கித்
தண்டா ரணியத்துள்
அங்காத் திருந்தாளைத் தலைப்பட்டு,
ஐய ! அறிந்தோமே. ௪௮௩

### சீவகன் அது கேட்டுக் கண்ணீர் சிந்தி மனம் வருந்தி மேலும் கூறல்

அஃதேயெம் மடிகளும் உளரோ
என்ருற் கருளுமாறு

௪௮௨. நோக்காது இமைப்பினும் - பார்க்காதே கண்ணை இமைத்தாலும்- நுணுகும் - மெலிகின்ற. புதுமணவாளனுர் - நாளும் புது மணம் புணரும் காதலர். நீப்பிலர் - நீங்குதலின்றி. நெஞ்சின் - நெஞ்சிடத்தே. தாம் தாம் பொன்னடி போற்றி - தாம் தம்மைப் பாதுகாப்பாராக.

௪௮௩. என்ருற்கு - என்று வினவிய சீவகற்கு. செங்கோலும் நெடுந்தேருமுடைய செல்வனுகிய சச்சந்தன் தேவி யென்க. தங்காத் தவ வுருவம் - தனக்கு ஏலாத தவவடிவம். அங்கு ஆத்து இருந்தாளை - ஆசையால் பிணிக்கப்பட்டுத் துறவிகள் உறையும் அவ்விடத்தே இருந்த அவளை. இனி, தண்டாரணியத்து உளம் காத்து இருந்தாளை என்றும் கூறுப. உளம் - உயிர்; "அறிவிக்க அன்றி அறியா உளங்கள்" என்ருற் போல.

இஃதா இருந்தவா றென்று ற்
கென்னைப் பெறவல்லார்க்கு
எய்தா இடருளவே ; எங்கெங்
கென்றத் திசைநோக்கி
வெய்தா அடிதொழுது வேந்தன்
கோயிற் கெழுந்தானே. ௪அ௪

அரசன் நந்தட்டனால் சீவகனுடைய நாடும் ஊரும் அறிந்து தோழரால் குலமும் பிறவும் அறிந்து இன்புறச், சீவகன் தன் தாயைக் காணவேண்டியிருத்தலைக் கூறி விடை பெற்றுச் சென்று கனகமாலையைக் கண்டான். அவளும் அவனைப் பிரிய ஆற்றாது வருந்த அவட்குத் தகுவன கூறித் தேற்றிவிட்டுப் புறப்பட்டான்.

## கனகமாலையார் இலம்பகம்

*முற்றும்*

---

௪அ௪. என்றற்கு - என்று வினவிய சீவகனுக்கு. அருளுமாறுஇஃதா இருந்தவாறு - நல்வினையாகிய தெய்வம் நமக்கு அருளும் நெறி இருந்த வாறு இத் தன்மைத்து என எய்தா இடர் உளவே - அடையாத துன்பம் வேறே இல்லை. வெய்தா - விரைவாக.

# ௮. விமலையார் இலம்பகம்

[சீவகன் தண்டாரணியஞ் சென்று விசயையைக் கண்டதும், இராசமாபுரஞ் சென்று விமலையை மணந்ததுங் கூறுகின்றது.]

கனகமாலையை நீங்கித் தண்டாரணியத்தை நோக்கிப் புறப்பட்ட சீவகன் சீரியதொரு குதிரையேறிச் செல்ல, அவன் தம்பியாகிய நந்தட்டனும், பதுமுகன் முதலிய தோழர்களும் தாம்தாம் ஒவ்வோர் ஊர்தியில் சென்றனர். அப்போழ்து, நந்தட்டன் பதுமுகனைச் சீவகனுக்கு மெய்காவலனாயிருந்து பாதுகாக்கவேண்டிச் சில கூறலுற்றான்.

### சீவகன் வரலாறு வெளியாய் விட்டமையின், அவனைப் பாதுகாக்கும் செயலின் சிறப்புரைத்தல்

விழுமணி மாசு மூழ்கிக்
கிடந்ததிவ் வுலகம் விற்பக்
கழுவினீர் ; பொதிந்து சிக்கக்
கதிரொளி மறையக் காப்பின்
தழுவினீர் உலக மெல்லாம் ;
தாமரை யுறையும் செய்யாள்
வழுவினார் தம்மைப் புல்லாள் ;
வாழ்கநும் கண்ணி மாதோ. ௪௮௫

### பகைவரைத் தெளியும் அருமை கூறல்

தொழுததம் கையி னுள்ளும்
துறுமுடி யகத்தும் சோர
அழுதகண் ணீரி னுள்ளும்
அணிகலத் தகத்து மாய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும்
படையுட னொடுங்கும் பற்றாது

---

௪௮௫. மணிமாசு மூழ்கி உலகம் விற்பக் கிடந்தது கழுவினீர் - உலகை விலையாகப் பெறுவதொரு பெருமணி மாசுபடிந்து கிடந்தது ; அதனைக் கழுவி வெளியாக்கினீர். சிக்கப் பொதிந்து - அகப்படப் பொதிந்து. தழுவினீர் - கைக்கொண்டீராவீர், வழுவினார் - காவாது இகழ்ந்தவர்.

ஒழிகயார் கண்ணும் தேற்றம் ;
தெளிகுற்றார் விளிகுற் றாரே. சஅகூ

## உண்டிக்கண் வேண்டும் பாதுகாவல் கூறல்

வண்ணப்பூ மாலை சாந்தம்
வாலணி கலன்க ளாடை
கண்முகத் துறுத்தித் தூய்மை
கண்டலால் கொள்ள வேண்டா ;
அண்ணலம் புள்ளோ டெல்லா
ஆயிரம் பேடைச் சேவல்
உண்ணுநீ ரமிழ்தம் காக்க
யூகமோ டாய்க என்றான். சஅஎ

## பகை சிறிதெனக் கண்டு எள்ளலாகாது என்றல்

அஞ்சனக் கோலி னாற்றா
நாகம்ஓர் அருவிக் குன்றிற்
குஞ்சரம் புலம்பி வீழக்
கூர்நுதி எயிற்றிற் கொல்லும் ;
பஞ்சியின் மெல்லி தேனும்
பகைசிறி தென்ன வேண்டா ;
அஞ்சித்தற் காத்தல் வேண்டும்
அரும்பொரு ளாக என்றான். சஅஅ

---

சஅகூ. கையினுள்ளும், முடியகத்தும், கண்ணீரினுள்ளும் கலத்தகத்தும் கொல்லும் படை உடனெடுங்கும் என்க. பழுது ஆய்ந்து - பழுதுண்டோ என ஆராய்ந்து. தேற்றம் பற்றாது ஒழிக - தெளிதலைச் செய்யாதொழிக. கண் அரிந்து - அன்பு அறவேயின்றி. விளிகுற்றாரே - உயிரிழந்தாரேயாவர்.

சஅஎ. பூமாலையைப் புள்ளின் கண்ணிலும், சாந்தத்தைச் சேவலின் முகத்தும் உறுத்தித் தூய்மை கண்டபின்னன்றிக் கொள்ளவேண்டா என்க. உண்ணும் நீரிலும் அமிழ்தத்திலும் தீங்குண்டாகாதவாறு காக்க வேண்டின் கருங்குரங்கிற்கு இட்டு ஆராய்க. அண்ணலம்புள் - அரசவன்னம். குற்றமுளதாயின், அன்னம் கண் குருதி காலும் ; சேவல் - சக்கரவாகம் ; இது முகம் கடுக்கும் ; கருங்குரங்கு உண்ணாது.

சஅஅ. அஞ்சனக்கோலின் ஆற்றாநாகம் - அஞ்சனக்கோலால் தாக்கினும் உயிர் தாங்குதலாற்றாத சிறு நாகப்பாம்பு. குன்றின் - குன்றுபோல. என்ன வேண்டா - என்று கருதி இகழவேண்டா. அரும் பொருளாக அஞ்சி - வேறற்கரிய பொருளாகக் கருதி யஞ்சி.

**பாதுகாத்து ஒழுகும் திறம் கூறுதல்**

பொருந்தலால் பல்லி போன்றும்
போற்றலால் தாய ரொத்தும்,
அருந்தவர் போன்று காத்தும்,
அடங்கலால் ஆமை போன்றும்,
திருந்துவேல் தெவ்வர் போலத்
தீதற வெறிந்தும், இன்பம்
அருந்திறல் மனைவி யொத்தும்
மதலையைக் காமின் என்றான். சஅகூ

அது கேட்டுப் பதுமுகன் இருத்தற்கு ஒருப்பட்டான். சீவகனும் தன் தோழன்மாரை முறைப்படியே நெஞ்சால் ஆராய்ந்து, அப் பதுமுகனையே தனக்கு மெய் காவலனாகக் கொண்டான். அவனும் அவ்வண்ணமே ஒழுகலானான். அனை வரும் வழியில் பல இனிய காட்சிகளைக் கண்டு மகிழ்வுற்றுத் தண்டாரணியத்தை யடைந்தனர்.

**சீவகன் விசயையைக் காணலாம் செவ்வியறிந்து வரப் பதுமுகனை விடுத்தல்**

பொறிமயி லிழியும் பொற்றேர்
முருகனிற் பொலிந்து மாவின்
நெறிமையி னிழிந்து மைந்தன்
மணிக்கைமத் திகையை நீக்கி
வெறுமையி னவரைப் போக்கி
வெள்ளிடைப் படாத நீரால்
"அறிமயி லகவுங் கோயில்
அடிகளைச் செவ்வி" யென்றான். சகூ0

சஅகூ. பொருந்தலால் - விடாது சேர்ந்திருத்தலால். காத்தும் - இவன்பாலும் சீலம் முதலியன கெடாமல் காத்தும். தீது அற எறிந்தும் - தீதுண்டாயின் அது வேரறக் கெடும்படி இடித்தும். அருந்திறல் - உணவு நுகர்விப்பதில். மதலை - பற்றுக்கோடான சீவகன்.

சகூ0. பொறி மயில் - புள்ளிகளையுடைய மயில். இழியும் - இறங்கும். முருகனின் - முருகன்போல. நெறிமை - இழிதற்குரிய முறைமை. மத்திகை - மாவைச் செலுத்தும் கோல். வெறுமையினவர் - அறிவில்லாதவர். வெள்ளிடைப்படாத நீரால் - தான் இன்னானென்பது பிறர்க்குப் புலனாகாத முறையால். அடிகளைச் செவ்வி அறி என்றான்.

### பதுமுகன் தேவிக்கு உரைத்தல்

"எல்லிருட் கனவிற் கண்டேன்
கண்ணிட றுடும்; இன்னே,
பல்லியும் பட்ட பாங்கர்;
வருங்கொலோ நம்பி" யென்று
சொல்லினள் தேவி நிற்பப்,
பதுமுகன் தொழுது சேர்ந்து,
நல்லடி பணிந்து, "நம்பி
வந்தனன், அடிகள்!" என்றான். சகூக

### சீவகன் விசயையைக் காண்டல்

"எங்கணான் ஐயன்?" என்றாட்கு
"அடியன்யான், அடிகள்" என்னப்
பொங்கிவில் லுமிழ்ந்து மின்னும்
புனைமணிக் கடக மார்ந்த
தங்கொளித் தடக்கை கூப்பித்
தொழுதடி தழுவி வீழ்ந்தான்;
அங்கிரண் டற்பு முன்னீர்
அலைகடல் கலந்த தொத்தார். சகூஉ

### விசயை சீவகனைத் தழுவிக் கொள்ளுதல்

காளையாம் பருவ மோரான்,
காதல்மீக் கூர்த லாலே,
வாளையா நெடிய கண்ணாள்
மகனைமார் பொடுங்கப் புல்லித்

---

சகூக. எல் இருள் - விடியற்காலத்தே. பாங்கர் - நல்ல இடம். பட்ட - ஒலித்தன. சொல்லினள் - முற்றெச்சம். சேர்ந்து தொழுது அடி பணிந்து என்க. நம்பி - சீவகன். நம்பி, நம் என்னும் முதனிலையாக நமக்கு இன்றியமையாத பொருள்பட வருவதோர் உயர்ச்சிச் சொல்.

சகூஉ. எங்கணான் - எவ்விடத்தே யுள்ளான். என்ன - என்று சீவகன் சொல்லி. வில் - ஒளி. கடகம் - வீரரணியும் கையணி. முன்னீர் - முன்னைய தன்மை; அஃதாவது பிறர்க்கு இன்றியமையாத புலப்படாத வகையில் ஒழுகும் தன்மை. அற்பு அலைகடல் - அன்பாகிய அலைகடல்.

"தாளையா முன்பு செய்த
தவத்தது விளைவி லாதேன்,
தோளயாத் தீர்ந்த" தென்றாள்
தொழுதகு தெய்வ மன்னாள். சகரு

## விசயை சீவகற்குக் கூறல்

"வாட்டிறல் குரிசில் தன்னை
வாளம ரகத்துள் நீத்துக்
காட்டகத் தும்மை நீத்த
கயத்தியேற் காண வந்தீர்;
சேட்டிளம் பரிதி மார்பின்
சீவக சாமி யீரே!
ஊட்டரக் குண்ட செந்தா
மரையடி நோவ" என்றாள். சகச

## சீவகன் உரைத்தல்

"கெடலருங் குரைய கொற்றம்
கெடப்பிறந் ததுவு மன்றி
நடலையுள் அடிகள் வைக,
நட்புடை யவர்கள் நைய,
இடைமகன் கொன்ற இன்னா
மரத்தினேன் தந்த துன்பக்

---

சகரு. காதல் - மகன்பாற் சென்ற அன்பு. வாளை ஆம் நெடிய கண்ணாள் - வாளை நிகர்க்கும் நெடிய கண்களையுடைய விசயை. ஐயா - ஐயனே, முன்பு தான் செய்த - முற்பிறப்பிலே முயன்று செய்த, விளைவு - பயன். தோள் அயா - தோள் வருத்தம். "அரசனைக் கோறலின் வாளை யொக்கும் நெடிய கண்ணாள் என்று விசயைக்குப் பெயராயிற்று." வயிற் றிற் சுமந்த வருத்தம் உண்டு; பெற்றபின் தோளிற் சுமக்கும் வருத்தம் நுகராமையின், "தோள் அயாத் தீர்ந்தது" என்றாள்.

சகச. வாள் திறல் - வாட்போர் வன்மை. குரிசில் - சச்சந்தன். காட்டகத்து - சுடுகாட்டில். கயத்தியேன் - கொடியேன். சேடு-பெருமை. பருதி மார்பு - பருதிபோலும் மார்பு. ஊட்டரக்கு...தாமரை - இயல்பாகவேயுள்ள செம்மை நிரம்பாமையின் செவ்வரக்கு ஊட்டப்பட்ட தொரு தாமரைப் பூ. அடிநோவ, கயத்தியேற் காணவந்தீர் என இயைக்க.

கடலகத் தழுந்த வேண்டா,
கலைகஇக் கவலை" என்றான். ௪௬௫

## விசயை நந்தட்டன் முதலியோரைக் குறித்துப் பேசுதல்

"யானலன் ஒளவை யாவாள்
சுநந்தையே யையற் கென்றும்
கோனலன் தந்தை, கந்துக்
கடன்"எனக் குணத்தின் மிக்க
மானிலத் துறையுந் தீந்தேன்
அனையவா யமிர்த மூற
மானலங் கொண்ட நோக்கி
மகன்மன மகிழச் சொன்னாள். ௪௬௬

"எனக்குயிர்ச் சிறுவ னாவான்
நந்தனே, ஐய னல்லை ;
வனப்புடைக் குமரன் இங்கே
வரு"கென மருங்கு சேர்த்திப்
புனக்கொடி மாலை யோடு
பூங்குழல் திருத்திப் பொற்றார்
இனத்திடை யேற னானுக்
கின்னளி விருந்து செய்தாள். ௪௬௭

---

௪௬௫. கெடலருங் குரைய கொற்றம் - கெடாத கொற்றம். (அரசன்). குரைய - அசை. நடலையுள் - மிக்க வருத்தத்திலே. நட்புடையவர்கள்-சச்சந்தன் நண்பரும், சீவகன் தோழன்மார்களுடைய தந்தையருமாகியவர். இடை...மரத்தினேன் - இடையன் தறை கழித்த துன்புற்ற மரத்தின் தன்மையுடைய யான். (பழமொழி. 314 பார்க்க). உயிருடனிருந்தும் பகைமை வென்றேனுமில்லை; உயிரை நீத்தேனுமில்லை என்றற்கு "இன்னா மரத்தினேன்" என்றான்.

௪௬௬. ஒளவை - அன்னை. பால் நிலத்துறையும் தீந்தேன் அனைய வாய் - பாவிடத்தே சொரிந்து கலந்த தேன்போன்றனவாகிய. அமிர்தம் ஊற - இனிமையூறும் சொற்களை. நலம் - அழகு. நோக்கி - கண்களையுடைய விசயை.

௪௬௭. சிறுவன் - மகனாவான். ஐயன். அண்மைவிளி, மருங்கு - பக்கம். புனக்கொடி - விசயை. இனத்திடையேறு - ஆனினத்தின் இடையே நின்ற காளை. இன் அளிவிருந்து - இனிய தண்ணளியாகிய விருந்து.

அவரனைவரும் அங்கே விருந்துண்டு இனிதிருந்தனர். ஆறு நாட்கள் சென்றன. அக்காலத்தே விசயை தன் மகனுக்கு அரச நீதிகள் சிலவற்றை உரைக்கலானாள்.

## விசயை சீவகனை, "இனி நீ செய்யலுற்றது என் ?" என வினவுதல்

நிலத்தி னீங்கி நிதியினும் தேய்ந்துநங்
குலத்திற் குன்றிய கொள்கையம் அல்லதூஉம்
கலைக்க ணாளரு மிங்கில்லை ; காளைநீ
வலித்த தென் ?என வள்ளலும் கூறுவான். ௪௯௮

## சீவகன் விடை யிறுத்தல்

எரியொடு நிகர்க்கு மாற்றல்
  இடிக்குரற் சிங்க மாங்கோர்
நரியொடு பொருவ தென்றால்
  சூழ்ச்சிநற் றுணையொ டென்னும் ;
பரிவொடு கவல வேண்டா ;
  பாம்பவன், கலுழ னாகும்
சொரிமதுச் சுரும்புண் கண்ணிச்
  சூழ்கழல் நந்தன் என்றான். ௪௯௯

## விசயை நந்தட்டனை வியந்து கூறல்

கெலுழனே நந்த னென்னக்
  கிளரொளி வனப்பி னானைக்
கலுழத்தன் கையாற் றீண்டிக்
  காதலிற் களித்து நோக்கி,

---

௪௯௮. நிலத்தின் நீங்கி-நமக்குரிய நாட்டிலிருந்து நீங்கி. தேய்ந்து-குறைந்து. குன்றிய - தாழ்ந்த. கொள்கையம் - நிலையில் உள்ளோம். கலைக்கணாளரும் - அமைச்சரும். வலித்தது - துணிந்த செயல்.

௪௯௯. இடிக்குரல் - இடிபோன்ற முழக்கம். பொருவதென்றால் - போர் செய்யலுறின். ஆங்கு சூழ்ச்சியும் துணையும் என்னும்? வேண்டா என்பது கருத்து. பரிவு - வருத்தம். அவன் பாம்பு, கலுழன் நந்தட்டனாகும். சொரிமதுச் சுரும்புண் கண்ணி - சொரிகின்ற தேனை வண்டுண்ணும் கண்ணி. கண்ணியும் கழலுமுடைய நந்தன் என்க.

வலிகெழு வயிரத் தூண்போல்
திரண்டுநீண் டமைந்த திண்டோள்
கலிகெழு நிலத்தைக் காவா
தொழியுமோ காளைக் கென்றாள். ௫00

இவ்வாறு நந்தட்டனைச் சிறப்பித்துரைத்துப் பின் சீவகன் தோழர்கள் அறியுமாறு வீரமொன்றையே பொருளாகக் கொள்ளாது வினை செய்தற்கு வேண்டும் வலி, இடம், காலம் முதலியவற்றை நன்கு அறிந்து செய்தல்வேண்டுமென உரைத்தனன். அதுகேட்ட பதுமுகன் முதலியோர் பிறர் துணையின்றித் தாம் எவ் வினையையும் வென்றியெய்த முடிக்கும் விறலுடையரென விளங்கவுரைத்தனர்.

### விசயை சீவகனை அவன் மாமன் கோவிந்தராசன் துணைபெற்று வினை செய்யுமாறு பணித்தல்

கார்தோன்ற வேமலரு முல்லை,
கமலம் வெய்யோன்
தேர்தோன்ற வேமலரும், செம்மல்நின்
மாமன் மற்றுன்
சீர்தோன்ற வேமலரும் ; சென்றவன்
சொல்லி னோடே
பார்தோன்ற நின்றபகை யைச்செறற்
பாலை யென்றாள். ௫0௧

### சீவகன் விசயையைத் தன் மாமனிடம் சென்று இருத்தல் வேண்டுமென இரந்து உரைத்தல்

நன்று ;அப் பொருளே வலித்தேன் ;மற்
றடிகள் நாளைச்

---

௫00. இளரொளி வனப்பினானை - விட்டு விளங்குகின்ற ஒளி பொருந்திய அழகிய நந்தட்டனை. கலுழ - மனமுருகும்படி. கலிகெழு நிலத்தை - துன்பம் செய்யும் கட்டியங்காரனாலும் ஏமாங்கத நாட்டை (நினக்குத் தந்து). காளை - சீவகன்.

௫0௧. செம்மல் - விளி. உன் சீர் தோன்றவே நின் மாமன் அகம் மலரும் என்க. சொல்லினோடு - சொல்லும் வகைப்படியே. பார் தோன்ற - பார் நின்றாலே விளங்க. நின்ற - நிலைபெற்று நின்ற. செறற்பாலை - கொல்லும் பான்மையுடையை ; சொல்வாயாக என்பது.

சென்றப் பதியு ளெமர்க்கேயென
    துண்மை காட்டி
யன்றைப் பகலே அடியேன்வந்
    தடைவன் ; நீமே
வென்றிக் களிற்றுனுழைச் செல்வது
    வேண்டு மென்றான். ௫௦௨

விசயை அதற்குடன்படலும் சீவகன் அவட்குக் காவலாக ஒரு படையை விடுப்ப, அவளும் தனக்கு மெய் காவலாகத் தன்னோடொப்ப நோற்கும் தவ மகளிர் நூற்றுவரோடு சென்றாள். பின்பு சீவகன் குதிரையிவர்ந்து தோழர் உடன்வர இராசமாபுரத்தை நோக்கிச் செல்வானாயினன். சென்றவர்கள் ஏமாங்கத நாட்டையடைந்து இராசமாபுரத்துக்கு அருகேயுள்ளதொரு சோலையில் இளைப்பாறி உணவு கொண்டனர். இரவுப்போது வந்தது. சீவகன் தனக்கென அமைந்த இருக்கையில் கண் வளர்ந்தான். பொழுது விடிந்தது.

### சீவகன் வழிபாடு செய்தல்

கனைகதிர்க் கடவுள்கண் விழித்த காலையே
நனைமலர்த் தாமரை நக்க வண்கையால்
புனைகதிர்த் திருமுகம் கழுவிப் பூமழை
முனைவனுக் கிறைஞ்சினான் முருக வேளனான். ௫௦௩

### வேற்றுருக் கொண்டு நகர்க்குட் செல்லுதல்

நாட்கடன் கழித்தபின் நாம வேலினான்
வாட்கடி யெழினகர் வண்மை காணிய

௫௦௨. நன்று - கூறியது நன்று. வலித்தேன் - துணிந்தேன். அப்பதியுள் சென்று - இராசமாபுரத்திற்குச் சென்று. எமர்க்கு - என் சுற்றத்திற்கு. உண்மை - இருந்தபடி. நீம் - நீயிர். நும் என்னும் சொல் நீயிர் என முழுவதும் திரியாது மகரம் நிற்பத் திரிந்து நீம் என நின்றது; ஏகாரம், பிரிநிலை. வென்றிக் களிற்றுனுழை - மாமனாகிய கோவிந்தராசனிடத்து.

௫௦௩. கனைகதிர்க் கடவுள் - ஞாயிறு. கண் விழித்த - உலகம் கண் விழித்த. தாமரை நக்க - தாமரைப் பூவை யொத்த. பூ மழை பெய்து என்க; பூவால் அருச்சித்து என்றவாறு. முனைவன் - அருகன்.

தோட்பொலி மணிவளைத் தொய்யின் மாதரார்
வேட்பதோர் வடிவொடு விரைவி னெய்தினன். ௫௦௪

சீவகன் நகர் வண்மையை வீதிதோறும் சென்று மகிழ்ந்து வருகையில், அவனது வனப்பைக் கண்டு மகளிர் பலரும் வியப்புற்றனர். அவ் வேளையில் விமலை பந்தாடிக் கொண்டிருந்தாள். சாகரதத்தன் என்னும் வணிகனுக்கு அவ் விமலை இனிய மகளாவாள்.

## விமலை பந்தாடுதல்

வேனெடுங் கண்க ளம்பா
    விற்படை சாற்றி யெங்கும்
தேநெடுங் கோதை நல்லார்
    மைந்தனைத் தெருவில் எய்ய
மானெடு மழைக்க ணோக்கி
    வானவர் மகளு மொப்பாள்
பானெடுந் தீஞ்சொ லாளோர்
    பாவைபந் தாடு கின்றாள். ௫௦௫

## பந்தின் சுழற்சி

மாலை யுட்க ரந்த பந்து
    வந்து கைத்த லத்தவாம்
ஏல நாறி ருங்கு ழற்பு
    றத்த வாண்மு கத்தவாம்

---

௫௦௪. நாட் கடன் - நாட் காலத்தே செய்யும் கடன்கள். வாள் வடி - ஒளி மிக்க, வண்மை - வளம். காணிய - காண்பதற்கு. தொய்யில் மாதரார் - தொய்யிலணிந்த மகளிர். வேட்பது - விரும்புவது.

௫௦௫. வேல் நெடுங் கண்கள் - வேல்போல் நீண்ட கண்கள். விற்படை சாற்றி - புருவமாகிய வில்லை அமைத்து. தேம் - தேன், எய்ய - கண் பார்வையாகிய அம்பை எய்ய; பார்க்க என்றவாறு. மான் நெடும் மழைக் கண் நோக்கி - மான்போன்ற நீண்ட குளிர்ந்த கண்ணும் பார்வையுமுடைய விமலை. பால் நெடுந் தீஞ்சொல் - பால்போலும் பெருமை பொருந்திய தீவிய சொல். நோக்கியும், ஒப்பாளும் சொல்லாளுமாகிய ஓர் பாவையென்க.

நூலி னேர்நு சுப்பு நோவ
வுச்சி மாலை யுள்ளவாம்
மேலெ ழுந்த, மீநி லத்த,
விரல, கைய வாகுமே. ௫௦௬

### பந்து ஓடிவர அதன் பின்னே அவள் போந்து ஆங்குவந்த சீவகனைக் கண்டு வேட்கை கொள்ளல்

மந்தார மாலைமலர் வேய்ந்து மகிழ்ந்து தீந்தேன்
கந்தாரஞ் செய்து களிவண்டு முரன்று பாடப்
பந்தார்வஞ் செய்து குவளைக்கண் பரப்பி நின்றாள்
செந்தா மரைமேல் திருவின்னுரு வெய்தி நின்றாள். ௫௦௭

### விமலை வேட்கையால் வேறுபாடெய்தல்

நீர்தங்கு திங்கண்மணி நீணிலந் தன்னு ளோங்கிச்
சீர்தங்கு கங்கைத் திருநீர்த்தண் துவலை மாந்திக்
கார்தங்கி நின்றகொடி, காளையைக் காண்ட லோடு
பீர்தங்கிப் பெய்யா மலரிற்பிறி தாயி னாளே. ௫௦௮

### சீவகனும் வேட்கை மிகுதல்

பூவுண்ட கண்ணாள் புருவச்சிலை கோலி யெய்ய
ஏவுண்ட நெஞ்சிற் கிடுபுண்மருந் தென்கொ லென்று

---

௫௦௬. கரந்த - மறைந்த. கைத்தலத்தவாம் - கையிடத்தவாம் முகத்திடத்தே வந்த பந்து குழற் புறத்தவாம். நூலின் நேர் நுசுப்பு - நூல் போல நுண்ணிதாகிய இடை. உச்சி மாலையுள்ளவாம் - உச்சியிற் போன பந்து மீண்டும் மாலைக்குள்ளதாம். மீ நிலம் - மேல் நிலம்.

௫௦௭. களிவண்டு, மாலையை மொய்த்து, தீந்தேனை யுண்டு மகிழ்ந்து, காந்தாரம் செய்து, முரன்று பாட, பந்திலே ஆர்வம் செய்து, திருவின் உருவெய்தி நின்ற விமலை, சீவகனைக் காண்டலால். கண் பரப்பி நின்றாள் என்க. முரன்று - இசைத்து. திருவின் உரு - திருமகளின் வடிவு.

௫௦௮. திங்கள் மணி - சந்திர காந்தக் கல். ஓங்கி - வளர்ந்து, தண் துவலை மாந்தி - குளிர்ந்த நீர்த் துளியையுண்டு. கார் - பசுமை. கொடி - கொடியையொத்த விமலை. காண்டலோடு - கண்டவுடனே. பீர் தங்கி - பசலை பூத்து. பெய்யா மலரின் - பழம் பூப் போல (வாடிய பூ). பிறிதாயினாள் - உள்ளமும் மேனியும் வேறுபட்டாள்.

மாவுண்ட நோக்கின் மடவாளை மறித்து நோக்கிக்
கோவுண்ட வேலான் குழைந்தாற்றல னாயி னானே. ௫௦௯

சீவகன் வேட்கை மிக்கு ஆற்றானாய் மேலே செல்ல மாட்டாது சாகரதத்தன் கடையிலே இருந்துகொண்டு, விமலையை நினைந்திருந்தான்.

## சீவகனது வேட்கைப் பெருக்கம்

பைங்கண் மணிமகர குண்டலமும் பைந்தோடும்
திங்கண் முகத்திலங்கச் செவ்வா யெயிறிலங்கக்
கொங்குண் குழல்தாழக் கோட்டெருத்தம் செய்தநோக்கு
எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே தோன்றுமே. ௫௧௦

## சாகரதத்தன் சீவகனைக் கண்டு அன்புற்றுத் தன் மனைக்கண் கொண்டேகுதல்

"திருமல்க வந்த திருவே" யெனச்
சேர்ந்து நாய்கன்,
"செருமல்கு வேலாய்க்கிட மாவிது"
என்று செப்ப,
வரிமல்கி வண்டுண் டறைமாமலர்க்
கண்ணி மைந்தன்
எரிமல்கு செம்பொன்னிலம் மாமனொ
டேறி னானே. ௫௧௧

---

௫௦௯. பூவுண்ட கண் - பூப்போலும் கண். எய்ய - கண்ணாகிய அம்பை எய்ய. ஏவுண்ட நெஞ்சு - அம்பால் தைப்புண்டு புண்ணுற்ற நெஞ்சு. மாவுண்ட நோக்கின் - வண்டொத்த கட்பார்வையால், மறித்து - மீண்டும். கோவுண்ட வேல் - பகைவரது தலைமையைக் கெடுத்த வேல். குழைந்து - மனம் கலங்கி.

௫௧௦. மகர குண்டலம் - மகர மீன் வடிவாகச் செய்த குழை. கொங்குண் குழல் - தேன் நிறைந்த கூந்தல். கோட்டெருத்தம் - சாய்ந்த கழுத்து. தோன்றுமே - தோன்றுகிறதே என்றான்.

௫௧௧. திருமல்க வந்த திரு - செல்வம் மிகுமாறு வந்த திரு. சீவகனைத் திருவேயென்றான்; உவப்பின்கண் வந்த பால் மயக்கம். வேலாய்க்கு - வேலையுடைய நினக்கு. செரு மல்கு வேல் - போரில் வெற்றி நிரம்ப நல்கும் வேல். வரி மல்கி...கண்ணி - வண்டுகள் மதுவையுண்டு வரியென்னும் பண்ணை அறைகின்ற கண்ணி. மாமன் - சாகரதத்தன்.

பின்பு சாகரதத்தன் சீவகனை நோக்கி, "நம்பி, இது கேள்: என் மனைவி கமலைக்குப் பிறந்த மகள் விமலையாவாள். இவள் பிறந்த நாள் போந்த அறிவர், இவட்குக் கணவன் வருநாள் வரையும் நின் பண்டம் விலையாகாது. தூம்பில்லாத குளத்துட்பட்ட நீர்போலத் தேங்கி நிற்கும் என்றனர். அவர் கூறியவாறே இன்று நீ என் கடையேறலும் விலை யாகாது கிடந்த பண்டமுற்றும் விலையாகி விட்டன; ஆத லால் நீ என்மகள் விமலையை மணந்துகொள்க. இவட்கும் அகவை பதினொன் றற்றுப் பன்னிரண்டாயிற்று" என்றான்.

### சீவகன் அவன் சொல்லைத் தேறி மணத்துக்குடன்பட விமலையும் அவனைக் கண்டு தெளிதல்

ஏற்ற கைத்தொடி வீழ்ந்தென, ஏந்தலைத்
தேற்றி னான்திரு மாநலம் செவ்வனே;
தோற்ற மாதரும் தோன்றலைக் காண்டலும்
ஆற்றி னாள்,தன தாவியும் தாங்கினாள். ருகஉ

### சீவகன் விமலையை மணத்தல்

அம்பொற் கொம்பனை யாளையும் வார்கழற்
செம்பொற் குன்றனை யானையும் சீர்பெறப்
பைம்பொ னீணகர்ப் பல்லிய மார்த்தெழ
இம்ப ரில்லதொ ரின்ப மியற்றினார். ருகங

### திருமண வாழ்க்கை

கட்டி லேறிய காமரு காளையும்
மட்டு வாயவிழ் மாமலர்க் கோதையும்

ருகஉ. ஏற்ற கை......வீழ்ந்தென - எடுத்த கையிலே ஒரு தொடி தானே வந்து வீழ்ந்த தன்மைபோல. திருமா நலம் தேற்றினான் - நின் வரவு திருநலம் சூழ்க என்று தேற்றினான். தோற்ற மாதர் - வேட்கை யால் உயிர் நீத்தற்கு அமைந்த விமலை. நலம் சூழ்க என்று தந்தை கூறி யதைக் கேட்டலின், ஆவியும் தாங்குவாளாயினாள்.

ருகங. நீள் நகர் - நெடிய பெருமனை. பல்லியம் - பல்வகை மண வாச்சியங்கள். இம்பர் - இவ்வுலகில். இன்பம் - திருமணம்.

விட்டு நீங்குத லின்மையின் வீவிலார்
ஒட்டி யிருடம் போருயி ராயினார். ௫௧௪

### இவ்வாறு சில நாட்களைக் கழித்த சீவகன் விமலைபால் விடைபெற்றுப் பிரிதல்

பூவினுள் தாழ்குழற் பொன்செய் ஏந்தல்குல்
மாவினுள் தாழ்தளிர் மருட்டு மேனியாய் !
காவினுள் தோழரைக் கண்டு போதர்வேன்
ஏவினுள் தாழ்சிலை யெறிந்த கோலினே. ௫௧௫

### பிரியாவிடை பெற்றுப் பிரிதல்

என்றவன் உரைத்தலும் எழுது கண்மலர்
நின்றநீ ரிடைமணிப் பாவை நீந்தலின்
மன்றல்நா றரிவையைத் தெருட்டி மாமணிக்
குன்றனான் கொடியவள் குழைய வேகினான். ௫௧௬

---

௫௧௪. கட்டில் - திருமணக் கட்டில். காமரு - அழகிய. மட்டு - தேன். வீவிலார் - கெடுதல் இல்லாதவர். ஒட்டி - ஒன்றுபட்டு. உயிர் ஒன்றெனவே மனமும் ஒன்றுதல் பெற்றாம்.

௫௧௫. குழலும் அல்குலும் மேனியும் உடையாய் என்க. பொன்னால் செய்யப்பட்டு உயர்ந்த மேகலை. மாவினுள் தாழ் தளிர் - மாமரத்திடத்தே தளிர்த்த தளிர். மருட்டும் - ஒக்கும். போதர்வேன் - மீள்வேன். "தாழ்சிலையெறிந்த கோலின்" என்றதனால், தூரிதன்றி, அணியவிடத்தே போய் வருவேன் என்றான் என்று அவள் கருதினாள். வலியில்லாத அம்பு இலக்கிற் பட்டுவைத்து மீண்டும் வந்ததேனும் எய்தவனிடத்து வாராது மாறிப்போமாறுபோல, யானும் நின்னிடத்து வாராது இந்நகரிலே மீண்டு வருவேன் என்று அவன் கருதினான்.

௫௧௬. எழுது கண் - மை தீட்டிய கண். நின்ற நீர் - ததும்பி வீழாது நிறைந்து நின்ற கண் நீர். தெருட்டி - தேற்றி. கொடியவள் - கொடி போல்பவளாகிய விமலை.

# ௬. சுரமஞ்சரியார் இலம்பகம்

[சீவகன் சுரமஞ்சரியை மணந்த வரலாறு கூறுவது]

விமலையிற் பிரிந்து போந்த சீவகன் சோலைக்கண் புத்தி சேனன் முதலிய தோழரைச் சேர்ந்தான். நாட்கள் இரண்டு சென்றன. விமலைக்கு அவன் பிரிவு மிக்க நோய் செய்து வருத்திக்கொண்டிருந்தது. சீவகனது மணக்கோலத்தைக் கண்ட தோழர் "நீ மணந்துகொண்ட நங்கையின் பெயர் யாது?" என்று வினவ, சீவகன், "அவள் பெயர் விமலை யென்பது" என்று அவர்கட்குக் கூறினான்.

## புத்திசேனன் நகையாடிக் கூறல்

அம்பொ ரைந்து டைய்ய காம
ஊய்ய னென்ன வந்தணன்
நம்பு நீர ரல்லர் நன்கு
ரங்கு நீர ராயினும்
தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பின்
நெஞ்சு நேர்ந்து தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ வல்கு லார்எ
னப்பு கன்று சொல்லினான். ௫௬௭

## சீவகன் உரைத்தல்

அற்று மன்று கன்னி யம்ம
டந்தை மார ணிநலம்
முற்றி ழைநீடு வைப்பின்
மூள்கும் வந்து பாவமும்:
குற்ற மற்று மாகு மென்று
கோதை சூழ்ந்து கூறினார்க்

௫௬௭. உடைய்ய, ஐய்யன், குரவ்வர், அரவ்வ என்பன விகாரம். ஐயன், அம்பு ஐந்துடைய காமன் என்க. என்ன - என்று வியந்தாராக. அந்தணன் - புத்திசேனன். நம்பும் நீரர் - விரும்பும் அழகுடையர். குரங்கு நீரர் - குரங்கின் தன்மையுடையர். குரவர் - பெற்றோர். தாழ்வர் - வழிபடுவர். அரவ அல்குலார் - பாம்பின் படத்தையொத்த அல்குலை யுடைய மகளிர்.

குற்ற டுத்த யாவுயிர்த்
தொழிதல் யார்க்கு மொக்குமே. ௫௧௭.

இவ்வாறு சொல்லி, இதுவே முறையாகத் தான் விமலையை மணந்ததாகச் சீவகன் கூறக்கேட்ட புத்திசேனன் முதலியோர், "நீ செல்லும் ஊர்தொறும் புதுமணம் செய்து வருகின்றனை; ஆயினும், இவ்வூரிடத்தே சுரமஞ்சரி என்றொரு நங்கை யுள்ளாள்" என்று சொல்லினர்.

## புத்திசேனன் சுரமஞ்சரியின் இயல் கூறல்

ஆடவர் தனதிடத் தருகு போகினும்
நாடிமற் றவர்பெயர் நயந்து கேட்பினும்
வீடுவ லுயிரென வெகுளும் மற்றவள்
சேடியர் வழிபடச் செல்லும் செல்வியே. ௫௧௯

புத்திசேனன் சீவகனை நோக்கி, மேலும் சொல்லத் தொடங்கி, "நீ இச் சுரமஞ்சரியை மணப்பின், நின்னை யாங்கள் அநங்கதிலகன் என்று உரைப்பேம்" என்று கூறல்.

காமனே செல்லினும் கனன்று காண்கிலாள்;
வேம்எனக் குடம்பெனும் வேய்கொள் தோளியை
ஏமுறுத் தவள்நலம் நுகரின், எந்தையை,
யாமெலாம் அநங்கமா திலக னென்றுமே. ௫௨௦

அதுகேட்ட சீவகன், "யான் அவ்வண்ணமே செய்வேன்; அது தப்பின், சிறிதும் அன்பில்லாத ஒருத்தியைக்

---

௫௧௮. ஆற்றும் அன்று - அத்தன்மையதும் அன்று. அணிநலம் முற்றினார் - பெண்மை நலம் முற்றும் கனிந்தவர். நீடு வைப்பின் - நெடுநாள் மணம்புரியாது செறித்துவைப்பின். மூள்கும் - மூண்டுவிடும். குற்றம் - குடிக்குப் பழி. சூழ்ந்து - மகட்கொள்ள நினைந்து. உற்று அடுத்து - சென்று கொடுத்து. அயர்வுயிர்த்தல் - இளைப்பாறுதல். ஒக்கும் - ஒத்ததாம்.

௫௧௯. நயந்து நாடிக் கேட்பினும் - விரும்பி நாடிக் கேட்பினும். வீடுவல் - விடுவேன். செல்வி - செல்வமகள்.

௫௨௦. கனன்று காண்கிலாள் - வெகுண்டு கண்ணெடுத்துப் பாராள். வேம் - வேகும். வேய்கொள் தோளி - மூங்கில்போலும் தோளையுடைய இவளை. ஏமுறுத்து - மயக்கி. எந்தையை - எந்தையாகிய நின்னை, உயர்த்தற்கண் வந்தது. அனங்கனுக்குத் திலகன் என்பேம். மா, அசைநிலை.

கூடிய குற்ற முடையேனுவேன்" என்று சூள் செய்து மேலும் சொல்லலுற்றான்.

## சீவகன் உரைத்தல்

"வண்டுதேன் சிலைகொ ளுண
    மாந்தளிர் மலர்க ளம்பாக்
கொண்டவன் கோட்டந் தன்னுட்
    கொடியினைக் கொணர்ந்து நீல
முண்டது காற்றி யாண்பே
    ரூட்டுவ லுருவக் காமன்
கண்டபொற் படிவம் சார்ந்து
    கரந்திரு நாளை" யென்றான். ௫௨௧

## சீவகன் சுரமஞ்சரி மனைக்கு ஓர் அந்தண முதியோன் உருவிற் செல்ல நினைத்தல்

"சில்லரிக் கிண்கிணி சிலம்புஞ் சீறடிச்
செல்விதன் திருநலம் சேரும் வாயில்தான்
அல்லலங் கிழவனா ரந்த ணாளனாய்ச்
செல்லல்யான்; தெளிதக வுடைத்"தென் றெண்ணினான்.

## சீவகன் வேதியனுருக் கொளல்

அணங்கர வுரித்ததோ லனைய மேனியன்
வணங்குநோன் சிலையென வளைந்த யாக்கையன்,

---

௫௨௧. வண்டும் தேனும் சிலைக்கு நாணாக, மலர்கள் அம்பாகக் கொண்டவன் என்க; இவன் காமன். கோட்டம் - கோயில். கொடி - சுரமஞ்சரி. நீலமுண்டது காற்றி - நீலமூட்டிய நூல் பிறவண்ணம் ஏலாதாயினும் ஏற்பித்து; அவள் புதிதாகக்கொண்ட இக் கோட்பாட்டை நீக்கி, ஆண்பேர் ஊட்டுவல் . ஆடவர் பெயரை ஏற்கச் செய்வேன், காமன் கண்ட பொற்படிவம் - காமன் வடிவாகச் செய்த பொற்சிலை.

௫௨௨. சில் அரிக் கிண்கிணி - சில பரல்களைப் பெய்த கிண்கிணியென்னும் அணி. சிலம்பும் - ஒலிக்கும். வாயில் - வழி. அல்லலங் கிழவன் - பசித்துன்பம் உற்று வருந்தும் முதியோன். செல்லல் - செல்வதே. சேரும் வாயில், யான் செல்லல்; தெளிதகவு - அவள் ஐயுறுமல் ஏற்றுக்கொள்ளும் தகுதிப்பாடு.

பிணங்குநூல் மார்பினன் பெரிதொர் பொத்தகம்
உணர்ந்துமூப் பெழுதின தொப்பத் தோன்றினான். ௫௨௩

### சீவக வேதியன் சுரமஞ்சரி மனையடைதல்

நற்றொடி மகளிரும் நகர மைந்தரும்
எற்றிவன் மூப்பென இரங்கி நோக்கவே,
பொற்றொடி வளநகர் வாயில் புக்கனன்
பற்றிய தண்டொடு பைய வென்பவே. ௫௨௪

### காவலர் தடுப்ப அவர்க்குச் சீவகன் கூறல்

தண்டுவலி யாகநனி தாழ்ந்துதளர்ந் தேங்கிக்
கண்டுகடை காவலர்கள் கழறமுகம் நோக்கிப்
"பண்டையிளங் காலுவப்பன் பாலடிசில்; இந்நாள்
கண்டுநயந் தார்தருவ காதலிப்பன்" என்றான். ௫௨௫

### இவன் செவி கேளாத முதியோன்; பசி மிகவுடையன் என இரங்கி விடுப்ப, சீவகன், மகளிர் காக்கும் வாயிலை யடைதல்

கோதையொடு தாழ்ந்துகுழல் பொங்கின்மி ராப்ப
ஓதமணி மாலையொடு பூண்பிறழ வோடி

---

௫௨௩. அணங் கரவு - நஞ்சுடைய பாம்பு. வணங்குவோன் சிலை - வளைந்த வலிய வில். பிணங்கு - மேலாடையுடன் பின்னிக் கிடக்கும். பெரிது ஓர் பொத்தகம் - மூப்பு வடிவ மெழுதுதற்குரிய நெறி முற்றும் எழுதப்பட்டதொரு புத்தகம். மூப்பு எழுதினது ஒப்ப - மூப்பை எழுதியதுபோல.

௫௨௪. (இப்பாட்டு, சில பிரதிகளில் இல்லை.) எற்று - இரக்கப் பொருட்டு. இரங்கி நோக்க - மனமிரங்கிப் பார்க்க. பொற்றொடி - சுரமஞ்சரி. நகர் - கன்னிமாடம். பைய - மெல்ல. என்ப, அசை.

௫௨௫. வலியாக - பற்றுக்கோடாக. ஏங்கி - இளைத்து நின்று. இளங்கால் - இளமைக் காலத்தில். பாலடிசில் - பாற் சோறு ஒன்றையே. நயந்தார் - என்றால் விரும்பப்பட்ட மகளிர். தருவ - தருவனவெல்லாம். கேட்ட காவலர், இவன் தன் பசியையே கூறினன் என்று உணர்ந்தார்; கண்டு...காதலிப்பன் - இப்பொழுது என்னைக் கண்டு நயந்தவர் தரும் உணவைக் கொள்வேன். இது வெளிப்படை.

"ஏதம்இது; போமின்"என என்றுமுரை யீயான்
ஊதவுகு தன்மையினெ டொல்கியுற நின்ருன். ௫உ௬

### வேறு சில மகளிர் அவனைச் சூழநின்று கடிய சொற்களைச் சொல்லி அச்சுறுத்த, அவருட் சிலர் கூறல்

"பாவமிது, நோவவுரை யன்மின் ;மூது பார்ப்பார்
சாவர்தொடி னேகடிது; கண்டவகை வண்ணம்
ஓவியர்தம் பாவையினே டொப்பரிய நங்கை
ஏவல்வகை கண்டறிது" மென்றுசிலர் சொன்னுர். ௫உ௭

### இச் செய்தியறிந்த சுரமஞ்சரி மேல் மாடத்திலிருந்து இழிந்து சீவகன் எதிரே வருதல்

சிறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகள் மெல்லென மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்பர்நடை கற்பதென வந்தாள். ௫உ௮

### இருவரும் சொல்லாடல்

"வந்தவர வென்னை"யென, "வாட்கண்மட வாய்,கேள் :
சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட"

---

௫உ௬. ஞிமிறு பொங்கி யார்ப்ப - வண்டுகள் எழுந்து ஒலிக்க. ஓத மணிமாலை - கடலிற் பிறந்த முத்துமாலை. ஓடிவந்து, என, உரையீயான் என முடிக்க. இது ஏதம் - இவ் வரவு குற்றம், என - என்று சொல்லி விலக்க. என்றும் - சிறிதும். உரை - மறுமொழி. ஊத உகு தன்மை - வாயால் ஊதிய வழி ஆற்றாது கீழே விழும் மென்மை. ஒல்கி - தளர்ந்து. உற - மிக நெருங்கி.

௫உ௭. இது பாவம் - நோவவுரைக்கும் இது பாவமாதலால், தொடின் - தீண்டித் தள்ளுவேமாயின். ஓவியர் தம் பாவை - ஓவியர் அரிது முயன்று எழுதிய பாவை. ஒப்பரிய - ஒப்பாகமாட்டாத.

௫உ௮. அடிய - அடியிடத்தனவாகிய; குறிப்புப் பெயரெச்சம். சிலம்ப - ஒலிக்க. மிழற்ற - கலீர் என ஒலிக்க. சேறு - தேன். திசை பாட - திசைதோறும் எழுந்து பாட. நாறும் - மணம் கமழும். கொம்பர் - கொம்பு. கற்பதென - கற்கின்றதுபோல. துகிலின் உள்ளும் புறமும் கிடந்து அசைதலின், "வேறுபடு மேகலை" யென்ருர்.

"அந்திலதி ஞையபய னென்னைமொழி" கென்றாள் ;
"முந்திநலி கின்றமுது மூப்பொழியு" மென்றான். ௫௨௯

நறவிரிய நாறுகுழ லாள்பெரிது நக்குப்
"பிறருமுள ரோபெறுநர் ? பேணிமொழி" கென்னத்
"துறையறிந்து சேர்ந்துதொழு தாடுநரில்" என்றாற்கு
"அறிதிர்பிற நீவிர் "என, "ஐயமிலை" யென்றான். ௫௩௦

## சுரமஞ்சரி சீவகனையொரு பித்தனெனக் கருதி மேன்மாடம் கொண்டு சென்று, அடிசில் கொணருமாறு தோழியர்க்குப் பணித்தல்

"வடிவமிது, மூப்பளிது, வார்பவள வல்லிக்
கடிகைதுவர் வாய்கமலங் கண்ணுமடி வண்ணம் ;
கொடிது ;பசி கூர்ந்துளது ; கோல்வளையி னீரே !
அடிசில்கடி தாக்கியிவ ணேகொணர்மி" னென்றாள்.

பின்பு சீவக வேதியனை நறிய நீர்கொண்டு நீராட்டி, நல்ல வெள்ளிய உடை தந்து, புதிய பூணூலணிவித்து ஓர் ஆசனத்தில் இருத்தினர். அடிசில் கொணர்ந்ததும், அவனுக்குப் பொற்கலத்தையும் பக்கத் தட்டும் பரப்பி அறுசுவை

---

௫௨௯. என - என்று சுரமஞ்சரி கேட்ப, திருநீர்க் குமரியாட - அழகிய தன்மையையுடைய நின்னைக் கூட;அழகிய நீரையுடைய குமரியாற்றில் நீராட (இரு பொருள்). அந்தில் - அசை நிலை. ஆய பயன் - குமரியாற்றில் நீராடலால் உண்டாகும் பயன். முந்தி நலிகின்ற - வருங் காலத்து வாராது முன்பே வந்து வருத்துகின்ற ; முந்தி - நின்கண் முன்னாக - (வேறு பொருள்). முது மூப்பு - மிக்க முதுமை.

௫௩௦. நறவு இரிய - பூமணங்களெல்லாம் தோற்க. பெரிது - மிகவும். பெறுநர் பிறரும் உளரோ - இவ்வாறு குமரியாடி இளமையைப் பெறுவார் பிறர்தாமும் உண்டோ. பேணி - ஆராய்ந்தறிந்து. துறையறிந்து - மூப்பைப் போக்கும் நெறி ; நீ கொண்ட கொள்கையைக் கெடுத்துக்கூடும் துறை இம் மூப்பு வடிவந் தாங்கிவந்து கூடுவது என்பதை யறிந்து - இது சீவகன் கருதும் பொருள். என - நீவிர்தான் இதனை அறிவீர்போலும் என்று இகழ்ந்து கூற,

௫௩௧. வடிவம் இது மூப்பு அளிது - இம் முதுமை வடிவம் நம்மால் அளிக்கத்தக்கது. வார் பவள வல்லிக் கடிகை-ஒழுகிய பவளக்கொடியினது துண்டம். துவர் - சிவப்பு. வாய், கடிகை எனவும், கண்ணும் அடியும் கமலம் எனவும் இயைக்க. கொடிது - நாம் அளி செய்யாவிடின் கொடிதாம். கோல் - திரட்சி. கடிது - விரைய.

யுண்டி வட்டிக்க, அவன், "இத்தகைய சுவைமிக்க உணவு எங்கும் இல்லை" என்று சொல்லி அயின்று, வாய்பூசி யமர்ந்து அவர் தந்த வெற்றிலைச் சுருளை மென்று வாயில் ஒரு பக்கத்தே அடக்கிக் கொண்டான்.

### மேலும் சிறிது சொல்லாடல்

"வல்லதெனை" யென்ன, "மறை
வல்லன்,மட வாய் யான்;
"எல்லையெவ" னென்னப், "பொரு
ளெய்திமுடி காறும்;"
"சொல்லுமினு நீவிர்கற்ற
கால"மெனத் "தேன்சோர்
சில்லெலன்கிளிக் கிளவி யிது
சிந்தையில" னென்றான். ருகூஉ

### சீவகன் தன்னை வெளியே போமாறு அவர்கள் கூறுதபடி உறங்கி விழுதல்

"இன்னவர்க ளில்லைநிலத்" தென்றுவியந் தேத்தி
அன்னமென மென்னடையி னளமர்ந்து நோக்கப்,
பின்னையிவள் போகுதிறம் பேசு"மென வெண்ணித்
தன்னஞ்சிறி தேதுயின்று தாழஅவள் நக்காள். ருகூங

### நகைத்த சுரமஞ்சரிக்குச் சீவகன் மொழிதல்

கோலமணி வாய்க்குவளை வாட்கண்மட வாளைச்
சாலமுது மூப்புடைய சாமிமுக நோக்கிக்

---

ருகூஉ. வல்லது - கற்று வல்லது. என்ன - என்று சுரமஞ்சரி வினவ, மறை - வேதம்; மறைந்து உருமாறி வருதல், யான் என்றானாக என முடிக்க. எல்லை - கற்றதன் எல்லை. என்ன - என்று மேலும் வினவ. பொருள் எய்தி முடிகாறும் - நினைத்த பொருள் முடியும்வரை; மறை கூறும் முடி பொருள் முற்றவுணர்த்த உணரும் எல்லை - இது சுரமஞ்சரி கொண்ட பொருள். சொல்லும்-ஏவற் பொருண்மைக்கண்வந்த உம்மீற்று முன்னிலை முற்று வினை. காலம் - காலமெல்லை. சில்லெலன் கிளிக் கிளவி - சிலவாகிய கிளிபோலும் சொற்களையுடையாய். சிந்தை - நினைவு.

ருகூங. இன்னவர்கள் - இத் தன்மையையுடையவர்கள். அமர்ந்து - விரும்பி. போகு திறம் பேசும் - மனையினின்றும் போய்விடுமாறு சொல்லுவள். தன்னும் சிறிது - மிகவும் சிறிது. துயின்று தாழ - தூங்கினான்போலத் தலை தாழ்ந்து விழ.

ஏலங்கமழ் கோதையிதற் கென்செய்குரை" யென்ருன்.

அதுகேட்ட சுரமஞ்சரி தான் கிடந்துறங்கும் கட்டிலிலே அவனைக் கிடந்து உறங்குமாறு பணித்தாள். அவனும் அதன் மேல் கிடந்து மெல்ல உறங்குவான் போன்ருன். இரவுப் போது வந்தது. மகளிர் தாமும் உணவுண்டு இனிய பாட்டுக் களைப் பாடி மகிழ்தலுற்றனர்.

### சீவகன் பாடுதல்

பொன்னறையுள் இன்னமளிப் பூவணையின் மேலான்,
முன்னியதன் மன்றலது முந்துற முடிப்பான்,
மன்னுமொரு கீதமது ரம்பட முரன்ருற்கு,
இன்னமிர்த மாகஇளை யாருமது கேட்டார். ருடரு

கேட்ட மகளிர் அவனது இசைச் சிறப்பை நினைந்து வியப்பெய்தி, "இது சீவகன் இசைபோலுளது" என எண்ணி மகிழ, சீவகன் மேலும் ஒரு பாட்டை இனிது பாடினன்.

### மகளிர் அவன்பால் ஓடி வருதல்

கள்ள மூப்பின் அந்தணன்
கனிந்த கீத வீதியே
வள்ளி வென்ற நுண்ணிடை
மழைமலர்த்த டங்கணர்
புள்ளு வம்ப திமமகன்
புணர்த்த வோசை மேற்புகன்று,

---

ருடச. கோல மணி - அழகிய முத்து. சாமி - சீவகன். முகம் - சுரமஞ்சரியின் முகத்தை. காலும் மிக - வாடைக்காற்று மிகுவதால். நோம் - நெஞ்சு வருந்துகின்றது. கண் - பொழுது. துயில்குற்றேன் - சாக் காடு எய்தியுள்ளேன். காலும்-நோகும்; கண்ணும் துயில்கொள்ளும் என்று சீவகன் கூறியதாக அவள் கருதினுள். என் செய்கு - என் செய்வேன்.

ருடரு. அமளிப்பூவணை-அமளியாகிய பூம் படுக்கை. முன்னிய - கருதி யிருந்த. மன்றல் - கந்தருவ மணம். மன்னும் - நிலைபெற்ற. முரன்ருன் - பாடினுன்.

உள்ளம் வைத்த மாமயிற்
குழாத்தின் ஓடி எய்தினார். ௫௬௬

அவருடன் சுரமஞ்சரியும் ஓடிவரக் கண்ட சீவக வேதியன், "பெரிதும் மூப்புடைய என்பால் போந்து நீவிர் பெறுவது என்னை?" என்று சொல்ல, சுரமஞ்சரி நாணித் தன் தோழியின் பின்னே மறைந்து நின்றாள்.

## சீவகன் சொல்லாடல்

"இளையவற் காணின் மன்னோ
என்செய்வீர், நீவிர்" என்ன,
"விளைமதுக் கண்ணி மைந்தர்
விளி"கெனத் தோழி கூற,
"முளையெயிற் றிவளை யாரும்
மொழிந்தன ரில்லை யென்றோ,
உளைவது பிறிது முண்டோ
ஒண்டொடி மாதர்க்" கென்றான். ௫௬௭

## தோழியர் விடைவிளம்பல்

"வாய்ந்தஇம் மாதர் சுண்ணம்
சீவகன் பழித்த பின்றைக்
காய்ந்தன" ளென்று கூற,
"காளைமற் றிவட்குத் தீயான்

---

௫௬௬. கள்ள மூப்பின் - பொய்யான முதுமை வடிவையுடைய. வீதியே - வழியாக. வள்ளி - கொடி. தடங்கண் - பெரிய கண். புள்ளுவ மகன் - புட்களைப்போல ஓசையெழுப்பி அவற்றைப் பிடிக்கும் பறவை வேட்டுவன். மதி புணர்த்த - அறிவால் எழுப்பிய. புகன்று - விரும்பி. குழாத்தின் - கூட்டத்தைப்போல.

௫௬௭. இளையவற் காணின் - முதியோனாகிய என்பால் இவ்வண்ணம் ஓடி வரும் நீவிர் இளமை நலம் மிகவுடையான் ஒருவன் வரக் காண்பீராயின். என்ன - என்று சீவகன் சொல்ல. மது விளை கண்ணி - தேன் சொரியும் கண்ணி (தலையிலணியும் பூத்தொடை). விளிக - கெடுக; அவர் பெயர் இங்கே நிலவாது கெடுக. முளையெயிற்றிவளை - முளைபோலும் பற்களையுடைய இச் சுரமஞ்சரியை. பிறிது - அவ் விளையோர் செய்த வேறு தீங்கு. உளைவது - வருந்துவது.

மாய்ந்தனன் போலு" மென்ன,
மாதரா ரொருங்கு வாழ்த்தி
"ஆய்ந்தனம் ஐய னுய்ந்தான்
அறிந்தனம் அதனை" யென்றார். ௫௩௮

பின்னர், அவர்கள் சீவகன் உயிருய்ந்த செய்தியைத் தத்தையால் கிளியைத் தூதனுப்பித் தெரிந்தவற்றைச் செப்பினர்.

## தோழியர் சீவகனைப் பாடுமாறு வேண்டல்

"அன்பொட்டி யெமக்கோர் கீதம்
பாடுமின், அடித்தி யாரும்
முன்பட்ட தொழிந்து நுங்கண்
முகவியர் முனிவு தீர்ந்தார்;
பொன்தொட்டேம் : யாமும் நும்மைப்
போகொட்டேம் பாடல் கேளாது
என்பட்டு விடினு" மென்றார்
இலங்குபூங் கொம்பொ டொப்பார். ௫௩௯

சீவகன், "யாம் பாவை பொற்பையே பாடுவேம்; அவளை நமக்கு நல்குவதாக ஒட்டுமின்" என்னும் கருத்தை யுள்ளுறுத்துக் கவர்பொரு ளெய்தப் பேசினன். அஃதுணராத அப் பேதையர் "பொற்பாவை தருதும்" என ஒட்டினர். பின்பு அவன் சுரமஞ்சரி முகநோக்கி, மாலைப்போது கண்டு ஆற்றாத தலைவி கூற்றாகத் தாழிசைகள் மூன்று பாடினன்.

---

௫௩௮. வாய்ந்த - வாய்த்த. விகாரம், செய்த என்பது பொருள் தீயாகிய அக் காலை. என்ன - என்று சீவகன் சொல்ல. அறிந்தனம் - தெளிந்துகொண்டோம்.

௫௩௯. ஒட்டி - பொருந்தி. அடித்தி - சுரமஞ்சரி. மூத்த அந்தணனாதலின், தலைவியை "அடித்தி" என்றனர். முன்பட்டது - ஆடவரைக் காணேன் என்று கொண்டிருந்த கொள்கை. முகவியர் - முகங்கொடுத்துப் பேசி. முனிவு - ஆடவர்பால் இருந்த வெறுப்பு. பொன் தொட்டேன் - தலைவிபேரால் ஆணையிட்டேம். போகொட்டேம்-போகவிடேம். இலங்கு - விளங்குகின்ற.

### பாட்டிசையால் சீவகனை நினைந்த சுரமஞ்சரி காமனை வணங்கி வரம்பெறக் கருதுதல்

பாடினான் தேவ கீதம்
    பண்ணினுக் கரசன் ; பாடச்
சூடக மகளிர் சோர்ந்து
    செருக்கிய மஞ்ஞை யொத்தார் ;
ஆடகச் செம்பொற் பாவை
    அந்தணற் புகழ்ந்து " செம்பொன்
மாடம்புக் கநங்கற் பேணி
    வரங்கொள்வல் நாளை " யென்றாள். ௫௪௦

இதற்குள் இரவுப்போது நெடிது கழிந்தது. திங்கள் எழுந்து மிக்க ஒளியைச் செய்யலுற்றது. சுரமஞ்சரி காமன் கோட்டம் செல்ல எழுந்தாள்.

### சுரமஞ்சரி வண்டி யேறுதல்

பொன்னியன் மணியுந் தாரும்
    கண்ணியும் புனைந்து, செம்பொன்
மின்னியற் பட்டஞ் சேர்த்தி,
    ஆனெய்யால் வெறுப்ப வூட்டி,
மன்னியற் பாண்டில் பண்ணி
    மடந்தைகோல் கொள்ள, வையம்
இன்னியற் பாவை யேற்பத்
    தோழியோ டேறி னாளே. ௫௪௧

---

௫௪௦. தேவகீதம் - தேவனால் கற்பிக்கப்பெற்ற பாட்டு. அரசன் - சீவகன். சூடகம் - கைவளை. செருக்கிய - மயங்கிய. மஞ்ஞை - மயில். ஆடகம் - நால்வகைப் பொன்னில் ஒருவகை. மாடம் - காமன் கோயில். வரம் - இப் பாட்டையுடைய சீவகனைப் பெறுதற்குரிய வரம்.

௫௪௧. ஒரு மடந்தை, மணியும் தாரும் கண்ணியும் புனைந்து, பட்டம் சேர்த்தி, பால் ஊட்டி, பாண்டில் பண்ணிக் கோல் கொள்ள என்க. வெறுப்ப - மிகவும். பாண்டில் - வண்டி. இன்னியல் பாவை - இனிய இயல்பையுடைய பாவை போன்ற சுரமஞ்சரி. ஏற்ப - ஆடவர் காணாமல் போவதற்கு ஏற்ப.

## உடன் வந்த சீவகனை அக் கோட்டத்தில் ஒருபுறத்தே மறையவைத்துத் தான் உள்ளே செல்லுதல்

ஆடவ ரிரிய ஏகி யஞ்சொல்லார் சூழக் காமன்
மாடத்து ளிழிந்து மற்றவ் வள்ளலை மறைய வைத்துச்
சூடமை மாலை சாந்தம் விளக்கொடு தூப மேந்திச்
சேடியர் தொழுது நிற்பத் திருமகள் பரவு மன்றே. ௫௪௨

சுரமஞ்சரி காமனை வழிபட்டு, இட முழந்தாளை நிலத்தே ஊன்றி, தன் தலையை வலத்தே சாய்த்து, இருகையும் கூப்பி வணங்கி நின்றாள்.

## சுரமஞ்சரி வரம் வேண்டல்

"தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையி னய்லோர்
காமமிங் குடையேன்; காளை சீவக னகலம் சேர்த்தின்
மாமணி மகர மம்பு வண்சிலைக் கரும்பு மான்றேர்
பூமலி மார்ப! ஈவ லூரொடும் பொலிய" என்றாள். ௫௪௩

## புத்திசேனன் உள்ளிருந் துரைத்தல்

"மட்டவிழ் கோதை! பெற்றாய் மனமகிழ் காத லானை;
இட்டிடை நோவ நில்லா தெழு"கென வேந்தல் தோழன்
பட்டிமை யுரைத்த தோராள்; பரவிய தெய்வந் தான்,வாய்
விட்டுரைத் திட்ட தென்றே வேற்கணாள் பரவி மீண்டாள்.

## மீண்டவள் எதிரே சீவகன் தன் உண்மைவடிவுடன் நிற்கக் காண்டல்

அடியிறை கொண்ட செம்பொ னுடகச் சிலம்பி னாள்அக்
கடியறை மருங்கி னின்ற மைந்தனைக் கண்டு நாணி

---

௫௪௨. இரிய - நீங்க. வள்ளலை - சீவக வேதியனை. சூடு அமை மாலை - சூடுதற்கமைந்த மாலை. திருமகள் - சுரமஞ்சரி.

௫௪௩. தாமரை போலும் கண்ணும் வாயும் பொற் குழையு முடையாய். காமம் - வரம். அகலம் - மார்பு. மணி மகரம் - மணி புனைந்த மகரக்கொடி. ஈவல் - தருவேன்.

௫௪௪. மட்டவிழ் கோதை - தேன் சொரியும் பூமாலையை யுடையாய். இட்டிடை - நுணுகிய இடை. தோழன் - புத்திசேனன். பட்டிமை - வஞ்சனை. பரவி - பின்னும் தொழுது.

வடியுறு கடைக்க ணோக்க நெஞ்சுதுட் கென்ன வார்பூங்
கொடியுற ஒசிந்து நின்றாள் குழைமுகத் திருவோ டொப்பாள்.

## சுரமஞ்சரி வேட்கைமிக்கு உருகி நிற்றல்

இலங்குபொன் னோலை மின்ன இன்முகஞ் சிறிது கோட்டி
அலங்கலுங் குழலுந் தாழ அருமணிக் குழையோர் காதிற்
கலந்தொளி கான்று நின்று கதிர்விடு திருவில் வீச
நலங்கனிந் துருகி நின்றாள் நாமவேற் காமர் கண்ணாள்.

## சீவகன் சுரமஞ்சரியை நயந்து கோடல்

"தேறினேன் தெய்வ மென்றே; தீண்டிலே னாயி னுய்யேன்;
சீறடி பரவ வந்தே னரு"ளெனத் தொழுது சேர்ந்து,
நாறிருங் குழலி னாளை நாகணை விடையிற் புல்லிக்
கோல்தொடுத் தநங்க னெய்யக் குழைந்துதார் திவண்ட தன்றே.

## சீவகன் சுரமஞ்சரியைத் தேற்றி அவள் மனைக்குச் செல்ல விடுத்தல்

இறங்கிய மாதர் தன்னை யெரிமணிக் கடகக் கையால்
குறங்கின்மேல் தழுவி வைத்துக் கோதையங் குருதி வேலான்
அறந்தலை நீங்கக் காக்கு மரசன்யா னாக நாளைச்
சிறந்தநின் நலத்தைச் சேரே னாய்விடின் செல்க என்றான்.

---

௫௪௫. அடி இறை கொண்ட - காலிலே அணியப்பட்டுக் கிடக்கின்ற. கடி யறை - மண வறை. வடியுறு கடைக்கண் - மாவடுபோலும் கடைக்கண். துட் கென்ன - துண்ணென. கொடியுற ஒசிந்து - கொடி போலத் தளர்ந்து.

௫௪௬. கோட்டி - சாய்த்து. அலங்கல் - மாலை. ஒளி கான்று - ஒளி விட்டு. வில் - ஒளி. நலம் - அன்பு. நாம வேல் - அச்சந் தரும் வேல். காமர் - அழகு.

௫௪௭. தேறினேன் - தெளிந்தேன். நாகு - இளம் பசு. விடை - காளை. புல்லி - புல்ல. கோல் - அம்பு. தார் குழைந்து - மாலை குழைந்து. திவண்டது - வாடிற்று.

௫௪௮. இறங்கிய மாதர் - நாணித் தாழ்ந்த சுரமஞ்சரி. எரிமணிக் கடகம் - ஒளிதிகழும் மணிவைத் திழைத்த கடகம். குறங்கு - துடை. அறம் தலை நீங்க - அறம் கெட்டொழிய. சேரேனாய் விடின் - கூடா தொழிவேனாயின். செல்க - இனி நீ செல்வாயாக.

## சுரமஞ்சரி செல்லுதல்

வில்லிடு மணிசெய் ஆழி மெல்விரல் விதியிற் கூப்பி
நல்லடி பணிந்து நிற்ப, "நங்கை! நீ நடுங்க வேண்டா;
செல்" லெனச் சிலம்பு செம்பொற் கிண்கிணி மிழற்ற ஒல்கி
அல்குற்கா சொலிப்ப ஆயம் பாவைசென் றெய்தி னாளே.

சீவகன் சென்று தன் தோழரைக் கூடினன்; அவர்களும் முன்பு மொழிந்தவாறே சீவகனைக் காம திலகன் எனப் பாராட்டினர். பின்பு, மகள் பேசுதற்குரியாரைச் சுரமஞ்சரியின் தந்தையான குபேரதத்தன்பால விடுத்தனர். சென்ற சான்றோரும் அவனைச் சீவகற்கு மகட்கொடை நேருமாறு வேண்டினர். குபேர தத்தனுக்குச் சுரமஞ்சரியின் நோன்பு, வருத்தம் செய்யலுற்றது.

## குபேரதத்தன் சுரமஞ்சரியின் கருத்தறிய நினைத்தல்

ஐயற்கென் றுரைத்த மாற்றங்
கேட்டலு மலங்க னாய்கன்
வெய்யதேன் வாய்க்கொண் டாற்போல்
விழுங்கலோ டுமிழ்தல் தேற்றான்,
"செய்வதென் நோற்றி லாதேன்
நோற்றிலாள் திறத்தின்" என்று
மையல்கொண் டிருப்ப அப்பாற்
குமரிதன் மதியிற் சூழ்ந்தாள். ௫௫௦

---

௫௪௯. மணி செய் ஆழி மெல் விரல் - மணி யிழைத்த ஆழியணிந்த மெல்லிய விரல். விதியின் - விதியாதலால். நிற்ப - சுரமஞ்சரி பணிந்து நிற்ப. மிழற்ற - ஒலிக்க. ஒல்கி - அசைந்து. அல்குற் காசு - மேகலை. ஆயம்- தோழியர் கூட்டம்.

௫௫௦. ஐயற்கு - சீவகனுக்கு, உரைத்த மாற்றம் - சீவகன்பொருட்டு, மகள் கேட்க வந்த சான்றோர் சொல்லிய சொல். நாய்கன் - வணிகனான குபேரதத்தன். வெய்ய.....தேற்றான் - வெய்ய தேனை வாயிடத்தில் கொண்டால் நஞ்சென்று விழுங்காமலும், இனிமையால் உமிழாமலும் இருப்பதுபோல இவன் விரதத்தால் உடம்படாமலும் சீவகனுடைய மறுமலும் இருந்தான். நோற்றிலாதேன் - நல்வினையில்லாத யான். மையல் கொண்டு - மயங்கி. மதியில் சூழ்ந்தாள் - அறத்தொடு நிற்க நினைத்தாள்.

இஃது இங்ஙனமிருக்கச் சுரமஞ்சரி தான் சீவகனை மணக்க விரும்பிய விருப்பத்தைத் தன் தோழிக்குரைத்தாள்; அவள் அதனைத் தன் அன்னைக்குச் சொன்னாள். அவ்வன்னையாகிய செவிலித்தாய், சுரமஞ்சரியின் நற்றாயாகிய சுமதிக்கு உரைத்தாள்; அவள் குபேரதத்தனுக்குக் கூற, அவனும் உளம் மகிழ்ந்து சீவகற்கு மகட்கொடை நேர்ந்தான்.

## திருமணம் செய்தல்

கேட்பது விரும்பி நாய்கன்
கிளைக்கெலா முணர்த்தி யார்க்கும்
வேட்பன அடிசி லாடை
விழுக்கலன் மாலை சாந்தம்
கோட்குறை வின்றி யாக்கிக்
குழுமியங் கறங்கி யார்ப்ப
நாட்கடி மாலை யாற்கு
நங்கையை நல்கி னானே. ருருக

சீவகன் சுரமஞ்சரியுடன் இன்புற்றிருக்கையில் ஒரு நாள் தான் அவளிற் பிரிந்து செல்லவேண்டி யிருத்தலைத் தெரிவித்தான்.

## சுரமஞ்சரி பிரிவிற்குடன்படல்

"கருமம்நீ கவல வேண்டா
கயற்கணாய்! பிரிவல் சின்னாள்
அருமைநின் கவினைத் தாங்க
லதுபொருள்" என்று கூறப்
"பெரும,நீ வேண்டிற் றல்லால்
வேண்டுவ பிறிதொன் றுண்டோ?
ஒருமைநின் மனத்திற் சென்றே
னுவப்பதே யுவப்ப" தென்றாள். ருருஉ

ருருக. கிளைக்கெலாம் - சுற்றத்தார்க்கெல்லாம். வேட்பன - விரும்பப்படுவனவாகிய. கோள் குறைவின்றி - கொள்ளக் குறைவின்றி. குழும் இயம் - பலவாகிய வாச்சியம். நாட் கடி - நல்ல நாளில் மணம் செய்து.

ருருஉ. தாங்கல் - தாங்குவாயாக. அது பொருள் - அஃது அருமையுடைய பொருள். வேண்டிற்று - வேண்டியது எதுவோ அது தவிர. ஒருமை - ஒரு நெறிப்பட்ட. சென்றேன் - ஒழுகினேன்.

## சீவகன் பிரிந்து சென்று தன் மனையை யடைதல்

நாறொடு மிடைந்த தேங்கொள்
நடுக்குறு கிளவி கேட்டே
பூண்வடுப் பொறிப்பப் புல்லிப்
புனைநலம் புலம்ப வைகேன் ;
தேன்மிடை கோதை ! யென்று
திருமக னெழுந்து போகி
வாண்மிடை தோழர் சூழத்
தன்மனை மகிழ்ந்து புக்கான். ருரு௩

சீவகன் வரவு கண்ட சுநந்தை பெரிதும் வருந்தி மெலிந்தாள். கந்துக்கடன் ஒருவாறு ஆற்றினான். சீவகன் பிரிவாலுண்டாய துன்பத்தை நினைந்து சுற்றத்தார் பலரும் புலம்பித் தேறினர். இந்த ஆரவாரத்தால் சீவகன் வரவு அரசனுக்குப் புலனாகிவிடும் என்று அஞ்சிய கந்துக்கடன் "இன்று என் தந்தை இவ்வுலகு நீத்த நாள்" என்று வெளியார்க்குத் தெரிவித்தான். பின்பு அனைவரும் மகிழ்ச்சி யெய்தினர். முதற்கண் சீவகன் காந்தருவதத்தை யிருந்த மனையை யடைந்து அவளைக் கண்டான். அவனுக்கு அவள் குணமாலையின் ஆற்றாமையினை எடுத்து இயம்பினாள். உடனே, சீவகன் குணமாலையைச் சென்று எய்தினான்.

## குணமாலை தன்னை நொந்துரைத்தல்

தீவினை யுடைய வென்னைத்
தீண்டன்மின் அடிகள் வேண்டா ;
பாவியேன் என்று நொந்து
பரிந்தழு தருகி நையக்
காவியங் கண்ணி யொன்றுங்
கவலல்யான் உய்ந்த தெல்லாம்

---

ருரு௩. மிடைந்த - செறிந்த. தேங் கொள் - இனிமை கொண்ட. வடுப் பொறிப்ப - வடுவைச் செய்ய. புலம்ப - தனிமைப்பட. வைகேன் - பிரிந்திரேன். வாள்மிடை தோழர் - வாளேந்திய தோழர்.

நாவியே நாறு மேனி
நங்கைநின் தவத்தி னென்றான். ருருச

## சீவகன் அவளைத் தேற்றிவிட்டுப் பிரிதல்

இளையவள் மகிழ்வ கூறி
இன்றுயி லமர்ந்து பின்னாள்
வினைபொரு ளாய வெல்லாம்
தாதைக்கே வேறு கூறிக்
கிளையவர் சூழ வாமான்
வாணிக னாகிக் கேடில்
தலையவிழ் தாம மார்பன்
தன்னகர் நீங்கி னானே. ருருரு

---

ருருச. பரிந்து - அன்புற்று. நைய - வருந்த. ஒன்றும் கவலல் - சிறிதும் வருந்தாதே. நாவி - கத்தூரி. "இவளைத் தீண்டிச் சீவகன் கொலையுண்டான் என்று உலகம் கூறலின் 'தீவினையுடைய என்னை' என்றாள். தான் விலக்கவும் இவன் தீண்டலின் பின்னும் 'வேண்டா' என்றாள். இவனைப் பெற்று வைத்தும் இங்ஙனம் நீக்கிக் கூறவேண்டலின் 'பாவியேன்' என்றாள்.

ருருரு. இளையவள் - குணமாலை. துயிலமர்ந்து - கூடியிருந்து. வினை பொருள் - மேல் முடியத் தருவனவற்றை. வாமான் வாணிகன் - தாவும் குதிரை வாணிகன்.

# ௧௦. மண்மகள் இலம்பகம்

**மண்மகள் இலம்பகம் :** ஏமாங்கத நாட்டை விட்டுக் குதிரை வாணிகன் உருக்கொண்டு விதைய நாடு அடைந்து, தன் மாமன் கோவிந்தராசனைக் கண்டு வணங்கி, நிகழ்ந்தது கூறி இனிதிருந்தான். கோவிந்தராசன் தன் மகன் சீதத்தனுக்கு அரசளித்து, தான் எல்லோரோடுமிருந்து, கட்டியங்காரனது சூழ்ச்சி யறிந்து அவனை வஞ்சனையால் விதைய நாட்டிற்கு வருவிக்க எண்ணி, தன்பாலுள்ள திரிபன்றி எந்திரத்தை எய்து வீழ்ப்பவனுக்குத் தன் மகள் இலக்கணையை மணம் செய்து தருவதாக ஓலை போக்கினன். பல நாட்டிலுமிருந்து அரசகுமாரர் போந்து அப் பன்றியை எய்ய மாட்டாது இளைத்தனர். கட்டியங்காரனும் அப்போழ்து தன் மக்களுடன் வந்திருந்தான். முடிவில் சீவகனே அப் பன்றியை எய்து யாவரும் புகழும் ஏற்றம் எய்தினன். அவன் இன்னனென்று கோவிந்தராசன் ஆங்கிருந்த அரசர்க்கு அறிவிப்ப, வானில் இயக்கனொருவன் தோன்றி, “கட்டியங்காரனாகிய கரியைச் சீவகனென்னும் கரிமா கொல்லும்” என்றுரைத்துப் போயினன். உடனே கட்டியங்காரன் போருக்கு எழுந்தான். இருதிறத்தார் தானையும் கடும்போர் புரிந்தன; கட்டியங்காரன் சீவகன் அம்பால் உயிர் துறந்தான்; அவன் மக்களும் போரில் பட்டனர். விசயை இச் செய்தி யறிந்து மிக்க மகிழ்ச்சி கொண்டாள்.

இராசமாபுரத்தை விட்டு நீங்கிய சீவகனும் அவன் தோழரும் பலவகை நிலங்களையும் கடந்து ஆங்காங்கே தோன்றும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வுற்று விதைய நாட்டை யடைந்து யாற்றங் கரையில் தங்கி இளைப் பாறலாயினர்.

### விதையநாட் டரசனாகிய கோவிந்தராசனுக்குச் சீவகன் தன் வரவைத் தெரிவித்தல்

அள்ளிலைப் பலவி னளிந்துவீழ் சுளையும்
கனிந்துவீழ் வாழையின் பழனும்
புள்ளிவா ழலவன் பொறிவரிக் கமஞ்சூல்
நெண்டினுக் குய்த்துநோய் தணிப்பான்

பள்ளிவாய் நந்து மாமையும் பணித்துப்
பன்மலர் வழிபடக் குறைக்கும்
வெள்ளநீர்ப் படப்பை விதையம்வந் தடைந்தே
வேந்தனுக் குணர்த்தமுன் விடுத்தார். ௫௫௬

சீவகனது வரவறிந்த கோவிந்தராசன் நகரத்தை அணி செய்து சீவகனைச் சிறப்பாக வரவேற்குமாறு நகரமக்கட்குப் பணித்தான். நகர மக்கள் அவ்வண்ணமே நகரத்தைத் தேவருலகுபோல அணிசெய்து சிறப்பித்தனர்.

### நகரமக்கள் சீவகனை வரவேற்றல்

மின்தோய் வரைகொன்ற வேலோன் புகுதக;
இன்தேன் கமழ்தார் இயக்கன் புகுதக;
வென்றோன் புகுதக; வீரன் புகுதக,
என்றே நகரம் எதிர்கொண் டதுவே. ௫௫௭

### சீவகன், யானை யிவர்ந்து சென்று மன்னன் கோயிலை யடைதல்

விளங்குபாற் கடலிற் பொங்கி
வெண்டிரை யெழுவ வேபோல்
துளங்கொளி மாடத் துச்சித்
துகிற்கொடி நுடங்கும் வீதி
உளங்கழிந் துருவப் பைந்தார்
மன்னவன் கோயில் சேர்ந்தான்
இளங்கதிர்ப் பருதி பௌவத்
திறுவரை யிருந்த தொத்தான். ௫௫௮

---

௫௫௬. அள்ளிலை - செறிந்த இலை. அளிந்து - நன்கு பழுத்து. புள்ளிவாழ் அலவன் - புள்ளி பொருந்திய நண்டு. கமஞ்சூல் ஞெண்டு - நிறைந்த சூல் கொண்ட பெடை நண்டு. பள்ளி - இடம். பணித்து - மிதித்து. வழிபட - வழியுண்டாகுமாறு. படப்பை - தோட்டம்; வயலுமாம். விடுத்தார் - ஆள் விட்டார். அலவன் ஞெண்டுக்குச் சுளை முதலியவற்றை உற்று, நோய் தணிப்பான் வழிபடக் குறைக்கும் படப்பையையுடைய விதையம் என்க.

௫௫௭. மின் தோய் வரை - முகில் தவழும் மலை. வென்றோன் - அருகன். புகுதக - புகுதுக; ஒரு சொல். நகரம் - நகரில் உள்ளவர்.

௫௫௮. துளங்கொளி மாடத்து - ஒளி விளங்குகின்ற மாடங்களின். உளங்கழித் துருவப்பைந்தார் - மார்பிடத்தே கிடந்து அழகு செய்யும் பசிய மாலை. இளங்கதிர்ப் பருதி - இளஞாயிறு. இறுவரை - எழுந்து தங்கும் மலை.

சென்ற சீவகன், வழியில் அரசன் மகள் இலக்கணை யிருந்த கன்னி மாடத்தைக் கடந்து வருகையில் அவளைக் கண்டு நீங்கினான். இலக்கணையும் அவனைக் கண்டு கருத் திழந்து நின்றாள்.

### இலக்கணை சீவகனைக் காண்டல்

தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப் பூப்போல்
காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்கண் தம்மால்
தேமலர் மார்பி னானை நோக்கினாள் ; செல்வன் மற்றப்
பூமலர்க் கோதை நெஞ்ச மூழ்கிப்புக் கொளித்திட் டானே.

### சீவகன் தன் மாமனைக் கண்டு வணங்குதல்

மைதோய் வரையி னிழியும்புலி போல மைந்தன்
பெய்தாம மாலைப் பிடியின்னிழிந் தேகி மன்னர்
கொய்தாம மாலைக் கொழும்பொன்முடி தேய்த்தி லங்கும்
செய்பூங் கழலைத் தொழுதான் சென்னி சேர்த்தினானே. ருகூ0

### கோவிந்தராசன் சீவகனைத் தழீஇக் கொளல்

பொன்னங் குவட்டிற் பொலிவெய்தித் திரண்ட திண்டோள்
மன்னன் மகிழ்ந்து மருமானை விடாது புல்லித்
தன்னன்பு கூரத் தடந்தாமரைச் செங்கண் முத்தம்
மின்னும் மணிப்பூண் விரைமார்பம் நனைப்ப நின்றான். ருகூக

### கோயிலவர் சச்சந்தனை நினைந்து புலம்பல்

ஆனாது வேந்தன் கலுழ்ந்தானெனக் கோயி லெல்லாம்
தானாது மின்றி மயங்கித்தடங் கண்பெய் மாரி

---

ருருகூ. போது - பூ. கருமழைத் தடங்கண்கள் - கரிய குளிர்ந்த பெரிய கண்கள். பூமலர்க் கோதை - இலக்கணை, மூழ்கிப் புக்கு - புக்கு மூழ்க என இயைக்க. அவள் நெஞ்சிலே புகுந்து மறைய.

ருகூ0. மை தோய் வரை - முகில் தவழும் மலை. பெய்தாம மாலைப் பிடியின் - பெய்யப்பட்ட பொன்னரிமாலை யணிந்த பிடியின்மேலிருந்து. கொய் தாம மாலை - கொய்த ஒழுங்குபட்ட மாலை. மன்னர் முடி தேய்த் திலங்கும் கழலைத் தொழுது சென்னி சேர்த்தினான் என்க.

ருகூக. குவட்டின்—குவடுபோல. செங்கண் முத்தம் - செங்கண்ணில் சொரிந்த நீர்த்துளி. விரை மார்பம் - மணம் கமழும் மார்பு.

தேனூர் மலரீர்த் தொழுகச் சிலம்பிற் சிலம்பும்
கானூர் மயிலின் கணம்போற் கலுழ்வுற்ற தன்றே. ருகூஉ

### விசயை சோர்ந்து தேற்றுதல்

பகைநரம் பிசையுங் கேளாப்
பைங்கதிர்ப் பசும்பொன் கோயில்
வகைநலம் வாடி யெங்கும்
அழுகுரல் மயங்கி முந்நீர்
அகமடை திறந்த தேபோல்
அலறக்கோக் கிளைய நங்கை
மிகைநலத் தேவி தானே
விலாவணை நீக்கி னாளே. ருகூங

### பின்பு கோவிந்தராசன் தன் அமைச்சருடன் சீவகன் உடனிருப்பத் தன் மகன் சீதத்தனுக்கு முடி சூட்டல்

உலந்தநா ளவர்க்குத் தோன்று
தொளிக்குமீன் குளிக்கும் கற்பிற்
புலந்தவே னெடுங்கட் செவ்வாய்ப்
புதவிநாட் பயந்த நம்பி
சிலம்புநீர்க் கடலந் தானைச்
சீதத்தற் கரசு நாட்டிக்
குலந்தரு கொற்ற வேலான்
கொடிநகர் காக்க வென்றான். ருகூச

ருகூஉ. ஆனாது, - அமையாது. தானாது மின்றி - தானென்கிற தன்மை யாதுமின்றி. கண் பெய் மாரி - கண்களிற் சொரிந்த கண்ணீர். சிலம்பில் சிலம்பும் - மலையிடங்களில் ஒலிக்கும். கணம் - கூட்டம். கலுழ்வுற்றது - அழுதது. கோயிலெல்லாம் கலுழ்வுற்றது என்க.

ருகூங. நரம்பு இசை பகையும் கேளா - நரம்பிசையில் பகையும் கேட்டறியாத. நலம் வகை வாடி - நலத்தின் வகை பலவும் வாடி. முந்நீரகம் - கடலிடம். கோக்கு - கோவிந்தராசனுக்கு. மிகை நலத் தேவி - மிகையாகிய குணத்தையுடைய தேவி. விலாவணை - அழுகை.

ருகூச. நாள் உலந்தவர்க்குத் தோன்றாது ஒளிக்கும் மீன் - வாழ்நாள் அற்றவர் கண்ணுக்குத் தோன்றாது மறையும் அருந்ததி மீன். குளிக்கும் - தோற்கும். புலந்த வேல் - சினக்கின்ற வேல். புதவி - கோவிந்தராசன் மனைவி. நம்பி - சீதத்தன். குலந் தருதல் புதல்வரைப் பயந்து மேலும் குலத்தை வளர்த்தல்.

## கோவிந்தராசன் சீவகன் தோழர்க்குச் சிறப்புச் செய்தல்

மாற்றவ னொற்ற ரொற்று
வகையினின் மறைய நம்பிக்கு
ஆற்றின தோழர்க் கெல்லா
மணிகல மடிசி லாடை
வேற்றுமை யின்றி வேண்டூட்
டமைத்தன னருளி யிப்பால்
ஏற்றுரி முரச நாண
எறிதிரை முழக்கிற் சொன்னான். ௫௬௫

## அரசன் பணிப்ப, விரிசிகன் என்னும் அமைச்சன் கட்டியங்காரன் விடுத்திருந்த ஓலையைப் படித்தல்

விதையத்தார் வேந்தன் காண்க,
கட்டியங் கார னோலை ;
புதையவிப் பொழிலைப் போர்த்தோர்
பொய்ப்பழி பரந்த தென்மேற்
கதையெனக் கருதல் செய்யான்
மெய்யெனத் தானுங் கண்டான்
சிதையவென் னெஞ்சம் போழ்ந்து
தெளிப்பினும் தெளிநர் யாரே. ௫௬௬

இவ்வாறு முன்னுரை மொழிந்துகொண்ட கட்டியங்காரன், சச்சந்தனைத் தான் கொன்றதை மறைத்து; " அசனிவேகமெனும் அரசுவா மதம்பட்டுப் பாகர் நூற்றுவரைக் கொன்று திரிய, அரசன் சச்சந்தன் அதனை யடக்கிக் கந்திற்

௫௬௫. மாற்றவன் - பகைவனான கட்டியங்காரன். ஒற்றுவகை - ஒற்றியறியாதவாறு. ஆற்றின தோழர்க்கு - உதவியாகிய தோழன்மார்க்கு. வேண்டூட்டு அடிசில் - தாம் தாம் விரும்பும் பொருள்களையுடைய அடிசில். ஏற்று உரி - ஏற்றினுடைய தோல் போர்த்த. " நீ கொன்ற சீவகன் தோழர்க்குக் கோவிந்தன் சிறப்புச் செய்தானென்று ஒற்றர் கட்டியங்காரனுக்குக் கூறினால் மேல் உறவாகி யாம் கொலை சூழ்கின்றது தவறு மென்று கருதி மறையக் கொடுத்தான்." சீவகன் குதிரை வாணிகன் வேடத்தில் இருத்தலால் அவனை ஒற்றர் அறிவது முடியாது.

௫௬௬. பொய்ப் பழி புதையப் பரந்தது - பொய்யாக ஒரு பழி முழுதும் பரந்தது. பொழில் - உலகம். சிதையப் போழ்ந்து - சிதையும்படி பிளந்து. தெளிப்பினும் - தெளிவித்தாலும்.

பிணிக்குங்கால் அவனை அது வீழ்த்துக் கொன்றது; இனி, நீயே போந்து இவ் வரசுரிமையை ஏற்று என்மீது படரும் பழியைப் போக்குதல் வேண்டும்; நின் பொருட்டு யான் என் உயிரையும் ஈகுவன்'' என்று எழுதி யிருந்தான்.

### சீவகன் உரைத்தல்

ஓலையுட் பொருளைக் கேட்டே
யொள்ளெயி றிலங்க நக்குக்
காலனை யளியன் தானே
கையினால் விளிக்கு மென்னா
நூல்வலீர்! இவனைக் கொல்லும்
நுண்மதிச் சூழ்ச்சி யீதே
போல்வதொன் றில்லை யென்றான்
புனைமணிப் பொன்செய் பூணான். ருசுஎ

### கோவிந்தராசன் கூறல்

கள்ளத்தால் நம்மைக் கொல்லக்
கருதினான்; நாமும் தன்னைக்
கள்ளத்தா லுயிரை யுண்ணக்
கருதினேம்; இதனை யாரும்
உள்ளத்தா லுமிழ வேண்டா;
வுறுபடை வந்து கூட
வள்ளுவர் முரச மூதூர்
அறைகென அருளி னானே. ருசுஅ

போர்க் குறிப்பின்றி நட்பு முறையில் பெரும்படை திரள்க என்று அரசன் பணித்தவாறே பதினாயிரத் தறு நூறு யானைப் படையும், அறுபதினாயிரம் குதிரைப் படை

---

ருசுஎ. அளியன் - இகழ்ச்சிக் குறிப்பு. விளிக்கும் - அழைக்கின்றான். நூல் வலீர் - நூல் பலவும் கற்ற வல்லோர்களே. நுண்மதிச் சூழ்ச்சி - நுண்ணிய மதியால் செய்த வஞ்சம். ஈது - நட்பாய்ப் போதுகின்ற இது. பூணான் - சீவகன்.

ருசுஅ. உள்ளத்தால் உமிழவேண்டா - உள்ளத்திலிருந்து எவரும் வெளியே புலப்படுத்தவேண்டா. உறுபடை - மிக்கபடை. வள்ளுவார் முரசம் - வளவிய வார்க்கட்டமைந்த முரசு; வள்ளுவர் முடிக்கும் முரசு எனினுமாம்.

யும், இருபதினுயிரத் தறுநூறு தேர்ப்படையும், நான்கு நாறுயிரம் காலாட்களுமாகிய பெரும்படை திரண்டது. இங்ஙனம் எழுந்த இக் கடல் போலும் தானை இராசமாபுரத்தை நோக்கிச் சென்று, அந் நகர்ப்புறத்தே இறுத்தது. கோவிந்தராசனும் புரிசைப்புறமே தனக்குக் கோயிலாகக் கொண்டான்.

### கட்டியங்காரன் கோயிலில் துந்நிமித்தம் தோன்றல்

போக மகளிர் வலக்கண்கள் துடித்த ;
  பொல்லாக் கனக்கண்டார் ;
ஆக மன்னற் கொளிமழுங்கிற்று ;
  அஞ்சத் தக்க குரலினால்
கூகை கோயிற் பகற்குழறக்
  கொற்ற முரசம் பாடவிந்து
மாக நெய்த்தோர் சொரிந்தெங்கும்
  மண்ணும் விண்ணும் அதிர்ந்தவே. ருசுக

இதனை யறியாத கட்டியங்காரன், கோவிந்தன் வரவு கேட்டு இவனையும் கொன்றுவிட்டதாகவே மகிழ்ந்து நட்புக் குறியாக, இருநூறு யானைகளும், ஆயிரம் குதிரைகளும், நூறு தேரும் விடுப்ப, கோவிந்தனும், வாரி மஞளனென்னும் யானையும், விசயமென்னும் தேரும், பவன வேகமென்னும் குதிரையும் கட்டியங்காரனுக்கு விடுத்தான். இவ்வகையால் இருவரும் நட்புடையராய் இருந்து வரலாயினர்.

### கோவிந்தராசன் தன்பாலுள்ள திரிபன்றி வென்றியுற எய்தார்க்கு என் மகள் இலக்கணையுரியள் என முரசறைவித்தல்

"பெருமகன் காதற் பாவைப் பித்திகைப் பிணையல் மாலை
  யொருமகள், நோக்கி னுரை யுயிரொடும் போகொடாத

ருசுக. போகமகளிர் - உரிமை மகளிர். மன்னற்கு ஆகம் ஒளி மழுங்கிற்று - கட்டியங்காரனது மேனி ஒளி கெட்டது. பகற் குழற - பகற்போதிலே கூவ. பாடவிந்து—ஒலி அவிய. மாகம் - விண்ணினின்று. நெய்த்தோர் - குருதி. சொரிந்து - சொரிய.

திருமகள் அவட்குப் பாலான், அருந்திரி பன்றி யெய்த
அருமக னுகு" மென்றுங் கணிமுர சறைவித் தானே.

இச் செய்தி ஏனையரசர் பலர்க்கும் தெரிவிக்கப்பட்டது. பல்வேறு நாட்டு அரசகுமாரர் அனைவரும் நகரத்திடத்தே வந்து நிறைந்தனர். கட்டியங்காரனும் ஆங்கே வந்திருந்தான். அரசகுமாரர் அனைவரும் அத் திரிபன்றியை எய்வதற்கு முயன்று தம் முயற்சி முற்றாராயினர். இவ்வாறு ஆறுநாட்கள் சென்றன.

### சீவகன் யானையிவர்ந்து அங்கே வருதல்

காரின் முழங்குங் களிறும் கடலின் முழங்குந் தேரும்
போரின் முழங்கும் புரவிக் கடலும் புகைவாட் கடலும்
சீரின் முழங்கும் முரசும் அலறுஞ் சிறுவெண் சங்கும்
நீரின் முழங்க முழங்கும் நீல யானை யிவர்ந்தான். ௫௭௧

### கட்டியங்காரன் சீவகனைக் கண்டு துனுக்குறல்

கல்லார் மணிப்பூண் மார்பிற் காம னிவனே யென்ன
வில்லார் கடலந் தானை வேந்தர் குழாத்துட் டோன்றப்
புல்லான் கண்ணி னேக்கிப் புலிகாண் கலையிற் புலம்பி
ஒல்லா னெல்லா னுகி யுயிர்போ யிருந்தான் மாதோ. ௫௭௨

### சீவகன் திரிபன்றி யெய்து வீழ்த்தல்

அருந்தவக் கிழமை போல இருதவில் லருத நாண்வாய்த்
திருந்தினர் சிந்தை போலும் திண்சரம் சுருக்கி மாறாய்

---

௫௭௦. பெருமகன் - கோவிந்தராசன். பித்திகைப் பிணையல் - பித்திகைப் பூவால் தொடுத்த மாலை. பித்திகை - பிச்சியென்னும் ஒரு வகைப் பூ; இது பித்திகம் எனவும் வழங்கும். "பைங்காற் பித்திகத் தாயிதழலரி" (குறிஞ்சி) என வருதல் காண்க. போகொடாத - போக விடாத. பாலான் - கணவனுவான். அருமகன் - அரிய ஆண்மகன்.

௫௭௧. காரின் - மழை முகில்போல. போரின் - போர்த்தொழிலால் - புகை வாள் - நெருப்புப் புகையும் வாள். சீரின் - சீரோடு. நீரின் முழங்க - நீர்மையுடன் முழங்க. நீல யானை - கரிய யானை.

௫௭௨. கல்லார் மணி - கல்லிடத்தே பெற்ற மணி. வில்லார் கடலந் தானை - வில்லேந்திய கடல்போலும் தானை. ஒல்லான் - மனம் பொருந்தாமல். புல்லான் - தான் நிற்கும் முறைமையில் நிற்கமாட்டாது. உயிர் - அறிவு. புலம்பி - உளைந்து.

இருந்தவன் பொறியும் பன்றி யியற்றரும் பொறியு மற்றுங்கு
ஒருங்குட னுதிர வெய்தா னூழித்தீ யுருமோ டொப்பான்.

### கோவிந்தன் எல்லாருமறியச் சீவகனது குலமுறை எடுத்துக் கூறல்

இலங்கெயிற் றேனமேவுண் டிருநிலத் திடித்துவீழக்
கலங்குதெண் டிரையும் சூருங் கடுவளி முழக்கு மொப்ப
உலம்புபு முரசங் கொட்டி யொய்யெனச் சேனை யார்ப்பக்
குலம்பகர்ந் தறைந்து கோமான் கோவிந்தன் கூறி னானே.

### வானிடத்தே இயக்கன் தோன்றிக் கூறல்

வானிடை யொருவன் தோன்றி மழையென முழங்கிச் சொல்லும்:
தேனுடை யலங்கல் வெள்வேல் சீவக னென்னுஞ் சிங்கம்
கானுடை யலங்கல் மார்பிற் கட்டியங் கார னென்னும்
வேன்மிடை சோலை வேழத் தின்னுயிர் விழுங்கு மென்றான்.

### கட்டியங்காரன் சினந்து கூறல்

விஞ்சையர் வெம்படை கொண்டுவந் தாயென
அஞ்சுவ லோவறி யாயென தாற்றலை
வெஞ்சம மாக்கிடின் வீக்கறுத் துன்னொடு
வஞ்சனை வஞ்ச மறுத்திடு கென்றான். ருஎசு

---

ருஎங. இருத - முறியாத. திருந்தினர் - முனிவர். சுருக்கி - வில்லுள்ளேயாகும்படி தொடுத்து. மாறாய் இருந்தவன் பொறி - கட்டியங்காரனது நல்வினை. இயல்தரும் பொறி - திரியும் பொறி. ஒருங்குடன் - ஒரு சேர. ஊழித் தீ யுரும் - ஊழித்தீயும் இடியும். தவக்கிழமை - தவம் தன் பயனைத் தரும் உரிமை.

ருஎச. ஏனம் - பன்றி. ஏவுண்டு - அம்பால் அறுப்புண்டு. தெண் திரை - தெளிந்த அலையையுடைய கடல். உலம்புபு - முழக்கஞ்செய்து. குலம் பகர்ந்து அறைந்து - சீவகன் குலத்தை முதற்கண் கட்டியங்காரனுக்கு உரைத்துப் பின் ஏனை யெல்லோருக்கும் அறிவித்து.

ருஎரு. அலங்கல் - மாலை. கான் - மணம். வேல் மிடை சோலை வேழத்து - வேலாகிய சோலையில் நிற்கின்ற யானையினுடைய. இன்னுயிர் - தன்னை யொழிந்த மற்றையோர்க்குத் தீதாய் நிற்கும் உயிர். ஒருவன் - இயக்கன்.

ருஎசு. வெம்படை - கொடும்படை. அறியாய் - நீ யறியாய்; நின் தந்தை அறிவன் என்றவாறு. வீக்கு - பெருமை. வஞ்சனை - வஞ்சனையாக வருவித்த கோவிந்தராசனை. அறுத்திடுகு - அறுத்திடுவேன்.

## மதனன் வெருளுதல்

சூரியற் காண்டலுஞ் சூரிய காந்தமஃது
ஆரழ லெங்ஙனங் கான்றிடும் அங்ஙனம்
பேரிசை யானிசை கேட்டலும் பெய்ம்முகிற்
காரிடி போன்மத னன்கனன் றிட்டான். ௫௭௭

## கட்டியங்காரன் மக்கள் நூற்றுவரும் எழுதல்

காற்படை யுங்களி றுங்கலி மாவொடு
நூற்படு தேரும் நொடிப்பினிற் பண்ணி
நாற்படை யுந்தொகுத் தான்மக்கள் நச்சிலை
வேற்படை வீரரொரா் நூற்றுவர் தொக்கார். ௫௭௮

## சீவகனது படைத் தொகை

பார்நனை மதத்த பல்பேய் பருந்தொடு பரவச் செல்லும்
போர்மதக் களிறு பொற்றேர் நான்கரைக் கச்ச மாகும் ;
ஏர்மணிப் புரவி யேழா மிலக்கமேழ் தேவ கோடி,
கார்மலி கடலங் காலாள் கற்பகத் தாரி னற்கே. ௫௭௯

## கட்டியங்காரனது படைத் தொகை

நிழன்மணிப் புரவித் திண்டேர் நிழறுழாய்க் குனிந்து குத்தும்
அழல்திகழ் கதத்த யானை யைந்தரைக் கச்ச மாகும்;
எழின்மணிப் புரவி யேழா மிலக்கமேழ் தேவ கோடி
கழன்மலிந் திலங்குங் காலாள் கட்டியங் காரற் கன்றே.

---

௫௭௭. சூரிய காந்தம் - சூரிய காந்தக் கல். ஆர் அழல் - அரிய தீ. பேரிசையான் - சீவகன். இசை - வெற்றி. கார் இடி - கார் மழையில் முழங்கும் இடி. கனன்றான் - வெகுண்டான்.

௫௭௮. காற் படை - காலாட்படை. கலிமா - கலிக்கின்ற குதிரைப் படை. நூல் படு தேர் - நூல்வழிப் பட்ட தேர். நொடிப்பு - ஒரு நொடிப்பொழுதில். நூற்றுவர் - கட்டியங்காரன் மக்கள் நூற்றுவரும் ; முற்றும்மை தொக்கது.

௫௭௯. பார் நனை - நிலமெல்லாம் நனைந்து ஈரமாக்கும். நான்கரைக் கச்சம் - நாலரைக் கச்சம். ஏர் - அழகிய. கற்பகத் தாரினன் - கற்பகமாலை யணிந்த சீவகன். "கச்சம், தேவகோடி யென்பன சில எண்ணுப் பெயர்." கார் - கருமை.

௫௮௦. நிழல் மணி - ஒளி திகழும் மணி. நிழல் துழாய்க் குனிந்து குத்தும் அழல் திகழ் கதத்த யானை - தன் நிழலைப் பகை யென்று மருண்டு கையால் துழாவிக் குனிந்து கோட்டால் குத்திச் சினம் சிறக்கும் யானை. தேரும் யானையும் தனித்தனி ஐந்தரைக் கச்சம் என்க.

### விசயனொடு பொருது மதனன் வீழ்தல்

காளமா கிருளைப் போழ்ந்து
கதிர்சொரி கடவுட் டிங்கள்
கோளரா விழுங்க முந்நீர்க்
கொழுந்திரைக் குளித்த தேபோல்
நீளம ருழக்கி யானை
நெற்றிமேற் றத்தி வெய்ய
வாளின்வாய் மதனன் பட்டான்
விசயன்போர் விசயம் பெற்றான். ருஅக

### மதனன் தம்பியாகிய மன்மதன் பொருது மடிதல்

தோளினு லலைக்க மேந்தித் தும்பிமே லிவரக் கையால்
நீளமாப் புடைப்பப் பொங்கி நிலத்தவன் கவிழ்ந்து வீழக்
கீளிரண் டாகக் குத்தி யெடுத்திடூக் கிளர்பொன் மார்பன்
வாளினாற் றிருகி வீசி மருப்பின்மேற் றுஞ்சி னானே. ருஅஉ

### தேவதத்தன் மகத வேந்தனை வெல்லுதல்

செண்பகப் பூங்குன் றொப்பான் தேவமா தத்தன் வெய்தா
விண்புக வுயிரைப் பெய்வான் வீழ்தரு கடாத்த வேழ
மண்பக இடிக்குஞ் சிங்க மெனக்கடாய் மகதர் கோமான்
தெண்கடற் றானை யோட நாணிவேல் செறித்திட் டானே.

---

ருஅக. காளமாகு இருள் - கருமை மேன்மேலும் பெருகும் இருள். போழ்ந்து - கெடுத்து. விழுங்க - விழுங்கவர அதற்கு அகப்படாதே உயரப் போய்ப் பின்பு. முந்நீர் - கடல். நீளமர் - நெடிய போர். போர் - போரிலே. விசயம் - வெற்றி.

திங்கள் அரா விழுங்க உயரப்போய்ப் பின்பு முந்நீர்த்திரையுள் குளித்ததுபோல், மதனன், யானை நெற்றிமேல் தத்தி, விசயன் வாளின் வாய்ப் பட்டான் என்க.

ருஅஉ. தும்பி - விசயன் ஏறியிருந்த யானை. இவர - மன்மதன் பொங்கி வர. நீளமா - சேய்மைக்கட் செல்லுமாறு. புடைப்ப - தண்டாலடிக்க. இரண்டு கீளாக - இரண்டு கூறாக. திருகி - உடம்பைத் திருகி. துஞ்சினான் - இறந்தான்.

ருஅங. பொன்னணிதலால் சண்பகம் பூத்த மலையை யொப்பவனான தேவதத்தன். பெய்வான் - புகும்படியாக. வீழ்தரு கடாத்த - பொழிகின்ற மதத்தையுடைய, மண் பக - நிலம் பிளக்கும்படி. கடாய் - வேழத்தைச் செலுத்தி, தானை ஓட - தானை வீரர் முதுகிட்டோட. செறுத்திட்டான் - எறியாது மீண்டான்.

## சீதத்தன் கலிங்கர் கோனை வீழ்த்துதல்

சின்னப்பூ அணிந்த குஞ்சிச் சீதத்தன் சினவு பொன்வாள்
மன்னநட் கலிங்கர் கோமான் மத்தகத் திறுப்ப மன்னன்
பொன்னவிர் குழையும் பூணும் ஆரமும் சுடர வீழ்வான்
மின்னவிர் பருதி முந்நீர்க் கோளொடும் வீழ்வ தொத்தான்.

## கோவிந்தன் மாரட்டனென்னும் வேந்தனை வீழ்த்துதல்

கொடுஞ்சிலை யுழவன் மான்தேர்க்
  கோவிந்த னென்னும் சிங்கம்
மடங்கருஞ் சீற்றத் துப்பின்
  மாரட்ட னென்னும் பொற்குன்று
இடந்துபொற் றூளி பொங்கக்
  களிற்றொடு மிரங்கி வீழ
அடர்ந்தெரி பொன்செய் அம்பின்
  அழன்றிடித் திட்ட தன்றே. ௫௮௫

இவ்வாறே நபுலன் மகதையார் வேந்தனோடு பொருங்கால்; அவன் அஞ்சிக் கண் இமைப்ப, அவனோடு பொருதற்கு நாணி மீண்டான். அது கண்டு வீறுகொண்டு சென்ற விபுலன் தன்னொத்த வீரன் ஒருவனோடு பொருது அவனை விண்ணுலகேற்றினான். பதுமுகன் காமுகன் என்பானோடு போர்செய்து அவனை வீழ்த்தி, அவன் தம்பி கோமுகன் என்பானையும் வென்று மீண்டான். இவ்வண்ணம் சீவகன் தோழரும் தம்பியரும் பிறரும் கட்டியங்காரனுடைய தானைத் தலைவர் முதலாயினருடன் பொருது வென்றி யெய்தினர்.

---

௫௮௪. சின்னப்பூ - வீடுபூக்கள். பொன் வாள் - இரும்பாலாகிய வாள். மத்தகத்து இறுப்ப - தலையில் தங்கிற்றாக. பொன்னவிர் குழை - பொன்னாலாகிய குழை. வீழ்வான் - வீழ்கின்ற அக் கலிங்கர்கோன், பருதி கோளொடு முந்நீர்க்கண் வீழ்வ தொத்தான். பருதிக்கு அவனும், கோளுக்குக் குழை முதலியனவும் கொள்க.

௫௮௫. கொடுஞ்சிலை யுழவன் - கொடிய வில்வீரன். மான் தேர் - குதிரை பூட்டிய தேர், மடக்கரும் சீற்றத் துப்பின் - மடக்குதற்கு அரிய சினமும் வன்மையுமுடைய; மடக்கரு - விகாரம். இடந்து - பிளந்து. பொற்றூளி - மலையென்றதற்கு ஏற்பப் பொன்துகள் கூறினார். இறங்கி - தாழ்ந்து. அடர்ந்து - மண்டிச் சென்று. சிங்கம் இடித்திட்டது என்க.

## சீவகன் தேரேறுதல்

எரிமணிக் குப்பை போல இருளற விளங்கு மேனித்
திருமணிச் செம்பொன் மார்பிற் சீவகன் சிலைகை யேந்தி
அருமணி யரச ராவி அழலம்பிற் கொள்ளை சாற்றி
விரிமணி விளங்கு மான்தேர் விண்தொழ ஏறி னானே. ௫அ௬

## சீவகன் வில் குனித்துப் போருடற்றல்

அரசர்தம் முடியும் பூணும் ஆரமும் வரன்றி யார்க்கும்
முரசமும் குடையுந் தாரும் பிச்சமுஞ் சுமந்து மாவும்
விரைபரித் தேரு மீர்த்து வேழங்கொண் டொழுகி வெள்ளக்
குரைபுனற் குருதி செல்லக் குமரன்விற் குனிந்த தன்றே.

## இதுகண்டு அஞ்சியோடிய வீரர்க்குக் கட்டியங்காரன் அமைச்சனாகிய அரிச்சந்தன் கூறுதல்

தற்புறந் தந்து வைத்த தலைமகற் குதவி வீந்தார்
கற்பக மாலை சூட்டிக் கடியர மகளிர்த் தோய்வர் ;
பொற்றசொன் மாலை சூட்டிப் புலவர்கள் புகழக் கன்மேல்
நிற்பர்தம் வீரம் தோன்ற நெடும்புகழ் பரப்பி யென்றான்.

---

௫அ௬. குப்பை - குவியல். செம்பொன் - செம்பொன்னாலாகிய பூண்; திருமகளுமாம். அரிமணியரசர் - அரிய மணி வைத்திழைத்த முடியுடைய மன்னர். கொள்ளை சாற்றி - கொள்ளை கொள்ளும் தன்மையைத் தன் நெஞ்சிலே அமையப்பண்ணி. விண் தொழ - பார்த்து நின்ற விஞ்சையர் கைதொழ.

௫அ௭. குருதியாறு, முடி முதலியவற்றை வரன்றி, முரசு முதலியவற்றைச் சுமந்து, மாவும் தேரும் ஈர்த்து, வேழம் கொண்டு ஒழுகிச் செல்லும்படி, வில் வளைந்தது. குரை - முழங்குகின்ற. பிச்சம் - பீலியால் அமைத்த குடை.

௫அ௮. தற்புறந் தந்து - தம்மைப் பாதுகாத்து. வைத்த - உற்றவிடத்து உதவுவரென்று வைத்த. வீந்தார் - புகழ் நிற்க இறந்த வீரர். அரமகளிர் - துறக்கத்து மகளிர். தோய்வர் - கூடுவர். பொற்ற - அழகிய. புகழ - வெற்றியை வியந்து பாட. கன்மேல் நிற்பர் - நடு கல்லாய் வீரர் பரவ விளங்குவர்.

### அதுகேட்டு வீரத் தீ யெரியப்போந்த வீரர் மாண்டொழிய, கட்டியங்காரன் மைந்தர் நூற்றுவரும் போரிடை எதிர்தல்

திங்க ளோடுடன் குன்றெலாந்
 துளங்கி மாநிலஞ் சேர்வபோல்
சங்க மத்தகத் தலமரத்
 தரணி மேற்களி றழியவும்
பொங்கு மானிரை புரளவும்
 பொலங்கொள் தேர்பல முறியவும்
சிங்கம் போற்றொழித் தார்த்தவன்
 சிறுவர் தேர்மிசைத் தோன்றினர். ருஅகூ

### நூற்றுவரும் மடிதல்

கங்கை மாக்கடற் பாய்வதே போன்று காளைதன் கார்முகம்
மைந்த ரார்த்தவர் வாயெலாம் நிறைய வெஞ்சரம் கான்றபின்
நெஞ்சம் போழ்ந்தழ லம்புண நீங்கி னுருயிர் நீண்முழைச்
சிங்க வேறுகள் கிடந்தபோல் சிறுவர் தேர்மிசைத் துஞ்சினர்.

### தாமரைப்படை வகுத்திருந்த கட்டியங்காரன்மேல் சீவகன் செல்லுதல்

பொய்கை போர்க்களம் புறவிதழ்
 புலவு வாட்படை புல்லிதழ்
ஐய கொள்களி றகவித
 ழரச ரல்லிதன் மக்களா
மையில் கொட்டையம் மன்னனு
 மலர்ந்த தாமரை வரிசையால்

---

ருஅகூ. குன்றெலாம் - குன்றுகளெல்லாம். துளங்கி - நிலை கலங்கி. சங்கம் மத்தகத்து அலமர - சங்குகள் மத்தகத்திலே அசைய. மா நிரை - குதிரைப்படை. பொலம் - பொன். தொழித்து - வெகுண்டு.

ருகூ0. மாக் கடல் - கரிய கடல். காளை - சீவகன். கார்முகம் - வில். மைந்தர் ஆர்த்தவர் வாய் - ஆரவாரம் செய்த மைந்தர் வாயெல்லாம். கான்றபின் - செலுத்திய பின்பு. நெஞ்சம் - மார்பு. அம்பு உண - அம்பு உயிரை யுண்பதால். முழை - முழைஞ்சு (Caves). துஞ்சினர் - பட்டுக் கிடந்தனர்.

பைய வுண்டபின் கொட்டைமேல்
பவித்தி ரத்தும்பி பறந்ததே. ௫௱௧

## வந்த சீவகனை நோக்கி அசனி வேகத்தின்மே லிருந்த கட்டியங்காரன் கூறல்

நல்வினை யுடைய நீரார் நஞ்சுணி னமுத மாகும்
இல்லையே லமுதும் நஞ்சாம்; இன்னதால் வினையி னாக்கம்
கொல்வல்யா னிவனை யென்றும் இவன்கொல்லும் என்னை யென்றும்
அல்லன நினைத்தல் செல்லா ரறிவினாற் பெரிய நீரார். ௫௱௨

அகப்படு பொறியி னாரை யாக்குவா ரியாவ ரம்மா
மிகப்படு பொறியி னாரை வெறியராச் செய்ய லாமோ
நகைக்கதிர் மதியம் வெய்தா நடுங்கச்சுட் டிடுத லுண்டே
பகைக்கதிர்ப் பருதி சந்து மாலியும் பயத்த லுண்டே. ௫௱௩

புரிமுத்த மாலைப் பொற்கோல்
விளக்கினுள் பெய்த நெய்யும்
திரியுஞ்சென் றற்ற போழ்தே
திருச்சுடர் தேம்பி னல்லால்
எரிமொய்த்துப் பெருக லுண்டோ;
இருவினை சென்று தேய்ந்தால்
பிரிவுற்றுக் கெடாமற் செல்வம்
பற்றியா ரதனை வைப்பார். ௫௱௪

---

௫௱௧. போர்க் களம் - பொய்கை; புறவிதழ்-வாட்படை; கொல் களிறு - புல்லிதழ்; அரசர், அகவிதழ்; கட்டியங்காரன் மக்கள் - பூவின் அல்லி. அரசன் - கொட்டை. இது தாமரைப் பூவணி: (பதுமவியூகம்). பவித்திரத் தும்பி - குலனும் குணமும் தூயனென்பது தோன்ற, 'பவித் திரத் தும்பி' என்றார்.

௫௱௨. நீரார் - தன்மையினை யுடையவர். இல்லையேல் - நல்வினை யில்லையாயின். வினையின் ஆக்கம் - வினையினா லுண்டாகும் பெருக்கம்; பயன் அல்லன - பொருளல்லாத பேச்சுக்களை.

௫௱௩. அகப்படு பொறியினார் - பகைவர் கைப்படும் தீவினையாளர். தீவினை நீக்கி மேம்படுப்பவர். அரியர் - இல்லை. மிகப்படு பொறியினார் - மிக்குள்ள நல்வினைப் பயனை எய்துதற்கு உரியவர். வெறியா - வெற்றுடம் புடையராவார். மதியம் - திங்கள். வெய்தா - விரைவாக. பருதி - ஞாயிறு. ஆலி - ஆலங்கட்டி. பயத்தல் - விளைவித்தல்.

௫௱௪. புரி - வடம். கோல் - தண்டு. சென்றற்றபோழ்து - எரிந்து போன பிறகு. தேம்பினல்லால் - தேம்பிக் கிடப்பதொன்று தவிர, தேய்ந் தால் - மாண்டால். பரிவு - ஆதரவு. கெடாமல் - கெடாதபடி. பற்றிவைப் பார் - பிடித்துவைப்பவர்.

### இவ்வாறு பேசும் இவற்குச் சினம்பிறத்தல் வேண்டிச் சீவகன் நீ அஞ்சினாய் என்றல்

நல்லொளிப் பவளச் செவ்வாய்
நன்மணி யெயிறு கோலி
வில்லிட நக்கு வீரன்
"அஞ்சினாய்" என்ன, வேந்தன்
"வெல்வது விதியி னாகும்;
வேல்வரி னிமைப்பே னாயிற்
சொல்லிநீ நகவும் பெற்றாய்,
தோன்றல்மற் றென்னை" யென்றான். ௫௬௫

### கட்டியங்காரன் வஞ்சின முரைத்தல்

இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சின்
புல்லாள னாக மறந்தோற்பி னெனப்புகைந்து
வில்வா ளழுவம் பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக்
கொல்யானை யுந்திக் குடைமேலுமோர் கோல்தொ டுத்தான்.

### அவ்வம்புகளைச் சீவகன் அறுத்துக்கெடுத்தல்

தொடுத்தாங்க அம்பு தொடைவாங்கி விடாதமுன்ன
மடுத்தாங்க அம்புஞ் சிலையும் மதனாணு மற்றுக்
கடுத்தாங்கு வீழக் கதிர்வான்பிறை அம்பி னெய்தான்
வடித்தாரை வெள்வேல் வயிரம்மணிப் பூணினானே. ௫௬௭

---

௫௬௫. எயிறு கோலி - பல் வரிசை தோன்றி. வில்லிட நக்கு - ஒளி திகழ நகைத்து. வீரன் - சீவகன். வேந்தன் - கட்டியங்காரன். சொல்லி - அஞ்சினாய் என்ற சொல்லைச் சொல்லி. நகவும் பெற்றாய் - சிரிக்கக் கடவாய். பெற்றாய் கால மயக்கம்.

௫௬௬. இல்லாளையஞ்சி - மனைவிக்கு அஞ்சி. கொன்ற - மகிழ்வியாது விட்ட. புகைந்து - சினந்து. வில்லாள் அழுவம் - வில் வீரர் கடல். உந்தி - சீவகன் மேல் கடவி. கோல் - அம்பு.

௫௬௭. ஆங்குத் தொடுத்த அம்பு - கட்டியங்காரன் அங்கே தொடுத்த அம்பை. தொடை வாங்கி - அம்பை விசைத்து வாங்கி. மடுத்து - அம்புகளை நிறைத்து. ஆங்க - அசை. கடுத்து - கடுகி. பிறையம்பின்-பிறை போல வாயினையுடைய அம்பினாலே. வடித்தாரை வேல் - கூரிய நீண்ட வேல். பூணினான் - சீவகன்.

### கட்டியங்காரன் சினந்து சீவகன் தேர்மேற் பாய்தல்

அம்புஞ் சிலையு மறுத்தானென் றழன்று பொன்வாள்
வெம்பப் பிடித்து வெகுண்டாங்கவன் தேரின் மேலே
பைம்பொன் முடியான் படப்பாய்ந்திடு கென்று பாய்வான்
செம்பொன் னுலகி னிழிகின்றவொர் தேவ னொத்தான்.

### கட்டியங்காரன் வீழ்தல்

மொய்வார் குழலார் முலைப்போர்க்கள மாய மார்பிற்
செய்யோன் செழும்பொற் சரம்சென்றன; சென்ற தாவி ;
வெய்தா விழியா வெருவத் துவர்வாய் மடியா
மையார் விசும்பின் மதிவீழ்வது போல வீழ்ந்தான். ௫௯௯

### வெற்றி முரசு முழங்குதல்

கட்டியங் கார னென்னும்
கலியர சழிந்தது ; ஆங்குப்
பட்டவிப் பகைமை நீங்கிப்
படைத்தொழி லொழிக வென்னக்
கொட்டினார் முரசம் ; மள்ளர்
ஆர்த்தனர் ; குருதிக் கண்ணீர்
விட்டழு தவன்க ணார்வ
மண்மகள் நீக்கி னாளே. ௬௦௦

### வென்றி யெய்திய சீவகன் நிலை

ஒல்லைநீ ருலக மஞ்ச வொளியுமிழ் பருதி தன்னைக்
கல்லெனக் கடலி னெற்றிக் கவுட்படுத் திட்டு நாகம்

---

௫௯௮. அழன்று - சினம் பொங்கி. வெம்ப - வெம்பும்படி. அவன் - சீவகன், பட - பட்டுக் கிடக்கும்படி. பாய்ந்திடுகு - பாய்ந்திடுவேன். பாய்வான் - பாய்பவனான கட்டியங்காரன். பொன்...ஒத்தான் - நல்வினையுலந்து தேவருலகத்திலிருந்து வீழுமொரு தேவனையொத்தான்.

௫௯௯. முலைப் போர்க்களம் - கொங்கைக்குப் போர்க்களம். செய்யோன் - செய்பவனாகிய சீவகன். சரம் - அம்புகள். வெய்தா விழியா - வெவ்விதாகப் பார்த்து. வெருவ - கண்டோர் அஞ்ச. மடியா - மடித்து. மை - முகில்.

௬௦௦. கலியரசு - கலியாகிய அரசு. படைத்தொழில் - போர்த்தொழில், மள்ளர் - வீரர், குருதிக்கண்ணீர் - குருதியாகிய கண்ணீர், மண்மகள் கட்டியங்காரன்பால் ஆர்வம் நீக்கினாள் என்க.

பல்பகல் கழிந்த பின்றைப் பன்மணி நாகந் தன்னை
வல்லைவாய் போழ்ந்து போந்தோர் மழகதிர் நின்ற தொத்தான்.

### விசயை கண்டு கண் குளிர்தல்

கோட்டுமீன் குழாத்தின் மள்ள
ரீண்டினர் ; மன்னர் சூழ்ந்தார் ;
மோட்டுமீன் குழாத்தி னெங்குந்
தீவிகை மொய்த்த ; முத்தம்
ஆட்டுநீர்க் கடலி னார்த்த
தணிநகர் ; வென்றி மாலை
கேட்டுநீர் நிறைந்து கேடில்
விசயைகண் குளிர்ந்த வன்றே. கூ0உ

---

கூ0க. ஒல்லை - விரைய. பருதி - ஞாயிறு. கடலின் நெற்றி - கடலிடத்தே. கவுட்படுத்திட்டு - விழுங்குவதாலே. நாகம் பல்கலைக் கழித்த பின்பு. பன்மணி நாகந் தன்னை - அதனை. வல்லை - கடுக. போழ்ந்து போந்து - பிளந்து போந்து. நின்றது - நின்ற தன்மையை.

கூ0உ. கோட்டுமீன் - சுறுமீன். மோட்டு மீன் - விண்மீன். தீவிகை - விளக்கு. முத்தம் ஆட்டு நீர்க்கடலின் - முத்தை அலைக்கின்ற நீர் நிரம்பிய கடல்போல. மாலை - ஒழுங்கு. "அவன் புதல்வரைக் கொன்ற பின் அவனைக் கொல்லுதலை ஒழுங்கு என்றார்."

# கக. பூமகள் இலம்பகம்

[பூமகள் இலம்பகம் : வென்றி யெய்திய சீவகன் தனக்குரிய இராசமாபுரத்தை யடைந்து, கட்டியங்காரன் உரிமை மகளிர்க்கு வேண்டுவன நல்கினான்; அவனுக்குரியார்க்கு அடைக்கலம் உதவிப் பிற உதவிகளும் புரிந்தான். அரசர்க்குரிய முறைப்படி, இடம் பலவற்றிலும் இலச்சினையும் காப்புமிட்டுப் போர் வீரர்க்கு ஓய்வு நல்கி இளைப்பாறுவித்தான். பின்பு வேத்தவை யடைந்து நல்லோரையில் சீவகன் அரசு கட்டில் ஏறினன்; கட்டியங்காரனால் துன்புற்றவர்களை இன்புறுவித்து அரசியலை இனிது நடத்தி வருவானாயினன்.]

கட்டியங்காரனையும் அவன் மக்களையும் கொன்று வென்றி யெய்திய சீவகன் தன் பரிசனங்கள் பின்தொடர, மைத்துனவரசர் உடன்வர நகருக்குட் சென்றான். நகர மக்கள் மிக்க சிறப்புடன் அவனை வரவேற்றனர். அக்காலத்தே கட்டியங்காரனுடைய உரிமை மகளிர் அஞ்சி நடுங்கி, புலியைக் கண்ட மான்போல் மருண்டனர். அவனது பட்டத்தரசியும் இறந்துபட்டாள். இச் செய்தியைக் கேள்வியுற்றதும் சீவகன், " கட்டியங்காரன் உயிர் போகியதும் என் வெகுளியும் போய்விட்டது; இனி, நீவிர் அஞ்சவேண்டா" என்று அம் மகளிரைத் தேற்றினான்.

### சீவகன் அம் மகளிர்க்குக் கூறல்

" என்னுங்கட் குள்ள மிலங்கீர்வளைக் கையி னீரே !
மன்னிங்கு வாழ்வு தருதும்அவற் றானும் வாழ்மின் ;
பொன்னிங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மி" னென்றான்
வின் னுங்க வீங்கு விழுக்கந்தென நீண்ட தோளான். ௬௦௩

௬௦௩. உள்ளம் - கருத்து. ஈர் வளை - அரத்தால் அறுக்கப்பட்ட வளை. இலங்கு - விளங்குகின்ற. மன் - அசை. வாழ்வு - வாழ்க்கைக்கு வேண்டியவை. புறம் போகியும் - புறத்தே வேறிடம் சென்றேனும். வில் நுங்க வீங்கி விழுக் கந்து எனத் திரண்ட தோள் - வில்லை வலிக்க வீங்கிச் சிறந்த தூண்போலத் திரண்டு நீண்ட தோள்.

### அது கேட்ட மகளிர் தம் பதிசென்று கைம்மை வாழ்க்கை மேற்கொள்ளல்

தீத்தும்மு வேலான் திருவாய்மொழி வான்மு ழக்கம்
வாய்த்தங்குக் கேட்டு மடமஞ்ஞைக் குழாத்தி னேகிக்
காய்த்தெங்கு சூழ்ந்த கரும்பார்தம் பதிகள் புக்கார்
சேய்ச்செந் தவிசு நெருப்பென்றெழுஞ் சீற டியார். சுဝச

காதார் குழையும் கடற்சங் கமும்குங் குமமும்
போதா ரலங்கற் பொறையும் பொறையென்று நீக்கித்
தாதார் குவளைத் தடங்கண்முத் துருட்டி விம்மா
மாதார் மயிலன்னவர் சண்பகச் சாம்ப லொத்தார். சுဝரு

இதற்குள் வீரர்கள் அரண்மனையை ஆராய்ந்து தூய்மை செய்து, சீவகற்குப் பள்ளியிடத்தை அணிசெய்து வைத்தனர். சீவகன் பள்ளி புகுவதன் முன் தன் மாமனை வணங்கிப் புண்பட்ட வீரரைப் போற்றுமாறு வேண்டிக் கொண்டான்.

### சீவகன் பள்ளி கொள்ளல்

எண்கொண்ட ஞாட்பி னிரும்பேச்சிற்
படுத்த மார்பர்
புண்கொண்டு போற்றிப் புறஞ்செய்கெனப்
பொற்ப நோக்கிப்
பண்கொண்ட சொல்லார் தொழப்பாம்பணை
யண்ணல் போல

---

சுဝச. தீத் தும்மு வேலான் - நெருப்பனலைக் கக்கும் வேலையுடைய சீவகன். மொழியாகிய வான் முழக்கம் என்க. அங்கு வாய்த்துக் கேட்டு - அவ்விடத்தே வாய்மையாகக் கேட்டு. மஞ்ஞைக் குழாம் - மயிற் கூட்டம். சேய்ச் செந்தவிசு - மிகச் சிவந்த தவிசு. எழும் - எழுந்து நீங்கும்.

சுဝரு. அலங்கல் - பூமாலை. பொறை - சுமை. முத்துருட்டி - முத்துப்போலக் கண்ணீரை அழுது சொரிந்து. விம்மி - துயர் மிகுந்து. சண்பகச் சாம்பல் - சண்பகத்தின் வாடிய பூ.

மண்கொண்ட வேலா னடிதைவர
வைகி னனே. கூ0சு

## வீரர் அயாவுயிர்த்தல்

வாள்க ளாலே துகைப்புண்டு
வரைபுண் கூர்ந்த போல்வேழம்
நீள்கால் விசைய நேமித்தேர்
இமைத்தார் நிலத்திற் காண்கலாத்
தாள்வல் புரவி, பண்ணவிழ்த்த
யானை யாவித் தாங்கன்ன
கோள்வா யெஃக மிடம்படுத்த
கொழும்புண் மார்ப ரயாவுயிர்த்தார். கூ0எ

## சீவகன் கண் துயிறல்

கொழுவாய் விழுப்புண் குரைப்பொலியுங்
கூந்தன் மகளிர் குழைசிதறி
அழுவா ரழுகைக் குரலொலியும்
அதிர்கண் முரசின் முழக்கொலியும்
குழுவாய்ச் சங்கின் குரலொலியுங்
கொலைவல் யானைச் செவிப்புடையும்

---

கூ0சு. எண் கொண்ட ஞாட்பு - தேவாசுரப் போர், இராமாயணப் போர், பாரதப் போர் என்ற இவற்றேடு வைத்து எண்ணத்தகும் போர். இரும்பு - வேலும் வாளும் பிறவுமாம். எச்சிற்படுத்த - புண்பட்ட. புண் போற்றிக்கொண்டு புறஞ் செய்க - புண்ணை ஆற்றும் வழியை மேற்கொண்டு காப்பீராக. வியங்கோள் வேண்டிக்கோடற் பொருட்டு. பொற்ப - இனிது. பண்கொண்ட சொல்லார் - மகளிர். பாம்பணை யண்ணல்- திருமால். மண்கொண்ட வேல் - மண்ணை வென்றுகொண்ட வேல்.

கூ0எ. துகைப்புண்டு - தாக்கப்பட்டு. வரை, துகைப்புண்டு புண் கூர்ந்தபோலும் வேழம். நீள்கால் விசைய நேமித் தேர் - நெடுங் காற்றுப் போலும் விசையையுடைய தேர். நேமி - ஆழி. இமைத்தார் நிலத்திற் காண்கலா தாள்வல் புரவி - நிலத்திருப்பக் கண்டு கண்ணிமைத்தவர், பின்பு காணமாட்டாத நெடுந் தொலைவு சென்று மறையும் தாள் வன்மையுடைய புரவி, ஆவித்தாங்கு - கொட்டாவி விட்டாற்போல. எஃகம் - வாள்.

எழுவார் யாழு மேத்தொலியு
மிறைவன் கேளாத் துயிலேற்றான். ௬௦௮

பொழுது விடிந்தது. சீவகன் தம்பியும் தோழரும், கோவிந்தராசனும் நகரத்தவரும் வந்து கோயிலுள் நிறைந்தனர். சிறிது போதில், வெள்ளி மலையில் வாழும் கலுழவேகனொழிய விஞ்சையர் பலரும் வந்து ஈண்டினர்.

## சீவகற்குத் திருமுடி சூட்டுதற்கு அமைச்சர் சூழநின்ற அனைவரும் தகுவன செய்தல்

எண்ண மென்னினி யெழில்முடி யணிவது துணிமின்
கண்ண ரொடு கடிகையும் வருகென வரலும்
பண்ணி னார்முடி பழிச்சிய மணிபொனிற் குயிற்றி
அண்ண லாய்கதி ரலம்வரப் புலமகள் நகவே. ௬௦௯

## சுதஞ்சணன் வருதல்

விரியு மாலையன் விளங்கொளி முடியினன் துளங்கித்
திருவில் மால்வரைக் குலவிய தனையதோர் தேந்தார்
அருவி போல்வதோ ராரமு மார்பிடைத் துயல
எரியும் வார்குழை யிமையவ னொருவன்வந் திழிந்தான்.

பின்னர், அவனுடைய தேவியர் பலரும் வந்து சேர்ந்தனர்; விஞ்சையர் ஆடவரும் பெண்டிருமாய் மிகப் பலர் வந்து நகரத்தை யடைந்தனர். நகர் முழுவதும் பேரணி திகழ்ந்தது.

---

௬௦௮. விழுப்புண் - துன்பம் தரும் புண். குரைப்பொலி - காற்றைப் புறப்படவிடும் ஒலி. அதிர் கண் முரசு - அதிர்கின்ற கண்ணையுடைய முரசு. செவிப்புடை - செவியினது அசைப்பொலி. இறைவன் - சீவகன். கேளா - கேட்டு.

௬௦௯. கண்ணனார் - புரோகிதர். கடிகை - நன்னாழிகை யறிந்து கூறும் கணக்கர். வருக என - வருவார்களாக என அழைப்ப. பழிச்சிய - புகழப்பட்ட. அண்ணல் - தலைமை. அலம்வர - விளங்க. புல மகள் நக - நாமகள் மகிழ. " முடியமைத்தற்குரிய நூலெல்லாம் முற்ற முடித்தலின் நாமகள் மகிழ என்றார்."

௬௧௦. வானவில் மலையின் குறுக்கே கிடந்தாற் போலத் தேன் சொரியுந் தார் மார்பிடைக் கிடந்தது என்க. அருவி - அம்மலையிடத்து அருவி. துயல - அசைய. எரியும் - ஒளி வீசும். ஒருவன் - ஒப்பற்ற சுதஞ்சணன். துளங்கி - அசைந்து.

### சுதஞ்சணன் சீவகற்கு முடி சூட்டுதல்

வெருவி மாநகர் மாந்தர்கள் வியந்துகை விதிர்ப்பப்
பருதி போல்வன பாற்கட லூற்றெட்டுக் குடத்தாற்
பொருவில் பூமழை பொன்மழை யொடுசொரிந் தாட்டி
எரிபொ னீண்முடி கவித்தனன் பவித்திரற் றொழுதே. ூககக

### சுதஞ்சணன் விடைபெற்றுப் போதல்

திருவ மாமணிக் காம்பொடு திரள்வடந் திளைக்கும்
உருவ வெண்மதி யிதுவென வெண்குடை யோங்கிப்
பரவை மாநில மளித்தது; களிக்கயல் மழைக்கண்
பொருவில் பூமகட் புணர்ந்தனன்; இமையவ னெழுந்தான்.

### முடி சூடிக்கொண்ட சீவகவேந்தன் திருநிலமிதித்தல் வேண்டித் திருவுலா வருதல்

மின்னுங் கடற்றிரையின் மாமணிக்கை
வெண்கவரி விரிந்து வீசப்
பொன்னங் குடைநிழற்றப் பொன்மயமாம்
உழைக்கலங்கள் பொலிந்து தோன்ற
மன்னர் முடியிறைஞ்சி மாமணியங்
கழலேந்தி அடியீ டேத்தச்
சின்ன மலர்க்கோதைத் தீஞ்சொலார்
போற்றிசைப்பத் திருமால் போந்தான். ூககங

---

ூககக. வெருவிக் கை விதிர்ப்ப - அஞ்சிக் கை விதிர்க்கும்படி. சொரிந்து - சொரியா நிற்க. பருதி போல்வனவாகிய குடம். பூமழை சொரிய, குடத்தால் பாற்கடலில் முகந்து வந்து ஆட்டி, விதிர்க்கும்படி, தொழுது முடி கவித்தனன் என்க. பவித்திரன் - சீவகன், தனக்கு ஆசிரியனாதலின், தேவன் தொழுதான்.

ூககஉ. திருவமாமணி - அழகிய மணி; அ, அசை. காம்பும் வடமும் திளைக்கும் மதி - இல்பொருளுவமை. குடை - கொற்றக் குடை. பரவை - பரந்த. பொருவில் பூமகள் - ஒப்பில்லாத நிலமகளை. இமையவன் - சுதஞ்சணன்.

ூககங. கடல் திரையின் - கடலின் அலைபோல. நிழற்ற - நிழலைச் செய்ய. பொன்னங் குடை - உலாவுக்குரிய குடை. உழைக்கலம் - அரசர் பக்கத்தே இருக்கும் மங்கலங்கள். அடியீடு - அடியிடுதல். "அடுத்து இரண்டு பவனி அரசர்க் காகாமையின், கல்யாணத்திற்குப் பின்பு பவனி கூறுவார். ஈண்டு நன்னில மிதித்து மண்டபத்தே புகுந்தமை தோன்ற அடியீடேத்த" என்றார். சின்ன மலர் - விடுபூ. "காத்தற் றொழிலாலும் வடிவாலும் திருமாலென்றே கூறினார்."

## சீவகன் அரியணைக்கண் அமர்ந்திருத்தல்

பைங்கண் உளையெருத்தின் பன்மணி
வாளெயிற்றுப் பவள நாவிற்
சிங்கா சனத்தின்மேல், சிங்கம்போல்
தேர்மன்னர் முடிகள் சூழ,
மங்குல் மணிநிற வண்ணன்போல்,
வார்குழைகள் திருவில் வீசச்
செங்கட் கமழ்பைந்தாரச் செஞ்சுடர்போல்
தேர்மன்ன னிருந்தா னன்றே. ௬௧௪

## வேந்தன் திருவுள்ளத்தே குறித்துரைத்த வண்ணம் நகர்க்கண் முரசறைவித்தல்

"ஒன்றுடைப் பதினை யாண்டக்
குறுகட னிறைவன் விட்டான்;
இன்றுளீ ருலகத் தென்று
முடனுளீ ராகி வாழ்மின்;
பொன்றுக பசியும் நோயும்
பொருந்தலில் பகையு" மென்ன
மன்றல மறுகு தோறு
மணிமுர சார்த்த தன்றே. ௬௧௫

---

௬௧௪. உளை - பிடரி மயிர். மங்குல் மணி - நீலமணி. செஞ்சுடர் - ஞாயிறு. சீவகன், சிங்காசனத்தின்மேல், மன்னர் முடிகள் சூழ, வண்ணன் போல் குழைவில் வீச, செஞ்சுடர்போல் இருந்தான் என்க. "மங்குல்-திசை; எனவே, தந்தையைப்போல் இருந்தான் என்றார்."

௬௧௫. ஒன்றுடைப் பதினையாண்டு - பதினாறு யாண்டு. விட்டான் - இறையின்றி விட்டான். இன்றேபோல் என்றும் செல்வ நலமுடையீராய் வாழ்மின். பொன்றுக - இல்லையாகுக. மன்றல மறுகு - மன்றல் விளங்கும் தெரு. அன்றே - அப்பொழுது.

# ௧௨. இலக்கணையார் இலம்பகம்

[**இலக்கணையார் இலம்பகம்:** அரசுகட்டிலேறி ஆட்சி புரியலுற்ற சீவகன், பதுமை முதலிய தன் மனைவியரை வருவித்து அவர்கட்குத் தலையளி செய்தான். கோவிந்தராசன் தன் மகள் இலக்கணையைச் சீவகற்கு மணம் செய்விக்கக் கருதி நல்லோரை தெளிந்து அதன்கண் திருமணம் செய்வித்தான். மணம் முடிந்ததும் சீவகன் ஊருலாப் போந்து ஸ்ரீ கோயிலையடைந்து, அருகனை வணங்கி, அக் கடவுட்கு நூறு ஊர்களை இறையிலியாகத் தந்து தன் மாளிகை யடைந்து தன்னை வளர்த்த கந்துக்கடன், தாயான சுநந்தை முதலியோர்க்கு அரசுரிமை வழங்கிச் சிறப்பித்தான். நந்தட்டனை இளவரசனுக்கி, இவ்வண்ணமே ஏனைத் தோழன்மார்க்கும் தம்பியர்க்கும் அவரவர்க்கேற்ற வரிசையும் சிறப்பும் நன்கு வழங்கினன். தன்னை அளித்து உதவிய சுதஞ்சணனுக்குக் கோயிலெடுத்து, அவன் வரலாற்றை நாடகமாக எழுதி இன்புற்ருன். அவன் இளமைப்போதில் விளையாடற்கு நிழல் பயந்த ஆலமரத்திற்கும் மேடையும் ஏனைய சிறப்பும் செய்தான் எனின், வேறு கூறுவது மிகையாம்.]

அரசு கட்டிலேறி இனிதிருந்த சீவகன் தன் தம்பியரையும் தோழரையும் நோக்கி, "நீவிர் விரைந்து சென்று என் ஏனை மனைவியரைக் கொண்டு வருக" எனப் பணித்தனன். அவரும் அவ்வண்ணமே சென்று அவர்களைக் கொணர்ந்தனர்.

### மனைவிமார் வந்து அவன் அடிவீழ்ந்து வணங்குதல்

அன்று சூடிய மாலைய ராடிய சாந்தர்
பொன்றி வாடிய மேனியர், பொன்நிறை சுருங்கார் ;
சென்று காதலன் திருவிரி மரைமல ரடிமேல்
ஒன்றி வீழ்ந்தனர் குவளைக்கண் உவகைமுத் துகவே. ௬௧௬

---

௬௧௬. அன்று - சீவகன் பிரிந்த அன்று. பொன்றி - கெட்டு. பொன் நிறை - பொன்போல் பெறுதற்கரிய நிறையில் கெடாதவர். திருவிரி மரைமலர் - அழகு திகழும் தாமரைப் பூ. உவகை முத்து - உவகைக் கண்ணீர்.

## சீவகன் அவர்களது பிரிவுத்துயர் நீக்கி இன்புறக் கூடி யிருத்தல்

நஞ்ச மேய்ந்திளங் களிக்கயன் மதர்ப்பன போல
அஞ்சி வாட்கண்கள் மதர்த்தன அலர்ந்துடன் பிறழப்
பஞ்சு சூழ்மணி மேகலை பரிந்தவை சொரிய
வஞ்சி நுண்ணிடை கவின்பெற வைகினன் மாதோ. கூகள

இவ்வாறு சின்னாட்கள் கழிந்ததும், சீவகற்கும் இலக்கணைக்கும் திருமணம் நிகழ்த்தல் வேண்டி, பெருங்கணி போந்து, இற்றை ஏழாம்நாள் மணவினை யாற்றுதல் வேண்டுமெனக் கணித்துரைத்தான். உடனே, இச்செய்தி நகரமாக் கட்கு முரசு முழக்கித் தெரிவிக்கப்பெற்றது. ஏனை நாட்டவர்க்கும் மணவோலை செல்வதாயிற்று. நகரமெங்கும் பெருவிழா பொலிவுற்றது.

## ஆறுநாள் கழிதல்

முரச மார்ந்தபின் மூவிரு நாள்கள்போய்
விரைவொ டெங்கணும் வெள்வளை விம்மின;
புரையில் பொன்மணி யாழ்குழல் தண்ணுமை
அரவ வானி னதிர்ந்த அணிமுழா. கூகஅ

## விழாவணி விளங்கும் நகரச் சிறப்பு

சுந்த ரத்துகள் பூந்துகள் பொற்றுகள்
அந்த ரத்தெழு மின்புகை யாலரோ
இந்தி ரன்னகர் சாறயர்ந் திவ்வுழி
வந்தி ருந்தது போன்மலி வுற்றதே. கூகக

---

கூகள. மதர்ப்பன போல - செருக்குவனவற்றைப்போல. மதர்த்தன அலர்ந்து - செருக்கி மலர்ந்து. பரிந்தவை - அற்று. சொரிய - உதிர.

கூகஅ. ஆர்ந்த - ஆர்த்த. போய் - போக. வளை - சங்கு. புரையில்- குற்றமில்லாத. அரவவான் - முழங்குதலையுடைய முகில்.

கூகக. சுந்தரத் துகள் - செந்தூரத் தூள். அந்தரத்து - வானத்தே. சாறு - திருவிழா. இவ் வழி - ஈண்டு. மலிவுற்றது - மிகுதியுற்றது.

## மணவணி திகழும் கோயிற் சிறப்பு

கொடியெழுந் தலமருங் கோயில் வாயில்கள்
மடலெழுந் தலமருங் கமுகும் வாழையும்
மடியிருந் துகிலுடை மாக்க ணுடியும்
புடைதிரள் பூரண குடமும் பூத்தவே. சா௨௦

கடிமலர் மங்கையர் காய்பொற் கிண்கிணி
உடைமணி பொற்சிலம் பொலிக்குங் கோயிலுள்
குடைநிழன் மன்னர்தங் கோதைத் தாதுவேய்ந்து
அடிநிலம் பெருததோர் செல்வ மார்ந்ததே. சா௨௧

## மணவினை தொடங்குதல்

மங்கலப் பெருங்கணி வகுத்த வோரையான்
மங்கல மன்னவன் வாழ்த்த வேறலும்
மங்கல வச்சுதம் தெளித்து வாய்மொழி
மங்கலக் கருவிமுன் னுறுத்தி வாழ்த்தினர். சா௨௨

## இலக்கணையாருக்கு மயிர்வினைத் திருமணம் செய்தல்

பாற்கடன் முளைத்ததோர் பவளப் பூங்கொடி
போற்சுடர்ந் திலங்கொளிப் பொன்செய் கோதையை
நாட்கடி மயிர்வினை நன்பொற் ருமரைப்
பூக்கடி கோயிலாள் புலம்ப வாக்கினர். சா௨௩

---

சா௨௦. அலமரும் - அசையும். எழுந்து அலமரும் - விரிந்து அசையும். மடியிருந் துகில் - மடித்த துகில். புடை திரள் - பக்கம் திரண்ட. பூத்த - பொலிந்தன.

சா௨௧. மணியுடை பொற் சிலம்பு - மணியைப் பரலாகவுடைய பொன்னுலான சிலம்பு. தாது - தேன். அடி நிலம் பெருத - மங்கையர் அடி நிலத்தைத் தீண்டாத.

*சா௨௨. மங்கலப் பெருங் கணி - மங்கல நாளைக் கூறும் பெரிய கணி; சோதிடர். மங்கல அச்சுதம் - மங்கலமாகிய அறுகும் அரிசியும் முதலாயின. வாய் மொழி - அபிமந்திரித்த. கருவி - மயிர் குறை கருவி.

சா௨௩. சுடர்ந்து இலங்கு - விட்டு விளங்குகின்ற. கோதை - இலக்கணை. மயிர் வினை நாட் கடி - மயிரொதுக்கும் திருமணம். பூக்கடி கோயிலாள் - பூவாகிய சிறந்த கோயிலையுடைய திருமகள். புலம்ப - இவட்கு ஒவ்வேமென்று கருதி வருந்த. ஆக்கினர் - செய்தனர்.

## சீவகனை நெய் முழுக்காட்டுதல்

இழைத்தபொன் னகரின் வெள்ளி
 யிடுமணை மன்ன ரேத்தக்
குழைப்பொலிந் திலங்கு காதிற்
 கொற்றவ னிருந்த பின்றை
மழைக்கவின் றெழுந்த வார்கொண்
 மணிநிற வறுகை நெய்தோய்த்
தெழிற்குழை திருவில் வீச
 மகளிர்நெய் யேற்று கின்றார். ௬௨௪

## நெய்யேற்றிய மகளிர் வாழ்த்துதல்

"மின்னுமிழ் வைரக் கோட்டு
 விளங்கொளி இமய மென்னும்
பொன்னெடுங் குன்றம் போலப்
 பூமிமேல் நிலவி வையம்
நின்னடி நிழலின் வைக
 நேமியஞ் செல்வ னாகி
மன்னுவாய் திருவோ" டென்று
 வாழ்த்திநெய் யேற்றி னாரே. ௬௨௫

## இவ்வாறு சீவகனைத் திருமுழுக்காட்டியபின், மங்கல மணவணி யணிந்து சிறப்பித்தல்

அறுகு வெண்மல ரளாய வாசநீர்
இறைவன் சேவடி கழுவி யேந்திய
மறுவின் மங்கலங் காட்டி னார்மணக்
குறைவில் கைவினைக் கோல மார்ந்ததே. ௬௨௬

---

௬௨௪. நகர் - அரண்மனை. வெள்ளியிடு மணை - வெள்ளியால் செய்த மணை, கொற்றவன் - சீவகன். மழைக் கவின்று எழுந்த - மழையால் கிளைத்துத் தழைத்த. அறுகை - அறுகம் புல்.

௬௨௫. நேமியம் செல்வனாகி - சக்கரவாள சக்கரவர்த்தியாய், அடி நிழல் - ஆட்சியின் கீழ். திருவோடு - இலக்கணையோடு.

௬௨௬. அறுகு வெண்மலர் அளாய - அறுகையும் வெள்ளிய மலரையும் கலந்த., மறுவில் - குற்றமில்லாத. கைவினைக் கோலம் - புனைதலமைந்த மணக்கோலம்.

இவ் வண்ணமே மகளிர் யானைமேற் கொணர்ந்த தூநீரும் நறுநெய்யும் கொண்டு இலக்கணையை நெய் முழுக் காட்டினர். மங்கலவணி கொணர்ந்து அழகு திகழ அணிந்து ஒப்பனை செய்தார்.

### இலக்கணை வேள்விச் சாலைக்கு வரக்கண்ட வேந்தர் தம்முட் கூறிக் கொள்ளல்

அரத்தக மருளிச் செய்த
சீறடி யளிய தம்மாற்
குரற்சிலம் பொலிப்பச் சென்னிக்
குஞ்சிமேன் மிதிப்ப நோற்றான்
திருக்குலாய்க் கிடந்த மார்பிற்
சீவகன் ; நாங்க ளெல்லாம்
தரித்திலந் தவத்தை யென்று
தார்மன்ன ரேமுற் றாரே. ௬௨௭

### இலக்கணை வேள்விச் சாலை யடைதல்

கோவிந்த னென்னும் செம்பொற்
குன்றின்மேற் பிறந்து, கூர்வேற்
சீவக னென்னுஞ் செந்நீர்ப்
பவளமா கடலுட் பாய்வான்
பூவுந்தி யமுத யாறு
பூங்கொடி நுடங்கப் போந்து
தாவிரி வேள்விச் சாலை
மடுவினுள் தாழ்ந்த தன்றே. ௬௨௮

### வேள்விக்கண் தீயோம்புதல்

தண்டிலத் தகத்திற் சாண்மே
லெண்விரற் சமிதை நானன்கு

௬௨௭. அரத்தகம் - செம்பஞ்சி. மருளி - மருள, கண்டோர் மருள என்க. சிலம்பு குரலெடுத்து ஒலிப்ப. திருக்குலாய்க் கிடந்த மார்பின் சீவகன் - திருமேவி வீற்றிருக்கும் மார்பினையுடைய சீவகன். தரித்திலம் - செய்திலேம். ஏமுற்றார் - மயக்கமுற்றனர்.

௬௨௮. செந்நீர் - புதுநீர். பூ உந்தி - பூப்போலும் கொப்பூழ். நுடங்க - அசைய. தாவிரி வேள்வி - கெடாத மணவேள்வி. தாழ்ந்தது - தங்கிற்று. அமுதயாறு குன்றிற் பிறந்து, கடலுட் பாய்வான், பூவுந்தி, கொடி நுடங்கப் போந்து மடுவினுள் சிறிது தங்கிற்று.

எண்டிசை யவரு மேத்தத்
துடுப்புநெய் சொரித லோடும்
கொண்டழற் கடவுள் பொங்கி
வலஞ்சுழன் றெழுந்த தென்ப
தெண்டிரை வேலி யெங்குந்
திருவிளை யாட மாதோ. ௬௨௯

## தீயோம்பியபின் நீரேற்றலும் முறையாதலால் சீவகன் நீரேற்றல்

கரையுடைத் துகிலிற் றோன்றுங் காஞ்சன வட்டின் முந்நீர்த்
திரையிடை வியாழந் தோன்றத் திண்பிணி முழவுஞ் சங்கும்
முரசொடு முழங்கி யார்ப்ப மொய்கொள்வேன் மன்ன ரார்ப்ப
அரசரு ளரச னய்பொற் கலசநீ ரங்கை யேற்றான். ௬௩௦

## இலக்கணையின் கைப்பற்றிச் சீவகன் தீ வலம்வந்து கட்டிலேறல்

குளிர்மதி கண்ட நாகங் கோள்விடுக் கின்ற தேபோல்
தளிர்புரை கோதை மாதர் தாமரை முகத்தைச் சேர்ந்த
ஒளிர்வளைக் கையைச் செல்வன் விடுத்தவ ளிடக்கை பற்றி
வளரெரி வலங்கொண் டாய்பொற் கட்டில்தா னேறி னானே.

---

௬௨௯. சாண்மேல் எண்விரல் - ஒருசாண் எண்விரலகமாகப் பரப்பிய. தண்டிலத்தகத்தில் - இங்கு, அரிசியிலே. சமிதை நானன்கு - சமிதை பதினாறு. துடுப்பு - துடுப்பால். கொண்டு - கைக்கொண்டு. வலமாகச் சுழன்றெழுந்தது, நாட்டில் திருமிக்கு விளையாடும் என்றற்கு அறிகுறி. தெண்டிரை - கடல்.

௬௩௦. காஞ்சனவட்டின் - பொன் வட்டுப் போல. அரசருள் அரசன் - அரசரின் தலைவனான சீவகன். அங்கை - அகங்கை. வியாழன் - பிருகற்பதி.

௬௩௧. கோள் விடுக்கின்றதே போல் - கொண்டதை விடுக்கின்றது போல. தளிர் புரை கை - தளிர்போலும் கை. தாமரை முகத்தைச் சேர்ந்த கை. ஒளிர்வளை - விளங்குகின்ற வளை. விடுத்து - விடுக்க. கட்டில் - "விவாகம்பண்ணி யெழுந்திருந்து சாந்தியான கூத்தும் ஆலத்தியும் கண்டு அருந்ததி காணப்போமளவும் இருக்கும் கட்டில்.—இஃது அரசியல்".

### அருந்ததி காட்டி மணவறைபுக்கு மணவமளி ஏறியிருத்தல்

விளங்கொளி விசும்பிற் பூத்த அருந்ததி காட்டி யான்பால்
வளங்கொளப் பூத்த கோல மலரடி கழீஇய பின்றை
இளங்கதிர்க் கலத்தி னேந்த அயினிகண் டமர்ந்தி ருந்தான்;
துளங்கெயிற் றுழுவை தொல்சீர்த் தோகையோ டிருந்த தொத்தான்

### நாலாம் நாள் சீவகனுக்கு மயிர்வினைத் திருமணம் செய்தல். சீவகன் இலக்கணையோடு இருத்தல்.

பானுரையி னொய்யவணைப் பைங்கதிர்கள் சிந்தித்
தானிரவி திங்களொடு சார்ந்திருந்த தேபோல்
வேனிரைசெய் கண்ணியொடு மெல்லென விருந்தான்
வானுயர வோங்குகுடை மன்னர்பெரு மானே. ௬௩௩

அழகு திகழும் மணக் கூடத்தே சீவகன் இலக்கணையோடிருப்ப, மங்கல மகளிரும் மங்கலம் கொண்டு தென்மேற்கிலும் தென்கிழக்கிலும் நின்றனர்.

### நாவிதனது பழம் பிறப்பு

குளநென் முன்றிற் கனிதேன்சொரி சோலைக் குளிர்மணி
வளமை மல்கி யெரியம்மட மந்திகை காய்த்துவான்
இளமை யாடி யிருக்கும்வனத் தீர்ஞ்சடை மாமுனி
கிளையை நீங்கிக் கிளர்சாபத்தின் நாவித னயினன். ௬௩௪

### அவனது சிறப்பு

ஆய்ந்த கேள்வி யவன்கான் முளையாய்த் தோன்றினன்
தோய்ந்த கேள்வித் துறைபோயலங் காரமும் தோற்றினன்

---

௬௩௨. ஆன்பாலால் திருவடியைக் கழுவிய பின்பு. அயினி - பாலடிசில். துளங்கெயிற்றுழுவை - விளங்குகின்ற பற்களையுடைய புலி. தோகை - மயில். புலிமயிலோ டிருந்ததுபோல இருந்தான் என்பது.

௬௩௩. பால்நுரையின் நொய்ய அணை - பால்நுரைபோல் நொய்தாகிய அணை. இரவி கதிர்களைச் சிந்தித் திங்களோடு இருந்தது போல. வேல் நிரை செய்கண்ணி - வேலை நிரையாக வைத்தது போலும் கண்ணையுடைய இலக்கணை.

௬௩௪. குளநெல் முன்றில் - குளநெல் உணங்கும் முற்றம். சோலை - சோலையிடத்தே. மணி எரிய - மணி ஒளி செய்ய. கை காய்த்து - தீயென்று கருதிக் குளிர் காய்வதற்கு. இளமையாடி - விளையாடி. சாபத்தின் - சாபத்தால். கிளை - முனிவர் சுற்றம்.

௩௮

வேந்தன் றன்னுற் களிற்றூர்தி சிறப்பொடு மேயினன்
வாய்ந்த கோல முடையான் மஞ்சிகர்க் கேறனன். ௬௩௫

அந்த நாவிதன் முதற்கண், ஒரு நங்கை நீர்வார்க்க, அதனால் தன் வாய்பூசி அரசனை வணங்கினன்; பின்பும் அறுகும் அரிசியும் கொண்டு அரசன் திருவடியிலும் திருமுடியிலும் தெளித்து வாழ்த்தி, இலக்கணை முடியிலும் தெளித்தான்.

## மயிரொதுக்குதல்

வாக்கினிற் செய்த பொன்வாண் மங்கல விதியி னேந்தி
ஆக்கிய மூர்த்தத் தண்ணல் வலக்கவு ளுறுத்தி யார்ந்த
தேக்கணின் னகிலி னவி தேக்கிடுங் குழலி னனை
நோக்கல னுனித்து நொய்தா இடக்கவு ளுறுத்தி னனே.

## சீவகற்கு மயிரொதுக்கு மணம் முடித்தல்

ஆய்ந்தபொன் வானை நீக்கி
    யவிர்மதிப் பாகக் கன்மேற்
காய்ந்தவாள் கலப்பத் தேய்த்துப்
    பூநிறீஇக் காமர் பொன்னூண்
தோய்ந்ததன் குறங்கில் வைத்துத்
    துகிலினிற் றுடைத்துத் தூய்தா
வாய்ந்தகைப் புரட்டி மாதோ
    மருடகப் பற்றி னனே. ௬௩௭

௬௩௫. கேள்வியவன் - கேள்வியினையுடைய அம்முனிவன். கான்முளை - பிள்ளை. தோய்ந்த கேள்வி - பலவாய்த் தொக்க நூற்கேள்வி. துறைபோய் - முற்றக் கற்று. அலங்காரமும் தோன்றினன் - அலங்காரமென்னும் ஒரு நூலையும் தோற்றுவித்தான். மேயினன் - பெற்றன். கோலம் - அழகு.

௬௩௬. வாக்கினில் செய்த - நூல்விதியோடு வாக்குண்டாக. பொன்வாள் - பொன்னுற் செய்த கத்தி. ஆக்கிய மூர்த்தத்து - பொருந்தக் குறித்த நாழிகையில். வலக்கவுள் - வலக்கன்னம். தேக்கண்......குழலினன் - செய்யை இடத்தேயுடைய அகிற்புகையை யுண்டு தேக்கிடும் குழலையுடையான். நுனித்து - குறித்து. நொய்தா நோக்கி - சிறிதே நோக்கி.

௬௩௭. காய்ந்த வாள் - இரும்பும் எஃகும் ஒரு சீர்மையாகக் காய்ந்த மயிர்க் கத்தி. அவிர்மதிப் பாகக் கல் - விளங்குகின்ற திங்களின் பிளவு போலும் கல். பூ நிறீஇ - கத்திவாயில் உள்ள பூவைத் தட்டி. குறங்கு - துடை. துகில் - துணி. மருள் தக - உற்றது தெரியாதபடி.

### சீவகன் முக விளக்கம்

ஏற்றி யுமிழித் துமிடை யொற்றியும்
போற்றிச் சந்தனம் பூசுகின் ருனெனக்
கூற்ற ஞன்முகக் கோலஞ்செய் தான்கடற்
ருேற்றுஞ் செஞ்சுடர் போலச் சுடர்ந்ததே. சு௩அ

### இலக்கணை புருவமொதுக்கப் படுதல்

உருவச் செங்கய லொண்ணிறப் புள்வெரீஇ
இரிய லுற்றன போன்றிணைக் கண்மலர்
வெருவி யோட விசும்பிற் குலாவிய
திருவிற் போற்புரு வங்கள் திருத்திஞன். சு௩௯

### நாவிதன் போதல்

ஆர மின்னவ ருங்குயந் தான்களைந்து
ஒரு மொண்டிறற் கத்திரி கைத்தொழில்
நீரிற் செய்தடி யேத்துபு நீங்கிஞன்
தாரன் மாலைத் தயங்கிணர்க் கண்ணியான். சு௪0

சீவகன் இலக்கணையோடு கூடி இனிது உறைகையில் ஊடலொன்று நிகழ்கின்றது.

### இலக்கணை வெகுளுதல்

மாதர்தன் வனப்பு நோக்கி
மகிழ்ந்துகண் ணிமைத்தல் செல்லான்
காதலித் திருப்பக் கண்கள்
கரிந்துநீர் வரக்கண் '' டம்ம

---

சு௩அ. பூசுகின்ருன் என-பூசுகின்றதுபோல. ஏற்றியும்...சுற்றியும்- ஏற ஒதுக்கியும் இழிய ஒதுக்கியும் நடுவு திறத்தும். கோலம் - அழகு. சுடர்ந்தது-- விளங்கிற்று.

சு௩௯. ஒண்ணிறப் புள் - ஒள்ளிய நிறம் படைத்த சிச்சிலிப் பறவைக்கு. வெரீஇ - அஞ்சி. இரியலுற்றன போன்று - நீங்கியோடுவது போன்று. கண் வெருவி யோடும்படியாக. திருவில் - வானவில். '' கண்கள் அஞ்சிப் பார்க்க விசும்பில் வளைத்த'' வில்.

சு௪0. குயம் - மயிர் குறை கத்தி. கத்திரிகைத் தொழில் - கத்திரிக்கும் தொழில். நீரில் - நீர்மையுடன். ஏத்துபு - வாழ்த்தி. தாரும் மாலையும் கண்ணியுமுடையான். தயங்கிணர் - விளங்குகின்ற பூங்கொத்து.

பேதைமை பிறரை யுள்ளி
யழுபுவர்ச் சேர்த" லென்றாள் ;
வேதனை பெருகி வேற்கண்
டீயுமிழ்ந் திட்ட வன்றே. ௬௪௧

## அதுகண்டு ஆற்ருது வணங்கிக் கிடந்த சீவகனைக் கண்ட அவளது கண்களில் நீர் உகுதல்

" இற்றதென் னாவி " யென்னா எரிமணி யிமைக்கும் பஞ்சிற்
சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்பச், சேந்து
பொற்றதா மரையிற் போந்து கருமுத்தம் பொழிய வேபோல்
உற்றுமை கலந்து கண்கள் வெம்பனி யுகுத்த வன்றே.

## சீவகன் வண்டுகளை இரந்து நிற்றல்

" கொண்டபூ ணின்னைச் சார்ந்து
குலாய்க்கொழுந் தீன்ற கொம்பே
கண்டுகண் கரிந்து நீராய்
உகுவது காக்க லாமே ?
பண்டுயான் செய்த பாவப்
பயத்தையார்க் குரைப்பன் ; தேன்காள் !
வண்டுகாள் ! வருடி நங்கை
வரந்தர மொழிமின் " என்றான். ௬௪௩

---

௬௪௧. மாதர் - இலக்கணை. இமைத்தல் செல்லான் - இமையாளுய். உன்னி - நினைந்து. சேர்தல் பேதைமை என்றாள். வேதனை பெருகி - வருத்தம் மிகுந்ததனுல். தீயுமிழ்ந்திட்ட - வெகுளியால் சிவந்தன.

௬௪௨. இற்றது - அழிந்தது. என்னா - என்று. இமைக்கும் - விளங்கும். பஞ்சின் சிற்றடி - செம்பஞ்சி யூட்டிய சிறிய அடி. திருமகன் - திருவுக்கு மகனுகிய காமனையொப்பவன் ; சீவகன். சேந்து பொற்ற - சிவந்து பொற்புடைத்தாகிய. தாமரையினின்றும் புறப்பட்டுச் சிறிது கரிய நீர்மையுடைய முத்தம் சிந்துவனபோலே கண்கள் மை கலந்து வெய்யவாகிய பனியை யுகுத்தன. ஊடல் முழுதும் தீராமையின் வெம்பனியாயிற்று.

௬௪௩. கொண்ட பூண் - நீ அணிந்துகொண்டுள்ள பூணும். சார்ந்து - அருள் வடிவாகிய நின்னைச் சார்ந்ததனுல். குலாய் - தழைத்து. கொழுந்து ஈன்ற - கொழுந்தையீனுவதற்குக் காரணமான. கண்டு - நின்னழகை விடாமல் பார்த்ததனுல். கரக்கலாமே - மறைக்க முடியாதன்றோ. பாவப் பயம் - தீவினையின் விளைவு. வருடி - இந் நங்கையின் காலை வருடி. வரந்தர - வரந் தருமாறு.

### பூவையும் கிளியும் தம்முட் கூறிக்கொள்ளல்

பூவையும கிளியுங் கேட்டுப் புழைமுகம் வைத்து நோக்கிக்
"காவலன் மடந்தை யுள்ளம் கற்கொலோ இரும்பு கொல்லோ?
சாவம்யாம் உருகி; யொன்றும் தவறிலன்; அருளு, நங்கை,
பாவையென் றிரத்து" மென்ற பறவைகள் தம்முள் தாமே.

### பூவை கிளியை வாயடக்குதல்

பெற்றகூ ழுண்டு நாளும் பிணியுழந் திருத்தும்; பேதாய்!
முற்றிமை சொல்லி னங்கை மூன்றுநா ளடிசில் காட்டாள்:
பொற்றொடி தத்தை யீரே பொத்துநும் வாயை யென்றே
கற்பித்தார் பூவை யார்தம் காரணக் கிளவி தம்மால். கூசரு

### அடங்காது கிளி கூறக் கேட்டுச் சீவகன் அவள் நலம் பாராட்டல்

"ஈன்றதா யானு மாக இதனைக்கண் டுயிரை வாழேன்;
நான்றியான் சாவ" வென்றே நலக்கிளி நூலின் யாப்ப
மான்றவள் மருண்டு நக்காள் வாழிய வரம்பெற் றேனென்று
ஆன்றவ னுரப் புல்லி யணிநலம் பரவி னானே. கூசசா

### இலக்கணை கூட்டத்துக் கிசைதல்

"பாண்குலாய்ப் படுக்கல் வேண்டா; பைங்கிளி பூவை யென்னு
மாண்பிலா தாரை வைத்தா ரென்னுரு" என்று நக்கு

---

கூசச. புழை - கூட்டின் வாயிலில். காவலன் - கோவிந்தராசன். யாம் உருகிச் சாவம் - நம் சேவல் நம்மை இவ்வாறு ஊடல் தீர்க்கலுறின் நாம் மனமுருகி இறந்துபடுவேம். ஒன்றும் தவறிலன் - சிறிதும் தவறு இலன். இரத்தும் - இரந்து வேண்டுவேம்.

கூசரு. கூழ் - சோறு. பிணியுழந்து இருத்தும் - பிணிப்புண்டு வருந்தியிருப்பேம். முற்றிமை - அறிவுரை. பொற்றொடி நங்கை எனக் கூட்டுக. தத்தையீரே - கிளியாரே. பொத்து - மூடிக்கொள்மின். காரணக் கிளவி - காரணத்தோடு கூட்டிச் சொல்லும் சொல்.

கூசசா. இதனை - இவன் இறந்துபட்டால் இவட்குளதாம் பழியை. யான் - இவட்குப் பிள்ளையாகிய யான். நான்று - தூக்கிட்டுக்கொண்டு. நலம் - நற்குணம். நூலின் யாப்ப - நூலாலே தன் கழுத்தைக் கட்டிக் கொள்ள. மான்றவள் - உணர்ப்புவயின் வாராவூடலால் மயங்கி யிருந்த இலக்கணை. மருண்டு - வியந்து. வாழிய - கிளியை வாழ்த்தியது. ஆன்றவன் - கூடற்கமைந்த சீவகன்.

நாண்குலாய்க் கிடந்த நங்கை நகைமுக வமுத மீந்தாள் ;
பூண்குலாய்க் கிடந்த மார்பிற் பொன்னெடுங் குன்ற னற்கே.

இவ்வாறு இலக்கணையுடன் இன்புற்றிருந்த சீவகன், சூளாமணி யென்னும் பட்டத்து யானையின்மீதேறி நகர வீதிக்கண் திருவுலாச் செய்யலுற்றான். சிற்றரசர் பலர் அவனைப் பின் தொடர்ந்தனர். நால்வகைப் படைகளும் சூழவந்தன. பல்வகை இயங்கள் முழங்கின. தெருக்களிலே மகளிர் கூட்டம் மிகுந்திருந்தது. அவர்களுள் வேட்கை பிறவாதாரும், பிறக்கின்றவரும், பிறந்தவரும் என மூவகைச் செவ்வியை யுடையார் இருந்தனர். இவர் பருவத்தைய ரினத்தைச் சேர்ந்தவராவர்.

### சீவகனைக் கண்ட மகளிருள் வேட்கை பிறவாத பேதை மகளிரின் நிலைமை கூறல்

வெள்ளைமை கலந்த நோக்கிற் கிண்கிணி மிழற்றி யார்ப்பப்
பிள்ளைமை காதல் கூரப் பிறழ்ந்துபொற் றேரு வீழத்
துள்ளுபு செலீஇய தோற்றந் தொடுகழற் காமன் காமத்து
உள்ளுயி ரறியப் பெண்ணாய்ப் பிறந்ததோர் தோற்ற மொத்தார்.

### வேட்கை பிறக்கின்ற மகளிர் நிலைமை

அணிநிலா வீசு மாலை யரங்குபுல் லென்னப் போகித்
துணிநிலா வீசு மாலைப் பிறைநுதல் தோழி சேர்ந்து

---

௬௪௭. பான் - பாணன் வாயில் நேர்விக்குந் துறையில் கூறும் சொல். குலாய் - சொல்லி வளைத்து. படுக்கல் - அகப்படுத்தல். வைத்தார் - வளர்த்து வைத்தவர். என் - என்ன இனி வரவு. நகை முக வமுதம் - நகைத்த முகத்திடத்து வாயமுதம் ; நகை முகம் காட்டி மகிழ்வித்தலுமாம்.

௬௪௮. வெள்ளை மை கலந்த நோக்கின் - உள்ளத்தே கள்ளமில்லாத நோக்கத்தோடு. மிழற்றி யார்ப்ப - ஒலிக்க. பிள்ளைமை - பிள்ளைத் தன்மையால். காதல் கூர - காண்டற்குக் காதல் மிக. துள்ளுபு செலீஇய - துள்ளிச் சென்ற. காமத்து உள்ளுயிர் அறிய - காமத்தின் இன்பத்தை நுகர்ந்தறியும் பொருட்டு. நோக்கின் செலீஇய தோற்றம் என இயைக்க.

மணிநிலா வீசு மாலை மங்கையர் மயங்கி நின்றார்
பணிநிலா வீசும் பைம்பொற் கொடிமணி மலர்ந்த தொத்தார்.

## வேட்கை பிறந்த மகளிர் நிலைமை

குறையணி கொண்ட வாறே
கோதைகால் தொடர வோடிச்
சிறையழி செம்பொ னுந்தித்
தேன்பொழிந் தொழுக வேந்திப்
பறையிசை வண்டு பாடப்
பாகமே மறைய நின்றார்
பிறையணி கொண்ட வண்ணல்
பெண்ணொர்பால் கொண்ட தொத்தார். ௬௫0

## கற்புடை மகளிர் பூமழை தூவி வாழ்த்துதல்

பெண்பெற்ற பொலிசை பெற்றார்
பிணையனார் பெரிய யாழும்
கண்பெற்ற பொலிசை பெற்றா
மின்றெனக் கரைந்து முந்நீர்
மண்பெற்ற வாயுள் பெற்று
மன்னுவாய் மன்ன என்னைப்

௬௪௯. அணிநிலா வீசும் மாலை யரங்கு - அழகிய ஒளி வீசும் பல மாலைகளை நாற்றிப் புனைந்த ஆடரங்கு. புல்லென்ன - பொலிவிழப்ப. துணி நிலா வீசும் பிறை - தெளிந்த ஒளிவீசும் பிறைத்திங்கள், மாலையில் தோன்றலின், மாலைப்பிறை யென்றார். பிறைபோலும் நெற்றி. மயங்கி - வேட்கையில் கலங்கி. நிலா வீசும் பைம்பொன் பணி கொடி ஒளி-விளங்கும் பசிய பொன்னலியன்ற பரந்த கொடி ; தாழ்ந்த கொடியுமாம். பொற்கொடி மணியைப் பூத்ததை நிகர்த்தனர்.

௬௫0. குறையணி கொண்டவாறு - பாதி குறையாகப் பூண் அணிந்த அளவில். கால் தொடர - அடியிலே தம்மில் பிணங்க. சிறையழி தேன் - சிறையழிந்த தேன். தேன் உந்தியிலே பொழிந்தொழிக என்க. ஏந்தி - அணியாத மாலையை ஏந்திக் கொண்டு. பறையிசை வண்டு - பறத் தலையுடைய இசைவண்டு. பாதியே யணிந்த நாணத்தால் மறைய நின்றார். அண்ணல் - சிவபெருமான்.

புண்பெற்ற வேலி னன்மேல்
 பூமழை தூவி னரே. ௬௫௧

இவ்வாறு நகரத்து மகளிரும் ஆடவரும் நெருங்கித் தெருவில் உலாவரும் சீவகனைப் பாராட்டியும் வாழ்த்தியும் மகிழ்ச்சி மீக்கூர்ந்தனர்.

## சீவகன் பெற்றோரை வியத்தல்

கொழித்திரை யோத வேலிக் குமரனைப் பயந்த நங்கை
விழுத்தவ முலக மெல்லாம் விளக்கிநின் றிட்ட தென்பார்;
பிழிப்பொலி கோதை போலாம் பெண்டிரிற் பெரியள் நோற்றாள்
சுழித்துநின் றறாத கற்பின் சுநந்தையே யாக என்பார்.

## அவன் மெய் யழகை வியத்தல்

இடம்பட அகன்று நீண்ட
 இருமலர்த் தடங்க ணென்னும்
குடங்கையி னொண்டு கொண்டு
 பருகுவார் "குவளைக் கொம்பின்
உடம்பெலாங் கண்க ளாயி
 னொருவர்க்கு மின்றி யேற்ப
அடங்கவாய் வைத்திட் டாரப்
 பருகியிட் டமி" னென்பார். ௬௫௩

---

௬௫௧. பொலிசை - இலாபம். பிணையனார் - மான்பிணைபோலும் வீரமகளும் திருமகளும். பெரிய யாமும் - கற்பினால் பெருமை மிக்க யாங்களும். முந்நீர் மண் பெற்ற ஆயுள் பெற்று - கடலுலகும் மண்ணுலகும் பெற்ற வாழ்நாளைப் பெற்று. என்றுக் கரைந்து - என்று வாயால் வாழ்த்தி. "உப்பும் உலகும் உள்ள அளவும் வாழ்வீர்" என்னும் உலக வழக்கு.

௬௫௨. கொழித்து இரை ஓத வேலி - முத்து முதலியவற்றைக் கொழித்து முழங்கும் கடலை வேலியாகவுடைய நிலவுலகில். நங்கை - விசயை. விழுத்தவம் - பெரிய தவம். நின்றிட்டது - நிலைபெற்றது. பிழி - வடித்த தேன். ஆக என்பதைப் பிரித்துப் பெரியள் என்புழிக் கூட்டிப் பெரியளாக நோற்றாள் சுநந்தையே என்பார் என்க. சுழித்து நின்று - வேறோரிடம் செல்லாது நின்று. அறாத கற்பு - வற்றாத அருட் கற்பு.

௬௫௩. தடங்கண் - பெரிய கண். குடங்கை - அகங்கை. நொண்டு - முகந்து. குவளைக் கொம்பின் - முழுதும் குவளையே பூத்த கொம்பு போல. இன்றி - இல்லையாமாறு. ஆர - நிரம்ப. பருகியிட் டமின் - பருகுமின். இரண்டு கண்கள் அமையா என்பதாம்.

### சீவகனது தவம் நினைந்து வியத்தல்

இந்நகரப் புறங்காட்டி லிவன்பிறந்த வாறும்
தன்னிகரில் வாணிகனில் தான்வளர்ந்த வாறும்
கைந்நிகரில் வேந்தர்தொழப் போந்ததுவும் கண்டால்
என்னை தவம் செய்யா திகழ்ந்திருப்ப! தென்பார். ௯௫௪

### மேலைத் தவமுடையார்க்கே செல்வமாம் என்றல்

பெருமுழங்கு திரைவரைக ணீந்திப்பிணி யுறினும்
திருமுயங்க லில்லையெனின் இல்லைபொரு ளீட்டம்;
ஒருமுழமுஞ் சேறலில ரேனும்,பொரு ளூர்க்கே
வரும்வழிவி னாயுழந்து வாழ்கதவ மாதோ. ௯௫௫

இவ் வண்ணம் நகரத்தின் மாடவீதியில் உலாப்போந்தவன் அருகன் கோயிலுக்குச் செல்லவெழுந்தான். படைகளும் உடன்வந்தனவன்றோ. அவற்றைச் சோலையிலே நிறுத்திவிட்டுத் தான் மட்டும் கோயிற்குச் சென்றான்.

### சீவகன் அருகனைத் தொழுதல்

திறந்த மணிக்கதவம்; திசைக
ளெல்லாம் மணம்தேக்கி
மறைந்த அகிற்புகையான்; மன்னர்
மன்னன் வலஞ்செய்து
"பிறந்தேன் இனிப்பிறவேன்;
பிறவா தாளைப் பெற்றேன்" என்று
இறைஞ்சி முடிதுளக்கி யேத்திக்
கையால் தொழுதானே. ௯௫௬

---

௯௫௪. புறங்காடு - சுடுகாடு. வாணிகன் இல் - கந்துக்கடன் என்னும் வணிகன் மனையில். கைந்நிகரில் - ஒழுக்கத்தாலும் ஒப்பில்லாத. மேலைத் தவமே இத் திருவுடைமைக்கு ஏது என்றாராம்.

௯௫௫. முழங்கு பெருந்திரை பொருந்திய கடலும் மலையும் கடந்து. நீந்தியெனவே, கடத்தற்கருமை சுட்டியதாயிற்று. பிணியுறினும் - வருந்தினும். திரு முயங்கல் - நல்வினை வந்து கூடுதல். பொருள் ஈட்டம் - பொருளை மிகுதியாக ஈட்டுதல். சேறலிலரேனும் - சென்றிலராயினும். பொருள் நல்வினையுடைய அவர் உறையும் ஊருக்கு வழி வினாய் உழந்துவரும் என்க. "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்" (குறள் ) என்றார் திருவள்ளுவனார்.

௯௫௬. அரசன் வருங்காலத்தே பிறர் புகுதாமல் கதவடைத்து அவனுக்குத் திறத்தல் இயல்பாதலால், கதவம் திறந்தன. அகிற்புகையால் மணம் நிரம்பித் திசைகள் மறைந்தன. துளக்கி - ~~அசைத்து~~, வணங்கி.

## சீவகன் பாட்டு

மறுவற வுணர்ந்தனை, மலமறு திகிரியை ;
பொறிவரம் பாகிய புண்ணிய முதல்வனை ;
பொறிவரம் பாகிய புண்ணிய முதல்வ,நின்
நறைவிரி மரைமலர் நகுமடி தொழுதும். சுருஎ

பின்பு அவன் அருகனுக்கு விளக்குப் புறமாக நூறூரையும், பூசனைக்கு நான்குகோடி பொன்னும் கொடுத்துச் சேவித்தற் சிறப்பாக நூறுகளிறும் நூறு தேரும் சேர்த்தினன்.

## சீவகன் அரண்மனையடைந்து திருவோலக்க மிருத்தல்

உலமரு நெஞ்சி னொட்டா மன்னவ ரூர்ந்த யானை
வலமருப் பீர்ந்து செய்த மணிகிளர் கட்டி லேறி
நிலமகள் கணவன் வேந்தர் குழாத்திடை நிவந்தி ருந்தான்
புலமகள் புகழப் பொய்தீர் பூமகட் புணர்ந்து மாதோ.

இங்ஙனம் திருவோலக்க மிருந்த சீவகன் தன்னைப் புறந் தந்து ஓம்பிய கந்துக்கடனுக்கு அரசுரிமை தந்து நாடும் தந்து சிறப்பித்தான் ; அவன் மனைவியும் தன்னை வளர்த்தாளுமாகிய சுநந்தைக்கு அரசமாதேவி யென்னும் பட்டமும் தந்தான். நந்தட்டனை இளவரச னாக்கினன் ; ஏனைத் தம்பியரான நபுல விபுலர்க்குக் குறுநில மன்னர் மகளிரை மணம் செய்வித்து "இனிதுறைக" என நாடு பல நல்கினன். தன்னோடு உடனுழைத்த தோழர்கட்கும் பழைய அரசையும் ஏனதி முதலிய பட்டமும் தந்து சீர் செய்தான். ஏனையோர்க்கு நிதியும் நாடும் பிறவும் நிரம்பக்

சுருஎ. மறுவற - குற்றமற முற்றும். திகிரி - அறவாழி. பொறி வரம்பு - இந்திரியங்களுக்கு எல்லையாகிய. நறை - தேன். நகும் - நிகர்க்கும்.

சுருஅ. உலமரும் - கலங்கிச் சுழலும். ஒட்டா மன்னவர் - பகை வேந்தர். வலமருப்பு - வெற்றி தரும் கொம்பு. கட்டில் - அரசு கட்டில். நிவந்து - உயர்ந்து. அரசரில் மேலாயிருத்தலால் நிவந்தென்றார். புலமகள் - தலைமகள். பொய் தீர் - மெய்யான. (நித்தியமான)

கொடுத்தான். இம்முறையே தன் மைத்துனன்மார்க்கும் தக்காங்குப் பெருஞ் சிறப்புச் செய்த சீவகன் தன் மாமன் கோவிந்தனுக்குக் கட்டியங்காரனுடைய செல்வ முழுதும் தந்தான்.

## சீவகன் சுதஞ்சணற்குச் சிறப்புச் செய்தல்

பேரிடர் தன்க ணீக்கிப் பெரும்புணை யாய தோழற்கு
ஓரிடஞ் செய்து பொன்னா லவனுரு வியற்றி யூரும்
பாரிடம் பரவ நாட்டி யவனது சரிதை யெல்லாம்
தாருடை மார்பன் கூத்துத் தான்செய்து நடாயி னானே.

## சீவகன் தான் சிறுபோதில் இருந்து விளையாடிய ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்தல்

ஊன்விளை யாடும் வைவே
    லுறுவலி சிந்தித் தேற்பத்
தான்விளை யாடி மேனா
    ளிருந்ததோர் தகைநல் லாலைத்
தேன்விளை யர்டு மாலை
    யணிந்துபொற் பீடஞ் சேர்த்தி
ஆன்விளை யாடு மைந்தா
    ரதன்புற மாக்கி னானே. சுசுO

பின்பு தன் மனைவியர் எண்மர்க்கும் அரசமாதேவியர் எனும் பட்டமளித்து நாட்டை இனிதே சீவகன் ஆண்டு வருவானாயினன்.

## நாடு நலமெய்திய சிறப்பு

ஆனை மும்மத மாடிய காடெலாம்
மானை நோக்கியர் வாய்மது வாடின ;

---

சுருசு. பேரிடர் - பெரிய இடராகிய கடல். புணை - தெப்பம். இடம் - கோயில். பாரிடம் - நிலவுலகத்தவர். நடாயினான் - நடத்தினான்.

சுசுO. உறுவலி - மிக்க வலியுடைய சீவகன். தகை - அழகு. ஆலை. ஆலமரத்திற்கு. தேன் - வண்டு. பீடம் சேர்த்தி - மேடையமைத்து- அதன் நிழலிலே பசுக்கள் கிடத்தல் அதற்கு அறமாகுமென்றும், அவற்றின் பாலை அதற்குச் சொரிதல் தகுமென்றும் கருதி. ஆன் விளையாடு மைந்தார் என்றார்.''

வேனல் மல்கிவெண் டேர்சென்ற வெந்நிலம்
பானல் மல்கிவெண் பாலன்னம் பாய்ந்தவே. ௬௬௧

## ஆட்சி நலம்

வலையவர் முன்றிற் பொங்கி
வாளைன வாளை பாயச்
சிலையவர் குரம்பை யங்கண்
மானினஞ் சென்று சேப்ப
நிலைதிரிந் தூழி நீங்கி
யுத்தர குருவு மாகிக்
கொலைகடிந் திவற லின்றிக்
கோத்தொழில் நடத்து மன்றே. ௬௬௨

(பதுமையார் இலம்பகத்தில், சீவகன் தேசிகப்பாவை யென்பாள் கூத்தாடியபோது ஆடரங்கிற்குச் செல்ல, அவள் அவனைக் கண்டு வேட்கைமிக்குக் கருத்திழந்தாள் எனக் கண்டோமன்றோ; அவள், சீவகன் தன்னை மறந்தானெனக் கருதி ஈண்டுத் தானே வந்தாள். வந்தவள், கட்டியங்கார னால் வலிதில் நலந்துய்க்கப் பெற்றும், சீவகன்பால் வேட்கை குன்றாது அவனையே நினைந்து சாம்பியிருந்த அநங்கமாலை யென்பாளைக் கண்டு அவட்குத் தோழியாகி யிருந்தாள். அவள், சீவகனைக் காண வரும் செய்தி, இனிக் கூறப்படு கிறது.)

தேசிகப்பாவை சீவகனைக் காணக் கோயில் வாயிலில் வந்து நின்று காவலர் வழியாக அவனுக்குத் தெரிவிக்க, அவனும் அவளை உடனே வரவிடுக என்றான்.

---

௬௬௧. மான் நை நோக்கியர் - மான் நிகராகாமையால் வருந்து கின்ற பார்வையுடைய மகளிர். மது ஆடின - தேன் கொப்புளிக்கப் பட்டன. வெண் தேர் - கானல். பானல் - செங்குவளை. பால் அன்னம்- பால்போலும் நிறமுடைய அன்னம்.

௬௬௨. வலையவர் - செம்படவர். சிலையவர் - வில் வேட்டுவர். குரம்பை - வீடு. சேப்ப - தங்க. இவறல் - பேராசை. "இவ்வூழியிலே உலகம் தன் நிலை திரிந்து நீங்கி உத்தர குருவுமாக எனத் திரித்து நடாத்தும்" என முடிக்க.

## தேசிகப்பாவை அநங்கமாலை தந்த ஓலையைக் கொடுத்தல்

அருவிலைய நன்கலஞ்செய் போர்வை
அன்னநாண அடியொதுங்கிச்சென்று
உருவ மொவ்வா நொசியுநுசுப்
பொல்கிக் கோமா னடிதொழுதபின்
மருவின் சாயல் மணிமெல்விரல்
கூப்பி யோலை மரபினீட்ட
இரவி யென்ன விளங்குமொளி
யிறைவன் கொண்டாங் கதுநோக்குமே. ௬௬௩

அவ்வோலையில், அநங்கமாலை, தன்னைக் கட்டியங்காரன் வலிதிற் கொண்டு சென்று வைத்திருப்பவும் தான் சீவகனையே நினைந்து புலம்பி வாய்வெருவக் கண்டு அவன் விடுத்தவாறும், தான் சீவகன் திருவுரு வெழுதி வழிபட்டு வந்தவாறும், தான் இப்போது கண் துயிலின்றிக் கலுழ்தலும், வளையிழத்தலும், மேனி பசத்தலு மெய்தி வருந்துமாறும், ஓலை கொணரும் தன் தோழி வாமலேகை (இது தேசிகப்பாவை தானே வைத்துக்கொண்ட பெயர்) வருந்தாமல் இனிது கூறி விடுமாறும் எழுதியிருந்தாள். ஓலையுடன் அது கொணர்ந்த தோழியையும் உணர்ந்துகொண்ட சீவகன் உவகை மிகுந்து தேசிகப்பாவையைத் தன் தோளாற் புல்லிச் சிறப்புச் செய்தான்.

## தேசிகப் பாவைக்குச் சீவகன் கூறல்

"அருளுமா றென்னை, யநங்கமாலை
யடித்தி தோழி யன்றோ" என,
"தெருளலான் செல்வக் களிமயக்கினால்,
திசைக்குமென்னறி வளக்கிய கருதி
மருளிற் சொன்னாய், மறப்பேனோ
யானின்னை" யென்ன மகிழ்ந்தங்கணை

---

௬௬௩. அருவிலை - மிக்க விலையையுடைய. நன்கலம் செய் போர்வை - நல்ல கலத்தைப் புறத்தே காட்டும் போர்வை. ஒதுங்கி - நடந்து. ஒசியும் - முறியும். நுசுப்பு - இடை. ஒல்கி - வளைந்து. மரபு - முறைமை.

உருளு முத்தார் முகிழ்முலையினு
ளுள்ளத் துவகை தோற்றினளே. கூகூச

## சீவகற்கு இன்பந் தந்த தேசிகப்பாவை நாடகத்தாலும் இன்பம் தருதல்

நரம்புமீ திறத்தல் செல்லா
நல்லிசை முழவும் யாழும்
இரங்குதீங் குழலு மேங்கக்
கிண்கிணி சிலம்பொ டார்ப்பப்
பரந்தவா ணெடுங்கட் செவ்வாய்த்
தேசிகப் பாவை கோல
அரங்கின்மே லாடல் காட்டி
யரசனை மகிழ்வித் தாளே. கூகூரு

## சீவகன் இன்ப வாழ்வு சிறத்தல்

இளமையங் கழனிச் சாய
லேருழு தெரிபொன் வேலி
வளைமுயங் குருவ மென்றோள்
வரம்புபோய் வனப்பு வித்திக்
கிளைநரம் பிசையுங் கூத்துங்
கேழ்த்தெழுந் தீன்ற காம
விளைபய னினிதிற் றுய்த்து
வீணைவேந் துறையு மாதோ. கூகூகூ

---

கூகூச. அடித்தி தோழி - அடியளாகிய தோழி. என - என்று தேசிகப் பாவை சொல்ல. தெருளலான் - தெளியான், செல்வக் களி மயக்கினல் - செல்வத்தால் பிறந்த களி மயக்கத்தால். திசைக்கு என் அறிவு அளக்கிய - நாற்றிசையும் என் அறிவை அளந்து காட்டவேண்டி. மருளில் - பேதைமையால். என்ன - என்று சீவகன் சொல்ல. உருளும் முத்தார் - உருளும் முத்துமாலை பொருந்திய.

கூகூரு. மீது இறத்தல் செல்லா - தப்பிச் செல்லாத, நரம்பு - நரம்போசை. ஏங்க - இசைக்க. நரம்போசையின் மேற்பட்டுச் செல்லாத முடிவு முதலியன.

கூகூகூ. இளமையாகிய கழனி. வளை முயங்கு - வளையணிந்த. உருவ மென்றோள் - அழகிய மெல்லிய தோள். கேழ்த்து-நிறம்கொண்டு. விளை பயன் - விளையும் பயனாகிய காமம். வீணை வேந்து - வீணை வேந்தனாகிய சீவகன். "தோளாகிய வரம்பு சூழ் போகா நிற்க உழுதென்க. தனது சாயலால், விளைந்த அழகைக் கண்ட அளவில் காம வேட்கை விளைவித்தற்குக் கூத்தையும் பாட்டையும் நடத்துதலின் பிறந்தது காமம் என்க.

# கஙு. முத்தியிலம்பகம்

[முத்தியிலம்பகம் : சீவகனது ஆட்சிக்காலத்தில், அவன் தாயான விசயை தண்டாரணியத்துத் தவப்பள்ளியிலிருந்து துணை செய்து போந்த தாபத மகளிர்க்குத், தான் அருகன் கோயிலொன்று எடுப்பித்து நல்ல பூசனை செய்து, அதன் பயனை நல்கினள்; சுடு காட்டில் தனக்குத் தோழியாய் வந்து துணைபுரிந்த தெய்வத்துக் கும் ஒரு கோயில் சமைப்பித்தாள்; சுடுகாட்டை அறக்கோட்ட மாக்கி நாடோறும் ஐந்நூற்றைந்து பிள்ளைகட்குப் பாலும் சோறும் அளிக்குமாறு செய்தாள். தான் உறையுமிடத்தே மயிற்பொறி யின் வடிவமெழுதி மனம் மகிழ்ந்தாள். முடிவில், அவள் துறவு பூணற்கெண்ணி, சீவகன்பால் விடை பெற்றுப் பம்மை யென் னும் அடிகளை யடைந்து, துறவறம் மேற்கொண்டாள். சின்னாள் கழிந்ததும், சீவகன் தன் மனைவியருடன் துறவியாகியவிசயையைக் கண்டு பணிந்து தன் நகரம் போந்து, சோலை நுகர்வு, நீர் விளை யாட்டு முதலிய பல இன்பத் துறைகளில் எளியனாய் இனிதிருந்து வந்தான். அவன் மனைவியரும் முறையே சச்சந்தன், சுதஞ் சணன், தரணி, கந்துக்கடன், விசயன், தத்தன், பரதன், கோவிந் தன் என்ற மக்களைப் பெற்று மகிழ்ச்சி மிகுந்தனர்.] :

மேலே கூறியவாறு சீவகன் இனிதே நாடாட்சி செய்து வரும் நாளில் விசயை அவனை, அருகனுக்கு மிகச் சீரிய தொரு கோயிலை எடுக்குமாறு பணிக்க, அவனும் அத்தகைய கோயிலொன்றை எடுப்பித்தான்.

## அருகன் கோயிற் சிறப்பு

விண்பாற் சுடர்விலக்கி மேகம் போழ்ந்து விசும்பேந்தி
மண்பாற் றிலகமாய் வான்பூத் தாங்கு மலிமல்கிப்
பண்பால் வரிவண்டுந் தேனும் பாடும் பொழிற்பிண்டி
எண்பால் இகந்துயர்ந்தாற் கிசைந்த கோயி லியன்றதே.

---

ஙுகூஎ. விண்பால் சுடர் - விண்ணில் உள்ள ஞாயிறும் திங்களும். விசும்பேந்தி - தேவருலகுக்கு மேலாய். மண்பால் - மண்ணிலுள்ள கோயில் களுக்கு. வான் பூத்தாங்கு - வானம் மீன்பூத்தாற்போல, மல்கி - நிறைய விருத்தலால், மேகம் போழ்ந்து. சுடர் விலக்கி, பூத்தாங்கு மல்குதலால், விசும்பேந்தி, திலகமாய் இயன்றது என்க. பண்பால் - பண்பாடும் பான்மையுடைய. எண்பால் இகந்து உயர்ந்தாற்கு - எண் குணங்களால் உயர்ந்த அருகனுக்கு.

### கோயிலெடுத்த நல்வினைப்பயனை விசயை தனக்குத் துணைசெய்து உதவிய தவமகளிர்க்கு நல்கல்

அல்லி யரும்பதமும் அடகுங் காயுங் குளநெல்லும்
நல்ல கொழும்பழனுங் கிழங்குந் தந்து நவைதீர்த்தார்க்கு
இல்லையே கைம்மாறென் றின்ப மெல்லா மவர்க்கீந்தாள்
வில்லோன் பெருமாட்டி விளங்கு வேற்கண் விசையையே.

### சுடலையில் தனக்குத் துணைசெய்த தெய்வத்துக்கும் தன்னைச் சுமந்து செய்த மயிற்கும் சிறப்புச் செய்தல்

தனியே துயருழந்து தாழ்ந்து வீழ்ந்த சுடுகாட்டுள்
இனியா ளிடம்நீக்கி யேமஞ் சேர்த்தி யுயக்கொண்ட
கனியார் மொழியாட்கு மயிற்குங் காமர் பதிநல்கி
முனியாது தான்காண மொய்கொண் மாடத் தெழுவித்தாள்.

### சுடுகாட்டை ஆன்பால் அளிக்கும் அறச்சாலை யாக்குதல்

அண்ணல் பிறந்தாங் கைஞ்ஞூற் றைவர்க் களந்தான்பால்
வண்ணச் சுவையமுதம் வைக நாளுங் கோவிந்தன்
வெண்ணெய் உருக்கிநெய் வெள்ள மாகச் சொரிந்தூட்டப்
பண்ணிப் பரிவகன்றுள் பைந்தார் வேந்தற் பயந்தாளே.

பின்பு தன்பால் வந்து அடிபணிந்த சுநந்தையை நோக்கி, "சீவகனைப் பயந்த செல்வியே! வருக" என இனியன கூறிச் சிறப்பித்த விசயை, காந்தருவதத்தை முதலிய

---

கூகூஅ. அல்லி யரும்பதம் - அல்லி யுணவு; ஆம்பலரிசியாலாகிய உணவு. அடகு - இலைக் கறி. நவை - இடுக்கண். இன்பம் - கோயிலெடுப்பித்த வினைப்பயன். வில்லோன் பெருமாட்டி - சச்சந்தன் தேவியாகிய.

கூகூகூ. உழந்து - வருந்தி. இனியாள் - இனியளாகிய விசயை. ஏமம் - பாதுகாப்பான இடம்; தாபதப்பள்ளி. உயக்கொண்ட - பிழைப்பித்துக்கொண்ட. கனியார் மொழியாள்-கனிபோலும் மொழியினையுடைய கூனிவடிவில் வந்த தெய்வம். பதி - கோயில். முனியாது - இடையறவின்றி. தெய்வத்துக்குக் கோயிலும், மயிலுக்குத் தன் மாடமும் நல்கினளாம்.

கூஎO. பிறந்தாங்கு - பிறந்த விடமாகிய சுடுகாடு. ஆன்பால் அளந்து தோழர் ஐஞ்ஞூற்று நால்வர், சீவகன் ஆக ஐஞ்ஞூற்றைவர் பொருட்டு, நாளும் ஐஞ்ஞூற்றைவர்க்கு அடிசில் அமைதியாம். வண்ணவமுதம் - பருப்புச் சோறு. கோவிந்தன் - நந்தகோன். பரிவு - இவ்வேற்பாடுகளைச் செய்யவேண்டுமென நினைத்திருந்த வருத்தம்.

எண்மரும் வந்து பணிந்து நிற்க, அவர்களையும் புல்லியரு இருத்தி, "உலகாளும் சிறுவரைப் பயந்து தெளிவீர்களாக" என்று சிறப்பித்து, முடிவில் சீவகனைத் தன்பால் வருமாறு பணித்தாள்.

### சீவகன் வந்து பணிந்து இருத்தல்

சிங்க நடப்பதுபோற் சேர்ந்து பூத்தாய்ப் பணிர்வாழ்த்தத்
தங்கா விருப்பிற்றம் பெருமான் பாத முடிதீட்டி
எங்கோ பணியென்று அஞ்சா நடுங்கா இருவிற்கண்
பொங்க விடுதவிசி லிருந்தான் போரே றனையானே. ௬௭௬

விசயை சீவகனுக்குச் சச்சந்தன் மாண்ட செய்தியைத் தானே தன் வாயாற் கூறலுற்று, அவன் பெண்ணின்பமே பெரிதெனக் கருதி அமைச்சர் சொல்லைக் கேளாதொழிந்ததும், கட்டியங்காரனால் கொடுமை செய்யப் பெற்றதும், மயிற் பொறியில் தன்னை விண்ணிற் போக்கியதும் பிறவும் கூறி முடித்தாள். சீவகன் அது கேட்டு மயங்கி உணர்வற்றுக் கீழே வீழ்ந்தான். அருகிருந்தவர் பின்பு தெளிவிக்கத் தெளிய, அவனுக்கு விசயை செல்வம், இளமை, யாக்கை முதலியவற்றின் நிலையாமையை எடுத்து மொழிந்தாள்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த சுநந்தையும் உள்ளத்தே துறவுணர்வு போதர, இவையனைத்தும் தனக்குக் கூறிய உறுதியாகத் தேர்ந்து துறவுபூணத் துணிந்தாள். இதனைச் சீவகற்கும் அவள் சொல்லிவிட்டாள். சீவகன் உற்ற துயர்க்கு அளவில்லை.

### இருவரும் பம்மை யென்னும் துறவி இருந்த சூழலுக்குச் செல்லுதல்

ஒருயி ரொழித்திரண் டுடம்பு போவபோல்
ஆரிய ளொழியவங் கௌவை மார்கடாஞ்

௬௭௬. சேர்ந்து - நடந்து சென்று. தங்காவிருப்பின் - மிக்க விருப்பத்துடன். பெருமான் - தாய். "னகொனெற்று மகடூஉவை யுணர்த்திற்று." முடி சூட்டி - முடி பொருந்த வணங்கி. "அவன் கூறிய அறமெல்லாம் தான் செய்து முடித்தலின், இன்னும் அவை உளவோ என்பது தோன்ற எங்கோ பணி என்றான்." இருவிற் கண் - இரண்டு விற்கிடை நீளம். ஏறனையான் - சீவகன்.

சீரிய துறவொடு சிவிகை யேறினார்
மாரியின் மடந்தைமார் கண்கள் வார்ந்தவே. கூஎஉ

### விசயை சுநந்தையுடன் பம்மையைப் பணிதல்

அருந்தவக் கொடிக்குழாஞ் சூழ வல்லிபோல்
இருந்தறம் பகர்வுழி யிழிந்து கைதொழுது
ஒருங்கெமை யுயக்கொண்மின் அடிகள் என்றனள்,
கருங்கய னெடுந்தடங் கண்ணி யென்பவே. கூஎ௩

### பம்மை கூறல்

"ஆரழன் முளரி யன்ன அருந்தவ மரிது; தானஞ்
சீர்கெழு நிலத்து வித்திச் சீலநீர் கொடுப்பிற் றீந்தேன்
பார்கெழு நிலத்து ஞாறிப் பல்புக ழீன்று பின்னால்
தார்கெழு தேவ ரின்பம் தையலாய்! விளைக்கு" மென்றாள்.

இது கேட்ட விசயை மீட்டும் வணங்கி, "யாம் அறவுரை பின்னர்க் கேட்போம்; இப்போது எமக்குத் துறவு தந்தருள்க" என வேண்டினள்; அவளும் அதனை யிசையத் தவமகளிர் துறவுக் குரியன செய்யலுற்று முதற்கண், விசயை, சுநந்தையாகிய இருவருடையையும் மாற்றி, பாலால் அடி கழுவி நூலாகிய வெண்கோடி யுடுப்பித்தனர்.

---

கூஎஉ. ஒருடம்பை விட்டு ஒருயிர் போதல் போலாது, ஒருயிரை விட்டு இரண்டு உடம்பு செல்வதுபோல். ஆரியன் - அரியவனாகிய சீவகன்; இது தமிழ்ச்சொல்; வடசொல்லென வாய் வதறுவாரு முளர். ஒளவைமார் - தாய்மார். துறவொடு - துறவு மேற்கொண்டு. மடந்தைமார் - சீவகன் தேவிமார். வார்ந்த - கண்ணீரைச் சொரிந்தன.

கூஎ௩. கொடிக்குழாம் - மகளிர் கூட்டம். அல்லி - பூவின்நடு. இருந்து - பம்மை அவர் நடுவே யிருந்து. பகர் வுழி - கூறும் இடம். ஒருங்கு - சேர. கண்ணி - விசயை.

தாமரைப்பூவின் புறவிதழ் போல், மகளிர் சூழ விருப்ப, பம்மை அல்லிபோல் நடுவே யிருந்து அறம் பகர்ந்தாளாம்.

கூஎச. முளரி - விறகு. சீல நீர் - சீலமாகிய நீர். பார் கெழு நிலத்துள் - உத்தர குருவில். நாறி - முளைத்து. தீந்தேன் தார் கெழு தேவர் - தீவிய தேன் நிறைந்த மாலை அணிந்த தேவர்.

### இருவரும் மயிர் பறிப்புண்டல்

மணியியல் சிப்பிடச் சிவக்கும் வாணுதல்
அணியிருங் கூந்தலை யௌவை மார்கடாம்
பணிவிலர் பரித்தனர் பரமன் சொன்னநூல்
துணிபொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார். ௬௭௫

### தவத்திற்குரிய குணம் பலவும் நிறைதல்

பொற்குடந் திருமணி பொழியப் பெய்தபோல்
எற்புடம் பெண்ணிலாக் குணங்களால்நிறைத்து
உற்றுட னுயிர்க்கருள் பரப்பி யோம்பினார்
முற்றுட னுணர்ந்தவ னமுத மோம்பினார். ௬௭௬

### இருவரும் தவத்தால் மேம்படுதல்

புகழ்ந்துரை மகிழ்ச்சியும் பொற்பில் பல்சனம்
இகழ்ந்துரைக் கிரக்கமு மின்றி யங்கநூல்
அகழ்ந்து கொண்டரும் பொருள்பொதிந்த நெஞ்சினார்
திகழ்ந்தெரி விளக்கெனத் திலக மாயினார். ௬௭௭

இவ்வண்ணம் இவர்கள் தவத்தால் மேம்படவே, இவர்களைக் காண்டல் வேண்டிச் சீவகன் தன் மனைவியர் உடன் வரப் போந்து இவர்கள் அடிவீழ்ந்து வணங்கினன். இவர்கள் அவனுடைய வணக்கத்தையோ வாழ்த்தையோ பொருள் செய்திலர். விசயை பாவைபோன் றிருந்தாள்.

---

௬௭௫. மணியியல் சிப்பு - மணியால் செய்த சிப்பு. நுதல் அணி - நெற்றியைச் சேர்ந்துள்ள. பணிவு - தாழ்வு. பரமன் - இறைவன். நூல் - ஆகமம். துணி பொருள் - துணியும் பொருள்.

௬௭௬. பொழிய - நிரம்பி வழிய. எற்புடம்பை - எலும்பொடு கூடிய இவ்வுடம்பை. உற்று...பரப்பி - பல்லுயிர்க்கும் வந்த துன்பங்களைத் தாமும் உடனே யுற்று அவ்வுயிர்களுக்கு அருளைப் பரப்பி. அமுதம் - ஆகமப் பொருள். "தவம் புரிந்து அடங்கத்தக்க நல்வினையுடைமையின் பொற்குடத்தோடு உவமித்தார்."

௬௭௭. புகழ்ந்துரை - ஒருவர் தம்மைப் புகழ்ந்துரைத்தற்கு. பொற்பில் பல்சனம் - தெளிந்த அறிவுச் சிறப்பில்லாத பல மக்களும். இரக்கம் - வருத்தம். அங்க நூல் - பல அங்கங்களையுடைய ஆகமம். அகழ்ந்துகொண்டு - கல்வியெடுத்துக்கொண்டு. பொதிந்த - நிறைந்த. திகழ்ந்து - ஒளிவிட்டு. விளக்கென - விளக்குப்போல.

### பம்மை சீவகற்குக் கூறல்

"காதல னல்லை நீயும்; காவல! நினைக்கி யாமும்
ஏதிலம் என்று கண்டாய் இருந்தது நங்கை" யென்னத்
தாதலர் தாம மார்ப னுரிமையுந் தானு மாதோ
போதவிழ் கண்ணி யீர்த்துப் புனல்வரப் புலம்பி னானே.

அது கண்டு பம்மை முதலிய தேவமகளிர், சீவகனுடன் பேசுமாறு விசயையை வற்புறுத்தினர். அதன்மேல் அவள் கண் திறந்து நோக்கினாள்.

### விசயை கூறல்

திரைவளை இப்பி யீன்ற திருமணி யார மார்பின்
வரைவளர் சாந்த மார்ந்த வைரக்குன் றனைய திண்டோள்
விரைவளர் கோதை வேலோய் வேண்டிய வேண்டி னேமென்று
உரைவிளை வித்து ரைப்பக் காளையுள் ளகம்கு ளிர்ந்தான்.

### சீவகன் சுநந்தைக்குச் சொல்லுதல்

அடிகளோ துறக்க வொன்று முற்றவர் யாது மல்லர்;
சுடுதுய ரென்கட் செய்தாய்; சுநந்தைநீ யௌவை யல்லை;
கொடியைநீ கொடிய செய்தாய் கொடியையோ கொடியை யென்று
இடருற்றோர் சிங்கந் தாய்மு னிருந்தழு கின்ற தொத்தான்.

---

கூஎஅ. காதலன் - காதலிக்கப்படுபவன். ஏதிலம் - சுற்றமல்லேம். என்று கண்டாய் - என்று அறிவாய். என்ன - என்று பம்மை கூற. தாதலர் தாமம் - தேன் விரியும் மாலை. போதவிழ் கண்ணி - தான் சூடியிருந்த மலர்ந்த பூக்களால் தொடுத்த கண்ணியை. புனல்வர - கண்ணில் நீர் பெருகி வழிய.

கூஎகூ. திரை - கடல். மணியாரம் - மணி கலந்து கோத்த முத்து மாலை. வரை - மலை. சாந்தம் - சந்தனம். விரை - நறுமணம். வேண்டிய வேண்டினேம் - நீ விரும்புவனவற்றையே யாமும் விரும்பினேம். உரை விளைத்து - உரையைத் தாமே வலிய எழுப்பி. வேண்டிய என்றது, அவன் "உறைக" என்றதும், "யான் நும் காதலன்" என்றதும் வேண்டிக் கூறியவை.

கூஅ௦. யாது ஒன்றும் உற்றவர் அல்லர் - யாதொரு வருத்தமும் உற்றவரல்லர். அடிகள் - விசயமா தேவி. ஔவை - தாய். இடர் - துன்பம்.

## சுநந்தை விடை பிறுத்தல்

" சென்றதோ செல்க ; விப்பால்
திருமக ளனைய நங்கை
இன்றிவ டுறப்ப யானின்
னரசுவந் திருப்பே னுயின்
என்றெனக் கொழியு மம்மா
பழி "யெனு விலங்கு செம்பொற்
குன்றனுன் குளிர்ப்பக் கூறிக்
கோயில்புக் கருளு சென்றாள். ௩௮௧

பின்பு நந்தட்டன் அடிபணிந்து வணங்க, அவனை நோக்கி, " நும்மை யாம் துறந்திலம்; அதனாலே நீ மனம் நொந்து வெறுக்க வேண்டா " என்று மொழிய, அவனும் மனம் தேறிச் சென்றான். அனைவரும் கோயிலை யடைந்தனர். இருவரும் தவநெறியில் நின்று இலகுவாராயினர்.

இந் நிகழ்ச்சிகளைக் கண்டிருந்த அமைச்சர், சீவகனும் துறவு மேற்கொள்வானோ என்ற அச்சத்தால், அவன் மனத்தை அரச போகத்திலே அமிழ்த்தற் கெண்ணி, நீர் விளையாடற் கேற்ப, அரசுரிமையும் அரசனும் படிந்தாடற் குரிய இனிய நீர் வாவிகளைப் பண்ணி, அவற்றைக் கண்டருளுமாறு அரசனை வேண்டினர். அவனும் அதற் கிசைந்தான்.

## நீர்விளையாட்டு

கணமலை யரசன் மங்கை கட்டியங் கார னாகப்
பணைமுலை மகளி ரெல்லாம் பவித்திரன் படையதாக
இணைமலர் மாலை சுண்ண மெரிமணிச் சிவிறி யேந்திப்
புணைபுறந் தழுவித் தூநீர்ப் போர்த்தொழில் தொடங்கி னாரே.

---

௩௮௧. சென்றதோ செல்க - " தன் கணவனை யிழந்து புதல்வன் அரசை உவந்திருந்தாளென்று இதற்கு முன்னர் உலகத்து நிகழ்ந்த பழி நிகழ்ந்தே போக," இவள் - விசயை. மா பழி - பெரும்பழி.

௩௮உ. கணமலை - கூட்டமான மலை. அரசன் - கலுழவேகன். மங்கை - காந்தருவதத்தை. பணை - பருத்த. பவித்திரன் - சீவகன். இணைமலர்-ஒத்த மலர். புணைபுறம் - தெப்பத்தின் புறத்தை. " வேறொரு பகையரசைத் தாம் கேட்டறியாமையாலும், கட்டியங்காரன் கொடுமை தம் மனத்து நிகழ்தலாலும் கட்டியங்காரனாக " என்றார்.

### தந்தையின் போர்த்திறம்

அரக்குநீர்ச் சிவிறி யேந்தி யாயிரந் தாரை செல்லப்
பரப்பினுள் பாவை தத்தை ; பைந்தொடி மகளி ரெல்லாம்
தரிக்கில ராகித் தாழ்ந்து தடமுகிற் குளிக்கு மின்போல்
செருக்கிய நெடுங்கண் சேப்பச் சீதநீர் மூழ்கி னாரே. ௯௮௩

### சீவகன் சேனையுடைய அவன் சிவிறியேந்திப் பொருதல்

கூந்தலை யொருகை யேந்திக்
குங்குமத் தாரை பாயப்
பூந்துகி லொருகை யேந்திப்
புகுமிடங் காண்டல் செல்லார்
வேந்தனைச் சரணென் றெய்த
விம்முறு துயரம் நோக்கிக்
காய்ந்துபொற் சிவிறி யேந்திக்
கார்மழை பொழிவ தொத்தான். ௯௮௪

### தந்தையின் சேனையுடைதல்

அன்னங்க ளாகி யம்பூந்
தாமரை யல்லி மேய்வார்
பொன்மயி லாகிக் கூந்தல்
போர்த்தனர் குனிந்து நிற்பார் ;
இன்மலர்க் கமல மாகிப்
பூமுகம் பொருந்த வைப்பார் ;
மின்னுமே கலையுந் தோடும்
கொடுத்தடி தொழுது நிற்பார். ௯௮௫

---

௯௮௩. அரக்கு நீர் - இங்குலிகம் கலந்த நீர் ; தடத்து நீர். சிவிறி- பீச்சுங் குழல். தரிக்கிலராகி - எதிர்நிற்க மாட்டாராய். முகிற் குளிக்கும் மின்போல் - வெண்முகிலுள் மறையும் மின்னலைப்போல. செருக்கிய - மதர்த்த. சேப்ப - சிவக்க. சீதம் - குளிர்ச்சி.

௯௮௪. குங்குமத் தாரை - குங்குமம் கலந்த நீர்த்தாரை. காண்டல் செல்லார் - காணாராய். விம்முறு துயரம் - மிகுகின்ற வருத்தம், காய்ந்து- விளையாட்டாய்ச் சினந்து. கார் - கார்முகிலே; நின்று.

௯௮௫. அல்லி மேய்வார் - அல்லியில் முகத்தை மறைப்பார், பொன் மயில் - பொன்னிறமுடைய தொரு மயில், இன்மலர்க்கமலம் - இனிய பூவாகிய தாமரை. பொருந்த - பூவொடு முகம் பொருந்த, மேகலையும் தோடும் கொடுத்தது, கெட்டார் திறையிடுவது போல்வது.

தன் படையுடையக் கண்ட காந்தருவதத்தை சந்தனத் தாரை கொண்டு சீவகன் மேல் பாய்ந்தாள். இடைநின்ற மகளிர் கூட்டம் எதிரே சிவிறி கொண்டு தாரை வீச ஆற்று ராய் உடைந்தோடினர்.

## சீவகன் வறிதே நிற்றல்

"மெய்ப்படு தாரை வீழ்ந் தொழிவட்'' டென்ன வஞ்சிக்
கைப்படை மன்ன னிற்பக் கதுப்பயல் மாலை வாங்கிச்
செப்படை முன்கை யாப்பத் திருமகன் றொலைந்து நின்றான்;
பைப்புடை யல்கு லாளைப் பாழியாற் படுக்க லுற்றே. ௬௮௬

## தத்தை தோற்றோடிச் சீவகனைத் தழீஇக் கொளல்

அடுத்தசாந் தலங்கல் சுண்ண மரும்புனல் கவர வஞ்சி
உடுத்தபட் டொளிப்ப வொண்பொன் மேகலை யொன்றும்பேசா
கிடப்பமற் றரச னோக்கிக், "கெட்டதுன் துகில்மற் "றென்ன
மடத்தகை நாணிப் புல்லி மின்னுச்சேர் பருதி யொத்தான்.

இவ்வாறு நீராட் டயர்ந்து சீவகன் இனிதிருக்கும் நாளில் முதுவேனிற் பருவம் வந்தது. அப்போதில் அவன் மகளிரின் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் மகிழ் வெய்தினன். பின்பு கார்ப்பருவம் வந்து இனிதே கழிந் தது. அதன்பின் கூதிர் வந்தது. அக்காலத்தே ஒருநாள் குணமாலை சீவகற்கென ஒரு வள்ளத்தே தேறல் கொணர்ந் தாள். அதனுள் அவளது முகந் தோன்ற, அதனைத் திங்க ளெனக் கருதியதோடு நில்லாமல் தன் முகத்துக்குப் பகையா

---

௬௮௬. மெய்ப்படு தாரை - மெய்யிலே சென்று தாக்கும் தாரை. கைப்படை மன்னன் - கையிலே சிவிறி யேந்திய சீவகன். நிற்ப - தாரை தூவாமல் வாளா நிற்ப. கதுப்பயல் மாலை - கூந்தலில் கிடந்த மாலை. செப்புட - செவ்விதாக. யாப்ப - கட்ட. தொலைந்து - தோற்று. பைப் புடை யல்குல் - படத்தின் பக்கத்தையுடைய அல்குல். பாழி - வலி. படுக்கலுற்று - கைப்படுக்கக் கருதி.

௬௮௭. சாந்தும் அலங்கலும் சுண்ணமும் கவரும் புனல், அவள் உடுத் திருந்த வெண்பட்டினைக் கவர. பேசா - ஒலி செய்யாது. கிடப்ப - புடவை யொடு கிடப்ப. என்ன - என்று சீவகன் சொல்லிக் காட்ட. மடத்தகை - காந்தருவதத்தை. புல்லி - அவனைப் புல்லிக்கொள்ள, பருதி - ஞாயிறு.

மென நினைத்துப் பருகிவிட்டாள். பின்னர்த் தன் கண்ணைத் திறந்தவள் வானத்தே திங்கள் இருப்பக் கண்டு ஊடலுற்றாள்.

### குணமாலை யூடல்

"பருகினேற் கொளித்துநீ பசலை நோயொடும்
உருகிப்போ யின்னுமற் றுளை"யென் றுள்சுடக்
குருதிகண் கொளக்குண மாலை யூடினாள்;
உருவத்தா ருறத்தழீஇ யுடற்றி நீக்குவான்; ௬௮௮

### சீவகன் ஊடல் தீர்த்துக் கூடல்

"நங்கைநின் முகவொளி யெறிப்ப நன்மதி
அங்கதோ உள்கறுத் தழகிற் றேய்ந்தது;
மங்கைநின் மனத்தினால் வருந்தல்" என்றவள்
பொங்கிள வனமுலை பொருந்தி னானரோ. ௬௮௯

முன் பனியும் பின் பனியுமாகிய பருவங்களும் இன்பமாகவே கழிந்தன. இவர்களும் கீழ்நிலை மாடத்தேயிருந்து இனிது கழித்தனர்; குளிரும் எலிமயிர்ப் போர்வையால் நீக்கப்பட்டது. முடிவில் இளவேனிற் காலம் வந்தது. எங்கணும் இயற்கை இனிய காட்சி வழங்கத் தொடங்கிற்று. தென்றலும் மலர் மணம் கமழ்ந்து மெல்ல அசைந்து போந்தது.

### இயற்கை யழகு

குரவம் பாவை கொப்புளித்துக்
குளிர்சங் கீர்ந்த துகளேபோல்
மரவம் பாவை வயிறாரப்
பருகி வாடை யதுநடப்ப

---

௬௮௮. பருகினேற்கு - பருகின எனக்கு. நெஞ்சில் தட்டுப்படாமையின் "உருகிப் போய்" என்றாள். உள் - உள்ளம் பொருந்து. கண் குருதி கொள - கண் சிவப்ப. தார் உற - மாலை பொருந்த. உள்சுட உடற்றி எனக் கூட்டிக்கொள்க.

௬௮௯. உள் கறுத்து - உள்ளகம் கரிதாகி. (களங்கத்தைச் சுட்டியது). தேய்ந்தது - கலையினது தேய்வு.

விரவித் தென்றல் விடுதூதா
வேனி லாற்கு விருந்தேந்தி
வரவு நோக்கி வயாமரங்க
ளிலையூழ்த் திணரீன் றலர்ந்தனவே. கூகூ0

இக்காலத்தே சீவகன் மகளிருடன் நாட்டினுள்ள பல்வேறு இனிய இடங்கட்குச் சென்று இன்பம் நுகர்ந்தான்.

### மகளிர் இன்புறுதல்

எண்ணற் கரிய குங்குமச்சேற்
றெழுந்து நான நீர்வளர்ந்து
வண்ணக் குவளை மலரளைஇ
மணிக்கோல் வள்ளத் தவனேந்த
உண்ணற் கினிய மதுமகிழ்ந்தா
ரொலியன் மாலை புறந்தாழக்
கண்ணக் கழுநீர் மெல்விரலாற்
கிழித்து மோந்தார் கனிவாயார். கூகூக

இவ்வண்ணம் சில யாண்டுகள் கழிய மகளிர் அனைவரும் கருவிருந்து ஆண் மக்களைப் பயந்தனர். அவர்கள்

கூகூ0. கொப்புளித்து - காற்றுச் சிதற அடித்து. மரவம் பாவை - மரவம் பூ. வயிறுார - நிரம்ப. பருகி - கவர்ந்து. தென்றல் விரவி வரவு நோக்கி - தென்றல், வாடை போகா நிற்க விரவி வருகின்ற வரவைக் குறித்து. வேனிலான் - காமன். "வேனிலானுக்கு விருந்தேந்தி இணரீன்று அலர்ந்தன - காமனுக்கு விருந்திடுதலை ஏறட்டுக்கொண்டு பூங்கொத்துக்களையீன்று அலர்ந்து விருந்திட்டன. வயா - வேட்கை.

கூகூக. குங்குமச் சேறு - குங்குமக் குழம்பு. நான நீர் - கத்தூரி கமழும் நீர். மலர் அளைஇ - மலர் விரவி. மணிக்கோல் வள்ளம் - மணியழுத்தி விளிம்பு பிரம்பு கட்டின வட்டில். வள்ளத்தில் மதுவையேந்த. ஒலியல் மாலை - பூமாலையும் முத்தமாலையும். கண்ண - தம் கருத்து இதுவென்பது அவன் கருதும்படி. கனிவாயார் - மகளிர்.

* "இப் பூ வடுப்படுத்தி மோந்தும் இனிய நாற்றத்தவேயாயினாற்போல எம்மையும் உகிர் முதலியவற்றால் சிறிது வடுப்படுத்தி நுகர்தல் எமக்கு வருத்தமென்று அஞ்சினையாயினும் அஃது எமக்கு மிக்க இன்பமே யாதலின் உனக்கும் இன்பம் செய்யுமென்பது உணர்த்துதற்குக் கிழித்து மோந்தார் என்க; இளமைச் செவ்வி யிக்க வழி மகளிர்க்கு இங்ஙனம் வடுப்படுத்தி நுகர்தல் இன்பம் செய்யுமென்று காம நூலிற் கூறுதலின் அதனையீண்டுக் கூறினர்."

பிறப்பிற்குரிய சிறப்புக்கள் பலவும் நிகழ்ந்தன. அவர்கட்கு முறையே சச்சந்தணன், சுதஞ்சணன், தரணி, கந்துக்கடன், விசயன், தத்தன், பரதன், கோவிந்தன் எனப் பெயர்கள் இடப்பட்டன.

### சீவகன் மக்கள் கலைபயிறல்

ஐயாண் டெய்தி மையாடி
  யறிந்தார் கலைகள் படைநவின்றார்
கொய்பூ மாலை குழன்மின்னும்
  கொழும்பொற் றோடும் குண்டலமும்
ஐயன் மார்கள் துளக்கின்றி
  யாலுங் கலிமா வெகுண்டேர்ந்தார்,
மொய்யா ரலங்கன் மார்பற்கு
  மூப்ப தாகி நிறைந்ததே. கூகூஉ

இவ்வாறு இன்புற்றிருக்கும் நாளில் வேனிற் காலம் வந்தது. சோலை யெங்கும் பூவும் கனியும் சிறந்து பொற்பு விளங்க நிலவின.

### மல்லிகை மாலை யென்னும் தோழி சோலை காண்க என அரசனை வேண்டல்

தடமுலை முகங்கள் சாடிச்
  சாந்தகங் கிழிந்த மார்பிற்
குடவரை யனைய கோலக்
  குங்குமக் குவவுத் தோளாய் !
தொடைமலர் வெறுக்கை யேந்தித்
  துன்னினன் வேனில் வேந்தன்
இடமது காண்க என்றாள் ;
  இறைவனு மெழுக என்றான். கூகூங

கூகூஉ. மையாடி - மையோலை பிடித்து. படை - படைப் பயிற்சி. துளக்கின்றி - அசையாமல். மாலையும் குழலும் தோடும் குண்டலமும் அசையாமல் ஊர்தல் பிறர்க்கு அரிதாகலின் துளங்காமலூர்ந்தார் என்றார். வெகுண்டேர்ந்தார் - அடித்தேறினர். மொய்யார் - செறிந்துள்ள.

கூகூங. குடவரை - ஞாயிறு மறையும் மேற்கு மலை. குவவு - திரண்ட. தொடை மலர் - கொத்தாகிய பூ. வெறுக்கை - பாற்குடம் ; கை யுறைப் பொருள். இடம் அது - அவனைக் காண்டற்கு இடம் அது.

### சீவகன் தன்னுரிமை மகளிருடன் சென்று சோலை யின்பம் நுகர்தல்

இலங்குபொன் னார மார்பி னிந்திர னுரிமை சூழக்
கலந்தபொற் காவு காண்பான் காமுறப் புக்க தேபோல்
அலங்குபொற் கொம்ப ரனை மன்னனு மாட மாதோ
நலங்கவின் கொண்ட காவு நல்லொளி நந்திற் றன்றே. ௯௯௪

### அரசன் விரும்பியவாறு மகளிர் வேறு வேறாகச் சென்று விளையாட்டயர்தல்

வானவர் மகளி ரென்ன வார்கயிற் றூச லூர்ந்தும்
கானவர் மகளி ரென்னக் கடிமலர் நல்ல கொய்தும்
தேனிமிர் குன்ற மேறிச் சிலம்பெதிர் சென்று கூயும்
கோனமர் மகளிர் கானிற் குழாமயில் பிரிவ தொத்தார்.

### சோலைக் காட்சிகளைக் கண்டுவந்த சீவகன் உள்ளம் துறவின்மேற் செல்லுதல்

இன்கனி கவரு மந்தி கடுவனோ டிரிய வாட்டி
நன்கனி சிலத னுண்ண நச்சுவேன் மன்ன னோக்கி
ஊன்பொடு மிடைந்த காம மிழிபொடு வெறுத்து நின்றான்
அன்புடை யரிவை கூட்டம் பிறனுழைக் கண்ட தொத்தே.

"கைப்பழ மிழந்த மந்தி கட்டியங் கார னொத்தது
இப்பழந் துரந்து கொண்ட சிலதனு மென்னை யொத்தான்;
இப்பழ மின்று போகத் தின்பமே போலு" மென்று
மெய்ப்பட வுணர்வு தோன்றி மீட்டிது கூறி னானே. ௯௯௭

---

௯௯௪. பொற்கா - கற்பகச் சோலை. காமுற - விருப்பம் மிக. அலங்கு - அசைகின்ற. ஆட - விளையாட. நந்திற்று - சிறந்தது.

௯௯௫. வார் கயிற்றூசல் - நீண்ட கயிறு கட்டிய ஊசல், கடிமலர் - மணமிக்க பூ. தேன் இமிர் குன்றம் - தேனினம் ஒலிக்கும் குன்றம். சிலம்பு-மலை. கோனமர் மகளிர் - அரசன் காதலிக்கும் மகளிர். கானில் - காவில்.

௯௯௬. கடுவன் - ஆண் குரங்கு. இரிய வாட்டி - நீங்குமாறு அலைத்து. சிலதன் - சோலைக் காவலன், நச்சு வேல் - நஞ்சு தீற்றிய வேல், ஊன்பொடு மிடைந்த காமம் - உடம்பொடு உடன் தோன்றிய ஆசை. இழிபு - ஈண்டு மூப்பின் மேலது. அரிவை - மனைவி.

௯௯௭. துரந்து - ஓட்டிவிட்டு. போகத்து இன்பம் - அரசபோகத்து எய்தும் இன்பம். மெய்ப்பட - உண்மையாக. மீட்டு.

### சீவகன் உள்ளம் துறவின்கண் உறைத்து நிற்றல்

மெலியவர் பெற்ற செல்வம் வேரொடுங் கீழ்ந்து வெளவி
வலியவர் கொண்டு மேலே வரம்பிகந் தரம்பு செய்யுங்
கலியது பிறவி கண்டாங் காலத்தா லடங்கி நோற்று
நலிவிலா வுலக மெய்தல் நல்லதே போலு மென்றான். ௬௯௮

இவ்வாறு போகநுகர்ச்சிக்கண் சென்ற தன் உள்ளத்தைச் சீவகன் துறவு நெறியிலே செலுத்தி, வினையின் விளைவும் வேட்கையின் தன்மையும் நினைந்து தனக்கெனச் சமைக்கப்பட்டிருந்த கட்டிலை யடைந்தான்.

### சீவகன் துறவு நெறியை வியந்து சென்று கட்டிலை யடைதல்

“வேட்கைமை யென்னு நாவிற் காமவெந் தேறல் மாந்தி
மாட்சியொன் றானு மின்றி மயங்கினேற் கிருளை நீங்கக்
காட்டினார் தேவ ராவர் கைவிளக் கதனை” யென்று
தோட்டியாற் றொடக்கப் பட்ட சொரிமதக் களிற்றின் மீண்டான்.

### மகளிர் மயக்க அவன் மயங்காது நிற்றல்

மெள்ளவே புருவங் கோலி விலங்கிக்கண் பிறழ நோக்கி
முள்ளெயி றிலங்கச் செவ்வாய் முறுவல்தா தாதி யாக
அள்ளிக்கொண் டுண்ணக் காமங் கனிவித்தார் பனிவிற் றாழ்ந்த
வள்ளிதழ் மாலை மார்பன் வச்சிர மனத்த னானான். ௭௦௦

---

௬௯௮. கீழ்ந்து - அகழ்ந்துகொண்டு. அரம்பு - குறும்பு. கலி - நுகரும் பொருள் இல்லாமையால் அதன்மேலே செல்லும் ஆசையால் பிறக்கும் வருத்தம். காலத்தால் - துறவுக்குரிய காலத்தே. நலிவிலா வுலகம் - வருந்துதலில்லாத வீட்டுலகம்.

௬௯௯. வேட்கைமை - வேட்கைத் தன்மை. காம வெந்தேறல் - காமமாகிய வெவ்விய கள். மாட்சி - நற்செய்கை. ஒன்றானும் - சிறிதும். இருளை - மயக்கத்திலிருந்து. கைவிளக்கு - கைவிளக்காகிய துறவுநெறி. தோட்டி - அங்குசம்.

௭௦௦. கோலி - நெரித்து. முறுவல் தாது - முறுவல் நகையாகிய தாது; இது காமக் குறிப்பு. கனிவித்தார் - மிகுவித்தார். பனிவில் - முத்துவடம். வள்ளிதழ் - வளவிய இதழ். வச்சிரமனத்தனானான் - காமத்திற்கு நெகிழாத வைரம் பொருந்திய மனமுடையனானான்.

## சீவகன் நூற்றுலா மண்டபம் புகுந்து நீராடி உணவுண் டிருத்தல்

நெய்வளங் கனிந்த வாச நிறைந்துவான் வறைக ளார்ந்து
குய்வளங் கழுமி வெம்மைத் தீஞ்சுவை குன்ற லின்றி
ஐவரு ளொருவ னன்ன அடிசில்நூன் மடைய னேந்த
மைவரை மாலை மார்பன் வான்சுவை யமிர்த முண்டான்.

## உணவுண்டு சந்தனம் பூசி முகவாசம் தின்று இனிதிருந்த சீவகன் அருகன் கோயிற்கு மகளிருடன் சென்று வழிபடுதல். பாட்டு

கடிமலர்ப் பிண்டிக் கடவுள் கமலத்து
அடிமலர் சூடி யவர்உலகில் யாரே
அடிமலர் சூடி யவர்உலக மேத்த
வடிமலர் தூவ வருகின்றா ரன்றே. ௭௦௨

## அப்போது ஸ்ரீநாதன் கோயிலை வணங்க வந்த சாரணர் பளிங்கின்மேலிருக்கக் கண்ட சீவகன் அவர்களை வணங்கி வாழ்த்துதல்

இலங்கு குங்கும மார்ப னேந்துசீர்
நலங்கொள் சாரணர் நாதன் கோயிலை
வலங்கொண் டாய்மலர்ப் பிண்டி மாநிழற்
கலந்த கன்மிசைக் கண்டு வாழ்த்தினான். ௭௦௩

---

௭௦௧. வறை - வறுவல். குய் - தாளிப்பு. கழுமி - நிறைந்து, ஐவரு ளொருவன் - வீமன், மடையன் - சோறாக்கி. வான் சுவை - மிக்க சுவை.

௭௦௨. கடிமலர் - எக்காலமும் புதிதாகிய மலர். கமலத்து அடிமலர் - கமலத்தே நடந்த அடியாகிய மலர். யாரே - யாவராய் இன்புறுவ ரென்றால். வடிமலர் - வடித்த மலர். வருகின்றார் - இவ்வுலகில் வருகின்றவர்.

௭௦௩. இலங்கு குங்கும மார்பன் - விளங்குகின்ற குங்குமச் சேறு பூசிய மார்பையுடைய சீவகன். ஏந்து சீர் - உயர்ந்த புகழ். சாரணர் கோயிலை வலங்கொண்டு கன்மிசையிருந்தாரை மார்பன் கண்டு வாழ்த்தினான்.

### சாரணர் இருவருள் மூத்தவனும் மணிவண்ணனு மாகிய இரத்தினப் பிரபை யென்பான் சீவகற்கு அறமுரைக்கத் தொடங்குதல்

தேனெய் தோய்ந்தன தீவிய திருமணி யனைய
வானி னுய்ப்பன வரகதி தருவன, மதியோர்
ஏனை யாவரு மமுதெனப் பருகுவ, புகல்வ,
மான மில்லுயர் மணிவண்ணன் நுவலிய வலித்தான். எ0ச

### தொகுத்துக் காட்டல்

அருமையின் எய்தும் யாக்கையும் யாக்கைய தழிவும்
திருமெய் நீங்கிய துன்பமும் தெளிபொருட் டுணிவும்
குருமை யெய்திய குணநிலை கொடைபெறு பயனும்
பெருமை வீட்டொடும் பேசுவல் கேளிது பெரியோய். எ0ரு

### மக்கள் யாக்கையின் அருமை

பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுள்
திரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
அரச, அத்துளை யகவயிற் செறிந்தென வரிதால்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே. எ0சு

### அவ் யாக்கையின் நிலையாமை கூறலுற்றுக் கருவிற் கெடுவது கூறல்

இன்ன தன்மையி னருமையி னெய்திய பொழுதே
பொன்னும் வெள்ளியும் புணர்ந்தென வயிற்றகம் பொருந்தி

---

எ0ச. தீவிய - இனிய. அருமணி - பெறுதற்கரிய மணி. வரகதி - வீடு. ஏனை யாவரும் - ஏனை அறிவுடையோர் யாவரும். புகல்வ - தெளிவில்லோர் தெளிவு கருதி நாளும் ஓதுவன. மானம் - ஒப்பு. உயர் மணிவண்ணன் - சாரணர் இருவருள் ஒருவன், உயர்ந்த மணிபோலும் நிறமுடைய இரத்தினப் பிரபை என்பவன்.

எ0ரு. அருமையின் - அரிதாக. திரு - நல்வினை. நீங்கிய - நீங்கப் பட்டனவாகிய. தெளி பொருட் டுணிவு - தெளியப்படும் பொருளும் தெளியும் தெளிவும். குருமை - நல்ல நிறம்.

எ0சு. பரவை - பரத்தல். படு - உண்டான. சிவணி - சென்று சேர்ந்து. அத் துளையகவயின் - வட கடலில் கிடந்த நுகத்தின் துளையிலே. செறிந்தென - கோத்தாற்போல. நோன்கழி - வலிய கழி. பெரிய யோனிகள் - பெரிய பிறப்புகள். பிழைத்து - தப்பி.

பின்னு மொக்குளு மெனநனி வீயினும் வீயும்
பின்னை வெண்ணெயிற் றிரண்டபின் பிழைக்கவும் பெறுமே.

## இளமையிற் கெடுவது கூறல்

கெடுத லவ்வழி யில்லெனிற் கேள்விக டுறைபோய்
வடிகொள் கண்ணியர் மனங்குழைந் தநங்கனென் றிரங்கக்
கொடையுங் கோலமுங் குழகுந்தம் மழகுங்கண் டேத்த
விடையிற் செல்வுழி விளியினும் விளியுமற் றறிநீ. ௭௦௮

## முதுமையிற் கெடுவது கூறல்

காமம் பைப்பயக் கழியத்தங் கடைப்பிடி சுருங்கி
ஊமர் போலத்தம் உரையவிந் துறுப்பினி னுரையாத்
தூய்மை யில்குளந் தூம்புவிட் டாம்பொரு ளுணர்த்தி
ஈம மேறுத லொருதலை இகலமர் கடந்தோய். ௭௦௯

## நிறுத்த முறையே நாற்கதித் துன்பம் கூறலுற்று முதற்கண் நரகதித் துன்பம் கூறுதல்

வெவ்வினை செய்யு மாந்தர் உயிரெனு நிலத்து வித்தி
அவ்வினை விளையு ளுண்ணு மவ்விடத் தவர்க டுன்பம்

---

௭௦௭. பொன் - சுக்கிலம். வெள்ளி - சுரோணிதம். வயிற்றகம் - கருப்பை. வீயினும் வீயும் - அழியினும் அழிந்து விடும். கருத்தோன்றிய இருதிங்களில் வெண்ணெய்போல் திரண்டிருக்கும் என்ப. பிழைக்கவும் பெறும் - கெடும்.

௭௦௮. கேள்விகள் துறை போய் - நூற் கேள்வி பலவும் கேட்டும் கற்றும் துறைபோகி. வடி கொள் - மாவடு போன்ற. இரங்க - வேட்கை யால் மெலிய. குழகு - இளமை. விடையின் - காளை போல. செல் வுழி - செல்லுங் காலத்தே. விளியும் - இறக்கும்.

௭௦௯. பைப்பய - மெல்ல. கடைப்பிடி - கொள்கை. உரை யவிந்து - சொல்லுந்தன்மை குன்றி. உறுப்பினில் உரையா - கையால் குறித்து. தூய்மையில் குளம் - தூயதல்லாத உடம்பாகிய குளம். தூம்பு விட்டு - ஒன்பதாகிய வாயில்களைத் திறந்து. ஆம் பொருள் உணர்த்தி - முடிவில் ஆகும் பொருள் இதுவே என்று அறிவித்து. ஈமம் - சுடுகாடு. இகலமர் - மாறுபாட்டோடு கூடிய போர்.

இவ்வென வுரைத்து மென்று நினைப்பினும் பனிக்கு முள்ளம்
செவ்விதிற் சிறிது கூறக் கேண்மதி செல்வ வேந்தே. ௭௧௦

ஊழ்வினை துரப்ப வோடி யொன்றுமூழ்த் தத்தி னுள்ளே
சூழ்குலைப் பெண்ணை நெற்றித் தொடுத்ததீங் கனிக ளூழ்த்து
வீழ்வன போல வீழ்ந்து வெருவரத் தக்க துன்பத்து
ஆழ்துய ருழப்ப ; ஊணு மருநவை நஞ்சு கண்டாய். ௭௧௧

## விலங்குகதித் துன்பம்

எரிநீர வேநரகம் ; அந்நரகத் துன்பத்து
ஒருநீர வேவிலங்கு தாமுடைய துன்பம் ;
பெருநீர வாட்டடங்கண் பெண்ணணங்கு பூந்தார்
அருநீர வேந்தடர்த்த வச்சணங்கு வேலோய் ! ௭௧௨

## மக்கட்கதித் துன்பம்

தம்மை நிழனோக்கித் தாங்கார் மகிழ்தூங்கிச்
செம்மை மலர்மார்ப மட்டித் திளையார்தோள்
கொம்மைக் குழகாடுங் கோல வரைமார்பர்
வெம்மை மிகுதுன்பம் வேந்தே சிலகேளாய். ௭௧௩

---

௭௧௦. வித்தி - விதைத்து. அவ்விடத்து - நரகத்தில். இவ்வென - இத்தன்மையவென. பனிக்கும் - நடுங்கும்.

௭௧௧. துரப்ப - செலுத்த. ஒன்று மூழ்த்தம் - ஒரு வினாடி. பெண்ணை நெற்றி - பனை மரத்தின் தலையில். ஊழ்த்து - மிகப் பழுத்து. வெருவரத் தக்க - அஞ்சத்தக்க. உழப்ப - வருந்துவர். ஊணும் - உயிரை வாழச் செய்யும் நல்லுணவும். அருநவை நஞ்சு - அதனை இறக்கப் பண்ணும் கொடிய நஞ்சாம்.

௭௧௨. எரிநீர் - எரியினது தன்மையையுடையனவாம். ஒருநீரவே - ஒரு தன்மையவே. பெருநீர ...... வேலோய் - பெரிய நீரவாகிய கண்ணையுடைய பெண்களை வருத்தும் தாரினையும். அடர்த்தற்கரிய தன்மையன வாகிய வேந்துகளை யடர்த்த வலியினையும், வருத்தத்தைச் செய்யும் வலியினையுமுடைய அரசே,

௭௧௩. நிழல் நோக்கி - கண்ணாடியிலே நிழலைப் பார்த்து. தாங்கார் - தாங்கமாட்டாராய். மகிழ் தூங்கி - மகிழ்ச்சி செறிந்து. மட்டித்து - பூசப்படுவனவற்றைப் பூசி. கொம்மை - பெரிய. குழகாடும் - இளமையால் காமக் களியாட்டயரும். வெம்மை - வருத்தம்.

வேட்டன பெருமை துன்பம், விழைநரைப் பிரித றுன்பம்,
மோட்டெழி லிளமை நீங்க மூப்புவந் தடைத றுன்பம்
ஏட்டெழுத் தறித லின்றி யெள்ளற்பா டுள்ளிட் டெல்லாம்
சூட்டணிந் திலங்கும் வேலோய் துன்பமே மாந்தர்க் கென்றுர்.

## தேவகதித் துன்பம்

தேவரே தாமுமாகித் தேவராற் றொழிக்கப் பட்டும்
ஏவல்செய் திறைஞ்சிக் கேட்டு மணிகமாப் பணிகள் செய்தும்
நோவது பெரிதுந் துன்பம்; நோயினுட் பிறத்த றுன்பம்
யாவதுந் துன்ப மன்று! யாக்கைகொண் டவர்கட் கென்றுன்.

## திருத்த முறையே நால்வகைக் கதித்துன்பம் கூறியபின் தெளிபொருள் கூறுதல்

மன்றல் நாறு மணிமுடிமேன்
மலிந்த சூளா மணிபோலும்
வென்றோர் பெருமா னறவாழி
வேந்தன் விரிபூந் தாமரைமேல்
சென்ற திருவா ரடியேத்தித்
தெளியும் பொருள்க ளோரைந்தும்
அன்றி யாறு மொன்பானு
மாகு மென்பா ரறவோரே. ௭௧௬

---

௭௧௪. வேட்டன - விரும்பிய பொருள். விழைநர் - காதலர். மோட்டெழில் - மிக்க அழகு. ஏட்டெழுத்து - ஏட்டி லெழுதப்படும் எழுத்து; கல்வி. எள்ளற்பாடு - இகழ்ச்சி. சூட்டு - மாலை.

௭௧௫. தொழிக்கப்பட்டும் - வெருளப் பட்டும். அணிகம் - அணிகள். அணி என்பது திரிந்து அணிகமாயிற்று. மாப் பணிகள் - பெரிய பூண்கள்; யாவதும் - எத்தகைய பிறப்பை எடுத்தாலும்.

௭௧௬. மன்றல் - நறுமணம். மலிந்த - நிறைந்த. போலும் பெருமான் என்க. வென்றோர் - முனிவர். சென்ற - நடந்த. திருவார் - சிறப்புப் பொருந்திய. ஐந்தேயன்றி ஆறும் ஒன்பதுமாகும் என்று அறவோர் கூறுவர்; இவை முறையே பஞ்சாத்திகாயம், சட்திரவியம், நவபதார்த்தம் என்பர். ஐந்து - சீலம், புற்கலம், தருமம், கருமம், ஆகாசம். ஆறு: சீவன் முதலாக ஐந்துடன் காலம் ஒன்றுசேர ஆறு. ஒன்பது. சீவம், அசீவம், புண்ணியம், பாவம், ஆசிரவம், சம்வரை, நிர்ச்சரை, பந்தம், வீடு.

### அப்பொருளைத் துணியுந் துணிவு கூறல்

பெரிய வின்பத் திந்திரனும்
    பெட்ட செய்கைச் சிறுகுரங்கும்
உரிய செய்கை வினைப்பயத்தை
    யுண்ணு மெனவே யுணர்ந்தவனை
அரிய ரென்ன மகிழாது
    மெளிய ரென்ன விகழாதும்
இருசார் வினையுந் தெளிந்தாரே
    யிறைவ னூலுந் தெளிந்தாரே. ௭௬௭

உறுவர்ப் பேண லுவர்ப்பின்மை
    யுலையா வின்பந் தலைநிற்றல்
அறிவர் சிறப்பிற் கெதிர்விரும்ப
    லழிந்தோர் நிறுத்த லறம்பகர்தல்
சிறியா ரினத்துச் சேர்வின்மை,
    சினங்கை விடுதல் செருக்கவித்தல்
இறைவ னறத்து ளார்க்கெல்லா
    மினிய ராத, விதுதெளிவே. ௭௬௮

### குணநிலை (சீலம்) கூறல்

ஒழுக்கமே யன்றித் தங்க ளுள்ளுணர் வழிக்கு மட்டும்
புழுப்பயி றேனுமன்றிப் பிறவற்றின் புண்ணு மாந்தி
விழுப்பய னிழக்கு மாந்தர் வெறுவிலங் கென்று மிக்கார்
பழித்தன வொழித்தல் சீலம் பார்மிசை யவர்கட் கென்றான்.

---

௭௬௭. பெரிய இன்பத்திந்திரன் - பெறும் இன்பத்துள் பெரிது இஃதெனத் தன் மனவுணர்வாலாராய்ந்து பெறும் இந்திரன். பெட்ட செய்கை - அவ்வாறின்றி மனம்போன போக்கில் செய்து திரியும் செய்கை, வினைப் பயம் - வினைப் பயன். இருசார் வினை - நல்வினை தீவினை. இறைவன் நூல்,—அங்காகமம், பூருவாகமம், பகு - சுருதியாகமம்.

௭௬௮. உறுவர் - மிக்கோர். உவர்ப்பு - வெறுப்பு, உலையாவின்பம் - வீட்டின்பம். அறிவர் சிறப்பு - அறிவர்க்குச் செய்யும் சிறப்பு. அழிந்தோர் - தளர்ந்தவர். அவித்தல் - கெடுத்தல். இறைவன் அறம் - இச் சமயத்தவர் அனைவர்க்கும்.

௭௬௯. ஒழுக்கத்தையும் உள்ளத்துணர்வையும் அழிக்கும். மட்டு - கள். புழுப் பயில் தேன் - புழு நிரம்பிய தேன். புண் - ஊன்; புலால். விழுப் பயன் - வீடுபேறு. வெறு விலங்கு - உணர்வில்லாத விலங்கு. பழித்தன - கூடாவென விலக்கியவை. பார்மிசையவர் - நிலவுலகத்தே அறஞ் செய்பவர்.

## கொடைநிலை (தானம்) கூறல்

ஒன்பது வகையி னோதிற் றுத்தமர்க் காகு மார்ந்த
இன்பத மருளியீத லிடையென மொழிப யார்க்கும்
துன்புற விலங்கு கொன்று சொரிந்துசோ றூட்டி னார்க்கும்
நன்பொருள் வழங்கி னார்க்கும் பயனமக் கறிய லாகா. ௭௨௦

## கொடைப் பயன் கூறல்

பூமுற்றுந் தடங்க ளுளும் பொன்னெடுங் குன்ற ளுனும்
காமுற்று நினைந்த வெல்லாங் கற்பக மரங்க ளேந்தத்
தாமுற்றுக் கழிப்பர்; தான மிடையது செய்த நீரார்
ஏமுற்றுக் கரும பூமி யிருநிதிக் கிழமை வேந்தே. ௭௨௧

அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்த்
தடங்கட னடுவுட் டீவு பலவுள; அவற்றுட் டோன்றி
உடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வர்
மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே.

## ஏனைச் சீலம் தெளிவு என்ற இரண்டன் பயன் கூறல்

செப்பிய சீல மென்னுந் திருமணி மாலை சூழ்ந்தார்
கப்பத்து ளமர ராவர்; காட்சியி னமிர்த முண்டார்

---

௭௨௦. ஒன்பது வகைக் கொடை உத்தமர்க்காகும். இன் பதம் - இனிய சோறு. இடை - இடை நிலைக் கொடை. யார்க்கும் - இழிந்தோர்க்கும்; ஊட்டினார்க்கும் - உண்டார்க்கும். வழங்கினார்க்கும் - அவ்விருதிறத் தார்க்கும் ஊன் பொருட்டு நல்ல பொருளைத் தந்தார்க்கும்.

கொடை ஒன்பது: "எதிர்கொளல், இடம் நனி காட்டல், கால் கழீஇ அதிர்பட அருச்சனை அடியில் வீழ்தரல் மதுர நன்மொழியொடு மனம் மெய் தூயராய் உதிர்க நம் வினையென உண்டி ஏந்தினர்."

௭௨௧. பூமுற்றும் - பூவைப்போலும். காமுற்று - விரும்பி. உற்று - நுகர்ந்து. ஏமுற்று - செல்வக் களிப்புற்று. கரும பூமி - மண்ணுலகு. கடை நிலைக் கொடைக்குப் பயன் நரகமாதலின், ஈண்டுக் கூறப்படவில்லை.

௭௨௨. அடங்கலர்க்கு - தகுதியில்லாதார்க்கு. அலறும் - முழங்கும். முந்நீர் - ஆக்கல் அளித்தல் அழித்தல் மூன்றும் செய்யும் கடல், மக்களுடம்பும், விலங்கு முகமும் உடைய குரங்கு. ஊழ் கனி - உதிரும் பழம். மடங்கல் - சிங்கம். துப்பு - வலி.

ஒப்பநீ ருலக மெல்லா மொருகுடை நிழற்றி யின்பம்
கைப்படுத் தலங்க லாழிக் காவல ராவர் வேந்தே.

## வீடுபேறு கூறல்

உள்பொரு ளிதுவென வுணர்தல் ஞானமாம்;
தெள்ளிதி னப்பொருள் தெளிதல் காட்சியாம்;
விள்ளற விருமையும் விளங்கத் தன்னுளே
ஒள்ளிதிற் றரித்தலை யொழுக்க மென்பவே. எ௨௪

கூடிய மும்மையுஞ் சுடர்ந்த கொந்தழல்
நீடிய வினைமர நிரைத்துச் சுட்டிட
வீடெனப் படும்வினை விடுதல் பெற்றதங்கு
ஆடெழிற் றோளினாய் அநந்த நான்மையே. எ௨௫

கடையிலா வறிவொடு காட்சி வீரியம்
கிடையிலா வின்பமுங் கிளந்த வல்லவும்
உடையதங் குணங்களோ டோங்கி விண்டொழ
அடைதலான் மேலுல கறியப் பட்டதே. எ௨௬

இவ்வாறு கூறப்பெற்ற அறவுரையைக் கேட்டதும் சீவகற்கு எல்லையில்லாத இன்ப முண்டாயிற்று. அதனால் அவன் அம் மெய்ம்மொழிகளைப் பெறலரும் அமுதெனக்

---

எ௨௩. திருமணி - மாணிக்கமணி. சூழ்ந்தார் - அணிந்தவர். கப்பத்துள் - கற்பகாலத்து. அமிர்தம் - பயன். உலகமெல்லாம் ஒப்ப - குடை நிழற்றி என்க. கைப்படுத்து - கைக்கொண்டு, ஆழிக்காவலர் - சக்கரவர்த்தி.

எ௨௪. உள் பொருள் - உண்மைப் பொருள். தெள்ளிதின் - தெளிவாக. விள்ளற - நீக்கமற. இருமை ஞானம், காட்சி என்ற இரண்டு. ஒள்ளிதின் - ஒட்பமாக. தரித்தல் - நிலைபெறக் கொள்ளுதல்.

எ௨௫. மும்மை - ஞானம், காட்சி, சீலம் என்ற மூன்று. கொந்தழல் - மூண்ட நெருப்பு. வினை மரம் - வினையாகிய மரம். நிரைத்து - முறையாக. விடுதல் பெற்றது - விட்டதாம். ஆடு எழில் தோளினாய் - பகைவரை அடுகின்ற உயர்ந்த தோளையுடையாய். அநந்த நான்மை - அனந்த சதுட்டயம். அவை, கடையிலா ஞானம், கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம்.

எ௨௬. கிடையிலா - ஒப்பில்லாத. ஓங்கி - மிகுந்து. அடைதலால் - சேருதலால். மேலுலகு என்பது ஒன்று உண்டென அறியப்பட்டது.

கொண்டு பெரிதும் பேணுவானாயினன். அக்காலை, அவன் தன் பழம் பிறப்பை அறிந்துகொள்ள விரும்பி அச்சாரணர் அடிகளை மீட்டும் வணங்கி வேண்டினான். அவர் அது கூற லுற்று, "நீ முற்பிறப்பில் தாதகி யென்னும் நாட்டின் பூமி திலகமென்ற நகரத்திருந்து ஆட்சிபுரிந்த பவணதேவ னென்பானுக்கும் சயமதி யென்பாட்கும் பிறந்த அசோதரன் என்னும் மகனாவாய். நினக்கு மனைவியர் பலருண்டு. ஒரு நாள் அவருடன் நீர் விளையாடச் சென்றபோது, பொய்கைக் கண்ணிருந்த அன்னக் கூட்டம் விண்ணிலே பறக்க, அவற் றுட் சில மேலும் பறக்க மாட்டாவாய் அப் பொய்கைத் தாமரையில் தங்கின. நின் மனைவிமாருள் ஒருத்தி விரும்பி யாங்கு ஒன்றைப் பற்றித் தந்தாய்; அவள் அதனைக் கூட்டி லிட்டு வளர்த்து வந்தாள். இதனை யறிந்த அரசன் நின்னை யழைத்து,

பூவைகிளி தோகைபுண ரன்னமொடு பன்மா
யாவையவை தங்கிளையி னீங்கியடி வாங்கிக்
காவல்செய்து வைத்தவர்கள் தாம்கிளையி னீங்கிப்
போவர்புகழ் நம்பியிது பொற்பிலது கண்டாய். ௭௨௭

என்று சொல்லி மேலும் பல அறங்களையு முரைத்தான். அது கேட்டு நீ துறத்தற் கெண்ணினை; அரசன் ஒருவாறு விடை யீந்தான். நீ மனையினை நீங்கிப் போய்த் தவம் செய்து முடிவில் சாசார னென்னும் இந்திரனாகி யின்புற் றிருந்தனை. நீ பிரிந்தபின், பவணதேவனும் சயமதியும் தவம் நோற்றுத் தேவராயினர்" என்று சொல்லி முடித் தான்.

### இதைக் கேட்ட சீவகன் முறுவலித்துச் சாரணர் அடிவீழ்ந்து வணங்குதல்

வாரணி மணித்துடி மருட்டு நுண்ணிடைக்
காரணி மயிலனார் சூழக் காவலன்

---

௭௨௭. பூவை - நாகணவாய்ப் புள், (மைனா). தோகை - மயில். பல் மா - பல விலங்கு. வாங்கி - பிரித்து. காவல் செய்து - கூட்டி லடைத்து. பொற்பிலது - சிறப்புடைத்தன்று.

ஏரணி மணிமுடி யிறைஞ்சி யேத்தினன்
சீரணி மாதவர் செழும்பொற் பாதமே. ௭௨௮

அவனுக்கும் பிறர்க்கும் அவர் வாழ்த்துக் கூறிவிட்டு வானத்தே ஞாயிறும் திங்களும் போலச் சென்றனர். எங்கும் அவரது மெய்யொளி விரிந்து விளங்கிற்று. இனி, தம் கணவன் துறவு பூணவுற்றான் என்று காந்தருவதத்தை முதலியோர் மனம் கலங்கி, முகம் பசந்து, கண்கலுழ்ந்து பின்வரச் சீவகன் தன் கோயிலை யடைந்தான். ஆங்கு அவன் மனைவியர் கொண்டிருந்த துயரத் தோற்றம், அவன் மன வுறுதியைச் சிதைக்கும் ஆற்றல் இலதாயிற்று.

### சீவகன் அழைப்ப நந்தட்டன் வந்து வணங்குதல்

கொடியணி யலங்கன் மார்பிற்
குங்குமக் குன்ற மன்னன்
அடிபணிந்து, "அருளு, வாழி
யரசரு ளரச" வென்னப்
படுசின வெகுளி நாகப்
பைத்தலை பனித்து மாழ்க
இடியுமிழ் முரச நாண
இன்னணா மியம்பி னனே. ௭௨௯

### நந்தட்டனை நாடாட்சி மேற்கொள்ளுமாறு சீவகன் கூறல்

ஊனுடைக் கோட்டு நாகான்
சுரிமுக வேற்றை யூர்ந்து
தேனுடைக் குவளைச் செங்கேழ்
நாகிளந் தேரை புல்லிக்

---

௭௨௮. வார் அணி மணித் துடி - வார்கட்டிய அழகிய துடி. மருட்டும் - ஒக்கும். காரணி மயில் - கார்முகிலால் அழகு சிறக்கும் மயில். ஏரணி - அழகு. இறைஞ்சி - தாழ்ந்து.

௭௨௯. கொடியணி - ஒழுங்காக அணிந்த. அலங்கல் - மாலை. குன்ற மன்னன் - நந்தட்டன். அடிபணிந்து - சீவகன் அடியைப் பணிந்து. படுசின......முரசம்: பாம்பின் தலை நடுங்கி மயங்க இடிக்கும் இடியோசையைப் பிறப்பிக்கும் முரசம்.

கானுடைக் கழனிச் செந்நெற்
கதிரணைத் துஞ்சு நாட
வேன்மிடை தானைத் தாயம்
வீற்றிருந் தாண்மோ என்றான். எருo

## நந்தட்டன் மறுத்துரைத்தல்

கரும்பலாற் காடொன் றில்லாக்
கழனிசூழ் பழன நாடுஞ்
சுரும்புலாங் கண்ணி விண்ணோர்
துறக்கமும் வீடும் வேண்டேன்;
அரும்புலா யலர்ந்த வம்மென்
தாமரை யனைய பாதம்
விரும்பியான் வழிபட் டன்றோ
வாழ்வதென் வாழ்க்கை யென்றான். எருக

இது கேட்ட சீவகன், காந்தருவதத்தை பயந்த மக னான் சச்சந்தனை வருவித்து அவற்கு முடிசூட்டக் கருதி னான்; அவனே அவன் மக்களுள் மூத்தவன்.

## சீவகன் சச்சந்தற்கு முடிசூட்டி அரசநீதி பலமொழிந்து பொய்யாமையை வற்புறுத்துதல்

குடிபழி யாமை யோம்பிற்
கொற்றவேன் மன்னர் மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய்
அரும்புகழ் கெடுத லஞ்சி
நொடியலோ ரெழுத்தும் பொய்யை,
நுண்கலை நீத்த நீந்திக்

---

எரு0. சரிமுக வேற்றை - சரிந்த முகத்தையுடைய நத்தை. ஊனை யுடைய கொம்பையுடைய இளமைபொருந்திய ஆன். செங்கேழ் நாகு இளந்தேரை - செவ்விய நிறம்படைத்த மிக்க இளமையையுடைய தேரை. கானுடைக் கழனி - காட்டின் தன்மையையுடைய கழனி. கதிரணை - கதிராகிய அணையில். தாயம் - அரசமுறை. ஆண்மோ - ஆளுக.

எருக. கரும்பு - கருப்பங்காடு. பழனநாடு - நீர்நில முடைய நாடு. சுரும்பு - வண்டு. அரும்பு உலாய் அமர்ந்த - அரும்பு நெகிழ்ந்து மலர்ந்த. அனைய - போன்ற. வழிபட்டு வாழ்வதன்றோ என் வாழ்க்கை என்க.

கொடியெடுத் தவர்க்கு நல்கு
　　கொழித்துணர் குமர வென்றான். ௭௩௨

**குணமாலை மகனை சுதஞ்சணனை இளவரசாக்குதல்.**

சேல்நடந் - தாங்கு மோடிச்
　　சென்றுலாய்ப் பிறழும் வாட்கண்
மான்மட நோக்கின் மாதர்
　　மாலைநாட் பயந்த மைந்தன்
கானடந் தனைய மான்றேர்க்
　　காளையைக் காவன் மன்னன்
தானுட னணிந்து தன்போ
　　லிளவர சாக்கி னானே. ௭௩௩

பின்பு சச்சந்தனுக்குப் பின் அரசுரிமை கோவிந்தனுக் காதல் வேண்டுமெனப் பணித்து, ஒழிந்த குமரர்க்கு ஏற்ற வாறு தேரும் யானையும் நிதியும் நாடும் பெருக நல்கினான். தன் தோழர் மக்கள் அனைவரும் சச்சந்தனுக்கு மந்திரச் சுற்றமாக அமைத்தான்.

சீவகன் கோயிற்குட் சென்று, மனைவியரைத் தரு வித்து அவர்கட்குப் பல்வேறு நிலையாமையும், அறநெறியின் உயர்வும், தவத்தின் சிறப்பும் பிறவும் எடுத்தியம்பினான்.

**சீவகன் தான் துறவுமேற்கொண்டதை அவர்கட்கு உரைத்தல்.**

குஞ்சர மயாவுயிர்த் தனைய குய்கமழ்
அஞ்சுவை யடிசிலை யமர்ந்துண் டார்கடாம்

---

௭௩௨. குடி - குடிமக்கள். பழியாமை - பழிக்காமல். ஓம்பின் - காவல்புரியின். அடிவழிப்படுவர் - அடியிலே நின்று வாழ்வர். நொடியல் - சொல்லற்க. கலை நீத்தம் - கலைகளாய வெள்ளம். கொடி யெடுத்தவர் - வெற்றிக்கொடி யெடுத்த அமைச்சர். நல்கு - அருள் செய்க. கொழித் துணர் - தீங்கு நீக்கி நல்லது தேர்ந்தறியும்.

௭௩௩, சேல் நடந்தாங்கு - சேல்மீன் பிறழ்வது போல, நோக்கின் - நோக்கத்தையுடைய, மாலை - குணமாலை, நாட் பயந்த - முதலில் பெற்ற. கால் நடந்தனைய மான் தேர் - காற்றுவிசை கொண்டு நடந்தாற் போன்ற குதிரை பூட்டிய தேர். காளை - சுதஞ்சணன். உடன் அணிந்து - தந்தை மகனை சச்சந்தனுடன் இருந்து. தன்போல் - தான் இளவரசனாயிருந் தது போல.

இஞ்சிமா நகரிடும் பிச்சை யேற்றலால்
அஞ்சினேன் துறப்பல்யான் ஆர்வ மில்லையே. ௭௩௪

## இதுகேட்டதும் மகளிர் வாய்விட்டுப் புலம்புதல்

காதலங் கழிந்தநா ளிதனி னிப்புறம்
ஏதில மென்றசொற் செவிச்சென் றெய்தலும்
மாதரார் மழைமலர்த் தடங்கண் மல்குநீர்
போதுலா மார்பின்வாய்ப் பொழிந்து வீழ்ந்தவே. ௭௩௫

பின்பு அம் மகளிர், அவன் அடிமுதல் முடிகாறும் ஒவ்வோருறுப்பினையும் நோக்கி நோக்கிப் பல்வாறு நயமொழி கூறிப் புலம்பினர். அவன் நெஞ்சம் துறவு பூண்டமையின் அவரது அழுகுரல் அவற்கு அசைவு பிறப்பிக்கவில்லை.

## சீவகன் துறவு கோலம் பூண்டு வெளிவரலும் அவன் தேவியர் ஒருவர் ஒருவரைக் காட்டிப் புலம்புவார், காந்தருவதத்தையைக் காட்டிப் புலம்புதல்

விண்ணோர் மடமகள்கொல் விஞ்சைமக ளேகொல்
கண்ணார் கழிவனப்பிற் காந்தருவ தத்தையென்று
எண்ணாய வாணெடுங்கண் மெய்கொள்ள வேமுற்றுப்
பண்ணாற் பயின்றீர் ! இனியென்பயில் வீரே. ௭௩௬

---

௭௩௪. அயா வுயிர்த் தனைய - இளைப்பால் உயிர்த்தாற்போன்ற. குய் - தாளிப்பு. உண்டார் - உண்டவர்கள். இஞ்சிமா நகர் - மதில் சூழ்ந்த பெரிய நகரம். ஏற்றலால் - ஏற்கின்றதனைக் காண்கின்றேனாதலால். ஆர்வம் இல்லை - செல்வத்தில் ஆசை யில்லை.

௭௩௫. கழிந்த நாள் - சென்ற நாட்களில். காதலம் - இல்லறத்தில் காதல் கொண்டிருந்தேம். இதனின் இப்புறம் - அறம் கேட்ட இதற்கு மேல். ஏதிலம் - கைவிட்ட தன்மையுடையேம். என்ற - என்று சீவகன் சொன்ன. மல்கு நீர் - மிகுந்த கண்ணீர். மார்பின் வாய் - மார்பின் கண்.

௭௩௬. கண்ணார் கழி வனப்பு - கண்களைக் கவரும் மிக்க அழகு. எண்ணாய - எண்ணும் தன்மையுண்டாய. மெய் கொள்ள - அறிவைக் கவர்ந்து கொள்ளவே. ஏமுற்று - மயங்கி. பண்ணால் பயின்றீர் - யாழ் வித்தையால் வென்று கொண்டீர். என் பயில்வீர் - என்ன உறவு கொண்டாடுவீர்.

## குணமாலையைக் காட்டிப் புலம்புதல்

கொல்வே னெடுங்கட் குணமாலை குஞ்சரத்தால்
அல்லனோ யுற்றாளுக் கன்று களிறடர்த்துப்
புல்லிப் புணர்முலையின் பூங்குவட்டின் மேலுறைந்தாய்
எல்லேமற் றெம்பெருமாற் கின்றிவளு மின்னாளோ. ௭௩௭

## பதுமையைக் காட்டிப் பரிதல்

தூம்புடைய வெள்ளெயிற்றுத் துத்தி யழனாகப்
பாம்புடைய நோக்கிப் பதுமை பவழவாய்
தேம்புடைய வின்னமுதாச் சேர்ந்தாய்க் கினியதுவே
ஆம்புடைய நஞ்சடங்கிற் றின்றூறிற் றாகாதே. ௭௩௮

## கேமசரியைக் காட்டிப் புலம்புதல்

தாழ்ந்துலவி மென்முலைமேற் றண்ணாரம் வில்விலங்கப்
போழ்ந்தகன்ற கண்ணிணை லேப்பெற்றுப் போகலாய்
தாழ்ந்தமர ரின்னமிர்தந் தக்கநாட் டாகாதே
வீழ்ந்ததென வீழ்ந்தாய்நீ யின்றதுவும் விட்டாயோ. ௭௩௯

## கனகமாலையைக் காட்டிப் புலம்புதல்

கண்ணோ கயலோ கழுநீரோ காவியோ
பெண்ணோ வழுதோ பிணையோ வெனப்பிதற்றித்
துன்னொன் சிலைத்தொழிலுங் காட்டிமுன் னின்புற்றீர்
புண்மேற் கிழிபோற் றுறத்தல் பொருளாமோ. ௭௪௦

---

௭௩௭. கொல் வேல் - கொல்லும் வேல். அல்லல் நோய் - மிக்க வருத்தம். உற்றாளுக்கு - உற்ற அவள் பொருட்டு. அடர்த்து - அடக்கி. குவடு - உச்சி. எல்லே - இரக்கக் குறிப்பு.

௭௩௮. தூம்புடைய வெள்ளெயிறு - உள்ளே புழையுடைய வெள்ளிய நச்சுப்பல். துத்தி - புள்ளி. பாம்பு - பாம்பின் நஞ்சு. உடைய - நீங்கும்படி. தேம்புடைய பதுமை - தேம்புதலையுடைய பதுமை. ஆம்... ஆகாதே - "மேல் வளரும் கூற்றினையுடைய நஞ்சு ஒரு புறத்தே யடங்கித் தீராமல் நின்றது; அதுவே இன்று ஊறிற்றாகாதோ என்க."

௭௩௯. வில் விலங்க - ஒளி குறுக்கிடும்படி. போழ்ந்து - போழ. ஏப் பெற்று - பார்வையம்பால் தைப்புண்டு. அமரர் இன்னமிர்தம் - தேவர் கொண்டுபோகின்ற அமுதம்; தாழ்ந்து நிலத்தே வீழ்ந்தது. வீழ்ந்தாய் - விரும்பினாய். அது - அவ்விருப்பம்.

௭௪௦. பிணையோ - பெண் மானோ. சிலைத்தொழில் - வில்வன்மை. புண்மேல் கிழிபோல் - புண்மீது பட்ட சீலையை மெல்ல எடுப்பதுபோல்.

### விமலையைக் காட்டிப் புலம்புதல்

பொன்னகர வீதி புகுந்தீர் பொழிமுகிலின்
மின்னி னிடைநுடங்க நின்றுடன் வேனெடுங்கண்
மன்ன னகரெல்லாம் போர்ப்பவலைப் பட்டீர்க்கு
இன்னே யொளியிழந்த வின்று விடுகினவோ. ௭௪௧

### சுரமஞ்சரியைக் காட்டிப் புலம்புதல்

செங்கச் சிளமுலையார் திண்கறையூர் பல்லினார்
மங்கையர்கள் காப்ப மகிழ்ந்தா[illegible] நீமகிழ்ந்து |னோ|
பங்கயமே போல்வாளைப் பார்ப்பானாய்ப் பண்ணணைத்துத்
தங்கினாய் கோவே துறத்தல் தகவாமோ. ௭௪௨

### இலக்கணையைக் காட்டிப் புலம்புதல்

புல்லா ருயிர்செகுத்த பொன்னந் திணிதோளாய்
மல்லா ரகன்மார்ப மட்டேந்தி வாய்மடுத்திட்டு
எல்லாருங் காண விலக்கணையோ டாடினாய்
அல்லாந் தவள் நடுங்க வன்பி னகல்வாயோ. ௭௪௩

### கோயில் புலம்புறுதல்

பண்ணார் பணைமுழவம் பாடவிந்து பன்மணியாழ்
மழலை நீங்கிப்
புண்ணார் புணைகுழலு மேங்கா புனைபாண்டி
விரங்கா வான்பூங்

---

௭௪௧. பொன்னகர வீதி - இராசமாபுரத்துத் தெரு. மின்னின் - மின்னலைப்போல. நுடங்க - அசைய. மன்னன் - சிவகன் தந்தையான சச்சந்தன். வலைப்பட்டீர் - அவள் கண்வலையில் அகப்பட்டீர். இன்னே - இப்பொழுது. இன்று இடுகினவோ - அவள் கண்கள் இன்றுவாய் ஒளி குறைந்தனவோ.

௭௪௨. கறை யூர் பல் - அழுக்குப் போக விளக்கமாட்டாத பல். பங்கயமே போல்வாள் - தாமரை ஞாயிற்றையே நோக்குமாறுபோல நின்னையே நோக்கிக் கற்புக்கடம் பூண்டவள். பண்ணணைத்து - பாட்டாலே வசப்படுத்திச் சேர்த்து.

௭௪௩. புல்லார் - பகைவர். பொன் - வெற்றித் திருமகள். திணி - வலிமை. மல் - மற்போர். மட்டு - தேன். வாய் மடுத்திட்டு - வாயிலே உண்பித்து. ஆடினாய் - இன்புற்றாய். அல்லாந்து - அறிவு கலங்கி, அன்பின் - அன்பிலிருந்து.

கண்ணு ரொலிகவுள கிண்கிணியு மஞ்சிலம்புங்
கலையு மாரா
மண்ணார் வலம்புரியும் வாய்மடங்கிக் கோன்கோயில்
மடிந்த தன்றே. ௭௪௪

இவ்வாறே நகரத்திடத்தும் இன்ப நிகழ்ச்சிகள் இல வாயின, இன்னிசை முழக்கம் எங்கும் கேட்டிலது; புலம்பு குரலே பொலிந்தது.

### சீவகன் துறந்து செல்வது கண்டமகளிரும் துறவுபூண விரும்புதல்

காதலஞ் சேற்றுட் பாய்ந்த மதியெனுங் கலங்கனீரை
ஊதுவண் டுடுத்த தாரா னுவர்ப்பினி னுரிஞ்சித் தேற்ற
மாதரார் நெஞ்சந் தேறி மாதவஞ் செய்து மென்றார்,
காதலான் காத லென்று நிகளத்தா னெடுங்கணாரே. ௭௪௫

### சீவகன் அவர்கட் குரைத்தல்

தாமஞ்சால் கோதை யீரே தொல்வினை நீத்த நீந்தி
நாமஞ்சால் மதியி னீங்கி நன்பொன்மே லுலகி னுச்சி
ஏமஞ்சா லின்பம் வேண்டி னென்றெடும் வம்மி னென்றான்
காமஞ்சாய்த் தடர்த்து வென்ற காஞ்சனக் குன்ற மன்னன்.

---

௭௪௪. பண்ணார் - பாடற்கமைந்த. பணை முழவம் - பெரிய முழவு. பாடு - ஒலிப்பு. மழலை - இசை. புண்ணார் - துளையமைந்த. ஏங்கா - இசை செய்யா. பாண்டில் - கஞ்சதாளம். இரங்கா - ஒலி செய்யா. பூங்கண்ணார் - பூப்போலும் கண்ணையுடைய மகளிர். ஆரா - நிரம்பா. மண்ணார் வலம்புரி - அரக்கிட்டாடிய வலம்புரி. மண்ணார் கோன் என மாற்றினுமாம்.

௭௪௫. காதலஞ் சேற்றுள் - காமக் காதலென்னும், சேற்றில். பாய்ந்த - பாய்ந்து நின்ற. மதி - அறிவு. உவர்ப்பின் - வெறுப்புடன். தேற்ற - தெளிவிக்க. தாரானாகிய காதலான் தன் மனைவியர்மேல் வைத்த காதலென்னும் பிணிப்பினாலே தேற்ற என்க. காதல் - இவர் பிறப்பற்று வீடு பெறவேண்டுமென்ற காதல்.

௭௪௬. தாமம் - அகிற்புகை, வினை நீத்தம் - வினைக்கடல். நாமம் - அச்சம். ஏமம் சால் இன்பம் - வீட்டின்பம், காஞ்சனக் குன்றம் - பொன்மலை.

### துறத்தற்குத் துணிந்தமை சொல்லிய அம்மகளிர் தம் வழிபாடு ஏற்கவேண்டுமெனத் தொழுதல்

சாந்தங் கிழிய முயங்கித் தடமலரால்
கூந்தல் வழிபட்ட கோவேநீ செல்லுலகில்
வாய்ந்தடியேம் வந்துன் வழிபடுநா ளின்றேபோல்
காய்ந்தருளல் கண்டாய் எனத்தொழுதார் காரிகையார்.

சீவகன் அவர்களை விசயைபால் அடைக்கலந் தந்து துறவு நெறி யொழுகச் செய்ய, அவர்களும் தம் அணியும் பட்டுடையும் துறந்து, துறவு கோலம் பூண்டு அவ்வற நெறியே யொழுகுவா ராயினர்.

### சீவகன் துறவு முற்றல்

பூந்துகில் புனைகல மாலை பூசுசாந்து
ஆய்ந்துல குணவுவந் தருளி மாமணி
காந்திய கற்பகக் கான மாயினான்
ஏந்திய மணிமுடி யிறைவ னென்பவே. ௭௪௮

### சீவகன் தேவரொடு செல்லுதல்

தேய்பிறை யுருவக் கேணித்
    தேறுநீர் மலர்ந்த தேனார்
ஆய்நிறக் குவளை யஞ்சிக்
    குறுவிழிக் கொள்ளும் வாட்கண்
வேய்நிறை யழித்த மென்றோள்
    விசயையைத் தொழுது வாழ்த்திச்

---

௭௪௭. வாய்ந்து - தவம் வாய்த்து. உன் - உன்னுடைய அடியை. காய்ந்து அருளல் - வெறுத்து நீக்காதருளல்வேண்டும். சாந்தம்...கோவே - முயக்கத்தால் வருத்தம் நிகழ்ந்ததாகக் கருதி மலரால் கூந்தலை வழிபட்டு வருத்தம் தீர்த்த கோவே; என்றது, எமக்கு வருத்தமில்லாததனை வருத்தமாகக்கொண்ட நீ ஈண்டு வருத்தமுள்ளதனைத் தீர்க்கின்றிலை என்றதாம்.

௭௪௮. மாலை - முத்துமாலை. உலகுணவு வந்து - உலகம் நுகரும்படி. காந்திய - ஒளி விளங்குகின்ற. ஏந்திய - உயர்ந்த.

சேய்நிறச் சிவிகை சேர்ந்தான்
தேவர்கொண் டேகி னாரே. ௭௪௯

## சீவகன் தேவருடன் சமவசரணம் என்னும் திருக்கோயிலை யடைதல்

விளங்கொளி விசும்பறுத் திழிந்து மின்னுதார்த்
துளங்கொளி மணிவணந் தெரீழுது துன்னினான்
வளங்கெழு மணிவரை நெற்றிப் பாற்கடல்
இளங்கதிர்ப் பரிதியொத் திறைவன் தோன்றினான்.

## திருக்கோயில் ஆரவாரம்

பிண்டியின் கொழுநிழற் பிறவி நோய்கெட
விண்டலர் கனைகதிர் வீரன் தோன்றினான்
"உண்டிவ ணறவமிர் துண்மி னோ"வெனக்
கொண்டன கோடணை கொற்ற முற்றமே. ௭௫௧

## சீவகன் கோயிற்குள் அணைதல்

வானவர் மலர்மழை சொரிய மன்னிய
ஊனிவர் பிறவியை யொழிக்கு முத்தமன்

---

௭௪௯. தேய்பிறை - நுதல். தேறு நீர் - தெளிந்த நீர். ஆய் நிறக் குவளை - அழகிய நிறத்தையுடைய குவளை. குறுவிழிக் கொள்ளும் - மீண்டும் குவியும். வேய் நிறை - மூங்கிலின் வடிவழகு. சேய் - முருகனையொத்த சீவகன். சேர்ந்தான் - ஏறினான்.

சச்சந்தன் பட்டபின் தன்னுறுப்புக்கள் பொலிந்திருத்தல் ஆகாதென்று உட்கொண்டு அவற்றின் பொலிவினைக் கடிந்தமை தோன்ற நிறையாலழித்த என்றார்.

௭௫௦. விசும்பறுத்து - விசும்பை ஊடறுத்து. மணிவணன் - மாணிக்க மணிபோலும் நிறமுடைய சீவகன். வரை நெற்றி - மலையுச்சி. இறைவன் - ஸ்ரீ வர்த்தமான சுவாமிகள். இவர் இருபத்துநான்காம் தீர்த்தங்கரர்.

௭௫௧. நோய் கெட - நோய் கெடும்படி. விண்டு அலர் - விரிந்து விளங்கும். வீரன் - இறைவன். இவண் - இக் கோயிலிடத்தே. அறவமிர்து - அறமாகிய அமுது. கோடணை - தெய்வ ஆரவாரம். கொற்றம் - கோயில்.

தேனிமிர் தாமரை திளைக்குஞ் சேவடி
கோனமர்ந் தேத்திய குறுகி னனரோ. ௭௫௨

அப்போது பக்கலிருந்தவர் சீவகன் குருகுலத்தான் காசிப கோத்திரத்தான் என்று கூற, அவனும் துதித்துத் தன் துறவுக் கருத்தைச் சொல்லித் துதித்தான். தேவனும், "நீ துறத்தலே மாட்சி" யென்று சொல்லியருளினான். சீவகன் மறுவலும் அவன் திருவடியில் வீழ்ந்து இறைஞ்சித் துறவு குறித்துச் சுதன்மர் என்னும் கணதரரிருந்த இடத்திற்குப் போந்தான்.

## சீவகன் உடை முதலியன துறத்தல்

மணியுறை கழிப்பது போல மங்கலப்
பணிவரு பைந்துகி னீக்கிப் பாற்கடல்
அணிபெற வரும்பிய வருக்க னெனத்
திணிநிலத் தியன்றதோர் திலக மாயினான். ௭௫௩

## மயிர் பறித்தல்

திருந்திய கீழ்த்திசை நோக்கிச் செவ்வனே
இருந்ததோ ரிடிகுரற் சிங்கம் பொங்கிமேற்
சுரிந்ததன் உளைமயிர் துறப்ப தொத்தனன்
எரிந்தெழு மிளஞ்சுட ரிலங்கு மார்பினான். ௭௫௪

அவன் பறித்த அளவில் வண்டினம் முரன்றன; சுதஞ்சணன் என்னும் தேவன் அம் மயிரைக் கொண்டு சென்று பாற்கடலில் வீழ்த்திவிட்டுத் தன் கோயிலை யடைந்தான்.

---

௭௫௨. ஊன் இவர் பிறவி - உடம்புகளிலே பரக்கின்ற பிறப்பு. தேன் இமிர் தாமரை திளைக்கும் சேவடி - ஒலிக்கும் தேனினம் தாமரை யென்று திளைக்கும் சேவடி. ஏத்திய - ஏத்துதற்கு.

௭௫௩. மணி உறை கழிப்பதுபோல - மணியை மறைத்திருந்த உறையை நீக்குவதுபோல. பணிவரு - குறை கூறுவதற்கரிய. அணிபெற அரும்பிய - அழகுறத் தோன்றிய. அருக்கன் நிலத்து இயன்றதாம் என என்று இயைக்க. என - என்று கூறும்படி.

௭௫௪. செவ்வனே - நேராக. சுரிந்த உளை - சுருண்டு கிடந்த பிடரி மயிர். எரிந்தெழும் இளஞ்சுடர் - ஒளிமிக்குத் தோன்றுதற்குக் காரணமான இளஞாயிறு.

சீவகனுக்கும் சுருதஞானங்கள் வந்து நிறைந்தன. நந்தட்டனும் தோழர்களும் இவ்வண்ணமே சுருதஞானம் நிறைந்தனர்.

## சீவகன் முனிவர் குழாத்துட் புகுதல்

கோமா னடிசாரக் குஞ்சரங்கள் செல்வனபோல்
பூமாண் திருக்கோயிற் புங்கவன்ருள் சேர்ந்தேத்தித்
தாமார்ந்த சீலக் கடலாடிச் சங்கினத்துள்
தூமாண் வலம்புரியின் ருேற்றம்போற் புக்காரே. ௭௫௫

இவ்வாறிருக்கும் நாளில், மகதநாட்டில் நகரமாகிய இராசகிருகத்தில் இருந்து ஆட்சிபுரிந்திருந்த சேணிக மன்னன் ஒருநாள் வெண்பட்டுடுத்துப் பூசனைக்குரிய பலி சுமந்து அயிராவணமேறிச் சமவசரணமடைந்து, முனிவர் கூட்டத்தே அழகும் ஒளியும் திகழவிருந்த சீவகமுனிவனைக் கண்டு வியப்புற்றுக் கணதர முனிவரை வினவி, இம் மாதவனுடைய முற்பிறப்பிற் செய்த தவங்களையும், துறந்த வண்ணத்தையும் அறியவிரும்பினன். ஏனை முனிவரும் அதனையே விழைந்தனர். அவரும் அவர் விரும்பியவாறே சீவகனது பெருமையை எடுத்துக் கூறினர். சேணிகன் முதலிய முனிவர்கள் தாமும் அவ்வண்ணமாதல் வேண்டி நாத்தழும்பேற ஏத்திச் சென்றனர்.

## சீவகன் குன்றேறி நிற்றல்

முழுது முந்திரி கைப்பழச் சோலைத்தேன்
ஒழுகி நின்றசும் பும்முயர் சந்தனத்
தொழுதிக் குன்றந் துளும்பச்சென் றெய்தினன்
பழுதில் வாய்மொழிப் பண்ணவ னென்பவே. ௭௫௬

---

௭௫௫. கோமான் - பரதராச சக்கரவர்த்தி. புங்கவன் - வர்த்தமான சுவாமி. சீலக்கடல் - ஒழுக்கமாகிய கடல். தூமாண் வலம் புரி - தூய மாட்சிமையுடைய வலம்புரிச் சங்கு. சங்கினம் - முனிவர் கூட்டம்.

௭௫௬. முழுதும் - முற்றவும். அசும்பும் - அடிவழுக்கும். தொழுதி - கூட்டம். துளும்ப - தவத்தின் கனத்தால் இளக. பழுது - குற்றம். பண்ணவன் - சீவகசாமி.

### வெயிற்கும் மழைக்கும் பனிக்கும் அஞ்சாது சீவகன் குன்றின் உச்சியில் நின்று தவம் முற்றுதல்

நளிசிலம் பதனி னுச்சி நாட்டிய பொன்செய் கந்தின்
ஒளியொடு சுடர வெம்பி உருத்தெழு கனலி வட்டம்
தெளிகடல் சுடுவ தொத்துத் தீயுமிழ் திங்க ணான்கும்
விளிவருங் குரைய ஞான வேழமேற் கொண்டு நின்றான்.

இவ்வாறு ஓர் யாண்டு உணவின்றித் தவம் செய்து உயிர்தாங்கிய சீவகன் மேலும் வீடுபேற்றுக்குக் காரணமான தவத்தையும் செய்து முடித்தான். அப்போது தேவர்கள் போந்து அவன் தாளைக் கோயிலாகக் கொண்டு வழிபட்டனர். பின்பு விஞ்சை வேந்தரும் வியனில வேந்தரும் வந்து அவன் திருவடியை வாழ்த்தினர்.

### அவனுக்கு ஆசனமும் குடையும் வருதல்

குளித்தெழு வயிர முத்தத் தொத்தெரி கொண்டு மின்ன
அளித்துல கோம்பு மாலை யகன்குடை கவித்த தாங்கு
வளிப்பொர வுளருந் திங்கட் கதிரெனக் கவரி பொங்கத்
தெளித்துவில் லுமிழும் செம்பொ னாசனம் சேர்ந்த தன்றே.

இது கண்டு தேவரும் விஞ்சையரும் போந்து முறையே அவன் திருமுன் வணங்கி வாழ்த்தினர்.

### தேவியராய்த் துறந்தோர் வாழ்த்துதல்

தீவினைக் குழவி செற்ற மெனும்பெயர்ச் செவிலி கையுள்
வீவினை யின்றிக் காம முலையுண்டு வளர்ந்து வீங்கித்

---

௭௫௭. நளிசிலம்பு - பெரிய மலை. கந்தின் - தூண்போல. கனலி வட்டம் - ஞாயிறு. சுடுவ தொத்து - சுவறப் பண்ணுவது போல. தீயுமிழ் திங்கள் நான்கு - நெருப்பைப் பொழியும் சித்திரை முதலிய நான்கு திங்களும். விளிவரும் குரைய - கெடாத. குரை - அசை. சீவகனைக் கந்தென்றமையின், அவன் மேற்கொண்டிருந்த ஞானத்தை யானை யென்றார்.

௭௫௮. நீருட் குளித்து எடுப்ப எழும் முத்துக்கொத்தும் வயிரமணியும் கொண்டு ஒளிவிளங்க என்க. உலகை அருள் செய்து புரக்கும் இயல்பினையுடைய விரிந்த குடை வந்து கவித்தது. வளி பொர - காற்று ஒன்றோடொன்று பொரும்படி. உளரும் - அசையும். கதிர் என - கதிர் போல. தெளித்து - தெளிந்து. வில் - ஒளி.

தாவினை யின்றி வெந்நோய்க் கதிகளுள் தவழு மென்ற
கோவினை யன்றி யெந்நாக் கோதையர்க் கூற லுண்டே.

நல்வினைக் குழவி நன்னீர்த்
தயாவெனும் செவிலி நாளும்
புல்லிக்கொண் டெடுப்பப் பொம்மென்
மணிமுலை கவர்ந்து வீங்கிச்
செல்லுமாற் றேவர் கோவா
யெனுமிருள் கழிந்த சொல்லால்
அல்லிமேல் நடந்த கோவே
யச்சத்து ணீங்கி னோமே. ௭௯௦

அவர்கள் பின்னரும், "இறைவ, நின் திருவடி பழ வினையை யறுக்கும் வாளாம்" என்று புகழ்ந்தனர்.

## சீவகன் அவர்கட்கு உறுதி கூறல்

இன்பமற் றென்னும் பேரா னெழுந்தபுற் கற்றை தீற்றித்
துன்பத்தைச் சுரக்கு நான்கு கதியெனுந் தொழுவிற் றோன்றி
நின்றபற் றார்வ நீக்கி நிருமலன் பாதஞ் சேரின்
அன்புவிற் றுண்டு போகிச் சிவகதி யடைய லாமே. ௭௯௧

## சீவகன் வீடு பெறுதல்

உழவித்தி யுறுதி கொள்வார்
கொண்டுய்யப் போகல் வேண்டித்
தொழுவித்தி யறத்தை வைத்துத்
துளங்கிமி லேறு சேர்ந்த

---

௭௮௯. வீவினையின்றி - கொடுந்தொழில் இன்றி. காம முலை - காம மாகிய முலை. வீங்கி - பருத்து. தாவினை யின்றி - குதித்துப் போவ தின்றி. கோவினை - இறைவனை. கோதையர் - கோதாகிய பொருளை யுடையவர்.

௭௯௦. நன்னீர்த் தயா - நல்ல நீர்மையுடைய அருள். பொம்மென் மணி முலை - பெருத்த அழகிய முலை. புல்லிக்கொண்டு - தழுவிக்கொண்டு. கோவாய்ச் செல்லுமால் - இந்திரனாய்ச் செல்வான். இருள் கழிந்த சொல் - குற்றமில்லாத சொல். அல்லி - தாமரைப் பூ.

௭௯௧. மற்று - அசை. பேரான் - பெரிய பசு. சுரக்கும் - செய்யும். தொழுவில் - மாட்டுத் தொழுவில். தீற்றி - ஊட்டி. பற்றார்வம் - பற்றும் ஆர் வமும். புற்கற்றை - மனவெழுச்சியாகிய புற்கற்றை. நிருமலன் - மலமற்ற வன். சேரின் - நினைந்து அடைவாராயின். அன்பு விற்று உண்டு - அன் பைக் கொடுத்து. சிவகதி - வீட்டுலகு.

குழவித்தண் திங்க ளன்ன
 விருக்கைய னாகிக் கோமான்
விழவித்தாய் வீடு பெற்றான்
 விளங்கிநால் வினையும் வென்றே. ௭௩௨

அப்போதில் தேவர்கள் ஊர்திகளிற் போந்து சாந்த ணிந்து பூச்சொரிந்து புகையெழுப்பி வணங்கினர். விண்ணவரும் மண்ணவரும் பரிநிர்வாண மென்னும் திருமணத்தை விதிப்படி செய்து வலஞ்செய்துகொண்டு போயினர்.

## வீடுபேற்றின்பம்

கேவல மடந்தை யென்னுங் கேழ்கிளர் நெடிய வாட்கண்
பூவலர் முல்லைக் கண்ணிப் பொன்னொரு பாக மாகக்
காவலன் வானோர் கூறாக் கண்ணிமை யாது புல்லி
மூவுல குச்சியின்பக் கடலினுள் மூழ்கி னானே. ௭௩௩

சீவகனுடைய தேவிமாராகிய காந்தருவதத்தை முதலியோர் ஓர் எறும்பிற்கும் ஏதம் வாராவகையில் இருந்தும், நடந்தும், கிடந்தும் தாம் மேற்கொண்ட தவம் முற்றினர்.

## சீவகன் தேவிமார் பெண்பிறப்பு நீங்க நோற்றல்

சூழ்பொற் பாவையைச் சூழ்ந்து புல்லிய
காழகப் பச்சை போன்று கண்டெறாஉம்
மூழ்மை நோக்கினார் மேனி மாசுகொண்டு
ஏழைப் பெண்பிறப் பிடியச் சிந்தித்தார். ௭௩௪

---

௭௩௨. உழவித்தி - உழவுத் தொழிலைப் பரப்பி. கொண்டுய்யப் போகல்வேண்டி - கொள்ள வல்லார் கொண்டு பிறவியைத் தப்பப் போகலை விரும்பி. தொழு - சமவசரணம். இமில் ஏறு - கொண்டையையுடைய ஏறு. குழவித் தண் திங்கள் - பிறைத்திங்கள். விழவித்தாய் - விழவுக்குக் காரணமாய். ஏறு சேர்ந்த திங்கள் - இடபவிராசியைச் சேர்ந்த திங்கள். உழவு - வழிபாடு. நால்வினை - வேதநீயம், ஆயுசியம், நாமம், கோத்திரம்..

௭௩௩. கேவல மடந்தையென்னும், கண்ணும் கண்ணியுமுடைய பொன். பூவலர் முல்லைக் கண்ணி - முல்லைப் பூவால் தொடுத்த கண்ணி. கேழ் - நிறம். காவலன் - சீவகன். கூறு - பங்கு. புல்லி - சேர்ந்து. இன்பக் கடல் - சிவபோகம் என்னும் இன்பக் கடல்.

௭௩௪. காழகப் பச்சை - கருஞ்சேற்றையுடைய தோல். கண்தெறும் - கண்ணைக் கூசும். மாமை - இளமை. ஏழைப்பெண் - தாழ்ந்த பெண் பிறப்பு. இடிய - கெடவேண்டுமென்று.

### அவர்கள் இந்திரராய்த் துறக்க மெய்துதல்

ஆசை யார்வமோ டைய மின்றியே
ஓசை போயுல குண்ண நோற்றபின்
ஏசு பெண்ணொழித் திந்தி ரர்களாய்த்
தூய ஞானமாய்த் துறக்க மெய்தினர். ௭௬௫

### அவர்கள் துறக்க வின்ப மார்தல்

காம வல்லிகள் கலந்து புல்லிய
பூமென் கற்பகப் பொன்ம ரங்கள்போல்
தாம வார்குழற் றைய லார்முலை
ஏம மாகிய வின்ப மெய்தினர். ௭௬௬

### நந்தட்டனும் தோழன்மார்களும் ஐம்பொறியையும் தம் வயமாமாறு நோற்றுத் தவஞ்செய்தல்

பாவ னைமரீஇப் பட்டி னியொடுந்
தீவி னைகழூஉந் தீர்த்தன் வந்தியாப்
பூவுண் வண்டன கொட்பிற் புண்ணியர்
நாவின் வேட்கையும் நஞ்சி னஞ்சினர். ௭௬௭

### இவர்கள் தேவராதல்

கருவிற் கட்டிய காலம் வந்தெ‌ன
உருவ வெண்பிறைக் கோட்டி னோங்கிய

---

௭௬௫. ஆர்வம் - இரதி கன்மம். ஓசை யுலகு - புகழ் பொருந்திய தேவருலகம். உண்ண - அவ்வுலக போகத்தை நுகர. ஏசு பெண் - பொல்லாதென்று பேசும் பெண் பிறப்பு. ஞானமாய் - ஞானம் பெற்று.

௭௬௬. காமவல்லி - காமவல்லிக் கொடி. இது தேவருலகத்துக் கற்பக மரத்தில் பற்றிப் படர்வது என்பர். தாம வார் குழல் - மாலையணிந்த நீண்ட கூந்தல். ஏமம் - உயிர்க்கு ஏமமாகச் சிறந்த.

௭௬௭. பாவனை - பதினாறுவகைப் பாவனை; இவை தரிசன விசுத்தி முதலாக, பிரவசனவற்சலத்துவம் ஈறாக உள்ளவை. இவற்றின் விரிவை ஸ்ரீபுராணத்துட் காண்க. பட்டினி - உண்ணா நோன்பு. தீர்த்தன் - இறைவனை. கொட்பின் - மனக்கொட்பினால். பூவுண் வண்டன நாவின் வேட்கை - பூவை யுண்கின்ற வண்டையொத்த நாவினால் கொண்ட உணவு; அஃதாவது வண்டுபோலச் சிறிதாகக் கொள்ளும் உணவு. வேட்கை, ஆகுபெயர், நஞ்சின் - நஞ்சுபோல.

அருவிக் குன்றின்மேன் முடித்திட் டைவரும்
திருவின் றோற்றம்போற் றேவ ராயினர். ௭௬அ

## தேவரின்பம் நுகர்தல்

மண்கனிந்த பொன்முழவ மழையின் விம்ம
மாமணியாழ் திங்குழல்க ளிரங்கப் பாண்டில்
பண்கனியப் பாவைமார் பைம்பொற் றோடுங்
குண்டலமுந் தாம்பதைப்ப விருந்து பாட
விண்கனியக் கிண்கிணியுஞ் சிலம்பு மார்ப்ப
முரிபுருவ வேனெடுங்கண் விருந்து செய்யக்
கண்கனிய நாடகங்கண் டமரர் காமக்
கொழுந்தீன்று தந்தவந்தாம் மகிழ்ந்தா ரன்றே.

## நூலாசிரியர் அவையடக்கம் கூறல்

செந்தா மரைக்குச் செழுநாற்றங் கொடுத்த தேங்கொள்
அந்தா மரையா ளகலத்தவன் பாத மேத்திச்
சிந்தா மணியின் சரிதஞ் சிதர்ந்தேன் றெருண்டார்
நந்தா விளக்குச் சுடர்நன்மணி நாட்டப் பெற்றே. ௭௭0

---

௭௬அ. கருவில் - கருவில் தங்கும்போதே. கட்டிய காலம் - இறத்தற்கு விதித்த காலம். வந்தென - வந்ததாக. உருவ......கோட்டின் - உயர்ச்சியால் தன்னிடத்தே பிறையையுடைய உச்சியால். முடித்திட்டு - ஏனைத் தவங்களையும் செய்து முடித்துவிட்டு. திருவின் தோற்றம் போல் - தீவினை நீங்கி நல்வினை வந்தால் திருமகள் நினைவின்றித் தோன்றுமாறு போல, இவரும் இவ்வுடம்பினை நீக்கித் தேவர் உடம்பு பெற்றனர்.

௭௬௯. மண் கனிந்த - மண்ணுதல் முற்றவும் அமைந்த. விம்ம - முழங்க. பாண்டில் - கஞ்சதாளம். பண்கனிய - பண் முற்றுப் பெறப் பாட. பதைப்ப - அசைய. விண் கனிய - விண்ணவர் மனம் உருக. விருந்து - தேவ மகளிர் காமக் கொழுந்தீன்று செய்யும் இன்பம்.

௭௭0. அந் தாமரை - இறைவன் திருவடி. தாமரைக்கு மணம் தந்த தாமரை யென்றார். ஆள் அகலத்தவன் - அத் தாமரையை யாளும் விரிந்த ஞானத்தையுடைய சிவகன். சிதர்ந்தேன் - பரக்கக் கூறினேன். தெருண்டார் - அறிஞரும் இதனை நன்றென்று தெளிந்தார். நன்மணி - விளி. நந்தா - அவியாத. சுடர் நன்மணி - உள்ளத்தே நின்றெரியும் நன்மணி. நன்மணி - குருக்கள்.

இது நூலாசிரியர் தம் குருக்கட்குக் கூறியது.

### அவர்கள் இந்திரராய்த் துறக்க மெய்துதல்

ஆசை யார்வமோ டைய மின்றியே
ஓசை போயுல குண்ண நோற்றபின்
ஏசு பெண்ணொழித் திந்தி ரர்களாய்த்
தூய ஞானமாய்த் துறக்க மெய்தினார். ௭௩௫

### அவர்கள் துறக்க வின்ப மார்தல்

காம வல்லிகள் கலந்து புல்லிய
பூமென் கற்பகப் பொன்ம ரங்கள்போல்
தாம வார்குழற் றைய லார்முலை
ஏம மாகிய வின்ப மெய்தினார். ௭௩௬

### நந்நட்டனும் தோழன்மார்களும் ஐம்பொறியையும் தம் வயமாமாறு நோற்றுத் தவஞ்செய்தல்

பாவ னைமரீஇப் பட்டி னியொடுந்
தீவி னைகழூஉந் தீர்த்தன் வந்தியாப்
பூவுண் வண்டன கொட்பிற் புண்ணியர்
நாவின் வேட்கையும் நஞ்சி னஞ்சினார். ௭௩௭

### இவர்கள் தேவராதல்

கருவிற் கட்டிய காலம் வந்தென
உருவ வெண்பிறைக் கோட்டி னோங்கிய

---

௭௩௫. ஆர்வம் - இரதி கன்மம். ஓசை யுலகு - புகழ் பொருந்திய தேவருலகம். உண்ண - அவ்வுலக போகத்தை நுகர. ஏசு பெண் - பொல்லாதென்று பேசும் பெண் பிறப்பு. ஞானமாய் - ஞானம் பெற்று.

௭௩௬. காமவல்லி - காமவல்லிக் கொடி. இது தேவருலகத்துக் கற்பக மரத்தில் பற்றிப் படர்வது என்பர். தாம வார் குழல் - மாலையணிந்த நீண்ட கூந்தல். ஏமம் - உயிர்க்கு ஏமமாகச் சிறந்த.

௭௩௭. பாவனை - பதினாறுவகைப் பாவனை ; இவை தரிசன விசுத்தி முதலாக, பிரவசனவற்சலத்துவம் ஈறாக உள்ளவை. இவற்றின் விரிவை ஸ்ரீபுராணத்துட் காண்க. பட்டினி - உண்ணா நோன்பு. தீர்த்தன் - இறைவனை. கொட்பின் - மனக்கொட்பினால். பூவுண் வண்டன நாவின் வேட்கை - பூவை யுண்கின்ற வண்டையொத்த நாவினால் கொண்ட உணவு ; அஃதாவது வண்டுபோலச் சிறிதாகக் கொள்ளும் உணவு. வேட்கை, ஆகுபெயர். நஞ்சின் - நஞ்சுபோல.

அருவிக் குன்றின்மேன் முடித்திட் டைவரும்
திருவின் ரோற்றம்போற் றேவ ராயினர். ௭௬௮

## தேவரின்பம் நுகர்தல்

மண் கனிந்த பொன்முழவ மழையின் விம்ம
மாமணியாழ் தீங்குழல்க ளிரங்கப் பாண்டில்
பண் கனியப் பாவைமார் பைம்பொற் றோடுங்
குண்டலமுந் தாம்பதைப்ப விருந்து பாட
விண் கனியக் கிண்கிணியுஞ் சிலம்பு மார்ப்ப
முரிபுருவ வேனெடுங்கண் விருந்து செய்யக்
கண் கனிய நாடகங்கண் டமரர் காமக்
கொழுந்தின்று தந்தவந்தாம் மகிழ்ந்தா ரன்றே.

## நூலாசிரியர் அவையடக்கம் கூறல்

செந்தா மரைக்குச் செழுநாற்றங் கொடுத்த தேங்கொள்
அந்தா மரையா ளகலத்தவன் பாத மேத்திச்
சிந்தா மணியின் சரிதஞ் சிதர்ந்தேன் றெருண்டார்
நந்தா விளக்குச் சுடர்நன்மணி நாட்டப் பெற்றே. ௭௭௦

---

௭௬௮. கருவில் - கருவில் தங்கும்போதே. கட்டிய காலம் - இறந்தற்கு விதித்த காலம். வந்தென - வந்ததாக. உருவ......கோட்டின் - உயர்ச்சியால் தன்னிடத்தே பிறையையுடைய உச்சியால். முடித்திட்டு - ஏனைத் தவங்களையும் செய்து முடித்துவிட்டு. திருவின் தோற்றம் போல் - தீவினை நீங்கி நல்வினை வந்தால் திருமகள் நீனைவின்றித் தோன்றுமாறு போல, இவரும் இவ்வுடம்பினை நீக்கித் தேவர் உடம்பு பெற்றனர்.

௭௬௯. மண் கனிந்த - மண்ணுதல் முற்றவும் அமைந்த. விம்ம - முழங்க. பாண்டில் - கஞ்சதாளம். பண்கனிய - பண் முற்றுப் பெறப் பாட. பதைப்ப - அசைய. விண் கனிய - விண்ணவர் மனம் உருக. விருந்து - தேவ மகளிர் காமக் கொழுந்தின்று செய்யும் இன்பம்.

௭௭௦. அந் தாமரை - இறைவன் திருவடி. தாமரைக்கு மணம் தந்த தாமரை யென்றார். ஆள் அகலத்தவன் - அத் தாமரையை யாளும் விரிந்த ஞானத்தையுடைய சீவகன். சிதர்ந்தேன் - பரக்கக் கூறினேன். தெருண்டார் - அறிஞரும் இதனை நன்றென்று தெளிந்தார். நன்மணி - விளி. நந்தா - அவியாத. சுடர் நன்மணி - உள்ளத்தே நின்றெரியும் நன்மணி. நன்மணி - குருக்கள்.

இது நூலாசிரியர் தம் குருக்கட்குக் கூறியது.

## குருக்கள் வணக்கம்

செய்வினை யென்னு முந்நீர்த்
    திரையிடை மூழ்த்துத் தேங்கொள்
மைவினை மறுவி லாத
    மதியெனுந் திங்கண் மாதோ
மொய்வினை யிருள்கண் போழு
    முக்குடை மூர்த்தி பாதம்
கைவினை செய்த சொற்பூக்
    கைதொழு தேத்தி னேனே. ௭௭௧

சீவக சிந்தாமணி-சுருக்கம்
முடிந்தது.

---

௭௭௧. செய்வினை - முன்னே செய்த நல்வினை. மைவினை மறு - தீவினையாகிய களங்கம். மதி - அறிவு. மொய்வினை யிருள் - செறிந்த வினையாகிய இருள். கண் போழும் - கட்குப் புலனாகாவாறு அறக் கெடுக்கும். கைவினை செய்த - ஆராய்ந்த.

# சீவகசிந்தாமணி - சுருக்கம்

## பிழையும் திருத்தமும்

### முன்னுரை

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 24 | தாழர் | தோழர் |
| 26 | 25 | அரியலென் | அறியலென் |
| 27 | 13 | செகுத்தி | செகுத்திடு |
| 31 | 10 | நாண்மை | நாண்மெய் |
| 32 | 9 | கூறியது | கூரியது |

### நூல்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 34 | 29 | கலகத்தை | கலக்கத்தை |
| 41 | 33 | யறியாரின்றி | யறிவாரின்றி |
| 76 | 27 | போதா | போதர |
| 89 | 33 | ஓடையினை | ஓடையானை |
| 92 | 35 | திட | தின் |
| ,, | 36 | கனல் | கடல் |
| 99 | 21 | ஒருங்கை | ஒருங்குகை |
| ,, | 31 | இணையர் | இளையர் |
| 106 | 12 | இதின்ன | இன்ன |
| ,, | 34 | துள்ளி | துன்னி |
| 108 | 21 | சொல் | கொல் |
| 109 | 23 | இனி | கிளி |
| 110 | 8 | பொன் விளைக்கும் | பொன் விளக்கும் |
| 127 | 25 | ஆணி | அணி |
| 131 | 25 | நீர் | நீள் |
| ,, | 32 | மண் கருத்தும் | மண் கருதும் |
| 140 | 27 | முகிழ்கட்டில் | முகிழ்முகட்டில் |
| 145 | 11 | தளபதி | தனபதி |
| 162 | 19 | பண்ணிய | புண்ணிய |
| 175 | 18 | மெப்பாள் | மொப்பாள் |
| 176 | 8 | தீணைய | தனைய |
| ,, | 34 | முந்தானை | முன்தானை |